உ

கடவுள் துணை.

மதுரை சுந்தரபாண்டியமகாராஜாவின்சமஸ்தான
வித்வான்களிலொருவராகிய.
சைவ-ஸ்ரீ. வீரப்பிள்ளை அவர்கள்
இயற்றிய.

# வன்னியர் புராணம்

## மூலமும்-உரையும்.

இவை.
விருத்தாசலம்-வன்னியர்மடம்
பொன்னம்பலகுருக்கள் அவர்கள்
வேண்டுகோளால்
புரசை ஸ்ரீமான்-மு
பாலசுந்தரநாயகர் அவர்களால்
பார்வையிடப்பட்டு

சென்னை
திருப்பதி.
இரத்தினமுதலியார்
அண்டுஸன் அவர்களது
கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1917

Registered Copy Right

இதன் விலை ரூபா 1—8—0

டைட்டல்பேஜ் மாத்திரம் முரஹரி பிரெஸில் பதிப்பிக்கப்பட்டது.

உ

# ஆழத்துப்பிள்ளையார் துணை.

## விருத்தாஜலம்.

### வன்னியமடாலய தர்மஸாஸனப்பட்டயம்.

ஸ்ரீ ஸ்ரீமன் மகாமண்டலேசுரன் அரியராயவிபாடன்பாஷை
கிதப் பவிராயகண்டன் மூவராய்கண்டன் கண்டநாடு கொண்டு
கொண்டநாடு கொடாதான் இருபத்துநாலு கோஷ்டத்துவன்னி
ராயகண்டன் கொங்குதேசம் குரும்பறுத்து அழியாப்பிரபுடன்
கடிவன்னியமிண்டன் நவகோஷ்டத்துவன்னியராய கோலாகால
பிரபுடன் வடவாசற்காவலன் இளவரசுமணவாளன் கண்டியப்பிர
டன் கட்டாரிவல்லபன் தானகுலசீலன் காளிகணங்கள் கைகூ
மணவாளன் திங்கள்மும்மாரிபெய்து தேன்பாயும் வளநாடன்
குலதீபன் பூலோகதேவேந்திரன் வேந்தர்குல பஞ்சாக்ஷர
சிவசமய விஷ்ணுசமயபரிபாலன் சிவபூஜாரந்தரன் இராஜ
ரிய இராஜஸ்ரீ ஆனகொந்தி திருவேங்கடபதி தேவமகாரா
யவர்கள் பிரிதிவுராச்சிய பரிபாலனம் பண்ணியருளாநின்ற
லீம்வாகனசகாப்தம் தூகஎ இதில்மேல் செல்லாநின்றபிலவ௵
நமீ இருபதாந்தேதி சோமவாரம் பூசநக்ஷத்திரம் பாலவாகர
ம் பூர்வபக்ஷம்கூடிய சுபதினத்தில் இராஜாதிராஜ வளநாடு வெ
ண்ணையூர்நாடு பருவூர் கூத்தத்தனியூர்காசிக்குமேலாய் விளங்கும்
விருத்தகாசி விதர்க்கணன் விபசித்து கலிங்கன் அச்சுவர்ணன்முத
லானபேருக்கு திருநடனம்புரிந்தருளிய தேவஸ்தலம் பூருவகர்ப்
பக வன்னிமரத்தில் செங்கழுநீர்புஷ்பித்த திவ்வியக்ஷேத்திரம்சகல
லோகங்களும் வெள்ளங்கொண்டபோது பிரமதேவன் சிலமலைக
ளைப்படைத்தான் அந்தமலைக்கு இடமில்லாமல் எங்கும் பழமலை
யாகத்தானே நிரம்பிநிற்க நான்சிருட்டித்தமலைக்கு இடமில்லாமல்
போனதேதென்று கோபங்கொண்டான் அந்தகோபாக்கினி அவ
னையும்சுட்டு அவன்வீட்டையும்சுட்டது அவன்தேவ வருஷத்தில்
௲-வருஷம் விருத்தாசலக்கடவுளைநோக்கி தவம்பண்ண அவர்பிர
சன்னமாகி நீவிஷ்ணுவுடையபிள்ளையானபடியினால் பொறுத்தோ
மென்று பிரமன் அதிகாரத்தைக்கொடுத்தார் ஐந்துலிக்கத்துக்கு
தன்மையான விருத்தகிரிலிங்கம் ஒருநாழிகை விருத்தகாசியில்
வாசம்பண்ணினபேர்கள் சதாசிவசொரூபம் அடைவார்களென்று
வேதங்கள்முறையிடுகின்றது இத்தகைய விசேஷம் பொருந்திய
க்ஷேத்திரத்தில் சகலமான ஜாதிக்குமடமும் நந்தவனமும் பலதரு

மங்களும்விளங்கி வருகிறபடியால் நம்முடையமரபு வன்னியவீர
பண்ணுட்டார் வம்சம் விளங்கவேண்டுமென்று கொள்காணியா
கோவில்நிலத்தில் கீழ்வீதியில் மேல்சரகில் ஐயனர்கோவிலுக்கு
தெற்குதெற்குவீதிக்கு வடக்குஅடி-85 கிழக்கு மேற்குஅடி 16
அடி 1-க்கு பணம் ரூபாவீதம் ௸ 42-பணம் ரூபாகொடுத்துஇ
ண்டு சிலாசாதனம் நிறைத்துதாம் பிரசாதுனம் உண்டுபண்ணிசே
ர்ந்தமங்கலம்அண்ணுமலைகுருக்களுக்கு தத்தம்பண்ணிக்கொடுத்
படியினலே வன்னியர் பிறப்புவளப்பு எப்படியென்றல் ஆதியில்
பிரமாவும் விஷ்ணுவும் 12-ருத்திரனும் தேவர்களும் ரிஷிகளும்கூடி
கைலாசத்துக்குப்போன இடத்தில் சுவாமிநீங்கள் நம்மிடத்தில்
வந்தகாரியம் யேதென்றுகேட்க சர்வரக்ஷகா இராக்ஷத உபத்தி
வம் பொறுக்கமுடியவில்லையென்று தேவரீர்பாதத்துக்கு விண்ண
ப்பம்செய்ய வந்தோமென்ன நல்லதுஅவனை ஜெயிக்கவேண்டுமெ
ன்று பொதியமாமுனி சம்புமாமுனி வசிஷ்டமாமுனி மூன்று
ரையும் அழைப்பித்து விசுவயாகம் பண்ணுமளவில் அதில்பா
கழுத்திலிருந்த செங்கழுநீர் மாலையைவாங்கி அக்கினியில்
பண்ணுமளவில் சிலையும் அம்பும் ஏந்தி உக்கிரமான திருமு
உத்தண்டவார்த்தையும் வாராமரிஷபக்கொடியும் புலிக்கொடியு
பஞ்சவர்ணக்கொடியும் சாம்பிராணிக்கல்சமும் பகல்தீவட்டியு
பச்சைபுரவியும் 18-விருதுடனே சம்புமானியாகத்தில் உருத்தி
வன்னியர்தோன்ற அவர்வயிற்றில் ஐவர்தோன்ற அவருடனே
நாறுபேசது வில்லாளிகள்தோன்ற இவர்களுக்குப் பெயருங் கொ
டுத்தனர் ரர்க்ஷதரை சங்கரித்துவந்தவ ரானபடியினலே ஏகாம்
பரநாட்டுக்குடையவர் பாண்டியன் பரிபிடிக்க பரியேறும் பெரு
மாளென்றும் வாதாவியை வென்றவர் கோத்திரமாகிய கிருஷ்ண
வன்னியர் சம்புவன்னியர் பிரமவன்னியர் இந்திரவன்னியர் கெங்
காவன்னியரென்றும் பெயருங்கொடுத்து கொன்றைமாலையும் தரி
த்து புலிக்கொடிவேந்தன் வன்னியமுரசு நது - த்தில் ஒருவராக
தேவர் ரிஷிகளுக்குரிய சத்துருவை ஜயம்பண்ணியபடியினலே துர்
க்கை பாளையம்போட்டபோது பாலமுதமில்லாமல் ஈஸ்வரிபஞ்ச
லோகத்தையும் ஒருதாழியாக்கி பாலமுதம் விருந்துபண்ணசமுத்
திராதேவி இந்திராணி கோபாலதேவி மூன்றுபேரும் சந்தோஷி
த்து வீரசிங்காதனங்கொடுத்து இந்திரன்பெண் மந்திரமாலையை
உருத்திரவன்னியருக்கு விவாகம்பண்ணி பட்டந்தரித்து மந்திர
வாளும் கொடுத்து இயமனைவென்றவர் சோழன்சினேகிதர் பார்
வதிபுத்திரன் சிங்கக்கொடித்தலைவன் ஜனங்களை ரக்ஷிக்கும் உத்தம

தவாமுதலாய சிறப்புள்ள பட்டயங்கொடுத்தனர் எங்கள் நல்
ப்பகாலாக்க தோழனர் உடையார் பண்டாரத்தார் அரியலூர்
ரைங்காத்த மழவராய நயினர் அவர்களும் அரசுநிலைபெற்றவா
ள் சேரன்சோழபாண்டிய தேயத்திலுள்ள வன்னியரானவர்கள்
ருந்ஷாந்திரம்மடதருமத்துக்கு கட்டளையிட்டது என்னவென்றால்
லலக்கு குதிரை உடையவர்களுக்கு பணம் - 3 தலக்கட்டுக்கு
ணம்-1 குருதெக்ஷிணை பணம்-1 கலியாணத்துக்குமாப்பிள்ளைவிடு
பணம்-1 பெண்வீடு பணம்-1 குற்றகுற்றம் தீர்த்த அபராதபண
மும் சுபா சுபங்களுக்கும் கொடுத்துவருவோ மாகவும்.

இந்தத்தருமத்துக்கு வாக்குசகாயம் சரீரகாயம் அர்த்தசகா
ம் பண்ணினபேர்கள் குபேரசெல்வமும் இந்திரபதவியும் விபூசி
ந்தரிஷிபதவியும் அடைவார்கள் இதற்கு விகாதம்பண்ணினபேர்
கள் கெங்கைக்கரையில் பஞ்சபாதகமும் காராம்பசுவையும்மாதா
பிதாகுருவையும் கொன்றதோஷத்தில் போவார்கள் பழமலையார்
பெரியநாயகியம்மன் றுணை.

மேற்படிச் செப்பேட்டிலெழுதியிருக்கும்
இராஜசந்ததியார்களின் விருது(முப்பத்திரெண்டின்)
விவரம் வருமாறு.

பத்திரகாளிகொடுத்த பத்துகாணித்தேர் தேவேந்திரன்கொ
டுத்த வெள்ளையானை கொன்றைமாலை வாடாதமாலை அக்கினிக்க
திரை சாம்பிராணிகலசம் பகல்தீவட்டி சங்குசக்கரம் அறுகா
பீடம் மகரதோரணம் பாதகளாஞ்சி புலிக்கொடி கருடக்கொடி
அன்னக்கொடி மகரக்கொடி மச்சக்கொடி மயிற்கொடி சிங்கக்
கொடி தவளசங்கு புள்ளாங்குழல் வாணத்தடுக்கு முத்துக்குடை
வெள்ளைக்குடை படைவாணக்கழி சவளக்கழி சாமரை ஈயோட்டி
வெள்ளைப்பாவாடைகத்திகேடயம் அம்புபட்டாசமதாடு
ரந்தர் அம்பரூத்தூணி வில்லு டங்கா வெங்கலக்கொம்பு நகா
காகளம் என்றுசொல்லப்பட்ட பஞ்சவர்ணத்தாரை உடலவண்டை
ஜயபேரிகை தடி முட்டி வேட்டநாய் ஆகவிருது-௩௨.

இந்த தாம்பிரஸாஸனத்தைக் குறித்து சந்தேகப்பட்ட பேர்
கள் ஷெ மடாலயத்துக்குப் போய்கண்டால் தங்கள் சந்தேகத்
தைபெரிதும் நிவர்த்திசெய்துக் கொள்ளலாம்.

இங்ஙனம்.

பொன்னம்பல குருக்கள்.

மடாலயவாசி, விருத்தாசலம்.

# சருக்கவட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| | பாயிரம். | |
| 1. | சிருஷ்டிச் சருக்கம் | |
| 2. | வில்வலன் வதைச்சருக்கம் | உ |
| 3. | வாதாவிசூரன் தவம்புரிச்சருக்கம் | உ |
| 4. | இரத்தினபுரிச் சருக்கம் | ந |
| 5. | வாதாவிக்கு படைமிகுந்த சருக்கம் | ச |
| 6. | வாதாவிதிக்குவிஜயஞ் செய்சருக்கம் | ரு |
| 7. | நாரதர் தூதுச்சருக்கம் | ரு |
| 8. | சிவனாலோசனைச்சருக்கம் | எக |
| 9. | சம்புமகாரிஷி வேள்விச்சருக்கம் | எ |
| 10. | வன்னியராசாக்கள் உற்பத்திச்சருக்கம் | அக |
| 11. | சூறைச்சருக்கம் | ௯க |
| 12. | வீரவன்னியர்கள் படையெழுச்சிச்சருக்கம் | கங |
| 13. | நாரதர் வாதாவியினிடம் தூதுபோனசசருக்கம் | க |
| 14. | வீரவன்னியன் துர்க்கையுடன் கடல்தாண்டுசருக்கம் | க |
| 15. | விந...கர் காவற்சருக்கம் | க |
| 16. | துர்க்...க சோதனைச்சருக்கம் | கஅ |
| 17. | மந்திர...லோசனைச்சருக்கம் | கஅ |
| 18. | வாரத...ன்யுக்தம் முதல்நாள் | உ |
| 19. | குண்ட...லன்சண்டை இரண்டாநாள் | உ |
| 20. | மகே...ான்யுத்தம் மூன்றாநாள் | உ |
| 21. | மகோதரன்யுத்தம் நாலாநாள் | உ |
| 22. | கெமலாசூரன்யுத்தம் ஐந்தாநாள் | உஉ |
| 23. | ...ஜமுகாசூரன்யுத்தம் ஆறாநாள் | உஉ |
| 24. | கும்பாசூரன்யுத்தம் ஏழாநாள் | உஉ |
| 25. | சம்புமாலியுத்தம் எட்டாநாள் | உ |
| 26. | மூலபலச்சண்டை ஒன்பதாநாள் | உ |
| 27. | காளிக்குந்துர்க்கைக்கும்யுத்தம் பத்தாநாள் | உ |
| 28. | வாதாவியுத்தம் பதினோராநாள் | உ |
| 29. | நகரழித்தச்சருக்கம் | உ |
| 30. | மீட்சிச்சருக்கம் | உ |
| 31. | அரசியற்சருக்கம் | ந |


பாயிரம்உட்பட சருக்கம் மு...

ORIENTAL MANUSCRIPTS LIBRARY
MAR 1919

உ

கடவுள் துணை.

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

# வன்னியர்புராணம்.

## மூலமும் - உரையும்.

---

### விநாயகர்காப்பு.

பூதலம்புகழ் புண்ணியக்கச்சியில்
தாதுலாமலர் தாரணிசெஞ்சடை
யாதியண்ண லளித்தகெஜமுகன்
சோதிபாதந் துதித்துவணங்குவாம்.

(இ-ள்.) பூலோகத்தில் கீர்த்திவாய்ந்து தருமம் செழித்தோங்கிய காஞ்சீபுரத்தில் பூந்தாதுக்கள் நிறைந்த பூமாலைகளை சிவந்த ... பாரத்திலே யணிந்த ஆதியாகிய ஏகாம்பர நாதரளித்த ஆனைமுக விநாயகமூர்த்தியினுடைய பிரகாசம்பொருந்திய பாதத்தைப் போற்றி வணங்குவாம் எ-று.

### பரமசிவம்.

சீர்பூத்தநெடியோனு முந்திதனிலுதித்தோனுந் தேடிக்காணா
வார்பூத்தமுலைப்பாகர் மலைமருந்தாயிருந்தருளி வானவர்க்காய்
கார்பூத்தநஞ்சருந்தி யளித்துக்காந்துகந்த கருணைமூர்த்தி
தார்பூத்தமலர்பதத்தையென துளனந்தனிலிருத்திப்பணிகுவாமே.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய மகாவிஷ்ணுவும் அவர்உந்திக் கமலத்தினுதித்தருளிய பிரமனும் அடிமுடிதேடிக் காணாதவராகியும் கச்சணிந்த உண்ணாமுலையம்மனுக்கு இடப்பாகமளித்து மலையாகவளர்ந்து அமிர்தமாக விருந்தும் தேவர்களுக்கு கருமையாக கடலி லெழுந்துவந்த ஆலகாலவிஷத்தை உண்டு உயிர்களைகாப்பாற்றி ஆதரித்த கருணைசுரந்தமூர்த்தியாகியும் ... த்தின்கண்விளங்கிய செந்தாமரைப் பூப்போலிருக்கப்பட்ட ... திருவடிபாதங்களையும் என்னுடைய இருதயத்திலிருத்தி வணங்குவாம். எ-று.

## பராசத்தி.

பச்சைநிறமுடையாளை பவளமெனுமிதழாளைப் பருப்பதம்போல்
கச்சிறுகுமுலையாளை கருணைதருவிழியாளைக் கரியகூந்தல்
மெச்சுரும்புமலராளை யுலகமெலாம்நின்றருளு முதன்மையாளை
யிச்சையுடன்றம்வளர்க்குமெழிலாளையனுதினமுமிறைஞ்சுவோமே

(இ-ள்.) பசுமையானநிறமுடையவளை சிவந்தபவளம்போலு மிதழுடையவளை கச்சினாலிறுக்கப்பட்ட மலையைப்போன்ற தன முடையவளை கருணைபொழிகின்றவிழியுடையவளை கரியநிறம்போன்றகூந்தலில் வண்டுகள்மொய்க்கின்ற புட்பங்களுடையவளையெல்லாவுலகங்களையு மீன்றருளப்பட்ட முதன்மையுடையவளை ஆ[illegible]யுடனே தருமத்தைவளர்க்கு மெழிலுடைய பார்வதியம்மனை[illegible] காலமும் வணங்குவாம் எ-று.

## விநாயகர்.

துங்கமதம்வழிந்தொழுகுந்தும்பியெனுமுகத்தானைத் துகளி[illegible]
வைங்கரனைக்கனியொன்றி யரனறியவலம்புரியும்மருளினா[illegible]
கங்குனிறக்கயமுகனைக்கடிந்தவனைக்கங்கைதருங்காளையோனை
செங்கையினால்மருப்பொடித்துக்கலையெழுதினோனடியைச்சென்[illegible]
சேர்ப்பாம்.

(இ-ள்.) உயர்ந்த க[illegible]ன்மதங் கபோலமதம் பீஜமதம் இந்த மூன்[illegible] [illegible] வழிந்தொழுகப்பட்ட யானைமுகமுடையவனைச் [illegible] [illegible] த ஐங்கரமுடையவனை முன்னேவனதேவதைகள் பர சுற்றமி[illegible] பாதத்தைவலமாகச் சுற்றிவந்து கனியைவாங்கிக்கொண்டபுத்தியுடையவனை யிருள்நிறமுடைய கெஜமுகாசுரனை வென்றவனை கங்காபரமேஸ்வரியளித்த மதலையாகவந்தவனை யிரண்டுகொம்பில் ஒருகொம்பைவொடித்து வேதங்களையெழுதப்பட்ட விநாயகமூர்த்தியி[illegible]ன் பாதாரவிந்தத்தை சிரசின்மேல்வைத்து[illegible]ணங்குவாம்

## சுப்பிரமணியர்.

சரவணையி[illegible]தித்துவளர் சண்முகனைமலைமடந்தைதலை[illegible] [illegible]ண்ட, கரமிரண்ட[illegible] திருத்தோளிற் கடப்பமலர்த்தாரானைகனத்தசே லால், யுரமவு[illegible]ர்களைஜெயித்த வும்பர்கோன்மடந்தைமண முக துவேடர், தரு[illegible]ணைபுணர்ந்தகுகன் தாடனையா[illegible]மநாளுந் [illegible] மேற்கொள்வாட[illegible]

(இ-ள்.) ஆதி[illegible]யில்பரமசிவனுடைய நெற்றிக்கண்ணிலுதித்த அக்கினிப்பொறியை வாயுபகவான் சரவணப்பொய்கையிற்கொண்டு

வந்துபோட அதுகுழந்தையாகவளர்ந்து ஆறுமுகமுடையவனுகி யும் பர்வதராஜன்மகளாகிய பரமேஸ்வரியினுடைய ஸ்தன்னியத் திற்சுரந்த ஞானப்பாலுண்டருளிய பன்னிரண்டுதோளிலே கடப் பமலரை மாலையாகவணிந்த கனத்தவேலாயுதம் பொருந்திசூரபத் மன் முதலாகிய அசுரரைச்சங்கரித்து தேவர்க்கரசனுகிய தேவே ந்திரன் குமாரத்தியான தெய்வயானையைக் கலியாணஞ்செய்தும் வனத்திலிருக்கும் வேடப்பெண்ணான வள்ளியம்மனையு மணையப் பட்டச் சுப்பிரமணியக்கடவுளுடைய பாதத்தைத் தொழுவோம்.

## வீரபத்திரர்.

தக்கன்மகமழித்தருள்வான்தற்பரமன்தழல்விழி நீர்த்தரையி ற்றோய, யுக்கிரமாயுதித்தவனை ஒருகோடிபூதமுடனும்பராவி, கக்க வுமேமுனைந்தவனைக் கன்னியெனும்பத்தினிதன்காவலோனை, நக்க னெனவெழுந்தருளி யும்பருயிரளித்தவன்றாள் நாவிற்சேர்ப்பாம்.

(இ-ள்.) தக்கனென்பவன் கெர்வங்கொண்டு வேறே பரமசிவ னையுண்டாக்கவேணுமென்று யாகஞ்செய்ய அந்தயாகத்தை அழி க்கும்படியாகிய பரமசிவனுடைய ரூபங்களெல்லாந் தனக்குண்டா கும்படியாய்த்தோன்றி கோடிபூதகணஞ்சூழத் தக்கன்யாகத்திற் போய் அவ்விடத்துஅவிர்ப்பாகம் வேண்டிவந்த தேவர்களுடைய உயிரையுமாளச்செய்து யாகத்தைக்கலைத்தும் பத்திரகாளிக்கணவ னுகியும் இறந்துபோனவர்களை மறுபடியுமெழுப்பிக்கொடுத்த வீர பத்திரசுவாமியையும் என்னுவிலிருத்திக் கொண்டேன் எ-று. (ரு)

## நால்வர்.

அப்பரெனும்பெரியோனை யறுசமயங்களிலும் வாதாடுவோனை அப்பணியுஞ்சடையானை யரிவையிடந்தூதுவிடுமழகுள்ளானை, மை ப்படுங்கண்ணுமைமுலைப்பாலுண்டுசமணரையழித்தமறைவல்லோ னை, நற்பரியைநடத்துமரன் நற்பாதமடைவானை நம்புவோமே.

(இ-ள்.) அப்பரென்னப்பட்ட பெரியபேருடையவரையும்பர மசிவனை பரவையாரிடத்தில் தூதுவிட்டசுந்தரமூர்த்தியையும் மை யிடுங்கண்ணையுடைய ஈஸ்வரிமுலைப்பாலுண்டு சமணரைக்கழுவேற் றிய சம்பந்தசுவாமியையும் நரிகளைகுதிரையாக்கிக்கொடுத்த பரம சிவனுடைய பாதத்தில் அடையப்பட்ட மாணிக்கவாசகரையும் நம்பிவாழ்வாம் எ-று. (சா)

## நாயன்மார்.

கடுக்கையான்களித்திடவே மணந்தருளுங்கன்னிதனைக் கரத் தீந்தானை, படுக்கையினிற்பாவைதனையணையாமற்பரமன்வரம்பற்றி

நானை, யுடுக்கையதன்கரத்தணிந்த வுத்தமற்குவுச்சிட்ட முன்தந் தானைத், தடுக்கையுருமகவுணவு தந்திட்டோன் தன்னடியைத்தலை மேற்கொள்வாம்.

(இ-ள்.)ஆலகாலவிஷத்தைக் கண்டத்திலணிந்த பரமசிவனு க்குதான் கலியாணஞ்செய்த மனையாளைத்தன்கையினல் பிடித்துக் கொடுத்த இயற்பகைநாயனுரையும் ஒருபடுக்கையிலிருவரும்படுத் திருந்து ஒருவர்முகம் ஒருவர்பாராமல் விரதமாகவிருந்து பரமசி வனுடைய வரப்பிரசாதம்பெற்ற திருநீலகண்டநாயனுரையும் டம கரத்தைக் கரத்திலேந்திய பரமசிவத்திற்குதான் தின்றுருசிபார்த் துஉணவுகொடுத்தும் தன்கண்ணைப் பரமசிவத்தின்கண்ணிலப்பிய கண்ணப்பநாயனுரையும் புருஷனும் பெண்சாதியும் ஏகமனதாய் பிள்ளையைக் கரிசமைத்து சிவத்திற்களித்த சிறுத்தொண்டநாயனு ரையும் மற்றவர்களுடைய பாதங்களையும் சிரத்தின்மீது அணிந்து கொள்வாம் எ-று. (எ)

## நந்திதேவர் தண்டியடிகள்.

சந்ததமுந்தவம்புரியுஞ்சிலாதரன்றன் றனையனெனத் தகமை பூண்டநந்தியெனுநாமமுள நசகரினையாகவளர்நாரணந்தாள், தந் தைபதமறவெட்டி யழியாதபதவிபெறுந் தண்டீசன்றுன், சிந்தை யகலாதிருத்தி அழலுதித்தவீரனெழில் செப்பலுற்றேன்.

(இ-ள்.) அனுதினமுந்தவம்புரியும் சிலாதரர் புத்திரராகியநந் திதேவரையும் தண்டீஸ்வரருடைய பாதத்தையும் மனதிலேயிருத் திக்கொண்டு அக்கினியிலேயுதித்த வீரவன்னியாளுடையகதையை புராணமாகச் சொல்லுகிறேன் எ-று. (அ)

## துர்க்கை.

சங்கரனேடெதிர்த்துநடம்புரிமலர்த்தாளம்பிகையேசமயமெ ன்ன, வெங்குமுறைமெழிலாளையிருள்மகிடனைக் கடிந்தயிணையிலா ளை, கங்கணகபாலிதிரிசூலி பெருங்கணங்களுடன் களித்ததாயை, பொங்கரவமணிந்தருளும் பூவையேவன்னியர்கள்புகழ்காப்பாயே

(இ-ள்.) சங்கரனகியபரமசிவனிடத்திலெதிர்த்து நடனஞ்செ ய்ததுர்க்காபரமேஸ்வரியை சமயமென்று எங்கும்வளர்ந்திருந்து எழிலாகயிருக்கப்பட்டவள்இருள்நிறமுடைய மகிடாசூரனைவென் று இணையில்லாதிருக்கப்பட்டவள் கொதிக்கபபட்டவிஷமுடைய அரவத்தைஅணியப்பட்ட துர்க்காதேவியை வீரவன்னியருடைய புராணத்தைப் பாடிமுடிவுபெறும்படியாக துதிக்கின்றேன் எ-று.

## சரஸ்வதி.

தவளமெனுநிறத்தாளை தண்டரளவடமணிந்தத் தனத்தினளைப், புவனமெலாநிறைந்தாளைப் பூரவாகினியென்னும்புகழினளை சவையதனிற்குடியாளை தமிழ்வல்லோக்கமுதமெனுந் தையலாளை, யுவணமூர்த்தியையனந்த னுகந்தணிந்தவினைமலர்த்தா ளாட்கொள்வோமே.

(இ-ள்.) வெண்மைநிறம்போன்றநிறமும் முத்தாபரணங்களை வடமாகவணிந்தனமும் ஈரேழுபதினலு லோகமெல்லாம்நிறைந்து பூரவாகினியென்னும் புகழுடையவளர்ச்சியும் சங்கத்திலேகுடியாகியும் தமிழ்வல்லோர்க்கு அமுர்தமாகிய தையலாகியும் கெருடவாகனமேறப்பட்டமஹாவிஷ்ணுபிள்ளையாகிய பிரமதேவன்மகிழ்ந்து அணிந்தசரஸ்வதியினது இணையில்லாத விரண்டுபாதாரவிந்தத்தை யெத்தேசகாலமும்மனதிலேவைத்துக்கொள்வோம் எ-று

## அவையடக்கம்.

வேறு.

நத்தமிழோர்ந்திடு நாவலோரவை
கத்தறியாதவன் கலையுரைத்தல்போல்
வித்தகவிரிஞ்சனே றனத்தின்முன்னொரு
சத்திலாமசகமும் பறவைதந்தவே.

(இ-ள்.) நன்மையாகிய தமிழையுணரப்பட்ட வித்வான்களுடையசபையில் தமிழ்கல்லாதமூடனானவன் தமிழையுரைத்ததுபோலும் பிரமதேவனேறப்பட்ட அன்னப்பட்சி பறக்கிறதைக்கண்டு ஒருகொதுகானது தானும்பறக்கிறேனென்று பறந்ததுபோலும் வீரவன்னியபுராணத்தை தமிழாற்சொல்லினேன் எ-று. (கக)

சுதமதிநீர்விட சுவைகள்குன்றுமோ
மதுமலர்புனைந்த நாள்மணமகற்றுமோ
நதியணியரன்மகன் வீரவன்னியன்
கதையினலெனதுரை கடிந்துரைப்பரோ

(இ-ள்.) பாலில்நீர்விட்டால் அதனுடையமதுரம் குறையாதுபோலும் தேனெழுகப்பட்ட மலருடனேசேர்ந்த நாறுமணத்தை நீங்காதுபோலும் கங்கையைச்சூடிய பரமசிவனளித்தபிள்ளை நல்தவத்தைப்பெற்ற வீரவன்னியருடைய கதையானதால் என்சொல்லை யாருந்தள்ளமாட்டார்களென்று துணிந்து சொல்லினேன். ()

நச்சளித்திடுமரவம் நலமதாகுமோ
மெச்சியகரும்பினி னினிப்புகுன்றுமோ

வச்சமிலாதிந்த தமிழுணர்ந்துளோர்
குச்சிதகவியெனும் பயன்கொள்வார்களே.

(இ-ள்.) நச்சுகொடுக்கப்பட்டபாம்பு நல்லதாகுமோ கரும்பு தன்னுடையமதுரங்குன்றுமோ அச்சமில்லாமல் நல்லதமிழையுணர்ந்தவித்வான்கள் அழகில்லாத கவிகளாயிருந்தபோதிலும் அதை செவ்வையாகத்திருத்தி யெடுத்துக்கொள்வார்கள் எ-று. (கங)

அணுவளவுந்தமிழ் மிடியகற்றியே
கனமதுரந்தரு கவியுணர்ந்தபேர்
இணையிலாமூடர்முன் னெதிர்ப்பதாகுமோ
மணமலர்ப்போற்கொள்வர் மற்போர்க்கொள்வரோ.

(இ-ள்.) அணுவளவாவதுதரித்திரமில்லாமல் தமிழைக்கற்றுணர்ந்தபேர்கள் தனக்குஇணையில்லாமல் முரட்டுபுத்தியுடைய பேர்களுடனே யெதிர்க்கலாகுமோ அதெப்படியென்றால் வாசனையுடையபுட்பத்தை பாணமாகமன்மதனெய்தால் அப்பாணத்தை ஸ்திரீசாதிகள் பொறுப்பார்களே யல்லதுமல்யுத்தம் செய்பவர்கள் பொறுக்கமாட்டார்கள் அப்படிபோல பெரியோர்கள் மூடர்களுடனே யெதிர்க்கார்கள் எ-று. (கச)

வே று.

ஆதியானுறை கூடலில்மன்னவன்
சோதிசுந்தர பாண்டியன் துங்கமாஞ்
சாதிவன்னிய காதைபுராணமாய்
வோதுவென்ன வுளமகிழ்ந்தோதினேன்.

(இ-ள்.) ஆதியாகியபரமசிவன் வளரப்பட்டமதுராபுரிக்கரசனாகியபிரகாசமுடைய சுந்தரபாண்டியனானவன் முன் மேன்மை பொருந்தியசாதியான வீரவன்னியருடைய கதையைச்சொல்லவேணுமென்றுகேட்க வென்னுடையஉள்ளமானது மகிட்சிகொண்டு சொன்னேன் எ-று. (கரு)

ஆலமுண்டோ னனுதினமாண்டருள்
மேலவாயலில் மேவியகிருஷ்ணன்
பாலனாகிப் பாரிலுதித்திடும்
சீலவீரகுமாரனெண் சீருளோன்

(இ-ள்.) ஆலகாலத்தையுண்டபரமசிவன் ஆண்டருளியமதுராபுரிக்கோட்டையின்மேல் வீதியிலிருக்குங்கிருஷ்ணப்பிள்ளையின் தவப்பாலகனாகியசைவவேளாளன் வீரப்பிள்ளையென்றுபேர்பெற்று

## மூலமும் - உரையும்.

சுந்தரபாண்டிய ராஜாவின்சமுகத்தில் சங்கத்தாராகிய லவரிடத்தில் எட்டுத்திசையும் சிறப்பாகவைபோக மது பட்டவன் நானிந்தக்கதையை சொன்னேன் எ-று.

காசிபன்மகள் காளிவாதாவின்
ஈசனைத்துதி செய்தவன்றெழிலுள
தேசுபெற்று செலுத்தும்நாள்தனில்
மாசில்வன்னிய மன்னருதித்தது.

(இ-ள்.) காசிபருடையமகள் அசோமுகிபிள்ளையானவா யென்பவன் பரமசிவனைநினைத்து தவஞ்செய்து பெரிதாகியசிற ப்பெற்று ராஜ்யபாரஞ்செலுத்துகிறநாளையிலே குற்றமில்லாத வன்னியமகாராஜா உற்பத்தியாகின்ற கதையைச்சொல்லுகிறே

இந்திரன்மக ளிட்டமணந்ததும்
அந்தநால்வர் மகத்திலுதித்ததும்
சிந்துமீதினிற் சென்றுவாதாவியின்
புந்திபோக்கியப் பூதலமாண்டதும்

(இ-ள்.) தேவேந்திரன்மகளாகிய மந்திரமாலையைக் கலியாண ஞ்செய்ததும் பிள்ளைகள்நாலுபேர் யாகத்திலேவுற்பத்தியானதும் இவர்கள் சமுத்திரங் கடந்து வாதாவியின் பட்டணமான அத் தினுபுரியிற் சென்று வாதாவியைக் கொன்றதும் பூலோகத்தில வந்துராஜ்யபாரம் ஆண்டதும் சொல்லுகிறேன் எ-று. (கஅ)

நாதனந்திக் குரைசெயநந்தியும்
வேதமோதும் வியாசனுரைத்ததை
சூதனுக்குரை செய்யவச்சூதனும்
தீதிலாதசனகற் குரைத்தனன்.

(இ-ள்.) வீரவன்னியராஜாக்களுடைய சரித்திரத்தை ஆதியில் பரமசிவன் நந்திகேஸ்வரருக்குச்சொல்ல நந்திகேஸ்வரர் வேதஞ் சொல்லுகின்ற வேதவியாசருக்குச்சொல்ல வேதவியாசமுனி சூத முனிக்குச்சொல்ல சூதமுனியுங்குற்றமில்லாத ஜனகாதியரிஷிகளு க்குச் சொன்னார் எ-று. (கசு)

சனகனிந்தச் சரிதையுணர்ந்துமே
முனிவனத்திரி கேட்கமொழிந்தனன்
புனிதமாகிய பூதலமீதுள்ளார்
வினவியாரும் வியந்தறிவார்களே.

.) சனகமகாரிஷியானவர் இந்தவீரவன்னியருடையசரி
 தெரிந்தபடியினுலே முனிவஞகிய அத்திரிமகாரிஷிக்கு
ல அத்திரிமகாரிஷி யிந்தக்கதையை ஆசையுடனேகேட்க
ப்போலவிந்தப் பூதலமாகிய பூமியின்கண்ணுள்ள பேர்கள்
நம் இந்தப்புராணக்கதையை ஆவலுடனேகேட்டு தங்கள்ம
ல் தெளிந்துகொள்வார்கள் எ-று. (உம)

வன்னியன்தண லுதித்தருள்வன்னியன்
மன்னுகாதை வடமொழியானதை
பன்னுசெந்தமி ழானபண்பாவினு
லின்னலின்றி யியம்பிடக்கேண்மினே

(இ-ள்.) வீரவன்னியமகாராஜா அக்கினியிலுதித்தருளியபுரா
ணமானது ஆதியில்கிரந்தவாக்கியமா யிருந்ததையாவரும்சொல்லு
ம்படியான செழுமைபொருந்திய நல்லசெய்யுள்களாலே சொல்
லும்படியானதை யாவருங்குற்றமில்லாமற் கேட்டருளவேணுமெ
ன்று சொல்லத்தொடங்கினேன் எ-று. (உக)

பாயிரம் முற்றிற்று-ஆகச்செய்யுள்-உஉ.

உ

கடவுள் துணை.

# முதலாவது.

# சிருஷ்டிச் சருக்கம்.

ஆலமுண்டருளமரரைக்காத்தவண்ணலுஞ் சனகனுக்குரைத்து,
பாலெனபஞ்சாக்கரமதைப்புகட்டிப்பரிவுடன்கைலைமீதிருப்ப, சா
லைசூழ்வனத்திலுறைகும்பன்குமுதன்றுகளிலாகோதமன்மதங்கள்
சீலமந்திரியும்புலத்தியன்வசிட்டன்சேர்ந்தனர்சனகர்சாலையினில்.

(இ-ள்.) ஆலகாலவிஷத்தை உண்டு தேவர்களைஇரக்ஷித்தபரம சிவனும் சனகாதியர்நால்வரும் அகஸ்தியன்புலஸ்தியன் ... ஆகியவர்களுக்கும் மனதுகந்துபால்புகட்டுவதுபோல பஞ்சாக்ஷரத்தைஉபதேசம்பெற்ற பெருமைபொருந்திய சனகருடைய வனஞ்சூழ்ந்த சாலையிலிருக்கப்பட்ட தபோதனர்களாகிய கும்பரிஷி குமுதரிஷி கௌதமரிஷி மதங்கரிஷி அத்திரிமகாரிஷி புலத்தியரிஷி வதிஷ்டரிஷி யிவர்களனைவருங்கூடி சனகரிஷி பர்ணசாலைக்குப் போனார்களென்றவாறு.

கண்டனன்சனகன்கருத்தினிலிருந்தகழற்களிலிறஞ்சியங்கிருத்தி
யுண்டோர்தவஞ்செய்யதுவெனநாடிசத்தமேதன்முனியுரைப்ப
சண்டனையுதைத் தற்பரனருள்கத் தவஞ்சிறுசாரவஞ்செழுத்துக்
கொண்டமாதவமேயெனத்தொழுதேத்திக் குலவியங்குறைந்திடு
நாளில்.

(இ-ள்.) தபோதனர்கள் வருகிறதுகண்டு சனகமஹாரிஷியெழுந்திருந்து துதிசெய்து பாதத்திற்பணிந்து ஆசனங்கொடுத்து இருக்கச்சொல்லி நான்செய்ததவமோவென பர்ணசாலைக்கெழுந்தருளியதுவேதென்று யுபசாரஞ்சொல்ல அப்போதுவந்த ரிஷிகளினுடைய மனதுமகிழ்ந்து எமனையுதைத்தெழுப்பிய பரமசிவனுடைய பஞ்சாட்சரமுட்கொண்ட மாதவமேயென்றுபுகழ்ந்துதோத்திரஞ்செய்தார்கள் எ-று. (உ)

அத்திரிசனகனடியிணைதொழுதே னய்யனேழிவுபோக்குவதாய்க்
குற்றமில்லாதகுவலயமேலோர் குறித்திடக்கதைகள்கூறென்ன
சித்தமுந்தேறிகதைகளாராய்ந்து தெரிந்துவன்னியர்களின்சரிதை
சத்தியமாகவுனக்குரைசெய்வன் தவமுனிகேளெனவுரைப்பான்

(இ-ள்.) அப்போதுஅத்திரிமஹாரிஷியெழுந்திருந்து சனகரிஷிபாதத்தைத்தொழுது அய்யனே குற்றமறும்படியாகவிந்த பூலோகத்திலிருக்கின்றமேலோராகியபெரியோர்கள்அங்கீகரிக்கும்படியான கதைகள்சொல்ல வேண்டுமென்றுகேட்க சனகரிஷிமனதுகந்த பலபலவேதாகமங்களை யாராய்தறிந்து வீரவன்னியருடையபுராணத்தை நான்சத்தியமாக வுனக்குச்சொல்லுகிறேன்கேளென்றுசனகரிஷி சொல்லுவார் எ-று.

வன்னியர்பெருமை மனதினிற்றெளிய வகையுடனருளுமாதவனே, என்னவச்சனகனில்லவகைத்தாகிய யியம்பிடநாவெழாமையிற், சொன்னவக்கதையைத் தொல்லுலகுறைவோர் துதிசெய்யட்சூக்ஷமமாக, நுண்ணியதுணர்ந்தமாத்திர முரைப்பேனுண்மையாய்க் கேளெனவுரைப்பான்.

(இ-ள்.) வீரவன்னியர்பெருமையைசொல்வதாகசொன்னீரே அவ்வளவுமேலாகிய புராணத்தைச் சொல்லவேணுமென்றுகேட்ட அத்திரிமகாரிஷிக்குச்சனகரிஷிசொல்ல அரியபொருளானவேதத்திலிருக்கிறகதையை இந்தபூலோகத்தார் புகழும்படியான்தெரிந்தமாத்திரஞ் சொல்லுகிறேனென்றார் சனகரிஷியானவர் எ-று. (௪)

வேறு.

யுகமுடி வாகுங்காலி லோங்கிய புவனமெல்லாம்
திகிரிமா ளுளத்தடக்கி சிருட்டியாற்புவியுண்டாக்கி
வகையுந்திமலரின்வேதன் வந்தவனவனுமிந்தச்
செகமெலாமுன்புபோல திருத்தவேமனதுகந்தான்.

(இ-ள்.) யுகமுடிவாகி சலப்பிரளையகாலங்களிலே ஏழுலகமுமுண்டருளிய சக்ராயுதபாணியான விஷ்ணுவானவர் மறுபடியும் பூலோகமுண்டாக்கவேணுமென்று தமதுந்திக்கமலத்தில் சகலமுமுண்டாகும்படி சிருஷ்டிக்குரியமந்திரத்தைப் போதனைசெய்ய அம்மந்திரத்தினலேசகலமும் உண்டாக்கநினைந்தான் பிரமதேவன்.

மலரயனினைத்தவேளை மரிசியோடங்கிராவும்
புலகனத்திரிகிருந்து புலத்தியன்புகழின்மிக்க
கலசனகாதியுற்றார் கனவலவிரசிற்றக்கன்
பிலமுடனுதித்தான்மார்பிற் பிருகுவுநண்ணினனே.

(இ-ள்.) பிரமதேவன் நினைத்தமாத்திரத்திலே மரீசிரிஷி அங்கீரரிஷி புலகரிஷி அத்திரிஷி கிருதுரிஷி புலஸ்தியரிஷிசனகன்முதலிய இவர்கள்மனதினுதித்தார்கள் வலப்பாதப்பெருவிரலில் தக்கனுதித்தான் மார்பிற் பிருகுரிஷிபிறந்தார் எ-று. (சு)

தருமதேவதையுந்தாதா தனமதினுதித்தாரப்போ
பெருமைசேர்மரீசியின்பாற் பிறந்தனன்காசிபன்றான்
மலரணியிந்ததக்கன் மகவினுக்கரனைப்போற்றி
திருவுளமறிந்திடத்தன் றேவியோடுரைசெய்கின்றான்.

(இ-ள்.) தருமதேவதை பிரமனுடைய ஸ்தன்னியத்தினுதித்தாள் பெருமைபொருந்திய மரீசிபால் காசிபரிஷிபிறந்தனர் ஈஸ்வரிதனக்கு மகளாகவரவேணுமென்றுஎண்ணி தக்கன்பரமசிவனை நோக்கி தவஞ்செய்வதை பரமசிவனறிந்து உமையவளே நீதக்கன் மகளாகப் போகவேண்டுமென்று சொன்னார் பரமசிவன் எ-று.()

வே று.

அந்தணரரசர்வைசியர் சூத்திரரென் றறைந்திடுநான்குளமரபில், வந்தறுதொழிலுக்குரியவரிவரால்வழுத்திடகுலமு முற்பவித்தார், இந்தநான்கினிலும்வேந்தரையவர்களி னிவர்களுக்கியம்புமாக்னேயம் தொந்தமாயுரைக்கும் பொருளினையுணர்ந்து சூக்ஷ்மமரயுரைக்கக் கேளென்றான்.

(இ-ள்.) அத்திரிஷியேகேளும் பின்னும்பிர்மதேவன் சிருஷ்டியாலுண்டாகிய பிர்ம்மக்ஷத்திரிய வைசியசூத்திரரென்கின்ற நான்குசாதியில் பிரமகுலமாகிய பிராமணருக்கு ஆறுதொழிலுண்டு அஃதெப்படியென்னில் ஓதல்ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல்ஏற்றல் இவைகளாம் க்ஷத்திரியராஜாக்களுக்கும் ஆறுதொழிலுண்டு ஈதல்உலகாளல் வேட்டல்படைப்பித்தல் போர்செய்யல் முதலியவைகளாம் வைசியருக்கும் ஆறுதொழிலுண்டு ஓதல்வேட்டல் ஈதல்உழவு பசுகாயல் வாணிபமிவைகளாம் சூத்திரராசியவேளாளர்களுக்கும் ஆறுதொழிலுண்டு உழவுபசுகாத்தல் வாணிபம்

குயிலுவம்காருகவிளைவு பிராமணுளுக்கேவல்செய்யல்இவைகளாம் இதில்குயிலுவமாவது மேளங்கொட்டடல் தாரைசின்னமுதல் காருகவிளைவாவது பருத்தி நூல்பட்டுநூல்அமைத்தல் இவைவேளாளர்முறையென்பது திவாகரம் நிகண்டு பன்னிரண்டாந்தொகுதியிலும் இன்னும்பொதுநூலிலுஞ் சொல்லுகின்றன இந்தநான்குசாதியிலுமுயர்ந்தசாதிஆணும் தாழ்ந்தஜாதிபெண்ணும் கூடிப்பிறந்த பிள்ளைகள் அனுலோமரென்றும் இப்படியாகிவந்த சாதிகளனேகமுண்டு இஃதிப்படியிருக்கவீரவன்னியரில்நான்கு ஸ்ரீகளுக்குவியாசமுனிவர் அருளிச்செய்த ஆக்னேயபுராணத்தில் உத்தரபாகத்திற் சொன்னபொருளையுணர்ந்து நான்குற்றமில்லாமல் சொல்லுகிறேன் அத்திரிஷியேநீர் கவனமாய்க்கேளுமென்று சொன்னார் சனகரிஷி எ-று. (அ)

பங்கயமுகத்திலுதித்தவந்தணரும்பதுமன்மார்புதித்தக்ஷத்திரியர், புங்கவன்வயத்திலுதித்திடும்வைசியர்பிரமன் பின்னுடம்பசூத்திரரு, மிங்கிவர்நான்கிலுயர்ந்தவராணு மிழிகுலப்பெண்ணுமாயிசைந்து, அங்கதிலுதித்த அனுலோமனென்பரனே கருண்டென மொழிந்தான்.

(இ-ள்.) பின்னுஞ்சனகரிஷிசொல்லுகிறார் பிர்ம்மாவின்முகத்தில்பிராமணுளும் மார்பில்க்ஷத்திரியர்கள் வயிற்றில்வைசியர் பின்புறத்தில்சூத்திரருமாகப் பிறந்தார்கள் இந்நான்கில் உயர்ந்தஜாதி ஆணும் இழிகுலப்பெண்ணும் கூடிப்பிறந்தபிள்ளை அனுலோமனென்றும் அனேகமுண்டென்று சொன்னார்சனகரிஷி எ-று (கூ)

உலகுளச்சாதிவகைக்கெலாம் வேந்தருபகுலவன்னியரென்றும் கலையுணர்வியாசருரைத்த வீரொன்பான் கவிதையாக்கினையினிற் கண்ட, நிலைபெழுருத்திர பாகபாயத்தை நிகழ்த்துவேன் கேளுநீரிருந்து, சிலையினல்மிகுத்த வீரசேவகத்தை சிந்தையிற்றெளிவுறவென்றான்.

(இ-ள்.) பூலோகத்திலுள்ள சகலவர்க்கங்களுக்கும் இராஜவாகியவீரவன்னியர்களுடைய மேன்மையுஞ்சௌரியமும் பரமசிவனுடையஅருளினலே அக்கினியில் வந்தவில்லும் சௌரியமுள்ள சேவகமும் வேதவியாசர்செய்திருக்கின்ற பதினெண்புராணத்தில் ஆக்கினேயவடபாகத்தில் உருத்திரவன்னியர்கள் யாரெனிற்கேளுமென்றார் சனகரிஷி எ-று. (ய)

அயனுளசிருஷ்டியமைத்திடுமதனில்அமரருமுனிவருமனைத்தும்
நயமுதலெறும்பு கடவகையுளதுங் காசினிலுறும்பொருள் கருவி,
நயமுறுபுயங்கள் தாபரசங்கம நலங்கொளும்பலங்களும் நவின்ற
செயமெலாங்கன்று யுரைத்தயாகமத்தின் சிவன்மகன்புகமகள்கே
ளென்றான்.

(இ-ள்.) பிரமசிருட்டியில் தேவேந்திரன்முதல் சத்தரிஷிகள் யானைமுதல் எறும்பீறாக சகலஜீவராசிகள் தாவரசங்க மனைத்தும் விளங்கியபொருள்களை அதம்பண்ணகருவம்படைத்த ராக்ஷதர்க்காக சம்புமஹாரிஷியாகத்தில் யுதித்துவந்த வீரவன்னியருடைய பெருமைபொருந்திய கதையைகேளென்றார் சனகரிஷி எ-று. (கக)

வேறு.

தென்றிசையுரையுந்தக்கன் சீருளதவஞ்செய்கின்றான்
நன்றவன்மகவாவென்று நாடுவாயென்னலோடும்
கொன்றைசூடியையிறைஞ்சி கூறுவாளடியேன்றன்னை
மன்றல்சூடுவதெந்நாளோ மயேஸ்வராவென்றுகேட்டாள்.

(இ-ள்.) தெற்குத்திசையில் வாழ்கின்றதக்கன் பெருமைபொருந்திய தவஞ்செய்கிறபடியினாலே அவனுடையமகளாகப்போவென்றுசொல்லக்கேட்ட உமையவள் பரமசிவனைத்தொழுது தேவரீர் திருக்கல்யாணஞ்செய்வதுஎந்தநாள் அதைஎனக்குச் சொல்லவேண்டுமென்றுகேட்டாள் உமையவள் எ-று. (கஉ)

கன்னியாயுதியேழாண்டிற் கனதேவர்சூழவுன்பாற்
றுன்னியேமணமுங்கொள்வன் தோகைநீயேகுகென்ன
மன்னவன்தக்கன்றேவி மகிழ்ந்திடக்குழவியாகி
முன்னுறக்கண்டமாது வுவகையிற்றோய்ந்தாளன்றே

(இ-ள்.) உமையவளே நீதக்கன்மனைவி மகிழ்ந்திடக்குழந்தையாகிவளர்ந்து கன்னிவடிவாகுகயாம்வந்து மணம்புரிவோம்நீபோவென்றுசொல்ல பரமசிவன் உத்தரவின்படி உமையவள் அவள் முன்னர்தோன்றிவரக்கண்ட அன்னாள் பெரியசந்தோடக் கடலிற் படிந்தாள் எ-று. (கரு)

களித்தனரும்பரெல்லாங் காவணமலரைப்பெய்தார்
உளத்தினில்மகிழ்ந்தான்தக்கன் யுத்தமியெங்களம்மை
வளத்திடுந்தவத்தால்பன்னி மனமிகமகிழ்ந்தாளன்னாள்
விளத்திடும்பதியிற்போந்தே விருவணஞ்செய்துகந்தான்

(இ-ள்.) உமையவள் பூலோகத்திற் றேன்றியவுடனே தேவர்கள் புஷ்பமாரிபொழிந்தார்கள் ஈஸ்பரியாகிய தன்மகவைத் தக்கன்கண்டுமிகவுஞ் சந்தோஷமடைந்தான் அவன்பன்னியு மப்பிள்ளையைமார்பிலணைந்து பால்கொடுத்து சந்தோஷமுற்றுள் அந்நாளில் என்னைபுணைகியபரமசிவன் ஈஸ்வரியுதயஞ்செய்த ஸ்தலத்துக்கு ஏழாவதுவருஷம்வந்து திருக்கல்யாணஞ்செய்துமனதுமகிழ்ந்தார்

தக்கனுமரனைநோக்கி தவரிடாநிதமும்மென்னூர்
புக்கிவிபூதிநல்கி புகலுதிவரங்களென்ன
அக்கணமறைந்தேமுக்க ணரியோடுலகனைத்தும்
மிக்கவெண்ணீறணிந்து வெள்ளியங்கிரியிருந்தார்

(இ-ள்.) பரமசிவன் உமையவளைகலியாணஞ்செய்தபின்புதக்கன் பரமசிவனைநோக்கி சொல்வான் நீர்தினந்தோறும் எனக்கு விபூதிகொடுத்து வருகவேண்டுமென்று உறுதியானவரங் கேட்க அப்போதுபரமசிவனும் ஈஸ்வரியுஞ்சிவலோகம்போய் இருவரும் ணிறமாய விபூதிசண்ணித்தமேனியராய் மேலானவெண் வீற்றிருந்தார்கள் எ-று. (கரு)

பூதியையளிக்கத்தக்கன் புந்தியிற்கெருவமாகி
ஆதியாந்தனையிகழ்ந்தான் அருளதனையறிந்தேபக்க
பேதையோடுரைகள்செய்தேபோந்திடாதிருக்கப்பின்னேன்
சோதியையழிப்பேனென்று சோர்வுறுமகம்புரிந்தான்..

(இ-ள்.) பரமசிவனும் உமையவளுங் கயிலாசத்திலிருக்கும்போது தக்கனவன்தன்மனதின்படி நடக்காமல் மறைந்துபோனதால் மருமகனனபரமசிவன் அழிந்துபோகும்படி செய்கிறேனென்று தக்கன்மாரணயாகஞ்செய்தான் எ-று. (கசு)

வானவர்சூழவேதன் மாலுடனஷ்டபாலர்
பானுவும்புவிநிறைந்த பான்மையையுமையாள்கண்டு
தானகமகிழ்ந்தேயீசன் றாள்வலம்புரிந்துதந்தை
யானவன்முகமுங்காண வடியளுக்கருள்களென்றுள்.

(இ-ள்.) தக்கன்யாகத்துக்கு தேவேந்திரன்தேவர்கள் அஷ்டதிக்குப்பாலர்கள் பிரமாவிஷ்ணுசந்திரன்சூரியன் அனைவருங்கூடி செய்கிறயாகத்தைப் பார்த்துவருகிறேன் அடியாளுக்கு உத்தரவு கொடுக்கவேண்டுமென்று வணங்கிக்கேட்டாளீஸ்வரி எ-று (கஎ)

அரனுமங்கனுப்பச்சென்று அழைத்திடாத்தக்கன்வாழ்வு
சரியவுமகம்பேய்சுடு காடெனச்சபித்தக்கோதை

வரமருள்கைலைசென்று வாறெலாமங்கைபாகன்
திருவுளமுணர்ந்தோராகி சினத்துடன்விழிக்கலுற்றார்

(இ- ள்.) பரமசிவனுமையாளுக்கு உத்தரவுகொடுக்க உமையவள் தக்கனுடையவேள்விக்குப் போனபோது தாய்தகப்பனும் வாவென்று உபசரிக்காமலிருந்தபடியினலே ஆலோசனைமிகுந்து மனங்கொதித்து பேயிருக்குஞ்சுடுகாடாகக் கடவதென்றுசபித்து திரும்பிகயிலாசம்போய் பரமசிவனிடத்தில் இங்கேநடந்த விபரத்தைச்சொல்ல சிவபிரானுக்கு தீபாக்கினிபொங்கி அத்தருணம்நேத்திரத்தில்வருகிற அக்கினிநீரைவழித்து பூமியில்எறிந்தவுடன்வீரபத்திரர் தோன்றினர் எ-று. (கஅ)

விழியினீர்ததும்பக்கண்டு விமலனுங்கரத்திற்றேய்த்தே
யழிவிலாபுவியளித்தார் அவ்விடம்வுதித்தவீரன்
உழுவையினுரியணிந்த வுருத்திரவுருவமன்னித்
தொழுதனன்தக்கன்யாகந் தூளெழும்பிடச்செய்யென்றார்.

(இ-ள்.) பரமசிவன்விழிநீரை பூமியில்விட்டவுடனே வீரபத்திரன் ருத்திராங்காரத்துடனேதோன்றி யென்னையழைத்த தென்னவென்றுகேட்க தக்கன்யாகத்தை யழித்துவருவாயென்று சொல்ல அப்படியேயாகட்டுமென்றுபோனன் யாகஞ்செய்கிறவிடத்துக்கு வீரபத்திரக்கடவுள் எ-று. (கசூ)

படையெனுமலகைசூழ பதியினிலேகியாக
முடைபடவிழித்தானும்ப ரொன்றிலாமடிந்தான்தக்கன்
முடியையோரலகையுண்ண ஒழித்தனன்சாலையெல்லாம்
சுடலையாயினவழிந்து தோன்றினர்விடையின்மீது

(இ-ள்.) பரமசிவன் வீரபத்திரனைப்பார்த்துதக்கன்யாகத்தை யழித்துவரக் கடவாயென்றுசொன்னவுடனே வீரபத்திரர் பூதகணங்களுடனே தக்கன்பதிபோய் யாகமுடையும்படி யழித்து தேவர்களையுமடித்து தக்கன்தலையை ஒருபூதந்தின்னும்படி செய்து யாகசாலையெல்லாஞ் சுடலைக்கரையாக்கியபின்னர் ரிஷபவாகனமேறிவந்தார் பரமசிவன் எ-று. (உ௰)

தந்தையின்மகத்தைக்கண்ட தையலாளரனையேத்தி
யெந்தையாற்றேவர்மாண்டா ரெழுந்திடச்செய்வாயென்ன
சிந்தையிற்கருணைகூர்ந்து செழித்திடவெழும்பச்செய்தார்
அந்தமாய்தக்கனுட்டுத் தலைபெறவளித்தானையன்

(இ-ள்.) தந்தையான தக்கன் யாசமகிழ்த்துக் கிடக்கிறதைக் கண்டுபார்வதி பரமசிவனைவணங்கி சுவாமிஎன்னுடைய தகப்பன் ஈனனைபடியினலே அவன்சொற்கேட்டு தேவரெல்லா மடிந்தார்கள் அவர்களையெழுந்தருளச் செய்யவேணுமென்றுகருணைகூர்ந்து பழையபடி தேவரையுமெழுப்பி அவரவர்பதவிக்கு போகச்சொல்லி யிடறுசெய்ததக்கனுக்கு ஆட்டுத்தலையை யடையாளமாகவைத்து எழுப்பினர் பரமசிவன் எ-று. (உக)

வே று.

அண்டரானவ ரரனையிரைஞ்சினர்
சண்டன்வீழுயுதைத் தவர்சாற்றுவார்
துண்டமைபழித் தோதுங்களினல்
மண்டரக்கரில் வாடுவீரென்றனன்.

(இ-ள்.) அப்போது தேவர்களுயிர்பெற்றெழுந்து பரமசிவனைவணங்கும்போது எமனையுதைத்தெழுப்பியபரமசிவன்சொல்லுகிறர் தக்கன்சொல்லினலே யென்னையிகழ்ந்து நீங்களும் யாகத்திலிருந்தபடியினல் அனைவரும் இராக்ஷதனல்துன்பப்பட்டு வருத்தமடைவீர்கள் எ-று. (உஉ)

உள்ளமான துருகியவும்பரும்
வள்ளலாயவனன் வாடுநாள்
விள்ளவேணுமென் றெனத்தொழவேணியுங்
கள்ளமின்றி கடவுளுரைசெய்வார்.

(இ-ள்.) தேவாதிகள்பயந்து மனம்அழுன்று பரமசிவனைப் பணிந்து தேவரீர்கொடுத்தவரம் தவருவது எந்தநாள்சுவாமி அடியார்கள்செய்த அபசாரம்பொறுத்து இரக்ஷிக்கவேணுமென்றவசனங்கேட்டு கிருபைகூர்ந்து சொல்லுவார்பரமசிவன் எ-று. (உங)

மாயையென்றொரு வஞ்சியுதித்தவள்
தூயகாசிபன் தோடணிற்றேயவே
சாயவீரரென் றுன்தனையராய்
ஆயிரத்தெட்டு அண்டமுமாளுவார்.

(இ-ள்.) மாகாமாயையென்றொருபெண் காசிபரிஷியினிடத்தில்சேர அவளால் நாலுபிள்ளைகளுண்டாகும் அதில் ஆண்பிள்ளை மூன்றுபேர்கள் ஆயிரத்தெட்டுஅண்டமும்ஆளுவார்கள்சிலநாள்.()

நாலு நூற்றிரு பத்தேழ் சதுர்யுகம்
கால னஞ்சக் கடிந்தன னாதியை
வால கந்தன் மலர்கை யுறைந்திடும்
வேலி னாற்சிறை மீட்பது முண்மையே

(இ-ள்.) சூரபத்மனானவன் நானூற்றிருபத்தேழ் சதுர்யுகம் எமன் முதலானவர்களும் அஞ்சும்படியாக அரசுசெய்கிறநாளிலே குழந்தையாகிய பாலசுப்பிரமணியரானவர் உங்கள் சிறையைமீட்டுத்துன்பத்தைத் தீர்ப்பார் என்றார் பரமசிவன் எ-று. (உரு)

என்ன வீச னடியை யிறைஞ்சினர்
மின்ன லென்ன விளங்கினர் மேருவின்
மன்ன ரன்றன் மனதி னினைந்திட
கன்னி மாயை கதிரெனத் தோன்றினள்.

(இ-ள்.) பரமசிவன்பாதத்தில் நமஸ்கரித்து தேவர்களிருக்கும்போது பரமசிவன் பிரகாசம்பொருந்திய கயிலாசத்திலிருந்து மின்னல்போல மாயையென்றொருபெண் வருகவென்று மனதில் நினைத்தமாத்திரத்தில் சூரியபிரகாசம்போல மாயை காணப்பட்டாள் எ-று. (உசு)

வேண்டு மாயை விளைத்திடு மெல்லியாள்
ஆண்ட முத்தி னகையித ழாம்பலாள்
காண்ட கன்னிகை காள கண்டனடி
பூண்டு நன்முடி கவிழ்ந்து புகலுவாள்.

(இ-ள்.) அனேகமாய்கைகளைசெய்யப்பட்டபெண்ணானவள் ஆணிமுத்துப்போலபல்லும் ஆம்பல்போலவிதழுடையவள்காளவிடங்கண்டத்திலிட்ட பரமசிவன்பாதத்திலே பணிந்துசொல்வாள்.

மாச கத்து மடந்தை யெனக்கிசை
நேச மான கணவ னிகழ்த்தென
காசிபன் றவஞ் செய்வன் கடுகவே
ஆசை யாயணை யென்ன வணுகினாள்.

(இ-ள்.) மகாமாயையானவள் பரமசிவனைவணங்கி என்தோளுக்குஇசைந்தபுருஷன் எங்கிருக்கின்றார்சொல்லவேண்டுஞ்சுவாமியென அரியததவம்புரிகின்றகாசிபரிஷியினிடம்போய்சேர்வாயென காசிபருடையபன்னசாலைக்குப் போயினள்மாயை எ-று. (உஅ)

## வேறு.

மேருவின் வடபுறம் விளங்கு மாதவம்
மாருள வீசனை மனத் திருத்தியே
நேருள தவஞ்செயு மருகில் நின்றிடு
காரிகை வாடையாற் கண் விழித்தனன்.

(இ-ள்.) மகாமேருவுக்கு வடபுறமாகவிளங்கிய வெள்ளியங்கிரியில்வாசஞ்செய்யும் பரமசிவனைத்தியானித்துக்கொண்டு மகாதவஞ்செய்கின்றகாசிபரிஷியின் அருகில்நிற்கமாயையினுடையவாடை வீசியபோது வெகுசீக்கிரமாகக் கண்விழித்துப்பார்த்தார் காசிபரிஷி எ-று. (உகூ.)

கண்டனன் மடந்தைமேற் காதலாகியே
விண்டனன் தவமெலா மெல்லி மாயையால்
மண்டிய மதன்விடு வாளி தீர்த்தரு
ளென்றிடக் கன்னியு மிசைந்து கூடினள்.

(இ-ள்.) காசிபரிஷி மாயையைப்பார்த்துபெண்ணே நீயென்னருகில்வந்தபடியினாலே என்தவங்கெட்டு காமபாணத்தினால் வருந்தும்துன்பத்தைத் தீருமென்றுசொன்ன உடனேசேர்வதானாள் மாயை எ-று. (௩௰)

மருவவு மரக்கியா மெனவ கன்றனர்
இருடியின் கெர்ப்பமும் நிற்கொணுமலே
ஒருசிறு கடிகையி லுதித்த சூரனும்
அரிவையின் முனிவனை மருவ வேண்டினன்.

(இ-ள்.) மாயைகூடினவுடனே இராக்ஷதஉருவந்தெரிந்துகாசி பர்விலகினார் அப்போதுரிஷிபிண்டமானபடியினாலே சூரன்பிறந்தான் மாயையுடனேகூடவேண்டியபோது காசிபர் இவளரக்கியானபடியினாலே இனிவிடாளென்று ஆலோசனைசெய்கிறார் காசிபர்.

கரியெனு முருவமாங் காசிபர் கெதிர்
பிரியமாய் பெண்கரி யாகி நின்றனள்
உருமையி லணைந்தபின்னிப முகாசுரன்
தரணியினுதித்திடத் தவத்தோன் கண்டனன்.

(இ-ள்.) காசிபரானவர் ஆனையுருவாகிநிற்க மாயைபெண்ணானையாகிநிற்க விருவருங்கூடினவுடனே கஜமுகாசூரன் பிறந்தான் அந்தபிள்ளையையுங்கண்டான் தவமுனியான காசிபர் எ-று. ()

கேசரி யாகியே கிளர்ந்து நின்றனன்
நாசில பெண்மடங்க லாகிநின்றனள்
பாசமா யணைந்தனன் பாவை கெர்ப்பமாய்
மாசுள சிங்கமா சூரன் வந்தனன்.

(இ-ள்.) பின்னுங்காசிபர் ஆண்சிங்கமாகநின்றார். மாயையும் பெண்சிங்கமாகநிற்க இருவருங்கூடி சிங்கமுகாசூரனைப் பெற்றார்கள் அதன்பிறகு வேறுரூபம் எடுப்பதானார் காசிபர் எ-று (ஙங).

தகரெனு முருவாய் தவசி நின்றனர்
வகையுரு பெண் தகராகி மருவினள்
துகரசோ முகியெனுந் தோகை தோன்றினள்
அகமகிழ் சாமம்நா லளித்த மாயையே.

(இ-ள்.) பின்னுங்காசிபர் ஆட்டுக்கடாவாகிநின்றார் மாயை பெண்ணாடாகவிருவருங்கூடி அசோமுகியென்னும் பெண்ணைப்பெற்றார்கள் இப்படியாக நாலுசாமத்துக்கும் நாலுபிள்ளைகள்பிறந்து இருக்கிறவர்களுடைய வரலாற்றைச் சொல்லுவாம் எ-று. (ஙச)

மூளைத்திடு மிவ்வண மூன்று சூரரும்
உளத்தினி லரனடி யுகந்து போற்றியே
யளித்த தாயிர மண்ட மாண்டனர்
களித்தனர் தேவருங் கண்டு போற்றவே

(இ-ள்.) மாயையினுடைய பிள்ளைகளில் மூன்றுசூரரும் பரமசிவனைநோக்கித் தவஞ்செய்து உலகமெல்லாம் ஒன்றாய்ஆளும்படி வரம்பெற்று தேவர்களும் வணங்கும்படியாய் செழித்திருந்தார்கள் எ-று. (ஙரு)

சரவணப் பொய்கையிற் சண்முகத் துடன்
திரமுறவுதித்தனன் சினத்து வென்றனன்
கருமுகி யெனுமசோ முகியுங் காமனின்
மருமலர் கணையினால் மயங்கு நாளினில்

(இ-ள்.) மகிழ்ச்சியாயிருந்த சூரர்கள் சரவணப்பொய்கையில் உதித்தசுப்பிரமணியக்கடவுளின் சத்திவேலாயுதத்தினாலே மடிந்தார்கள் அசோமுகியென்பவள் காமவிகாரத்தினாலேமயக்கமுற்றாள்

கேசமுஞ் சுருண்டனள் கிளர்த்த பல்லினள்
ஊசலாடு குழலி னுளுவகை மூடிய
மாசுள வரக்கியை மணஞ் செய்வாரிலை
வேசியாகத் தாரு வாசரை விரும்பினள்

(இ-ள்.) அசோமுகியழகுளப்படியென்னில்சுருட்டைமயிருங் கூர்த்தசிங்கப்பல்லும் தொங்குங்கூந்தலும் மேகம்போலிருண்ட மேனியுமானபடியினாலேஎவரும்விவாகஞ்செய்யாமல்வேசித்தனம் செய்தபின்பு தூருவாசரைச் சேர்ந்தாள் எ-று. (௩௭)

கன்னியின் வயிற்றினிற் கரு வமர்ந்திட
வன்னுரு வதனம் வெண்ணுருவ மாகியே
துன்னிடை யகன்றிடத் துடித்த நாடிகள்
பன்னுபச் சுருவமாய்ப் பயன்றதா மரோ.

(இ-ள்.) அசோமுகியென்பவள் தூருவாசரைச்சேர்ந்து கெர்ப்பமுண்டாகி தேகமெல்லாம் பச்சைநரம்புதுடித்து முகம்வெளுத்து கருமேகம்போல உடம்புகறுத்தது எ-று. (௩௮)

அப்பொழு தவுணமாதர் கண் கலங்கியே
மைப்படு கண்டனை மனத் திருத்தினள்
கப்பனை யாகிய கடவுட் காரணம்
செப்பிட வல்லவர் செகத்தி லில்லையே.

(இ-ள்.) பின்னுமசோமுகியென்பவள் கெர்ப்பமீறி பிரசவிக்கிறவருத்தத்தினாலே கருமிடற்றண்ணலான பரமசிவனைநோக்கி மனதில்தியானித்துதன்னுடைய அண்ணன்வலுவிலும் அதிகமான சௌரியமுடையபிள்ளைகள் எனக்குப்பிறக்கவேணுமென்றுநினைத்தாள் அப்படியேகற்பித்தார் பரமசிவன் அவர்மகிமையை யின்னபடியென்று அறிந்தவர்களில்லை எ-று. (௩௯)

## வேறு.

கொல்லுநம னஞ்சிடகொதித்து மனம்பொங்க
சொல்லுமறை மாமுனிவ ரும்பரும் வருந்த
அல்லலுறு மழற்கடவுளங்கமெழில் சோர
வில்வலன் வாதாவியிரு வோரையவ ளீன்றாள்

(இ-ள்.) பரமசிவனுடைய கிருபையினாலே பிள்ளைகள்பிறந்தன எப்படியென்றால் சகலவுயிர்களையுங் கொல்லுகின்ற ஏமதருமராஜனு நடுங்கவும் பிரகாசம்பொருந்திய அக்கினியின் அங்கம் கொதிக்கவும் தேவேந்திரன்முதலாகிய அஷ்டதிக்குப்பாலரும் நடுங்கவும் மிகுதியான கடவுளரும் மெய்மெலியவும் முனிவர்கள் மனந்தடுமாறி தவம்தடுமாறவும் அசோமுகி யிரண்டுபிள்ளைகள் வில்வலன் வாதாவி என்பவர்களைப் பெற்றாள் எ-று. (௪௰)

அரக்கர்மட மாதுள மகிழ்ச்சி யுறவன்றே
பெருக்கு கிரியீதெனவே பேணிவளர் போதில்
தருக்கடனில் வாழ்பறவை தன்தசைகளுண்டோ
யுரக்கினில் மிகுத்தவிரு வோர்வலி யுரைப்பாம்

(இ-ள்.) இராக்ஷதப் பெண்ணான அசோமுகிபிந்த விரண்டு பிள்ளைகளுடைய வலிமையுஞ் சௌரியத்தையுங்கண்டு மனதுசந்தோஷமாகி பெருமலைபோலிருக்கின்ற பிள்ளைகளை வளர்க்கும்போது வனங்களிலிருக்கின்றவிலங்கினங்களும் பறவைகளின்தசைமாமிசங்களுமுண்டோ இல்லையென்றபடி வல்லமையாயிருக்கிறவர்களுடைய கதையைச்சொல்லுவாம் எ-று. (சக)

என்றசனகன் பதமத்திரி யிறைஞ்சி
நன்றுரை செய்தாயென நயந்துளமதாகி
குன்றெனு மசோமுகி குழந்தைக ணடத்தை
யின்று தவறுமலே யியம்பென விசைப்பான்.

(இ-ள்.) இந்தக்கதைகள் எப்படியென்றுசொன்ன சனகமகாரிஷியைவணங்கி யிதுபரமசிவனுடைய மகிமையானபடியினாலே கதைகள்தவறும லுரைக்கவேண்டுமென பின்னுஞ்சொல்லுகிறார் சனகமஹாரிஷி எ-று. (சஉ)

## சிருஷ்டிச்சருக்கம்

முற்றிற்று

---

பாயிரம் உள்பட சருக்கம் உ-திருவிருத்தம் கூஞ.

கடவுள் துணை.

## இரண்டாவது.

# வில்வலன் வதைச் சருக்கம்.

இருவரா மியக்கர்செயயு மிடறிவை யியம்பலாகா
தெரிந்தரு ளுணர்ந்தமாற்றஞ் செப்புவேன் முனியேசற்றும்
பருவத மெல்லாம் போற்றும் பத்தினும் பகரலாகா
யுருமையா மாக்கையுள்ள பாலரென் றினிகே ளென்றான்.

(இ-ள்.) இருவராகிய வில்வலனும் வாதாவியுஞ்செய்கிற இடறுகளை என்னால்சொல்லிமுடியாது ஆகிலும்தெரிந்தமாத்திரஞ்சொல்லுகிறேன் அத்திரிரிஷியேகேளும்பருவதங்களை ஒன்றாகசசேர்த்தால் எவ்வளவு பிரமாண்டமாகுமோ அதுபோல் பெரியதேகமுள்ள பிள்ளைகள் அறியக்கடவாய் எ-று. (௧)

அட்டதிக் கெஜத்தையேந்தி யாடினர் பந்தாமென்றே
எட்டுதிக்கினு மிருப்போரை யேவல்கள் செய்யவைப்பார்
மட்டிலா மிருகவேட்டை யாடியே யருந்தியிந்த
வட்ட வாருதிநீர்வற்றக் குடிப்பினுந் தாகந்தீரார்.

(இ-ள்.) எட்டுதிக்கிலும்இருக்கிற அஷ்டகெஜங்களைப் பிடித்துஅடிப்பார்கள் பந்துவிளையாடுவார்கள் எட்டுத்திக்குப்பாலர்களாகிய இந்திரன் அக்கினி எமன்நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானியன் இவர்களெட்டுபேரையும்வரவழைத்துதங்களுக்குஏவல் பணிவிடைசெய்யக் கட்டளையிடுவார்கள் மிருகங்களை வேட்டையாடிவந்து தங்கள்பசியையாற்றுவார்கள் இந்தப்பூமியைச் சுற்றிய சமுத்திரநீரை வற்றக்குடித்துந் தங்கள்தாகந் தீரார்கள் எ-று.(௨)

புயல்தனை பிசைந்துமிந்தை பொருதுநற் றிலதமிட்டு
மயிடமே லேறுஞ்சண்டன் மனங்கலங் கிடவேபொங்கும்
பயமறத்திரிவார்வானோர் பயந்திட நகைகள்செய்தே
கயவரியவுணர்செய்கை கடவுளேயறியவல்லன்.

(இ-ள்.) சத்தமேகத்தைப்பிழிந்து சலங்குடிப்பார்கள் சந்திரனைப்பிடித்து நெற்றியில்பொட்டாகவைப்பார்கள் எருமைக்கிடாவேறியஎமதருமன் மனங்கலங்கத் திரிவார்கள் தேவர்கள் பயங்

கொள்ளும்படிநகைப்பார்கள் கயவர்களாகிய வில்வலன்வாதாவி யிவர்களின்செய்கையைக்கடவுளாகியபரமசிவனே அறியவல்லவர்

கரியவெற்புகளிரண்டு காசினியுதித்தவென்றே
வருமுகிற்றொகைக்குமெல்லா மாவெனவயிற்றளிப்பன்
பருவதக்கோனடுங்கி பலத்தினிலதிக்வீரன்
இருவரென்செய்வரோவென் றிதையமதேங்கலுற்றான்

(இ-ள்.) இரண்டுகரியமலையானவை யிந்தபூமியில் முளைத்து இருக்குதென்று எண்ணிவரப்பட்ட மேகக்கூட்டங்களைப்பார்த்து நீங்கள்வாழ விடந்தருகிறேன் வாருமென்று தங்கள்வாயைத்திறக் கும்போது மேகங்களெல்லாம் வயிற்றிலேயிருக்கக்கண்டு பருவத ராஜன்மனம்நடுங்கி பலம்பொருந்திய ராக்ஷதாளிரண்டு பேரும் என்னசெய்வாரோவென்று கிலேசமடைந்தான் எ-று. (௪)

புனலரசன்ற னுள்ளம் புழுங்குவனிந்தை தீயத்
தனுதின மருந்தவாரி யடைந்துநீர் சுவறலாலும்
தனையுற வாகாநாடி தழைத்த சீவன்களெல்லாம்
கனமகன் றோடிக்கண்ணீர் கசிந்திடக் கண்டகாலே

(இ-ள்.) புனலுக்கரசனாகியவருணராசனும் வடவாக்கினியும் உள்ளம்புழுங்குவார்கள் ஏனென்றால் நீயனாகியஇருவரும் சமுத்தி ரத்தினீரை குடிக்கிறபடியினாலே சமுத்திரம் வற்றிப்போகிறது அதில்வாழப்பட்ட சீவன்களெல்லாம் அகன்றுபோகிறோமென்று கண்ணீர்விட்டு அழுகின்றதை வருணராஜன்கண்டுமயங்குவான்.()

சினத்தினிற் பிறந்தசெந்தீ செங்கதி ருலகிற்றாவ
கனத்திடு மழலோன் வெம்பி காசினி தனிலுதிக்க
மனத்தினிற்கலக்கமாகி மதியுமத்தன்மைவானிற்
செனித்திடவியக்கமின்றி தேசினிலொளித்திருந்தான்

(இ-ள்.) கோபத்தினாலுற்பத்தியாகின்ற செந்தணலானது சூ ரியமண்டலத்திற்றாவ கனத்திருக்கப்பட்டகிரணங்களையுடையசூரி யனுடல்வெதும்பி இந்தப்பூமியிலுதித்துவர மனங்கலங்குவான் சந் திரனைவன் தன்னுடையகுளிர்ச்சிநீங்கி அக்கினிச்சுவாலைமூடுகிற படியினாலே ஆகாசத்திலுதித்துவர மனங்கலங்கும்படிவாடி தன் னுடையமண்டலத்திலேதானே, ஒளித்து இருப்பான்இப்படிவில்வ லன் வாதாவியினுடைய கொடுமைகள் இருக்கும் எ-று. (௬)

பண்டுறை யவுணராவி பற்றும்பாசக்கயிற்றை
கண்டநீர் சரங்கனிந்தக் கயவறைக் கடிவதாகி

முண்டமர் செய்வர்வாயான் முழுங்குவ ரெனதுபக்கல்
அண்டியதூதாநீங்கள் அவரிடத் தணுகலென்றார்

(இ-ள்.) முன்னிருந்த அவர்ணர்கள் உயிரைப்பற்றிய பாசக்க யிறுடைய பலனைக்கண்டீர்களோ இப்போதுபாசக்கயிற்றை யெடுத்து ராக்ஷதரைப்பிடித்து கட்டிவருகிறேமென்று போவீரானல் இரண்டுராக்ஷதரும் பெரியசண்டை செய்வார்கள் அதுதப்பினால் உங்களைப்பிடித்து வாயிலேபோட்டுக் கொள்வார்கள் என்னிடத்திலிருக்கப்பட்ட காலதூதர்களே நீங்கள் ராக்ஷதர்களிடம்போகவேண்டாமென்று திட்டஞ்செய்தான் எமதருமராஜன் எ-று. (எ)

மட்டிலாதுயரமுற்ற மரலியங்கிருக்கவானோர்
திட்டமும்புகழும்நீங்கிச் சிந்தையுந்துலக்கிப்பண்டு
பட்டபாடகன்றிலோமிப் பாவிகளுதித்தாரென்ன
கொட்டமுஞ்செய்வரோவென் றுள்ளமுங்குழறலுற்றார்.

(இ-ள்.) அளவில்லா துயரத்தோடுஎமதருமராஜனிருந்தான் இப்படியிருக்க தேவர்களெல்லாம் தங்களுடையதிட்டங்களும் பெருமையையும்விட்டு மனத்துயரமடைந்து முன்னாளில் சூரபத்மன் செய்ததுன்பத்தினாலே நாம்பட்டபாடு இன்னம் அகலவில்லையே இப்போது இந்தப்பாவிகளிரண்டுபேரும் உதித்துஇருக்கிறார்களே என்னசெய்வார்களோவென்றுமனந்தடுமாறினார்கள்தேவர்கள். ()

உரத்தினிவ்வலியசூரர் உலகிலோர்விடுதிபெற்றே
வரத்தினின்மிக்கோராவி முனிவரின்மலர்த்தாளேத்தி
பருத்தவென்னமுதருந்தி பரிவுடனேகுமென்றே
இருத்திவில்வலனேமேட மென்னவந்தசைகளாலே.

(இ-ள்.) பராக்கிரமங்கொண்ட விரண்டுபேர்சூரரும்ஒருதந்திரம்செய்ய ஆலோசித்துபூலோகத்திலே ஒருவீடு கட்டிக்கொண்டு இருந்தார்கள் இருக்கும்போது அந்தவழியாகத் தவமிகுந்ததபோதனர்களானபெரியஇருடிகள்வீதிமார்க்கமாகப்போகின்றவர்களை யழைத்துவந்து பாதத்திலேதெண்டன்செய்து உபசாரமாக அறுசுவையோடுங்கூடிய பதார்த்தத்துடனே அன்னம்அருந்தி பசிதீர்ந்துபோகலாமென்று இருக்கச்சொல்லிவில்வலன் ஆட்டுரூபம்எடுக்க அந்தஆட்டையறுத்து மாமிசத்தை எ-று. (கூ)

வகையொடு பொரியலோடு மாதவர்க் கடிசிலீய
வுகந்தவ ருண்டாற்சூரன் உந்திபி துருவமுன்னி

தகரெனு முருவமாறித் தவசிகள் வயிற்றைக்கீறி
மகிழுறு தவத்தோர்மாள மாய்கைசெய் தருந்துநாளில்

(இ-ள்.) வகைவகையாக சமையல்செய்து அவர்களுக்குவிருந்துசெய்யசாப்பிட்டு இளைப்பாறியிருக்கும்போது அவர்வயிற்றிலே இறைச்சியாகஇருக்கிற ராக்ஷதன்சஞ்சீவிமந்திரத்தை உபதேசித்து ஆட்டுக்கடாரூபமாறி தவசிகளுடையவயிற்றைக்கீறிக்கொன்று வெளியில்வந்து அவர்களைப்புசிக்கும் நாளையில் எ-று. (கய)

## வேறு.

கும்பமுனி சூரருரை கூடி மகிழ்ந்தே
செம்பொனடி யிற்பணிகள் செய்தவ ணிருத்தி
இன்புள விருந்திட விருடியமர் போதில்
வம்புசெயும் வில்வலன் வதைத்திட நினைந்தான்.

(இ-ள்.) அவ்வழியாய் அகஸ்தியரிஷி வருவதுகண்டு சந்தோஷமாக சூரர்கள்அழைத்துவந்து ஆசனம்போட்டு இருக்கச்சொல்லி பாதத்தில்பணிந்துவழக்கப்படி விருந்திட்டார்கள்சாப்பிட்டு இருந்தார் வம்புசெய்யப்பட்டவில்வலன் வதைசெய்யும் படியாக நினைந்தான் அகஸ்தியரை எ-று. (கக)

மளமளெனு மாய்கையை மனத்தினி லுணர்ந்த
களவசுர னுயிரினி காணவரி தென்றே
வளமுடைய பூதியை யருந்தினர் வயிற்றில்
புளகனுள வாமுடல் புழுங்கினி தொழிந்தான்.

(இ-ள்.) வயிற்றினில் மளமளென்கிற சத்தங்களையுற்றுக்கேட்டுஇது ராக்ஷதமாய்கையென்றறியாமல் விருந்துண்டோமென்று மனதிலேயெண்ணி யிந்தகள்ளனாகிய இராக்ஷதனுடைய ஜீவனைக்காணுகிறது அரிதென்றுநினைந்து பஞ்சாட்சரத்தை தியானித்து விபூதியைவாயிலிட்டு வயிற்றைத்தடவ சந்தோஷத்துடன் இருந்த வில்வலன் உடல்புழுங்கிசீர்ணமானான் எ-று. (கஉ)

அவுணனுட லுண்டபவ மண்டினதி னாலே
புனிதபரசிவன் பூசைபுரிகுவல் யானென்றே
அவனிதனி லிங்கமு மமைத்து வடிபேணி
பவமதை யகற்றிவளர் பாரினி லுறைந்தான்.

(இ-ள்.) அகஸ்தியமஹாரிஷியானவர் இராக்ஷதனாகிய மாமிசத்தைத்தின்றபாவந் தீர்க்கவேணுமென்று மனதிலெண்ணி யிந்த

பூமியில்தானே பரமசிவனுடைய பூசைசெய்வோமென்றுகருதிஒரு குளமுண்டுபண்ணி ஸ்நானஞ்செய்து நேமநிஷ்டைமுடித்து மணலி லிங்கமமைத்து பரமசிவனென்று அருச்சித்துவணங்கிபாவத்தைப் போக்கி பொதியமலையி லிருந்தார் எ-று. (கங)

அகத்தியம தாலய நதிப்பெயர் விளங்க
சகத்துளோர் வணங்கிடத் தழைத்தருள்க ளீய
பகைத்தவுண சீரணம் பதிப்பெயர்க ளூரில்
சுகத்துணை வனைப்பரி வுடன்துதிகள் செய்தான்

(இ-ள்.) அகஸ்தியமகாரிஷி பூசைபண்ணினது அகஸ்தியர்ஸ் தலமும் அகஸ்தியலிங்கமும் அகஸ்தியர்தீர்த்தமென்றும் பேர்வி ளங்கிபூமியிலிருக்கிற சகலஜனங்களுந்தெரிசிக்க அவர்கள்கோரிய வரங்களுமீய்ந்து இப்படியிருக்க பகையானவில்வலன் சீரணமான படியினலே அப்பதிக்குகொண்ணூரென்று வடக்கேஇப்பவும்பேர் விளங்குகின்றது அந்தவூரில் சுகமளிக்கப்பட்ட தன்னுடையஅண் ணன்வில்வலனை நினைந்து யழுதுதுயரமானன் எ-று. (கச)

வேறு.

கோடைக் கிடியென்றுமே நாக்குளரி
வாடிக்குடல் மண்ணில் விழுந்து புரண்
டோடிப் புவியம்மி தன்மேற் குழவி
சாடித் தனதாவி தளர்ந் தனனே.

(இ-ள்.) வாதாவியானவன் கோடையிடிபோல திடீரெனவிழு து அழுதுவாய்குளரி உடம்புவாடி பூமியிற்புரண்டு பூமிஒரு அம் மியுந் தானொருகுழவியுமாக புரண்டெழுந்து வாடினன் வாதாவி எ-று. (கரு)

வாழு முயிர் மாயவருந் தின்னப்
பாழு முனியோடு பகைத்தனமால்
வேழந்தனை வென்றிடு மாளியெனத்
தாழுமுட லென்று தணிந்திடுவான்.

(இ-ள்.) வாழப்பட்ட உயிரைமாய்த்த பாழ்முனிவனுடனே நாம்பகைசெய்ய வேணுமென்றல் ஆனையைவிழுங்கினசிங்கம்போல அவனுடலை நாம்தின்னுவது என்றுகோபந்தணிந்தான் வாதாவி எ-று. (கசா)

அண்ணு வெனதாவி யகன்ற துளம்
யெண்ணுது மெண்ணின னென் செய்வேன்

விண்ணுனை விம்மி மடிந் தனையோ
கண்ணுள சொல்லென்று கலங்கி னனே

(இ-ள்.) என்னுடையஅண்ணுவே! என்சீவன்போகுதே உள்ளத்திலே எண்ணுதெல்லாம்எண்ணியென்னசெய்வேன் நீசொர்க்கலோகம் வாழும்படி மடிந்துபோனுயோ கண்ணுளனே சொல்லென்றுகலங்கினுன் வாதாவி எ-று. (கஎ)

தெரியாவகை சிந்தையி லெண்ணி யுடற்
பெரியோ ரடிபேணி வணங்கு வனே
வரிதாமவுணதி சிகா மணியே
விரிவான புயாசல வில்வலனே.

(இ-ள்.) தெரியாமல்கெட்ட நடத்தையை மனதிலெண்ணிபெரியோருடைய பாதம்வணங்கலாகுமோ சொல்லவரிதாயிருக்கப்பட்ட இராக்ஷதருக்கு நன்மையாயிருக்கப்பட்ட வில்வலனே என்றுன் வாதாவி எ-று. (கஅ)

அந்தோவென் னகங்குளி ராதரவாய்
வந்தேயொரு வண்ணம் வருத்திடுவாய்
சிந்தாகுலந் தீர்ப்பவ ருன்னை யலா
லெந்தாய் துணை வேறிலை யிவ்வுலகில்.

(இ-ள்.) ஐயையோஎன்மனங்குளிரும்படி என்முன்னேவந்து யாதொருவார்த்தையுஞ் சொல்லாமல்மடிந்துபோனுயே என்றுதுக்கத்தைநிவர்த்திசெய்ய உன்னையல்லால் இவ்வுலகில்வேறுண்டோ அண்ணுவில்வலனே என்றுன் வாதாவி எ-று. (கசு)

ஆக்கம் பெரி தானதினு லதனை
தூக்கித் திசைமீது திரிந் திடுத
லூக்க மிலையென் றுருகின் றவனை
காக்கைக் கருதற் கடனுதலினுல்

(இ-ள்.) இந்தச்சரீரம் பெரிதானதினுலேதேகத்தை தூக்கிக்கொண்டு நாலுதிசையிலுந்திரிகிறது முயற்சியல்லதென்று மனதிலேநினைந்துஉருகின்ற இராக்ஷதனை காக்கும்படியானகருத்து பரமசிவனுக்குக்கடமையானதினுல் எ-று. (உ0)

உள்ளத் துறையந் தரியூ ழிருளை
விள்ளுங் கதிரால் வினையான வெலாம்
மெள்ளக்கெடு சங்கரி யான விமலன்
வள்ளற் பதம் வாழ்த்திட லாகினனே

(இ-ள்.) மனதிலேகுடியாயிருக்கும் அந்தரிமாய்கை யென்னப்பட்டஊழியிருட்டை யகற்றும்படியான சூரியப்பிரகாசம்போல பரமசிவன்தோன்றிவினைகள் எல்லாம்விட்டுவோடும்படியாகச் சங்கரித்து ஆளப்பட்டபரமசிவனுடைய பெருமையாகிய பாதத்தை நினைந்துதுதித்தான் வாதாவி எ-று. (உக)

புக்கிக் கதைபோற் றிடுமத்திரியும்
மிக்கச் சனகன் கழலே வினவி
துக்கங்கள் செய்சூர னுளந்தனிலே
நக்கன் புகுந்தென்ன நடத்தினனே.

(இ-ள்.) இப்படியென்றுசனகரிஷிசொன்ன கதையைக்கேட்டஅத்திரிஷியும் சனகனுடையபாதத்தைப்பணிந்துசொல்லுவான் மனதில்துயரமாயிருக்கப்பட்டராக்ஷதனுடைய இருதயகமலத்திற் புகுந்து என்னென்னநடத்தை செய்கின்றார் பரமசிவன் எ-று. ()

எள்ளெண் ணெயதாக நிறைந்தருளும்
வள்ளல் வினையாட்டை வழுத்து வதோ
கள்ளன்கதிர் தீபமுங் காட்டு மவன்
குள்ளச்சடை மாமலர் கொள் பவனே.

(இ-ள்.) எள்ளுக்குள் எண்ணெய்போலெங்கும் நிறைந்திருக்கிற பரமசிவனுடைய திருவிளையாடல்களை யாவராலுஞ் சொல்லி முடியாது கள்ளனாநிற்பவனும் அவனேயந்தகள்ளனை பிடித்துக்கொடுக்க தீபத்தைக்காட்டப்பட்டவனும் அவனேசடையிற் கொன்றைமாலை யணிந்தருளிய பரமசிவன் எ-று. (உந)

வாதாவி யரக்கன் மகே சுரன்றன்
பாதாம்புயம் வேண்டிய பான்மை யெலாம்
வேதாந்தம் விளங்கிடும் மாமுனியே
ஓதாயென வோதிட லாகினனே.

(இ-ள்.) வாதாவிசூரன்மனதிலே பரமசிவன்அருள்தங்கினபடியினாலே பரமசிவன் பாதாம்புயம்வேண்டி தபஞ்செய்கின்ற விதங்களெல்லாம் வேதாந்தஆகமநூல் சாஸ்திரவிதிப்படி யாராய்ந்து சனகமகாரிஷியே எனக்குச்சொல்லவேணுமென்று அத்திரிமகாரிஷிகேட்கச் சொல்லத்தொடங்கினார் சனகரிஷி எ-று. (உச)

## வில்வலன் வதைச்சருக்கம்.

முற்றிற்று.

பாயிரம் உள்பட சருக்கம்-ரு செய்யுள் அஎ.

உ

கடவுள் துணை.

# மூன்றாவது.

# வாதாவிசூரன் தவம்புரிச் சருக்கம்.

குருமுனி பூசைசெய்த குழகனா லயத்தைநாடி
கருமலை யவுணனுள்ளங் கசிந்தர னடியையேத்தி
யுரிமையாய் வலமதாகி யுயர்ந்திடுந் தடத்தின் மூழ்கி
புரிசடை யணிந்துபூதி பூண்டுமாதவங் கொண்டானே.

(இ-ள்.) குருமுனிஆகிய அகஸ்தியமஹா முனியானவர் பாவங்கழிய பூசைபண்ணின கொண்ணூரிலிருக்கிற சிவாலயத்தைமனதில்நினைந்து கரியமலைபோலிருக்கப்பட்ட ராக்ஷதனுள்ளங் கசிந்து அதிகசந்தோஷமாகிப் பரமசிவனுடைய பாதத்தைவணங்கி வலம்புரிந்து ஓங்கியிருக்குந் தீர்த்தத்தில்மூழ்கி மூன்றுசடைவகுத்து விபூதியைச் சரீரமெல்லாம்பூசி பெருமைபொருந்திய தவக்கோலங் கொண்டான் வாதாவி எ-று. (க)

பருத்ததோர் கம்பமீதில் பற்றிய வூசிநாட்டி
சிரத்தினி லழுந்தவுள்ளஞ் சீரடி உயரத்தூக்கி
எருதிவ ரீசன்பாத மிடைவிடா மனதிருத்தி
பெருத்திடு மாமன்செய்த பெருந்தவஞ் செய்யலுற்றான்.

(இ-ள்.) பருத்தகம்பத்தையூன்றி அதினியிலூசிநாட்டி அந்த ஊசிமுனையில் தன்னுடையசிரசு அழுந்தும்படிபாதத்தை யுயரத் தூக்கி வெள்ளெருதிலேறப்பட்ட பரமசிவன்பாதத்தை யிடைவிடாமல் ஒரேநினைவாக மனதிலிருத்தி மாமனாகிய சூரபத்மன்செய்ததவத்திலும் கொடியதவஞ் செய்யலுற்றான் வாதாவி எ-று. (உ)

உனவின்றி துயிலுமின்றி யொருமன தாகயாக்கை
தனிவதா யருள்சுரந்து தழைத்துநா ளுண்டுகம்ப
நுனியினி னின்றானெம்மா னுவலொணுக் கவுசிகன்றன்
றிணிபுய வவுணனென்று செகத்தினிற் றுதிக்கச்செய்தான்.

(இ-ள்.) ஊணுறக்கமில்லாமல் ஒரேமனதாய் இரவும்பகலாக பரமசிவனைநினைந்து தன்தேகம்வாடிப்போகும்படியாகவும்ராக்ஷத

மாயையுடைய தீயமனதுகள் அகன்றுநெறியாகிய அருள்சுரந்து தழைக்கும்படியாய் நூறுவருஷங்கம்பத்தினுனியிலிருந்தான் அதையென்னுல் சொல்லலாகுமோ விஸ்வாமித்திரருடைய தவத்திலும் அதிகமாகச்செய்கிறுனென்று கண்டவர்கள் சொல்லும்படி தவஞ்செய்தான் வாதாவி எ-று. (௩)

கோதிலா உளமுமன்னி குளிர்பனிக் காற்றருந்தி
யாதியை யிறைஞ்சுஞ்சூர னடியிணை மனத்திஞேர்ந்து
மாதிடப் பாகஞ்சூழும் மான்மழு சூலமேந்தி
நீதிசேர் விடையேறய்ய னிருதத்தா ளுடனெழுந்தான்.

(இ-ள்.) குற்றமில்லாதமனதுடனே பனிகாற்றுகளை யருந்தி ஆதியாகிய பரமசிவனைநினைந்து தவஞ்செய்கின்றவாதாவினுடைய தவத்துக்கிரங்கி உமையவளிடப்பாகஞ்சூழ மான்மழுசூலம் கையிலேந்திக்கொண்டு ரிஷபவாகனரூடராய் நடனபாதத்துடனே வாதாவியின் தவச்சாலேக்கு வந்தார் பரமசிவன் எ-று. (௪)

நந்தியுங் கணமுஞ்சூழ நாரதர் யாழொலிப்ப
துந்துமி யறையவானோர் துதித்துமா மலர்கடூற்ற
சுந்தர முனிவரேத்த சுரர்மடந்தையர் நடிப்ப
கந்தனை யீன்றவெந்தை கமழ்நடம் புரிந்துவந்தார்.

(இ-ள்.) நந்திகேஸ்வரர் பூதகணஞ்சூழ நாரதர் யாழ்வீணைவாசிக்க வானுலகத்தில் துந்துமிசத்தம் அறையகற்பகப்பூமாரி பொழிய முனீஸ்வரர்கள் தோத்திரஞ்சொல்ல தெய்வமாதர் நால்வரும் நடனஞ்செய்துவர சுப்பிரமணியரைப்பெற்ற தந்தையாகியபரமசிவன் நடனஞ்செய்யப்பட்ட பாதத்துடன்வந்தார் எ-று. (௫)

தவம்புரி யவுணனெங்க டற்பரன் மலர்த்தாள்கண்டு
கவலையாய்க் கண்ணீர்சோர கரத்தினு லிறைஞ்சியீரேழ்
பவுனமும் நிறைந்தவே புனிதனே வடியேன்செய்த
பவமெலா மகற்றவந்த பரமனே போற்றி யென்றுன்.

(இ-ள்.) தவஞ்செய்யப்பட்டவாதாவிபரமசிவன்வருகிறதைக் கண்டு இரண்டுகண்களிலும் நீர்ஆறுபோலோட அழுதுஅஞ்சலியஸ்தனுய் ஈரேழுபதினன்குலோகத்திலும் எள்ளுக்கு ளெண்ணெய்போலிருக்கப்பட்டதேவனே புனிதமானவனேநாயேன்செய்தபாவங்களையெல்லாம் போக்கவந்த பரமசிவனே என்றுபோற்றுகின்றுன் வாதாவி எ-று. (௬)

ஆதியே போற்றிபோற்றி யந்தரி நேசாபோற்றி
சோதியே சுடரேபோற்றி சுடலையி னடித்தாய்போற்றி
பூதியை யணிந்தாய்போற்றி புலியுரி யுடையாய்போற்றி
வாதனை தீர்த்தாள்கின்ற வாமதேவன் றாள்போற்றி

(இ-ள்.) ஆதியாயிருக்கப்பட்ட கர்த்தனே உன்பாதம்போற்றினேன் அந்தரியாகிய உமையவளுக்கு நேசனேபோற்றி பிரகாசம்பொருந்திய சுடராயெழுந்த சுவாமியேபோற்றி சுடுகாட்டிலே நின்றுநடனஞ்செய்த பாதம்போற்றி சரீரமெங்கும் விபூதிசண்ணித்த பரமசிவனேபோற்றி தாருகாவனத்துரிஷிகளனுப்பியபுலியையுரித்து ஆடையாகத் தரித்தவனேபோற்றி என்னுடையவாதனையைத்தீர்த்து என்னையாளும்பரமசிவனே யுன்பாதாரவிந்தத்தைப் போற்றினேன் என்றான் வாதாவி எ-று. (எ)

மான்மழு கரத்தாய்போற்றி மதிநதி சடையாய்போற்றி
வானுள வமரர்போற்றும் வள்ளலின் மலர்த்தாள்போற்றி
யூன்விழி யளித்தவேடற் குகந்தரு ளளித்தாய்போற்றி
யீனவன் தவமுகந்தே யெழுந்தருு வீசாபோற்றி

(இ-ள்.) மான்மழுவுங் கையிலேதரித்தவரேபோற்றிசந்திரனையுங் கங்கையுஞ்சடையிற்றரித்த பரமனேபோற்றி வானுலகத்தேவர்கள் தொழப்பட்ட சுவாமியேபோற்றி யுன்னுடையகண்ணானமென்று கண்ணைப்பிடுங்கிவைத்த கண்ணப்பனுக்குகந்து மோக்ஷமளித்த சுவாமியேபோற்றி என்னுடையதவத்துக்குகந்துவந்தவீசனே உன்னுடையபாதத்தைப் போற்றிசெய்தேன் எ-று. (அ)

வில்வல னேடுநாயே னிப்புவி யுதித்தநாளில்
கொல்லெம னுகவந்த குருமுனி சிவக்கவண்ணன்
அல்லலாய் சீரணித்தா னய்யனே மிடியகற்றி
செல்வமுந் தருவையென்று செம்மலர் பதம்பணிந்தான்.

(இ-ள்.) வில்வலனுடனேயானும்இந்தப்பூமியிலேயுதித்து வயிறுவளர்க்கும்படியான சூக்ஷ்மங்களைச் செய்துகொண்டிருக்கும்நாளையில் கொல்லப்பட்ட எமனைப்போலவந்து அகஸ்தியரிஷிகோபத்தினாலே அண்ணன்வில்வலனென்பவனை சீரணித்துப்போட்டார் இனிஎன்னசெய்வேன் என்னுடையவறுமையை யகற்றிசெல்வமாகிய அஷ்டஅயிஸ்வரியபாக்கியந் தரவேணுமென்றுசிவந்தபாததாமரையிற் பணிந்துநின்றான் வாதாவி எ-று. (கூ)

இரங்குகின்ற வவுணனுக் கிரங்கியீச னருளுவான்
உரஞ்செய்யுன் னுளத்திலெண்ணு முறுதியோதுமென்றனன்
நிரஞ்சனே யகண்டமான நித்தியநீல கண்டனே
புரந்தகித்த புனிதனே புதுமைகேளென் றுரைசெய்வான்

(இ-ள்.) இந்தப்படி வாதாவிதுதிசெய்யப் பரமசிவன் சொல்லுவார் உன்மனதிலே என்னகோரிக்கை நினைந்தாயோ அதையுறுதியாகச் சொல்லென்றுகேட்க எங்கும்நிறைந்திருக்கப்பட்ட சுவாமியே அகண்டமானவரே நித்தனேநீலகண்டனேமுப்புரத்தையெரித்தவனே புனிதமானவனே என்னுடையபுதுமையைச் சொல்லுகிறேன்கேள் சுவாமியென்முன் வாதாவி எ-று. (௰)

தேவராண்டினி லாயிரஞ் செழிப்பயான் விளங்கவும்
மூவராலு முருகனாலு முனிவராலு மாறிலா
கோலதாகி முடிபுனைந்து கொலுவிருேடைமைச்சரும்
கோதிலாநற் பாவையோடெனக் குகந்தபாலரும்

(இ-ள்.) தேவாதிகளுக்கு வளரப்பட்டவருஷத்தி லாயிரவருஷம் செழிப்பாகவிருந்து நான்வாழ்கவும் என்னைமும்மூர்த்திகளாலேயும் ஆறுமுகமுடையசுப்பிரமணியராலும் முனிவராலும்தபோதனராலும்சாகாமல் இராசாவாகிகிரீடம்புனைந்து சிம்மாசனத்திலிருக்கவும்குற்றமில்லாத பெண்சாதியுந் தகுந்தபிள்ளைகளும் மந்திரிகளும் எ-று. (௧௧)

தந்திமா வினங்களுந் தளங்குழாங்க ளிரதமும்
பந்திபந்தி யாகவந்து பாரினிற் செனிக்கவும்
மந்திரத் தவத்தினோர்கள் வாடவே மதித்திடா
முந்துதென் திசைக்கெலாஞ் செழித்துயா னிருக்கவே

(இ-ள்.) யானைகளுங் குதிரைகளுந் தளசேகரமான சேனையும் ரதங்களும் பந்திபந்தியாக நானிருக்கப்பட்ட பட்டணத்தில் செனித்துநிறையவும் மந்திரமுனிவர்களெல்லாரும் என்னைக்கண்டால் நடுங்கவும் அளவுபடாத சமுத்திரஞ்சூழப்பட்ட தெற்குத்திசையிலே செழிப்பாக நானிருக்கவும் எ-று. (௧௨)

மயேந்திரா புரிக்குமிஞ்சுமா மிரத்தின புரி
நயந்தவாய் விளங்கவும் நலத்தவேந்த காமவான்
செயம்பெறத் துதிக்கவட்ட தீவினோர் செழித்துளம்
பயந்துமா மணிக்குவித்தல் பண்பதா யளிக்கவும்

(இ-ள்.) மயேந்திராபுரிக்கும் அதிகமாயிருக்கும்இரத்தினபுரி பட்டணமும் என்பேர்விளங்க ஆகாசமுதல்செயம் பெற்றுத்துதிக்

கவும் எட்டுத்திக்குஞ் செழித்திருக்கப்பட்ட பேருள்ளம் பயந்து மேன்மைபொருந்திய நவரத்தினங்கள் கப்பங்கட்டிக்கொண்டுவந்து கொடுக்க எ-று. (கந)

பிரமனோத மறையைதேவர் பேதைகீத முரைசெய
வுருவிலா னெனக்குகந்த வொளிதிருத்தி நிற்கவும்
கரியமா தெனத்தினங் களங்கமாற் திருத்தவும்
கரையிலாவை போகமே கனத்தளிக்க வென்றனன்.

(இ-ள்.) பிரமதேவன் என்னிடத்தில்வந்து வேதமோதவும் தேவமாதர்கள் கீதம்பாடவும் மன்மதனனவன் எனக்கு அழகுதிருத்தவும் நீலம்போன்ற மகாவிஷ்ணு நானணிந்த ஆபரணத்தை களங்கமில்லாமல் திருத்தவும் அளவில்லாதவைபோகங்கள் அளிக்கவேணுமென்று சொன்னான் வாதாவி எ-று. (கச)

என்றுதா னியத்திரங்க ளெய்யவொன்ற தாயிரஞ்
செனிக்கவே யுரைக்கொணாத சேனைசெங் கரத்தின்மே
லுனதுசூல மழுவுமன்ன முவணமூர் தியார்தவர்
தனுவுடன் விளங்குசங்கு திகிரியுந் தழைக்கவே

(இ-ள்.) என்னுடைய தோளிலிருக்கப்பட்ட அம்பறுத்தூணியில் ஒருபாணமெடுத்து சத்துருவின்மேல்விட்டால் அதுஒன்றுஆயிரமாகச் செனிக்கவும் சொல்லுக்கடங்காதுஎன்சேனைகள்கையில் உன்கையிலிருக்கிற சூலமும்விஷ்ணுவினுடைய வாளாயுதமும்வில் சங்குசக்கரமுந் தழைத்துவிளங்கவும் எ-று. (கரு)

நஞ்சுகக்கு நாகவாளி நாரசிங்க நாகமும்
அஞ்செழுத்தோ டழல்விளங்கும் பாசுபாணம் வயிரவர்
அஞ்சிடா தவுணர்கால மயிலுமன்ன மளவிடா
குஞ்சரங்க ளுவணவாளி குறைவிலாம லருளவே.

(இ-ள்.) விஷங்கக்கப்பட்ட நாகாஸ்திரம் சிங்கமுகாஸ்திரம் பிர்மாஸ்திரம அஞ்செழுத்துடனே நெருப்புகக்கப்பட்ட பாசுபதாஸ்திரம் வயிரவாள் ராக்ஷதருக்குத்தகுந்த காலாயுதம் வேலாயுதம் தண்டாயுதம் சக்ராயுதம் இன்னமளவில்லாத அஸ்திரங்களும் கெஜமுகாஸ்திரம்கெருடாஸ்திரம்இவைகளைத்தரவேணுமென்றான் வாதாவி எ-று. (கசா)

## வேறு.

சுரர்கள்மாலை யென்றோள் தனிற் சூட்டவும்
அரிவை மாரென வனிதை விளங்கவும்
பருதி யெந்தன் பதிவல மாகவும்
அருளு மென்ன வரனடி பூண்டனன்.

(இ-ள்.) தேவர்கள்கற்பகப்பூமாரிபொழியவும்தேவர்கள்என் பட்டணத்தில் தூசுகளில்லாமல் சுத்திசெய்யவும் சூரியன் சந்திரன் பட்டணத்தை வலசாரிசெய்யவும் இந்தவரங்களெல்லாம்தரவேணு மென்று பரமசிவனுடைய பாதத்தில் தன்னுடையசிரசு அழுந்து ம்படி வணங்கினன் வாதாவி எ-று. (கஎ)

தந்தோ மென்று தற்பர னோதியே
விந்தை யான விபூதி யளித்ததும்
அந்த மாமஞ் செழுத்தை யருளியே
சிந்தை சேரவு ணற்கினுஞ் செப்புவான்

(இ-ள்.) வாதாவியே நீகேட்டவரமெல்லாந் தந்தோமென்று விபூதியளித்து பஞ்சாக்ஷரஞ்சொல்லி சிந்தைதெளியும்படி சொல் லுகின்றார் பரமசிவன் எ-று. (கஅ)

மயனிடத் தேகி வழுத் திடல்
நயமதாக ரத்தினபுரி நாட்டுவான்
துயவதா யவன் றையலைத் தருகுவான்
அயர் விலாம லணைந்திடு சூரனே.

(இ-ள்.) மயனென்னப்பட்ட விஸ்வகர்மனிடம்போய் பட்ட ணமுண்டாக்கிக் கொடுவென்று நயமாகச்சொன்னால்இரத்தினபுரி பட்டணஞ் சிருஷ்டித்துக்கொடுப்பான் அவனுடைய பெண்ணைக் கேள்கொடுப்பான் நீஅச்சமில்லாமல் அணைந்திடுவாய் சூரனேஎன் றார் பரமசிவன் எ-று. (கக)

அவுண தேசிக னேசங்கொண் டவனடி
கவன மாக பரவி கருணையால்
குவிய லாயவுணக் குழாங் கூடுவர்
புவி புரந்து புகழ்ச்சிகே ளென்றனன்.

(இ-ள்.) வாராய்வாதாவியேஉனக்குக்குருவாகியசுக்கிராசாரி யாரிடத்தில்நின்றலருள்சுரந்து கூட்டங்கூட்டமாய் ராக்ஷதர்வந்து

கூடுவார்கள் நீராச்சியம்பெற்று வாழ்ந்துகொண்டிருப்பாய் போ வென்று சொன்னார் பரமசிவன் எ-று. (௨௰)

மாசி லாத மனத்தின னாகிய
வீச னிவ்வர மீந்துமை யேகினர்
நேச மாக நினைவி னிருத்தன்றன்
பாச மாங்கழ லேற்றிப் பணிந்தனன்

(இ-ள்.) பரமசிவன் இந்தவரம்தந்துகயிலாசம்போனார்வாதா விமகிழ்ந்து பரமசிவனைநினைந்து பூமியில்விழுந்து பணிந்தான் வாதாவி எ-று. (௨௧)

தவம் புரிந்தவச் சாலையகன் றிட்டு
உவகைமன்னி மயனுக்குள குரை செய்வான்
பவ மகற்றும் பரமனுந் தயவினால்
அவனி பெற்றிடுவை யென்றருளினார்.

(இ-ள்.) வாதாவிதவம்புரிந்த சாலைவிட்டுமயனிருக்கப் பட்ட விடம்வந்து கண்டுசொல்வான் பாவங்களைவிலக்கப்பட்ட பரமசிவன் உன்னுடையதயவினாலே எனக்குஒரு பட்டணமளித்துக்கொடுப்பாயென்று உன்னிடம்போகும்படி கட்டளையிட்டார் எ-று.()

எவ்வி டத்தினி லீசனியம் பினர்
அவ்விடம்புக லென்ன வறைகு வான்
பௌவ மார்கடற் சூழ்ந்திடும் பௌவமே
கௌவ மெவ்வங் கடிந்த கொண்ணூரினில்

(இ-ள்.) பரமசிவன் உனக்குவரமளித்த அந்தவிடங்காட்டென்றுகேட்க அப்போதுவாதாவி சொல்லுவான்பாவங்களெல்லாம் போக்கப்பட்ட கொண்ணூரிலே என்றான் எ-று. (௨௩)

நற் றவத்துக் குகந்திடு நாயகன்
கற்றை வார்சடைக் கன்னி களிக்கவே
பற்றி நின்ற பவமற தென்றிசைப்
பற்றிப் பக்கல் பதியு மளித்தனன்.

(இ-ள்.) நல்லதவஞ் செய்தவர்களுக்கு அன்புவைத்து வரப்பட்டபரமசிவன் கற்றைப்போல்சுருண்ட சடையினையுடைய உமையவள்களிக்கும்படியாக என்னைப்பற்றி என்பாவங்களையகற்றி தெற்குத்திசையிலே இருக்கிற சமுத்திரத்தினடுவிலே ஒருபட்டணமளிக்கும்படி வரமளித்தார் பரமசிவன் எ-று. (௨௪)

என்ன வைய னின்ப விதயமாய்
வன்ன மீது வனத்தரி யேகினன்
பன்ன கத்தின் விடமுண்ட யன்பினன்
யன்னரும் கதை சாற்ற வருகரோ

(இ-ள்.) என்று சொல்லக்கேட்ட மயன்மகிழ்ச்சியாகி வாதா விையை யழைத்துக்கொண்டு தெற்குசமுத்திரக்கரையிற் போனான் ஆலகாலவிஷமுண்ட பரமசிவனுடைய கிருபாகடாக்ஷத்தை ஒருவ ராலுஞ் சொல்லத்திறமல்ல எ-று. (உரு)

பல்லி நாண வவுணன் புரிதவம்
வல்லி பாகன் மனத்தி லுகந்தனன்
அல்லல் நீக்கின னத்திரி யேயினி
புல்லக் கேட் டருளென்று புகன்றனன்

(இ-ள்.) பல்லவனுகிய வாதாவிசெய்யப்பட்ட தவத்துக்குகந் து உமையவளை இடப்பாகங்கொண்ட பரமசிவன் அசுரனுடைய வினையையும்மிடியையும் அகற்றிவரமளித்துப்போனார்கேட்டீரோ அத்திரிரிஷியே இன்னஞ்சொல்லுகிறேன் கேளென்று சனகரிஷி சொல்லத்தொடங்கினர் எ-று. (உசு)

## வாதாவி தவம்புரிச்சருக்கம்

முற்றிற்று.

பாயிரம் உள்பட சருக்கம் ச-இ திருவிருத்தம் ககக.

உ

கடவுள் துணை.

# நான்காவது

# இரத்தினபுரிச்

# சருக்கம்.

அட்டகிரி யொருமட்டி லேயுருரவணனுக கனுகூல்ன
முட்டவரமருளி யிட்டபடி வனமொய்த்தபுவியை யகன்றெனும்
வட்டவா ருதியதினி னிடையொருதிட்டதா யொளிதங்கியே
மட்டில்புகழொருமயனுமங்கொருபட்டணங்கொண்டமைத்தனன்

(இ-ள்.) எட்டுமலையு மொருமித்துக்கூடினல் எவ்வளவுபருமனகுமோ அப்படிக்கொத்தவாதாவிராக்ஷதனகிய அவனுக்குஅனுகூலமாய்ப் பரமசிவன்வந்து வரமருளியபடிக்குவனங்கள்அடர்ந்து சூழ்ந்து பூமிசக்கரம்போலிருக்கப்பட்ட சமுத்திரத்தினடுவே ஒரு மேடானபூமியைக்கண்டு அதிற்போய் அளவுபடாதகீர்த்திபடைத்திருக்கின்ற மயனகியவிஸ்வகர்மன் அவ்விடத்தில் ஒருபட்டணம் சிருஷ்டித்தான் எ-று. (௧)

கஞ்சனுலகினுங் கண்ணனுலகினுங் காமனுலகினு மதிகமாம்
பஞ்சலோக முருக்கியங்கு பதித்தமாமதில் மேடைமேன்
மிஞ்சுகோமள வுத்திரங்களு மேல்பரப்பினன் வயிரமாம்
மஞ்சுலாவுபொன் னணிவச்சிர வாமமென்ன விளைத்தனன்

(இ-ள்.) பிரமலோகத்திலும் வைகுண்டத்திலும் ஆரோக்கியபுரத்திலும் அதிகமாக அஞ்சுவிதமாகிய பஞ்சலோகத்தால் உறுக்கிசாய்த்து அதில்கல்லைவைத்து எழுப்பிமதிலும்மேடையும்அதின் மேலேகோமளத்தினலே உத்திரம்பாயச்சி அதில்வைரக்கல்லைப்பரப்பிபொன்னணிகளும் வச்சிரஆணிகளும் பிரகாசிக்கும்படியாய் சிருஷ்டித்தான் மயன் எ-று. (௨)

அவரிழந்தனன் மணமிகுத்துயிர் புரமதிற்குட மின்னவே
பவழமீது நிரைத்தபோதிகை பச்சையாற்சர மிட்டனன்
சவைமிகுத்திடு வண்டரளமாலை யிலங்குகூட மமைத்தனன்
குவிழதாகிய சேனைசூழ்ந்திடு கோட்டைகொத்தளங் கூடினன்

(இ-ள்.) மாற்றுயர்ந்த பசும்பொன்னலிழைத்த நவமணிபதியர்ந்திருக்கப்பட்டசிகரத்தில் மின்னும்படியாகவும் பவழத்தினலே

அமைத்தபொதிகையும் பச்சையால்சமைந்த சரமும் முத்துமாலை பிரகாசிக்கப்பட்ட கூடங்களுமமைத்து கூட்டங்கூட்டமாய் நிறைந்தசேனை சூழ்ந்திருக்கப்பட்டகோட்டைகொத்தளங்கள் உண்டாகும்படி சிருஷ்டித்தான் எ-று. (௩)

கொலுவின் மண்டபம் பூட்டினன்வெகு கொடியவீதிகளும்
சலவையாகிய கல்லினற்றள வரிசையெங்கு நிறப்பினன்
மலைகளெனமதி னட்டினன்வெகு மாடமாளிகை தீட்டினன்
நலுகிலாதவைஞ் னூறுசதுர மவனியாக்கினன் மயனுமே.

(இ-ள்.) அந்தப்பட்டணத்தினடுவே ராக்ஷதனுகிய வாதாவி சூரனிருந்துராச்சியபாரம்செலுத்தும்படியாக கொலுமண்டபமும் சிம்மாசனமுமமைத்து அளவில்லாத கோடிவீதியுமுண்டாக்கி சலவைக்கல்லினலே தளவரிசைப்பரப்பி மலைகள்போலவுயரமானமதிலெழுப்பி மாடமாளிகை கூடகோபுரங்களுமுண்டுசெயதான் அது ஐஞ்னூற்றுக்காதநீளமுஞ் சதுரமுமானஇரத்தினபுரியென்றுசொல்லும்படிசெய்தான் சிருஷ்டியால்மயன் எ-று. (௪)

கரிபரித்திரள் சாலையும்வளர் காவனங்களுஞ் சோலையும்
அரிவை மாதர்கண் மேடையுமழ கானதோரண வீதியும்
பெருநிதிக்குகை யாடரங்களு மரிவைவாழ்பெருங் கோயிலும்
வரிசையாகி நிறுத்தின னெழில் வயிரமாலைக டேக்கினன்

(இ-ள்.) ஆனைகுதிரைகட்டப்பட்ட விடுதியுங்கலியாணமண்டபமும் பூஞ்சோலைகளும் ஸ்ரீசாதிகளிருக்கப்பட்ட மெத்தைகளும் அழகுநிரம்பிய தோரணவீதிகளும் பெருத்தநிதிகள் வளரப்பட்ட குகைகளும் அக்கினிசாளி வாழ்ந்திருக்குங்கோவிலும் வரிசைவரிசையாய்நிறுத்தி வயிரம் வயிடூரியம் மாலைகளாக தோரணம்போல தூக்கி யெங்குங்கட்டினன் மயன் எ-று. (௫)

பரிதிமண்டல முறைமதில்களிற் பஞ்சவன்ன வரவமும்
யரியனைவிடநரியு வயினனு மாளிமயிலொடு சேவலும்
பெரியவனுமனு மகரமதியமும் பிரமனூர்தி செங்கவிகையும்
முரசுபூதவெங் காவிசுருட்டியு மொத்ததுவசமுங் கட்டினன்.

(இ-ள்.) சூரியமண்டலங்களில் நிறைந்திருக்கப்பட்ட நிலங்களில் பஞ்சவர்னக்கொடி அரவக்கொடி மகரக்கொடி சந்திரக்கொடி ஆனைக்கொடி ரிஷிபக்கொடி கருடக்கொடி யாளிக்கொடிமயிற்கொடி சேவற்கொடி அனுமக்கொடி நரகக்கொடி பிரமன்ஏறப்பட்ட அன்னக்கொடி சிகப்புக்கொடி முரசக்கொடி பூதக்கொடிகா

விக்கொடி புலிக்கொடி சிருட்டித்தான் இப்பேர்ப்பட்ட கொடிக ளும் கட்டினன் வாதாவி எ-று. (சு)

எந்தவுலகினு மிந்தநகரினை யில்லையாம்படி யேத்தினன்
தந்தியுரியணி நாதனாலயந் தாழ்ச்சியன்றி யமைத்தனன்
மந்திரிதளமி யாவுமுறைந்திடு மண்டபங்க ளளித்தனன்
விந்தையாகிய வாவிதுன்னிய வமரரார்பதி யென்னவே.

(இ-ள்.) சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தினும் ஆகாயலோகத் திலும் பாதாளத்திலும் இந்தரத்தினபுரிக்கு இணையில்லையென்று சொல்லும்படி சிருஷ்டித்தான் யானையையுரித்துப்பூண்டபரமசிவ னுடைய கோவிலை தாழ்ச்சியில்லாம லுண்டுபண்ணினன் மந்திரித் தலைவர் தந்திரித்தலைவர் யூகத்தலைவர்க ளிருக்கப்பட்ட மண்டபங் களையும் விசித்திரமாகிய தடாகங்களும் தேவலோகம் இதுவென் னும்படியாய் சிருஷ்டித்தான் மயன் எ-று. (எ)

அருணனுமதிகிரண மென்னநவமணிநிறைத்திடு மவனியாங்
கருணைதருமர நகமுமகிழுவ கஞ்சனுலகினு மிஞ்சுமாம்
வருணன்வலமிட மாகுவன்கதிர் மதியுமப்படி யேகுவன்
பொருவிலாவரு மந்நகர்பெயர் பொங்கிரத்தின புரியரோ

(இ-ள்.) சந்திரசூரியகிரணம்போல பிரகாசிக்கப்பட்டநவரத் தினமணிகளாலே நிறைந்தபட்டணமாகவும் அருள்சுரந்திருக்கும் பரமசிவன் மனமகிழும்படியாகப் பிரமலோகத்திலும் அதிகமாக வருணராசன் அந்தப்பட்டணத்தில் வலமிருந்துஇடமாகுவன் சூரி யன் சந்திரன்வீதியில் வராமற்போகுவான் குற்றமில்லாதஅந்தப் பட்டணத்துக்குப்பெயர் இரத்தினபுரி எ-று. (அ)

## வேறு.

இப்படி நக ரமைத்திட வரக்கனும்
தப்பிலா மயன்வலி தனை யுவந்தினி
செப்புத லீயருள் சிறுமி யென்றனைக்
கைப்பிடித் திடவுமுன் கருத் திரங்குவாங்

(இ-ள்.) இப்படியாக ரத்தினபுரிசிருஷ்டித்தபிறகு வாதாவி மயனுடையபலமறிந்து சொல்லுகிறன் என்னவென்றால் நீரளித்த உம்முடைய மகளைநான் மாலைசூடும்படியாக உம்முடைய மனது இரங்குவாயென்று சொன்னன் வாதாவி எ-று. (கூ)

தருவதாய் மயனுளந் தழைப்ப தாயினன்
கருமுகிற் குழல்விழி காவி கூன்சிலை

புருவமா மதிமுகம் பூவையாமவள்
திருவை யிந்திராணியாந் தெரிவை யாகுமால்

(இ-ள்.) வாதாவிசூரன்கேட்டபோது மயன் தருவதாக உள்ளுக்குள்ளே பூரிப்படைந்து பெண்ணினுடைய ரூபங்களெப்படியென்றால் கார்மேகம்போன்ற அளகபாரமும் இரண்டுகண்ணும் செந்தாமரைப்பூப்போலவும், வளைந்திருக்கும் விற்போல் இரண்டுகண் புருவமும் சந்திரன்போல்முகமும் இலக்ஷ்மியும்இந்திராணியையும் யிணைசொல்லலாம் எ-று. (ய)

அகமதி லுணர்ந்திடா வந்த மிக்கவள்
துகளிலா மனத்தி னள்சுரம் நொடிப்பவள்
நகைநொளி யாலினு நர்டிடா மயற்
சுகமதில் வல்லவள் சூக்ஷிவல்லவள்

(இ-ள்.) மனதிலே சொல்லுதற்குக்கூடாத அழகுமிகுந்தவள் குற்றமில்லாத மனமுடையவள் சப்தகீதங்களும் பாடப்பட்டவள் பல்லொளியிலும் விரகத்திலும் முற்சுகம்பொருந்தினவள் நல்லசூக்ஷியான ஆலோசனைசொல்பவள் பின்னும் வலிமையுடையவள். ()

அசுர மாய்கையிலுறு மரிவை தேசினிற்
கசிமது வினிமொழி காமன் தேவியாம்
சுசியுள ளவள்பெயர் சொக்க கன்னியாம்
பசியபொற் பாவையைப் பரிவி லீந்தனன்.

(இ-ள்.) இராக்ஷதமாய்கையில் வல்லவள் அவள்பேர் சொக்க கன்னி இந்தபசுமைநிறமுடையபெண்ணை மயனனவன் வாதாவிசூரனுக்குப் பாரியாளாகக் கொடுத்தான் எ-று. (கஉ)

என்னவச் சனகனை யிறைஞ்சி செப்புவான்
துன்னிய வவுணனின் றாலமென் மயன்
கன்னியின் றாலமோ கலக்குமோ வினி
நுன்னிடை யொக்குமோ நுவலு மென்றனன்

(இ-ள்.) எப்படியென்றால் சனகரிஷிசொல்ல அத்திரிரிஷிகேட்டுசொல்லுகிறார் சனகமகாரிஷியே ராக்ஷதனுடையதிரேகம்பருதம்போலிருக்குமே மயன்பெண்ணின் திரேகம் சிறிதாகையால் ப்படிக்கொவ்வும் அதுஒவ்வாதே அதையெனக்குத்தெரியச்சொலவேணுமென்றார் அத்திரிரிஷி எ-று. (கந)

சிற்றுரு வாகிய திண்மை மன்னிய
உத்தமி மாய்கையி லுருவ மாகுவள்

அத்திரி யேயென வறைந்து சூரர்கோன்
நத்திய மாமனைநலங்கொண் டாடினன்.

(இ-ள்.) சிற்றுருவாகி பலம்பொருந்திய உத்தமியான சொக்ககன்னியானவள் இராக்ஷதமாய்கைக்கு ஒப்பானவள் அந்தவேளையில் தன்னுடையஉருவைமாற்றிராக்ஷதரூபமாவாள் ஈஸ்வரனுடையசங்கற்பம் அப்படிஉண்டாயிருக்கிறது அத்திரிஷியே யென்று சொல்லி வாதாவிசூரன் தன்னுடையமாமனாகிய மயனைநன்மையாய்க் கொண்டாடிக் கொண்டான் எ-று. (கச)

அளித்திடு மாமனை யவுண னேத்தியே
உளத்தினி லுவகையா யுலகிற் புக்கியே
களிப்புடன் கன்னியைக் கலந்த காலையிற்
தளத்தினிற் சிருஷ்டி செய்யென்று கூறினன்.

(இ-ள்.) இரத்தினபுரியையும் சொக்ககன்னியையும் அளித்தமாமனாகிய மயனைவணங்கி மனதில்வெகு சந்தோஷமாக அந்த இரத்தினபுரியின்தளமாகிய சேனைபரிவாரங்களை சிருஷ்டிசெய்யும்படியாகச் சொன்னான் வாதாவி எ-று. (கரு)

## இரத்தினபுரிச் சிறப்பு.

### முற்றிற்று.

---

ஆகபாயிரம் உட்பட சருக்கம்-ரு-இ

செய்யுள் திருவிருத்தம் கஉஅ

உ

கடவுள் துணை.

# ஐந்தாவது.

# வாதாவிக்குபடைமிருந்த சருக்கம்.

மயனாலணைந்த வவுணன் மாதோடிருப்ப வகமகிழ்ந்து
புயவகோளென்னுந் தேசிகனைப் புந்திநினைக்கப் புளகமெனும்
தயவாநகரஞ் சார்ந்திடுசான் தரணிவண்மை யுளத்துணர்ந்து
நயமா னகரமெனத்துதித்தே வவுணனிதனை நவில்கின்றான்.

(இ-ள்.) மயனாகிய தெய்வதச்சனால் புகைக்ஷியடைந்த வாதாவிசூரன் தன்பெண்சாதி சொக்கன்னியுடனே கூடியிருக்கும்போது சந்தோஷமாகி தன்னுடையகுருவாகிய சுக்கிராச்சாரியாரைவரும்படிநினைத்தான் அதைசுக்கிராச்சாரியாரறிந்து தயவாகி இரத்தினபுரியிற்புகுந்து எங்குஞ்சுற்றிப்பார்த்து இதுநல்லநகரமென்றுசொல்ல வாதாவிகுருவைப்பணிந்து சொல்லுகிறான் எ-று. (க)

வித்தாய்முளைத்தவிளக்கொளியே விண்ணுமண்ணுநிறைந்தோனே
சித்தாகியதோர் சீமானேசிறந்த வெண்மை நிறத்தோனே
முத்தனனமுதல்வோனே மறைநூலுணர்ந்த கோமானே
பத்தனன வடியேற்குன் பாதமளித்துப் பலன்றருவாய்.

(இ-ள்.) இராக்ஷதருக்கெல்லாம் வித்துபோல முளைக்கப்பட்டசுடற்பிரகாசமே ஆகாயமும்பூமியும்நிறைந்தவனே சித்தாந்தம் விளங்கப்பட்ட சீருடையவனே சிறப்பானவெள்ளைநிறமான ரூபனே முத்தனனதேசிகருக்கெல்லாம் முதன்மையானவனே நீதியாகியவேதங்களை யுணரப்பட்டபெரியோனே எல்லா முணரப்பட்ட இராசாவானவனே சீஷனாகியவெனக்கு உன்னுடைய விரண்டுபாதங்களையுந்தந்து நான்கடைத்தேறும்படிக்கு பலன்கொடுக்க வேணுமென்றான் வாதாவி எ-று. (உ)

என்னவவுணன் றொழச்சுங்க னிதையமகிழ்ந்தே வியம்புகின்றான்
முன்னோன்பதத்தை போற்றிசெய்தே முடியைப்புனைந்த வாதாவி
மன்னவுன்றன் குலமெல்லாம் வேலோன்கரத்தால் மடிந்தனரென்
றுன்னவுளத்திற் றுயரமுற்றேனுதித்தாயவுணர்க்குலக்கொழுந்தே,

(இ-ள்.) இப்படியாக வாதாவிகுருவான சுக்ராசாரியை பணியும்போது மனதுமிகவும் களிப்புற்றுசொல்லுவான் பரமசிவனுடையபாதத்தை நினைந்துதவஞ்செய்து பரமசிவனைவணங்கி நாடுநகர்முடியுஞ் சகலமும்புனைந்த வாதாவியே உன்னுடைய குலத்திலுதித்த சூரபதுமன்முதலாகிய இராக்ஷதரையெல்லாஞ் சுப்பிரமண்ணியருடைய கையிலுறைந்த வேலாயுதத்தினலே மடிந்துபோனார்களென்று என்மனதிலே துயரமாகியிருந்தேன் இப்போது வந்துபிறந்தாய் இராக்ஷதகுலக் கொழுந்தானவனேயென்ருர் சுக்கிராச்சாரி எ-று. (௩)

உனதுபதியி னொளிவாழ்க வுள்ளம்வாடாச் சுகந்துன்ன
வனிதைசொக்க தேவியுடன் வாழ்ந்துதநய ருண்டாக
தனுவார்பகையை யடக்கவெகு தைரியங்களு முனக்காக
வெனைநீநினைந்த வகையின்றே வியம்புமென்ன விசைக்கின்ருன்.

(இ-ள்.) உன்னுடையபதியாகிய இரத்தினபுரியும் வாழ்கஉன் மனதில்வருத்தமில்லாமல்சுகமாய்சொக்ககன்னியும் நீயும்வாழ்ந்து புத்திரர்களும் உண்டாகிஉன்பேரில் வில்லெடுத்துவந்த சத்திராதிகளை யடக்கும்படியாகத் தயிரியங்களும்தாஷ்டீகமுமுனக்குண்டாகவும் என்னையிப்போது நினைத்தகாரியத்தைசொல்லுவாய் வாதாவியேயென சொல்லுவான் வாதாவி எ-று. (ச)

தாயின்கருவி லிருமதலை தரணிலுதித்து தாஷ்டீகஞ்
சேய்மாயையாலே வளர்காலம் மறைவல்லோனே குறுமுனியால்
நேயதமையன் றனையிழந்து நித்தனருளை தவம்புரிந்து
சேயமயனல்சிரணிந்துன் செய்யபாதந் தொழுதனனே.

(இ-ள்.) என்தாயாகிய அசோமுகிவயிற்றிலே இரண்டுபிள்ளைகள்பிறந்து வெகுதாஷ்டீகமுள்ள மாய்கையினலேசீவனஞ்செய்து வருங்காலத்தில் வேதவல்லமையையுடையகுருவே அகஸ்தியமகாரிஷியால் அன்பானதமையனுகிய வில்வலனிறந்துபோனன் அதின்பேரில் பரமசிவனைநினைந்து தவஞ்செய்து வரம்பெற்று மயனலேநகரமும் பெண்சாதியும்பெற்று பின்புஉன்னுடைய பாதத்தை தொழுகின்றேனென்ருன் வாதாவி எ-று. (ரு)

கனத்தவெனது கிளைஞருடன் கருமான்விரதங் கருணையினற்
செனித்தேயெனது தேசமெல்லாம் செழித்தேவிளங்கத் தேசிகனை
மனத்திலுகந்து யருளெனவே வள்ளற்பளிங்கு வெள்ளியும்
நினைத்தானிமல னஞ்செழுத்தை நிறைந்தாரவுணர் நேமியினில்.

(இ-ள்.) கனம்பொருந்திய என்னினத்தாராகிய ராக்ஷதர்களும்புத்திரபௌத்திரர்களும் மந்திரிமார் யூகத்தலைவர் யானைக்காரர்

குதிரைக்காரர் முதலாகியபேரும் எனக்குஉமதருளினாலே சிருஷ்டித்துக்கொடுத்தால் இந்தபட்டணமுழுதுஞ் செழித்திருக்குமென்றுவாதாவிசொல்ல‘அப்போதுபளிங்குநிறமுடைய சுக்கிரபகவான் பஞ்சாக்ஷரத்தைஉச்சரிக்கபட்டணமெங்குஞ்சேனைகள்நிறைந்தன.

போகினுறையும் புற்றினுறை கறையானுடலம் புளகித்து
வாகுசிறைகள் மன்னுங்கால் வானத்துயர்ந்த வாறதுபோல்
யோகியுரைத்த வஞ்செழுத்தி லோயாவவுணர்க் குழாங்கிளர்ந்த
நாகஞ்சுமக்கும் புவிநிறைந்தா ரென்னமுனியு நவில்கின்றான்.

(இ-ள்.) யோகியாகிய பாம்புவளரப்பட்ட புற்றிலிருக்குஞ் செல்லுகள்தேகம்பெருத்து இறகுமுளைத்து ஆகாசத்தில் பறக்கிறவைபோல தவமுடைய சுக்கிராச்சாரியார்செபித்த பஞ்சாக்ஷரத்தினாலே மிகுந்தராக்ஷதக்கூட்டங்கள்பிறந்து ஆதிசேஷன் சுமக்கப்பட்டபூமியில் நிறைந்தார்களென்று சனகரிஷிசொல்லஅத்திரிரிஷி சொல்லுகிறார் எ-று. (எ)

அஞ்சக்கரத்தா லவுணர்புவி யடைந்தாரென்னு மறிந்தவனே
அஞ்சக்கரத்தா லனைத்துலகு மடைந்த சீவராசிகளால்
அஞ்சக்கரத்தை யன்றியொரு மந்திரம்வே றிலையெனவே
அஞ்சக்கரத்தின் புதுமையெனக்கருளுமென்ன வறைகுவனால்.

(இ-ள்.) பஞ்சாக்ஷரமாகிய அஞ்செழுத்தைசுக்கிராச்சாரி செபித்துவுடனே ராக்ஷதர்உற்பத்தியாகி பூமியில்நிறைந்தா ரென்று சொல்லுந்தவத்தோனே அஞ்செழுத்தாலே அண்டபிண்டசராசரங்களும் அதிலேஅடைந்திருக்கின்ற சீவராசிகளும்உண்டாயின இந்த அஞ்செழுத்தேயல்லாமல் வேறேஒருமந்திரங்க ளில்லையோ அந்தஅக்ஷரங்களுடைய புதுமையெனக்கு நன்றாய்மனதுதெளியச் சொல்லவேண்டுமென்று கேழ்க்க சனகரிஷிசொல்லுவார் எ-று.()

உருவாயருவாய் வெளியாகி யொளியாயுள்ள பரப்பாகி
யருமையுடையோர்க் கரமிரண்டாம் ஐந்துளெட்டக்ஷரமாகி
விரிவெண்பத்து நானூறுயிர வித்தாகி வேறாகி
தருவேதாந்த நாதாந்தந் தழைக்கும்பொருளா யுதித்ததுவே.

(இ-ள்.) அத்திரிமகாரிஷியே பஞ்சாக்ஷரமாகிய அஞ்செழுத்தின்மகத்துவத்தினாலே உருவமாகத்தோற்றவும் அரூபமாகியதும் எங்கும்வெளியாயிருக்கப்பட்டதும் பிரகாசமாய்நிரம்பி யிருக்கப்பட்ட பாவபுண்ணியங்களும் ஐந்தெழுத்தாகி அதற்குள்எட்டக்ஷரமாகியடங்கிவிரிந்து எண்பத்துநானூறுயிரஞ் சீவசெந்துக்களுக்கும் வித்தாயுதித்து தரப்பட்டவேதாந்த நாதாந்தமுந் தழைக்கும்படியாக ஒருபொருளாய் முளைத்தது எ-று. (கூ)

அஞ்சக்கரமே பெரிதாகு மஞ்சக்கரமே சிறிதாகும்
அஞ்சக்கரமே சராசரமா மஞ்சக்கரமே யாக்கையுமாம்
அஞ்சக்கரமே வுயிராகு மஞ்சக்கரமே சகலசித்தும்
அஞ்சச்கரத்தா லாவதன்றி யஞ்சிலதிக மறைகுவதோ.

(இ-ள்.) அத்திரிமகாரிஷியே பஞ்சாக்ஷரமாகிய அஞ்செழுத்தேபெரிதாகும், அஞ்செழுத்தேசிறிதாகும், அஞ்செழுத்தேஅண்டபிண்ட சராசரமாகும் அஞ்செழுத்தே ஆத்துமாவாகும்அஞ்செழுத்தேசீவனுகும் அஞ்செழுத்தேசகலசித்தாகும் அஞ்செழுத்துசகலமுமாகும் அஞ்செழுத்துக்குமிஞ்சின அக்ஷரம்ஒன்றையுஞ்சொல்லலாகாது எ-று. (ய)

ஆட்டமெல்லா மஞ்செழுத்தே யடங்கிநின்ற தஞ்செழுத்தே
பாட்டும்பயனு மஞ்செழுத்தே பரவையான தஞ்செழுத்தே
நாட்டில்பெரியோ னெனவே நவில்கின்றதுவு மஞ்செழுத்தே
வாட்டமின்றி தவமுனியென் மனதிற்றெளிவையெனவுரைப்பான்

(இ-ள்.) சகலசீவராசிகளுந் தாபரமுதலாகியனவுமடங்கியிருக்கிறதும் அஞ்செழுத்தே சகலசாஸ்திரபுராணங்க ளுண்டானதும் அஞ்செழுத்தே சப்தசமுத்திரமுண்டானதும் அஞ்செழுத்தே பூமியில்பெரியவனென்று ஆணவம்விளைவிக்கிறதும் அஞ்செழுத்தே இந்தஅஞ்செழுத்தானது வாடாதமனதுடைய தவம்உனக்கு இனிமேலென்னத்துக்கு நான்சொல்லுகிற சூக்ஷமத்தைநீர் நன்றாய்த்தெரிந்துக்கொள்ளுமென்று சனகரிஷி சொல்லுகிறார் எ-று. (கக)

## வேறு.

கரிமுக வவுணர்கள் கனத்த கோடியாம்
பரிமுக வவுணர்கள் பதினெண் ணாயிரம்
அரிமுக வவுணர்க ளறுபதி னாயிரம்
நரிமுக வவுணர்கள் நாற்பதி னாயிரம்.

(இ-ள்.) கேளும் அத்திரிமகாரிஷியே இந்தஅஞ்செழுத்தைச் சுக்கிராச்சாரியார் சொன்னவுடனே அதிலுற்பத்தியெப்படியென்னில் ஆனைமுகராக்ஷதர்கோடி குதிரைமுகராக்ஷதர் பதினெண்ணாயிரங்கோடி சிங்கமுகராக்ஷதர் அறுபத்தாறுயிரங்கோடிநரிமுகராக்ஷதர் நாற்பதினாயிரங்கோடி உற்பத்தியாகியது எ-று. (கஉ)

ஆயிரஞ் சென்னி யிரண்டாயி ரங்கரம்
பாயென வுவரிமேற் பள்ளி கொள்ளுவர்

மாயிரு விசும்பினின் மறையு மாய்கையோ
ரோய்விலா வாரியை யுணப்ப கோடியே.

(இ-ள்.) ஆயிரந்தலை யிரண்டாயிரங்கையையுடைய ராக்ஷதர் சமுத்திரத்தில்படுத்து நித்திரைசெய்கிறதும் ஆகாசத்திலும்பூமியிலும் ஒளித்துஇருக்கப்பட்ட மாய்கையுடையவர் என்னேரமுஞ் சமுத்திரசலத்தை உண்ணப்பட்டவர் இப்படிராக்ஷதர் கோடான கோடி எ-று. (கங)

புலியென வறுமுவோர் புகலெண் ணுயிரம்
உலகினை பந்தடித் துவகை யாகுவ
ரெலிமுக வவுணர்க ளெழுப தாயிரம்
மலைகளைப் பிடுங்கியே வானிலேற்று வார்.

(இ-ள்.) புலிமுகராக்ஷதர் எண்ணுயிரங்கோடி பேரும்உலகத்தை கையினுலெடுத்துப் பந்தடிப்பார்கள் எலிமுகராக்ஷதாள் எழுபதினுயிரங்கோடி அவர்கள் மலைகளைப்பிடுங்கி ஆகாசத்திலே எறிவார்கள் எ-று. (கச)

ஒருசிர மவுணருக் கிரங்கொள் பாவைபோல்
கருமுகி லெனக்கரங் காதம் நீளுவோர்
பெருவிலங் காயிரம் பிடித்தருந்து வோர்
தருமமி லாவுளந் தழைப்பர் கோடியே.

(இ-ள்.) ஒருசிரமுடையராக்ஷதர் நெருப்புபறக்கப்பட்ட விரண்டுகண்ணும் கார்மேகம்போன்றநிறமும் ஒருகாதம் நீண்டிருக்கப்பட்டகையினுலே பெருத்தமிருகங்களை ஆயிரமாயிரமாகப்பிடித்துத்தின்றுபோடுவார்கள் தருமமில்லாமல் பாவமேகுடியா யிருக்கும்மனமுடைய ராக்ஷதர்கோடிபேர்க ளுதித்தார்கள் எ-று.(கரு)

சத்தசாக ரங்களைத் தடைகளின்றியே
மெத்தநீ ரருந்தியே மீனெலா மெல்லுவார்
சுத்த பவத்தினர் கழுதை முகத்தினுர்
அத்தியூ னருந்திடு மவுணர் கோடியே.

(இ-ள்.) எழுசமுத்திரத்தி னீரையுந்தடையில்லாமற் குடித்து அதிலிருக்கப்பட்ட மீன்முதலான சீவன்களைத்தின்று கழுதைமுக ராக்ஷதர்பல்லினுலே ஆனையைக்கடித்துச் சதைகளை தின்னும்படியானபேர் கோடியே எ-று. (கசு)

அரக்கிய ரெண்ணிலா ரங்குதித் தனர்
உரத்தொடு புரவிசூ ழிரத மொன்பதா

பிரத்தொகை யமைச்சர்க ளெழி லரக்கர்க
ளிரத்தினர் நங்கையாநேமி யெங்குமே.

(இ-ள்.) இராக்ஷதர்க ளெண்ணிமுடியாதபேர்களும் மகாபல
ம்பொருந்திய குதிரைகட்டியதேர்கள் எண்பதினாயிரம்பேர் மந்தி
ரிமார்களும்பிறந்தார்கள் அவரவர்களுக்குத்தகுந்தஇராக்ஷதிகளும்
பிறந்து பூமியில் நிறைந்தார்கள் எ-று. (கஎ)

உளத்தினிற் குகந்த சேடிய ருதித்தனர்
களித்திடு சேனையின் கடை நறைந்திட
தளித்திடு மனத்தினன் றவத்தின் மிக்கவன்
பளிங்கெனுந் தேசிக னிவை படைத்தனன்.

(இ-ள்.) வாதாவிசூரனுக்கும் அவன்தேவி சொக்ககன்னிக்
கும் மனம்போல ஊழியஞ்செய்யப்பட்ட வெள்ளாட்டிகளும் இப்
படியாக அநேகமாகிய சேனைக்கடல்நிறைந்தார்கள் பளிங்குநிறமு
டைய சுக்ராசாரியார் இப்பேர்ப்பட்ட ராக்ஷதக்கூட்டங்களை அஞ்
செழுத்தினாலே சிருட்டித்தார் எ-று. (கஅ)

பாக்கிய முளவ சோமுகி நற்பாலரை
தாக்கிய நால்வரித் தரணி மானிடத்
தூக்கிவா தாவிதன் றுணைவர் தன்முகம்
நோக்கியே நாமமும்நுவலு கின்றனன்.

(இ-ள்.) பாக்கிய மிகுந்திருக்கப்பட்ட அசோமுகி வயிற்றில்
மறுபடியும் பிள்ளைகளுற்பத்தியாக வேணுமென்று நினைத்தமாத்
திரத்தில் நாலுபிள்ளைகளைப்பெற்றாள் அவர்களைவாதாவிசூரன்கண்
டுதன்கையினாலேதூக்கி தன்தம்பிகளைப்பார்த்து அவர்களுக்குப்
போதித்தான் வாதாவி எ-று. (கசு)

வாரதன் குண்டலன் மகோன் மகோதரன்
பேரென வுரைசெப்பப் பெரிய சூரனைத்
தாரணி தம்பிய ரிறைஞ்ச தாஷ்டீகச்
சூரனை சூழ்ந்திடத் துதிப்பன்வெள்ளியை.

(இ-ள்.) வாரதன், குண்டலன், மகோன், மகோதரனென்று
பேரிட்டு மகிழ்ந்தவாதாவி அண்ணனைத்தம்பிமார் நாலுபேரும்
பணிந்து வெகுதாஷ்டீகமாக இருக்கும்போதுவாதாவிகுருவாகிய
சுக்கிராச்சாரியை தோத்திரஞ்செய்தான் எ-று. (உ0)

## வேறு.

ஐயனே யென்னை யாண்டருளாதியே
மெய்யனே யெங்கள் வேதனைத் தீர்த்திடும்
துய்யனே யொரு துன்பமில் லாமற்செங்
கையனே யினி காக்கக் கடனென்றான்.

(இ-ள்.) ஐயனாகவும் குருவாகவும் என்னையிரட்சிக்குந்தெய்வமே முதல்வனே மெய்யானவனே எங்களுடையவேதனையைத் தீர்க்கப்பட்ட மாசிலாதமனமுடையவனே எனக்குஒரு துன்பமில்லாமற்காக்குஞ் சிவந்தகையனே என்றான் வாதாவி எ-று. (உக)

சூரனே வுனைச் சூழ்கிளைஞ் ஞோர்களும்
வாரணிந்த சொக்க கன்னி வஞ்சியும்
பாரை யாண்டு பலன் மிகு வாயென
வீர வெள்ளிதன் பதிகுறித் தேகினன்.

(இ-ள்.) வாதாவியேஉன்னைச்சூழப்பட்டஉறவினர்களும்சொக்ககன்னியும் இந்தரத்தினபுரியையாண்டு சுகமாயிருப்பீர்களென்றுவாழ்த்திசுக்கிராச்சாரியார்தானிருக்கும்இடத்துக்குபோனார்.()

தானை சூழத் தழைத்த வாதாவியும்
வானை யுற்றிடு மண்டப மன்னியே
கோனெனக் கொலு வெய்திய காலையில்
மானையே விழி மாதினைக் கூடினன்.

(இ-ள்.) சேனைசூழும்படியா யிருக்கப்பட்ட வாதாவிசூரன்ஆகாசமளாவிய கொலுமண்டபத்திலிருந்து ராச்சியபாரம் ஆளுங்காலத்தில் மான்விழிபோன்ற தன்பெண்சாதியுடன் கலவித்தொழில் செய்தான் எ-று. (உரு)

அன்ன நாடனி லாயிழை கர்ப்பமாய்
தன்னை யொத்த தநயர்க ணால்வரை
யுன்னி யீன்றங் குரமுள மைந்தரை
கன்னி யுள்ளங் களிக்க வளித்தனள்.

(இ-ள்.) அப்படியிருக்குங்காலத்தில் சொக்ககன்னிகர்ப்பஉற்பத்தியாகி வாதாவிக்குத்தகுந்த நாலுபிள்ளைகளைப்பெற்றாள் அந்தப்பிள்ளைகளை மனங்களிக்க வளர்த்தாள் சொக்ககன்னி எ-று. ()

ஈரைந் தாண்டி லிலகிய பாலருக்
கோரு வேத முதலிய தோதியே

தேரு மத்திர வித்தை தெரிந்திட
சீரளித்துத் தன் சிந்தை மகிழ்ந்தனன்.

(இ-ள்.) பத்துவயதுக்குள் நான்குபிள்ளைகளும் ராக்ஷதக்கலைகளைப் படித்துக்கொண்டு ஆனையேற்றம் குதிரையேற்றம் வில்வித்தை கற்பித்துச் சிறப்பாய் விளங்கும்படி மகிக்ஷியானான் வாதாவி எ-று. (உரு)

கம்பனோடு கசமுகன் கும்பனுஞ்
சம்புமாலி யெனும் பெயர் தாங்கியே
செம்பொன் மேருவெனச் சிறு பாலகர்
அம்பு சூழ்புவி யாண்டன ரென்றனன்.

(இ- ள்.) அந்தபிள்ளைகளுக்குக்கம்பன் கசமுகன் கும்பன்சம்புமாலியென்று பேரளித்து பருவதம்போல விளங்கப்பட்ட பிள்ளைகளுந் தம்பிமார்களுஞ்சூழ இரத்தினபுரியை யாண்டுக்கொண்டிருந்தான் வாதாவிசூரன் எ-று. (உசு)

ஈது தாதை யெழிலெனு மத்திரி
மாதவன் பதம் வாழ்த்தி வணங்கியே
தீதிலாக் கதை யின்னமுஞ் செப்பெனத்
தாது கொன்றையன் றுடுதித் தோதுவான்.

(இ-ள்.) இந்தக்கதை இன்பமாக இருக்கிறதென்று அத்திரிமகாரிஷி சனகமகாரிஷியைவணங்கி குற்றமில்லாதவன்னியர்புராணத்தின்கதையை யின்னமும்கேட்கவிருப்பமாக விருக்கிறது அதை தெரிந்தமாத்திரம் நன்றாயெனக்குச் சொல்லவேண்டுமென்று கேழ்க்க கொன்றைமாலையணிந்த பரமசிவனைத் தோத்திரஞ்செய்துஇப்பால் நடக்கப்போகிற கதையைச் சொல்லுகிறார் சனகமகாரிஷி எ-று. (உஎ)

## வாதாவிக்கு படைமிகுந்த சருக்கம்

முற்றிற்று

ஆக பாயிரம் உட்பட சருக்கம் கூ-இ

திருவிருத்தச் செய்யுள் கஙிரு.

———

உ

கடவுள் துணை.

# ஆறாவது

# வாதாவிதிக்கு

## விஜயஞ்செய் சருக்கம்.

திருவளரு நவமணியா லிழைத்தமுடி சென்னியினிற் சிறந்து மின்ன, பெருமையுளநகரமதிற் பிரபலமாய் மண்டலத்திற் பெம் மானென்ன, விருதினிதோ டணிகீர்த்தி பளபளெனவிரவிமணி யுரத்திற்றுன்ன; கருமலைபோல் வீற்றிருக்கக் கடற்சேனைதனைப் பரவக் கருணைகூர்வான்.

(இ-ள்.) இலக்ஷுமிவளரப்பட்ட ரத்தினமணியும் பசும்பொன்னுலிழைத்தருளிய கிரீடமுந்தரித்து இரண்டுதோளிலும் புயகீர்த்திபளபளென்னச் சூரியகிரணம்போலிருக்கப்பட்ட சரப்பளிபதக்கம் முத்துமாலை மார்பில்பிரகாசிக்க பெருமையாக ரத்தினபுரி பட்டணத்திலே பிரபலிக்கின்ற கொலுமண்டபத்தில் ராசாவென்றுசொல்லும்படியாகக் கரியமலைபோலவீற்றிருந்து கடல்போலத் தன்சேனைக்கூட்டங்கள் நின்றுவணங்கும்படியாய் வீற்றிருந்துசொல்லுகிறான் எ-று. (க)

### வேறு.

தனக்கிசையமைச்ச ரெண்ணிலருஞ்சார்ந்திட வருளியசேனை இனத்தினிலொருவற் காயிரங்கோடி யிசைந்தனவைஞ்ஞூற்றைம்பதுபேர், மனத்தினில்வகுத்தே நிருபமுமளித்து மானிலம்புரந்திடவுணர், வனத்தினிற்றிரிந் தாயிரங்விலங்களிக்க மன்னனுண்டரசிருந்தனனால்.

(இ-ள்.) தன்னுடையமனதுக்குச்சரியாநிறைந்திருக்கப்பட்ட மந்திரிகள்தந்திரிகள் கணக்கிலடங்காதசேனைகள் ஒவ்வொருமந்திரிக்குமாயிரங்கோடி ராக்ஷதரைவகுத்து அஞ்ஞூற்றைம்பது மந்திரிக்கும்பங்குசெய்து பூமியையாண்டிருக்கும்போது சிலராக்ஷதர்கள் வனத்திற்போய் நாளொன்றுக்கு ஆயிரமிருகங்கள் கொன்றுவந்து வாதாவிக்குக்கொடுக்கப் புசித்து ராச்சியபாரஞ் செய்துக்கொண்டிருந்தான் வாதாவி எ-று. (உ)

யனதிலோர்சூக்ஷிநினைப்பான் மாநிலத்தில்மன்ன னென்றே முடிபுனைந்தார், கனமெனவெவருமென தடியிறைஞ்சி கனநிதிக்கூ ப்பையீய்ந்திடுவான், வனிதையர்முன்றன் மாசினையகற்றி வழுத் தியபணிகளேமன்ன, முனிவரைபேசியர சிளங்குவநூன்முறை யெ னவுளத்துணர்ந்தனனல்.

(இ-ள்.) வாதாவிசூரன்ஒருஆலோசனைநினைந்து இந்தபூமியை யாளப்பட்ட ராஜாக்களுக்குக்கனமென்னவென்றால் யாவரும்நம் முடையபாதத்தில்வணங்கி நீதியாகியகனமானபணத்தை கப்பங் கட்டிவரவும் தேவமாதர்கள் தெருவாசலில்குப்பையை யகற்றவும் யாவரும்நானிட்ட வேவற்றொழில்கள்செய்யவும் என்றுகடுமையா னவார்த்தையைப்பேசி ராசாங்கஞ்செலுத்துவது மனுவாசகம்சா ஸ்திரங்களில் என்னசொல்லுகிறதென்று மனதில் நினைந்தான் வா தாவி எ-று. (ந)

கவனவான்பரியு மிரதமுங்கரியுங் கனத்தபொற்பணிகளுங்க டல்சூழ், அவனியுநிதியுமரிவையர்மனமு மாண்மைசேர்குழவியுமமைச்சர், குவவுதோள்வீரர்கோயிற் கொத்தளமுங்குறைவறுசெல் வமும்படைத்த, தவலமேயன்றி கீர்த்தியுண்டாவ தரிதெனவவுண னுங் துயருற்றான்.

(இ-ள்.) நமக்குக்கவனத்துடன் ஆகாசமார்க்கமாகத் தாவி நடக்கப்பட்ட குதிரையுந்தேரும்யானையு மிகுந்தபொன்னாபரணங் களும் கடல்சூழும்படியான பட்டணமுந்திரவியமும் பெண்சாதி யின்பமும் பராக்கிரமுமானபிள்ளைகளும்மந்திரிகளும் திரக்ஷியையு டையதோள்மிகுந்த வீரர்களும்கோவிலும்கொத்தளங்களும்குறை வில்லாதசெல்வமும் படைத்திருக்கிறது அவலமல்லாமற்படிக்குகீர் த்தியுண்டாகுவது இதுகளாலேஇல்லையென்று துயரமாகினன் வா தாவி எ-று. (ச)

இரணியனிலங்கைக்கிறையவன்முதலா யெனதுசுற்றங்களாயி ருந்தும், அரியினால்மடிந்தாரழிவிலாவரங்கொண் டாழியிலரசனெ ன்றமர்ந்தேன், முருகனிலதிகத்திணிபுயவீரர் மூளைத்தனர்மணிமு டிதுலங்க, பெருமைகளணிந்தவறுமைகளறைபிற்பேய்ச்சுரைக்கா யெனவாமல்.

(இ-ள்.) முன்னாளையிலே இரணியனும் இராவணனும் இன்ன மளவற்றராக்ஷதரும்சூரபற்பன் மகாவிஷ்ணுவினாலும் சுப்பிரமணி யராலும் அழிந்துபோனார்கள் நாமானால்ஒருவராலு மழிவில்லாத வரம்பெற்று சமுத்திரத்தின்நடுவிலே விளங்கப்பட்ட ரத்தினபுரிக் கோட்டைக்கு ராஜாவென்றுகொலுவிருந்தேன் சுப்பிரமணியரினு

மதிகவலிமைமிகுந்த புஜபலவீரர்கள் நமக்குஉத்திருக்க நவமணியி ழைத்த கிரீடம்பிரகாசிக்கும் பெருமையைச்சொன்னால் ...ய்ச்சுரைக்காய்போ லாகுமென்றான் வாதாவி எ-று. (ரு)

முருகவிழ்கைதை மலர்முடியணிவார்முருக்கலரணாகுல கிற், பெருமையாய்ப்பெரியோர்தமை யழைத்தின்பம் பெய்துல சிறியரோடிணங்கார், கரும்பினையருந்துநாவுபேய்க்கரும்பைகுவார் விடாதென நிதிக்கனத்த, வரசனாகியநாமரசினைச்செலுத்தியவக்கவனி புகழுவமென்றே.

(இ-ள்.) வாசனைபொருந்தியதாழம்பூவை முடியிற்றரிப்ப லால் முருக்கம்பூவையணிவாரில்லை உலகத்திலே பெருமையுடைய பேர்கள் பெரியோரையழைப்பித்து இன்பமான வார்த்தையையு ரைத்துபெருமைபெறுவாரல்லாமல் சிறியவருடணிணங்கார் கரும் பையருந்தினநாவானது பேய்க்கரும்பைவிருப்பாது அதுபோலதி ரவியங்கள் வைத்திருக்கப்பட்ட ராஜாவாகியநாம்ஆக்கினையுடனே ராச்சியமாளுவதே எங்கும்புகழ்ச்சியா யிருக்குமென்று எண்ணி னான்வாதாவி எ-று. (சு)

நிறுபதியுளத்தினுவகையாயமைச்சர் நிறைமுகநோக்கியேயு ரைப்ப, னிருவிசும்பகன்றபுவிமிசைதிக்கு விஜயஞ்செய்திமையவரி ருடியாவரையும், பருமையினகரிற்பணிசெயக்கடிந்து பண்புடனர சுவீற்றிருப்பத், தருமவாதாவியசுரனென்றவனி யடங்கலும்புகழு றவென்றான்.

(இ-ள்.) நிருதிபதியாகியவாதாவி தன்மனதிலிப்படியாக வெ ண்ணிச் சந்தோஷமாய் மந்திரியைப்பார்த்து சொல்லுவான்ஆகா சஞ்சூழந்த பூமியிலெல்லோரும்போய் திக்குவிஜயஞ்செய்து தேவ ர்களிரிஷிகள் முனிவர்கள் முதலாகியயாவரையும் பிடித்துவந்துநம துபட்டணத்தில் ஏவல்செய்யும்படி ஆக்கினைசெய்துநீதியுடன்கொ லுவிலமர்ந்து பூலோகமடங்கலும் புகழ்ச்சியாகப் பேசிக்கொள் வார்களென்றான் வாதாவி எ-று. (எ)

என்னலுமமைச்ச ரிணையடியிறைஞ்சியியக்கரின்சேனையோடி சைப்பார், மன்னவனஷ்டதிசையினில் விசயமன்னியே நகரிசேர் ந்துரைப்ப, வுன்னியவதனாற்படையெடுத்திடுமென் றுவகையாய வரவர்சேனை, யன்னதுகடற்போ லளவிலாவெள்ள மங்கனமெழுந் தனவென்றே.

(இ-ள்.) இப்படியாகவாதாவிசொல்லமந்திரிமார்பணிந்துசே னைத்தலைவனையழைத்துச் சொல்லுவார்கள் நம்முடையவிராசா அ

ஷ்டதிக்கும்போய்ச் சத்துருவைசயித்து நமதுபதிக்கு வருவதாக ஆலோசித்தபடியால் நீங்களும் உங்கள்சேனைகளுடன் பயணமாகு மென்றுசொல்ல சந்தோஷமாய் அவரவர்சேனைகளுடனே சமுத்தி கோஷ்டம்போற் பொக்கியெழுந்தன சேனைகள் எ-று. (அ)

நுடமுழவொலியு மவுணர்களொலியுங் குரகதங் கரியொலி யன்றி
கடன்முரசொலியு மிரதமூரொலியுங் கம்மிடபுவனமு மதிர
முடிபுனையவுணர் பூபதியிந்த மூர்த்தியென்றேத் திடக்கண்டு
படிமிசையேகி யுலகெலாமடைந்து பாரமேசெய்தனரன்றே.

(இ-ள்.) ஒலிக்கப்பட்ட முரசுவாத்தியங்களும் இராக்ஷதரொ லிக்கப்பட்டஒலியுங் குதிரையானையின்சத்தமும் தேர்வருகிறபோ துண்டாகுமொலியும் ஆகாசம்பூமிபரியந்தங் கப்பிக்கொண்டுகிடுகி டென்றதிட கிரீடம்புனைந்தவாதாவியே மும்மூர்த்திகளிலொன்றெ ன்று அவுணர்களேத்திடக்கண்டு பூலோகத்தில்வந்து இராக்ஷதவெ ள்ளம்பரவி[illegible]தால் பூமியழுந்தும்படியான பாரமானார்கள்எ-று. ()

அஷ்டதிக்கேகியவனியாள்சூரரையணைந்ததிவீரரைப்பிடித்து
கட்டிவானுறையுங் கடவு[illegible] ர்கவர்ந்துகாவலனெனமகவா
ன், பட்டணத்துறையுமி[illegible] தும் பந்தனஞ்செய்துபதியிற்
கிட்டிமண்டபத்தில்வீற்றிருந[illegible]ங்கிளியபிராணியின் கேள்வன்.

(இ-ள்.) எட்டுதிக்கும் ராக்ஷதர்பரவிபட்டணங்களைகொள்ளை யிட்டு ராக்ஷதர்களைப்பிடித்துகட்டிக்கொண்டு தெய்வலோகம்போ ய்புகழ்ச்சியை கொள்ளைகொண்டு தேவமாதரைப்பிடித்து வரிசை யாகக்கட்டிக்கொண்டு தன்னுடையரத்தினபுரிக்குவந்து கொலுவி ருந்தான்வாதாவிசூரன் அந்தநாளிற்கிளிபோன்ற இந்திராணிக்கு புருஷனை தேவேந்திரன் எ-று. (ய)

மேகமூர்மகவான் குழாத்துடனேகி மென்மலர் கழனிற்றூவ
தோகையரவுண ரூழியஞ்செய்ய சுடர்விளக் கெங்கணுந்தோன்ற
வேகமாஞ்சண்ட னுலகினிலுயிரை விரும்பில னிருதியும்பணிசெய்
யா கமாவருண னெங்கணுங்குளிர்ச்சி யதுதரவாயுவுமவுணர்.

(இ-ள்.) மேகத்தைவாகனமாயேறப்பட்ட தேவேந்திரன்தே வகூட்டத்துடனே கற்பகமலரைப்பறித்து வாதாவியின்பாதத்தில் நிறைத்துநிற்க தேவஸ்திரீகளூழியஞ்செய்ய சூரியசந்திரன்விளக்கு ப்போலப்பிரகாசித்துத்தோன்ற எமதருமராஜன்ராக்ஷதருயிரைப் பிடிக்கநினையாமலிருந்தான் நிருதிராக்ஷதரிட்ட வேலைகளைச்செய்ய வருணன்பட்டணத்தை குளிர்ச்சிசெய்ய வாயுவுராக்ஷதருக்கு. ()

முன்றிலைவிளக்கக் குபேரனும்நிதிகண்முறையுடன்வளித்திடவீசன்
வென்றியதான் வரமளித்திடவும் வேதனும்மறை சொல்மாலு
மொன்றியவேவ நற்பணிசெய்ய வோவியமன்னற் களிக்க
துன்றியவரவு லோகனுமதுகொண் டீய்ந்திடவவுணனு மிருந்தான்

(இ-ள்.) வாயுவுவாசல்பெறுக்கவும் குபேரன்பட்டங்கட்டவும் ஈசானியன் வெற்றியாகவரமளிக்கவும் பிரமதேவன் பஞ்சாங்கஞ் சொல்லவும்மகாவிஷ்ணு ஏவற்பணிவிடைசெய்யவும் இலக்ஷ்மிநிதி வளரும்படிசெய்யவும் ஆதிசேஷன்மதுக்குடங்கொடுக்கவும் இந்தப்படி திட்டஞ்செய்திருந்தான் வாதாவிசூரன் எ-று. (கஉ)

கின்னரர்யாழை விரலினலொலித்து கெலிப்புள கீதங்களுரைப்ப
வுன்னியர்சித்த ரிந்திரசால மோதிடவோங்குகந் தருவர்
நன்னயத்தூது நடந்திடவரவ நங்கையர்நடனஞ் செய்கலைமா
தென்னவவ்வுலகில் மறைகளையொலிப்ப வியக்கர்கோ னிணையிலா
திருந்தான்

(இ-ள்.) கின்னரர்யாழைவிரலினலேமீட்டி ராகம்பாடசித்தர் இந்திரசாலவித்தையைக்காட் ... ர்தூதுபோக நாககன்னியர்நடனஞ்செய்ய சரஸ்வதி ... ல்ல இப்படியாக நடத்தி தனக்குஒருவரும் இணையில்லாம ... ருந்தான் வாதாவி எ-று. (கங)

அவனிவாதாவி சூரனேநமோவென் றனுதினந்துதித்திட வவுணர்
குவியெலாமரத்தின கரங்கண்டு கொடுவென விலங்கினைச்சாடி
கவிமணியிழைத்தமுடி புனையரசன் றனக்கு நல்கிடவுளத்தயவாகப்
புவியினைப்புரந்துபுகழ்ந்திடுநாள்புரந்தரர்க்கிடர்செய்யெனமுடியா

(இ-ள்.) பூமிக்குவாதாவிசூரனே நமோவென்றுஎன்னேரமுந் துதித்திடும்படிகட்டளையிட்டு அவுணகூட்டமெல்லாம் பட்டணம் விட்டு காட்டில்போய் மிருகவேட்டையாடி கிரீடமணிந்த வாதாவிசூரனுக்குக் கொடுத்துமனதில் யாதொருபயமுமில்லாமல் இருக்கும்போது தேவர்களுக்குச் அன்றுன்செய்கிற விடறுகளை சொல்லிமுடியாது எ-று. (கச)

## வேறு.

தேவரஞ்சினர் முனிக்குழாங் கலங்கினர்
தேவர்பாவைய ரஞ்சினர்பாலர்க ளொடுங்கினர்பருதி
தாவுகின்றதேர் மதில்வலம் புரிந்திரவதனிற்
கோவில்மண்டபத் தீபமாயிருந்துடல் குறைந்தான்.

(இ-ள்.) தேவர்களனைவரு மனதுகிலேசமாகி வருந்தினார்கள் முனிக்கூட்டங்கள்மனதுகலங்கினார்கள்தேவமாதர்அஞ்சிபயந்தார்கள் அஷ்டதிக்குப்பாலகர் தேகம்ஒடுங்கினார்கள் சூரியன்கோட்டையைச்சுற்றி வலமாகவருவான் இராத்திரியில்சந்திரன் விளக்காயிருந்துதேய்ந்தான் எ-று. (கரு)

அசுரர்கோ னாஞ்ஞை தவறின ரியாக்கையை
பசியைநீக்கிட பக்ஷணம்பண்ணுவர் பயந்தே
கசிகண்ணீர்விட கடவுளர்பண்டி யந்திடுங்காவ
உசிதமாகவே யுலகினை புரந்தன னவுணன்.

(இ-ள்.) இராக்ஷதனானவாதாவிசொல்லை மறுத்தவன் தேகத்தைப் பசிதணியும்படி சாப்பிடுவோமென்று சொன்ன வார்த்தையால்மனதுபயந்து கசிவாகக்கண்ணீர்விட்டழுதுஇருந்தார்கள் பரமசிவன்முன்னாலேயளித்த தேவவருடம் ஆயிரவருஷம்வயது கொடுத்தமட்டும் இரத்தினபுரியை யாண்டுக்கொண்டிருந்தான் வாதாவி எ-று. (கசா)

பசும்பொன்னாடு பார்த்திபன்குழாத் துடன்பகர்வான்
தலையெலும்பினைக் காவடிதூக்கெனச் சாற்றும்
அசுரன்சூரபன் மாவினுக்கதிக மாமிவர்பா
விசையவூழியஞ் செய்திடவளிப்பனோ வீசன்.

(இ-ள்.) பசுமைபொருந்திய பொன்னாடாகியதேவலோகத்தில் தேவர்களுடன்சொல்லுவான் மாமிசங்களையும் எலும்பையும்காவடியாகக்கட்டித்தூக்கி வாதைசெய்யப்பட்ட சூரபன்மாவுக்கு அதிகபாவியாகிய விராக்ஷதனிடத்தில் ஊழியஞ்செய்ய பரமசிவன் வரமளித்தாரென்று சொல்லுவான் தேவேந்திரன் எ-று. (கஎ)

அரக்கிமாதர்க ளரிவையிற் கேவலையிசைப்பான்
செருக்கிவாவென செப்புதன் மனத்தை
யுருகவூணிலாது துயிலுமிலாமலே யுலர்ந்தே
எருதிலேறரன் செயலெனவிட றரவிப்பான்.

(இ-ள்.) இராக்ஷதப்பெண்களுக்குத் தேவர்கள்ஏவல்செய்யும்படி கட்டளையிட்டு செல்வத்தினாலே இறுமாந்துவாடிபோடியென்றுகூப்பிடுகிறது மனதில்தைத்து யுருகி போசனமில்லாமல் நித்திரையில்லாமல் பரமசிவன்செயலிப்படிக்கிருந்த தன்றெண்ணியிருந்தார்கள் எ-று. (கஅ)

முனிவனேயென வத்திரிமகிழ்ந்தின மொழிவான்
புனிதனீந்திடும் வரமதாற்புகழ் சேரவுணன்
இனியகாதை நன்ருயின் றின்னமுமிசைப்ப
யெனப்பணிந்திட சனகனுமியம்பிட மாதோ

(இ-ள்.) இப்படிக்கொத்த வருத்தத்துடனே தேவர்களிருக்க அத்திரிரிஷியே யென்றுசொல்ல மகிழ்ச்சியாகிசொல்லுகிறுர் பரமசிவனளித்த வரத்தினுலே பெருமைபெற்றவாதாவியின் கதையின்பமாயிருக்கிறது இன்னுஞ்சொல்லவேணுமென்று அத்திரிரிஷி கேட்க சனகரிஷி சொல்லுகிறுர் எ-று. (௧௬)

## வாதாவி திக்குவிஜயஞ்செய் சருக்கம்.

முற்றிற்று.

---

ஆகபாயிரம் உட்பட சருக்கம்-எ-இ

திருவிருத்தச்செய்யுள் ௧௭௪.

கடவுள் துணை.

# ஏழாவது.

# நாரதர் தூதுச் சருக்கம்.

வானவர்க் கவுணன் றருவாதை யாற்
றேனு வாழு முலகஞ் செழித்திடா
வீன வமரரி னின்பமுங் குன்றின்
தான நாரத னன்பி னறிந்தனன்

(இ-ள்.) தேவாதிகளுக்கு வாதாவிராக்ஷதசூரன் செய்யப்பட்டவாதயினாலே காமதேனுங் கற்பகவிருக்ஷமும் பொருந்தி தேவலோகமும் செழிப்பில்லாமல் துன்பமடைந்து தளர்ந்து மானமழிந்து இருப்பது நாரதமகாமுனி யறிந்தார் எ-று. (க)

பொன் னகர்க்கணி போன பிழையையும்
முன்னி யுள்ள முருகி யுயர்தவ
மன்னு தேவர்கோன் மண்டபத்தேகியே
மின்னிடைத் திரு மெல்லியைக் கண்டனன்.

(இ-ள்.) தேவலோகத்தின் சிறப்புநீங்கிய குற்றமனதிலேநினைந்துருகி முகமெலிந்து உயர்தவஞ் செய்திருக்கின்ற தேவேந்திரன் விசாலமண்டபத்தி லிருக்கின்ற மின்னற்கொடியிடையை யுடைய இந்திராணியைக் கண்டார் நாரதமகாமுனி எ-று. (உ)

கோத கன்ற குயிலிந்தி ராணியே
வாதை புந்தன் மனத்தி லிருந்திட
வேது காரண மிந்திர னெங்குளான்
றோது கென்ன வறைந்திட லுற்றனள்.

(இ-ள்.) குற்றமில்லாத குரலோசையுங்குயில்போல மொழியையுமுடைய இந்திராணியே உன்னுடையமனதிலிருக்கிற வாதனைக்கென்னகாரணம் தேவேந்திரனெங்கேயெனநாரதருக்குச்சொல்லுகிறுள் இந்திராணி எ-று. (ந)

சூரன் றங்கை பெறுஞ்சுத னுனவன்
நாரி பாகன் மலரடி நண்ணியே

பாரெலாந் தன்வயப் பட வாண்டுமே
சீரிதா மனங் கொண்ட செறுக்கினல்.

(இ-ள்.) கேளும்நாரதரே சூரபன்மனுடைய தங்கையாகியஅ சோமுகி பெற்றபிள்ளை வாதாவிசூரனனவன் உமையவளிடப்பாக ஞகிய பரமசிவனுடைய வரம்பெற்று அவர்பாதத்தை நாடி செக மெல்லாமாளுகிற சந்தோஷத்தினல் எ-று. (ச)

தேவர் கின்னரர் சித்தர் கருடரும்
பாவை மாரும் பணிசெய வைன்றிவர்
தாவில் வஞ்சனைப் பாலம ராபதி
கோலமேகின ரென்றுரை கூறினள்.

(இ-ள்.) தேவாதிகள் கின்னரர் சித்தர் வித்தியாதரர் கெருட காந்தருவர் தேவமாதர் ஊழியஞ்செய்யும்படியாக வாதாவிசூரன் வஞ்சனையாக வெங்கள்ராஜாவை இரத்தினபுரியில் கொண்டுபோயி ருக்கிறன் வாதாவியென்றாள் இந்திராணி எ-று. (ரு)

உள்ளம் வாடி யுரைசெய நாரதன்
கள்ள மின்றி கருத்தி லடங்கிநற்
கிள்ளை யென்றுங் கிளிமொழி கேள்வனை
வள்ள லென்னு மயேஸ்வரன் மீட்பனல்.

(இ-ள்.) இந்திராணி மனமெலிந்து சொல்லக்கேட்ட நாரதர் இந்திராணிக்கு சொல்லுவார் கிளிபோலு மழலைச்சொற் பூண்டவ ளே உன்னுடையவிராஜா முதலானவரையும் பரமசிவன்மீட்டருள் வார் என்றார்நாரதர் எ-று. (சூ)

துய்ய வெண்சிற கோதிமத் தோகையே
ஐயன் றன்னரு ளால மராபதி
யுய்யு மென்ன வுரைபகர்ந் தேகியே
வையனே டமரர்க் கிறை யோதுவான்.

(இ-ள்.) துல்லியமான வெண்மைபொருந்திய சிறகுடைய அ ன்னம்போலொத்த இந்திராணியே அய்யனன பரமசிவனருளின லே அமராபுரிபட்டணத்தில் வாழ்ந்திருக்கும்படிசெய்வார் நீபயப் படாதேயென்றுசொல்லி இரத்தினபுரிபட்டணத்திற்போய் தே வேந்திரராஜனைக்கண்ட நாரதருடனே தேவேந்திரன் சொல்லுகி றன் எ-று. (எ)

நற்றவத் துறும் நாரதரே கேளும்
மெத்த லாதைசெய் சூரர்கள் மேன்மையை

சத்தி வேலன் றவிரயுளமகிழ்
வுற்ற காலையி லுரக பாணியான்.

(இ-ள்.) நல்லதவத்தைச்செய்த நாரதரே மிகுந்தவாதனைசெய்யப்பட்ட சூரபன்மன்முதலான விராக்ஷதருடைய ஆண்மையை சத்திவேலாயுதம்பிடித்த சுப்பிரமணியர் கையிலேயிருக்க அரவாபரணம்பூண்ட பரமசிவன் எ-று. (அ)

அன்பி னுலவ ரசோமுகி பாலனும்
தென்ப தாகியே தேசமும் பெற்றிட
கும்ப னென்னுங் கொடியன் கொடுமையின்
வன்பி னுலுமே வாடி யுறைந்தனம்.

(இ-ள்.) பரமசிவனுடைய அன்பினுலேஅசோமுகியின்பிள்ளை வாதாவி ஜகமெல்லாம்ஆளும்படி வரம்பெற்று பலமுடைய பிள்ளையான கும்பனுனவன்செய்த கொடுமையினுலே இப்படியாக மனம் வாடலாயிற்று எ-று. (கூ)

எங்க ளைப்புரந் தின்ப வருடரும்
மங்கை பங்கரில் வன்பரி னுண்மையை
சங்கரித் திடுந் தந்திரஞ் சாற்றினுற்
பங்கம் விண்டு பலனடைவோ மென்றான்.

(இ-ள்.) எங்களையாளப்பட்ட பரமசிவன் இந்தக் கொடுமையான இராக்ஷதருடைய ஆண்மையைக் சங்காரஞ்செய்யும்வகை எப்படியோ அப்படிச்செய்து எங்களிடரை நீக்கிவைத்தால் எங்களுடையஇடர்நீங்கிபலன்பெறுவோமென்றான்தேவேந்திரன் எ-று.

குரவ நாரதன் கூறுவன் கோத்தவர்
பரமன்றன் னருளா லவுணன் பதி
யுரமும் வேலையில் வீழ்த்து முபாயமும்
பரம னன்பிற் பண்ணுவனென் றேகினுன்.

(இ-ள்.) பெரியவராகிய நாரதர்சொல்லுவார் பரமசிவன்கிருபாகடாக்ஷத்தினுலே இந்தவாதாவினுடையபட்டணம் சேனைகளையுஞ் சமுத்திரத்திலழுந்தும் படியாகச்செய்கிறேன் பயப்படாதே இருமென்று போனுர்நாரதர் எ-று. (கக)

வெள்ளி வெற்பில் வீற்றரு ளீசனை
கள்ள நாரதன் கண்டு கரத்தினுல்

வள்ளற் பாதம் வணங்கி மறையினை
யுள்ள மூன்றி யுருகிநின் ருேதுவான்.

(இ-ள்.) வெள்ளியங்கிரியில் வாசமாயிருக்கிற பரமசிவனை கபடநாடகனாகிய நாரதரிஷிகண்டு வேதங்களினால் துதிசெய்துபோற்றிவெகுதுயரமாகிய துக்கத்துடனேநின்று சொன்னார் எ-று. ()

வேறு.

ஆதியானவனே யகண்டபூரணனே யத்தனே யம்பிகைபாகா
சோதியாய்நின்ற சுந்தரப்பொருளே சுடலையி னடித்திடும்பரனே
நீதிவெள்விடை மேலேறிய விமலாநிமலனே வொளிதருநீற்ற
பாதியாமெய்யி லணிந்தருள்பரனே பரமனேயெனப்பரவினனால்.

(இ-ள்.) சகலதேவர்களுக்குமுதல்வனாகியும்பரிபூரணனாகியும் சர்வஜீவதயாபரனாகியும் உமையவளிடப்பாகமானவரே சுடர்ப்பிரகாசமானசோதியே சஞ்சாக்ஷரமுடையபொருளே சுடலையினடனஞ்செய்தபரமனே வெள்ளைரிஷபமேறிய நிமலனே விபூதிதூளிதமணிந்தபரமசிவனே என்றுவணங்கினார் நாரதர் எ-று. (கங)

ஏத்திடப்பரமன் நாரதன்மீதி லினிதருள்புரிந்து மேலிசைப்பார், நாற்றிசையதனிற் புதுமைகளேதோ நவிலெனநக்கனையிறைஞ்சி, தோத்திரமுரைத்துத் தொகையிடமுடியா தொல்பதியாவையுமளித்துக், கூற்றுவனென்னவொருவனையிருத்திக் குவலைமழித்திடுங் கூத்தா.

(இ-ள்.) தோத்திரஞ்செய்து பணியப்பட்டநாரதரைப் பார்த்துபரமசிவன் அன்புற்றுச்சொல்லுகிறார் எங்கெங்குஞ் சஞ்சரிக்கின்றவராயிற்றே நீரேதாவதுபுதுமையான நடக்கைகள்கண்டதுண்டோ சொல்லுமென நாரதர்சொல்லுகிறார் அளவிடமுடியாத சமுத்திரநடுவில் ஒருபட்டணமுண்டாக்கி அதில்எமனைப்போல ஒருராக்ஷதனைநிறுத்தி யுலகங்களையெல்லாம் அழியும்படிச்செய்கிற திருவிளையாடலைச்செய்த பகவானே என்றார்நாரதர் எ-று. (கச)

புல்லியவவுணனுமதடியேத்திப் புந்தியின்மகிழ்ச்சி கூர்ந்துனது, வல்லியுமிடத்தில் வளர்ந்திடவிடைமேல் வந்தவன்வாட்டாங்களகற்றி, செல்வமுந்தணியுஞ் செழிப்புறநல்க தேவரைச்சிறையினிலடைத்தான், அல்லலையகற்றற வேண்டுமென்றிரங்கு மருமுனிக்கோதுவனரனும்.

(இ-ள்.) புல்லனானவாதாவிசூரன் தேவரீர்பாதத்தைநினைந்து தவஞ்செய்ய அவன்தவத்துக்குகந்து மனமகிழ்ச்சியாகி யீஸ்வரியு

டனேரிஷபமேறிவந்து அவனுடைய தரித்திரமெல்லாம்நீக்கி! அளவற்றசெல்வங்களையும் வலிமையும்வயதுகளையுமளித்த கருவத்தினலேதேவர்களை சிறையிலடைத்து தன்னைத்தோத்திரஞ்செய்ய கட்டளையிட்டான் வாதாவிசூரனை அடக்கும்படிச்செய்து தேவர்கள் துன்பத்தைத்தீர்க்க தயவுசெய்யவேணுமென்ற நாரதரைப்பார்த்துபரமசிவன் சொல்லுவார் எ-று. (கரு)

நற்றவமுயரும் நாரதரவுணன் நகரினிற்புதுமைய தெல்லாம்
சொற்றவராம லுரைத்தருளென்ன சுரர்பணிந்தேத்திய தேவா
ரத்தினநகர மெருநகர்மயனல் நாட்டவந்நகர்க் கிணையுளதோ
பத்திசேர்மதிலுங் கூடகோபுரமும் பரிதியேவிளங்கு மாநகரம்.

(இ-ள்.) நல்லதவமுயர்ந்தநாரதரிஷியே வாதாவிசூரன் பட்டணத்திலுண்டானவைகளைத்தவறுமல்சொல்லுமென்னதேவாதிகள் பணியுந்தேவதேவனே தென்சமுத்திரத்தினடுவில் ரத்தினபுரி மயனுலுண்டாகச் சிருஷ்டிசெய்து அதற்கிணையிந்தப் பதினுலோகங்களிலுமில்லை பந்திபந்தியாய்நெருங்கிய மதிலும் கூடகோபுரங் கோட்டை கொத்தளங்களுஞ் சூரியப்பிரகாசம்போல விளங்கி இருக்கும் மிரத்தினபுரி எ-று. (கசு)

அரக்கன்வாதாவி வெள்ளியையிறைஞ்சி யளவிலாயிரக்குழாமவுணன், பெருக்கமாயளிக்க பெருமலையெனவேபின்னவன் றுணைவரோடுறைந்து, திருக்கிளர்கடல் சூழ்புவியெலாஞ் சூறைசெய்து தேவரைசிறையிட்டே, யுருகுபாலகரை யேவல்செய்யென்னவுளமகிழ்ந்திருந்தனன் மாதோ.

(இ-ள்.) இராக்ஷதனனவாதாவிசூரன் சுக்கிராச்சாரியரை வரவழைத்துப்பாதத்தில் தொழுதிருக்கும்போது அவர்அளவிடப்படாத இராக்ஷதசேனைகளைப் பந்திபந்தியாகநியமித்துஅந்தப்பட்டணத்தைநிறைத்தார் மறுபடியுமவனுக்கு நாலுசகோதரரைஅசோமுகியளிக்க அவர்களுடனேலக்ஷ்மீகரம் விளங்கப்பட்டகடல்சூழ்ந்தபூமிகளெல்லாம் நிறைந்துகொள்ளையிட்டு தேவர்களைப்பிடித்துக்கொண்டுபோய் சிறையிலடைத்துத் தனக்குஊழியஞ் செய்யச்சொல்லி மகிழ்ச்சியாயிருந்தான் வாதாவி எ-று. (கஎ)

இமையவர்மகளீ ரரக்கர்மாதேவ விசைந்திடவெழி லினையகன்றூர்
அமையபொன்னுலகத் ததிசயத்தருக்க ளிருநிதியகலநன்றுமகவர்
னுமையயிராணியுட விழிவொன்மலர்ப் பதவுற்றுநாடும்
சுமையகற்றிடு மாறுரைத்தரு ளென்னசுந்தரப் பொருளியம்பும்.

(இ-ள்.) தெய்வப்பெண்களெல்லாரும் ராக்ஷதப்பெண்சொல்லியபணிவிடைகளைச்செய்து அவரவர்சிறப்புநீங்கிமகாவிசனத்தையடைந்தார்கள் தேவலோகத்திலிருக்கப்பட்ட வைபோகமெல்லாம்நீங்கி தேவேந்திரன்பெண்சாதிஇந்திராணியின்தேகமானதுவாடிப்போய் உம்முடையமலர்ப்பாதத்தை நினைந்துஉன்பேரில் பாரம்வைத்திருக்கின்ற அந்ததலைச்சுமையை நீக்கப்பட்ட உபாயஞ்சொல்லுமென்று நாரதரிஷிகேட்க அழகுபொருந்திய பொருளாயிருக்கின்ற பரமசிவன் எ-று. (கஅ)

நந்தியேயிதென் புதுமைநாரதன் நவின்றனஞ மறிகிலமுன்
னிந்தவாதாவி யிதையமுவாடி யெனைத்துதி செய்தனனிரங்கி
சிந்தையிற்றுயரை யகற்றினனிந்த தீவினைசெய்வது முறையோ
தந்திரஞ்செய்யு மவுணனையடக்குஞ் சாதகமுரையென வறைவான்

(இ-ள்.) நந்திகேஸ்வரனே யிதென்னபுதுமையா யிருக்கிறது நாரதர்சொன்னவிதம் நாமறியோம் முன்னாளையில் வாதாவிசூரன் மனதுகலங்கி யென்னுடையபாதத்தை மனதிற்பதித்து தவஞ்செய்தபரிதாபத்தினாலே மனமிரங்கிஅவன்கேட்டவரத்தைகொடுத்து அவன்துயரத்தைநீக்கி வைத்ததல்லாம லிப்படிக்கொத்த தீவினை செய்யப்பட்ட வரங்கொடுக்கவில்லையே இப்பேர்ப்பட்டமாயங்கள் செய்யப்பட்டவாதாவியை சங்கரிக்கின்ற தந்திரஞ்சொல்லெனநந்திகேஸ்வரர் சொல்லுவார் எ-று. (கசு)

அந்திவண்ணன்ரு ளகத்தினிற்றுதி யகடியனே நீரறியாத
விந்தைகளுளதோ கள்ளனுமாகி விளக்கதுபிடிக்கவு மானீர்
முந்தியவவுணர் வினவியவரமும் மொழிந்திடுமுனது தன்மனதால்
சிந்தையேயறியுந் தேவனேநீர்செய் திருவிளையாடல்காண்பதுவே

(இ-ள்.) அப்போதுபரமசிவன் பாதத்திற்றொழுது தேவரீர் அறியாததந்திரமுண்டோ கள்ளனைவரும்நீரே முன்னாளிலே வாதாவிகேட்டவரங்கொடுத்த உம்முடையமனதேயறியும் ஈசனேநீர் செய்யப்பட்ட திருவிளையாடலை காணலாகுமோவென்றார்நந்திகேஸ்வரர் எ-று. (உய)

அஞ்செழுத்தான வாதியேவவுண னருந்தவப் புதுமையாலிரங்கி
மிஞ்சியவாழ்வை யளித்தவர்நீரும் வெஞ்சமனுதியை யுதைத்து
பஞ்சபர்ணனை விழியெரித்தெழுப்பும் பரமனேயுன்னருடன்னை
மிஞ்சிசெய்திடுமென நந்தியும்பணிய வீசனுமுவகையாலறைவான்

(இ-ள்.) அஞ்செழுத்துபஞ்சாக்ஷரமான ஆதியேவாதாவிசூர ன்செய்த அருமையானதவத்துக்கிரங்கி அளவற்ற வாழ்வளிக்கப் பட்டவர் நீரேயல்லாமல் வேறில்லையே வெஞ்சினமாகஎமனையுதை த்தும் ஐந்துபுஷ்பபாணம் உடையமன்மதனை நெற்றிக்கண்ணாலெ த்தெழுப்பிய பரமசிவனே உம்முடையமனதுக்குச் சரியானபடி செய்யுமென்று நந்திகேஸ்வரர் வணங்கியபோது பரமசிவன் சந் தோஷமாகிச் சொல்லுவார் எ-று. (உக)

## வேறு.

நல்ல கணநாதர் முகநாடி யுரைசெய்வ
ரல்ல வுணனுதிய ரகந்தைக ளடக்க
வில்வலர் மிடுக் கரசியற்கை யிடரான
வல்லவர்கள் சேதி வளமாயுரைமி னென்றான்.

(இ-ள்.) தன்னருகிலேநிற்கப்பட்ட நன்மையான சிவகணநா தர்முகத்தைப்பார்த்து சொல்லுவார் தீதுகள்செய்யப்பட்ட வலி மையையுடைய இரத்தினபுரிபட்டணத்திற்குப் போயவ்விடத்து புதுமையைப்பார்த்துவந்து உண்மையாகசொல்லவேண்டுமென்று சொன்னார் பரமசிவன் எ-று. (உஉ)

இக்கண மத்தேகி யவ்வியக்கர்புக ழோர்ந்தே
புக்குவ மெனத்தொழுது யோந்தனர்களித்தே
யக்கண மிரத்தின மெனும்புரி யடைந்தே
நக்கனை மனத்தினி லிருத்தினர்க ளானார்

(இ-ள்.) சிவகணநாதர் இந்தக்ஷணமேபோய் வாதாவியின்பெ ருமையையறிந்து சொல்லுகிறோமென்றுபாதத்திற்றொழுதுமனது களிப்பாக அந்தக்ஷணமே இரத்தினபுரிபட்டணத்திலே சிவகண நாதர்கள்சேர்ந்து பரமசிவன்பாதத்தை மனதிலே நினைத்தார்கள். எ-று. (உங)

மாசகலும் வெண்மையுரு மன்னு நகரத்தில்
பேசவுண ராதிகள் பலத்துறு செருக்கும்
வாசவர்க ளாதியரு மாதரு மிளைத்தே
நீசருரு வானதுமன் னேமிசைகள் கண்டார்.

(இ-ள்.) களங்கமில்லாமல் வெண்ணிறமாய்பிரகாசிக்கின்றரத் தினபுரி பட்டணத்திலிருந்து வாழப்பட்டவாதாவியின் பராக்கிரம மும்மனக்கெலிப்பும் தேவாதிகளும் அவர்கள்ஸ்திரீசனங்களும்எவ

ல்செய்யசரீரம் இளைத்துநிறங்குலைந்து நீசரூபம்போல் இருப்பதை யுங்கண்டார்கள் சிவகணநாதர்கள் எ-று. (உ௪)

புண்டரீக வேதமறை மங்கைபுக ழோத
சண்டனுள மஞ்சியிரு சாமரை யிரட்ட
கொண்டனிற வாதாவி வீரர்கொளு மாண்மை
மண்டலமெலாஞ் சிறையில் மன்னுவதுங் கண்டார்.

(இ-ள்.) தாமரைமலரில் வாழ்கின்றபிரமதேவன் வேதஞ்சொல்ல சரஸ்வதிவேதத்தினாற்புகழ எமதர்மராஜன் பயத்துடனேசாமரைவீச கார்மேகம்போன்ற நிறமுடையவாதாவியின் ஆண்மையினாலே உலகங்களையெல்லாங் கொள்ளையடித்து சகலவைபோகமெல்லாங்கொண்டுவந்து வைத்துக்கொண்டிருப்பதைக்கண்டார் கணநாதர் எ-று. (உ௫)

மாமதிலி னாடரங்கின் வாயல் சிகரத்தி
லேமகுட மின்னவு மிரவுபக லின்றி
மாமணி குடத்திலு மலர்ப்பொழில் வகுத்தார்
சோமன் மண்டலத்துலவு தோரணமுங் கண்டார்.

(இ-ள்.) மேன்மையானமதிலும் ஆடரங்குவாசலும் கோபுரசிகரத்தில் தங்கக்குடம்புரமாசிக்கிறதும் இரவென்றும்பகலென்றுமில்லாமல் ரத்தினமணிக்கும்பமும் புஷ்பச்சோலை முதலானதும் சந்திரமண்டலம்போ லுலாவுகின்ற மகரதோரணமுங் கண்டார்கள் எ-று. (உ௬)

அரக்கருறை மாளிகை யகத்திலள வாகா
பெரியமம மேருவினை பேசவரி தன்னார்
அரக்கியர் ஸ்தனங்க ளளவாகு மதுபேசில்
முருக்குவர விலங்குயிர் முடித்திட வடிப்பார்.

(இ-ள்.) வாதாவிராக்ஷதனிருக்கப்பட்ட மாடமாளிகை கூடகோபுரங்களை யின்னபடியென்றுஅளவிட்டுச்சொல்லக்கூடாதுபெரியமகாமேருமலையை இந்தராக்ஷதாளுக்கு உவமானமாகப் பேசுவார்கள் ராக்ஷதிகளுடைய ஸ்தனபாரத்தின்நீளமானதைசொல்லுமிடத்தில் அந்தஸ்தன்னியத்தை தானேகயிருகமுறுக்கி மிருகங்களையடிப்பார்களப்படியான புதுமையைக் கண்டார்கள் எ-று. ()

பந்திமலை யேயவுணர் பாரினி லுவாவும்
விந்தையு முகங்கள் முசம்வேறுருவு மன்ன
தந்தியரி சீயமுந் தகரெலி கழுக்கள்
கந்துகங் கழுதைபுலி யென்னுருவங் கண்டார்

(இ-ள்.) பந்தியாகமலைகளெழுந்திருந்து நடப்பதுபோலபூமியில்ராக்ஷதர்கள்நடக்கிறது அவரவர்முகங்கள் வேறுவேறாகவிருக்கிறது எப்படியென்னில் யானைமுகஞ் சிங்கமுகம்யாளிமுகம் ஆட்டுமுகம் எலிமுகம் கழுகுமுகங் குதிரைமுகங் குரங்குமுகங்கழுதைமுகம்புலிமுகம் இப்படியாகிய ராக்ஷதர்களையுங்கண்டார்கள்எ-று.

ஆயிரம் புயங்களு மைஞ்ஞூறு சிரமான
தாயிரஞ் சிரங்க ளிரண்டா யிரங் கரங்கள்
மாயிரு விசும்பினை மறைக்குமுட லென்றே
பேயவுண ராண்மையெவர் பேசுவார்கள் மாதோ.

(இ-ள்.) ஆயிரந்தோளும் ஐந்நூறுதலையுடையபேர்களும்ஆயிரந்தலையும் இரண்டாயிரங்கைகளுமானபேர்கள் ஆகாசத்தையும்பூமியையும் ஒருராக்ஷதனுடலமே மறைத்துப்போடுகின்றது உடல்மிகுத்தபேயாகிய ராக்ஷதனுடையஆண்மையை யாவரும் பேசுகிறதற்குக் கூடாதென்றார் சிவகணநாதர் எ-று. (உகூ)

ஆதியெனு சேடனு மளக்கவரி தான
தீதவுணர் சேனைநிலை யீசருங் களிப்பா
சோதியர னின்னருள்கள் சொல்லமுடி யாதென்
றோதியொரு வர்க்கொருவர் யுரைத்ததி சயிப்பார்.

(இ-ள்.) உலகங்களை ஆயிரஞ்சிரசினால் தாங்கிய ஆதிசேஷனுடைய விரண்டாயிரம் நாவினாலுஞ்சொல்லவரிதாகிய ராக்ஷதசேனையைக்கண்ணாலே பரமசிவன்கண்டால் மகாஆச்சரியப்படுவார் பரமசிவன் அருள்களைச்சொல்ல முடியாதென்று கணநாதர் ஒருவர்க்கொருவர் சொல்லி அதிசயப்பட்டார்கள் எ-று. (௩௰)

வங்கைமிகு வாகிய வாதாவி யவன்றேவி
யிங்கித விலாசமு மெழிற்கொலுவி நேரும்
மங்கையா நடனமிடு வானவர் கள்பாட
துங்கமிகு வானையொடு சூழ்வனவுங் கண்டார்.

(இ-ள்.) தேவர்கள் முனிவர்கள்பேரில் மிகுதியானபகைகளைமனதில்வைத்திருக்கின்ற வாதாவிசூரன்பெண்சாதி சொக்ககன்னியின்சிறப்பையும் கேளிவிலாசமும் மண்டபத்தில் தெய்வரம்பைகள் பரதநாட்டியசங்கீதம்பாடுகிறதையுங் கண்ணாலேகண்டார்கள் கணநாதர்கள் எ-று. (௩௧)

விரிவுதிண் புயம்விளங்கு வேந்தவுணன் பாலர்
விரிமலர் வதனமும் மின்கொடி மின்னார்கள்

விரிமலர் சரங்களென மன்கரமெடுத்தே
விரிவுற வணியும் விநோதமு மறிந்தார்.

(இ-ள்.) விரிவாய்கண்டிருக்கப்பட்ட திரக்ஷியாகியபுஜகீர்த்தி விளங்கப்பட்ட ராசாவாகிய வாதாவிசூரனிடத்திலே விரிந்தமலர் முகமுடைய மின்னற்கொடிபோன்ற ஸ்திரீகள்விரிந்தமலரைக்கை யினலெடுத்து அகலம்பொருந்திய மார்பிலேசாத்துகின்ற விசித்தி ரங்களைக் கண்டார்கள் எ-று. (௩௨)

நறும்புகை யணிந்தகுழல் நாரியர்க ளின்று
நறும்புகை யன்று நரம்பென வுதிர்ந்தார்
நறும்பணி யணியுடலின் மொய்க்கவசம்
நறும்பகைவ ரேவலை நடத்தினர்க ளென்றான்.

(இ-ள்.) நல்லசந்தனக்கட்டை அகிற்கட்டை சாம்பிராணி யிவைதையளவில்போட்டு வாசனையோடு வருகிறபுகையைதங்களுடைய கூந்தலில் வாசனைகட்டுகின்ற தெய்வமாதர்களினுடைய தேகமெல்லா மிருகத்தினுடைய நரம்புயெலும்பு தசையுதிரம் இந்தநாற்றம் நாறும்படியாக முத்துரத்தினமணியப்பட்டதேகத்தில்உதிரத்தினலழுக்கடைந்தூஈய்கள்மொய்த்திருக்கிறதினலும்தங்களுக்குப்பகையாகிய வீனசாதிகளுக் கேவற்பணிவிடைசெய்து முகம்வாடுதலைப் பார்த்து சிவகணநாதர்கள் பேசிக்கொள்வார்கள் எ-று. (௩௩)

நற்றவம் புரியு மகவா னுளமும் நாணி
நற்றவம் புரியவுணன் நற்பத மணிந்தார்
நற்றவ முனிவர்கள் நயங்களை யகற்றி
நற்றவ மென்னுதனை தொழுதிடவுங் கண்டார்.

(இ-ள்.) நல்லதவஞ்செய்கின்ற தேவேந்திரன்மனதுநாணிவா தாவிபாதத்தில்தொழுது நிற்கிறதும்நல்லதவமுடைய முனியீஸ்வ ர்தங்கள் தவம்நீங்கி வாதாவிராசனே யும்முடைய வனுக்கிரகம் வேணுமென்றுசொல்லி வணங்குவதும் மற்றவேளையில்பரமசிவனை நினைந்துதொழுகிறதையுங் கண்டார்கள் சிவகணநாதர்கள்எ-று.()

எண்டிசையின் பாலரி னெழிலிசையுங் குன்றி
எண்டிசை பரவுமவ் வியக்கர் நகரத்தில்
அன்றியகம் வாடினர்க ளாகியே வான்றாள்
அன்றியுரை செய்வமென் றகத்தினி லுணர்ந்தார்.

(இ-ள்.) அஷ்டதிக்குப் பாலர்களுந். தங்களுடனிறங்குலைந்து தைரியங்குன்றி ராக்ஷதனிடும் வேலையைச்செய்து ரத்தினபுரியி

லிருக்கிற கொடுமைகளைக்கண்டு பரமசிவனிடத்தில் சொல்லவேண்டுமென்று மனதில்நினைத்தார்கள் சிவகணநாதர்கள் எ-று. ()

அம்புவி யவுணர்கோ னனைவனவாரதன்
வம்புகை குண்டலன் விசைமகோனுடன்
தம்பி யென்றுணர் மகோதரனுந் தாட்டிலான்
அம்புவி யடங்கலுஞ் சூறை யாடுவான்.

(இ-ள்.) இரத்தினபுரிபட்டணத்திலிருந்து சகமெல்லாம் அரசாளுகின்ற வாதாவிசூரன் தம்பிவாரதன் அக்கினியெழும்புங்கண்ணுடைய குண்டலன்மகோன்மகோதரன் இந்தநாலுபேருந்தடையில்லாம லீரேழுலோகமும்போய் கொள்ளையடித்து அநேகரைக் கொன்றுவருவார்கள் எ-று. (௩௬)

உடுக்கண முதிர்ந்திட வுரக ரேங்கிடப்
படைத் தலைவரோடு பதி யகன்றுபண்புடன்
நடுக்கடல் துயின்றருள் நார ணன்பதி
திடுக்கிடச் சூறையாய் திரும்பி வந்தனர்.

(இ-ள்.) நட்சத்திரமுதிரும்படியாக வானலோகமுதலாகியது மேங்கிவாடவும் பராக்கிரமம்பொருந்திய படைத்தலைவருடனே வாதாவிதம்பிமார்களுடனே கூடிப்போய் திருப்பாற்கடலில் பள்கொண்டருளிய மகாவிஷ்ணுவின் வைகுந்தம்போய் கொள்ளையிட்டு அங்குள்ள தெய்வங்கள் திடுக்கிட அங்கிருக்கும் வைபோகங்களைக் கொண்டுவந்தார்கள் எ-று. (௩௭)

அரன்பதி நாளைபோய்ச் சூறை யாடியே
பரமனைப் பிடித்து நம்பதியின் வாசலில்
வரமளித்திடுமென வைத் துருக்கினாற்
பெருந்தவ மாமென பிதற்ற லாயினான்.

(இ-ள்.) பரமசிவனிருக்குங் கைலாயத்துக்கு நாளைப்போய் அங்கிருக்கும்வைபோகங்களைக் கொள்ளையடித்து பரமசிவனையும் பிடித்துக்கட்டிக்கொண்டுவந்து நம்முடையகோட்டைவாசலில்காவல்வைத்து நல்லவரங்கொடுத்து இருமென்றுவைத்தால் நமக்கு மேலாகிய பேரில்லாமலிருக்கலாமென்ற சொல்லைகேட்டு சிவகணநாதர்கள் ஆலோசனைசெய்தார்கள் எ-று. (௩௮)

அரன்கண நாதரும் மகத்தி லுற்றவர்
உரங்கள்போற் கண்டில மொருவரா லிவர்

சிரந்துணி யாதென சிந்தை யெண்ணியே.
பரமனுக் குரைக்கவே பறந்திட்டார்களே.

(இ-ள்.) இப்படியிந்தவசனத்தைக்கேட்ட மாத்திரத்திற் சிவகணநாதர் மனதிலெண்ணுதெல்லாமெண்ணி இந்தராக்ஷதனுடைய பராக்கிரமத்தைப்போல நாமெங்குங்கண்டதில்லை யாவராலுஞ்செயிக்கக்கூடாது இந்தக்ஷணமேபோய் சொல்லுவோமென்றுபறந்து போனார்கள் சிவகணநாதர்கள் எ-று. (௩௯)

சுத்திய மதிலுந் தோரணங்கொள் வீதியுஞ்
சத்த சாகரமுந் தரணி தாண்டினர்
சித்தமீ துவகையாஞ் செம்ம லாகிய
வத்தன்வாழ் கிரியினி லணுகி னாரரோ.

(இ-ள்.) இரத்தினபுரிபட்டணத்தைச் சுற்றியமதிலுந் தோரணங்கட்டிய வீதியுங்கடந்து சமுத்திரமுந் தேசங்களும்கடந்து பரமசிவனிருக்கும் வெள்ளியங்கிரியிற்போய் சேர்ந்தார்கள் சிவகணநாதர்கள் எ-று. (௪௰)

நாரியை யிடத்தினிற் சுமந்தநாயகன்
மூரிமுப் புரமெரி முத்தன் கீர்த்தியே
சேரவே யவுணரின் றீய வன்னகர்
சீரினை யோர்ந்தனஞ் செய்ய பாதனே.

(இ-ள்.) உமையவளை யிடப்பாகத்தில்வைத்த பரமசிவனேமுப்புரத்தை யெரித்தருளிய தேவனே தேவரீருடைய அருளினாலே வாதாவி ராக்ஷதனுடைய ரத்தினபுரிபட்டணத்தின் சிறப்பையுங் கண்டுவந்தோம் சுவாமி செவந்தபாதனே என்றார்கள் சிவகணநாதர்கள் எ-று. (௪௧)

பதியுட னுமைப் பிடித்திடப் பகர்ந்தனன்
சதிசெயு மவுணரை சாட லாகுமோ
நதியணி நாதனே நாளை நம்பதி
யிதமிலா சூறைக ளாட வெண்ணினன்.

(இ-ள்.) சுவாமிதேவரீருடையகைலாசகிரியைகொள்ளையிட்டு தேவரீரையும்பிடித்துக் கட்டிக்கொண்டுவரநாளைப்போவோமென்றுசொன்னதுகேட்டு சீக்கிரமாகவந்தோமென்றார்கள் சிவகணநாதர்கள் எ-று. (௪௨)

கரிமுகம் புலிமுகங் கரடி வானரம்
அரிமுக மாயிர மடங்க லொன்றதாம்

பரிமுகம்படைத்தவர் பகர் கணக்கிலார்
புரியவன் செய்வது புதுமை கேழ்ப்பதோ.

(இ-ள்.) ஆனைமுகம் புலிமுகங் கரடிமுகங் குரங்குமுகஞ்சிங்க முகம் இப்படிப்பட்ட முகமுடைய ராக்ஷதக்கூட்டங்களை ஆயிரஞ் சிரசும்இரண்டாயிரங்கைகளுடையவரையுங்குதிரைமுகராக்ஷதரை யுங்கணக்கிடக்கூடாதபேர்களும் ரத்தினபுரியினுடைய புதுமைக ளையுஞ் சொல்லிமுடியாதென்றார்கள் சிவகணநாதர்கள் எ-று. ()

ஓரசுரன் செயலுவரி குன்றினாற்
பேரசுர குழாம் பேச வல்லதோ
நேரிழை யார்தன நீள மைம்பது
தூர யோசனை யதாத் துன்பஞ் செய்குவார்.

(இ-ள்.) ஒருராக்ஷதன் சமுத்திரத்தின் சலத்தைக்குடித்தானா னால இன்னமளவிடமுடியாத ராக்ஷதர்கள் இன்னமெப்படிக் கொ த்தவர்களாயிருப்பார்களோ சொல்லமுடியாது ஒருராக்ஷதிஸ்தன் னியமைம்பதுயோசனை நீளமிருக்கிறபடியினாலே அந்தராக்ஷதிகள் அந்தஸ்தன்னியத்தினாலே காட்டிலிருக்கப்பட்டமிருகங்களைவதை ப்பார்களென்றார் சிவகணநாதர்கள் எ-று. (௨௪)

பொன்னினா டெனப் புகழ்ச்சிசெய்குவார்
மின்னொளி மதிலொடு மேடையுள்ளது
வன்னமாஞ் சித்திர வீதி வண்மையும்
மன்னிய மயனவன் மாண்பிற் செய்தனன்.

(இ-ள்.) தெய்வலோகமென்று ரத்தினபுரிபட்டணத்தையாவ ரும் புகழ்ச்சிசெய்வார்கள் மதிலும்மேடைகளும்வகைவகையாகிய சித்திரவீதியும் மயனானவன் அன்பினாலேசெய்துவைத்தான் என் றார்கள் சிவகணநாதர்கள் எ-று. (௨௫)

சந்த்ரா தித்தர் மதிலிற் சார்ந்திடார்
இந்திரன் பிரமன்மா லிதையங் குன்றினர்
அந்தகன் பதியிலு மவுண ராபதி
நிந்தைசெய் திடுவனோ நிருதர் மாய்ந்திடார்.

(இ-ள்.) சந்திரசூரியர் அந்தப்பட்டணத்தின்மேல் போகக்கூ டாது தேவேந்திரன்முதல்யாவரும்பயந்து பணிகிறார்கள் பிரமா விஷ்ணுஉபசாரமாய் முகம்வாடிநிற்கிறார்கள் எமதருமராஜன் அந் தப்பட்டணத்தில் அதிகாரமிஞ்சினபடியினாலே ராக்ஷதருயிரைப் பிடிக்கப்பயந்தார்என்றுசிவகணநாதர்கள்சொல்லுகிறார்கள்எ-று.

அவுணரின் றிணியினை யகத்தி லெண்ணினர்
பவணமி லெம்முயிர் பதைக்கு தையனே
புவன ரக்ஷக ஞர்புந்தி மாய்ந்திடா
வென்வலி யான்மடிந் திடுவரே வென்றார்.

(இ-ள்.) வாதாவி யிராக்ஷதனுடைய சேனைக்கூட்டத்தின் வலிமையை எங்கள்மனதில்நினைந்தால் உயிர்பதைபதைக்கிறது அப்பனே இந்தபுவனமெல்லாம் ரக்ஷிக்கின்ற ஸ்ரீமந்நாராயணனுகியவைகுண்டபதியான மகாவிஷ்ணுவினுலும்மடியாதபாவியானவாதாவிசூரன் எவர்கையினுலே மடிவானேவென்றார் சிவகணநாதர்கள்.()

கொன்றை சூடினடி குலவி யேத்தியே
நன்றிசெய் நாரத நவின்ற யாவையும்
மன்றலந் தொடையணி மாது பங்கனே
யின்றம ரர்க்கரு ளீயு மென்றனன்.

(இ-ள்.) கொன்றைமாலையைச்சடையிலணிந்தபரமசிவனைத்துதிசெய்துவணங்கி நாரதமகாரிஷிசொன்னது சரியாயிருக்கிறதென்று கலியாணமாலையணிந்த உமையவளிடப்பாகனே தேவாதிதேவர்களுக்கு அருளளிக்வேணுமென்றார்கள்சிவகணநாதர்கள் எ-று.

அத்தியின் றேலணி யரனிவ் வாசகம்
யுற்றவை யுளர்ந்துணந் துவகை யாகினர்
நற்றவ முனியொடு நவிலு மீசனும்
சொற்றவா லோசனைச் சுருக்கிச் சொல்லுவான்.

(இ-ள்.) ஆனையையுரித்துப்போர்த்த பரமசிவன் கணநாதர்கள் சொல்லியவார்த்தைகளை மனதிற்றெளிந்து சந்தோஷமாகிநல்லதவமுடைய நாரதரிஷியுடன்சொல்லி ஆலோசனைசெய்கின்ற சரிதையைச் சொல்லுவாம் எ-று. (சக)

## நாரதர் தூதுச் சருக்கம்

முற்றிற்று

---

ஆக பாயிரம் உட்பட சருக்கம் அ-இ

திருவிருத்தச் செய்யுள் உஉக.

உ

கடவுள் துணை.

# எட்டாவது

# சிவஞாலோசனைச்

## சருக்கம்.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அந்தமாவிகம்பு படர்ந்திடுமவனி யளித்திடுமயன் சிருட்டியினால்
உந்தியூர்வன தத்துவநடப்பனவோடுயர்பறவைகண்முதலினுக்குந்
தந்தைதாய்காக்குந்தயாபரனடியை சார்ந்திடுகணங்களுமுயர்ந்த
நந்திநாரதர்கள் பதஞ்சலிமுதலாய் நாடிடநாதன் வீற்றிருந்தான்.

(இ-ள்.) அழகுமிகுந்திருக்கப்பட்டஇந்தபூமியில்பிரமதேவன் சிருஷ்டித்ததுஅதற்கெல்லாந்தகப்பனாய்காக்கப்பட்ட பரமசிவனடியைக்காத்திருக்கின்ற சிவகணங்களும் நந்திகேஸ்வரர்நாரதர்பதஞ்சலி வியாக்கிரமபாதர் இன்னமளவிடக்கூடாத பரிவாரத்துடன் பரமசிவன் கைலையங்கிரியில் வீற்றிருந்தார் எ-று. (க)

கருணையாலிமையோர்கரியவன்கஞ்சன் காலனோடஷ்டபாலகரும்
வருகவேநினைந்தா ரவரவரவுணர் வாள்விழிதுஞ் சுதல்காத்தே
பெருமைநாயகன்ற னடியிணைசார்ந்து பிஞ்சகாவெங்களைக் காத்த
மருமலர்பாத முயலகற்குதவு மாறுபோலளித் தருளென்றான்.

(இ-ள்.) பரமசிவன் தயவுவைத்துதேவாதிகளனைவரும்பிரமா விஷ்ணு இருடிகள்முனிவர்கள் எமன்முதலான அஷ்டதிக்குப்பாலகருமிவ்விடம்வந்து சேரநினைத்தார் அந்தக்ஷணத்திலே வாதாவிராக்ஷதசூரன் நித்திரைசெய்யும்படியுரைத்தார் நித்திரை சோதித்துபெருமையான பரமசிவனுடைய பாதத்திலெல்லோரும் பணிந்துசிவசிவா சிவனேஎன்று தோத்திரஞ்செய்துமுன்னாளில்தாருகாவனத்துரிஷிகள் அனுப்பியமுயலகனுக்குமதுபாதந்தந்ததுபோல எங்களுக்குமளிக்கவேணுமென்றார் தேவர்கள் எ-று. (உ)

யாவருங்கைலை யடைந்திடுமளவே யாங்கவர்க்கர னருள்புரிவார்
தேவரேமாலே செய்யபங்கயத்து சேர்ந்திடுந் தேவரேவுலக
சீவனையெல்லாங் கவருமந்தகனே திவலைசூழ்வாரிமே லவுணன்
கோவிலிற்குடியா யிருந்திடுமவனாற் குறித்தவை செய்திடலாமோ.

(இ-ள்.) தேவர்முதல்யாவரும்வந்து நிறைந்தபோது பரமசிவன் அருள்புரிந்து தேவர்களேவிஷ்ணுவே பிரமனே உலகசீவர்களைக்கொல்லும் எமதருமனே நீங்களனைவரும்சமுத்திரநடுவிலிருக்கும் வாதாவிராக்ஷதன் விடுதியில்போயிருந்து அவனிட்டவேலைசெய்திருந்தீர்களே அப்படியிருக்கலாமாவென்று கேட்டார் பரமசிவன் எ-று. (ங)

ஐயனேவரனே யடியவர்க்கெளியா யத்தனேவந்தி வண்ணநின்
செய்யபங்கயத்தா டொழிந்திடுமெங்க டீவினையகற்றிடுந் தேவே
வைகஞ்சூறை கவர்ந்தவாதாவி வலிதனையடக்குமோர் சூக்ஷி
துய்யனேயுரையு மெனக்கரர்மிகவுந் துதித்திருந்தார்க ளக்காலே.

(இ-ள்.) பரமசிவன்சொல்லக்கேட்ட தேவர்கள்எங்களுக்கெல்லாந்தகப்பனானவனே சுவாமிஉம்முடைய சிவந்தபாதத்தைதொழுத எங்கள்வினையை நீக்கினதேவனே இந்தபூலோகத்தை கொள்ளையடிக்கப்பட்ட வாதாவிசூரனுடைய பராக்கிரமத்தை யடக்குகிற உபாயஞ்சொல்லவேணுமென்று துதித்து தோத்திரஞ் செய்தார் தேவர்கள் எ-று. (ச)

அத்தனுமுளத்தி லடங்கிடாவுவகை யாகியேயமரருக் கருள்வார்
சித்தமீதுறையுந் தீதெலாமகற்றிசெம்மலையினிற்சிறப்புடனமர்வீர்
அத்திசூழவுணன் பாலணுகாதீ ரென வபயஸ்தம ளித்த
உத்தமனடியைதுதித்தனரிமையோருவகையாங்கடலமிழந்தனரே.

(இ-ள்.) பரமசிவனுள்ளத்திலடங்காத மகிழ்ச்சியாகி தேவர்களுக்கருளுவார் உங்கள்மனதிலிருக்கப்பட்ட குற்றங்களெல்லாம் நீக்கிசெம்மலையாகிய மேருவிற்போய் சிறப்பாய் செழித்திருங்கள் ராக்ஷதன்வாதாவியினிடம்போகவேண்டாமென்று அபயஸ்தமளித்தார் தேவரனைவரும் பரமசிவனைத் தோத்திரஞ்செய்து மகிழ்வுடன் இருந்தார்கள் எ-று. (ரு)

அப்பொழுதரனுங் கொடியவாதாவி யவனிவாழாண்டு கண்டுரைக்கும், கைப்பிடிகணக்கு சித்திரகுப்தனைக்கருத்தினி னினைத்திடக்கடுகி, மைப்படுகின்ற வரனடியிறைஞ்சமறலியின் கணக்கினை நோக்கி, யிப்புவியனைத்துஞ் சூறைகொளவுணற் கெவ்வளவாண்டினியென்ன.

(இ-ள்.) அப்படியிருக்கிறநாளையில் பரமசிவன் சொல்லுவார் வாதாவியினுடையவயதுகண்டு சொல்லப்பட்ட சித்திராபுத்திரனை வரும்படிநினைத்தார் அந்நினைவையுமறிந்து நொடிப்பொழுதில்வந்

துபரமசிவத்தைப் பணிந்துநிற்கின்ற எமனுடையகணக்கப்பிள்ளை யைப்பார்த்து பூலோகமெல்லாங் கொள்ளைகொண்டவாதாவிக்கெ த்தனைவயது அதிலெவ்வளவு சென்றன மிச்சம்எவ்வளவிருக்கின் றனசொல்லென்ன சொல்லுகிறான் சித்திராபுத்திரன் எ-று. (சு)

கணக்கினிற்றெளிந்தே கழறுமினென்னகடவுளையிறைஞ்சியே மொழிவா, னிணையிலாதேவவருஷமாயிரமா மிவனுக்கிங்கணுயர்ந் தவரின்றி, பணியினிற்றுயின்றோன் வென்றிடமுடியாப்பரமனேப ண்டருளளித்த, குணமுளவாண்டுங் குறுகினதினிசெங்கோல்களுந் தீர்ந்தன வென்றான்.

(இ-ள்.) கணக்கைப்பார்த்து சொல்லுமென்றுசொன்ன பரம சிவனைப்பணிந்து சொல்லுவான்சித்திராபுத்திரன்சுவாமிஒருவரும் இணையில்லாததேவாதிகளுக்கு நூறுவருஷஞ்சென்றால் பரமாயுள அப்படியிருக்கப்பட்ட தேவவருஷம்ஆயிரவருஷம் வயதுடையவ னிந்தவாதாவி இச்சூரனுக்குச் சரியானபேர்யாவருமில்லை ஆதிசே ஷன்மேல் பள்ளிகொள்ளு மகாவிஷ்ணுவினாலும் அவனைசெயிக்க முடியாது தேவரீர்கொடுத்த வரமானவயதுபோயின்னங் கொஞ்ச மிருக்கின்றது என்னுடையகணக்கின்படி சொல்லிவிட்டேன் என் றான் சித்திராபுத்திரன் எ-று. (எ)

கமலனைநோக்கி கழறுவானந்தகயவன்தாய்க் கருவுதித்த, த மையுளமிசையே யவளவேகாத்தா லடங்குவானறையெனவேதன், விமலனையிறைஞ்சி விதித்தநூறாண்டில் வெய்யவன்சுதனுல கடை வன், சமன்றனையுதைத்த தாளனேயும்மாற்றழைத்ததாயிரம்மிசை யென்றான்.

(இ-ள்.) பிரமதேவனைப்பார்த்துசொல்லுவார் அந்தவாதாவி ராக்ஷதச்சூரன் அசோமுகிவயிற்றிலே உற்பத்தியாகிறபோதுஅவ னுக்குவயது எவ்வளவுஉண்டுபண்ணிநீர் யாவர்கையினாலேமடிவா ன்அதைச்சொல்லுமென்ன பரமசிவனைபிரமதேவன்பணிந்துநான ளித்தவயது நூறுஞ்சென்றவுடனே சூரியன் குமாரனான எமனு டையலோகத்துக்குப் போய்விடுவான் தேவரீர்அளித்தது தேவவ யது ஆயிரவருஷமாகுமென்றான் பிரமதேவன் எ-று. (அ)

சங்கரித்திடுவா னறிகிலமிசைந்த சங்கரிபாகனின் னுளமே, வெங்கள்பெம்மானே யினையடியிறைஞ்சி யின்பமாயருண்மழைசுர ந்து, செங்கண்மால்வதன நோக்கியேயுரைப்பார் செகமெலாமுன தருண்மாய்கை, தங்கியகபடநாடகசூத்திர தயித்தியற்காலனேயெ ன்றார்.

(இ-ள்.) வாதாவிராக்ஷதனைசம்மாரஞ்செய்யப்பட்டபேர்இன்னாரினியாரென்று வெனக்குத்தெரியாதுதேவரீருள்ளத்துக்குத்தெரியும் எங்களையாளப்பட்டசுவாமியென்று பணிந்தபோது சந்தோஷமாகி அருண்மழைபொழிந்து சிவந்தகண்ணுடையமகாவிஷ்ணுவின்முகத்தைப்பார்த்து சொல்லுவார் ஜகமெல்லாம் உம்முடையமாய்கையேயல்லாமல் வேறில்லையேயென்றார் ப்ரமசிவன் எ-று. ()

என்றிடத்திருமாலரு ளினிற்றெளிந்தே யியம்புவாரத்தனேகரத்தி
மின்றிகழ்சிலையான்மடிந்திடானவன்பால்மேவிடவேலினாலாகா[ன்
வொன்றியபுவன கதிர்திசையதனி லுயர்தவம்புரி சம்புமுனியே
நன்றுளமகத்திலுன கழல்விழிநீர் நலங்கிடவுதிக்கும்நாயகனே.

(இ-ள்.) பரமசிவனிப்படி சொல்லக்கேட்ட மகாவிஷ்ணுமனந்தெளிந்து பரமசிவன்கைவில்லினாலுமடியான் சுப்பிரமண்யராலும்வெல்லப்போகாது ஆனாலொருகாரியஞ்சொல்லுகிறேன் என்னவென்றால் வடதிசையிலேமேன்மைபொருந்திய தவஞ்செய்யப்பட்ட சம்புமகாரிஷியின்வேள்வியிலே உம்முடையநெற்றிக் கண்ணிலெழுப்பியநீரை யாகுதிகொடுக்க அதிலுதிக்கின்றநாயகனானவராலென்றார் மகாவிஷ்ணு எ-று. (ய)

வன்னியபூமன்சிலையினா லவுணன்மடிவன் மற்றொருவரால்மடியான்
பன்னகஞ்சூடும்பரமனேயென்னாற் பகர்ந்திமுடியுமோவும்மால்
இந்நிலையடைந்தா லுன்னையுமாள்வா னிப்பொழுதேதவமுனியால்
மன்னுவோமென்றுவுளமகிழ்ந்தேத்த மலைமகள்கேள்வனுநவில்வா

(இ-ள்.) வீரவன்னியமகாராஜாவின் கைப்பாணத்தினாலேவாதாவிராக்ஷதசூரன் மடிவானேயல்லாமல் மற்றொருவராலேயு மடியான் சர்ப்பாபரணஞ்சூடப்பட்ட பரமசிவனேயென்றார் தோற்றினமாத்திரமுரைத்தேன் தேவரீராலேஇப்பேர்ப்பட்டபலனையடைந்தான் உம்மையும்பிடித்துப்போ யேவல்செய்யும்படியாக யோசனையாயிருக்கிறான் இந்தக்ஷணமே தவஞ்செய்யப்பட்ட சம்புமகாரிஷியிடத்துக்குப் போவோமென்று ஸ்ரீமந்நாராயணரான மகாவிஷ்ணுசொன்னயோசனை கூடிவருமென்று சொன்னார்பரமசிவன்.()

ஆதியாங்கடவுள் கண்களிகூர்ந்தே வமரருக்குரைப்பரின் சூக்ஷம்
சீதரனுரைத்த விதுநலமென்றே சேவினிலேறுவோ னிடத்தில்
மாதுமையுடனேமான்மழுகரத்தின் மதியறுகுதேங்குசெங்கழுநீர்
தாதவிழ்தும்பையணியுமைகண்டன்சம்புமாமுனியுழைசார்ந்தார்.

(இ-ள்.) ஆதியாயிருக்கப்பட்டகடவுளான பரமசிவன் மகிழ்ச்சியாகத் தேவர்களிடத்தில்சொல்லுவார் இந்தஆலோசனை மகாவிஷ்ணுசொன்னது நன்மையாகுமென்று ரிஷபவாகனமேறியுமையவளுடனே மான்மழுவும்பிரகாசிக்க, சந்திரன் அறுகு எருக்குசடையில்துலங்க செங்கழுநீர்மாலையும் நீலகண்டமுடையபரமசிவன் சம்பும்காரிஷியிருக்கும் பர்ணசாலைக்குப்போனார் எ-று. (கஉ)

நந்தியுமாலும் பிரமனும்வானோர் நாயகனஷ்ட பாலகரும்
கந்தனுமாகு வாகனன்சண்டி கேசனுங் கந்தருவோரும்
தந்திநேர்நாரதனும்பதஞ்சலியுஞ் சண்டனைவென்றமார்க்கண்டன்
விந்தைசேர்புலிக்காலனும்புடைசூழ விமலனுமெழுந்தருளினனே.

(இ-ள்.) நந்திகேஸ்வரன் மகாவிஷ்ணுபிரமதேவன்தேவேந்திரன் அஷ்டதிக்குப்பாலகர் சுப்பிரமணியர் விநாயகர் கருடகாந்தருவர் நாரதர்பதஞ்சலி மார்க்கண்டேயர்வியாக்கிரமபாதர்முதலிய தெய்வக்கூட்டத்துடனே வெழுந்தருளினார் பரமசிவன் எ-று. ()

தருக்களின்மலரை தக்ஷகர்பொழிய சத்தமாதரும் புடைசூழ
வுருக்கமாங்கீதங் கின்னரர்பாட வுயர்ந்தவான துந்துமிமுழங்க
வெருக்கணிவீசனுளமகிழ்ந்தவரோடிமையவர்கிரித்தரமுகையுந்[பு
திருக்குமாமகஞ்செய்சாலைசேர்ந்திடவேதோத்திரஞ்செய்தனர்சம்

(இ-ள்.) பஞ்சதருக்களின்மலரை பரமசிவன்பாதத்திற்றூற்ற சத்தமதரும்புடைசூழ, சங்கீதங்கின்னரர்பாட தேவதுந்துமிமுழங்க எருக்கமலரணியும் பரமசிவன்உளமகிழ்ந்து இமையபர்வதத்துக்கு வடபாரிசத்திலே இருக்கும்பூமியில் யாகஞ்செய்ய வேணுமென்றுபோம்பொழுது அவ்விடத்தில்தவஞ்செய்யப்பட்ட சம்புமகாரிஷி பரமசிவனைக் கண்டமாத்திரத்தில்தோத்திரஞ்செய்தார்.

## வேறு.

காலகால பைங் காம தகனனே
யால முண்டு வமரரைக் காத்தொரு
பாலனைத் தின்று பண்போ டெழுப்பின
சீலனே யுன்றன் சேவடி போற்றியே.

(இ-ள்.) எமனுக்குஎமனானவனே பசுமையானமன்மதனையெரித்தவனே அமுர்தங்கடைய சமுத்திரத்தில் மகாமேருவைநாட்டி ஆதிசேஷனைக் கயிறுகப்பூட்டி தேவரும்இராக்ஷதரும் இழுத்துக்கடையும்போது ஆதிசேஷன்கக்கிய நஞ்சானது வடவாக்கினிபோலெழுப்பியதைக்கண்டு தேவர்கள்முறையிட ஆலகாலத்தைதேவரீருண்டு தேவர்களைரக்ஷித்தீர சிறுத்தொண்டன் பிள்ளையை கறிச

மைத்துதின்று எழுப்பியசிவனே உம்முடையபாதாரவிந்தத்தைப் போற்றியென்றார்கள் எ-று. (கரு)

நாகவா பரணுதி நமோ நமோ
தோகை யோர்புறஞ் சூழும் நமோ நமோ
ஆகு வாகனை யீன்றவா நமோ நமோ
வேகமான விறைவா நமோநமோ.

(இ-ள்.) நாகாபரணனே பார்வதியிடப்பாகனே விநாயகனை யீன்றதகப்பனே எங்கும் நிறைந்திருக்கப்பட்ட சுவாமியென்று தோத்திரஞ்செய்தான் சம்புரிஷி எ-று. (கசு)

எள்ளிலெண் ணெய்போ லங்கு நிறைந்திடும்
வள்ளலுன்றன் மலரடி நமோ நமோ
வெள்ளையாகும் விடைதனி லேறியே
தெள்ளுநீர் சடையுடை செல்வ நமோ நமோ

(இ-ள்.) எள்ளுக்கு ளெண்ணெய்போலெங்கும் நிறைந்திருக்கப்பட்டவள்ளலே உன்மலரடிக்கு நமோநமோவெள்ளைரிஷபமேறியவனே தெளிந்தநீர்பொருந்தியசடையையுடையசெல்வனேநமோ நமோவென்றார் சம்புரிஷி எ-று. (கஎ)

கஞ்சனுந் திருமாலு மறிந்திடாக்
கஞ்சபாத மெனக் கருள் கின்றனை
பஞ்ச பாணனை பஸ்பம் தாக்கிய
பஞ்ச சென்னி பரனே நமோநமோ.

(இ-ள்.) பிரமாவும்விஷ்ணுவுந்தேடியுங் காணாதபாதத்தையெனக்கருளியபரனே மன்மதனையெரித்தவனே ஐந்துசிரசையுடையவனே நமோவென்றான் சம்புமாரிஷி எ-று. (கஅ)

நாயகா வெந்தன் சாலையில் நண்ணிடச்
சேயனே னெத்தவஞ் செய்த னன்றிகழ்
தூயனே வருஞ் சூக்ஷி யுரையென
வாயு நற்கலை யம்முனிக் கோதுவார்.

(இ-ள்.) நாயகனேஎன்னுடைய தவச்சாலையில்நாடிவர எத்தனைகோடிநாள் தவஞ்செய்தேன் நல்லபாதமுடையதூயனேஇங்கெழுந்தருளிய காரியத்தைசொல்லி யருள்புரியவேணுமென்று சம்புமகாரிஷி சிவன்பாதத்தைத்துதிக்க மனமகிழ்ந்து சம்புமகாரிஷிக்குச்சொல்லுகிறார் பரமசிவன் எ-று. (கக)

மாதவத்தி லுயர் சம்பு மாமுனி
தீதிலாதிமை யோர்கள் செழித்திட

வாதரக் கனை வாட்டு மொருவனை
சோதி வேள்வியிற் றோன்றிடச் செய்யென்றார்.

(இ-ள்.) தவத்திலுயர்ந்திருக்கப்பட்ட சம்புமகாரிஷியே தேவாதிதேவர்கள் செழித்திருக்கத்தக்கதாக வாதாவிராக்ஷதச் சூரனைச் சம்மாரஞ்செய்யும்படியாக உம்மிடம்வந்தது ஆனதால்உம்முடையவேள்வியினிடமா யொருவனைஉதிக்கும்படி செய்யவேண்டுமென்றார் பரமசிவன் எ-று. (உ0)

என்ன வம்முனி யீசனை நோக்கியே
துன்னு வேள்வி தொடங்குற் றேனென
வன்ன வத்திரிக் கோதிய வார்த்தையால்
மன்னு வேள்வியின் வண்மை வழுத்துவாம்.

(இ-ள்.) இப்படியாகச்சொல்லிய பரமசிவனை சம்புமகாரிஷி தோத்திரஞ்செய்து நமஸ்கரித்து வேள்விசெய்துவைக்கிறேனென்றுஅத்திரி மகாரிஷிக்கு சனகமகாரிஷி வேள்வினுடைய விதங்களைச் சொல்லத் தொடங்கினர் எ-று. (உக)

## சிவனலோசனைச் சருக்கம்.

முற்றிற்று.

---

ஆக பாயிரம் உட்பட சருக்கம்-கூ-இ

திருவிருத்தச் செய்யுள் உசச,

கடவுள் துணை.

## ஒன்பதாவது.

# சம்புமகாரிஷி வேள்விச்

## சருக்கம்.

மந்திர மாதவன் மனத்திலே யான்
விந்தையைந் தக்ஷரம் வினவி யேத்தியே
சிந்தையில் மயன்றனைச் சேர வெண்ணினன்
வந்தடி யிறைஞ்சிட வழுத்து வானரோ.

(இ-ள்.) வேதவல்லமையையுடைய சம்புமகாரிஷி மனதில்பரமசிவனுடையவிசித்திரமாகிய ஐந்தெழுத்தான பஞ்சாக்ஷரத்தைநினைந்துமயனாகியதெய்வதச்சனை வரும்படியாகநினைக்க அப்போமயன்வந்து பாதத்தில்தொழுதுநிற்க சம்புமகாரிஷிசொல்லுவார். ()

நற்றவ ரோமகம் நாட்டு கின்றனன்
இத்தினர் மயதின் மின்ப மென்னவே
சுற்றிய மதிலொடு தூணிறுத்தியே
பத்தியா யளியென மயனும் பண்ணுவான்.

(இ-ள்.) நல்லதவம்புரியுஞ் சம்புமாரிஷிமயனைப்பார்த்துஇன்றைத்தினத்திலேதானே ஒருயாகசாலைமண்டபஞ்சிருஷ்டிசெய்யென்ன சந்தோஷமாய்ச் சுற்றுமதிலும் மண்டபமும் உண்டாகச்செய்கிறான் மயன் எ-று. (உ)

இவ்வண்ண மியற்றுவ னிதின்றென் பாலதாய்
நவ்வியை யணிந்திடு நாத னின்மலை
யவ்வலப் புறத்தினி லளிப்ப தாமென
செவ்விய வரனடி சிரத்திற் பூண்டனன்.

(இ-ள்.) வேள்விசெய்யப்பட்டமண்டபம் அமைக்கிறதுஇந்தபூமிக்குதென்புறம் பரமசிவனுடையகயிலாசமலைக்கு வலப்பாகத்தில்யாகசாலைமண்டபஞ் சிருஷ்டிக்கிறேனென்றுபரமசிவனுடையசிவந்தபாதத்தை சிந்தையில்வைத்து இருந்தான்மயன் எ-று. (ங)

அனைவரு முடனவ ரமரர் துந்துமி
தனதன மெனவொலி தரணி தங்கிட
கனவுற கயிலையில் காத் திருந்தனர்
புனித வெற்பின் றருள்பூவை யோடுமே.

(இ-ள்.) விஷ்ணுபிரமா தேவேந்திரன்முதலானபேர் வருகிற போது தெய்வதுந்துமி தனதனவென்று வொலிக்கிறசத்தமானது பூலோகங்களும் அதிரும்படியாய்ப் பரிசுத்தம்பொருந்திய மலையரசன்மகளாகிய பார்வதியாரோடு கயிலைமலையில் வீற்றிருந்தனர் பரமசிவன் எ-று. (ச)

அம்மலை தனில் மயனரனை யேத்தியே
கொம்மைவெம் முலைரிஷி கோதை பங்கனே
இம்மை யிலயன் பெரிதா லியம்புவ
ரெம்மை யிவ்வேலை செய்யென விசைப்பரோ.

(இ-ள்.) அழகாகியகயிலாசமலையிலிருக்கும் பரமசிவனை மயனென்பவன்பணிந்து போற்றிசெய்து கும்பஸ்தனமுடனிருண்டகுழலுடைய உமையவளிடப்பாகனே இந்நாளில்பிரமதேவன் பெரியவன்சிருஷ்டிக்குஅவனேயல்லாமல் வேறில்லையென்றுயாவருஞ் சொல்லுகிறார்கள் இப்போதென்னையழைத்துயாகசாலைமண்டபஞ் சிருஷ்டிக்கும்படியாகச் சொன்னீர் சுவாமி எ-று. (ரு)

எனவுரைத்திட வெழிலீச னெண்ணியே
தனியிவ னுண்மையை சாற்றி நின்றனன்
இனிதுரை யியம்புவ தியற்கை யாமென
மனமதி லுவகையாய் வழுத்தி னனரோ.

(இ-ள்.) இப்படியாகமயன் சொன்னதைக்கேட்ட பரமசிவன் மனதிலேநினைக்கிறார் தானென்கிற அகங்காரம்நம்முடைய சமுகத்திலேதானே சொல்லுகிறான்நல்லதிருக்கட்டும்நாம்இப்போதுஅவனுக்குஇன்பமானவார்த்தையைச்சொல்லிகாரியங் கொள்ளவேணுமென்றுயோசித்து மனதிலே மகிழ்ச்சியாகச் சொல்லுகிறார் பரமசிவன் எ-று. (சா)

அயனுயி ராக்கைசே ரனைத்து நல்குவன்
செயமுள நகரினைச் சிருஷ்டி செய்கென
அயன்மய னிருவ ரொன்றாக வாதலால்
நயமக சாலை நல்க வென்றனன்.

(இ-ள்.) பிரமதேவன் சீவஜெந்துக்களைத்துஞ்சிருஷ்டிசெய் வான் மய்னுகியநீயிந்தஜெகத்திலிருக்கும் வீடுமுதலாய் வேள்விம ண்டபமுஞ் சிருஷ்டிக்கிறவன் ஆகையால்பிரமாவும் நீயும்ஒன்றே யல்லாமலிரண்டில்லை யாதலால்நல்ல யாகசாலைமண்டபஞ் சிருஷ்டி செய்வாயென்றார் பரமசிவன் எ-று. (எ)

பருவத மதின் வலப்பாரி சத்தில்
யிருசமர் சதிரம் யோசனை யிடத்தினிற்
பெரிய பொற் சுவரின்மே லொளிர் பிளிர்வச்சிர
மரகத வுத்திற வளைகள் பூட்டினன்.

(இ-ள்.) கைலாசகிரிக்கு வலதுபுறத்திலே ஆயிரம்யோசனைதூ ரமும் ஆயிரம்யோசனையகலம்சதுரமாக அஸ்திவாரம்மேன்மையா னபசும்பொன்னுல் சுவரெழுப்பி வச்சிரக்கல்லினுல்உத்திரம்போட் டுமேல் வட்டமும்வளையும் பூட்டினுன் எ-று. (அ)

பவளநற் றாணின்மேற் பதிந்த போதிகை
யவிரொளி நவமணியா லமைத் தனன்
புவியினி லளவிடா புஷ்ப ராகத்தால்
சுவிமிகு மேற் பரப்புகள் சமைத்தனன்.

(இ-ள்.) நற்பவளத்தினுலே நல்லதூணிறுத்தி அதின்மேல்பதி த்திருக்கின்ற பொதிகையும் பசுமையானதங்கத்தினுலும்இரத்தின மணியினுலும் பதித்துபூலோகத்தில் கணக்கிடக்கூடாத புஷ்பரா கத்தால் மேல்பரப்புக ளிசையும்படி செய்தான் மயன் எ-று. (கூ)

மெச்சு செப்போடு மேலுற விந்தைசேர்
உச்சியின் வச்சிரக் கல்லுகள் ளொட்டினன்
பச்சை யிளகத் தளவரி பரப்பினன்
சிற்சபை யீதெனச் செம்மை செய்தனன்.

(இ-ள்.) யாவருமதிசயப்பட செப்போட்டைமேல்பரப்பிவிசி த்திரமாக உச்சியில்தங்கக்குடம் ஒன்பது நவரத்தினத்தினுலே யமைத்து பச்சையினுலே தளவரிசைப்பரப்பி கைலாசகிரிக்கு மே லாய்சிற்சபை யென்னும்படியாகச் செவ்வையாகச்சிருஷ்டித்தான் மயன் எ-று. (ய)

சுற்றிய மண்டபந் துலங்கு முன்றிலில்
பத்தியாய் வேள்வி குண்டம் பண்ணினன்
சித்தில மாலைகணிறைய நாட்டினன்
சித்திர மணிகளாற் கொலுவுஞ் செய்தனன்.

(இ-ள்.) சுற்றிப்பிரகாசிக்கின்றமண்டபத்துள் நடுவாசலிலே பக்தியாயிருந்து வேள்விசெய்யும்படியாக ஓமகுண்டமுழுதும்முத்துப்பதித்தமாலை மண்டபங்களெல்லாம்நிறைந்திருக்கும்படியாகக் கட்டிநவரத்தினமணிகளாலே பரமசிவன்கொலுவிருக்குஞ் சிங்காதனஞ் சிருஷ்டித்தான் மயன் எ-று. (கக)

கண்ணனுங் கமலனுங் கடவுட் கூட்டமும்
எண்ணன ரேமமோ வெனங் கலங்கிட
வண்ணலி னருள்பெறு மருந்த தவத்தரிற்
றிண்ணிய சம்புவன் தேய மென்றனர்.

(இ-ள்.) மகாவிஷ்ணுவும் பிரமதேவருத்திரகூட்டமும்சிவகணங்களும் தேவேந்திரன்முதலானதேவாதிகளுந் தங்கப்பிரகாச மென்றும் மகிழ்ச்சியாயிருந்தார்கள் பரமசிவனருள்பொருந்திய அரியதவம்புரிந்த சம்புமகாரிஷியினாலேயும் மயன்சிருஷ்டி செய்யப்பட்ட இதற்குப்பெயர் சம்புதேசமென்று திருநாமமிட்டார் பரமசிவன் எ-று. (கஉ)

அங்கவ ரனந்த நாளதனை யேகிகர்
துங்கமா சம்புவந் துலக்க மெய்திட
சங்கரன் கோல மீதாகு மென்னவே
கங்கைநீர் தோய்ந்திடக் கருத்தி லுன்னினன்.

(இ-ள்.) சகலதேவரும் இந்நாளிலேபரமசிவனுக்குசமதையும் மேன்மையுமுடையவரில்லை யென்றுசம்புமகாரிஷிபார்த்துதலையையசைத்து இதுதிருக்கோலமாகுமென்று நினைத்து தீர்த்தமாடும்படி யெண்ணினார் எ-று. (கங)

நவநதி யாடினர் பூதி பூண்டனர்
தவவுரு மன்னினர் தழைத்த சிந்தையால்
பவவி னைசஞ்செய் பரமன் றன்னுடன்
நவமணி யிமைமக சாலை புக்கினன்.

(இ-ள்.) நவதீர்த்தங்களிலேமுழுகி நன்மையானவிபூதியைசரீரமெல்லாமணிந்து தவஞ்செய்யப்பட்ட வேடங்கொண்டு மனந்தழைக்கும்படியாய் பாவங்களையகற்றப்பட்ட பரமசிவனுடனே நவமணியிழைத்திருக்கப்பட்ட யாகசாலைமண்டபத்திற் போனார்கள்.

காமதேனுவின் சாணங் கறைத்து மெழுகியே
பூமியை புண்ணி யாசனங்கள் போற்றியே

நேமமாய்ப் பூரண கும்பம் நிறைத்தனே
வாமமா ளுமையுடன் மகிழ்ந் திருந்தனன்.

(இ-ள்.) காமதேனுவின் சாணத்தினுலேமெழுகி புண்ணியாசனஞ்செய்து நீதியாகிய பூரணகும்பமமைத்து பரமசிவனேசிம்மாசனத்திலிருத்தி உமையவளை யிடப்பாகத்திலேவைத்தார்கள் எ-று.

மேல வாயலில் விஞயகர் நாட்டினர்
வேலனுங் கீழ்ப்புறம் விளங்க வைத்தனர்
சீலமாம் வயிரவன் தெற்கி னிற்கவும்
தூலமாம் வடபுறந் துர்க்கை வைத்தனர்.

(இ-ள்.) மேல்வாசலில்விஞயகர் கீழ்ப்புறஞ் சுப்பிரமண்ணியரும் தெற்குவயிரவனும் வடக்குதுர்க்கையுமாக வைத்தார்கள். ()

குற்சன் ரோமனுங் குருவதிஷ்டரும்
வற்சன் பதஞ்சலி வாம தேவனும்
நற்சன காதிபர் நார தாதியர்
மெச்சிய முனிவராங் கணங்கள் வந்தனர்.

(இ-ள்.) குற்சனர்ரோமசர் வதிஷ்டர் வற்சணர் பதஞ்சலிவாமதேவர் சனகாதிபர் நாரதர் யாவருமதிக்கப்பட்ட முனிக்கூட்டங்களும் வந்துமண்டபம் நிறைந்தார்கள் எ-று. (கஎ)

அஷ்டபால ரோமகுண்டஞ் சுற்று மண்டினர்
திட்டமாங் கடவுளர் செயங்கள் கூறினர்
மட்டிலா சம்பு மாமுனி மகிழ்ந்துளம்
இஷ்டமாய் வேள்வியை யியற்ற லுற்றனன்

(இ-ள்.) அஷ்டதிக்குப்பாலர்கள் ஓமகுண்டத்தைச்சுற்றிநின்ருர்கள் தேவர்கள்செயஞ்செயமென்றுகூறிஞர்கள்சம்புமகாரிஷியினிஷ்டப்படிக்கு வேள்வியைச் செய்யத்தொடங்கிஞர் எ-று.(கஅ)

ஆவினெய் யவிகளு மெள்ளும் வெல்லமும்
மாவுளோர் பாரமும் வளமுங் கூட்டிய
நாவிஞற் றுதிசெயும் ஞானி நேரமும்
வாவிநீர் கமண்டலம் பொறியும் வைத்தனர்.

(இ-ள்.) பசுவிநெய் அவிசுகளும் எள்ளு வெல்லம் தேங்காயும் கமண்டலத்தில்சலமும் நெற்பொறிகளும் கொண்டுவந்து வைத்தார்கள் எ-று.
(கசு)

மாந்தளிக் குசை யடைக்காயு மன்னிட
பூந்துழா யணிந்தமாற் புளக முற்றழ
லேந்திமேற் பாலினி லிருப்ப நந்தியும்
சேர்ந்திருந் தார்மகஞ் செழிப்ப தாகவே.

(இ-ள்.) மாவிலை தருப்பைபாக்கு வெற்றிலையும்வந்திருக்க துளசிமாலையணியும் மகாவிஷ்ணு ஆனந்தமாகவும் பரமசிவன்மேல் பக்கமாகவிருக்க நந்திகேஸ்வரரும் அவ்விடத்திற்சேர்ந்திருக்கயாகஞ்சிறப்பாக எ-று. (உய)

கணபதி பூசையுங் கந்தன் பூசையும்
குணமுள வயிரவன் கோதில் துர்க்கையும்
இணையடி பூசனை யிசைத்து பாலகர்
துணையடி பூசையுந் தொடர்வ தாயினன்.

(இ-ள்.) விநாயகர்பூசையும் சுப்பிரமணியர்பூசையும் குணமுடைய வயிரவன்பூசையும் துர்க்கைபூசையும் இசையும்படி செய்து திக்குப்பாலகர் செய்யத்தொடங்கினார்கள் எ-று. (உக)

மாலர னம்பிகை மகிழ வேத்தியே
சீலமா மறை விதிப்படி செலுத்தினன்
மூலமாய் முளைத்திடு முத்தன் தன்னெதிர்
சால குண்டத்தவி சார சாற்றினன்.

(இ-ள்.) மகாவிஷ்ணுவையும் பரமசிவனையும் ஈஸ்வரியையும் பூசைசெய்து போற்றி ஒழுக்கமாகிய வேதவாக்கியப்படி விதிமுறைசெலுத்தி முத்தனாகியபரமசிவனையாகசாலையோமகுண்டத்தில் அவிசுசாரும்படியாக சாற்றினார்கள் எ-று. (உஉ)

அம்புய வேதன் மறைய யிசைத்திட
வெம்பிய முத்தழல் விளங்க வன்னியன்
கொம்புள சமித்தினைக் கூட்டி வேதமும்
சம்புவு முரைத்துளந் தழைப்ப தாயினர்.

(இ-ள்.) தாமரைபுஷ்பத்திலே வளரப்பட்டபிரமா வேதமோதிமுத்தழலாகிய காருகபத்தியம் யாகவன்னியம் தெக்ஷணாக்கினியம் இந்தமூன்றும்விளங்க வன்னிசமுத்தினாலே சம்புமகாரிஷிவேள்விசெய்தார் எ-று (உங)

சம்புமகாரிஷி வேள்விச்சருக்கம் முற்றிற்று.

ஆகபாயிரம் உட்படசருக்கம் ௰-க்குதிருவிருத்தச்செய்யுள் உசுஎ.

உ

கடவுள் துணை.

# பத்தாவது

# வன்னிய ராசாக்கள்

## உற்பத்திச் சருக்கம்.

அத்திரிமுனியேவான்விளையாட்டை யறைகுதலாகுமோவடியேன்
புத்தியிலுணர்ந்த மாத்திரம்புகல்வன் புளகிதமுற்றிடக்கேட்ப
நித்தனல்மகமு மமைத்திடுமுனிமா நீதிசேராச்சியமதனற்
சுத்தமந்திரத்தோ டாகுதிபுரியச் சோதியாய்வளர்ந்தது தர்மம்.

(இ-ள்.) அத்திரிமகாரிஷியே பரமசிவனுடையதிருவிளையாட்டை என்னால்சொல்லலாகுமோ அடியேன்தெரிந்தமாத்திரஞ்சொல்லுகிறேன்கேளும் நடனஞ்செய்யும் பரமசிவனால் யாகஞ்செய்யப்பட்டசம்புமாரிஷி காமதேனுவின்நெய்யினால் பரிசுத்தஞ்செய்து வேதமந்திரமோதி ஆகுதிகொடுக்க பிரகாசமாகவளர்ந்தெழுந்தது அக்கினிக்கொழுந்து எ-று. (க)

பங்குனித்திங்க ளுத்திரந்தன்னில் பரமன்முக்கண்ணழல்விழியில், துங்கமாவேர்வை தோன்றிடக்கரத்திற்றேய்ந்து செங்கழுநீரின்மலரைப், பொங்கமாமகத்திலர்ததியியன்றிப் புனிதனுக்குவகையீந்தார், வங்கணவீரவன்னியபூமன்நற்பரிமீதுதோன்றினனே.

(இ-ள்.) பங்குனிமாதம் உத்திரநட்சத்திரத்தில்பரமசிவன்நெற்றிக்கண்ணில் வெயர்வைதோன்ற அந்தவெயர்வையைக்கையிலேந்தி செங்கழுநீர்புஷ்பத்துடன் புகழ்ச்சியாகிய ஓமகுண்டத்தில் ஆகுதிகொடுக்க பரமசிவன்மகிழும்படியாக வீரவன்னியமகாராஜன் அக்கினிக்குதிரைமேலேறி தோன்றினான் எ-று. (உ)

என்றுரைமுனிவ னிதையமீதெளியா தியம்புவனிவுளி யேதென்ன,நன்றழல்விழிநீர்நா தனுமலரைநல்கிடவிவுளியாயுதிப்ப,தென்றுரையதனலிதையமுந்தேர்ந்தே யினியியம்பெனவழல்வீரன், வென்றிசேர்புயமும் விந்தையுநன்றாய்வினவிடக்கேளெனவிசைப்பன்.

(இ-ள்.) இப்படியாகச்சொல்ல அத்திரிரிஷிமனந்தேறி சொல்லுவார் அக்கினிக்குதிரை எப்படிவந்ததுஎன்ன நல்லஅக்கினியின் கண்விழிநீரானதுவிந்துபோலவும்ஓமகுண்டத்தீயானதுநாதம்போ

லவும் இரண்டுங்கூடஉற்பத்தியானது சரியாகுமென்றுசொல்ல சனகரிஷிசொல்லுவார் வேர்வையுடனே செங்கழுநீர்புஷ்பத்தைச்சேர்த்து ஆகுதிகொடுத்தபடியினாலே அக்கினிக்குதிரைதோன்றியதென்றுசொல்லஅத்திரிரிஷியுமனந்தேறி யினிநடக்குங்கதையைச் சொல்லுமென்ன உதித்தவீரவன்னியனுடைய புஜபலபராக்கிரமத்தை சொல்லுகிறார் சனகர் எ-று. (௩)

சென்னியில்மகுடஞ்சிலைக்கணைக்கரமுந்திணியிருக்கேடயம்வேலும்
மின்னியவுரத்தின் முப்புரிநூலும் மேகலாபரணமு மிருபால்
துன்னியபுயமு மரிமுகத்தோடா துலங்கியகடகமுந் துதித்த[ங்க
வன்னமாமலர்த்தாள் வீரகண்டையுடன் வளரம்பறாத் தூணியுமில

(இ-ள்.) சிரசில்கிரீடமும் கையில்வில்லும் கேடயமும் வேலும் மார்பிற்பூணநூலும் மேகலாபரணமும் இரண்டுபக்கத்து புயகீர்த்தியும் சிங்கமுகத்தோடாவும் கையில்கடகமும் மலர்போன்றபாதத்தில் வீரகண்டாமணியும் அம்பும்அம்பறாத்தூணியும் எ-று. (௪)

இருகுழைமகரகுண்டலமுருகோடிந்துவி னுதலில் வெண்ணீறும், கருமுகிற்குழலிற்பின்னலுமிருபால் கனத்தகட்டாரிவாளினமும், கரங்கள்செங்கழுநீரார்ந்தொளிர்தோளும் கனத்திடைக்கச்சைசல்லடமும், பெருகுபொற்பீதாம் பரமணிகோவும்பெட்புடன் பிறங்கினனன்றே.

(இ-ள்.) காதிலேமகர்குண்டலமும் முருகும்நெற்றியில்வெண்ணீறும் மேகம்போற்றலைமயிர்ச்சடையும் கட்டாரியும்வாளும் செங்கழுநீர்மாலையையணிந்ததோளும் இடுப்பில்கட்டியகச்சையுஞ்சல்லடமும் பீதாம்பரம் இவைகளணியப்பட்ட வீரவன்னிய மகாராஜன் உதித்தான் எ-று. (௫)

வேதநான்காறு சாத்திரமிகுத்து விளங்கியகலை யறுபதினான் கோதியபதினெண் புராணமுமுணர்ந்த குகனவனுமெனுங் குணத்தோன், நீதிசேர்நேமநிஷ்டையிற்கருத்துநீங்கிடாதவ னெதிரென்னபாதகராவி பதைத்திடவுருக்கும் பாணமும்பலிதமாய்வீரன்.

(இ-ள்.) நாலுவேதம்ஆறுசாஸ்திரம்அறுபத்துநான்குகலைக்கியானம் தொண்ணூற்றாறுதத்துவம்பதினெண்புராணமும் தெளிந்தசுப்பிரமணியருக்குச்சரியான குணமுடையவனென்றுசொல்லும் படியாகவும் அநேகநிஷ்டை யிடைவிடாமல்செய்யப்பட்டமனதையுடையவன் எதிர்த்தவரை எமலோகத்துக்கனுப்பும் கைப்பாணமுடையவன் எ-று. (௬)

அவுணர்களிடத்து கண்களும்புயமும் துணித்திடவமரர்கள் வேதம், புவியினிற்புகழ பூவையராட புனிதமாய்த்துந்துமி யொலிப்ப,நவமெனுங்கிரகபூசையும்நலங்கநாயகன்வதனமுநோக்கி,சுவலழலெனையின்றழைத்ததேதென்றுசுடர்முடியிலங்கிடத்துதிப்பான்.

(இ-ள்.) இராக்ஷதருயிரை துணிக்கும்படியாகவும் தேவர்கள் வேதகோஷ்டஞ் செய்யும்படியாகவும் தேவமாதர்நடனஞ்செய்யவும் தேவதுந்துமிமுழங்கவும் நவக்கிரகபூசைசெய்யவும் இப்படிக்கொத்த வைபோகங்களைப்பார்த்துக்கொண்டிருக்கும் பரமசிவன் முகத்தைப்பார்த்து சுவாமிஇன்றைக்கு என்னைஓமகுண்டத்தீயினிடமாயழைத்தகாரிய மேதென்று பின்னுஞ்சொல்லுவான் வீரவன்னியன் எ-று. (எ)

ஆதியேமகமும்புரிந்ததிலளித் தருளுவீரமரரை யடிமைசாதனங்கொள்வோன்சமன்றனைக்கடிந்து தரணிவாழுயிர்களைக்காத்து சோதிசேர்மூவர் புரமெரித்ததுபோல் துகளவுணதிப ரனைத்தும், வாதைசெய்திடவோ வழுத்துமென்றுரைத்து மலரடிபணிந்தனன் மாதோ.

(இ-ள்.) ஆதியானகடவுளே என்னைமகத்தினிடமாக அழைத்தகாரியமென்ன தேவர்களையடிமையாக்கிக்கொள்ளவோ எமதருமராஜனைதண்டித்து பூமியில்வாழப்பட்ட சீவராசிகளைமாளும விருக்கும்படி கார்க்கவோ திரிபுரதகனஞ்செய்ததுபோல் ராக்ஷதரை மாளும்படிசெய்யவோ இன்னமெதற்கோவென்று பாதத்திற்பணிந்துகேட்டான் வீரவன்னியன் எ-று. (அ)

அய்யனேசீவ னனைத்தையுமளித்தே யமுதளித்தன்பினிற்றங்காத்து. துய்யமாந்தோகை யிடத்தினிற்றுலங்குஞ்சோதியேமான் மழுசூலங், கையனேயணிந்த கடவுளேநீலகண்டனே கையிலுறையும், மெய்யனேமதியுங் கடுக்கையுநதியும் வேணியிலணிந்திடும்பரனே.

(இ-ள்.) ஐயனே சீவராசிகளனைத்தையுமளித்து காப்பாற்றப்பட்டவனே உமையவளிடப்பாகனேசோதியேமான்மழுசூலங்கையிலணிந்தவனே நீலகண்டனே கயிலைவாழ்பவனே சந்திரனையுங் கொன்றைமாலைகங்கையையும் சடாபாரத்திலணியும் பரமசிவனேயென்றான் வீரவன்னியன் எ-று. (கூ)

என்றடியிறைஞ்சவீசனுமகிழ்ந்து வியம்புவனழலினிலுதித்த மன்றலந்தொடைசேர் மார்பனேவீரவன்னியபூபனேமனத்தில், இன்றுனைநினைத்தசூக்ஷியையுரைப்பேனித்தழற்கண்டனேயென்னருகில், நின்றிடுமென்னவிவுளியுந்தாவ நேமிமேனின்றனன் மாதோ.

(இ-ள்.) இப்படியாக வணங்கியபோது பரமசிவன்மனமகிழ்ந்துசொல்லுவார் அக்கினியிலுதித்த வெற்றிமாலைசூடியவீரவன்னியனே என்னுடையமனதில்நினைந்து உன்னைவரவழைத்ததைச்சொல்லுகிறேன் ஓமகுண்டத்தைவிட்டு என்னருகில்வாவென் றனுக்கிரகஞ்செய்தவுடனே அக்கினிக்குதிரையனுமானிக்கத் தாண்டிபூமியில்வந்துநின்றான் வீரவன்னியன் எ-று. (ய)

## வேறு.

நாரிபாகனு முரைப்பான் நற்றழ றனிலுதித்த
வீரவன்னியனே யெங்கள் வேதனை தீர்க்குங் கோவே
ஆருயிர்ப் புதல்வனீயே யன்னையுந் தந்தையாமே
தாருகருயிர்கடிந்த சாமுண்டி துணைய தாமே.

(இ-ள்.) உமையவளிடப்பாகமான பரமசிவன் அக்கினியிற்பிறந்த வீரவன்னியனே எங்கள்வேதனையைத் தீர்க்கப்பட்டவனே என்னுயிராகியபுதல்வனே எனக்குத்தாயுந்தகப்பனும்பார்வதியும் நாமேயாகும் மகிடாசூரனை சங்கரிக்கப்பட்ட துர்க்கையானவள் எனக்குத்துணையாகிய தெய்வம் எ-று. (கக)

சம்புமா தவஞ்செய் வேள்வி தன்னி லுதித்தாயிந்த
அம்புவி தனிலேவேத சம்புவின் மரபுமானாய்
உம்பரர் களிக்கமான வுதித்தவா தாவிசூரன்
கம்பித மடக்கவென்று கதிரொளி முடியாயென்றார்.

(இ-ள்.) சம்புமகாரிஷியாகத்திலேபிறந்தபடியினாலேசம்புமாரிஷியின்கோத்திரமானாய் தேவாதிதேவர்களையிடுக்கண்செய்யப்பட்ட வாதாவிசூரராக்ஷதனுடைய கெர்வத்தைஅடக்குவாய் சூரியனொளிபோல கிரீடத்தையுடையவனே யென்றார் பரமசிவன்எ-று.

அரனுரைத்திடவு மாலுமயனும் விண்ணவரு மன்னா
வரமிகுஞ் சூரனாவி வதைப்பதே கருமமென்ன
கருணையும் மகிழ்வீருள்ளக் கவலையை யகற்றும்வீரன்
சரமதா லவுணர்சண்டை சங்கரித்திடுவே னென்றான்.

(இ-ள்.) பரமசிவன் சொன்னபிறகு மகாவிஷ்ணு பிரமதேவன்தேவாதிகளும் வீரவன்னியமகாராஜனே வரமிகுந்திருக்கப்பட்டவாதாவிசூர ராக்ஷதனுடைய உயிரைவதைசெய்யவேணுமென்று சொல்லக்கேட்டு வீரவன்னியன்உங்களுக்குஇருக்கப்பட்டவிடரை

யெல்லாம்விட்டு மகிழ்ந்திருங்கள் என்னுடையபாணத்தினாலே ராக்ஷதன்வாதாவினுயிரை சம்மாரஞ்செய்துபோடுகிறேன் எ-று. ()

உரையிரு செவியிற்றைக்க வும்பர்களுவகையாகி
மருமலர் மாரிதூவி நாவினாற் றுதிகளேத்தி
யிருமென விருத்திசத்த விருடியர் முனிவர்வானோர்
ஒருவிடர்தொடர்ந்தோன்வண்ண முறுதியாயுரைக்கலுற்றார்.

(இ-ள்.) வீரவன்னியமகாராஜன் சொன்னதுகேட்டு மகிழ்ச்சியாகப் பூமாரியிறைத்து நாவினால்துதித்து ஆசனமளித்துவிருக்கச் செய்து சத்தரிஷிகளும் முனிவர்களும் ஒருவிடத்திற் போயிருந்து ஆலோசனை செய்கிறார்கள் எ-று. (கச)

தக்கன் வேள்வியை கடிந்ததற்பரன் மகவதான
வக்கினி லுதித்த வீரவன்னிய னெழிலுக்கேற்ற
மைக்குழல் மாதுவன்றி மாலயன் பாலுரைப்பத்
திக்கினி லிவற்கியான தெரிவையருளரோ வென்றான்

(இ-ள்.) தக்கன்செய்த வேள்வியையழித்த பரமசிவன் பாலகனான வீரவன்னியமகாராஜனுக்கு சரியொத்தபெண் வேணுமென்றுபிரமதேவனையழைத்து சொல்லுகிறபோது பிரமதேவன்சொல்லுவான் இத்திசைகளி லிவனுக்கீடான பெண்ணில்லை யென்றார் பிரமதேவன் எ-று.

நாகலோகத்து வேந்தன் நாயகி சசிவயிற்றிற்
றோகையொன் றுதிப்பாளந்த தோகையையளிப்பீரென்ன
யாகமப் படியுரைத்தே அனைவரு மிருப்பவன்னாள்
பாகுசேர் மொழியினாளோர் பாவையை பயன்றாள்மாதோ.

(இ-ள்.) தேவர்களுக்கரசனாகிய தேவேந்திரன்பெண்சாதியிந்திராணிவயிற்றி லொருபெண்பிறக்கும் அந்தப்பெண்ணை விவாகஞ் செய்துகொடுப்பீரென்றுசொல்லி அணைவருமிருக்கும்போதுஇனியவசனமுடைய இந்திராணிவயிற்றில் ஒருபெண்பிறந்தது எ-று.

திருவெனு மயிலோவேதன் றேவியோ யுமையோநாக
வரிவைமே னகையோரம்பை மார்களு மகிழமாது
உருவசி யகலிகைமுன்னா ளொப்பிலா வுருவமானாள்
செருவிடை பாவைதன்னை சீருடன் வளர்க்குநாளில்

(இ-ள்.) இலட்சுமியோசரஸ்வதியோபார்வதியோ நாககன்னியோ அரம்பைமேனகைமகிழும்படியானபெண் அகலிகைமுதலிய

பெண்களுக்கு பிணைசொல்லக்கூடாத சிற்றிடையுடைய பெண்ணானவள் வளர்ந்துவரும் நாளில் எ-று. (கஎ)

அரன்மகன் மணந்ததெய்வ யானையி னிளையாளென்றே
முரசறைந் திடவும்வானோர் பொழிந்துபூ மழைகள்பெய்ய
தருவில்வீற்றிருக்குங்கோமா னளித்திடுந் தையலின்பேர்
மருவுயர்மந்த்ர மாலையென வழுத்தினர் கண்மாதோ.

(இ-ள்.) பரமசிவன் பாலகனான சுப்பிரமணியர் கலியாணஞ் செய்த தெய்வயானைக் கிளையவளாகுமென்று முரசுவாத்தியம்முழக்கி வானோர்களுந்துதித்து மலர்மாரிதூவ கர்ப்பகத்தருவில் அரசுசெய்யுந் தேவேந்திரனுடைய பெண்ணுக்கு மந்திரமாலையென்றுயழைத்தார் வாதாவி எ-று. (கஅ)

வேறு.

தேவ ருள்ளஞ் செழிப்ப மலையருள்
பாவை பங்கன் பதந்தனை யேத்தியே
மூவ ரின்முத லாகிய மூர்த்தியே
சீவனாயக னேயெனச் செப்புவான்.

(இ-ள்.) தேவர்கள் மனமகிழ்ந்து உமையவள்பாகனான பரமசிவன் பாதமணிந்து பிரமா விஷ்ணுஉருத்திரன் மூன்றுபேருக்கு முதல்வனானமூர்த்தியே எங்களுக்குசீவகாரணனா யிருக்கப்பட்டவனே என்று சொல்லுகிறார்கள் எ-று. (ககூ)

வீர வன்னிய வேந்த னணைந்திடும்
பாரி யெங்கும் பரிந்தளித் திட்டனைக்
கூறு மென்னக்குழக னருள்புரிந்
தார மாலை சூடிடுவா னென்றார்.

(இ-ள்.) வீரவன்னிய ராஜனணைந்திடும் பெண்ணையெவ்விடத்திலளித்தீரென்று பரமசிவன் அருள்கூர்ந்து மாலையையணியும்வீரவன்னியன் எந்தஸ்திரீயானாலும்மணம்புரிவானென்றார் பரமசிவன் எ-று. (உய)

பூத லத்துள பூவைய ரீடல்ல
பாத லத்துறை பாவையர் பாங்கியர்
மாதவந் தழை வானவரே யொரு
கோதைய ருளரோ வெனக் கூறுவார்.

(இ-ள்.) பூலோகத்திலிருக்கும்பெண்ணுமீடல்ல பாதாளலோகத்துபெண்ணுஞ்சரியாகாது தவம்புரியுந்தேவர்களேவீரவன்னிய

மகாராஜனுக்கு சமதையாகிய குலப்பெண் எங்குமிருக்குமென்று எண்ணுதீர்களென்று சொன்னார் பரமசிவன் எ-று. (உக)

நித்தனே நகை யாற்புரம் நீற்றவர்
மத்த காவென் மருப்புறை வாரண
னுத்த வேந்த னுவகை யுடனளித்
தத்தை யாமென வானவர் சாற்றினர்.

(இ-ள்.) நித்தனே முப்புரமெரித்தவனே வெள்ளையானையேறிய தேவேந்திரனளித்தபெண் வீரவன்னியனுக்கு இணையாகுமென்றுசொன்னார்கள் எ-று. (உஉ)

அண்டர் கோனரு ளாயிணை யொன்றிணை
பண்டி லெந்தன் சுதன்கரம் பற்றின
னெண் டொடிக்கிணை யாருள ரோவென
வண்டு மொய்க்குழல் வஞ்சியொண் டுண்டென்றார்.

(இ-ள்.) தேவர்க்கரசனான தேவேந்திரனளித்தபெண்ணைமுன்னால் நம்முடையபிள்ளை சுப்பிரமணியர் கைப்பற்றினதெய்வயானைக்கு இளையபெண்ணிருக்கிறதோவென்ன சுவாமி வண்டுமொய்த்த கூந்தலுடைய பெண்ணொன்று இருக்கிறதென்றார்கள் எ-று. (உங)

நீல கண்ட னிருபன் னவிலுவன்
சேலெனும் விழி தேசினை செப்பென
பால னற்கறி யுண்ட பரமனுன்
கோலங் காண்குவ ரோவெனக் கூறுவான்.

(இ-ள்.) நீலகண்டனான பரமசிவன்சொல்லுவார் சேற்கெண்டையையொத்த விழியையுடைய பெண்ணழகைச்சொல்ல பாலனான சீராளன்கறியைச் சாப்பிட்ட உன்திருவிளையாட்டை காண்பவருண்டோவென்று சொல்லுவார்கள். எ-று. (உச)

கொண்டல் சைவலங் கூந்தல் கருமுகிற்
றண்டலைக் கொன்றை காய்த்த கத்தெழு
வண்டி னங்கரு மணலைப் பழித்திடா
மண்டிருள் குழை யேசொலு மாதினள்.

(இ-ள்.) மேகஞ்சைவலப்பாசியும் கறுப்புமயிரும் சமுத்திர அலையும்கொன்றைக்காயும் இதுகளைப்பழித்த கருவண்டையுங்கருமணலையும் உவமைசொல்லக்கூடாமல் எங்கும்படரப்பட்ட ஆடி மாசத்து அமாவாசை யிருட்டுபோலிருக்கப்பட்ட கூந்தலுடைய பெண்ணென்றார் எ-று. (உரு)

திலவிளம்பிறை நெற்றி மதன்கழை
சிலையெனப் புருவம் விழி சேல்விடங்
குலைசெய் கூற்றம்பிதோ குழை வள்ளையோ
நலமெனுங் குமிழாமெனு நாசியாள்.

(இ-ள்.) மூன்றும்பிறைபோல நெற்றியும் மன்மதன் கருப்புவில்லைப்போன்ற புருவமும்சேலும் நஞ்சையையும்பழிசெய்து அம்புபோலிருக்கும் கண்ணும் வள்ளைத்தண்டுபோலக் காதும்குமிழம்பூப்போன்ற மூக்குமுடைய கன்னி எ-று. (உகூ)

கஞ்சஞ் சாணைக் கபோலமு மென்பர்செம்
பஞ்சு தோய்ந்து பனிநகை யாண்மொழி
கொஞ்சு கின்ற குயிலரக் காமிதழ்
வஞ்சு கின்ற வளையென் றறைந்தனர்.

(இ-ள்.) கண்ணடியையுஞ் சாணைக்கல்லையும் இணைசொல்லக்கூடாதகன்னமும் செகப்புநிறமான பலபற்கரைசாற்றிய பல்வரிசையுங் குயிற்போலோசையும் பவளம்போலவாயும்சங்குபோன்ற கழுத்தும் எ-று. (உஎ)

கச் சிறுக்கி கனத்ததாய் தனத்தினை
மெச்சு கின்றனர் மேதினி மிக்கவர்
அச்ச மாக வறைகுவ னத்தனே
யிச்சை யாகவே கேளென் றிசைத்தனர்.

(இ-ள்.) ரவிக்கை இறுக்கிக்கட்டப்பட்ட ஸ்தன்னியத்தைக் கண்டு மெச்சுவார் பூலோகத்தார் அதைநாங்களச்சமாகச் சொல்லுவோம் கேளுமென்று சொல்வார்கள் எ-று. (உஅ)

மாரன் றன்முடி யோமலை மஸ்தகம்
பூரணக் குடமம்பு யந்துக
சேரக் கோங்கரும் பென்னுங் குமிழியின்
றுது மோதின ராலிலை யுந்தியோ.

(இ-ள்.) மன்மதன்கிரீடமோ மலையோ யானைமத்தகமோ பூரணகும்பமோ தாமரையரும்போ இவைகளை யிணைசொல்லக்கூடாதஸ்தனபாரமும் ஆலிலைபோன்ற வயிறும் எ-று. (உகூ)

இடையுண்டோ வில்லையோ வென் றியம்பிடும்
துடி யணிந்த பொற்றாசின ளாமிவள்
கடக மன்னுங்கரமலரா மின்னின்
கொடியெ னுவளர் கொம்பனை யாளரோ.

(இ-ள்.) இடையுண்டோ யில்லையோசொல்லவரிதாகும் பீதாம்பரமணியப்பட்ட இடையுடையவளாகும் கடகமணிந்தகை காந்தள்மலருக் கிணையாகும், மின்னல்கொடிபோல வளரப்பட்ட பெண்ணாகும் எ-று. (ந௰)

வாகை சூடும் வடிவ மதிக்கயி
ருகமத்தினோ ராய்ந்துரை செய்தன
ரூக மாந்தளிர் மேனி யுரைத்திடும்
மேக லாபர ணத்தின்மின் னளரோ

(இ-ள்.) வெற்றிமாலைசூடிய தேகவழகை வேதமுணர்ந்தோர்கள்சொல்வார் மாந்துளிர்போன்ற மேனியுமதிலணிந்த மேகலாபரணத்தையுடைய பெண் எ-று. (ந௧)

வேறு.

இப்படியமர ரியம்புடவீச னிதையமுமகிழ்ந்து வாசவன்பாற்
செப்பினரெந்தன் சிறுவனுக்குன துசெல்வியையளித்தருளென்றே
மைப்படிகன்ற வரன்மலரடியை மனதினிற்றுதித்து கைகூப்பி
அப்பனேயுன்றனருட்படிசெய்தாலலவென்பதொருவர்களுண்டே

(இ-ள்.) தேவர்கள்சொற்கேட்டபரமசிவன்மகிழ்ந்து தேவேந்திரமகாராஜனே என்னுடையபிள்ளை வீரவன்னியமகாராஜனுக்கு உன்னுடையபெண்ணைக் கொடுக்கவேணுமென்று சொன்னபரமசிவன்பாதத்தில் தெண்டனிட்டுநமஸ்கரித்து தகப்பனாகியவுமதருட்படிக்குச்செய்தால் அதைத்தடுப்பவர்க ளுண்டோவென்றான் தேவேந்திரன் எ-று. (ந௨)

தசபொருத்தங்க டழைத்திருந்தாலென்றையலையளிப்ப னென்றுரைப்ப,நிசப்பிரமனையுமழைத்தினிபொருத்தமிகழ்த்திடுமென வவனுரைப்பான், வசப்புளதாகும்வன்னியகுலமு மண்ணினிற்பலிதமாய்தழைக்க, விசைத்தினிமனங் கூறெனவிமையவர்கோ னிதயமோர்ந்தியம்பின னன்றே.

(இ-ள்.) தசபொருத்தஞ்சரியாயிருந்தாலென்பெண்ணைத்தருவேனென்று இந்திரன்சொல்ல சுவாமிபிரமதேவனையழைத்துபொருத்தம்பாரென்ன பொருத்தமிருக்கிறது வீரவன்னியகுலம் பூமியில்பலிதமாகும் தேவேந்திரராஜனே உன்மனமிசைந்து கலியாணஞ்செய்யச்சொல்லுமென்று பிரமதேவன்சொல்ல தேவேந்திரன்மனந்தெளிந்து சொல்லுவான் எ-று. (ந௩)

முகூர்த்தநாளென்று மொழியவேயிடபமு தன்மைசேர்தேதி யுமெழில், மகத்துவமமரபக்ஷமுமந்திரிவாரமுந் தசமியும்வளர்பூச ம்மிகுத்தகற்கடகம் நன்றெனமொழிய விண்ணவருளமெலாங்களி க்க நகைத்துமுப்புரத்தை யெரித்தவன்சம்பு மாமுனியிசைந்திட நவில்வான்.

(இ-ள்.) கலியாணநாள்என்றைக்குப்பொருந்தியதென்னவை காசிமாதம் ஏழாந்தேதிகுருவாரந் தசமிபூசநட்சத்திரம்கூடிய கட கராசியில் நன்றாயிருக்கிறதென்றுசொல்ல தேவர்மனங்களிக்கும்ப டியாக பரமசிவன்சம்புமகாரிஷி இசையும்படிசொல்லுவார் எ-று.

வன்னியமரபில் வளருமங்கல மெவ்விதம் வழுத்துவீரென்ன
வுன்னிவிஸ்வ கருமனுக்குரைக்க வொளிவிநாயகனென வமைத்து
பொன்னிறைச்சரடும்புதுமையாயளித்துப்புகலுவன்வீரவன்னியனை
மன்னியமரபோர்க் கிதுபெரிதாமென் றுரைத்திடமகிழ்ச்சி கூர்ந் [தனனால்.

(இ-ள்.) வீரவன்னியருடையகுலத்துக்கு திருமங்கில்யம் எவ் விதம்விளங்கப்பட்டது அதைசொல்லுமென விஸ்வகருமனை நினை க்கவந்தவிஸ்வகர்மனை மங்கிலியம் எந்தரூபஞ்சிருஷ்டிக்கிறதென்று கேட்க விநாயகனைப்போலும் பொன்சரட்டில்கோர்த்தது வீரவன் னியகுலம் எல்லோருக்கு மிதுபெருமையாயிருக்குமென்ன யாவ ரும் சந்தோஷமானார்கள் எ-று. (௩௫)

— அத்தனுமருள்வனஷ்டதிக்கினிலுள் ளனைவருநமதுழையடை ந்தார், ஒத்தநாளாகுமும்பர்கோனேவுனதோ வியமகடனை யழை யென்ன, நத்தவமிகுந்தவானவருடனே யயனுடனேகியே பெற்ற சிற்றிடைச்சியா ளகமுறவுரைத்தேசிறுமியைசிவிகையேற்றினரால்

(இ-ள்.) பரமசிவன்சொல்லுவார் எட்டுத்திசையிலு மிருக்கப் பட்டவர்க ளனைவர்களும் நம்முடையபதியில் வந்திருக்கிறபடியினா லே முகூர்த்தநாளின்றைக்குவந்து சேர்ந்திருக்கிறபடியி னாலேயும் தேவேந்திரனே சித்திரம்போன்ற உன்னுடையபெண்ணை யழைத் துவாவென்ன தவமிகுத்ததேவர்களுடனேபோயிந்திராணியுடனே கலியாணசங்கதிகளைச்சொல்லி பெண்ணைப்பல்லக்கிலேற்றினார்கள்

மேசடியரிருபா லெழிலுடன்சூழ விமையவர்முரசொலி யியம்ப
நாடகமின்னார் நடனமும்புரிய நாரதர் கின்னரர்பாடக்
கூடியயாழ் மத்தளசுரந்தாளங் குமுறிடவெளி லுளந்தருவின்
றோடவிழ்மலரை சொரிந்து மங்களமுஞ்சோபனமுரைகளுந்துதித் [தார்.

(இ-ள்.) தாதிகளிருபுறஞ் சூழ்ந்துவர தேவமுரசுசத்திக்கநட னமாதர்நடனஞ்செய்ய நாரதர்கின்னரர்பாட யாழ்வீணைமத்தளந் துத்திதாளவாத்தியமுழங்க கற்பகமலரைச்சொரிந்து மங்களசோ பனம் படித்தார்கள் எ-று (ந௲எ)

இந்திரனுலகிலிருந்து நற்கயிலையேகின ரிமையவர் குழாங்கள்
சுந்திரவெள்ளி மலையருகாகத் தோன்றியசம்புவி னகரிற்
சந்திரவுதைய மெனுமரியணையிற் ருதிசிவிகை மீதிருந்து
மந்திரமாலை தனையழைத்தேகி மகிழ்ச்சிகூர்ந்தன ரன்றே.

(இ-ள்.) தேவலோகத்திலிருந்து தேவகூட்டங் கைலையங்கிரிக் குவந்து சம்புமாநகரத்தில் பூரணச்சந்திரனுதையம்போல்தாதியர் பல்லக்கில் மந்திரமாலையை யழைத்துவந்து மகிழ்ச்சியாயிருந்தார் கள் எ-று. (ந௲அ)

சங்கரியீன்ற தநயன்வன்னியனைத் தழுவியேமுத்த மிட்டுரைப்பார்
எங்கள்கண்மணியே யிமையவர்கோனுமிசைந்தனன் மருமகனுகத்
துங்கமாதவமென் செய்தனையென்றே துதித்துநன்னதியினிலாட்டி
மங்களகோலஞ்செய்தனள் மகவின்வடிவினை பசுபதிகண்டார்.

(இ-ள்.) பரமேஸ்வரி வீரவன்னியனை தன்மகனைத் தழுவியெ டுத்து முத்தமிட்டுச்சொல்லுவாள் கண்மணியேதேவேந்திரன் மரு மகனுக என்னதவஞ்செய்தாயோவென்று மகிழ்ந்துகங்கா சலத்தி னுல் ஸ்நானஞ்செய்வித்து மணக்கோலமாகச் சிறப்புசெய்தா ளப் போது வீரவன்னியனுடைய அலங்காரங்களைப் பரமசிவன்கண்டு சந்தோஷமானுர் எ-று. (ந௲கூ)

வாசவன்பிரமன் மாலனைவோரும் வரிசையாய்காவணமுரைந் தார், மாசிலாமறையி னுளவிதிப்படியே மணவறையமைத்தெதிர க, நேசமாமர சாணியுமுட்பால் நிறைந்திடுமம்மிசால்கரகம், பா மாநிறப்பி யோமகுண்டத்தை பந்தமுட்டிதெனப் பகர்ந்தார்.

(இ-ள்.) தேவேந்திரன்பிரமதேவன் மகாவிஷ்ணுமுதலானவ ரும் கலியாணமண்டபத்திலிருந்தார்கள் அப்போதுவேதாகம சா ஸ்திரவிதிப்படி மணவறைசோடித்து அதனெதிராகஅரசாணிகால் நட்டுமுளைப்பாலிகைவைத்து அம்மிசாலுகரகம்நிறுத்தி ஓமகுண் டத்தை பந்தமுட்டியென்று பேரளித்தார்கள்இக்கலியுகத்தில் குச வன்செய்யப்பட்ட மண்கலசத்தைபந்தலைத்தொட்டுசெய்கின்றதை பந்தமுட்டி என்பார் எ-று. (சுய)

எங்கணுந்தீபமேற்றினர்கீதமிசைத்தனரிருடிமாதவரும்,அங்கிரர்வதிஷ்டன்குறுமுனிபுலத்தியனயன்மகவானுமாயிரங்கண்,டங்கிடவளித்த கோதமன்வியாசன்றவத்தின்மிக்கோருமணவறையின் இங்கிதவேத சாரமுமொலிப்ப வெழிலுறவிருந்தன ரன்றே.

(இ-ள்.) கலியாணவாசலில் எங்குந்தீபம்நிற்கப்பதங்கள்பாட அங்கிராரிஷி வதிஷ்டர் அகஸ்தியர் புலஸ்தியர் கௌதமர் வேதவியாசர் இப்படிப்பட்ட தவமிகுந்த ரிஷீஸ்வரர்களு மணவறையைச் சுற்றியிருந்து வேதகோஷ்டி செய்திருந்தார்கள் எ-று. (சுக)

நற்றவச்சனகனவிலவித்திரியுநல்லடியிறைஞ்சியேயிசைப்பான், உத்தமபந்தலிலாதமங்கள மிவ்வுலகுளதோவெனவுரைப்பான் பத்தரைமாற்று விழைத்தமண்டபமும் பரிதிபோலுதையமாயிருப்ப, புத்தியினீனத்தீர் பூதலப்புதுமை பொன்னுலகேற்குமோ வென்றான்.

(இ-ள்.) நல்லதவமுடையசனகரிஷிசொல்ல அத்திரிரிஷிசொல்லுவார் சுற்றிவந்துநமஸ்கரித்து உத்தமமானபந்தலில்லாத கலியாணம் எப்படியிருக்கும் இந்தஉலகத்தில் பந்தலிட்டு கலியாணம் செய்கிறார்களே அப்படியில்லையோவென சனகரிஷிசொல்வார்பத்தரைமாற்றுத் தங்கத்தில் ரத்தினமணிகளை யிழைத்திருக்குமண்டபங்கள் சூரியப்பிரகாசம்போ லிருக்கும்போது பந்தலென்னத்திற்கு தெய்வலோகத்துக்கு வேண்டியதில்லை பூலோகத்துக்குப்பந்தலொக்குமென்றார் சனகரிஷி எ-று. (சுஉ)

சீருடனெனதுசெவிகுளிர்ந்தினிமேற் செப்பெனச்சனகனுமுரைப்பன், வாரிசைமலரோன்மணவறையதனில் மகிழ்ச்சியாயுறைந்தவன்னியன்றன், பேருரைசெய்து கொலுவினிலிருத்திப் பிழையிலாச்சடங்கினைமுடித்து நாரிமந்திரமாலையைநதியாட்டிநண்மணக்கோலமும்புரிந்தார்.

(இ-ள்.) என்காதுகுளிரும்படி சொல்லென்ன சனகரிஷிசொல்லுவார் தாமரைமலரில்வாசமாகிய பிரமதேவன்மணவறையில்வீரவன்னியனை யழைத்துவந்துசடங்குகளைமுடித்து மந்திரமாலையை தீர்த்தமாட்டிவைத்து கலியாணச்சடங்குகள் செய்தார்கள் எ-று.

கோதிலாக்குழலிற் சம்பங்கியெண்ணெய்க் கூட்டியேயகிற்புகைக்கொடுத்து, சோதியாய்ச்சிவிவகுத்துபின்னலுமே சுடரென்வணிகலனமைத்து, காதிலணியுங்கச்சுமேலணியுங் கரமுணியினிடைய

ணிகப்ப, பாதமேற்சதங்கை நூபுரமொலிப்பபசும்பொன்பட்டா டையுமளித்தா.

(இ-ள்.) மயிரில் சம்பங்கியெண்ணெய்தடவி அகிற்புகைகாட்டிசிவிவகுத்து பின்னல்சடையிட்டு தாழம்பூ நெற்றிச்சுட்டிசடைக்குச்சிமுதலாகியது மணிந்து காதிலணியப்பட்டதக்கமுதலாகியது மணிந்து கையில்வளையலணிந்து காலில்சதங்கையிட்டுஇடுப்பிலொட்டியாணமிட்டு இடையில்பசும்பொன் பட்டாடையு மணிந்தார்கள் எ-று. (சச)

அம்பிகையணியு மணிகலமனைத்துமரிவையர்க்காமெனவளித்தே, உம்பர்கோன்மகளுக் குகந்துநன்மலரா லொளிபெறசூடினருளமுங், கம்பிதமன்ன மூக்கினிற்கண்ணிற் கறுத்தால்லஞ்சனந்தீட்டி, அம்புலிநுதலிற்சிந்துரமிலங்க வருமணவரை யிருத்தினளுல்.

(இ-ள்.) பார்வதியணியப்பட்ட ஆபரணம்மந்திரமாலைக் காகுமென்றுகொடுத்து தேவேந்திரன்மகளுக்கு நல்லமலராகச் சூடிமனங்களிக்கமூக்கில் தீபமூக்குத்தியுமணிந்து கண்ணுக்குமைதீட்டி நெற்றியில் சிந்துரப்பொட்டுமிட்டு மணவறையிலிருத்தினர்கள். ()

சேயிழைசடங்கு விதிமுறைசெலுத்தி சீருளவன்னியன்வலப்பால், சாயலாமயிலின் பெடையெனுமாது தழைத்திடதன்னிகரில்லா, மாயவன்றன்மக ளேமகுண்டத்தின்மந்திரமுரைத்தழல்வளர்த்து, நேயமாய்காம தேனுவினெய்யை நீதியாயாகுதிசொரிந்தார்.

(இ-ள்.) பெண்ணுக்குரியசடங்குசெய்து வீரவன்னியன்வலப்பாகத்திலிணையில்லாத பெண்ணையமர்த்திவிஷ்ணுமகனுனபிரமதேவன் வேதவிதிப்படிமந்திரஞ்சொல்லி அக்கினிவளர்த்திகாமதேனுவின் நெய்யினல் ஆகுதிகொடுத்தார்கள் எ-று. (சரு)

வானவர்பேரி முழங்கிடமலரோன் வன்னியன்றுதை யீசனையும்
பானலமகவா னிருபுறஞ்சூழ சத்தியமுரைப்ப நீர்ப்பரிந்து
சோனையின்மறைபோற் கற்பகமலரைச் சொரிந்திடச்சுந்தரவீரன்
சானுமந்திர மாலையினடுக்கழுத்திற் சரடுசூழ்மங்கலமணிந்தான்.

(இ-ள்.) தேவதுந்துமிமுழங்கபிரமதேவன்பரமசிவனையுந்தேவேந்திரனையும் இருபக்கதிலும்வைத்து சத்தியமுரைத்து நீர்வார்த்துக்கொடுத்துசோனைமலர்போல கற்பகமலரைப்பொழிந்துஅழகுமிகுந்த வன்னியமகாராஜன் இலக்ஷிமிக்குசமதையாகிய மந்திரமாலைகழுத்தில் பொன்சரடுகோர்த்த தாலியைக் கட்டினன் எ-று.

## வேறு.

வன்னியன் மந்திர மாலே செங்கரந்
தன்னுடை கரத்திறைற் பிடித்துத் தையலே
மன்னிய நெற்பொறி மகவா னளித்திடுந்
தன்னது கரத்திறைற் சயந்தன் சொரிந்தனன்.

(இ-ள்.) வீரவன்னியமகாராஜன் மந்திரமாலே கைவிரலேத்தன் கையிறைற்பிடித்து ஓமகுண்டத்தை வலம்புரிந்து நெற்பொறியிந்திரன்மகன் சயந்தன் சொரிந்தான் எ-று. (சஅ)

செம்மலர் திருவெனுஞ் சேயிழைப் பதம்
அம்மியி லிருத்தியே வருந்ததிப் பெயர்
கொம்மையா முலேவளர் கோதை கன்றிட
சிம்மா சனத்தினிற் செழிப்ப விருந்தனன்.

(இ-ள்.) செந்தாமரையில்வாசமானஇலக்ஷ்மிபோல மந்திரமாலேயின்வலதுகாலே அம்மியில்வைத்து பெண்காணும்படி அருந்ததியைக்காட்டி சிம்மாசனத்தி லிருவருமிருந்தார்கள் எ-று. (சகூ)

சங்கர னரியயன் தண்டுலத் திறைல்
மங்களச் சேஷைக ளிட்டு வாழ்த்திறைர்
நங்கையி னுதலினில் மாமன் பட்டமும்
இங்கித மாமியும் பட்ட மியற்றிறைள்.

(இ-ள்.) பரமசிவன்விஷ்ணுபிரமன்சேஷைபிட்டுவாழ்த்திறைர்கள் மந்திரமாலேயின் நெற்றியில் மாமன்பட்டமு மாமிபட்டமும் பரமசிவனும் பார்வதியும் கட்டிறைர்கள் எ-று. (ருய)

நன்னநல் வேளேயில் நாரி பாகனும்
தன்னுள மூவகையாய்த் தான மீந்தனன்
வன்னிய பூபனும் மாதிடத் தூறப்
பொன்மணி மண்டபம் புக்கி றைனரோ.

(இ-ள்.) நல்லவேளேயில் பார்வதிக்குஇடப்பாகங்கொடுத்தபரமசிவன் தனக்குச்சந்தோஷமாகி பூரிதானங்கொடுத்து பெண்ணேயும் பிள்ளேயையும் பொன்னிறைலிழைத்த மண்டபத்திலழைத்துப் போறைர்கள் எ-று. (ருக)

## வேறு.

சந்தனமணிந் தடைக்காய்த் தானவ ரருந்தவீரன்
சுந்தரக்கோல மன்னன் சுரரடி யிறைஞ்சவேத

மந்திரமுரைத்து வாழ்த்த மகேஸ்வரனுமையும்வாழ்த்தி
யந்தவஞ் செழுத்தையோத யரியயன் வாக்குப்பெற்றுன்.

(இ-ள்.) சந்தனதாம்பூல மனைவருக்கும்வழங்கி வீரவன்னியமகாராஜன் கலியாணகோலத்துடன் யாவரையும்வணங்க வேதவாக்கியங்களால் வாழ்த்தினர்கள் பரமேஸ்வரனும் பார்வதியம்மனும் பஞ்சாக்ஷரமிட்டார் பிரமாவும் விஷ்ணுவும்வாழ்த்தியவாக்கு பெற்றுன் வீரவன்னியன் எ-று. (ருஉ)

தேவர்கோன் றளிறைஞ்சி செப்பிய வாக்குபெற்று
காவண கோலமன்னி களிப்புற விருப்பவீசன்
தீவர மாகவன்னந் திரட்டுப்பா லுடனளிக்க
யாவரு மருந்திநாக வல்லிகளனைத்துஞ் செய்தார்.

(இ-ள்.) தேவேந்திரன் பாதத்தில்வணங்கி நல்லவாக்குப்பெற்று கலியாணகோலத்துடனிருக்க பரமசிவன்சீக்கிரத்தில் அன்னந் திரட்டுப்பாலும் பதார்த்தத்துடன் விருந்தளிக்க அனைவர்களுமுண்டு நாகவல்லிசடங்குக ளனைத்துஞ்செய்தார்கள் எ-று. (ருங)

சோதிசே ருலுப்பைதன்னை சொகுசுடன் மகவானீய
வாதியனுவகை கூர்ந்தே வழகுசம்பந்தம் பூண்டு
கோதிலாக் குகனும்வள்ளி குஞ்சர மாதுவீசன்
நீதியாய் மணந்துமாது நிறைந்தநற் றேவையூட்ட

(இ-ள்.) பிரகாசமான உலுப்பைகளெல்லாம் தேவேந்திரன் கொண்டுவந்துவைக்கப் பரமசிவன்மகிழ்ந்துசம்பந்தமுறைகொண்டாடி சுப்பிரமணியர் வள்ளிதெய்வானையும் வீரவன்னிய மகாராஜனுமந்தரமாலையையும் நிறைவாக மருவூட்ட எ-று. (ருச)

ஈசனல்லருளும் பெற்றே யிமையவர் குழாங்கள்சூழ
மாசிலாச் சிவிகைமீதில் வஞ்சியாள் மகிழவேலன்
பாசமா மயின்மீதேறப் பார்த்திப வீரன்றானும்
நேசமாம் புரவிமீது நிரைந்திட வேகலுற்றார்.

(இ-ள்.) பரமசிவனுத்திரவுபெற்று மருமகனைக்கொண்டுதேவகூட்டஞ் சூழும்படியாகச் சிவிகையில்பெண்வரவும் சுப்பிரமணியர் மயில்மீதில்வரவும் வீரவன்னியன் அக்கினிக்குதிரையின்மேல் வரவும் வருகிறார்கள் எ-று. (ருரு)

துந்துமி முழங்கவீதி தோரண மிலங்கமாத
ரந்தவா லாத்தியேந்த வாயிள்ழ மாதராட

விந்திரன் கோயிலேகி யெழிலமு துண்டகாலை
மந்திர கிரிவாழீசன் மக்களை யழைப்பதானன்

(இ-ள்.) துந்துமிமுழங்க வீதிகளில்மகரதோரணம்விளங்கமாதர்கள் ஆலாத்தியேந்திவர அரம்பையர்நடனமாட இப்படியாகத் தேவேந்திரனுடைய சிங்காரமண்டபத்தில்போய் விருந்துண்டநாளையில் பரமசிவன்பிள்ளைகளை யழைக்கும்படி எ-று. (௫௬)

பொன்னக ருறைந்தான் தேவர்பூபனு மெதிற்கொண்டேகி
யன்னவ னடியையேத்தி யழைத்துமே யமுதுநல்க
மின்னிடை மாதர்சூழ வேலன்வீ ரனுங்களிக்க
நன்னயப் பணிகளீய நாரிபாகன் பாற்சென்றார்.

(இ-ள்.) தேவேந்திரலோகத்தில்பரமசிவன்எழுந்தருளியபோது தேவேந்திரனெதிர்வந்து வணங்கிதன்னுடைய பதியிலிருத்தி அன்னமளித்து மின்னலையுடைய பெண்களுடனே சுப்பிரமணியர் வீரவன்னியராஜனுக்கும் பொற்பணிகளும் பீதாம்பரமுந் தரித்து பரமசிவன்பின்னல் அனுப்பச்சென்றார்கள் எ-று. (௫௭)

கைலையி லுறைந்தவீசன் காதலா னுரைப்பானெந்த
னையினுள வீரனேரு ருத்திரவன்னிய னென்றே
வியல்புள நாமமீய்ந்தே னிவ்வுல கினில்வாழென்ன
குயின்மொழி மடந்தைசூழ குழகனை நோக்கிக்கூறும்.

(இ-ள்.) கைலாசகிரியிலிருக்கும் பரமசிவன் ஆசையாகச்சொல்லுவார் கெம்பீரமுடைய வீரவன்னியமகாராசனென்றும் உருத்திரவன்னியனென்றும் பேரளித்தேனிந்தசம்புநகரத்திலிருந்துவாழென்றுசொல்லஅப்போது தன்பெண்சாதியானமந்திரமாலையுடன் பரமசிவனைப்பார்த்துசொல்லுகிருன்வீரவன்னியமகாராஜன்எ-று.

நாதனே நடனபாதா நற்சிறு பாலரின்று
தீதிலா தளிப்பையென்னத் திங்கள்செஞ் சடையாரோம
வேதிகை யருகிற்சார்ந்து மிகவன்பு புரியபாலர்
சோதிசேர் நான்குவீரர் தோன்றியே தொழுதுநின்றார்.

(இ-ள்.) நாதனே நடனம்புரிபவனே நல்லசிறுபிள்ளைகள்எனக்குஅளிப்பாயென்று கேழ்க்கச்சந்திரனை சடையிற்றரித்த பரமசிவன் ஓமகுண்டத்தருகில்நின்று கிருபாகடாக்ஷம்புரிந்திடும்போது நாலுபிள்ளைகள்தோன்றி பரமசிவனைவணங்கித் தொழுது நின்றார்கள் எ-று. (௫௯)

## வேறு.

வான் பரியுட னருளியு மன்னிட
தேன் பரவுசெந் தாரணி தோளின்மேவ
கூன் சிலைக்குது கூற்ற மிலங்கவெங்
கோனடிக் கண்டிறைஞ்சிடக் கூறுவான்.

(இ-ள்.) ஆகாசந்தாவப்பட்ட நாலுகுதிரையும்நான்குவீரரும் செங்கழுநீர்மாலை தோளிலிருக்கும்படி வில்லைக்கையிற்பிடித்துஎமனுக்குசமதையாய் பரமசிவன்பாதத்தில் வணங்கும்போது சொல்லுவார் எ-று. (சூ௰)

எந்தன் மைந்த னிதைய மூவகையால்
வந்த பாலகர் நால்வ ரவர்பெயர்
முந்திய பாலகன் கிருஷ்ணனென் றும்பின்
தந்த வன்பெயர் பிரம னென்றனன்.

(இ-ள்.) என்னுடையபிள்ளை வீரவன்னியன்பிள்ளை நால்வர்களுக்கும் பேரென்னவென்றால் மூத்தவன்கிருஷ்ணவன்னியன் இரண்டாவதுபிள்ளைபேர் பிரமவன்னியன் எ-று. (சூக)

மூத்தனுஞ் சம்பு மூன்றும் புதல்வனும்
சத்தி யக்கனி நாமமுஞ் சாற்றினர்
பத்தி யாகிய பாலரிந் நால்வரும்
நத் தவத்துட னண்ணிய காலையில்.

(இ-ள்.) மூன்றும்பிள்ளை சம்புவன்னியன் நாலாம்பிள்ளைக்கு அக்கினிவன்னியனென்றும் இப்படியாகப்பேரளித்துப் பத்தியுடன் இந்நால்வர்களும் இருக்கும்போது எ-று. (சூஉ)

நாலு வேதமு நற்சிலை யஸ்திரம்
வேல ஞோதை வினவிய காலையில்
ஆல முண்டவ னன்புக் குகந்தவன்
சீல காந்தமுனி யளித்த செல்வியாள்.

(இ-ள்.) நாலுவேதமும் அம்புவித்தை முதலாகியனவுஞ்சுப்பிரமணியர் கற்றுக்கொடுக்கக் கற்றுக்கொண்டு பரமசிவனுக்குகந்த காந்தமகாரிஷி யளித்தபெண் எ-று. (சூரு)

இந்தி ராணி யெழிலுள நாரணி
சுந்தரிப் பெயர் தோகை சுமங்கலி
யந்த மாம்பெயர் நால்வ ரவர்தமை
சந்த வீரன் தனையர் மணந்தனர்.

(இ-ள்.) அந்தப்பெண்ணின்பெயர் இந்திராணியென்றும் நாகஜோதியென்றும் சுந்தரியென்றும் சுமங்கலியென்றும் நாலுபெண்ணையும்வீரவன்னியன் பிள்ளைகள் நாலுபேருங்கலியாணஞ் செய்துமகிழ்ந்திருந்தார்கள் எ-று. (௬௪)

பஞ்ச வன்னிய பார்த்திபர் பாங்கினை
பஞ்ச பாணனை பஸ்மம தாக்கிய
வஞ் செழுத்தின் பரமனைத் தேர்ந்துநல்
லஞ் செழுத்துச் சரிக்கப் படையென.

(இ-ள்.) ஐந்துவன்னியருடைய பலத்தை மலர்பாணமுடைய மன்மதனையெரித்தெழுப்பிய அஞ்செழுத்தையுடைய பரமசிவன் மனதில் அஞ்செழுத்தையுச்சரித்தார் அந்தக்ஷரத்தில் வீரப்படைகள் எ-று. (௬௫)

பந்தி பந்தியாய்ப் பாரி னிறையவும்
தந்தி மாவு மிரதமுந் தாஷ்டியாய்
வந்த விலட்சம் படைகள் மயேஸ்வரன்
சிந்தை மெச்சச் சிருஷ்டிசெய் தானரோ.

(இ-ள்.) வரிசைவரிசையாகச் சேனைகள்பூலோகத்தில் வந்து நிறைய யானை குதிரைதேர் இவ்விதமாக இலக்ஷம்சேனைகள் பரமசிவன் சிருஷ்டிசெய்தார் எ-று. (௬௬)

புயலெனுந் தனு மன்னு புயத்தினர்
தய விலாத மனத்தின் தானவர்
அயர்வு நீக்கு மருஞ்சிலை வாளியும்
புய கரத்திற் பிடித்திடும் வீரரே.

(இ-ள்.) இருண்ட மேகம்போன்ற புயமும் தயவில்லாத மனமும் தேவர்களிடுக்கண் தீர்க்கப்பட்டபாணமும் கையில்பிடித்தவீரர்கள் எ-று. (௬௭)

ஈரேழ் பதினா லுலகங்களில்
சேரு மாண்பரின் சென்னி யொருகணை
யேரம்பேகி யுடைப்பர்க ளண்டமும்
சூரர் வேரை தொலைத்திடும் வீரரே.

(இ-ள்.) ஈரேழுபதினாலு லோகங்களிலிருக்கப்பட்ட மனுக்களுடைய சிரசைஒருபாணத்தினாலே அறுத்துப்போடுவார்கள்இராக்ஷதரைக் கொல்லப்பட்ட வீரர்கள் எ-று. (௬௮)

அட்ட குண்ட யருங்கரத் தண்டினல்
தட்டி நற்புயத் தாலதைச் சாய்ப்பவர்
மட்டி லாதவரக் கரை மண்டிநாய்
குட்டி யென்று கொலேசெயும் வீரரே.

(இ-ள்.) அஷ்டகுலபருவதத்தை தண்டினலடித்துத் தன்புய த்தால் மலேகளேச்சாய்த்துப்போடுவார்கள் இராக்ஷதக்கூட்டங்களு டனேயெதிர்த்துச் சண்டைசெய்து நாய்க்குட்டிக்குச் சமதையாய் க்கொன்று போடப்பட்டவர்கள் எ-று. (சுசு)

ஒரு சரத்திலு வரிசு வறும்மன்
ஞெரு சரத்தி னுலகம் பொடியெழும்
ஒரு சரத்தி லுதிர்ந்தன தாரகை
ஒரு சரத்தி லுரகந் திடுக்கிடும்.

(இ-ள்.) ஒருபாணத்தில் சமுத்திரம்வற்றிப்போகும் ஒருபா ணத்தினல் உலகம்பொடியாய்ப்போகும் ஒருபாணத்தினல் நக்ஷத் திரம்உதிரும் ஒருபாணத்தில் நாமலோகம்திடுக்கிடும் எ-று.(எ)

அண்டர் லோக மதிர்ந்திடு வாளியும்
கொண்ட லேழு குதித்திடு சூலமும்
சண்டன் பாசஞ் சாரங்கம்பி ஞகமும்
துண்ட மாக துணிக்கும்நல் வீரரே.

(இ-ள்.) தேவலோகங்கிடுகிடென்றுஅதிரப்பட்டபாணங்களு ம் எழுலோகங்களும்கொதிக்கும்படியானசூலாயுதமும் எமனுடை யபாசமுஞ்சாரங்கமும் பரமசிவனுடையவில்லும் இதுகளேத்துண் டந்துண்டமாக வெட்டியெறியப்பட்ட வீரர்கள் எ-று. (எக)

சேனைசூ ழரன் சேயும்நற் பாலரும்
வானு ளோரு மயனு மாலுடன்
கான கத்தி லுறைந்த முனிவரும்
தான கத்தி றயங்கி தவிர்ந்தனர்.

(இ-ள்.) சேனைகள்வந்துசூழப்பட்ட அரன்மகன்வீரவன்னிய னுடையபிள்ளேநால்வரும் தேவர்களும்பிரமாவும் விஷ்ணுவும்காட் டில்வாழப்பட்ட ரிஷிகளும் முனிகளும்கண்டு தங்கள்தங்கள் மன திலிருக்கப்பட்ட வாட்டங்களே யகற்றினர்கள் எ-று. (எஉ)

மன்னு ருத்திர வன்னியன் மாதுடன்
றுன்னு பால ரினங்களுஞ் சூழவே

அன்ன மேறு மயனு மறிகிலா
முன்ன வன்பத மேத்தி மொழிகுவான்.

(இ-ள்.) சம்புநகரம் இருக்கப்பட்ட உருத்திர வன்னியனும் அவன்பெண்சாதி மந்திரமாலையும் பிள்ளைநால்வரும் அவர்கள்தேவியரும் சூழும்படியாகபிரமன்அறியாதபரமசிவன்பாதத்தைவணங்கினார்கள் எ-று. (எந)

வன்னி யாலென்னை வந்திடச் செய்தனை
பொன்னகர்க் கிறை புத்திரி யீந்தனை
குன்ன மின்றி குழந்தை யளித்தனை
நின்று செஞ்சர வீரரை யீய்ந்தனை.

(இ-ள்.) யாகசாலையில்எழுந்த அக்கினியில்என்னைபிறைப்பித்து தேவேந்திரன்பெண்ணை மணம்புரிவித்தீர்குன்னமில்லாதபிள்ளைகளையுமளித்தீர் அவர்களுக்கும் கலியாணஞ்செய்தீர் சேனைகளையுமுண்டுபண்ணிக் கொடுத்தீர்சுவாமி எ-று. (எச)

வீர னெனப்புகழ் மேதினி மிக்கவர்
கூரி யேநதி பகுதி யளித்திட
பாரமர்ந்து பலனுற வுன்னருள்
தாரு மென்றுரை சாற்றினன் மன்னனும்.

(இ-ள்.) சுவாமி வீரவன்னியமகாராஜாவாகிய என்பெருமையைபூலோகத்தில்வாழப்பட்டபேர்கள்என்னைபுகழ்ந்துவணங்கப்பங்கட்டும்படியாகவும் பூமியையாளும்படியான பராக்கிரமும்கடாக்ஷிக்கவேணுமென்றான் வீரவன்னியராஜன் எ-று. (எரு)

அத்தை நாமருள் செய்குவ னரசனே
சித்தர் கின்னரர் தேவ ரரியயன்
மெத்த வாட்டு மிடிகளைத் தீர்த்தபின்
பத்தி யாகவிப் பாரளிப் பேனென்றான்.

(இ-ள்.) பரமசிவன்சொல்லுவார் வீரவன்னியருத்திரரூபனே சித்தர் கின்னரர் தேவர்பிரமாவிஷ்ணு முனிவர்கள் மனதுவாடும்படியாகசெய்கிறவாதாவிசூரராக்ஷதனைக் கொன்றுவந்தபிறகுஉனக்கிந்தபூமியை யரசுசெலுத்தும்படி செய்வேனென்றார்பரமசிவன்.

உள்ளம் பூரித் துரைத்தனர் வீரர்கோன்
வள்ளலே யவு ணதி சிரத்தினை
துள்ள வெட்டித் துவசமுஞ் சூடுவன்
எள்ளி லெண்ணெயதா யெங்கு நிறைந்தவா.

(இ-ள்.) பரமசிவன்சொன்னவுடனே மனதுபூரித்து ஆனந்த சந்தோஷத்திலழுந்தி சொல்லுவான் சுவாமிவாதாவிசூரனுடையசிரத்தைத்துள்ளி விழும்படியாகவெட்டி வெற்றிக்கொடி கட்டுகிறேன் எள்ளுக்குள்எண்ணெய்போ லெங்கும்நிறைந்தசுவாமி எ-று ()

ஈசனே யென் றிறைஞ்சி யெழிலுள
போசன முண் டுள்ளமு மன்னிட
வாசவன் றரு மந்திர மாலையின்
நேச மாமி யொன் றுநிகழ்த்துவள்.

(இ-ள்.) பரமசிவனைத் தோத்திரஞ்செய்து பணிந்துபோசனமருந்தி வீரவன்னியன்மனது புளகிதமாகும்படியாகத் தேவேந்திரன்பெண்ணாகிய மந்திரமாலை நேசமாயிருக்கப்பட்ட மாமியாகிய பரமேஸ்வரியைத் தொழுதுநின்றுளப்போ பார்வதிசொல்லுவாள் எ-று. (எஅ)

பெண் மயிற் பேடையின் சற்குழல்
தண்மை யாமலர்த் தாரணி தையலே
வண்மை யெந்தன் சிறுவன் மணந்திடும்
கண்மணி யென்றுங் காதலன் வாழ்கவே.

(இ-ள்.) அழகில்மிகுந்தபெண்ணே மயிற்சாயலையுடையவளே தேனொழுகுங் கூந்தலையுடையவளேநறுமலர்மாலையுடையவளேவளமையான என்னுடையபிள்ளையை மணந்தவளேஎன்று வாழ்வீரென்றுள் பார்வதி எ-று. (எகூ)

என்று முன்கிளை ஞோரிவ் வெழிலதாய்
மன்றலந் தொடை யோடுவர் மண்ணின்மேல்
வென்றி சூடியவீரன் விரும்பிய
பென்றொடி யென் றுத்தமி யோதினள்

(இ-ள்.) என்றைக்குமுன் சுற்றத்தார்களிந்த பூலோகத்திலே வெற்றிபொருந்திவாழ்வார்கள் வீரவன்னியராஜன் தேவியாகியமாதேயென்று பரமேஸ்வரி வாழ்த்தினள் எ-று. (அ0)

அட்ட பாலரோடைய னறைகுவான்
துட்டரக்கரைத் தூளிதஞ் செய்பவ
னிட்ட மாமுறை யேகுமென வவர்
மட்டிலாப் பதியேகி மகிழ்ந்தனர்.

(இ-ள்.) அஷ்டபாலகராகிய அனைவரையும்பார்த்து பரமசிவன்சொல்லுவார் துஷ்டனான வாதாவிராக்ஷதனை கொட்டமடக்கி

வெட்டி தூளாக்கும்படி வீரவன்னியராஜன்செய்குவான் உங்களுடைய துயரம்நீங்கி உங்களுங்கள் பட்டணம்போய் வாழ்வீர்களென்ன அப்படியேபோய் வாழ்ந்திருந்தார்கள் எ-று. (அக)

இப்படிக் கவ தார மெடுத்தனர்
தப்பிலா முனி யேயெனச் சாற்றினர்
கப்பு மேனி கயவர்கள் கதையெலாம்
செப்பு வோமென சிந்தை வைத்ததே.

(இ-ள்.) இப்படிவீரவன்னியர் வர்த்தமானங்களைக் குற்றமில்லாத அத்திரிமகாரிஷியே கேட்டீரோவென்று சனகரிஷி சொல்ல இப்பால்ராக்ஷதாளுடையகதையை யின்னஞ்சொல்லுகிறேன்காது கொடுத் தின்பமாய்க்கேளுமென்று சொல்லுகிறூர்சனகரிஷிஎ-று.

## வன்னியராஜாக்கள் உற்பத்திச்சருக்கம்.

முற்றிற்று.

---

ஆக பாயிரம் உட்பட சருக்கம்-கக-இ
திருவிருத்தச் செய்யுள் ருஎகூ.

௨

கடவுள் துணை.

# பதினோராவது.

# கூறைச்சருக்கம்.

இமையவரிப் படியிருக்க வியக்கரதிபதியான விறைவனன்பால்
அமையுமமைச்சரை நோக்கி யமராய னரியுமஷ்ட பாலரானோர்
நிமைநேரமகலாமலென்னேவற்செலுத்தவரை நெடுநாட்காணேன்
நமதுதவமவமாமோ வென்றுபுவி நடுங்கவுரை நவிலலுற்றான்.

(இ-ள்.) தேவர்கள்முதல்யாவரும்வாழப்பட்டவிடத்தில்போ யிருக்கும்போது ராக்ஷதர்க்கரசனான வாதாவிதன்னருகிலிருக்கிற மந்திரிகளைப்பார்த்துச் சொல்வான்தேவர்பிரமவிஷ்ணு அஷ்டதிக் குப்பாலகர் முதலாகியபேரும் என்னிடத்தில் அகலாமலிருந்துநா னிட்டவேலையைச் செய்துகொண்டிருப்பார்களே அவர்களை நெடு நாளாகக்காணோம் என்தவம் அவலமாகிவிட்டதேயென்று பூலோ கம்நடுங்கும்படி மகாகோபத்துடன்சொல்லுகிறான்வாதாவிஎ-று.

ஒருமுனியாலென் தமையனையிழந்தகோரமாய்த்தவமதுசெய்ய,எருதினிலேறி யெனக்கருளீந்தவின்பமுந்தவறின்றிபணிந்தேன்
அருவுரையமரர் கோன்முதலாயித் தரணியிலேவலேபுரியும், பெரு
மையையிழந்தால் பிரர்நகையாரோபேசுவீரமைச்சரே யென்றான்.

(இ-ள்.) முன்னாளிலே அகஸ்தியமகாரிஷியால் என்தமயனை யிழந்து அகோரமாகியதபசுசெய்து பரமசிவன்வந்துவரமளித்தார் அதனாலேநான்சவுக்கியமடைந்தேன் கற்பகத்தருவிலரசு செய்யுந் தேவேந்திரன்முதலானபேரும் என்பட்டணத்திலிருந்து ஏவல்செ ய்தார்கள் அந்தப்பெருமையை யிழந்துபோகுங்காலங்களில் பிறத் தியார் நம்மைநகைப்பார்களே யென்று மந்திரிகளிடத்தில் வாதா விசொன்னான் எ-று. (௨)

அப்பொழுதமைச்ச ரரசனையேத்தி யறைகுவ ரஷ்டதிக்கெல்லாம்
தப்பிலாவுனது கீர்த்தியைநாட்ட தானவரேவலுக் குகந்தார்
மைப்படிகண்ட வண்ணலின்னருளால் வண்மைநம்பதியகன்றேகி
இப்பொழுதிறைஞ்ச வந்தவரிதையமியம்பிடகருவமு மடைந்தார்.

(இ-ள்.) அந்தவேளையில்மந்திரிமார் ராசனைவாதாவியைப்ப ணிந்துசொல்லுவார் மந்திரிகள்இந்த எட்டுதிக்கும் உன்னுடையப

ராக்கிரமும்கீர்த்தியும் புகழும்காட்டினது தேவர்முதலாகிய அனைவரும் உம்முடையயேவலுக் கிசைந்திருந்தார்கள் பரமசிவன்கடாக்ஷத்தினுலே நம்முடையவிடம்விட்டுநீங்கிப்போய் உம்முடையபாதந்தொழாமல் அளவில்லாத கருவமடைந்தார்கள் எ-று. (ங)

மேருவினுறையும் விமலனதிதையம் வெகுளிசூதர னவனரிக்கூரியவரமுங் குறைத்திடவறியான்கோதிலான்பழுதெனலாகார்சீருடனளித்த சேயெனுவேன்லறிணியதோசீதரனருளி,வோரிருவோரை யன்றிமற்றொருவரு மமரருக்கிடங்கொடா வென்றுன்.

(இ-ள்.) பரமசிவன்வெகுளி சூதுசெய்யப்பட்டவனல்ல கொடுத்தவரங்களையழிக்க வகையறியாதவன் அவனைபழுதென்றுசொல்லலாகாது பரமசிவன்பிள்ளையான சுப்பிரமண்ணியராலே வந்தபலமிதுவாகுமல்லது மகாவிஷ்ணு தாஷ்டீகமிதுவாகும் இந்தவிரண்டுபேர்தவிர மற்றபோ தேவர்களுக்கிடங்கொடுத்துப் பேசமாட்டார்கள் என்றுன் வாதாவி எ-று. (ச)

தந்தருள்வரமுந்தற்பானழித்தால் தரணியிற்புகழ்ச்சிக ளுளவோ, வெந்தையானவனென்மீதினிற்பகைசெய்திடரெனவீய்ந்தனயீய்ந்தான், மைந்தரின்றீதைதந்தைகாப்பனரெனமறையொலிப்பதுவெனவமைச்சர், புந்திதேர்ந்துரைப்பீரெனவவுணன்றுள்போற்றியேபுகலுவரன்றே.

(இ-ள்.) கொடுத்தவரத்தைபரமசிவன்தானேயழிப்பாராஞல் இந்தபூமியில் அவர்புகழ்சசியை பெருமையாகசொல்லுவார்களோ என்னுண்டவரென்னிடத்தில் பகைசெய்யும்படியானகுற்றம் அவருக்கென்னசெய்தேன் அப்படியிருந்தாலும் பிள்ளைசெய்தகுற்றம் பெற்றவர்பொறுத்து ரக்ஷிப்பதுண்டு அதுபொய்யோவென்றுமந்திரிகளைக்கேழ்க்க மந்திரிகள்சொல்லுவார்கள் எ-று. (ரு)

நிருதர்பூண்டிருந்த நேமிமேலின்றி நீக்கினுருனது தாயிருந்தே அருளினவோரை பலனதனுலிந்த வவுணரின்கருவினை யணைந்தீர் பெருமுடியரசேவெங்கள்பெம்மானேபிதற்றியவினிதுரைமுழுதும் உருமையாக்கேளு முரகவாபரண னுயர்ந்தவனெனவுரை நீக்கும்.

(இ-ள்.) நிருதராகிய ராக்ஷதப் பூண்டிந்தப் பூமியிலில்லாமல் தொலைத்தபோது உன்னுடையதாய் அசோமுகியிருந்து உன்னைப் பெற்றுள் நீபிறந்தலக்கினத்தாலிந்த ராக்ஷதக்கூட்டங்களை யடைந்தாய் பெரியபுயமுடையஅரசே நாங்கள்சொல்லும்வசனத்தைஉறுதியாய்க்கேளும் சர்ப்பாபரணம்பூண்ட பரமசிவன் பெரியனென்கிறதைவிட்டுவிடும் எ-று. (சா)

வேலனுமாலும்வெகுளியாம்பகைஞர்மீதிடாதவருயிர்சிதைப்பர், சீலமுள்ளவனென் றுரைத்தருளானின்றீதனைசெப்பிடலாகா, காலனையுதைத்தான் காமனையெரித்தான்கதித்தமுப்புரங்களைமுனிந்தான், பாலனைத்தின்றான் பசுவதாய்ச்சோழன் பரிந்தருள்சுதன் பழிகொண்டான்.

(இ-ள்.) வேலாயுதனும்மகாவிஷ்ணுவும் பகைத்தவரைக்கொல்லுவார்கள் மகாசுத்தனென்று சொல்லும்பரமசிவன் மார்க்கண்டற்காக எமனையுதைத்தார் மன்மதனையெரித்தார் முப்புரமெரித்தார் சீராளனைத்தின்றெழுப்பினார் பசுரூபங்கொண்டுசோழராஜன் பிள்ளைவீதிவிடங்கனைத் தேர்வண்டிக்காலில் மடியச்செய்து அப்பழிக்கு பதில்பழிகொண்டார் எ-று. (எ)

அயன்முடியுகிராலரிந்தனனழலு மரவமுஞ்சூலமுமானும், பயமின்றியணிந்தான்பருவிடமிடற்றிற்பாங்கெனதருந்தினன்பண்டுவயமதக்கரியி னுடலுரியணிந்தான்வாதுசாமளையுடனடித்து, முயலகன்கலங்க மிதித்தனனவனைமுத்தனென்றுரைப்பது முறையோ.

(இ-ள்.) பிரமதேவன் அஞ்சுசிரசென்றும் தானுமஞ்சுசிரசென்றும் பிரமதேவன்சிரசைக்கிள்ளியுந் தாருகாவனத்துரிஷிகளனுப்பியபாம்புசூலம் மான்மழுவு மணிந்துகொண்டான்முன்னால் ஆலகாலவிஷஞ்சாப்பிட்ட நீலகண்டன்ரிஷிகளனுப்பிய ஆனையையுரித்துபோர்த்துங் காளியுடன்வாதாடியும்முயலகன்கண்கலங்கமுதுகில்மிதித்தான் அப்பேர்ப்பட்ட பொல்லாதவனை பெரியவனென்று சொல்லுகிறது எப்படியென்றார்கள் மந்திரிகள் எ-று. (அ)

பகைவர்களிடத்தி லுறவெனக்கெடுத்து பரமனைபெருமையெனவரையாச், செகந்தனையளித்து சிருடன்காக்கச் சேதித்திடமுத்தொழிலுடையோன், நகமைசேரினைஞ ரனுதினமிறைஞ்சிதசையுளவாக்கைகளழீயா, வகையுரமருளென் றவரிடமுகந்தவள்ளலந்தியத்தினில் வதைப்பான்.

(இ-ள்.) தனக்குப்பகைவரானவரிடத்திலுறவாகிஅவனைகெடுக்கும்படிசெய்வார்போல் அந்தபரமசிவன்இந்தபூமியில்வாழும்படி சீவனையுண்டாக்கவும் சிறப்பாகரக்ஷிக்கவும் பக்ஷிக்கவும்இந்தமூன்றுதொழிலுக்கு மாதாரமானவன் அறிவிலுயர்ந்தவன் யாதொருவர்பணிந்து வரந்தாருமென்றால் அப்படியேயந்தவரங் கொடுக்கப்பட்டவன்கொடுத்து அந்தியகாலத்தில் மறுபடியுங்கொன்றுபோடுவான் பரமசிவன் எ-று. (கூ)

ஈசனுலிமையோர் ரிப்பதியகன்றங்கேகினரெனவிதைப்பற்றி யோசனையுறுவதென்னெனல்வீர னெற்றரையவனுழைவிடுக்க, மா சிலாமனத்தோன் மார்க்கமுங்காண்பை யென்றிடவகத்தினிலோ ர்ந்து, நேசமாமொற்ற ரினியொருவனை யங்கிமலன்பா லேகவேவி டுத்தான்.

(இ-ள்.) பரமசிவனுடையமகிமையினலே தேவேந்திரராஜனு டைய பதியிற்போயிருக்கிறரென்றுஎங்கள்மனதில்தோற்றுகின்ற து மகாவலிமையுடையராஜனே உம்முடையதூதரையந்தபரமசிவ னுடைய வகைகளையறிந்துவர விடுவாயென அனுப்பினன் எ-று.

வாயுவேகமெனவெள்ளியங்கிரியில்வந்தனனுருவினைமாறி, மா யவனயன்தேவர் விண்ணேருமட்டலர்த்தனையேமனதில், தீயவனு ணர்ந்தே யவுணன்றனபதியிற்சேர்ந்தடியிறைஞ்சிசெப்புவன்,பேய ஞமாண்டி யவன்றனைப்பெரிதாய் பேசுவதாகுமோ மன்னு.

(இ-ள்.) தூதனனவன்வாயுவேகமாய்ப்போய் வெள்ளியங்கிரி யில்வந்து ராக்ஷதனுருவந்தெரியாமல் மானிடரூபமாகிப்பார்க்கும் போது பிர்மாவிஷ்ணுதேவர்கள் வீரவன்னியர்சேனைபதாதிகளிரு க்கிறதைக்கண்டு மனதிலுணர்ந்துதிரும்பிபட்டணம்வந்துசேர்ந்து வாதாவியின்பாதத்தைப் பணிந்து தூதன்சொல்லுகிறன் பேய்ரூ பங்கொண்ட ஆண்டியை பெருமையாகப்பேசுவது தகாதென்று சொன்னன் தூதன் எ-று. (கக)

அரியயனமர ரனைவருமவன் பாலணுகினந்தி பலவீரர்
திரைகடலெங்கும் பெருகியதென்ன சேனைகளுறைந்தனர் செப்ப
உருகுதென்னகமுங் கிளைஞரின்பூண்டை யுக்கிரவாளியாற் சேற்றி
எரிவென்னமிதையமீதுணர்ந்தேயினியருள்செய்யெனவிசைத்தாங்

(இ-ள்.) மகாவிஷ்ணுபிரமதேவன் தேவர்களனைவரும் பரமசி வனிடத்திலிருக்கிறர்கள் அதிகபலம்பொருந்திய வீரர்கள்சமுத்தி ரம்பொங்கி பரவியதுபோல்எங்கும் நிறைந்திருக்கின்றதை சொல் லப்பயமாயிருக்கிறதுஉன்னுடையபுத்திரபவுத்திராதிகளைகளைந்து போடுவார்களென்று என்மனதிலெண்ணினேன் இனியருளியபடி கேழ்க்கிறேனென்றன் தூதன் எ-று. (கஉ)

தூதனங்குரைத்த வாய்மையம்பாகத் தோன்றலினிருசெவி தொளைக்க, வாதனையில்லா மனத்தழற்செனிப்ப வாள்விழிகுருதிக ளுரைப்ப, சோதனைசத்த சாகரஞ்சுவறச்சுந்தரவுடுக்கணமுதிர்ப்ப பூதலமுறையுமுபிரெலாநடுங்க பொருப்புகளுடுறப்புகல்வான்.

(இ-ள்.) தூதன்சொல்லானது அம்புபோல்வாதாவியின்காதிலேபோய்த்தொளைக்க எள்ளளவுந்துன்பமில்லாமல் மனமகிழ்ச்சியுடனிருந்த வாதாவிராக்ஷதன் மனதுவடவாக்கினிபோல்கொதிக்க இரண்டுகண்ணும் இரத்தம்போலச்சிவக்க கோபத்தினாலேசமுத்திரம்வற்ற நக்ஷத்திரமுதிரபூமியில்வாழும்சீவராசிகள்நடுங்கமலைபொடியாகவுங் கோபமாய் வாதாவிசொல்லுவான் எ-று. (கந)

சண்டனையுதைத்தசங்கரன்வரமுந்தவறின்றியென்மனத்தோர்ந்தே, யண்டரையேவற்செயமனத்துண்மை யடங்கலுஞ்செலுத்தினனமரர், ஒண்டொடியெனது முன்றினை திருத்தவுரைத்தவாதாவியினடியிற், றெண்டனிட்டேத்தவிருந்ததுமவமாஞ் செப்புவீரமைச்சரே யென்றான்.

(இ-ள்.) பரமசிவனளித்தவரமழியாதென்று நினைத்திருந்தேன் அந்தவரத்தினால்தேவர்களைப்பிடித்து கண்டித்து ஏவல்செய்யும்படியாக என்பராக்கிரமத்தைக்காட்டிதேவமாதர்கள்என்னுடைய வாசலைப்பெருக்கியிருக்கவும் என்பாதத்தில் அனைவரும்வந்துதெண்டனிட்டு தோத்திரஞ்செய்யும்படியாக இருந்ததெல்லாம்அவமாகப்போயிற்றானலதை யென்னென்றுசொல்லுவீர்மந்திரிகளேஎன்றான் வாதாவி எ-று. (கச)

வெள்ளியங்கிரியில்வீற்றிடும்விமலன் மிகுபடையமைந்ததிலென்ன,வள்ளலேயுனதீடாவனேவவனைவளைந்துநம்வாளியைச்சொரிந்து, கள்ளனைப்பிடித்து பந்தனஞ்செய்து காவணவாயலிலிருத்தி, தெள்ளியதமிழினிமையவரெவரோசெலுத்துவதீதெலாதென்றான்.

(இ-ள்.) பரமசிவனானவன் அளவற்றபடையைஉண்டுபண்ணிவைத்திருந்தால் அதிலென்னபலனுண்டாகும்மகாராசனேஉமக்கு இணையாவரோ அவனையிந்தக்ஷணத்திலே நம்முடைய சேனைகளுடனேபோய்வளைந்து பாணங்களைச்சொரிந்துமாறுபாடுசெய்யுந்திருடரைப்பிடித்துக்கட்டிவந்து நம்முடையகோட்டைவாசலில் வைத்தால் ஏவற்பணிவிடை செய்திருப்பார்களென்றார்கள் மந்திரிகள்.

மாத்தியமுரைப்ப வரக்கர்கோன்றுணைவன் வாரதனெழுந்தடியிறைஞ்சி, கீர்த்திசேரரசேயறிவிலாநாயேன் செப்புவதுறுதியாமேர்பார்,போத்தநற்றிரையைகவர்ந்தவரனைத்தும்புடவிசூழ்நகரினிற்பொருந்தி, கோத்திரம்விளங்க செய்வதுகடனக் குழகனைநலிப்பதோவென்றான்.

(இ-ள்.) மந்திரிகள்சொல்ல வாதாவிசூரன்தம்பிவாரதனெழு ந்திருந்துதொழுது கீர்த்திபுகழும்படியானராஜனே புத்தியில்லாத நான்சொல்லுவதேயுண்மையாகும்அதெப்படியென்னில்தேவர்கள் நம்மைவணங்கும்படிசெய்தால் நம்முடையகோத்திரம் விளங்கும் இதுதானமக்குக்கடன் பரமசிவனைப்பிடித்துவந்து நலிவுசெய்வது பெருமையல்லவென்றான் வாரதன் எ-று. (கசு)

## வேறு.

மாதுலன்குல மழிந்தே மயங்கியே யன்னையுன்னை
தீதிலாதளிப்ப வெங்குந்திரிந்து மாவிலங்குதேடி
கோதுடனருந்தி நீங்கிக் குழகன்றன் வரத்தினாலே
சோதிசேர் முடிபுனைந்து சொன்னக ருறைந்தமன்னா.

(இ-ள்.) மாமனாகியசூரபத்மன் குலமழிந்துபோக நம்முடையதாயான அசோமுகிமயங்கியிருக்குங்காலத்தில் உன்னைக்குற்றமில்லாமல்அளித்து நீவளர்ந்துஎங்குந்திரிந்து காட்டிலிருக்கும் மிருகங்களைக்கொன்று தின்றிருந்தது நீங்கிப்பரமசிவன் வரத்தினாலேகிரீடமணிந்து இரத்தினபுரியிலிருக்கும்ராசனே யென்றான் வாரதன் எ-று. (கஎ)

உனக்கிய லுருமொ வும்பரனுலகி னுறைந்தனம்பால்
யினத்துள்நிதி யளிப்பதே யரசியற்கை யென்றே
மனத்தினி லுதித்தவண்ணம் வழுத்தினன்மதமுங்கொண்டா
பனிக்குலங் கதிரால் மண்படிந்ததென் றொக்குமென்றான்.

(இ-ள்.) உனக்கியற்பகையாகின்றது என்னவெனில் தெய்வலோகத்துக்குப்போய் இன்பமாகியதிரவியங்கள் கப்பங்கட்டும்படியாகப்பேசிவந்திருந்து ராச்சியபாரஞ்செலுத்துவதே சரியாயிருக்கிறதென்று என்மனதிலேதோன்றினபடி சொன்னேன் அதை தடுத்து கருவங்கொண்டால் பனிக்கூட்டங்கள்சூரியகிரணத்தைக் கண்டு பூமியிற்படியும் அவ்வாறொக்குமென்றான் வாரதன் எ-று.()

மதியுள்ள வாரதன் னீதிவகுத்திட மனத்தினோர்ந்தே
துதிகள்செய் வாதாவியோ துணைவனைச்சுரர்கள் நம்மை
மதியுளோர் பொருளாயெண்ணார் வண்மையிப் பதியிருத்தி
சதமுடன் யேவல்கொள்ளல் சம்மதமாகு மென்றான்.

(இ-ள்.) புத்தியுள்ளவாரதன் சொல்லப்பட்ட நீதியாகிய வசனத்தையுணர்ந்து தம்பிவாரதனே துணைவனான சகோதரனே தேவாதிகள்நம்மை ஒருபொருளாகஎண்ணிகப்பங்கட்டமாட்டார்கள்

ஆனதாலவர்களைப் பிடித்துவந்து நம்முடையபட்டணத்திலிருத்தி யேவல்செய்வித்தல் சம்மதம் எ-று. (கக)

மாதுல னமர்பழித்த வலிவினால் மதிமயங்கி
நீதுசெய் திடுவதல்லால் சிறுவய தானதம்பி
யேதுன தகமிளைத்த யியக்கரின் பூண்டகற்ற
வோதி கள்வர்சொல்வே னுரைத்திட வுரைக்கலுற்றான்.

(இ-ள்.) நானூற்றிருபத்தேழு சதுர்யுகந்தனக்குவயதுவாங்கி வாழ்ந்திருந்தசூரபத்மன் ஆயிரத்தெட்டண்டங்களும் இருநூற்றிருபத்தெட்டு புவனமு ராச்சியபாரஞ்செலுத்திய நம்முடையமாமனவன் ஆறுமுகமுடையசுப்பிரமணியசுவாமியினாலேசூரபத்மன் சிங்கமுகாசூரன் ஆனைமுகாசூரனும் தாருகாசூரன்இவர்களைவேரறுத்த வலிமையுடையபேர்களாகும் அப்பேர்ப்பட்ட தேவர்களுடையமனது வாடும்படியாகத் துன்பஞ்செய்து வைக்கவேணுமேயல்லாமல் சுகமளிக்கலாகாது அடடாசிறுவயதுடைய தம்பிவாரதனே யுன்னுடையமனதுயிப்படிக்குசபலமடைந்தவிதம்எதனாலே ராக்ஷதாளுடையகுலத்தை வேரறுக்கும்படியானயோசனை சொன்னாயே யுன்னைகொல்வேனென்று உறக்கச்சொன்னான் வாதாவி. ()

நற்றவமிகுத்த வண்ணா நாயடியே னவின்ற
குற்றமும் பொறுப்பதேவர் கூறென வலம்புரிந்து
பற்றிவா ரதனைக்கையாற் பரிந்தெடுத் தணைத்துவேண்டும்
புத்திக ளுரைத்துப்பெற்ற புதல்வருக் கியம்பலுற்றான்.

(இ-ள்.) நல்லதவம்புரிந்திருக்கின்ற அண்ணாவேதெரியாதவடியேன்சொன்ன குற்றத்தைப்பொறுப்பதேகாரியம் அடியேனுக்கு ஏவல்சொன்னால் செய்கிறேனென்று வலம்புரிந்தவாரதனை கையினாலே வாரியெடுத்து மடிமேல்வைத்தணைத்து தகுந்தபுத்திகளுரைத்து தான்பெற்றெடுத்த பிள்ளைகளாகிய புதல்வர்க்குச் சொல்லுகின்றான் வாதாவி எ-று. (உக)

அண்டமுங் கிடுகிடென்றே யதிரவென் றிசையின் வெற்புங்
கொண்டலி னிடிகலங்க கொதித்திட வாரியேழும்
வண்டிய நாகமெட்டும் வானவர் குழாம்நடுங்க
திண்டிற லவுணர்கோவும் தீதுரை செப்பலுற்றான்.

(இ-ள்.)ஆயிரத்தெட்டண்டங் கிடுகிடென்றதிரும்படியாகஎட்டுதிக்கும் அஷ்டகிரிகளும் கோடைகாலத் திடிகள்கலங்கிட சமுத்திரசலம் கொதிப்பேறும்படியாய் அஷ்டகஜங்கள்நடுங்கும்படிதிர

க்ஷியாகிய பலம்பொருந்திய ராக்ஷதாளுக்கு ராசாவாகியவாதாவி சூரன் குற்றமாகிய வார்த்தைகளைச் சொல்வான் எ-று. (உஉ)

கம்பனே கும்பாசம்பு கசமுகாக்கள் மன்னும்
உம்பரை வயப்படுத்தி யுலகினிற் சூரையேத்தி
நம்பதி யடைவீரென்று நாயகன் றுளிறைஞ்சி
கும்பலா யவுணர்சூழ கொடியரும் விஜயமுற்றுன்.

(இ-ள்.) கம்பாசூரனே அடாசம்புமாலி ஆனைமுகமுடையவனே ஆகாசத்திலே வாழப்பட்டதேவாதிகளனைவரையும் உங்கள் கைவசப்படுத்தி பட்டணத்திலுள்ளவரையும்கொள்ளைகொண்டுநம்முடையபட்டணம் வருவீர்களென்றுசொன்ன வாதாவியைவணங்கி ராக்ஷதக்கூட்டஞ் சேனைசூழும்படியாக மகா கொடுமையையுடைய சூரர்கள் விஜயமானார்கள் எ-று. (உங)

இரதமுங் கரிகள்கோடி யிவுளிகள் கோடாகோடி
பரவைகள் பரந்தென்ன படிமிசை நிறைந்தார்சூரை
முரசென் னுகபேரி முறையிடக் கவிகைதுன்ன
வரிகுயத் துவசகால வட்டமு மதிரச்சென்றார்.

(இ-ள்.) தேர் யானைகோடி குதிரைகோடானுகோடி வருகிறதுசமுத்திரமேழும் பரந்தாப்போல் பூலோகங்களிலே நிறைந்து கொள்ளையடிக்கின்றபேரிகைமுழங்ககொடிகளும்ஆலவட்டமும்நெருங்கிவர ஏகினார்கள் எ-று. (உச)

உரத்தினில் மிகுத்தசூர ருளத்தழல் வெம்மையாலும்
பரித்திர ளிரதத்தாலும் பராக்கிர முரசினாலும்
அரிதுவ சங்களெங்கு மார்ப்பரித் திடுதலாலும்
சுகத்திர ளாகமற்றோர் துடித்துளம் நடுங்கிற்றம்மா.

(இ-ள்.) பராக்கிரம மிகுந்திருக்கப்பட்ட ராக்ஷதாளுடையமனதிலெழுப்பிய கோபத்திலுதித்த அக்கினிச்சுவாலையாலும் குதிரையின்சத்தத்தினாலும் தேருருளையின் அதிர்ச்சியினாலும் முரசுபேரிகைமுழக்கத்தினாலும்சிங்கக்கொடிகளசைவினாலும்தேவலோகத்திலும் பாதாளலோகத்திலும் வாழப்பட்டவர்களும் இன்னும் மற்றவிடங்களிலு மிருக்கப்பட்டபேர்களும் அண்டங்களுள்ளோர்களும் மனந்துடித்து நடுக்கமாயினார்கள் எ-று. (உரு)

கொடியரின் சினத்தால்வாரி கொதிப்பமீ னினங்களுள்ளந்
துடித்துயிர் வானிற் செல்ல துகளி ராக்ஷதரைந்நூறு

குடமது வந்துமீனைக் குடங்கையா லணைத்தேயுண்டு
புடவியைக் கண்டுவிண்ணோர் புவிதனி னிறைந்தார் மாதோ.

(இ-ள்.) கொடுமைபொருந்திய பொல்லாதராக்ஷதா ருடைய கோபாக்கினியினாலே சமுத்திரசலங்கொதித்து அதிலிருக்கும்மீன் முதலாகியதுஞ் சூடுதாங்காமல் உடல்துடித்து உயிர் ஆகாசமடைந்து மிதக்கிறதை ராக்ஷதரோவ்வொருத்தர் ஐந்நூறு குடங்களைக் குடித்து மீன்களைத்தின்றுசமுத்திரம்விட்டு அப்பாலேதெய்வலோகம்போய் நிறைந்தார்கள் எ-று. (உசா)

## வேறு.

இன்னி லான் வியக்க ரதிபனை
துன்று மைந்தர் துடுக்கரந் நால்வரில்,
மன்னு கம்பன் மறலி திசையினிற்
றுன்னு சூரர்கள் கோடியாய்ச் சூழ்ந்தனன்

(இ-ள்.) தீதாகிய ராக்ஷதருக்கு அதிபதியாகி வாழப்பட்டவாதாவிசூரன்பிள்ளைகள் மகாதுஷ்டர்கள் அந்தநாலுபேரில் கம்பாசூரனனவன் எமனுடைய சகுனிபட்டணத்திலே ஒருகோடிராக்ஷதருடனே சூழ்ந்துபோனான் எ-று. (உஎ)

மயிட மூர்த்தி மனத்திட ராகிய
புயலுருக் கொடு வானம் புகுந்தனன்
நயமிலாத ரவுணரந் நாடெலாம்
அயர்வ தாக வடித்தனர் சூறையே.

(இ-ள்.) எருமைக்கிடாவேறப்பட்ட எமனானவன் மனதிலே பயமாகிமேகமாகிய வடிவமெடுத்துஆகாசத்திலே ஒளித்திருந்தான் நன்மையில்லாதராக்ஷதர் அந்தபட்டணமெல்லாம் அச்சமாகும்படி கொள்ளையடித்தார்கள் எ-று. (உஅ)

கும்ப னுள்ளங் கொதித்துக் குடதிசை
யிம்ப ராணுக்கள் கோடியோ டேகியே
அம்பு யிக்கண்ண எந்தமும் யோக்கியே
செம்பொன் சூறை செய்திட லாக்கினன்.

(இ-ள்.) கும்பாசூரன்என்பவன் தன்னுடையகோபத்துடனே மேற்குத்திசையில் கோடிராக்ஷதருஞ்சூழவந்துஅழகாயிருக்கின்ற பூமியிலிருக்குஞ் சிங்காரங்களையழித்துச் செவந்தபொன்னினங்களைக் கொள்ளையிட்டார்கள் எ-று. (உகூ)

வாயு மண்டல மண்ணினில் வானுகோன்
னூய நற்பதி சூறைசெய் சம்புவோ
ராயிரஞ்சக சூரரதிர்ந்திட
நேய வுத்திர தேய நிறைந்தனர்.

(இ-ள்.) வாயுமண்டலத்திலே வாயுராஜனானவன் ஒளித்திருக்க அந்தநாட்டை கொள்ளையடிக்கும்படியாகச் சம்புமாலி யென்பவன் ஆயிரங்கோடிராக்ஷதர் தன்னைச்சூழும்படியாக வடதிசையில் போய் நிறைந்தார்கள் எ-று. (௩௰)

அளகை யாளி யரனிட மேகினன்
வளமெலாஞ் சிறை மண்டிய ராக்கதர்
உள மகிழ்ந்த கஜமுக னுக்கிறை
தளமோர் கோடி தழைக்க நடந்தனர்.

(இ-ள்.) அளகாபுரிவாழுங் குபேரன் கயிலாசகிரியில் பரமசிவனிடத்துக்கு ஓடிப்போனான் அந்தஅளகாபுரிவளமெல்லாங்கொள்ளையடித்து சனங்களையுங்கட்டிக்கொண்டு சந்தோஷமானன்கஜமுகாசூரன் ஒருகோடிதளஞ்சூழ்ந்து வரும்படியாக நடந்தார்கள்.

குணதிசைக் கதி பதியெனும் வானவன்
பணதி யாடை பருத்த நிதிகளில்
மணியு மாழையு மண்டுவ மென்றுசென்
றிணையிலாச் சிறை யிட்டிட லாயினன்.

(இ-ள்.) கிழக்குத்திசையில் தேவேந்திரனுடையஆடையாபரணம் திரவியங்கள் நவரத்தினம்பொன்னுகளை கொள்ளையிட்டுஅளவற்ற நிதியைவாரிக் கையில் அடக்கசெய்தான் எ-று. (௩௨)

## வேறு.

நீலமேரு வெழுந்ததாமென நிருதர் சேனைகள்
ஓலமிட் டிமையோர்க ளுள்ளமொடுங்கவண்டமதில்
சாலவேகினர் மேகமூர்த்தி தயங்கு கோகிலமாய்
ஆலமுண்ட மேருவேகி யகங் கலங்கினனே.

(இ-ள்.) கரியமேகம்போ லெழுந்துவருகின்ற ராக்ஷதசேனையைக்கண்டு ஓலமிட்டுதேவர்கூட்டமெல்லாரும் மனம்நடுங்கி ஆகாசம்போயொளித்தார்கள் சத்தமேகத்தை வாகனமாயேறப்பட்ட தேவேந்திரன் மனந்தியங்கி குயில்வடிவமெடுத்து ஆலமுண்டபரமசிவனிருக்குங் கைலாசகிரிக்குப்போய் மனதுகலக்கமானன்எ-று.

சத்த பாலர்கள் சித்துரூபம் தடைந்தனரே
நத்தவத்தினன் முத்தருள்ளே நடுங்கியோடினரே
தத்தை மார்களுமேக சிற்றிடிதத்த நின்றனரே
சித்தர் கின்னரர் கயிலைசென்று சினந்தயங்கினரே.

(இ-ள்.) அஷ்டபாலர்களிலே தேவேந்திரன்குயிலாகக்கயிலாசம்போக மற்றஎழுவரும் சித்துரூபமாய்ப்பறந்து கைலாசம்போனார்கள் நல்லதவமுடைய பெரியோர்கள் நடுக்கமெடுத் தோடினார்கள் தேவஸ்திரீகள்ஓடமாட்டாமல் நின்றார்கள்சித்தர்கின்னரர்கயிலையிற்போய் மனதுகலங்கி யிருந்தார்கள் எ-று. (நடச)

காலனஞ்சிய காலரக்கர் கனன் றெழும்பியிரு
ஞாலமீதுமை யோர்களின்றி நகைத்தல் கண்டுசிறு
பாலராவி பதைக்கவுண்க பரிந்த காவனமும்
வேலனும்விழி மாதர்கற்பை விலக்கு கின்றனரே.

(இ-ள்.) காலனாகியஎமதருமராஜன் அஞ்சப்பட்ட எமனாகிய ராக்ஷதர்கள் மகாகோபத்துடனே யெழும்பிஅமராபதிபட்டணம் போய் வீடுகள்நுழைந்துபார்க்கத் தேவரில்லாததுகண்டு நகைத்துச்சிறுபிள்ளை உயிர்பதைக்கவெடுத்து விழுங்கிப்போட்டு கற்பக விருக்ஷங்களைப் பிடிங்கிக்கொண்டு வேலுக்குச்சமதையானகண்ணுடையதேவஸ்திரீகளுடைய கற்பையழித்துப் போட்டார்கள்எ-று.

பாகசா தனன்னேடை சென்றுபருத்த வச்சிரவா
ணகமாகிய நித்திலங்க ளனைத்தும் வாரிநல்
மாகுவீ ரிருகெற்பம் வார மாடு மேற்பொதியின்
றேகிவானவர் வீட்டை சூறையியக்க ரிட்டனரே.

(இ-ள்.) தேவேந்திரனுடைய மாளிகையிலிருக்கும் வச்சிரவாளும் அழகானமுத்துமுதல் நவரத்தினங்களெல்லாவற்றையும்வாரி நாலுகொம்புடைய வெள்ளையானையைப்பிடித்துமாடுபோலபொதியேற்றி தேவர்களிருக்கப்பட்ட வீடுகளெல்லாங்கொள்ளையிட்டார்கள் ராக்ஷதர் எ-று. (நடரு)

மாடமா மதில்கூட மன்னு மணிபரப்பினமும்
மீடைமா மழைநிதி சரப்பளிமலர்த வாளியுடன்
ஊடலூஞ்சு லொலிந்த தண்டை யுயர்ந்த பாதசரம்
மேடையான விமானமுஞ் சிலர்கொண்டு மேவினரே.

(இ-ள்.) மாடங்கள்சூழ்ந்து மதில்களிலிருக்கப்பட்டநவமணி பதக்கங்களும் பொற்பீதாம்பரங்களும் பொற்குவியல்களுந் திரவி

யங்களும் கைக்கடகங்களும் ஸ்திரீபுருஷாள் படுத்துக்கொள்ளப் பட்ட உஞ்சல்கட்டில்களும் சப்திக்கப்பட்டதண்டையும் உயர்ந்த பாதசரம்மேன்மையான புஷ்பவிமானம் இவைகளெல்லாஞ் சில ராக்ஷதர்கள் கொண்டுபோனார்கள் எ-று. (௩௭)

வானலோகமு மீனமாக வருத்தமுற்றதுசெந்
தேனளித்திடு தாவரங்களின் வேர்சிதைத்துப் பலர்
கானமுந்திரு சோலையுங் கள்சாலை நீங்குமிரு
வேனவான விதங்கள் சொல்லவும் நாவெனக்கில்லையே.

(இ-ள்.) தேவேந்திரபட்டணமும் சிறப்புநீங்கி குற்றமில்லாத மஞ்சனீர்தோப்பு சாலைகளைவிலக்கினபடியினாலே யெங்கும் வெண் மையாகிய அக்கினிச்சுவாலைமிஞ்சி குளிர்ச்சியாகின்றதுஇப்பேர்ப் பட்டவிதமாகிய அநீதங்களைச்சொல்ல எனக்குநாவில்லையென்றார் புராணீகர் எ-று. (௩௮)

அங்கிரர் சனகாதி வேதவியாசர் கோதமனும்
பொங்குகோசிக ஞகரூபன் புசண்டன் வாமனனும்
மங்கலப் புலிபார்த்தன் வர்ச்சன்வதிஷ்டன் மச்சமுனி
துங்கமாகிய கும்பமாமுனி துன்பமுற்றனரே.

(இ-ள்.) அங்கிராரிஷி சனகாதிபரிஷிவேதவியாசர் கௌதமர் கோபாக்கினியுடைய விஸ்வாமித்திரர்பதஞ்சலி புசுண்டர்வாமதே வர் வியாக்கிரமபாதர் வர்ச்சனரிஷி வதிஷ்டர் மச்சமுனி அகஸ்தி யர் மேன்மையாகிய அனேகரிஷிகளெல்லாம் வெகுதுன்பப்பட் டார்களிந்தராக்ஷதர் கொடுமையினால் எ-று. (௩௯)

திசைகளெங்கு மடர்ந்துசூறை செய்க ளாகினர்கள்
தசையருந்தி மிகுந்தவேனல் தணிந்த ராணுவெலாந்
துசமணிந்து மிரத்தினபுரி சூழ்ந்தியக்கர்கள் கோன்
பசியவெற் கழலே யீய்ந்தபணதி யுள்ளதெல்லாம்.

(இ-ள்.) எட்டுத் திசைகளெங்கும் பரவி கொள்ளையடித்துக் கொண்டு மனுஷாளுடைய மாமிசங்களைத்தின்று தங்கள்கோபந்தீ ரராக்ஷதச்சேனைக ளெல்லாரும்வெற்றிபெற்று இரத்தினபுரிப் பட் டணத்திலேபோய் ராக்ஷதாளுக்கு ராசாவானவாதாவியின் பாதத் தில் பசும்பொன்னை வைத்தார்கள் எ-று. (௪௰)

## வேறு.

கண்டனன் விழியினாலே களித்தன னுள்ளஞ்சூறை
கொண்டிடு மவுணர்மெச்ச கொடுத்தன நிதியனேகம்

யெண்டிசை யுள்ளோராண்மை யிலையினிப் பயமுண்டோநல்
லண்டர்வந் திலரோவென்னு மரசனுக் கறைவதானுர்.

(இ-ள்.) அஷ்டதிக்கிலுமிருக்கப்பட்டவைபோகங்களைகொள்ளையடித்துவந்ததை வாதாவிராக்ஷதன் இரண்டுகண்ணினுலுங்கண்டுசந்தோஷமாகி கொள்ளையடித்துவந்த ராக்ஷதருக்கு மனதுசந்தோஷிக்க அனேகம்திரவியங்களைக்கொடுத்து எட்டுதிசையிலிருக்கப்பட்டமனிதருக்கு மிந்ததிரவியமிருந்ததினுலே ஆண்மைமிஞ்சியிருந்தார்கள் இனிமேலவருடைய ஆண்மையடங்கிபோயிற்று நமக்குபயமில்லை நல்லதுதேவகூட்டங்கள் வந்தாரோயில்லையோ வென்றுகேட்ட வாதாவிசூரன் சொல்லுகிறுன் எ-று. (சக)

பதியைகண் டொளித்தாரந்த பான்மைகண் டவனியுள்ள
நிதியினைக் கவர்ந்துவந்தோம் நிருபனே வானலோகஞ்
சிதறின தந்தமெல்லாஞ் செப்பினே னையாவென்றே
மதியினுற் கம்பன்சொன்ன வாய்மையான் மகிழ்ந்துரைப்பான்.

(இ-ள்.) தேவாதிகள்முதலாகியபேர்கள் பட்டணத்திலில்லாமல் ஓடிஒளித்துப்போனுர்கள் அந்தவிதங்களையறிந்து அவ்விடத்திலிருக்கப்பட்ட திரவியக்குப்பை முதலாகிய வளமையைக்கொள்ளையடித்துவந்து தேவராஜன்சிறப்புநீங்கிப்போயிற்று என்று கம்பாசூரன்சொன்னதைவாதாவிமகிழ்ச்சியாகிச்சொல்லுகிறுன்எ-று

கணங்களில் மிகுத்தவீசன் கருணையி லெனத்துதித்து
வணங்கிடார் மன்னர்கோடி வருகினுங் கரத்தின்வாளில்
பிணங்களா குவரென்னுவி பலத்திடு மகவேயுங்கள்
குணங்களால் மிகுந்தவாழ்வுங் கோதிலா தடைந்தேனென்றுன்.

(இ-ள்.) சிவகணுதிகள்மிகுந்திருக்கப்பட்டபரமசிவன்கிருபையினுலே பூதகணங்களைச்சிருஷ்டித்துவிட்டு என்னிடத்தில்சண்டைக்குவந்தால் உன்னுடையகைவாளினுலே மடிந்துபோவார்கள்என்சிவனும் பலத்துப்போச்சுது மக்களுடையதைரியத்தினுலேமிகுதியாகியவாழ்வை நானடைந்தேனென்றுன் வாதாவி எ-று. (சரு)

இரணியன் குழாமடிந்தா ரிராவணன் கிளைஞரற்றுர்
வரமிகு சூரபன்மா வனமெலா மகிழ்ந்து மஞ்சை
திரவுரு வமைந்தேவீசன் சேயினைச் சுமந்தானிப்பால்
யுரமிகு நமைப்போலிந்த வுலகில்வே றுளரோ வென்றுன்.

(இ-ள்.) இரணியன் ராவணன் சூரபத்மன்முதலான ராக்ஷதகுலத்தாரான நம்முடையவினத்தார் மாமன் மைத்துனன் அண்

ணன் தம்பி அனைவருமடிந்துபோனார்கள் சூரபத்பன் தன்சேனையு மிறந்துபோய் மயில்ரூபமெடுத்து பரமசிவன்பிள்ளை சுப்பிரமணி யரை சுமந்திருக்கிறான் நம்மைப்போல பராக்கிரமமிகுத்து விருக் கிறபேராருமில்லை யென்றான் வாதாவி எ-று. (சச)

அண்டரண் டாயிரங்க ளரனளித்தன ரிந்நாளில்
எண்டிசை யடங்கவென்றே யிமையவ ரகத்தைநீக்கி
விண்டல மளவும்போக விரும்பினே னெனதுகீர்த்தி
மண்டலத் துள்ளோரேத்தும் மகிழ்ச்சியு முற்றேனென்றான்.

(இ-ள்.) தேவவருஷம்நூறுசென்றால் தேவர்கள்மடிந்துபோ வார்கள் நான்தேவாதிகள்வயசு ஆயிரவருஷம்பரமசிவன் அளிக்க பெற்றேன் இந்தநாளில்அஷ்டதிக்கெல்லாம் வெற்றிபெற்றுதேவர் களின் கருவமடக்கிவிட்டேன் இந்தஆகாசம்பூமியுள்ளமட்டும்கீர்த் தியும்போக யோக்கியமுமடைந்தேன் என்னுடையகீர்த்தியை யிந் தவீரேழுபதினாலுலோகத்தி லுண்டானவர்களும்வணங்கும்படியா கினேனென்றான் வாதாவி எ-று (சரு)

அரனய னரிவன்தென்பா லளித்திடும் வரமும்பொய்யோ
முருகன் செங் கரவேற்றன்னால் மூண்டமர் தொடங்கினாலும்
ஒருகணை யதனைத்தாக்கி யும்பரி னுலகிலேற்றி
யிரத்தின கரம்புரப்ப தியற்கையே யமைச்சரென்றான்.

(இ-ள்.) பரமசிவன்மகாவிஷ்ணு பிரமதேவன் இவர்கள் கொ டுக்கப்பட்டவரம்பொய்யாகாது ஆறுமுகமுடைய சுப்பிரமணியர் பிடித்தவேலாயுதத்தை யென்பேரில்விட்டால் நானவனைஒருபாண த்தினாலே தெய்வலோகம் போகும்படியாய்ச்செயித்து இரத்தின புரியைஆள்வது நிச்சயமேயென்றான் மந்திரி எ-று. (சசு)

அப்பொழு தமைச்சரண்ண லடிபணிந் துரைப்பாருந்தன்
ஒப்புள ரொருவருண்டோ வுலகினி லுனதுகீர்த்தி
வைப்பது கடினம்பண்டு வரங்கொளு மோரையாலே
யிப்பதி யூழிகாலம் யிணையிலாப் புரப்பீரென்றான்.

(இ-ள்.) அப்படிசொன்ன மந்திரிகள் வாதாவியைப்பணிந்து உமக்குச்சமதையானபே ரொருவருமில்லை யிந்தலோகத்தில்உம்மு டையகீர்த்தியை நாடும்படிவைப்பது கடினமாகும் ஆனால்முன்னா ளிலே வரம்வாங்கின லக்கினபலத்தினாலே யிந்தப் பட்டணத்தை யூழிகாலவரைக்கும் இருந்துஒருவரும் நிகரில்லாமல் வாழ்வீரென் றார்கள் மந்திரிகள் எ-று. (சஎ)

இவ்வுரை யியம்பக்கேட்டு யியக்கர்கோன் புளகமாகி
யவ்வுரக் கரசுமீதி யளிப்பநற் கைலைதாழ
நவ்வியு மழுமேந்தும் நாயக னுள்ளமோர்ந்து
செவ்விதழ் நகைபுரிந்து செப்புவ ருண்மைமாதோ.

(இ-ள்.) இப்படிக்குமந்திரிகள்சொல்ல வாதாவிராக்ஷதன் சந்தோஷமாகி யிந்தரத்திஞபுரி பட்டணத்தை செங்கோல் செலுத்தி நடத்தியிருந்தான் அப்படியிருக்க நன்மையாகிய கயிலாசகிரிதாழ்ந்து மான்மழுதரித்தபரமசிவன் அறிந்துபுன்னகைகொண்டுசொல்லுகின்ஞர் உண்மையாகிய வார்த்தை எ-று (சஅ)

அண்டரே முனிவரே கின்னரர்களே யயனமாலே
யின்றுநம் பதிதாழ்வுற் றெமன்றிசை யுயர்வதாக
முண்டுக ளுளதோவென்பர் மொழிவது மென்னவானோர்
தெண்டனிட் டிதையஞ்சோர செப்புவதரனு மாதோ.

(இ-ள்.) முப்பத்துமுக்கோடி தேவர்களே நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளேகின்னரர்களேபிரமாவே மகாவிஷ்ணுவேநம்முடைய உருத்திரபூமிதாழ்ந்து எமதருமனுடைய தெக்ஷணதிசை யுயர்ந்திருக்கின்றது என்னபாரமுண்டானதோ அதையோசித்து சொல்லுங்களென்ன அவர்கள்சுவாமியை தெண்டனிட்டு பரமசிவன்மனது சோரும்படியாகச் சொன்னர்கள் எ-று. (சகூ)

ஆரண மளவிடா வண்ணலே பரனேபோற்றி
வாரண முரித்துப்போர்த்த வள்ளலுன் மலர்த்தாள்போற்றி
நாரணன் விரிஞ்சன்காணு நாதனே நம்பாபோற்றி
காரணு கயிலைவாழும் கடவுளே போற்றிபோற்றி.

(இ-ள்.) வேதங்குணிக்காத பரமசிவனைபலபல திருவிளையாடலைச்சொல்லி தேவர்முதலாகிய சகலமானபேரும் யானையின்றோலைப்போர்த்த வள்ளலேபோற்றி மகாவிஷ்ணுவும்பிரமனுந்தேடிக்காணுதநாதனேபோற்றி கயிலையங்கிரியில் வாழும்பரமனே போற்றி எனத்துதித்தார்கள் எ-று. (ருய)

சூரபற்மா வளித்த துகளினுற் சுகமகன்றே
கூரயிற் கரத்தோனுன குகனம்மைக் காத்தானின்று
வாரியில் நகரளித்து வம்பன்வா தாவியென்னும்
பேரினை யுடையோனுண்மை பேசவு முடியாதென்ஞர்.

(இ-ள்.) முன்னளிலே சூரபத்மனையளித்துஎங்களுடையவகத்தையழித்தாய் சுப்பிரமணியசுவாமியினலே அதுதீர்ந்தோம் இப்

போது தெற்குசமுத்திரத்தின்நடுவி லிரத்தினபுரி பட்டணமொன்றுஉண்டாக்கி வாதாவியானபொல்லாதவனையளித்து வரமுங்கொடுத்து எங்களுடையசுகத்தையழித்து வருகிறானதை யெங்களுக்கு சொல்லி முடியாதென்றார் தேவர்கள் எ-று. (ருக)

இயலணி யியகர்வீர மினியகத் துவரிருந்தால்
துகளிலா வீரன் வாளி தொலைக்குமென் றுறுதிசொல்கும்
வகையினாற் பதியடைந்து மாதரோ டிருப்பவன்னாள்
சகமெல்லாம் நிறைந்தாரய்யா தியங்கின வெள்ளமாதோ.

(இ-ள்.) எங்களுக்குப் பகைசெய்யும் ராக்ஷதன் பராக்கிரமம் இந்தப்பூமியெல்லாம் அழித்துப்போடுவான் நீங்களிவ்விடம் இருக்கவேண்டாம் வீரவன்னியன்பாணமானது ராக்ஷதரை சம்மாரஞ்செய்யும் போங்களென்று சொன்னபடியினாலே எங்களுடையபட்டணம் போயிருந்தோ மப்போதிந்தலோகமெல்லாம் வாதாவியின் சேனைகள் பரவிவந்தார்களென்று சொன்னார் தேவர்கள் எ-று. ()

நாற்றிசைக் கடல்சூழ்நாட்டின் னலத்தினை சூறையாடி
கூற்றுவ னஞ்சவிண்ணோர் குவலயஞ் சிதறகாணிற்
சீர்த்திசேர் முனிவருள்ளந் தீரந்திடுந் தவங்கலைந்தே
யேற்றுவா கனனேயின்னா ளின்றுவந் தடைந்தோமென்றார்.

(இ-ள்.) கடல்சூழ்ந்தநாடெல்லாம் கொள்ளையிட்டுஎமன் அஞ்சும்படியாகவுந் தேவர்கள்நகரம்விட்டு நீங்கும்படியாகவும் காடுகளில்சஞ்சரிக்கும் ரிஷீஸ்வரர் தவங்கலந்துபோகவும் இப்படியிருக்கிறபடியினாலே ரிஷபவாகனமுடையவரே நாங்களனைவரும் இன்றையத்தினம் உம்முடைய பதிகயிலாசம் வந்தோம் மயேஸ்வரா மார்க்கண்டனுக்காய் எமனையுதைத்த பாதனேயென்றார்கள் தேவர்கள் எ-று. (ருஉ)

அண்டவோர் நிழலுமன்றி யாதரிப் பவருமன்றி
கண்டக வவுனன்தானோ கனத்திற லுடல்மெலிந்து
மன்றிய சுகமிழந்தோ மயேஸ்வரர் மார்க்கண்டற்காய்
சண்டனை யுதைத்தபாதா தந்தருள் சுகமுமென்றே.

(இ-ள்.) எங்களுக்கு உன்னையல்லாமல் அண்ட நிழலுமில்லை பயப்படாதேயென்று ஆதரிப்பாருமில்லை இமிசைசெய்யப் பட்டராக்ஷதாள் வந்ததைக்கண்டு எங்கள்மனம்நடுக்கங்கொண்டோம் எங்கள்சுகம்நீங்கி யிவ்விடம்வந்தோம் மார்க்கண்டனுக்காகஎமனை யுதைத்தபாதனே யெங்களுக்குசுகந்தாருமென்றார் தேவர்கள்.

திக்குனை யன்றிவேறோர் திக்கிலே யவுணர்பாசஞ்
சிக்கிய விழைவிடுத்தே தியக்கமுந் தவிர்ந்திந்நாளில்
மிக்கவாழ் வளித்துனைந்தக் கம்மனமிளிரச்செய்வீர்
நக்கனே யின்னமென்ன நலிவுசெய் குவனோவென்றார்.

(இ-ள்.) உன்னையல்லாமல் திக்குயாரிருக்கிறார்கள் இராக்ஷதர் வலையிலகப்பட்ட வெங்களைநீக்கிவிட்டு மயக்கமுந்தீர்த்து எங்களுடையவாழ்வையு மளித்து உன்னைநினைந்து அஞ்செழுத்தைசெபஞ் செய்யும்படி அனுக்கிரகஞ்செய்யவேணும் பரமசிவனே ராக்ஷதனானவன் இன்னமும்என்னவாதைகள் செய்வானோவென்றார்கள் தேவர்கள் எ-று. (ருரு)

அனைத்தையு மளிப்பாயகாப்பாய் யழித்திடவல்லாயுந்தன்
மனத்தினை யறிவாருண்டோ மானில முறைந்தசீவன்
உனைத்துதி செய்யவேண்டி யுத்திரதிசையி னட்டில்
கனத்தினாற் கயிலைதாழ்வு கண்டது கடவுட்டேவே.

(இ-ள்.) சிருஷ்டிக்கவுங்காக்கவும் அதையழிக்கவல்லமையுமுடைய உம்முடையகிருபையை யறிவார்களுண்டோ பூலோகத்தில் வாழுஞ் சீவராசிகளனைத்தும்ராக்ஷதர்களாலேஉம்மைதோத்திரஞ் செய்து வடதிசைக்குவந்தபடியினாலே கனங்கொண்டு கயிலைதாழ்வானது எங்களுக்கெல்லாம் தெய்வமானவனேயென்று துதித்தார்கள் தேவர்கள் எ-று. (ருசா)

எள்ளினு ளெண்ணெயாக வெங்கணு முயிராய்நின்ற
வள்ள லேகாமலின்றி வதைப்பன்வா தாவிசூரன்
பிள்ளையின் வருத்தம்பெற்ற பேதைய ரறிவாருந்த
னுள்ளமு மறியுமல்லா லுலுத்தர்க ளறிவதுண்டோ.

(இ-ள்.) எள்ளுக்குளெண்ணெய்போலிருக்கப்பட்ட பரமசிவனே நீர்காக்காவிட்டால் வாதாவிசூரன் கொன்றுபோடுவான்பிள்ளையின்வருத்தம்பெற்ற தாயறிவாளல்லாமல் பெருதமலடி யறிவாளோ அப்படிபோல உலுத்தர்களறிவதுண்டோ எ-று. (ருஎ)

தென்றிசை யுயர்ந்தசூக்ஷி தெரிந்திடா தறையுமென்றே
கொன்றைசூ டியனேயுந்தன் கூத்தினை யுணர்வருண்டே
நன்றிலாக் கள்வனுகி நற்சுடர் பிடித்தகோலா
வென்றிமா லயனைநோக்கி வித்தகன் மகிழ்ந்துகூறும்.

(இ-ள்.) தெற்குத்திசை யுயர்ந்திருக்கின்ற வகைதெரியாமல் எங்களைச்சொல்லுமென்றுகேட்பது கொன்றைமாலைசூடியபரமசி

வனே உன்னுடையதிருக்கூத்தையாரறிவார்கள்கள்ளனுமாகி அந்த க்கள்ளனுக்கு விளக்குபிடிக்கப்பட்டவனே யென்றுசொன்னமகா விஷ்ணுவும் பிரமதேவரையும்பார்த்து பரமசிவன் மகிழ்ச்சியாகச் சொல்வார் எ-று. (ருஅ)

வேறு.

வானுளோரிடர் வன்னியர் வாளியால்
வீனமன்னு மியக்கரை யூர்த்துவோங்
கானகத்துறை மாதவ ரேகதி
தானளிப்பன் றழைத்திரு மென்றனர்.

(இ-ள்.) தேவாதிகளே உங்களுக்குண்டான துன்பங்களை வீர வன்னிய ராசாவினாலே யீனமாகியராக்ஷதரைத் தோற்க வைக்கிறோம் காட்டில்தவசுசெய்கிற முனியீஸ்வரர்களே உங்களுக்குநல்ல கதியடையும்படி செய்குவோம் மனதுசந்தோஷமாக விருமென்றார் பரமசிவன் எ-று. (ருசு)

வண்டுழாமவு விற்றுரு மாதுறை
புண்டரீகம் பொருந்தும் விழியினால்
சண்ட நாடு சமதை யாகிட
மண்டு பாரம் வகுத்திடு மென்றனர்.

(இ-ள்.) வண்டினஞ்சூழ் துளபமாலையுமிலக்ஷிமியு மிருக்கப் பட்டமார்புந்தாமரைமலர்போன்ற விழியையுடைய மகாவிஷ்ணுவே தென்னாடுஉயர்ந்து வடபூமிதாழ்ந்திருக்கிறதே அதுசமதையாகும்படியான உபாயஞ்சொல்லுமென்றார் பரமசிவன் எ-று. (சுய)

பசுபதிபர மானந்த னேயென
விசுவ கன்மன் விளம்புவன் சூக்ஷிநல்
லுசிதமாக வுழுவை யதன் தனைக்
கசியருட்மொழி காரண வென்றனன்.

(இ-ள்.) பசுபதியென்னும் பெயர்படைத்தபரமானந்தனேவிஸ்வகர்மாவைஅழைப்பித்துக்கேட்டால் அதற்குவிபரஞ்சொல்வானென நல்லவுசிதமாகியானையையுரித்துதோலைபோர்த்தருளியகிருபாகடாசம்பொழியப்பட்ட காரணனேயென்றார் மாயவன் எ-று.

கருத்தில்விஸ்வ கர்மனை நாடின
யொருத்திலேறி யிடையவ னேகியே
திருத்தமாகிய சிந்தை நினைந்திடும்
பருத்தசூக்ஷி யுளதோ பகரென்றான்.

(இ-ள்.) பரமசிவன்மனதிலே விஸ்வகர்மனைநினைந்தார் ரிஷப வாகனமேறிய பரமசிவனைவந்து விஸ்வகர்மன் தேவரீர் மனதிலே நினைத்தகாரியப்பெருமையை சொல்லவேணுமென்றான் விஸ்வகர்மன் எ-று. (௬௨)

வம்பணு மவு ணாதிபன் வாதையா
லம்பு விக்க ணமர்ந்தவரெல்லாம்
நம் பதிக்கண் ணுடைவ தாழ்ந்ததுந்
தென்புற முயர்ந் திட்டனத் தாழ்த்தென்றான்.

(இ-ள்.) வம்புசெய்யப்பட்ட ராக்ஷதனாகிய வாதாவியின்கொடுமையினாலே இந்தபூலோகம் தேவலோகத்திலிருக்கப்பட்ட சீவராசிகளெல்லாம் நம்முடையகைலாசகிரியில்வந்து நிறைந்திருக்கிறபடியினாலே வடதிசைதாழ்ந்து தென்புறம்உயர்ந்திருக்கின்றது அதைச்சரியாகும்படி செய்யென்றார் பரமசிவன் எ-று. (௬௩)

நதி யணிச்சடை நாதனே யுன்மலை
பொதிகையு மொரு பொன்னிறை யாதலால்
யதி லுறைந்த வுனக்கிணை யாகுமொ
ரதி லிருப்ப வழுத்துமென் றோதினான்.

(இ-ள்.) கங்கையையணிந்த சடாபாரமுடைய பரமசிவனே உன்னுடையவெள்ளியங்கிரியும் பொதிகைமாலையும் பொன்னிறையாயிருக்கின்றது ஆகையாலேஇதிலிருக்கப்பட்டஉனக்குச்சமதையானபேர்க ளந்தப்பொதிகையிலே போயிருந்தாலிந்தப் பூமிதாழுமென்று சொன்னான் விஸ்வகர்மன் எ-று. (௬௪)

வரமளிக்கு மயேஸ்வர னைவா
திரமொருத்தர்ரிச் செகத்தினி
லுறைசெய் வாயெனு மற்றனை நோக்கியே
யிருகுடத்து முனியிணை யென்றனன்.

(இ-ள்.) யாவருங்கேட்ட வரமளிக்குமயேஸ்வரன்நம்முடைய பராக்கிரமம்போல் ஒருவருண்டோ இந்தசகங்களிலே விஸ்வகர்மனே சொல்லுமென்றுகேட்டபரமசிவனைப்பார்த்து கும்பமுனியாகிய அகஸ்தியமகாரிஷி உமக்கிணையாகயிருக்கிறாரென்று சொன்னான் விஸ்வகர்மன் எ-று. (௬௫)

கருமன் வண்ணங் கருத்திற் பொதிந்திட
பிருகு மாமுனி பேசுவ னெந்தனை

யிருமை யானவுன் சிந்தையி லெண்ணிடா
திரமகன் றங்குஷ்டனை செப்பினன்.

(இ-ள்.) விஸ்வகர்மன்சொல்வான்பரமசிவன்கருத்தில்பொருந்திருக்க அருகிலிருந்த பிருகுரிஷிபேசுவார் அடாவிஸ்வகர்மனே என்னுடையபெருமையை யுன்னுடையசிந்தையிலெண்ணமல்வநுவில்லாத அங்குஷ்டபிரமாணமானவனைமகாபெரியவனென்றுசொன்னையென்றார் பிருகுரிஷி எ-று. (சுசு)

பெருவி ரன்முனி பேரி லுயர்ந்தவன்
அருகிருந்தவ ராண்மை சிறுத்ததோ
தரும நீதி தவறுமுனை மண்ணோர்
கரும னென்று கழறுவ தாகினே

(இ-ள்.) பெருவிரல்பிரமாணமுடைய அகஸ்தியமகாரிஷியுயர்ந்தவனே பரமசிவன்அருகிலிருக்கின்றஎன்னுடையஆண்மைசெலுத்தமுடியாதோ அடாநீதருமநீதிசொல்லாமல் தப்பிதமாகிய வார்த்தைசொல்லுகின்ற உன்னைபூலோகத்தாரனைவரும் கருமனென்றுயழைக்கின்றார்களென்று பிருகுரிஷி சொன்னார் எ-று. (சுஎ)

இம்மொழிகொ ளிருடியை நோக்கியுன்
வெம்மைதீர விளம்புவ னென்கரச்
சும்மையான தராசினிற் றாக்கவுங்
கம்பித மறிவாயெனக் காட்டினன்.

(இ-ள்.) இப்படிக்கொத்த சொற்சொல்லப்பட்ட பிருகுரிஷியைப்பார்த்து உம்முடையகோபந்தீர சொல்லுகிறேன் என்கையிலிருக்கப்பட்ட தராசில்வைத்துதூக்கினல்உன்னுடையவிறுமாப்புயறியலாம்என்று தராசையெடுத்துநின்றான் விஸ்வகர்மன் எ-று.

எம்பிரானோர் தடையி லேறினர்
சம்படாபிரு கோர்புறந் தாங்கினர்
கம்பிதங்குறை பட்டநற் றடையினில்
அம்புவிக்க ணழுந்தின தாகையால்.

(இ-ள்.) பரமசிவன் ஒருதட்டிலேறியிருந்தார் சம்பிரமமுடையபிருகுரிஷி மற்றோர்தட்டிலும்ஏறியிருந்தார் பிருகுரிஷியின்தட்டு உயர்ந்தது பரமசிவனிருக்கின்றதட்டு பூமியில்தாழ்ந்து அழுந்தினது எ-று. (சுசு)

பிருகிஞண்மை யகன்றது பரமனுங்
குறுகுடத்து முனிக்கிவை கூறினன்
ஒருமை யாமித் தராசி னுறையென
விருவருஞ்சம ஞக் கிருந்தனர்.

(இ-ள்.) பிருகுரிஷியாண்மைநீக்கி தட்டுவிட்டுகீழேஇறங்கபரமசிவன்தட்டிலிருக்க பரமசிவன் அகஸ்தியரைப்பார்த்து அகஸ்தியரே இந்ததராசின்தட்டில் இருமென்றுசொல்ல அகஸ்தியர்தட்டிலிருக்க இருவருஞ் சரியாகவிருந்தார்கள்.எ-று. (எ௰)

அரியயன் முனிவோர் முதல்தேவரும்
தரும ஞதியர் சத்த விருடியர்
குரு குடத்து முனியுங் குழகனும்
பெருமை யானவ னென்றுரை பேசினர்.

(இ-ள்.) மகாவிஷ்ணுபிரமதேவன் முனீஸ்வரர் தேவர்கள்எமதர்மராஜனுகிய அஷ்டதிக்குப்பாலர் சத்தரிஷிகள் முதலானபேரும்பரமசிவனும் அகஸ்தியரிஷியும்சரியாய்நிறைநின்றபடியினலே பெருமையுடையவரென்று யாவரும்பேசிப் புகழ்ந்தார்கள் எ-று.

வேறு.

நம்ப னடியைப் பரவநாட்டின னுளத்திற்
றென்பதியி லேகதுதி செய் விஸ்வகன்ம
னம்புவி யுள்ளோர் பணிகள்செய் குவையளித்த
செம்பொன் சித்து சிறுவனுக்கெளிமையாவை.

(இ-ள்.) நம்பனுகியபரமசிவன் பாதத்தைதோத்திரஞ்செய்திருக்கும் அகஸ்தியர் பொதியமலையிலிருக்கும்படிசெய்தவிஸ்வகர்மனே இந்தபூலோகத்தில் வாழும்பேர்களுக்குசொர்ணவேலைகள்செய்து அவர்கள்கொடுத்த கூலியாகியதிரவியங்களையழித்து சித்து எல்லவர்க்கும் எளிமையாக விருப்பார் எ-று. (எ௨)

அயனுமய னென்றெனப் பகரலாலே
யுயர்விண யணைந்தவுன தின்கிளை யனைத்துங்
கயவர்கரு வித்துலக மன்னிகதி குன்று
நயமுள சிருஷ்டியு மகன்று நலிகொள்வாய்.

(இ-ள்.) முன்னேபிரமாவும் நீயும்ஒன்ருகுமென்றுபரமசிவன் சொன்னதிலே நீமகாபெரியவனென்று புகழாகவிருந்தாய் உன்னுடைய சுற்றத்தாரனைவரும் கயவரானசிறியவராய் உலகமெங்கும்

பரவிபெருமைகுறைந்து நலமாகியசிருஷ்டியும்நீங்கி வருத்தமடைவீர்களென்றார் அகஸ்தியர் எ-று. (எங)

என்னுமுனி சாபமிதை யத்திலுறை கன்மா
தன்னிகரில்லா முனிதனக்கு சாபமீய்வன்
இன்னகரி லாலயமும் பூசனையுமின்றி
வின்னமடை வாயென விகழ்ச்சி னுரைத்தான்.

(இ-ள்.) இப்படியென்று அகஸ்தியமகாமுனி கொடுத்தசாபமானது மனதிலேஉறுத்துகிற விஸ்வகர்மா தனக்குநிகரில்லாதஅகஸ்தியரைப்பார்த்து உனக்கிந்தபூமிகளிலே கோவிலும் பூசையும் இல்லாம லிருக்கக்கடவதென்று பதில்சாபம்கொடுத்தான் விஸ்வகர்மன் எ-று. (எச)

ஆதியெனுந்தமி ழகஸ்தியனை நோக்கி
தாதவிழ் கடுக்கைமலர் தார்புனை யுமப்பன்
ஓதுவனெமக்கிணை யொருவருமிங்கில்லை
நீதிபொதிகையி லுனைநிறுத்த நினைகின்றேன்.

(இ-ள்.) ஆதியாகிய நல்லதமிழையுரைக்கப்பட்ட அகஸ்தியமகாரிஷியைப்பார்த்துபூந்தாதுபூக்களின் வாசனையானகொன்றைமாலையணியும் பரமசிவன்சொல்லுகிறார் எனக்கிணையானவரம்பிறகாசிக்கப்பட்ட அகஸ்தியரேஉம்மை நீதியானதமிழ்நாட்டின்பொதிகைமாமலையிலே போயிருக்கும்படிநினைத்திருக்கின்றேனென்றார் பரமசிவன் எ-று. (எரு)

எள்ளுதனி லெண்ணெயென வெங்கனும் நிறைந்த
வள்ளல்சரு வேஸ்வரனே டென்னையிணை வைத்தாய
தெள்ளு தமிழான திருவாசக மறிந்து
வெள்ளிமலை மேவு மரவிந்த நடனத்தார்.

(இ-ள்.) எள்ளுக்குளெண்ணெய்போல வெங்கும்நிறைந்தவள்ளலாகியசர்வேஸ்வரனே உம்முடனேஎன்னையுஞ்சமதையாகவைத்துக்கொண்டாய் தெளிந்ததமிழில் திருவாசகமொழிந்த மாணிக்கவாசகர் சொன்னதைகேட்டு உம்முடையகையினாலேஎழுதிகயிலாசகிரியில் போயிருக்கும் தாமரைமலர்போன்ற பாதத்தினாலே நடனம்பண்ணப்பட்ட நாதனே யென்றார் அகஸ்தியர் எ-று. (எசு)

குண்டனை யுதைதத மிருகண்டன் மதலைக்கே
பண்டுமை விரும்புமொரு பாகமு மளித்தாய்

தண்டக வனத்துரிஷி தந்திரஞ் சிதைத்தாய்
பண்டமெரி யாலமினை யாசையுற வுண்டாய்.

(இ-ள்.) எமனையுதைத்துமிருகண்டர்பிள்ளையாகியமார்க்கண்டன்செய்யப்பட்ட பூசையினுடையபத்தியாலே வரமளித்தாய் பரமேஸ்வரி கேழ்க்கப்பட்ட விடப்பாகமளித்தாய்தண்டகாவனத்துரிஷிகளுடையதந்திரங்கள் நசிக்கும்படிசெய்தாய் ஆகாசமும் பூமியும் ஒன்றுயெழும்பிஎரிக்கப்பட்ட ஆலகாலவிஷத்தைக் கையில்பிடித்துண்டாய் பரமசிவனேயென்றார் அகஸ்தியர் எ-று. (எஎ)

அடியவர்களுக் கெளியனுக வருவோயுன்
அடிமுடி யறிந்திரைய னக்கினியென மாலுன்
அடிபரவ யானறிய னுகில னடித்த
வடிமுய லகன்முது கறிந்ததறி வேனே.

(இ-ள்.) அப்படியவர்களுக்கு எளியவனுன உன்னுடையபாதமுஞ்சிரசும் அறிவேனென்றபிரமதேவனும்மகாவிஷ்ணுவுமறியாதபாதத்தைநான்வணங்க அறிவில்லாமல்போனேன் உம்முடைடநடனபாதத்தால் முயலகன்முதுகி லழுந்தினபடியினுலே முயலகன்முதுகேயறியும் அதுபோலறிந்தேன் எ-று. (எஅ)

பஞ்சமுக மாகிய பரமபர னின்னுயேன்
பஞ்சதனு வுந்தனிணை யென்று பகர்கின்ற
பஞ்சவருள் பெய்துவள ரண்ண்லெளி யேனும்
கஞ்சல்புரி யுன்மகிமை யாரறிய வல்லார்.

(இ-ள்.) அஞ்சுமுகமுடையபரமனே உனக்குஅடியேன் பஞ்சையாகிய என்னுடலைசமதையென்றுபகருகின்ற அய்யனே பயப்படாதேயென்று அருள்தந்து ரக்ஷிக்கப்பட்ட அண்ணலேயெளியவனுனவெனக்கு உன்னுடையமகிமையை யறியாதவனுனென்றுனகஸ்தியன் எ-று. (எகூ)

துங்கமத வாரண முரித்தணி சுளுப்ப
துங்கசடை மன்னுமதி தும்பைமல ருய்யும்
கங்கைநறு மாலைவளர் கண்ணுத லளிக்க
கங்கைதரு வாயென கங்கையை யளித்தார்.

(இ-ள்.) மதம்பொழியப்பட்ட ஆனையையுரித்து போர்த்துக்கொண்டபிரகாசமான சடாபாரத்திலேஇருக்கப்பட்டகங்கையை தந்தால் தென்றிசையி லேகிறேனென்ன அந்தபடியே கங்கையை யளித்தார் அகஸ்தியருக்கு பரமசிவன் எ-று. (அய)

அத்தனளி கங்கை கமண்டல மடைத்தே
சித்தமகிழ் வாகமுனி செப்புவ னளித்த
புத்தியவு ணதிபர பொதிகையெனக் கேடா
ரஸ்திர மிகுந்தழல வீரனை யனுப்பும்.

(இ-ள்.) பரமசிவனளிக்கப்பட்ட கங்கையைக் கமண்டலத்தி லேபிடித்து அடைத்துக்கொண்டு மனதுமகிழ்ச்சியாக அகஸ்தியர் சொல்லுவார் மெலிந்தபுத்தியையுடைய வாதாவிராக்ஷதன் பொதிகைக்கு போகவொட்டார்கள் ஆகையால்புராணத்தில் மிகுந்திருக் கப்பட்ட அக்கினியிலெழுந்த வீரவன்னியம்காராஜன்சேனைசூழும் படியாக அனுப்பவேணுமென்றார் அகஸ்தியர் எ-று. (அக)

ஐயனே யென யிறைஞ்ச வண்டருந்
துய்யனே விது மிகுசூக்ஷி யென்றனர்
பையர வணைதுயில் வோன்வெண் பங்கயத்
தையலின் கொழுணனுந் தருண மென்றனர்.

(இ-ள்.) எனக்கு தந்தையேயென்று யடிபணியும்போது தே வர்களும் மாசில்லாதபிரகாசனேயென்று சொன்னார்கள் நஞ்சுப் பையையுடைய பாம்பை மெத்தையாகச்செய்து பள்ளிகொண்ட மகாவிஷ்ணுவும் வெள்ளைதாமரையில் விளங்கப்பட்ட பெண்ணை சரஸ்வதிபுருஷனாகிய பிரமனும் இதுதருணமென்றார்கள் எ-று. ()

வீரவன்னியன் முகம் விமல னோக்கியே
பாரினிற் பரவிய பாழரக் கர்கள்
சூரி கொண்டனர் சூரர்கள் வாடினர்
தாரணி மன்னனே தருணங் காரென்றார்.

(இ-ள்.) வீரவன்னியராஜன் முகத்தைப்பார்த்து பரமசிவன் சொல்லுகிறார் இந்தபூமியில்பிறந்த ராக்ஷதர்கள் எங்கும்கொள்ளை யடித்தார்கள் அதனாலேதேவர்கள் மனதுவாடி யிருக்கின்றார்கள் செங்கழுநீர்மாலையணிந்தராஜனே இதுசமயம் ராக்ஷதன் வாதாவி யை சம்மாரஞ்செய்து தேவாதிகளை கார்க்கவேணுமென்றார் பரம சிவன் எ-று. (அந)

தென்றிசை மேற்புறஞ் செழுத்த வாரியில்
துன்னிய ரத்தின கரந் துலங்கிடும்
நன்னுனந் நகரில் வாதாவி நாயகன்
மன்னனுந் தொடையணிந் தரசு செய்கின்றான்.

(இ-ள்.) தெற்குத்திசைக்கடுத்த மேல்பாரிசத்தில் சமுத்திரம் சூழப்பட்ட ரத்தினபுரி பிரகாசித்திருக்கின்றது அந்தபட்டணத்தில் வாதாவிசூரராக்ஷதனென்றுஒருத்தன் தனக்குமேலொருவனுமில்லையென்று வெற்றிமாலையோடு கிரீடமணிந்துசெங்கோல்செலுத்திக் கொண்டிருக்கிருன் எ-று. (அச)

கணக்கிலா வவுணர் கங்கனு மளித்தனன்
பணத்தினி புயங்களும் பாணமிக்கவர்
குணத்திக ழாகுவர் கொடிய பாதகர்
இணைக்குனை யன்றி வேறொருவ ரின்றியே.

(இ-ள்.) கணக்கில்லாத ராக்ஷதசேனைகளை சுக்கிராச்சாரியார் உண்டுபண்ணிக் கொடுத்தார் பணைத்திருக்கப்பட்ட பராக்கிரமமான புயங்களும் பாணங்களும் மிகுதியாயிருக்கப்பட்ட அவர்கள்குணங்களோ மகாகொடூரமாகிய கோபமுடையபாதகர் அவர்களுக்கிணை யுன்னையல்லாமல் வேறொருவரில்லை யென்றார்பரமசிவன். ()

உன்னிட தனையரு முயர்தர வீரரும்
மன்னவ ரடைந்தவ ணுண்மை நீக்கியே
யென்னடி யிறைஞ்சுவ தியற்கை வானவர்
மன்னனே யெனவுரை வழுத்தி னனரோ.

(இ-ள்.) உன்னுடையபிள்ளைகளும் ரத்தினபுரிசேர்ந்துவாதாவிசூரனுடைய வலிமையாகிய விராணுவங்களைநீங்கியென்னுடைய பாதத்தில்வந்து பணிகிறது நன்மையாகும் தேவாதிகளுக்குராஜாவானீவனே என்றுசொன்னார் பரமசிவன் எ-று. (அரு)

எந்தையி னடிவலம் புரிந் திறைஞ்சியே
விந்தைசேர் மலருறை விரிஞ்சன் கண்டிலாச்
சுந்தர முகுவளர் சோதி யன்புகழ்
பைந்தமி ழளவிடா பகரு கின்றிலேன்.

(இ-ள்.) எந்தையாகிய பரமசிவனடியை வலம்புரிந்து வணங்கிச்சொல்லுகிருன் அழகானதாமரையிலிருக்கின்ற பிரமதேவன் காணப்படாத சிரசுடையசோதியை யுன்னுடையபுகழாகிய பெருமையை வேதங்களாலே அளவிடக்கூடாது கொஞ்சஞ்சொல்லுகிறேனென்றான் வீரவன்னியன் எ-று. (அள)

நஞ்சணி யத்தனே நாரணி பாகனே
செஞ்சயி லந்தனிற் செயித்த நாதனே

அஞ்செழுத் தாகிய வாதி மூர்த்தியே
பஞ்ச பாணனை யழல்செய் தெழுப்பினை

(இ-ள்.) ஆலகாலமுண்ட அய்யனே உமைப்பாகனேகயிலாச கிரியில் செழித்திருக்கப்பட்டவனேபஞ்சாக்ஷரமாகிய ஆதிமூர்த்தியே மன்மதனையெரித்தெழுப்பி யிருக்கும்படிசெய்தாய் பரமனே யென்றான் வீரவன்னியன் எ-று. (அஅ)

மான்மழு சூலமு மதியுங் கங்கையும்
தேனலர் கொன்றையுஞ் சடையுஞ் சீருடை
யூனவ மேதியை யுரித் தணிந்தனை
யோனவாளரவா பரணம் பூண்டனை

(இ-ள்.) மானும்மழுவுந் திரிசூலமுஞ் சந்திரனுங் கங்கையுந் தேன் துளிக்கப்பட்ட கொன்றைமாலையுஞ் சடையிலணிந்து சிறப்பான ஊன்வளரப்பட்ட புலியையுரித்து தோலையணிந்தும் புற்றிலேவாழப்பட்ட பாம்பை ஆபரணமாகத்தரித்தாய் சுவாமி எ-று.

திரிபுர தகனனே செய்ய தாளனே
தெரியவூ னருந்திபின் சிறுவனுக்கினை
ஒருமுனி மகவினுக் குகந்து சண்டனை
தரணியி லுற்றவென் றந்தை யென்றனன்.

(இ-ள்.) திரிபுராதிகளாகிய ராட்சதரைத் தகனஞ்செய்யப்பட்ட செவந்தபாதமுடையவனே யாவருக்குந் தெரியும்படிபாலனுடைய கறியைத்தின்றுபின்புபாலனைச்செய்தவனே ஒருமிருகண்டமுனியினுடையபிள்ளை மார்க்கண்டன் பூசைக்குகந்து எமனையுதைத்த எனக்குத்தகப்பனாகவந்த சுவாமி எ-று. (கூ௰)

தோத்திரம் புரிந்திடுஞ் சுதனை முத்தமிட்
டேற்றுவ கண்ணுறை யிசைப்பனுன்றனை
நாற்றிசையி லுள்ளவர் நவின் றிறைஞ்சிட
பார்த்திப வுனக்கிசை பாணம் நல்குவன்.

(இ-ள்.) இந்தப்படியாக் தோத்திரஞ்செய்யப்பட்ட வீரவன்னியனாகிய பிள்ளையை வாரியெடுத்து முத்தமிட்டு ரிஷபவாகன்மேறப்பட்ட பரமசிவன்சொல்லுவார் உன்னுடையபெருமையை நான்குதிசையில்வாழப்பட்டவர்கள் துதித்துவணங்கும்படியாகஉனக்கு இசைப்பட்ட பாணங்களைத் தருகிறேமென்றார் பரமசிவன் எ-று. (கூக)

நாகமுங் கருடனும் நலத்த கிரியும்
தோகை மஞ்சைதேன் றுளிக்கு மஸ்திரம்

வேகமாம் பிரமனும் விண்டு சக்கரம்
பாக சாதனன் நற்படையுஞ் சூலமும்

(இ-ள்.) நாகாஸ்திரம் கருடாஸ்திரங் கிரியாஸ்திரம் தோகையுடைய மயிலாஸ்திரம் மாருதம்போலோடப்பட்ட பிர்மாஸ்திரம் விஷ்ணுவினுடைய சக்கரம் தேவேந்திரன்கையிலிருக்கப்பட்டவச்சிராயுதம் சூலாயுதங்களும் எ-று. (கூஉ)

பிண்டி பாலங் கதைபெருத்த கேடையங்
கொண்டதி னிடையெனக் கொதித்த சாரங்கஞ்
சண்டனைத் திரமுடன் சத்தி வேலும்வா
ளெண்டிசை யொக்கும் விச்சுளியு மீந்தனன்.

(இ-ள்.) பிண்டி பாலந் தண்டாயுதம்பெருமையான கேடையம் மேகம்போலஇடிக்குங் கோபமுடையசாரங்கம் யமனுஸ்திரம் சத்தி வேலாயுதம் எட்டுத்திசையும் எரிக்கப்பட்டவிச்சுளிபாணமு மீந்தனன் எ-று. (கூங)

கெசமுக நரசிங்கங் கிளர்ந் தெழு
பசுபதி பிறைசமும் பரசு பாணமும்
விஜய நாராயணன் விருச்சிகாஸ்திரம்
முசுகுந்தம் மோகனு முதலா யீந்தனர்.

(இ-ள்.) கெஜமுகாஸ்திரம் நரசிம்மாஸ்திரம்படர்ந்தெழும்பப்பட்ட பிறைகாஸ்திரம் பாசுபதாஸ்திரம் விசையாயெழும்பப்பட்ட நாராயணுஸ்திரம் வில்முசுகுந்தம் மோகனுஸ்திரம் முதலானபாணங்களைப் பரமசிவன் தந்தார் எ-று. (கூச)

அஞ்செழுத் தாகிய அஸ்திரத்தினுல்
செஞ்சரத் துயர்பவஞ் செயுஞ் சூஸ்திர
பிஞ்சிள மதிநுதற் பிள்ளை யாகிய
பஞ்ச வன்னியர்க்குப் பரனு ரோதினர்.

(இ-ள்.) பஞ்சாக்ஷரத்தினுலேஅக்கினியெழும்பப்பட்டபாணங்களுக்கு இறையாகிபலங்கட்டுகிற சூஸ்திரங்களும் மூன்றும்பிறைபோன்ற சந்திரனைப்போ லிருக்கப்பட்ட நெற்றிக்கண்ணினுற்பத்தியாகியபிள்ளைகள் அஞ்சுபேர் வீரவன்னியர்களுக்கு பரமசிவன் மந்திரம் ஓதிவைத்தார் எ-று. (கூரு)

உலகினை யீன்றவ ளொளிமலர்க் கழல்
சொலு மிறைஞ்சிட செயித்த பார்வைசெய்

தலைகட லினிதுறை யவுணர் சார்பெலா
மூலகினி லிரிந்திடவுண்மை யோதுவாள்.

(இ-ள்.) இந்தலோகங்களையெல்லாம் பெற்றமாதாவாகிய பரமேஸ்வரியினுடைய மலர்ப்பாதத்தில் வீரவன்னியன் வணங்கும் போது அவன்பேரிலே அருள்பார்வைசெய்து அலையடிக்குஞ்சமுத்திரநடுவி லிருக்கப்பட்ட வாதாவிமுதலான ராக்ஷதரைக் கொல்ல வேண்டிய உண்மைக்கருத்தை வீரவன்னியன் தெளிவுறச் சொல்வாள் பரமேஸ்வரி எ-று. (௬௬)

எந்தன் மகவான் விலஞ்சி யனே
சிந்தை துயர் செய்யவு ணுதியருக்
கிந்த பதியேறு தட நடுவில்
விந்தை யெனுந்துற்கை விளங்கிடுவள்

(இ-ள்.) எனக்குஆசையாகியமகன் வீரவன்னியஇலஞ்சியமே மனதில் துயரஞ்செய்யப்பட்ட ராக்ஷதாளுடைய நகரத்துக்குஉங்கள்சேனை சூழும்படியாக வருகிறவழியிலே விநோதமாக துர்க்கா பரமேஸ்வரி வீற்றிருக்கிருள் எ-று. (௬௭)

சமரித் திடுஞ்சர மளித்தாள் தொழுதாள்
விமலி யருளிய விருப்ப முடன்
இமையவ ரேத்துஞ் சிகா மணிநீ
யமருக் கிசைவா யழல் மன்னவனே.

(இ-ள்.) சண்டைக்குரியவளாகிய துர்க்காபரமேஸ் வரியினுடையபாதத்தில் பணிந்தீர்களேயாகில் அவளுங்கள்பேரிலே கிருபாகடாட்சம்வைத்து வரங்கொடுத்து ஆசையாக உங்களுக்குத்துணையாயிருப்பாள் தேவர்களுக்கெல்லாஞ் சிகாமணியான வீரவன்னியனே அதற்குமேல்சண்டைக்கு ஆரம்பஞ்செய் அக்கினியிலுதித்தமகனே யென்ருள் பரமேஸ்வரி எ-று. (௬௮)

சோதித்தெழு சூலமும் வேல்சுரிகை
யீதித்தின முன்கர மீந்த னனத்
தீதுற்றவு ணுதியை சேதித் திடவிப்
போதுத்திர ளோடயில் போகுதி யால்.

(இ-ள்.) இப்படிப்பரமேஸ்வரியானவள்பிரகாசம்பொருந்திய சூலாயுதம் வேலாயுதங்கத்தி யின்றையதினத்தில் உன்னுடைய கையில்கொடுத்தபடியினலேகுற்றம்பொருந்திய ராக்ஷதாளைகொல்

னும்படியாயிப்போதுதானே நீசேனைகளைக்கூட்டிக்கொண்டுபோ
ய்வாவென்றாள் ஈஸ்வரி எ-று. (கூகூ)

என்றாள்பத மிறைஞ்சினனாய்
நின்றானொடு மாலயனும்மிருவர்
குன்றாமவுணதி குழாமமரில்
சென்றாலிடர்தீர்ப்பது மிச்சிலையே.

(இ-ள்.) இப்படியாக பரமேஸ்வரி வரம்பாலிக்க அவள்பாத
த்தைவணங்கி நிற்கும்போது மகாவிஷ்ணுவும் பிரமதேவனும்இரு
வரும் வீரவன்னியமகாராஜனே மலைபோலிருக்கப்பட்ட ராக்ஷதா
ளுடைய வர்தாவியின்சேனை சண்டைக்கு வருகிறபோது அவாளு
டையஉடலை வெட்டித்துணித்து எங்களுடைய இடர்களையெல்லாந்
தீர்த்துபோடும் என்னுடைய சிலையானபாணம் எ-று. (ளா)

வே று.

எனவே பிரசண்ட கோதண்டமு மீயவானோ
ரனல்மா முனியே யவுணதிப ரனைத்துமவின்ற
தினமுங் குறைவாயென மிகச்செயங்கள் கூற
குனிவிக் கரங்கூப்பி யுறைந்திடுகோயில் சார்ந்தான்.

(இ-ள்.) இப்படிசொல்லப்பட்ட பலமானகோதண்ட வில்லைக்
கொடுத்து தேவர்கள்சொல்லுகிறார் அக்கினியில் பெருமையாகிய
இரத்தினாபரண மணிபோலுதித்த வீரவன்னியமகாராஜனே ராக்ஷ
தாள் யாவரையும்வென்று இவ்விடம்வந்து சேர்வீர்கள் போய்வா
ருங்களென்று சொல்லும்போது வீரவன்னியர்கள் வளைவாகியவில்
லைப்பிடித்த கையைக்கூப்பிசொல்லிக்கொண்டுதாங்களிருக்கப்பட்
டமண்டபம்வந்து சேர்ந்தார்கள் வீரவன்னியர்கள் எ-று. (ளாக)

காருற்ற குழன்மடவார் கட்கரசி கேளிய
பேருற்றிடு தென்றிசைமேற் பால்பலந் தரக்கர்
சீருற்ற னரங்கினிலேகி செயங்க ளுற்றே
பாருற்றவீர ரனைவோரு மென்பாத மன்னன்.

(இ-ள்.) கரியமேகம்போன்ற அளகபாரமுடையபெண்களுக்
கெல்லாம் அரசியாயிருக்கப்பட்ட பெண்ணேகேளும் பேற்பெற்றி
ருக்கின்ற தெற்குசமுத்திரத்திற்கு மேலேயிருக்கப்பட்ட ராக்ஷதர்
கள் உலகங்களையிடுக்கண்செய்துசிறப்பாயிருக்கின்றார்கள்அவாளை
நீங்களனைவரும்போய் சண்டைசெய்து செயித்து ஜெயமாக இந்த
பூமியிலனைவரும் என்னுடையபாதத்தைத் தேடிவருவீர்கள் எ-று.

பருமாமுடி சென்னியிலங் கவிப்பார் புரக்க
வருகால மிக்கோவி லிருப்பவள் மென்சேது
நிருபன் கழலேற்றி யமரினிணங்க ளுண்ணும்
பெருவேற பிடிகரமின்புய நங்கள்பிரானே.

(இ-ள்.) பெருமையானகிரீடஞ் சிரசில்பிரகாசிக்க இந்த பூமியையாளும்படியாக வருகிறநாள்வரைக்குமிந்த மண்டபத்திலேயிருப்பது வளமாயிருக்குமென்று சொல்லப்பட்ட ராஜாவினுடைய முகத்தைப்பார்த்து பாதம்பணிந்து சண்டைமுகத்தில்ராக்ஷதாளுடைய நிணங்களையுண்ணும் வேலாயுதத்தை பிடித்தகையும் பலமாகிய புயமுடைய ராஜாவே எ-று. (௱௩)

அவுணதிப ராண்மை மிகுந்தவர் கையாலுன்
குவலஸ் திரவோ னலிவான் குறிகண்
சுவையாகிய சோதனை யீந்தருட்கோ வென்ன
நவமாமணி மொய்க்கு முடிநயன னவில்வான்.

(இ-ள்.) வாதாவிராக்ஷதன் ஆண்மைமிகுந்தவனுகச்சே ராசனே அவர்ளுடையகையினலே உம்முடையதிரக்ஷியானதோளுக்கு ஒருவேளை நலிவுவந்துதானல் அந்தக்குறி நானுங்காணும்படியாக ஒருசோதனைதரவேணும் என்னுடைய பிராணநாயகனுன வீரவன்னியனே எனமகாராசன் சொல்வான் எ-று. (௱௪)

கொந்தார் குழன் மாதே யவுணர் கொதித்தெழுந்து
சிந்தா குலஞ்செய் திடுநாளில் செழுந்தீபம்
நிந்தாகிச் சங்குமுழங்கு நிறைந்த மாலை
யிந்தா யிதுவாடு மிகசூழ்ச்சி யிதையமுற்ருல்.

(இ-ள்.) கொத்தாகிய மலர்மாலையணிந்த கூந்தலுடையபெண்ணே அந்தராக்ஷதர்கள் மகாகோபத்துடனே எழும்பிவந்துஎன்னுடையமனது விதனங்கொள்ளும்படியாகசெய்கிறநாளில்இதோஎரிகிறதீபம் அவிந்துபோகும் இந்தசங்குசப்திக்கும்நிறமான புஷ்பம் யிந்தா இதுவாடிப்போகும் இந்தசூக்ஷிஉன்னுடைய மனதிலேயறிவாய் மந்திரமாலையேயென்று வீரவன்னியன் சொன்னுன் எ-று.()

அப்போ தழல்வீழ்வை யெனவரச னியம்ப
விப்பா விவனீன்ற தனையரிசைப்ப மாதோ
வெற்பா மவுணதி கரத்தின்மேவி வடைந்தாற்
சொற்பா லளித்திட்ட சுவானமுன் பாலிற்சூழும்

(இ-ள்.) அப்போதுதானே அக்கினியில்வீழ்ந்திறந்து போவென்று வீரவன்னியன்சொல்ல விப்பால்வீரவன்னியனுடையபிள்ளைகள் நாலுபேருந் தங்களுடையபெண்சாதியைப் பார்த்துசொல்லுவார்பெண்ணே மலைபோலிருக்கப்பட்ட ராக்ஷதாளுடையகையினாலே நாங்கள்மெலிவாகி மடிந்தால்பாலும் அன்னமுமளிக்கஉண்டுவளரப்பட்ட நான்குநாய்களிலே ஒருநாய்உங்களிடத்திலேவந்துவிடும் எ-று. (ளசா)

அன்றே மலரருவை யென்றுரைத் தவர்கூடி
சென்றே நதியாடி விபூதி சிறப்பணிந்து
கொன்றையணிக் கூத்தனை போற்றினர் கோயிற்சார்ந்து
நன்றமு துண்டு சுகந்தநல மணிந்தார்.

(இ-ள்.) அன்றையதினத்தினாலேதானே நீங்கள்நால்வரும்அக்கினியில்விழுந்து மடிந்துபோங்களென்றுசொன்னஅஞ்சுவீரவன்னியர்களும் ஒருமித்துக்கூடிப்போய் கங்கையில்ஸ்நானம் செய்து நல்லவமுதுண்டு சுகந்தங்க ளணிந்தார்கள் எ-று. (ளஎ)

அணிகின்ற கலனணிந் தேதுவர்க் காயருந்தி
மணிகொண்ட கொடிசிர மின்னமலர்கடுன்ன
திணிகொண்ட புயங்களை கூடுசெம்பட்டிலகம்
யிணையெவ்வுலகி லில்லையெனு முழங்கிய வன்றே.

(இ-ள்.) தாங்களணியப்பட்ட ஆபரணாதிகள்முதலாகியது மணிந்து தாம்பூலமருந்தி நவமணியிழைத்திருக்கப்பட்டகிரீடஞ்சிரசிலேமின்னும்படியாக வெற்றிமாலைசூடி பலம்பொருந்திய புயங்களில் அம்பறாத்தூணியுங்கட்டி செவந்தபட்டாடை பிரகாசிக்க தங்களுக்கு யிணையாகிய பேர்களிந்த உலகத்திலில்லையெனப்பட்டதேசுமிகுத்திருக்கும் நாளில் எ-று. (ளஅ)

மலரின்கர மம்பொடுவில்லும் வளர் வானோ
கலையோதி னிற்கா வனைபூதமை மாரிதூற்றப்
பலமாகிய தானை பயணம் பயணமென்றே
யொலிபேரி குடமுழை சங்குமுறுமி துன்ன.

(இ-ள்.) மலர்போன்ற கையிலேஅம்பும் வில்லும் வாளுந்தேவர்கள் வேதமந்திரமோதி நல்லகற்பகமலரைமழைபோலத்தூற்றி வாழ்த்த பெலத்திருக்கப்பட்ட சேனைகள் பயணம் பயணமென்று பேரிகை குடாமுழா சங்கு உறுமியென்னப்பட்ட வாத்தியங்கள் முழங்க எ-று. (ளகூ)

அண்டங்கள் கிடுகிடுவென்ன வசுவந் துன்ன
கொண்டாடு சங்காயல் குசாயுங்கொம் பூதவீணை
மண்டாடுந் தம்பூருடன் மத்தள தாளமார்ப்பத்
திண்டோள் புயவீரன் புகழைசெயங்கள்பன்ன.

(இ-ள்.) அண்டங்கள் கிடுகிடென்னவும் அக்கினிசூழ்ந்து பரவவும் பலவாத்தியங்கள்முழங்கிவரவும்பலம்பொருந்தியவீரவன்னியர்களின் பெருமையை செயஞ்செயமென்று கூறினர்கள் எ-று.()

குண்டோ தரன்பொற் றடிகொண்டு விருதுகூற
வெண்டிக்கினு முள்ளோர் செவிடாகி யக்கரின்
மண்டிச்சிறை கொள்ளுவரோ வென்றறி வேறு
துண்டரவு ணதிபரிட தோள் துடித்ததன்றே.

(இ-ள்.) குண்டோதரனுக்கு சமதையானபேர்கள்பொன்தடி கொண்டு விருதுகள்பேசி யெட்டுத்திசையிலு முண்டாகியபேர்கள் காதுசெவிடுபடும்படியாகவும் ராக்ஷதவாதாவி யின்னமும் நம்மை யிந்தபூமியில்வந்துபிடித்து சிறையிலடைப்பானோ என்னமோவென்று சந்தேகங்கொள்ளும்படியாகவு மிருக்கதுஷ்டனன் வாதாவி ராக்ஷதன் இடதுதோள் துடித்தது எ-று (கககக)

## வேறு.

கைப்படை மன்னவன் கன்னு தன்விடை
செப்பிட மக்களுஞ் சேனை சூழ்ந்திட
மைப்படி கண்டனை யிறைஞ்சி மக்களை
ஒப்புர வாகவே யுறுதி கூறினன்.

(இ-ள்.) கையில் விற்பிடிக்கப்பட்ட வீரவன்னியராஜன் தன் தேவி மந்திரமாலையினிடத்தில் விடைபெற்றுப்பிள்ளைகளும்சேனையுஞ் சூழும்படி பரமசிவனிடத்தில் வந்துபணிய மக்களைப்பார்த்து சொல்வார் பரமசிவன் எ-று. (ககஉ)

வன்னியிற் றோன்றிய வரிசை மாமணி
மின்னிய வவுணரை யழித்து மீண்டபின்
இன்னக ரனைத்தையும் புரக்கு மேந்தலா
மின்னரு ளீய்ந்து தாளிதமு மீய்ந்தனன்.

(இ-ள்.) அக்கினியில் மணிபோலத்தோன்றிய வீரவன்னியராஜாக்களே வேலாயுதம்பிடித்த ராக்ஷதரையழித்து இவ்விடம்வந்த

பிறகு இந்தபூமியெல்லா மாளும்படியான ராஜாவாகஆவீர்களென்றுவரமளித்து விபூதியுங்கொடுத்தார் பரமசிவன் எ-று. (ககங)

உமையடி யிறைஞ்சின ருவகை யாகவே
சமர்கொடு மீளுவீர் தானை காளென
கமலநேத் திரனயன் கடவு ளின்கழல்
அமைவுட னிறைஞ்சின ரவரும் வாழ்த்தினர்.

(இ-ள்.) பார்வதிபாதத்தில் வணங்கிபாதம்பணியஉமையவள் வீரவன்னியரான என்பிள்ளைகளே சண்டைசெய்து வென்றுமீண்டு வரக்கடவீரென்று வரமளித்து வாழ்த்திபிர்மா விஷ்ணுதேவர்களிவர்களை வரிசைவரிசையாக வணங்கமுறைமுறையாய்வாழ்த்தினர்கள் எ-று. (ககச)

அனைவரின் விடை கொளுமரசர் வீரனும்
மனதினில் மயன்றனை நினைப்ப வந்தனன்
தினகர னொளிரிர தஞ்சிருஷ்டி செய்யென்
றெனவிர தமுமய னளிப்ப வேறினன்.

(இ-ள்.) அனைவரிடத்திலும் விடைபெற்றுவீரவன்னியன் மயனைநினைக்க மயன்வந்துகாண சூரியகிரணம்போல தேர் சிருஷ்டியென அப்படியேஒருதேர் சிருஷ்டித்துக்கொடுக்க வீரவன்னியனத்தேரிலேறினன் எ-று. (ககரு)

மாதவ னுயர்ந்த மாமுனிக ளேத்திய
காதலத் திரியென காதல் யுன்னியிப்
பூதல விசையமாம் பூப நாரினை
போதக சனகனு முரைக்க லுற்றனன்.

(இ-ள்.) மேன்மையாகிய தவத்திலுயர்ந்திருக்கப்பட்ட ரிஷிகள்பணியும் அத்திரிமகாரிஷியே வீரவன்னியருடைய வரலாறிப்படியாகுமென்று பூலோகத்தில்ராஜாக்கள் புதுமையை சொல்லப்பட்ட சனகரிஷி யினிமேல் நடக்கப்போகிற கதையைச் சொல்லுகிறார் எ-று. (ககசு)

## சூறைச் சருக்கம்.
### முற்றிற்று.

---

ஆகபாயிரம் உட்பட சருக்கம்-கஉ-இ

திருவிருத்தச் செய்யுள் சாகூரு.

கடவுள் துணை.

## பன்னிரண்டாவது.

# வீ ர வ ன் னி ய ர் க ள்

## படையெழுச்சிச் சருக்கம்.

அன்னையேயெங்கய்யனையிறைஞ்சவன்புடன்விடைகொடுத்தனுப்ப
உன்னியமுரசு காகளமார்ப்ப வும்பருமுனிவருங் களிப்ப
மின்னியதேரும் வேழமும்பரியு மிலக்கவீரர்களுஞ் சூழ
சென்னியின்மவுலியிலங்கிடபுரிந்தா ன்சிவன்மகன்வீரவன்னியனும்

(இ-ள்.) பார்வதியையும் பரமசிவனையும்பணியவிடைகொடுத் தனுப்ப பலவாத்தியமுழங்க இடிகளுந்தேவர்களும் மனங்களிக்க தேரும்யானையும் குதிரையுஞ் சூழும்படியாக இலக்ஷம் வீரருடன் வீரவன்னியமகாராஜன் கிரீடந்தரித்துப் புறப்பட்டான் எ-று. (க)

தனையர்கள்நால்வ ரிருபுறம்நெருங்க தந்திரரமைச்சரும் மிறைஞ்ச
குனிசிலைவீரர் கவுரிகளிரட்ட கோதிலார்கா ளாஞ்சிகளேந்த
புனிதமாம்கிரண நறும்புகைசூழ பொற்கோல மிருபாலி
லினிதுறபக்கத் தீவட்டியுமிலங்க வந்தகன்றிசையினி னடந்தான்.

(இ-ள்.) பிள்ளைகள்நால்வரும் நெருங்கிவரவும்மந்திரிகள்வண ங்கவும் வீரர்கள்கவரிவீச காளாஞ்சியேந்தவும் புனிதமாகியவாச னைவீசும்படி பொற்கோலங்கொண்டு எமன்திசையைநோக்கிநடந் தார்கள் எ-று. (உ)

எமன்றிசை தெற்குதிசை கொம்பெக்காளங் குடமுழாயாழுங்
குயிலுவத்தை சிந்துரக்கவிகை செழித்தோ ரஸ்வகேதனனும்
அம்புவியாசர் வந்தனைசெலுத்த வனப்பரி யினங்களு மார்ப்ப
கும்பமாமுனியுங் கோதிலாதமிழை கூறவும்நடந்தனன் மாதோ.

(இ-ள்.) பலவாத்தியமுழங்க செம்பொன்சிவிகையும் செம் பொன்குடையும் நெற்றியில்சிந்தூரப்பொட்டும் அஸ்வக்கொடியும் அக்கினிக்குதிரையும்நடக்க ராசராசாக்கள்கப்பணங்கட்ட அகஸ் தியர் தமிழ்படித்துவர நடந்தான் வீரவன்னியன் எ-று. (ங)

அழனிலுதித்தவீரவன்னியரு மரன்மலையகன்றிட வமரர்
குழுவுடனவனி புரந்திடுநாதன் கோயினிலேகியே யிறைஞ்சி

விழைவுள புதுமை யனைத்தையுமோர்ந்து வெகுசகரகன்றனர் தீபம் பழமுறப்படியே பாடிநற்றவமும் பலிவுலநடந்தன னன்றே.

(இ-ள்.) வீரவன்னியர்கள் அஞ்சுபேரும் கயிலையங்கிரி நீங்கி தேவர்களுடனே பூமியிலிருக்கப்பட்ட சிவாலயங்களை தரிசித்து வணங்கிப் புதுமையைக்கண்டு வெகுதேசத்தின் தீர்த்தமாடி நல்ல மகத்துவமடைந்து நடந்தார்கள் எ-று. (ச)

வாரணுபுரிகாளத்தியுங் காஞ்சிமலை மருந்தென் வளர்புதியும்
சீருடனேகிசே விடையத்தன்செய்ய பொற்கழலினிலிறைஞ்சி
நீரினையர்டி நேமியையகன்று நிறைந்தனற்றில்லையை வணங்கி
தாரணிசம்பந் தற்கருளீந்த தற்பரன்முன்றிலிற் சார்ந்தான்.

(இ-ள்.) காசிகாளாஸ்திரி காஞ்சிபுரம்திருவண்ணுமலையிவைக ளைத்தரிசித்து வணங்கி அதைவிட்டுசிதம்பரத்தில் நடேசரைத்தரி சித்து சம்பந்தர்உற்பத்தியான சீர்காழியைச் சார்ந்தார்கள்எ-று.

தக்கனைக்கருத்தி லுன்னியே வேளூரண்ணலின் கழலிணைசாற்றி
பத்தியாயேகக் குறுமுனிசெய்ய பருவதஞ் சார்ந்துமே நிற்க
குத்திரநினைக்கும் விச்சுவகர்மன் குறுமுனிகமண்டலம் கவிழ்க்க
சித்தமீதுணர்ந்தான் தேவரினமுஞ்சிந்தையிலுவகையாகின்றுன்

(இ-ள்.) சீர்காழிவணங்கி வேளூர்வயித்தியலிங்கத்தைத்தரிசி த்து அகஸ்தியர் சஞ்சரிக்கும்பருவதத்தைநினைந்து அதிலிருக்குங் கமண்டலசலம் கவிழ்க்க விஸ்வகர்மனினைக்க தேவர்களுஞ்சம்மதி க்க மகிழ்ச்சியானுன் விஸ்வகருமன் எ-று. (சு)

பொற்கயமுகன்பாற் புகலுவன்முனிவன்புனிதநற்சடையினி லுறையும் நற்புனல்கவிழ்ந்து நடந்தனனதனை நானிலந்தனிற் கவி ழ்த்திடவே, வக்கணமகவா னருளுவனவுணராண்மையாலவனிகள் செழியா, துக்கமுங்கலங்கையாற்றிடச் சோழன்ருென்னகர் செழி ப்புறுமென்ருர்.

(இ-ள்.) விநயகரிடத்தில்போய் பரமசிவன் சடையிலிருந்த கங்கையை அகஸ்தியர்கொண்டுபோகிறதை கவிழ்க்கவேணுமென் ன அப்படியேதேவேந்திரன்வந்து ராக்ஷதரால்பூமி பாழடைந்தது அதைக்காக்கும்படி செய்யென்ருன் எ-று. (எ)

அன்னையாங்கங்கை குறுமுனிகுன்றியடைந்ததா லுவகையை யடைந்தே, வன்னியன்பாலிற் சென்றிடாதேகு மார்க்கமுமனத்தி னிலுருக்க, கன்னிற்கொடியாயேகுற சபையிற்கயமுகன் குண்டி மேலிருந்து, பொன்னதிசாயப்பூதலமீதிற் போக்கிடச்செய்தனன் புனிதன்.

(இ-ள்.) கங்கையானது அகஸ்தியர்கமண்டலத்திலிருக்க வீரவன்னியன்பின்போகும்படி விநயகர்காக்கைரூபமாய்போய்க்கமண்டலத்தின் மேலேறிச்சாய்க்க பொன்னினதிபூமியிற் பரவிடச்செய்தார் புண்ணியசொரூபியாகிய விநயகனர் எ-று. (அ)

வாவியங்கவரும்வாரிபோலெங்கும் வளர்ந்துமேதிரைகளும்பொங்கி
காலினவரையை சாடியேகடலிற் கலந்துற காசினிசெழிப்ப
யாவரும்புகழ் பவமெலாமகற்று மருணங்கிகா விரியெனவே
பாவினிற்புகல பரமுனியிந்த பாங்கிணைக்கண்டிரஞ் சேர்ந்தார்.

(இ-ள்.) கங்கையானது பொங்கி திரையெறிந்து கீழ்கடலில் போய்சேர பூலோகஞ்செழித்து பாவங்களையகற்றுகிறதினலே யாவரும்புகழ்ந்து காவேரியென்று நாம்மளித்துவிருக்க அகஸ்தியர் மனங்கலங்கினர் எ-று. (கூ)

வீரவன்னியனை விடுத்திடவுரைந்தவிதத்திறற்குன்றியைக்கவிழ்த்தி, பாரெலாம்பாவு நதிகலந்தேக பாக்கியம்பெற்றில னென்னக், காரணமுனிவன்றண்டினற்கீறிகங்கையுந்தானுமப்பொதிகைசீருடனுறைந்தா ரினிபுயவீரன் செழிப்புறுமயூரஞ் சார்ந்தனனல்

(இ-ள்.) வீரவன்னியரை விட்டுவிட்டபடியினலே கங்கை கமண்டலத்தை கவிழ்த்தார்கள் அதுபூமியில்நிறைந்தது இதைக்கொண்டுபோக பாக்கியமில்லாமல் போய்விட்டதென்று கையிலிருந்த மாத்திரைக்கோலால் கீறிவிட்டு கங்கையை யழைத்துக்கொண்டு பொதிகையில் போயிருந்தார் வீரவன்னியனும் மாயூரம்வந்துசேர்ந்தான் எ-று. (ய)

மயிலினையுமையபா ளுந்திடும்பதியின் மயேஸ்வரனடியிணையிறைஞ்சி, பயணமாயரசன் றென்றிசைநோக்கி பதிவளமனைத்தையுமோர்ந்து, தயவுடனீன்ற தனையருஞ்சூழ தரணியைக்கண்டுபோந்தனனல், வயலுள்வளமும்மலைவள முழுதுமக்களுக்குரைத்தனன் மாதோ.

(இ-ள்.) மயிலுக்குச்சமதையான உமையவளுதித் திருக்கின்ற மாயூரநாதரைவணங்கி தெற்குமுகம்நோக்கிஸ்தலமெல்லாந்தரிசித்து அவைகளை பிள்ளைகள்நால்வர்க்குங்காண்பித்து அதைவிட்டுபக்கத்திலிருக்கப்பட்ட மலைவய லிதுகளைக்காட்டி மக்களுக்குச் சொன்னன் வீரவன்னியன் எ-று. (கக)

முல்லையிலதிதேவதை யெனவிளங்கு முண்டகக் கண்ணனுக்குகந்த, வல்லியர்மாயர் கன்களிகூர்ந்து மளமிகுபாலன மளித்து

நல்லதோர்குரவை கூத்துகளாடும்நன்மையையுளத்தினிலுணர்ந்து
சொல்லுவன்றனையர்க் கிதுபுதிதாக தொன்னகருறைந்தன் வென்
ருன்.

(இ-ள்.) முல்லைவனத்துக்கு தேவதையான விஷ்ணுவுக்கு உக
ந்தவிடையரும் இடப்பெண்களுமாகப் பொங்கலிட்டு படைத்துக்
கூத்தாடுகின்றதை மனதில்நினைந்து பிள்ளைகளுக்கு சொல்லுவான்
இந்தநகரத்திலிருக்கிற புதுமைகளைப் பாருமென்ருன் வீரவன்னி
யன் எ-று. (கஉ)

அன்னிலமகன்று மருதநன்னிலத்தி லணுகினன் மாதுலனுன
மன்னவன்களிக்க மாதர்கள்சுகந்த மலரினுற்றே சினைநிறப்பி
யுன்னியவிழவு மொழிந்திட விளங்கு முண்மையுங் கண்டுகற்பூமி
குன்னமில்லாத குறிஞ்சியைச்சார்ந்தான் குறவரின்றெகுதிகளனை
[த்தும்

(இ-ள்.) அந்தமுல்லைநிலத்தைக்கடந்து மருதநிலம் வருகிற
போதுதேவேந்திரன் மனங்களித்திருப்பதையுமற்றவாள்செய்கை
களைக்கண்டு மனமகிழ்ந்து கல்பூமியான குறிஞ்சிநிலத்தைச் சேர்ந்
தான் வீரவன்னியன் எ-று. (கங)

அறுமுகன்களிக்க தேன்தினைமாவுமளந்து நற்பூசைகளளித்து
வெறியெனுமாடல் பழவினையுணர்ந்துவிருப்பமாமன்னிலமகன் று
திறமுளநெய்த னிலந்தனில்வருண தேவனை நுளையர்க டுதித்து
நிலவுசேர்முன்றிற் சுறவுமுண்ணுட்டி நேருபைந்தரு மளித்தார்.

(இ-ள்.) சுப்பிரமணிர் களிக்கும்படிச்செயகின்ற திருவிழா
வைக்கண்டு அதைவிட்டுநெய்தனில்போய் வருணதேவனை நுளையர்
கள்துதித்து வாசலில் சுறுமுள்ளைநாட்டி பந்தலிட்டார்கள் எ-று.

வந்தனையணங்காடென்னு கூத்தாடும்வளத்தினைக் கண்டதிசயித்து
நிந்தைசேர்பாலை நிலந்தனிலேக நிறைவிளபட்டணங் களிற்போய்
யந்தமாம்பொருளை கவர்ந்துபங்கிட்டே யாளிவாகினிக் களிமறவ
குந்தியில்வகையாய் புலிவிளையாடு முண்மையுங்கண்டதிசயித்தான்

(இ-ள்.) அந்தவனங்களைக்கண்டு அவைகளைவிட்டுபாலைவனம்
வந்து அதில்திருடர்கள் கொள்ளையடித்துவந்து பங்கிட்டு துர்க்கா
பகவதிக்கு ஒருபங்குவைத்து தாங்களமைத்தவையை கொண்டு
போவதைக்கண்டு அதிசயித்தான் வீரவன்னியன் எ-று. (கஙு)

பஞ்சநன்னிலத்தின் வளங்களையோர்ந்த பார்த்திபனடந்திடப்பா
நஞ்சணிமிடற்று னுடனடமாடு நாயகிவிளங்கி யமுன்றில் [ண்டி

செஞ்சடைசூழுங்க சிங்கமுமிலங்க சேல்விழியினிற் பொறிபறக்க
சஞ்சலமில்லாப் பூதங்களினமுஞ் சாமையுஞ் சமயமீதுரைக்கும்

(இ-ள்.) இந்தவனங்களைக்கண்ட வீரவன்னியன் அப்பால்நடக்கும்போது முன்னாளில் பரமசிவனுடனேநடனமாடின துர்க்கையானவள் தன்னுடையகோவில்வாசலில் சிவந்தசடையுடன் சிங்கவாகனம்பிரகாசிக்க கண்ணிரண்டுஞ்சிவக்கப்பூதப்படைகளுடனே வாசற்படியில் நின்றுசொல்லும் எ-று. (கசு)

தாயெனவளர்த்த தயாபரி நடனசாமளி நடனசங்காரி
தூயநற்றிருசூலங் கையின்வளையுஞ் சரிகையுமணிந்த சிங்காரி
பேயினமானவெங்களுக் கிரைகள்பேணில தெம்மிடவயிறு
காயுதென்றரற்றிக்கழலடியிறைஞ்சிகண்ணிநீர்கசிந்திடவுரைக்கும்.

(இ-ள்.) எங்களைவளர்க்கப்பட்ட மயிடசங்காரிதிரிசூலமுடையகைவளையலுஞ் சரிகையுமணிந்தவளே எங்கள்வயிறு தீப்போல காயுதே இரையில்லாமல் மனங்கசிந்து சொல்லுகிறோம் என்று பூதங்கள் சொல்லின எ-று. (கஎ)

திரிபுராதிகளைநகையினாலெரித்தசிவன்மகன் சூரரைசெயித்து பெருவிருந்தளிக்க வுண்டுளமகிழ்ந்தோம் பின்னொருவரமளித்திலையால், அருமையாகியவுன்மக்களைக்காக்கவகமிறங்கிடுவைநீயென்ன பரிமளசுகந்த பங்கயபதத்திற்பரிந்தருள் பார்வைதந்துரைப்பாள்

(இ-ள்.) பரமசிவனளித்த சுப்பிரமணியர்சூரபத்மாவைமடித்துபெரியவிருந்திட வுண்டுமகிழ்ந்தோம் அதன்பிறகுவயிறுநிறையவிருந்தளிக்க வில்லையென்று பூதப்படைகள்சொல்ல அப்போதுஅருள்பார்வைகூர்ந்து சொல்லுவார்கள் துர்க்காபரமேஸ்வரி எ-று.

திக்கினையொடுக்கு மவுணன்மாதேவி செழிப்பினை யழித்திடமுத்தன், முக்கணனடுக்கண் தன்னிலேமுளைத்த முதல்வனும் வன்னியனென்போன், புக்குவனவனுக் குகந்தருள்பொழிந்து போர்செயும்விதமெலாம்வுரைத்தே, யக்கணமவுணர் நிணந்தசையுதிர மன்புடனளிப்பனென் றுரைத்தாள்.

(இ-ள்.) திக்குகளையொடுக்கப்பட்ட வாதவிசூரனை யழிக்கும்படியாக பரமசிவன்பிள்ளையான வீரவன்னியன்வருகிறான். அவனுக்குகந்துவரமளித்து அவன்பின்னேநாமும்போய்சண்டையிடும்விதங்களைச்சொல்லிக்கொடுத்து ராக்ஷதரைசம்மாரஞ்செய்துஅவாள் மாமிசத்தை உங்களுக்குஅளிக்கிறேனென்றாள் பரமேஸ்வரி எ-று.

அமலியீதுரைப்ப வலகைகள்மகிழ வரசனுமமைச்சருஞ் சூழ
சமரிபாலையினிற் கீழ்த்திசை நதியிற்சார்ந்திட வெம்மணலழலில்
தமதகநீத்து பாதநோயுறவேதாரணி மார்பனுந்தனயர் [ல்
உமையவள்முன்றிற்றேரிழிந்தேகியொளிமலர்ப்பதமிறைஞ்சினனு

(இ-ள்.) இப்படியாக தர்க்கைசொல்ல பூதப்படை மகிழ்ந்திருக்கும்போது வீரவன்னியராஜன்மந்திரிகளுடனே பாலைவனத்துத்தேவதையான தர்க்காபகவதியின்கோயிலில் சாரமணல்சுடுகையினாலே அவ்விடத்திலிறங்கி பிள்ளைகள்நால்வரும் தேரைவிட்டுவந்து அம்மனைவணங்கினார்கள் எ-று. (உ௰)

## வேறு.

கங்கு லென்னு மிருளைக் கடிந்தெழுந்
திங்கள் செஞ்சடைத் தேவி செழிப்புறுங்
பங்கயப் பதமீது பணிந்திடும்
எங்களுக் கரு ளீயென் றிறைஞ்சினன்.

(இ-ள்.) இருளைத்துறத்தப்பட்டசந்திரனைசடையிலணியும்பகவதியின்தாமரைமலரை ஒப்பற்றபாதத்தில்பணியும் எங்களுக்கு உன்னுடையஅருள் தரவேணுந்தாயே என்றுபணிந்தார்கள்எ-று.

வீரி யென்னும் விமலி நமோநமோ
தாருகன் மலர் தாளி நமோநமோ
மாரி யென்று மதங்கி நமோநமோ
நாரி பாக ரிடத்தி நமோநமோ.

(இ-ள்.) வீரியென்றும்விமலியென்றும் மகிடசங்காரியென்றும் மாரியென்றும் மதங்கியென்றும் பரமசிவன்இடப்பாக மமர்ந்தவளென்றும் சொல்லப்பட்டதேவியே நமோநமோவென்று தோத்திரஞ்செய்தார்கள் வீரவன்னியர்கள் எ-று. (௨௨)

அறம் வளர்த்தரு ளன்னை நமோநமோ
நறவு துன்னு நளினத் திருந்திடும்
மற மஞ்சாத மனத்தி மயேஸ்வரி
யிறப் பிலாத வெழிலி நமோநமோ.

(இ-ள்.) முப்பத்திரண்டறமுந் தேன்துளிக்கப்பட்ட தாமரை மலர்ஆசனமும் கொடுமைக்கஞ்சாதமனமும்இறப்பில்லாதவளுமாகிய பரமேஸ்வரி நமோநமோ என்றார்கள் எ-று. (௨௩)

என் றிறைஞ்சும் வீரனை நோக்கியே
மன்றலந் தொடை மாரி வழுத்துவ

டென்றிசைக் கதிபதி தீய வவுணரை
வென்றி கொண்டருள் வீரர்கள் வாழியே.

(இ-ள்.) இவ்விதமாகத் தோத்திரஞ்செய்த வீரவன்னியர்களை ப்பார்த்து சொல்லுவாள் தெற்குத்திசைக்குச்சென்றுநீங்கள்ராக்ஷதனைக்கொன்று வெற்றிக்கொண்டு வாழ்வீர்கள் எ-று. (உச)

இன்ன லான வியக்க ரிடரினல்
பொன்னி நாடும் புவனமும் வாடின
மன்னவா யென் மகனுன் வாளியாற்
சின்ன நீசனை சேதிப்பை யென்றனள்.

(இ-ள்.) ராக்ஷதனுகிய வாதாவியின் இடுக்கத்தினுலே பூலோகமும் தெய்வலோகமும்வாடிக் களைப்புற்றபடியினுலே என்னுடையமக்களே உங்களுடையபாணத்தினுலே நீசனைசம்மாரஞ் செய்து வாழ்வீர்களென்ருள் துர்க்கை எ-று. (உரு)

சேது கீழ்த்திசை சென்ருன் படையுடன்
தீதி லாமற் செழிப்புறுங் காலையிற்
பூதந் துன்ன நடனம் புரிகுவன்
சோதி மர்முடி தோன்றலே என்றனள்.

(இ-ள்.) இராமேஸ்வரத்துக்குக் கீழ்பாரிசத்திலே போயிருங்கள் நான்பூதப்படைகளுடனே தாண்டவமாடிவருகிறேன் பிரகாசம்பொருந்தியமுடியணிந்த வீரவன்னியனே யென்ருள் துர்க்கை எ-று. (உசா)

வாமியின் னருள் மன்னிய மன்னவன்
ருமங் கொண்டவ டாளை யிறைஞ்சிநல்
லேமந் துன்னு மிரதத் தேறிநன்
சோம சேகர னீன்றரு டோன்றலே.

(இ-ள்.) இப்படியாக துர்க்கையினருள்பெற்றவீரவன்னியரஞ்சுபேரும் அவளைவணங்கி தேரேறிஞர்கள்பரமசிவனுலளிக்கப்பட்டவீரவன்னியர்கள் எ-று. (உஎ)

பேரி மத்தளந் தாளமும் பேசிட
வாரி யென்ன முழங்கி வரும்படை
வீரி முன்றை யகன்று விநோதமா
மாரவாரண நாடி யடைந்ததே.

(இ-ள்.) மேளவாத்தியமொலிக்க சமுத்திர கோஷ்டம்போல் படைகள்வர காளியானதுர்க்கை கோயிலைக்கடந்து ஆரவாரணமாகிய திருவாரூரைப்பார்த்து யடைந்தார்கள் எ-று. (உஅ)

வன்னிய ரந்தத் தியாகர் வமர்பதி
துன்ன நன்னகர் போந்திடச் சூரிய
மன்னன் மந்திரி மாருட னேகியே
தன்னுழையே யழைத் தேகினன் றூரனே.

(இ-ள்.) தியாகராயசுவாமி வமர்ந்திருக்கும்பதியை நெருங்கி சோழனுடையநகரத்திற்போகும்போது சோழராசன் மந்திரிமார்களுடனே யெதிராகவந்தழைத்து கோட்டையின்மண்டபம் வந்தார்கள் வீரவன்னியன்சேனைகள் எ-று. (உகூ)

நித்திலங்க ணிறைந்திடு முன்றில் சூழ்
வெற்றி மண்டப மீதில் விளங்கினன்
பற்றியான வமைச்சர் படை யினஞ்
சுற்று மண்டபஞ் சூழ்ந்தின ராமரோ

(இ-ள்.) முத்துகள்நிறைந்தவாசல்சூழ்ந்தவெற்றிமண்டபத்திலிருந்து பிரகாசித்தார்கள் பிறகேவந்தவமைச்சரும் சேனைகளும் சுற்றிலுமிருக்கிற மண்டபத்திலிருந்தார்கள் எ-று. (௩௰)

நேறி வெற்பன் பதியி னிறைந்திடும்
வீரன் சேனை களிக்க விருந்தளித்
தாரை மாடை நிதியு மளித்தபின்
றீர ணிப்பதி சார்ந்ததென் செப்பென்றான்.

(இ-ள்.) சோழராசன் பட்டணம்நிரைந்த சகலசேனைகள்மகிழும்படிவிருந்தளித்து சகலவாபரணமுமளித்துஎன்னுடையபட்டணம் நாடிவந்தகாரிய மென்னவென்றான்சோழராசன்எ-று. (௩க)

மிக்க வேள்வியிற் றோன்றிய வீரர்கள்
திக்க டங்குஞ் செயங்கொ ளவுணரை
வெற்றி கொள்ள விமல னனுப்பினர்
இற்றிசைக்க ணேகின மென்றனன்.

(இ-ள்.) அக்கினியில்பிறந்த வீரவன்னியராஜாக்கள் நாங்கள் இந்தத் திக்கெல்லாங் கொள்ளைகொள்ளு மவுணனைவாதாவியைக் கொன்று வெற்றிப்பெற்று வரும்படியாகபரமசிவன் அனுப்பியபடியினாலே நாங்களிவ்விடம் வழியாகவந்தோமென்றான் வீரவன்னியன் எ-று. (௩உ)

செய்ய தாளினிற் செங்கரங் கூப்பிநற்
றய்யமேயவு ணதிப னுண்மையால்

வைய மெங்கும் வளர்மனு வாடினர்
துய்ய முத்துயர் துடைத்தரு ளென்றனன்.

(இ-ள்.) இப்படியாகச்சொன்ன வீரவன்னியராசனை சோழ ராஜன்பணிந்து நன்மையையுடைய என்னய்யனே ராக்ஷதருடைய ஆங்காரபலத்தினாலே இந்தபூமியில் வாழுமனிதர்கள் செழிப்பில் லாமல் துயரமாயிருக்கிறார்கள் களங்கமில்லாதவனே இத்துன்பங் களை யகற்றவேணுமென்றான் சோழராசன் எ-று. (௩௩)

பரிதி கண்ட பனியவு ணதியர்க்
குருதி யெங்கும் பரவிக் குணதிசைக்
கருநிறக் கடல்சேரக் கரமதில்
உரவும் வேலின் றொழிப்பனென் றோதினன்.

(இ-ள்.) சூரியனைக்கண்டு பனிநீங்கியதுபோலராக்ஷதரைஎன் ஆயுதத்தால் வெட்டியவிரத்தம் கீழ்ச்சமுத்திரத்தில் போகும்படி செய்துவைக்கிறேனென்றான் வீரவன்னியன் எ-று. (௩௪)

வளவன் றன்விடை பெற்று வலிமைசேர்
தளமுஞ் சூழ தயங்கா மனத்தினோன்
அளவிலாப் புக ழாரூ ரகன்றுமின்
னொளி மிகுத்த முக்கூட லுறைந்தனன்.

(இ-ள்.) சோழராசனிடத்திலேவிடைபெற்றுதன்னுடையசே னைகளுடன் பயமில்லாதமனமுடைய வீரவன்னியராஜன் திருவாரூ ரைவிட்டு மதுராபுரிபட்டணம் வந்தான் வீரவன்னியன் எ-று. ()

சார்ந் தியம்பிடத் தாரணி மார்பனும்
வாய்ந்த தானையோ டேகி மருவிவான்
றோய்ந்த கோயி லுறைத்திடந் தோதிநூ
லாய்ந்த மன்னற் கமுதளித் திட்டனன்.

(இ-ள்.) அப்போதுவீரவன்னியன் வருகிறசேதி தூதுவரால் சொல்லக்கேட்ட மதுராபுரியிலிருக்கும் பாண்டியராஜன் சேனைக ளுடனெதிர்கொண்டு வந்தழைத்துப்போய் வீரவன்னியனுக்குஞ் சேனைகளுக்கும் விருந்தளித்தான் பாண்டியராஜன் எ-று. (௩௬)

நற்றவந் தரு நாதனற் பாலரும்
சுற்றி மன்னிய சேனையர் சூழ்ந்திட
கொற்ற வன்றன் கோயிலமு துண்ணுஞ்
சத்தியின் மலர்த் தாடுதித் தோதுவான்,

(இ-ள்.) பரமசிவன்பாலனுன வீரவன்னியராஜன் சேனைசஞு டனே பாண்டியராஜாவின்மண்டபத்தில்போயிருந்து விருந்துசா ப்பிட்ட வீரவன்னியனை பாண்டியராசன்பாதத்தில் தொழுதுவண ங்கிசொல்லுகிருன் எ-று. (௩௭)

நாயி னேனுறை யாநகர் நாடின
தூயனே வந்த சூழ்ச்சி யருளெனத்
தீய னுன வாதாவியை சேதிக்க
ஆயுதத் தோட வன்பதி நாடியே

(இ-ள்.) அடியேனுடையபதியில் வந்தகாரணமேதென்னதீது செய்யப்பட்ட வாதாவிசூரராக்ஷதனைச் சங்கரிக்கும்படியாகஆயுத த்துடனே அவனுடையரத்தினபுரிக்குப்போக நாடிவந்தோம்என் ருன் வீரவன்னியன் எ-று. (௩௮)

கால னஞ்சுங் கயவவு ணதிபன்
வேலை சூழுல கோரை யழித்தனன்
ருல முண்டோ னளித்தரு ளய்யநின்
சூலத்தா லெங்கள் துன்பமகற் றென்ருன்.

(இ-ள்.) எமனஞ்சும்ராக்ஷதன்வாதாவிசூரன் சமுத்திரஞ்சூழ் ந்த பூலோகத்திலிருக்கிறபேர்களை கொன்றுபோடுகிருன் விடத் தையுண்ட பரமசிவனளிக்கப்பட்ட அய்யனேஉன்னுடைய சூலா யுதத்தினுலே ராக்ஷதனைசம்மாரஞ்செய்து எங்களைக்கார்க்கவேணு மென்ருன் சோழராசன் எ-று. (௩௯)

அஞ்ச லத்த மளித்து விடைகொள
செஞ்சடைச் சிவன் கோயிலிற் சென்றுகார்
நஞ் சணிந்த மிடறுடை நாதனே
தஞ்சமுன் சரண கதியென்றனன்.

(இ-ள்.) பயத்தைநீக்கென்று அபயஸ்தங்கொடுத்துவிடைபெ ற்றுக்கொண்டு பரமசிவனிருக்குங் கோயிலிற்சென்றுகறுத்தகண் டத்தையுடைய ஐயனேஉன்னடைக்கலம் உன்பாதத்தைத் துதித் துப்போற்றி வணங்கினேனென்ருன் வீரவன்னியன் எ-று. (௪0)

## வே று.

பாண்டிநாடுறையும் பரமனையிறைஞ்சி பரசிவகௌரியைப் பரவி
நீண்டகோபுரமுமதிலெலாமகன்று நிறைந்தனன் ருனையோடவனி
தாண்டியமன்னன் சேதுநீராடித் தசரதன் மகவினுற்றழைத்த
தூண்டிடாதீபச்சுடரொளிராமே சுரமுறைநாதரைத்தொழுதான்.

(இ-ள்.) மதுரையில்வாழப்பட்ட சொக்கநாதரையும் கௌரியாகிய மீனாக்ஷியம்மனையும்பணிந்து நீண்டிருக்கப்பட்ட சேனைசூழும்படி அனேகநகரங்களைக் கடந்துபோகின்ற வீரவன்னியமகாராஜன் சேதுவில்தீர்த்தமாடி தசரதமகாராஜன் பாலனாகியராமமூர்த்தி இராவணாதிகளையழித்தபழிதொலய சிவஸ்தலமுண்டுபண்ணி பூசைசெய்த இராமேசுரத்தையும் வீரவன்னியன் தெரிசித்தான்.()

சேதுவின் றேயமாடியே கீழ்பாற்சென்று நின்றானையுசூழ
நீதிசேரழலி லுதித்திடவந்த நித்தநின்னருளினான் மயனுஞ்
சோதிசேர்விடுதி யளித்தனனதனிற் சுதனனேவோ ருறைந்திருப்ப
நாதனோடாடும் நாயகியாரு மாடின்ளலகைக ணடிக்க

(இ-ள்.) சேதுவினுடையதீர்த்தமாடிசேனைசூழும்படியாகநீதியாய்ப் பரமசிவனுடைய வருளினாலே மயனானவன்விடுதி சிருஷ்டித்துக்கொடுத்தான் அதில்வீரவன்னியனும் பிள்ளைகளுஞ்சேனையும் நிறைந்திருந்தார்கள் அப்போதுபரமசிவனிடத்தில் வாதாடியதுர்க்காபரமேஸ்வரி யந்த இடத்துக்குவந்தாள் எ-று. (சஉ)

அம்மையினடியை யன்புடன்றுதித்தே யவுணரினவனியிலேக
நன்மையாந்தடமு நவிலெனவுறையு நாயகன்வதனமுநோக்கி
யிம்மையிற்செய்த மகத்தினிலுதித்த விறைவனேயிக்கணமவனி
சும்மையைத்தீர்ப்பாயென்றுரைசெய்யத்தோன்றினனாரதனன்றே

(இ-ள்.) பூதகணங்களுடனே வரப்பட்டதுர்க்கையைத்தோத்திரஞ்செய்து வாதாவிராக்ஷதன் வாழப்பட்ட விரத்தினாபுரிக்குப்போக வழிதெரியவில்லையேஇந்தசமுத்திரத்தை தாண்டுகிறவிதமெப்படியென்று வீரவன்னியராஜன்கேட்க துர்க்காபகவதி வீரவன்னியனைப்பார்த்து நீஒன்றுக்கு மஞ்சாதேயென்று சொல்லும்போதுநாரதரிஷி யவ்விடத்துக்குவந்தார் எ-று. (சங)

முனியடியிறைஞ்சி மொழிந்தவனுணர மூர்க்கமுந் தீர்க்கமுமவனிசெனிமையுமுள்ள செறுக்குநன்னடத்தைச் செலுத்திடாவிதமுரைசாற்றும், மௌனவழனிருப னியக்கன்வாதாவி யெந்தையின்வரத்தினால் வலுத்தான், கனிவுடன்கேளென்றுரைத்தன வீதிசூழ்கஞ்சயீ துறைந்தவன்சுதனும்.

(இ-ள்.)வந்தநாரதரிஷியைத்தொழுதுவாதாவியின்பலத்தைக்கேட்க அக்கினியிலுதித்தராஜனேகேள்வாதாவியானவன்பரமசிவனிடத்தில் வரம்பெற்றவனென்று நாரதர்சொன்னார் எ-று. (சச)

தக்கனன்மகத்திற் ருனவாபெற்றசாபமுந் தயித்தியருதிப்பும்
உக்கிரவேல னவுணரைப்பிடித்தே வும்பரினிடுக்கமகற்றியதுந்
முக்கமுமிகுத்த சோமுகிதூறுவாசனு லிருசுதனளிக்க
அக்கிரமிகுத்த வில்வலனகத்தை யடக்கினன்குறுமுனியன்றே.

(இ-ள்.) தக்கன்யாகஞ்செய்ய அதில்தேவர்கள் போயிருக்க பரமசிவன் மனங்கோதித்து சூரபத்பன் தாருகாசூரன்சிங்கமுகாசூரன் ஆனைமுகாசூரன் அசோமுகியிப்படிநால்வரையுமுண்டுபண்ணி யிடுக்கண்செய்ய சுப்பிரமண்ணியராலே அத்துன்பத்தையகற்றிவைத்தார் அசோமுகியானவள் தூருவாசரைச்சேர்ந்து இரண்டு பிள்ளைகளைப்பெற்ருள் அதில்வில்வலன் அகஸ்தியராலழிந்து போனான் எ-று. (சரு)

வாதவுணதியகத்தினிலரன்றன் மலர்டிதுதித்துவானுறையுஞ்
சோதியாங்கம்ப மீதினிற்சென்னி பொருந்திடக் கழலிணைதாக்கி
கோதிலாத்தவமும் புரிந்திடக்குழகன்கொடுத்தநல்வரத்தினல்மய
னைமாதுலனென்றே யுறவுகொண்டாட மகடனையீய்ந்தனன் மகிழ்
வால்.

(இ-ள்.) உயரமாகிய கம்பத்தினுனியில் ஊசிநட்டிஅதில்தலையைவைத்து காலையுயரத்தூக்கி தவஞ்செய்தானப்போது பரமசிவன்ரிஷபமேறிவந்துஅவனினைத்துகேட்டபடிவரத்தைக்கொடுத்துவிட்டபடியினுலேயும் மயனென்பவனைமாமனுரென்றுமுறமைகொண்டாடி அவன்மகளை மாலைசூடும்படியா யளித்தான் மயனென்பவன் அந்தவகையினல் எ-று. (சசா)

நகரமொன்றளித்தான்சுங்கனுமனேகராக்கதர்தேருடன்குதிரைத், தொகையிலாக்கோடி யவரிடமுளைக்க துஷ்டர்கள் சுரர்பதிநாடி, பகைவனென்றவனி பலமெலாங்கவரும் பான்மையார்பரமனீதுணர்ந்தே, சகமதிற்றுதிக்குஞ் சம்புவின்மகத்திற் றகைண்மையாயுனையளித்தனனல்.

(இ-ள்.) இரத்தினபுரியென்று ஒருபட்டணஞ் சிருஷ்டித்துகொடுத்தான் மறுபடியும்சுக்கிராச்சாரியாரனேகஇராக்ஷதரைசிருஷ்டித்துக்கொடுத்தார் துஷ்டனுகியவாதாவிசூரன்தேவலோகமுதலாகியதும்போய் பட்டணங்களைகொள்ளைகொண்டு அநீதஞ்செய்ததினலே பரமசிவனறிந்து பூலோகத்தார்புகழுகின்ற சம்புமகாரிஷியின்பாதத்திலே யுன்னையுண்டுபண்ணினுர் பரமசிவன் எ-று. ()

உனதுகைச்சரத்தா லுயிரிழந்திடுவ ரொளிமலர்ப்பதமெனுங்
கோவே, யெனவுரையனைத்து மிறையவனுளத்தி லிருத்தியேயியம்

புவனவன்பாற், றனிமையாந்தூதொன் றனுப்பியேயவர்கள் பலம
தைபாற்சிபின்றக்கசினையடுபடையாற் சென்னிவீழ்ந்திடவே செய்
குவனிதுபெருஞ்சரதம்.

(இ-ள்.) உன்னுடையகையிலிருக்கப்பட்ட பாணத்தினாலே அந்தவாதாவியினுடைய சீவனிழந்துபோவானென்று நாரதர்சொல்லராசாவானவீரவன்னியன் மனதில்வைத்துக்கொண்டு சொல்லுகிறான் அந்தராக்ஷதனிடத்தில் ஒருதூதனுப்பியவர்கள் சொல்லைத்தெரிந்துக்கொண்டு பலத்தை யொழித்துக்கொல்லுந் தொழிலையுடைய என்னுடையஆயுதத்தால் அவன்றலையையுருண்டோடும்படிச்செய்வதேயென் உறுதிஎன்றான் வீரவன்னியன்எ-று. (சஅ)

என்றுரைவீரனியம்பநாரதனு மியம்புவனமுலினிலுதித்தமன்
றலந்துடைசேர்மார்பனேயுனது வாய்மையைமனத்தினிலோர்ந்து
நன்றுரைநவிலா நான்மறைப்படியேநன்மைதூதனுப்பிடநினைந்தீர்
வென்றிசேர்புயத்தா யாவரையனுப்பவினவினீருரையெனவிளம்பு

(இ-ள்.) இப்படிவீரவன்னியன் சொன்னதை நாரதர்கேட்டு சொல்லுவார் உன்னுடையவாசகங்களைக் கேட்டபோதே மனதிலேயுணர்ந்தேன் நல்லபுத்திசொல்லிவாதாவியென்பவனிடத்துக்கு தூதுஅனுப்பநினைந்தீர் யாரையனுப்புகிறதென்றுகேட்க நாரதர்க்குசொல்லுகின்றான் வீரவன்னியமகாராஜன் எ-று. (சகூ)

பிரமவன்னியனைப்போவெனவிடுத்தார் போயவுணரைப்பல
மகற்றி, வருவனென்றொருவர்வாதுரைமொழியார் மாலயனேவிட
வவுண, னுரைசெய்வனும்ப ருரைத்திடாரடியே னுண்மையாயே
குவ னவுணர், திருக்கயநினைப்ப ரிதற்கொருவண்ணஞ் செப்பென
த்தொகுத்தனன் செம்மல்.

(இ-ள்.) பிரமவன்னியனை வாதாவியினிடத்தில் தூதனுப்பினால் அந்த வாதாவியின்பலனை யடக்கிப்போட்டுவருவான்அவனல்லாது இன்னமிருக்கப்பட்ட பிள்ளைகளையனுப்பினால் அவன்கேட்டசொல்லுக்கு பதிற்சொல்வார்கள் விஷ்ணுபிரமாவையனுப்பினால்ராக்ஷதன்கோபிப்பான் தேவரையனுப்பினால் அவர்கள்போய் சொல்லமாட்டார்கள் நானேபோவோமென்றால் சிறுமையாகநினைப்பான் இதற்கு ஓர்வகைசொல்லவேணுமென்று பாதத்திற்பணிந்தான்வீரவன்னியன் எ-று. (ருய)

ஆழிசைமுனிவனறைகுவனடியேனவுணர்கோனிடத்தினில்சில
பா, தாழ்விலாம்முனிவ ருலகுளோரனைத்துஞ் சண்டைசெய்யாவு

ரைசாற்றி, வாழ்கெனவவுணன் வம்புரைசெய்தான்மண்டியசமர்க்கிசையென்றே,யாழியையகற்றிங்குறையவனென்றே யரசனுமிசைத்தனன் மாதோ.

(இ-ள்.) வீணைவாசிக்கப்பட்ட நாரதரிஷிசொல்லுகிறார் நான்போய்தேவர்களுக்கும் மற்றவர்களுக்கு மிடறுசெய்யாம லுன்னுடைய பட்டணத்திலேதானேயிருந்து வாழென்றுசொல்லுகிறேன் அந்தவாதாவிமறுத்தானானால் சண்டைக்கிசையும்படியாக பேசிவருகிறேனென்றுசொல்லஉருத்திரவன்னியனுஞ்சம்மதித்தான்எ-று

சனகனையிறைஞ்சி சாற்றுவனவுணர் தந்திரமுகிவர சாடநினைகிவரோவென்றுரைப்பவுமுரைப்பனிறைவுளமூப்பினோர்தூதர்
வருகினுமவரை மதைத்திடாரின் மற்றுளவரசரென்றுரைக்கும்
பனிபலர்ச்சடையோ னருள்பெறுமுனியே பாரெனத்துதினைப்ப
[கர்வான்.

(இ-ள்.) இந்தப்படியாக சொல்லப்பட்டசனகமகாரிஷியைத்தோத்திரஞ்செய்து அத்திரிமகாரிஷிசொல்லுகிறார் வாதாவிராக்ஷதன்தந்திரஞ்சொல்லப்பட்ட ரிஷியீஸ்வரரைக்கண்டால் கொல்லநினைக்கமாட்டானோவென்று சொல்லக்கேட்ட சனகரிஷிசொல்லுவார் வயதிலே மிகுதியானபேர்களையும் தூதாகயார்வந்தபோதிலும் அவர்களைமாத்திரம் வதைசெய்யமாட்டார்கள் இன்னமிருக்கப்பட்டராஜாக்களனைவரும் ஒன்றுசொல்லக்கேட்டு சரிதானென்று மனமகிழ்ந்து பனியினுடையகுளிர்ச்சியினாலே மலரப்பட்டபுஷ்பங்களைசடையிலணிந்த பரமசிவ னருள்பெறப்பட்டு முனீஸ்வரனே இனிமேல் நடக்கப்பட்ட கதையைச்சொல்ல வேண்டுமென்றுசொல்லநாரதர் தூதுபோனகதையைச் சொல்லத்தொடங்கினார் சனகமகாரிஷி எ-று.

## படையெழுச்சிச் சருக்கம்.

முற்றிற்று.

---

ஆகபாயிரம் உட்பட சருக்கம் கக-இ

திருவிருத்தச் செய்யுள் ருசஎ.

உ

கடவுள் துணை.

# பதின்மூன்றாவது.

# நாரதர் வாதாவியினிடம்

## தூதுபோனச் சருக்கம்.

செந்தழலுதித்த தேவனுமனுப்ப செயம்பெறு நாரதமுனிவன்
முந்தியவுவரி கடந்தனன் முதலாமூர்க்கன் வாதாவியின்னகரில்
வந்தனகாவ லவுணர்களிறைஞ்ச. மந்திரித்தலைவர்கள்வணங்க[ ணுல்
விந்திரனேவெனவுரைபகர்ந்த வியக்கர்கோன் கொலுவிருந்தன

(இ-ள்.) அக்கினியிலுதித்த வீரவன்னியராசன் அனுப்பபட்ட நாரதரிஷி சமுத்திரங்கடந்தது எப்படியென்றால் மேகரூபமெடுத்து கோபத்தையுடைய வாதாவியின்ரத்தினபுரியிலேவந்தா ரப்போது ராக்ஷதருக்குராசாவாகிய வாதாவிசூரராக்ஷதன் இந்திரன் போல மந்திரிமார்களுடனே கொலுவீற்றிருந்தான் எ-று. (க)

கரிபரியிரதங்கடலெனமுரசுங்காகளமாற்றிடுமொருபால், சுரிகுழன்மடந்தை பரதநாடகமுந்துதித்திடவிலங்கிடுமொருபால், இருவிருகரத்திலாலாத்திகளேந்தி செயம்பெறவாழ்த்துவரொருபால்
நருமலரென்னுங் கற்பகக்காயை நாடியேயுதிர்த்திடு மொருபால்.

(இ-ள்.) யானைகுதிரை தேர்காலாட்கள் கடல்போலொரு பக்கத்திலொலிக்கவும் சுரதலீலைசெய்யப்பட்ட நடனமாதர்கள் ஒருபுறம் ஆலாத்திரண்டுகைகளிலுயேந்தி மங்களம்படிப்பவர்ஒருபுறமும் கற்பகத்தருதன்காயைக் கொடுக்கும் ஒருபுறம் எ-று. (உ)

கதிருதயம்போற் கனநவமணியேகளங்கிலாமழையினிழைத்து, மதிநுதலுயர்ந்த சென்னியிற்பதித்த மவுலியுமார்பணி கனலும், பொதிகையிலுறை சந்தனமுனிபுயமும்புகழ்பெற வணிந்தவவுணதி, யுதயமேருவினில் விளங்கியசமுகத் தியர்முனிநாரத னுதித்தான்.

(இ-ள்.) சூரியகிரணம்போல நவமணிகளையிழைத்த மூன்றாம்பிறைபோன்ற நெற்றியிலணிந்தகிரீடமும் மார்பிலணியும்ரத்தினப

ரணமும் சந்தனமணிந்தபுயமுடைய வாதாவிசூரன்சூரியன்போல் விளங்கியசமுகத்தில் நாரதமுனி தூதாகவந்தார் எ-று. (௩)

கின்னரிமீட்டி கெலித்திசங்கிதமுங் கிளர்ந்தவெண் ணுருவனு மாகி, மன்னியபுலித்தோல்கமண்டலங்காவிவத்திரம்மார்பில்முன் னூலும் மின்னியசடையும் விளங்கிடுநுதலுங்கோவிந்தன்பதத்தை யும்விடுத்த, துன்னியதிரிபுண் டரமதுவணிந்து துய்யனுமாசிலா துறைந்தான்.

(இ-ள்.) கின்னரியாகிய யாழ்வீணையைமீட்டிக்கொண்டு நல்ல ராகங்களைப்பாடி வெள்ளைரூபமாகிய தேகத்தில்புலித்தோலுங்கம ண்டலமுங் காவிசோமனு மார்பில்பூணநூலும் பிரகாசமானசடை யும்நெற்றியிலே விளங்கப்பட்ட விஷ்ணுவின்பாதத்தைப்போல எ ழுதப்பட்ட திருநாமமணிந்த துய்யனாகிய நாரதரிஷியானவர் மன திலேகளங்கமில்லாமல்வந்தார் வாதாவியிருக்குமிடம் எ-று. (௪)

கடவுணாரதனைக் கண்டனனவுனன் கண்ணினிற்கனல்கலந்தெ ழும்ப, புடவிகள்சுவற பூதலநடுங்கப் புகலுவன்புனிதனர் முதலெ ன், னிடமதிலுறையு மிதையமுமில்லா ரெவ்விடம்வளர்பவனுந்த னடலெலாமுரைசெ யெண்டிடுமாண்மை யருமுனிகேட்டுரைமகிழ் வான்.

(இ-ள்.) நாரதரைக்கண்ட வாதாவிகண்கள் நெருப்புப்பொறி பறக்க சமுத்திரம்வற்றவும் பூமிநடுங்கவும் இப்படியாக இருக்கப் பட்டவென்முன்னே நீயெங்கிருப்பவ னிங்குவந்தகாரண மென்ன வென்றுகேட்க நாரதர்சொல்லுவார் எ-று. (௫)

நிருதருக்கதிக நிருபனேநெடுமா லுந்தியினிறைமல ரதனில் வருபிரமன்றன் மதலைநானென்பேர்வழுத்துவந்நாரதரெனசேவகரு திநூலுணர்ந்தோன் சுரத்தின்மிகுத்தோன் றுகளிலாமனத்தினில மரர், பெருமையையிடர்செய் பிரபலர்தூது பேசவந்தன னெனப் புகன்றான்.

(இ-ள்.) இராக்ஷதராசாவான வாதாவிசூரனேயாரென் றென் னைநீ வினவினபடியினாலேநான்மகாவிஷ்ணுவி னுந்திக்கமலத்திலே உற்பத்தியானபிரமதேவன் குமாரன் என்பேர்நாரதன் வீணைவா த்தியம் தேவலோகத்திலிருந்து வாசிக்கப்பட்டவன் தேவர்களுக் கு இடுக்கண்செய்யப்பட்ட உன்னிடத்தில் தூதுபேசவந்தேனென் றான் நாரதன் எ-று. (௬)

அப்பொழுதவுண் ரறைகுவனமரரரியயனரன்முனிவோர்கள் செப்பியேவிடுத்த தூதனேவன்றி சிறுவயதாகியகுமரன், கைப்ப டைபலத்தால் விடுத்ததோதென்முன்கழறெனக்களங்கமிலாதான் இப்படியடங்குஞ் சூறைகொள்ளியக்க ரிறைவனேகேளென விசை ப்பான்.

(இ-ள்.) அப்படிசொன்னதை வாதாவிகேட்டுசொல்லுகிறுன் அடாநாரதரிஷியே தூதுவந்தேனென்றுயேதேவர்கள்விட்டாரோ அல்லதுமகாவிஷ்ணுவோ பிரமதேவனேபரமசிவனே ரிஷியீஸ்வர ர்களோ அல்லவென்றுஇளவயதான சுப்பிரமணியன் தன்னுடைய கையிலிருக்கின்ற வேலாயுதத்தின் பலத்தினுலேவிட்டானே பின் யார்தானனுப்பினுர்கள் அதையெனக்குத் தெரியச்சொல்லடாவெ ன்றுகேட்க களங்கமில்லாதமனமுடைய நாரதரிஷி சொல்லுவார் எந்தஉலகங்களிலும்போய் கொள்ளையடிக்கப்பட்ட ராக்ஷதருக்கு ராசாவான வாதாவிசூரனேகேளுமென்று சொல்லுவார் நாரதர்.

திரிபுரதகனன் விடுத்ததூதுவன் செங்கண்ணனுஞ் செப்பிய தல்ல, பிரமனேடும்பர் வேலனுமுன்பாற்பேசினிவிடுக்க வந்திலன் யான், னெரியுலையதனி லயமெனயியக்க ரினங்களையிணங்கவேயுரு க்கி, திரமதாய்வாட்டுஞ்சம்மட்டியெனவோர் தீரன்வந்துதித்தன னன்றே.

(இ-ள்.) முப்புராதிகளையெரித்தபரமசிவன்விடுத்ததூதனல்ல சிவந்தகண்ணனன மகாவிஷ்ணுஅனுப்பிய தூதனல்ல பிரமாவுந் தேவர்களுஞ்சுப்பிரமணியரும் உன்னிடத்தில்தூதுபேச அனுப்ப வந்தவனல்ல என்னையெப்படிக்கொத்தவன் அனுப்பினுனென்று கேட்பீராகில் சொல்லுகிறேன் கொல்லன்உலையில்துருத்தியினுலூ தியிரும்பையுருக்கி பதத்திலெடுத்து அடிப்பதுபோல ராக்ஷதக்கூ ட்டங்களை தன்கையிலிருக்கப்பட்ட வேலாயுதத்தினுலே பலமாக அடிக்கப்பட்டவன் சம்மட்டியென்றுபேர்படைத்த ஒருருத்திரனு னவன்வந்து தோன்றியிருக்கிறுனென்றுர் நாரதர் எ-று. (அ)

வீரவன்னியர்கோன் விமலனன்னுதலில் வீற்றிடுமனல்விழிய தனில், சோரினவியர்வைசம்புவின்மகத்தில்சொரிந்திடவிவுளியோ டுதித்த, சூரனுன்கிளையை வேர்பறித்தறுக்கதவசங்கொண்டமரர் கோன்சுதையைத், தாரணிகுழலாள்மந்திரமாலைதனந்தழுவுந்தீவுர ந்திரந்தழைத்தோன்.

(இ-ள்.) வீரவன்னியமகாராஜாவானவன்பரமசிவனுடையநெ ற்றிக்கண்ணின்வெயர்வை சம்புமகாரிஷிசெய்யப்பட்ட யாகத்தில்

ஆகுதிகொடுக்கும்போது அதில்அக்னிக்குதிரையுடனே பிறந்தப ராக்கிரமமுடையவன் உன்னுடையஅசுரர்குலத்தை வேரறுக்கப் பட்டவன் அவன்சம்மாரஞ்செய்ய வெற்றிக்கொடிபிடித்து தேவே ந்திரன்மகள் மந்திரமாலையினுடைய ஸ்தன்னியந்தழுவுந் தீவிரந்த ழைக்கப்பெற்றேன் எ-று. (சு)

ஒரு சிலையதனு லுவரியுமும்ப ருலகமு நெடியவ னூரும்
நறுமலர்வதன நகரமுங்கயிலை நாற்றிசையாயிரத் தெட்டெண்
டரைகொளண்டமு மாகாயமுந் தூளதாக்குவன் றபிரியமிகுத்த
பெருமையுமுள்ளோன்பிள்ளைகளுல்வர்புகழெவன்பேசிடமுடியும்.

(இ-ள்.) பின்னுமவனுடைய தாஷ்டீகமெப்படியென்றால் ஒரு பாணம்பிரயோகஞ் செய்தானானால் எழுசமுத்திரமும் வற்றிப்போ கும் தேவலோகமும்வைகுந்தமும் தாமரைமலரில்வாழப்பட்டபிர மலோகமும் சத்தியலோகமும்கயிலாசகிரியும் இன்னமிருக்கின்ற நாலுதிசையும் ஆயிரத்தெட்டண்டமும் ஆகாசமுந் தூள்பறக்கும் படிசெய்வான் வெகுதைரியமிகுந்தவன்பெருமையுள்ளவர்களாகிய நாலுபிள்ளைகளினுடைய வலிமையை ஒருவராலுஞ் சொல்லிமுடி யாதென்றார் நாரதர் எ-று. (ய)

வேலனுக்குகந்த லக்கவீரர்களின் மிகுத்திடுதிணிபுயவீரர், ஆ லகாலத்தையுண்டு கொப்பளிப்பாரவுணர் செங்கரச்சிலையனைத்தும் மாலையாப்பூண்பார்மந்தரகிரியைமதத்தினுற்பிடுங்கிப்பந்தடிப்பார் சூல்பாணிய னருளினுதித்த சூரரும்பரவிய துங்கன்.

(இ-ள்.) சுப்பிரமணியருக்குச் சமதையான லக்ஷம்வீரர்கள்பி லமுடையவரானபேர்கள்ஆலகாலவிஷத்தையேந்தி சலம்போலவா யினூற்றிக் கொப்பளிப்பார்கள் ராக்ஷதர்களுடைய கையிலிருக்கப் பட்டபாணங்களை பூமாலையாகஅணிந்துகொள்வார்கள் பின்னும் மகாமேருவைப்பிடுங்கிப்பந்தாடுவார்கள் அப்பேர்ப்பட்ட சேனை களும் சூலாயுதம்கையிலிருக்கப்பட்ட பரமசிவனளித்த சேனைகள் தன்னை சூழ்ந்துவரும்படி மேன்மையையுடைய வீரவன்னியமகா ராஜன் எ-று. (கக)

துடுக்கெனுமவுணரெனு மசகத்தைத்துலங்கிய கரத்தினுற்பி சைந்து, படித்தலமீதிற் பரப்புவமென்றேபகருவர்பனிமதிதன்னை பிடித்தமுதருந்தும் பிரபலருடனே பிஞ்ஞகன்மலையினின்றேகிநூக் கடற்கரையதனில் விடுதியொன்றமைத்த காவலன் வீற்றிருந்தன னல்.

(இ-ள்.) மகாதுடுக்குகள் செய்யப்பட்டராக்ஷதனாகிய கொசு கைப்பிடித்து பிரகாசமுடைய அவன்கையினாலேபிசைந்துபோடுகி

றேனென்று கயிலாசகிரிவிட்டு அனேகம்பூமி காடுவனம் வனாந்திரங்கடந்து தெற்குசமுத்திரத்தின் கீழ்பாரிசத்திலே மாளிகையொன்றமைத்து அதில்வீற்றிருக்கின்றார்கள் வீரவன்னியராஜாக்கள்.

எனையுன தருகிற் றாதெனவிடுத்தேயியம்பினனிமையவர்முனிவர், தனையிடர்செய்யா துன்னகரனைத்துந் தாஷ்டியாய்ப்புரப்பதுன்கடன, மெனவுரையகற்றி யிமையவர்க்கிடுக்கம்மிடுகுவனெனவியம்புவனும், முனிவுளவமருக் கிசைந்தருளென்ன மொழிந்தனருணர்ந்திடு மென்றான்.

(இ-ள்.) வாதாவிசூரராக்ஷதனே என்னை உன்னிடத்துக்கு தூதுவிடுத்தகாரியங்களைச்சொல்லுகிறேன் கவனமாகக்கேளுந்தேவர்களுக்கும் ரிஷியீஸ்வரர்களுக்கும் துன்பமாகிய இடறுகள்செய்யாமல் உன்னுடையபட்டணத்தில்தானேயிருந்து செங்கோல்செலுத்திவருகிறது உனக்குக்கடமையாகும் அதுதப்பிஎன்னுடைய சொல்லைகேளாமல்மீறி தேவாதிகள்முதலான பேர்களுக்கும்துன்பமே செய்குவேனென்று சொன்னையேயானால்சண்டைசெய்யும்படியாக யிசைந்துவருவீர் நாரதமகாரிஷியேயென்று என்னையுன்னிடத்துக்குத்தூதாகஅனுப்பினார் நான்சொன்ன விரண்டுசொல்லில் ஒருகாரியம் நன்றாயத்தெளிந்து சொல்லுவாய் வாதாவியேயென்றுநாரத ரிஷிகேட்கின்றார் எ-று. (கந)

## வேறு.

உரைத்தவாசக முளத்தினிலோர்ந்திடு மவுணன்
பருத்தசென்னியை யசைத்துரைபகருவ னமைச்சே
உரைத்தநாரத னுரையெலாமுளத்தி னன்னுதியேற்
றரைக்குமானிட ரென்னிடமிகல செயத்தரமோ

(இ-ள்.) இந்தநாரதன் சொல்லப்பட்ட வாசகங்களையெல்லாம் மனதிலேதெளிந்துகொள்ளும் வாதாவிசூரன்தாஷ்டீகமுடையதலையையசைத்து சொல்லுகிறான் மந்திரிமார்களே நரைத்த நாரதன் சொல்லப்பட்ட வார்த்தையையோசித்தால் இந்தபூமியில் வாழும் மானிடர்களென்னிடத்தில்வந்து சண்டைசெய்யும்படியான திரமல்லவோயென்றான் வாதாவி எ-று. (கச)

மேருவாகிய வெனக்கொரு மேவலருளரோ
மூரிமுப்புர மெரித்தவனளித்திடு முறைமை
பேருமூருமென் பிறபலமவமென்னாற் பித்தன்
ஓரஞ்செய்தவ னெனவுலகோ ரிகழாதோ.

(இ-ள்.) மகாமேருவுக்குச்சமதையானவெனக்கு ஒருசத்திராசதிகளுண்டோ மிகுந்தநகையினால் முப்புரத்தையெரித்த பரமசிவனளித்தவரமும் என்னுடையபேரும் என்பட்டணச்சிறப்பும் என்னுடையபராக்கிரமங்களும் மானிடனாலே அவமாகிப்போகிறபோது பரமசிவனானவன் ஒரஞ்செய்யப்பட்டவனென்று இந்தலோகத்தார் இகழ்ச்சிபேசுவார்கள் எ-று. (கரு)

அரிபின்னால்வரு மறுமுகவனு மமரரு மென்பா
னுரிமையாகிய வேவலையிசைந்தன னுலகோ
ரருமையாகிய மறலியமெனதடி வணங்கி
சரியலாகின் னசையெலாநமது கைவசமாம்.

(இ-ள்.) மகாவிஷ்ணுவின்பின்னால்வரப்பட்டசுப்பிரமண்ணியருந்தேவாதிகளும் என்னிடத்திலுரிமையாயிருந்துநான்சொல்லும்பணிவிடையைச்செய்யவும் லோகத்திலுள்ளோர்களும் எமதருமராசனும் என்னுடையபாதத்தில்பணிந்து வருத்தமடைந்து ஓடினார்கள் இந்த எட்டுத்திசையுமென்னுடைய கைவசமா மென்றான் வாதாவி எ-று.

அளவிடாத வண்டராண்டெனக் களித்திடப் பெற்றேன்
வளமிகுத்திடும் வாழ்வினில் வனுத்திடவளர்ந்தேன்
நலமிகுத்த நற்காவன புதுமையை யணிந்தேன்
இளமையாகிய வியக்கர்கோனென மகிழ்ந்திருந்தேன்

(இ-ள்.) அளவிடக்கூடாத தேவாதிகளுடையவயதில் ஆயிரவருஷம்வயசு பரமசிவனளிக்கவரமும்பெற்றேன் வளமைகள்மிகுந்த அஷ்டபாக்கியமும் வாழ்விலே கற்பகத்தினுடைய புகழ்ச்சியெல்லாம் மாலையாயணிந்தேன் இளவயதுடையராக்ஷதருக்குராசாவாக மகிழ்ச்சியடைந்தேன் என்றான் வாதாவி எ-று. (கஎ)

கயவராகிய கடவுளர்கவி யினைக்கவர்ந்த
புயமிகுத்திடு மவுணர்கோனெனப் புகழ்சினையார்
பயமுரைத்திடு நாரதன்பகருவ தவமாம்
வயஞ்சினத்திட மதகரிபின் னுறைவதுவோ.

(இ-ள்.) கீழ்மக்களாகிய தேவாதிகளுடையமகிழ்ச்சியைவாங்கப்பட்டபுசபல பராக்கிரமமிகுந்த ராக்ஷதருக்கெல்லாம்ராசாவானஎன்னுடையபெருமையையறியாமல் என்னிடத்தில்வந்து பயப்படும்படியாகச்சொல்லப்பட்ட நாரதரிஷிசொல்லுகளெல்லாம் அ

வலமாகுமேயல்லாமல் சயமாகப் போகிறதில்லை சிங்கமானது கோபித்தால் யானையானதுமண்ணிலிருந்து வாழுமோ வாழாதென்றான் வாதாவி எ-று. (கஅ)

என்னமத்திய ரியம்புவரிறைவனே முனிவ
னின்னலாகிய வண்ணமுமியம்பின னீசன்
மன்னுபாலனை பெருமையாவழுத்தின னம்பாற்
றுன்னுதானையின் றிணிபுயமுணர்ந்திடாத் துகளோன்.

(இ-ள்.) இப்படியென்றுதன்னுடையவலிமையைப்பேசுகின்ற வாதாவியைப்பார்த்து மந்திரிமார்கள்சொல்வார்கள்மகாராசனே இந்நாரதரிஷியானவன் குற்றமாகியபேச்சுகளைப் பேசுகின்றான் மேலும்பரமசிவனளிக்கப்பட்டபிள்ளையாகிய வீரவன்னியனுடைய பெருமையைச் சொல்லுகிறானேயல்லாமல் நம்மிடத்தில்வாழப்பட்டராக்ஷதசேனைகளுடையதாஷ்டீகமுள்ளபலனை மனதில்எள்ளளவுமறியாதவனிந்த நாரதன் எ-று. (க௯)

அமரருக்கதிக சூரனு மாண்மையி லதிகம்
விமலனுக்கதிக வீரருமேதினி யுள்ளோர்
நமனுமஞ்சின னுனிலத்தோர் நலிவடைந்தார்
மமதைநாரத மானிடனும்வழுத் தினனால்.

(இ-ள்.) தேவர்களுக்குமேலதிகமாகிய வலிமைமிகுத்த ஆண்மையையுடையசூரன் உன்னிலுமதிகமாயிருக்கப்பட்டவன்பரமசிவன் அவனுக்கு அதிகமாயிருக்கப்பட்ட பலமுடையவர்க ளிந்த பூமிகளிலேயிருக்கிறவர் ஒருவருமில்லை அப்படியிருக்க உம்மைக் கண்டபோது எமனும்அச்சமாகி பயப்பட்டான்நாலுதிசைகளிலுமிருக்கப்பட்டபேர்கள் மனதுநலியும்படியானார்கள் இப்பவும் நம்மிடத்திலே பயமில்லாமல்வந்து கருவங்கொண்டநாரதன் நம்மிடத்தில் அந்தமனிதனை வீரவன்னியனை பெருமையாய்ப் பெரியவனென்று சொன்னான் எ-று. (உ0)

ஒன்னலார் முடியுதிர்ந் துலகினிற்பரவி
மின்னரத்தின கரமதின்வேந்த னென்றுதித்த
மன்னனேயொரு மானிடனும் தமத்திடனு
மென்னகீர்த்தியை யடைந்தனமிதையந் தேறராசே

(இ-ள்.) சத்திராதிகளுடைய சிரசை யும்முடைய பாதத்தில் படும்போது பூமியில்பரவி பிரகாசிக்கப்பட்ட இரத்தினபுரி நகரத்திற் ராசாவென்று விளங்குகின்ற வாதாவிராசனே ஒருமானிடனு

ணவன் நம்மையனைவரையுங் கொன்றுபோடுகிறபோது நாம் என்னகீர்த்தியடைந்தோம் இதையும்முடைய மனதில்யோசித்துப்பாரும் ராசனேயென்றான் மந்திரிகள் எ-று. (உக)

பண்டிலங்கையி லதிபனற்றுணைவனைப் பகைக்க
விண்டுபாலினன் வீற்று தந்திரமதைவிளம்பி
மண்டுபோரினுன் மடித்தனன் மன்னவன்றுணைவர்
கண்டுமைப்பகைத் திலருளமாவ தென்காணுய்

(இ-ள்.) முன்னாளையி லிலங்கைக்கதிபதியாகிய ராவணன்தனக்குதுணைவனாகிய விபீஷணனை பகைசெய்திட்டபடியினாலே இராமசுவாமியினிடத்தில்போய்படுத்து சிரஞ்சீவிபெற்று அவனுடைய தந்திரங்களை சொல்லிக்கொடுத்து சண்டையையுண்டாக்கி ராவணன்முதலாகிய மூலபலங்களையுமடித்தான் அப்படிஉன்னுடைய தம்பியர்கள் உன்னைப்பகைத்து அவனிடத்தில்சேர்ந்து உம்மைக்கொல்லப்போகிறதில்லை உம்முடையமனது மயங்கவேண்டாமென்றார்கள் மந்திரிகள் எ-று. (உஉ)

மேவலார்சிரம விழிந்திட வமரிசைத்திடுவ
ளுவுபொய்த்திடா தண்ணலே நம்பனீன்ற
காவலானுளக களிப்பினைக் கவரிடாவீரர்
சீவன்வாழ்ந்துமென் செகத்தினில்மடிந்து மென்றெளியே.

(இ-ள்.) நமக்குப்பகைவராகவந்து எதிர்த்துநின்ற பேர்களுடையதலைதுள்ளிக் கீழேவிழுந்திடசண்டைசெய்வேன்என்னுடைய நரவானது பொய்போகாதுராசனே பரமசிவனளித்தவீரவன்னிய ராசனுடைய மகிழ்ச்சியையு மவனையுமடிக்காத வீரராகியசேனையினுடைய உயிரானதுவாழ்ந்தாலென்ன பூமியில்மடிந்து போனால்தானென்ன தெரிந்துகொள்ளுமென்றான் மந்திரி எ-று. (உங)

உனதுமக்களுந் துணைவருமுற்ற சுற்றநற்
றனுமிகுத்த விளைஞனுஞ்சூரனுந் தயங்கா
மனமிகுந்த தளந்தானையை யேகுதுமடித்த
வெனதுதிண்புய வாளியா விடறுவனென்றான்.

(இ-ள்.) உன்னுடையபிள்ளைகளுந்தம்பிமார்களும் உரிமையானசுற்றத்தாரும்பாணமிகுத்திருக்கின்ற சேனைவீரர்களுஞ் சூரரும் மயக்கமில்லாதமனவூக்கத்துடனிருக்கப்பட்ட நம்முடையசேனைகளையேகும்படிசெய்தால் அதனாலேவீரவன்னியன்மடிந்தாலாயிற்று

இல்லாவிட்டால் எனதுபலம்பொருந்திய புயபலபராக்கிரமும்என் கையின்பாணத்தினாலே அவனுடையபராக்கிரமும் அழிய அவனு டையமுடியை யிடறிவிழும்படி செய்வேனென்றான் மந்திரி எ-று.

உரிமைமாற்றிய மண்டலீகன் னுரையுளத்தீர்
சொரிகமன்னவன் றுதிப்பனற் சுடர்முடிவீரன்
பரிதிவேலென தடிபரவிடுமென் பானுணர்ந்த
வருந்தவத்தின யவனிடத்தே னறையுரைவே

(இ-ள்.) தன்மனதுக்குச் சரியாயிருக்கப்பட்டமந்திரிகளிலே மண்டலீக மந்திரியென்பவன் இப்படிசொன்னதுவாதாவிமனதிற் றைத்தவுடனே வாதாவிசொல்லுகிறான்பிரகாசமானமுடியையுடை யவீரவன்னியன் என்னிடத்தில்வந்து சண்டைசெய்கிற காலத்தில் அவனுடையகையிலிருக்கின்ற சூரியப்பிரகாசமான வேலாயுதமா னது என்னுடையபாதத்தைச்சுற்றிவந்துவணங்குமென்னிடத்தில் தூதாகவந்தஅரியதவமுடையநாரதனே நீர்வனிடத்துக்குப்போய் என்னுடையசொல்லை சொல்லுவாயென்றான் வாதாவிஎ-று. (உரு)

அடங்கிடாப் படைமிகுத்தவ னவுணரின்றீரம்
புடவிசூழுலகினைச் சுமந்தோன் புகன்றிலனல்
மடங்கலமும் மதகரிகொடு வரிவதனத்தோர்
விடங்கொள்வாளியால் விண்ணுலகடைவ ரவ்வீரர்

(இ-ள்.) ஒருவர்கைகளிலு மடங்கிடாத சேனசமுத்திரங்கள் மிகுதியாயிருக்கப்பட்ட ராக்ஷனுடையரூபங்கள் எப்படியென்றால் சிங்கமுக மானைமுகம் புலிமுகராக்ஷதர் இப்படிக்குவகைவகையா யிருக்கப்பட்டவருடைய வலிமையென்னவென்றால் விடம்பொருந் தியபாணத்தைப் பிரயோகஞ் செய்தார்களானல் தேவலோகம் போய்குடியிருப்பார்கள் அந்தவீரவன்னியர்கள் எ-று. (உசு)

மாற்றலரான் மனதினிற்றெளிந் துரைவழுத்தி
சிற்றிகொள்ளுவ தியற்கையச்சிறுவர் சொற்கிசைந்து
நாற்றிசைப்படை நடுங்குமென் சபையினிறடி
போற்றுகின்ற வுன்புத்தியைப்பிறர் நகையாரோ.

(இ-ள்.) பகையாளிகளுடைய பலனைக்கண்டு மனதுதெளிந்து சொல்லவேணும் அந்தசொல்லினாலேகீர்த்திபெறலாம் அஃதேஎவ ருக்கும் நன்மையாயிருக்கும் அவைகளையறியாத சிறுபிள்ளைகளி னுடைய சொல்லுக்கிசைந்து நாலுதிசையிலும் அடர்ந்திருக்கின்ற படைத்தலைவர்கள் நடுங்கும்படியான வென்னுடைய சபையிலே

வந்தபடிக்கு வாயிலேவாராதெல்லாம் பேசுகின்ருன் யுன்னுடைய புத்தியைபிறர்கண்டால் நகைப்பார்கள் பேர்ம்போம் நாரதனே என்ருன் வாதாவி எ-று. (உஎ)

முத்தியாழுணர் முனிவனேமுன்னவ ருரைத்த
புத்திவீணென புந்தியிலோர்ந்தன னூர்தீர்
வித்திளமைபோய் விளைந்திடுநாற்ப தாண்டதன்மேற்
சித்தஞானியின் குணமெனச்செப்புவ துண்மை

(இ-ள்.) முத்தியாகிய யாழ்வீணையைகையில்வைத்துப் பாடப்பட்டநாரதன் பெரியோர்சொன்னபுத்தி வீணென்றுயெண்ணியிருந்தேன் அதுஇன்றைக்கு என்னிடத்தில்மெய்யாயிற்று அதென்னவென்ருல் வித்தாகியஇளமைபோய் விளையப்பட்டமூப்புவந்து நாற்பதுவயதுக்கு மேற்பட்டவர்களுடையபுத்தி நாய்க்குணமென்று யாவருஞ்சொல்வார்கள் அதுநிக்ஷயமானதென்ருன்வாதாவிஎ-று.

சிறியவர்செய்வது பெரியவர்பொறுப்பவ ரெனச்செப்பும்
உறுதியாயிவை யோதினனொரு கணையதனு
அறுதியாகிடச்செய்வன் முனுண்டவன் வரத்தால்
மறுகுவாழ்ந்ததால் மனம்பொறுத்தனன்மறைமுனியே

(இ-ள்.) சிறியவர்கள் செய்தகுற்றத்தை பெரியவர்பொறுத்துக்கொள்வார்களென்று சொல்லப்பட்டநீதியினுலே இப்படிக்கு சொன்னேன் இப்பவும் அந்தபிள்ளைகளிவ்விடத்திலிருந்தால் ஒரு பாணத்தினுலே அவர்களுடையசிரசையறுத்து இன்றைக்கேயவர்களைக்கொன்றுபுசிப்பேன் ஆனுல்பரமசிவன்கொடுத்த வரத்தினுலே இந்தநகரத்திலே அழகாகியவாழ்வை யடைந்திருப்பதினுலேயும் அவனுடையபிள்ளையென்று சொன்னதனுலேயும் மனம்பொறுத்தேன் அடாநாரதனே என்ருன்வாதாவி எ-று. (உகூ)

நன்றிசெய்தவன்மகவினை நலிசெய்வதவமாங்
கொன்றையோனவர்மகவு மென்றிவ்வுரைகுறித்தேன்
வென்றிபூணுவமெனும் வினுவகற்றிவேலையைவின்
றின்றிவர்முறைமையேகென வறைந்தருளென்ருன்.

(இ-ள்.) முன்னுலெனக்கு நன்றிசெய்யப்பட்ட பரமசிவனுடையபாலனென்று சொல்லவந்தாயே ஆகையினுல்அவனுடையபிள்ளைகளைநலியும்படி சண்டைசெய்யலாகாது செய்தால் பாவமாகும்பரமசிவன்கொடுத்தவரமும் நீங்கிப்போகுமென்று இப்படிக்கொத்த புத்திசொன்னதென்று இப்பவுமந்தப்பிள்ளைகளிடத்திலேநீபோய்

வாதாவிசூரனிடத்திலே வெற்றிபோர்பொருத போவென்றுசொல்லிவந்தவனுடைய நினைவையகற்றிப்போட்டு சமுத்திரக்கரையை விட்டு அவாளிருக்கப்பட்ட விடிதிக்குப்போகும்படி சொல்லுமென்றுசொன்னன் வாதாவி எ-று. (ரு0)

## வேறு.

மணிக்குழாங்கருடன்காண மனத்துயிரிழப்பதல்லாற்
றினிச்சமரிழைப்பதுண்டோ தினகரன்கிரணங்கண்டாற்
பிணிப்பனிபெய்வதோவிப் பேயவுணதியாக்கை
மணிச்சிலைவீரன்கையால் மடிவதேதிண்ணமென்றான்

(இ-ள்.) வாதாவிசூரன்இப்படிபற்பலவிதமாகச்சொல்லக்கேட்ட நாரதர் சொல்லுகிறார் பாம்புகூட்டங்கள் ஒருகருடனைக்கண்டால் உடல்பதைபதைத்து உயிர்மாண்டுபோகுமல்லாமல்கருடனுடன் பலத்துடனெதிர்த்து சண்டைசெய்யுமோசூரியகிரணத்தைக் கண்டவுடனே யாவர்க்கும்வினைசெய்யப்பட்டபனி வாழ்ந்திருக்குமோ அப்படிபோல இவ்விடத்திலேஇருக்கப்பட்ட பேயாகிய ராக்ஷதனுடைய தேகங்களையெல்லாம் வீரகண்டாமணிகட்டிய வில்லாயுதமுடைய வீரவன்னியமகாராஜன் கையினாலே மடிந்துபோவார்களிது நிச்சயமென்றார் நாரதர் எ-று. (ருக)

அழுக்ககவவுணர்க்கெல்லா மரசனேயுழலுதித்தோன்
புழுக்களாமுனதுசுற்றம் புந்திதென்றிசையிற்போக்கி
யொழுக்கமாமும்பர்க்குற்ற வூழ்வினையகற்றவேண்டும்
மழுக்கரவாமன்றானை வணங்கியிங்குறைந்ததன்றே.

(இ-ள்.) மாசடைந்தமனதுடைய ராக்ஷதர்க்கெல்லாம் ராசனே அந்த வீரவன்னியமகாராஜா உங்களைக்கொல்லும்படியாகஅக்கினியிலேபிறந்திருக்கிறான் புழுக்களாகியஉன்னுடைய கூட்டத்தைசம்மாரஞ்செய்து அவாளுடையஆவியை யெமனிடத்துக்கு அனுப்பிவைத்து அதன்மேல்சீலமுடைய தேவர்களுக்குவந்த வூழ்வினையை நீக்கும்படியாக கையிலேமழுவேந்திக்கொண் டிருக்கின்ற பரமசிவனுடைய பாதத்தைப்பணிந்து இவ்விடத்திலே வந்திருக்கின்றார் வீரவன்னியன் எ-று. (ருஉ)

தண்டெனத்திரண்டதோளுந் தைத்தெழுஞ்சின்முமாக்கை
யெண்டிசைகிரியிணைத்த தியம்பிடாப்பருமனென்ன
மண்டிலேனவமாங்கொல்லன் வடித்தசிற்றுளியால்வானில்
முண்டியவரையைவாட்டு முறையெனப்படுவதிண்ணம்.

(இ-ள்.) தண்டாயுதம்போல திரட்டியிருக்கப்பட்ட உன்னுடையவிரண்டுபுயமும் உக்கிரமாயெழும்பப்பட்ட கோபமுடையமனமும் தேகமானதுஎட்டுமலையை ஒருமிக்கச்சேர்த்து யிணைத்தாலிவ்வளவென்று கணக்கிடமுடியாதபருமனுக இப்படிக்கொத்தவலிவெடுத்ததினாலே ஆகாசமுட்டிவளர்ந்த மலையைச் சில்லிசில்லியாகக் கெல்லுவதுபோல அந்தவீரவன்னியன்சிறுபிள்ளையாயிருந்தபோதிலும் அவன்கைப்பாணத்தினாலே மடிந்துபோவா யிதுநிச்சயமென்றார் நாரதர் எ-று. (கூகூ)

சீலமாஞ்செம்மலீன்ற வீரன்மேற்சினத்துசின்ன
பாலனென்றுரைத்தாயந்த பாலரான்மடிவதுண்மை
ஆலம்வித்தென்னநொயதா மதன்மூளைப்படருமிக்க
தாலம்வித்தென்னநீழற் றழைத்திடாதறிவைமன்னா.

(இ-ள்.) ஒழுக்கமாகிய பரமசிவனளித்த வீரவன்னியன்பேரிலேகோபமாகி சிறுபிள்ளைகளென்றுசொன்னாய் வாதாவிசூரனே அந்தசிறுபிள்ளைகளாலே நீமடிந்துபோகிறதுநிச்சயம் அஃதெப்படியென்றால் சிறுத்ததுபெருக்கும் பெருத்ததுசிறுக்கும் ஆலம்விரையெவ்வளவுசிறிது அதுமுளைத்தால் எவ்வளவுபிரமாணமுடையது அதிலே யானைசேனை பரிவாரங்கள் நிழலுக்கிறங்கியிருக்கின்றார்கள் பனங்கொட்டையானது பருமனாயிருந்தும் ஒருத்தர்தங்கியிருக்கும்படியான நிழலளிக்கவில்லையே இந்தசூக்ஷமறிந்து நடக்கவேணும் வாதாவிசூரனே என்றார்நாரதர் எ-று. (கூச)

## வேறு.

துங்கமெனும் வீரர்புகழ் தூசெனவொழித்த
பொங்குமவுண வவர்புகன்றதை யகன்றாய்
வெங்கரிமதங்கொளச் சிறத்தின்மண் விழுந்த
சங்கைதெளியாய் விதிதரும்பயனி தென்றான்.

(இ-ள்.) மேன்மையாகிய வீரவன்னிய மகாராசாக்களுடைய பெருமையை தூசுக்குச்சமதையாக மனதிலெண்ணிமகாகோபாக்கினியாயிருக்கின்ற வாதாவிராக்ஷதனே நல்லபுத்திவரும்படியாக உன்னிடத்துக்கு என்னைத்தூதனுப்பினு ரதையுங்கேளாமல் நீக்கினாய்கோபமுடையமதயானையானது தன்னுடையமதத்தினாலேமண்போட்டுக்கொண்ட வகைபோல செய்துகொள்ளுகிறாய் நாளைக்கு வரப்பட்டவிதங்களைத் தெளியவில்லையே அதேதென்றால் உன்னு

டையகாலங் குறுகினபடியினாலே விதியையனுசரிக்கும் புத்திபோலஉன்னுடையவிதிப்படிக்குசொல்லுகின்றாய்என்றார்நாரதர் எ-று.

பண்டிரணியன்படு பயன்களுனவாய்வ
விண்டலமிகுத்தமரர் மேன்மைகள்கவர்ந்தே
கண்டனைசெய்ராவணன் கனத்தசூரபன்மன்
மண்டுபுகழெங்ஙன மறைந்ததுணர்மன்ற.

(இ-ள்.) முன்னாளிலிருந்தராக்ஷதரிலே இரணியனானவன் தனக்குமேலாகியத்தெய்வமில்லை நாமேதெய்வமென்று இரணியநமாவென்று தோத்திரஞ்செய்யும்படியாகவாழ்ந்தவன்மகாவிஷ்ணு நரசிங்கவதாரமெடுத்துவந்து நின்றதையறிந்து அதன்கையினாலேமடிந்துபோனது அறியாயோ ஆகாசத்திலேமேலாகிய வாழ்வுடனேயிருக்கப்பட்ட தேவாதிகளுடைய மகிழ்ச்சியையெல்லாங் கைவசமாக்கிக்கொண்டு உக்கிரத்துடனேயிலங்கையாளப்பட்டராவணன் சீதாதேவியை சிறையில்வைக்க இராமசுவாமியானவர்எழுபதுவெள்ளங்குரங்குப்படைகளுடனேபோய் ராவணனைவதைத்ததுமறிந்திருப்பாயே அதுவுமிருக்கட்டும் உன்னுடையமாமனாகிய சூரபத்மனுக்குமேலாகிய ராக்ஷதருண்டோ ஆயிரத்தெட்டண்டமும் இருநூற்றுப்பதினாலுபுவனமும் அஞ்ஞூற்றேழுசதுர்யுகந்தனக்குஅழிவில்லாதவயதும்பெற்று இராச்சியபாரஞ்செய்தான் தேவாதிகளுக்குத் துன்பஞ்செய்ததனாலே ஆறுமுகமுடைய சுப்பிரமணியராலே மடிந்துபோனான் அவாளுடையபெருமைகளெல்லாம்எங்கேமறைந்துபோயிற்று இதையறிந்துகொள்ளுவாய் வாதாவிசூரனேயென்றார் நாரதர் எ-று. (௩௬)

உன்னுறுதியென்னவா னுற்றவருளாயிம்
மன்னவனெனப்பெருமை மண்டினமெமக்கோ
ரின்னலறிமேவலர்க ளில்லையெனுஞ்சூரர்
வன்னியனுதித்தனன் மதன்களையகற்ற

(இ-ள்.) உன்னுடையமனதிலேஎன்னஉறுதிநினைந்திருக்கிறாய் அதைச்சொல்லுகிறேன்கேளும் பரமசிவனளித்தவரத்தினாலேஇப்போது ராசாவாகியபெருமையையடைந்தோம் இனிமேல்நமக்கு ஒருகுறைவுமில்லை குற்றஞ்செய்யப்பட்ட சத்திராதிகளு மில்லையென்று நினைந்திருக்கப்பட்டராக்ஷதனே உனக்குச்சத்துருவாக வீரவன்னியராசாக்கள் பிறந்திருக்கிறார்கள் உன்னுடைய கருவங்களை நீக்கிப்போடு எ-று. (௩௭)

செய்யகரமீதிலுறை வேலுனைசிதைக்க
வெய்யவழல்கக்கல் விதங்களுணராயுன்
வய்யமதுறைந்தவர் வளைந்தமர்விளைந்து
மையுடல்சிதைப்பரவு ணாதிபரிமன்னா.

(இ-ள்.) சிவந்தகையிலிருக்கும் வேலாயுதமானது உன்னைக் கொல்லும்படியாகவெம்மையானநெருப்புகள்கக்கிக் கொண்டிருக்கின்றவிதங்களுன்னுடையமனதிலேயறியவில்லையோ இதோகடற்கரையிலேவந்திருக்கிறவீரர்கள்உன்னுடையபட்டணம்வந்துவளைந்துசண்டைசெய்து உன்னுடையகிரியாகிய கரியதேகத்தை மடித்துப்போடுவார்கள் ராக்ஷதாளுக்கு ராஜாவானவாதாவியே யென்றார் நாரதர் எ-று. (ரு அ)

உற்றகிளைஞோர்களு முனைப்பணியமைச்ச
ரிற்றவுடலிற்குருதி யெங்கணுநிரம்ப
செற்றபின்பிணத்தசை தினுங்கழுகுகாகஞ்
சுற்றியபசாசின் சுகம்பெருகமன்னா.

(இ-ள்.) உன்னைச்சுற்றியிருக்கப்பட்ட உறவின்முறையார்களுமுன்னைப்பணிந்திருக்கின்ற மந்திரிமார்கள்முதலாகிய சேனைகளுடையதசைதேகங்களை மடித்துபோடுகிறபோது அதிலெழும்பப்பட்ட இரத்தவெள்ளமெல்லாம்பரவ செத்தபிணங்களுடைய தசைகளைத்தின்று கழுகுங்காகமும் ஆகாசத்திலேபறக்கபசாசுகூட்டங்களும் இந்தப்பட்டணத்திலே சுகம்பெருகும் வாதாவிராஜனே என்றார் எ-று. (ரு கூ)

தக்கனிடுகின்றது தற்பரனுணர்ந்தே
யக்கணமழித்தன னளித்ததிணிவீரன்
மிக்கமொழிதூதன் விடுக்கவவமென்றுன்
மக்கடிணிதோளினை வழுத்தவைகள்மன்னும்.

(இ-ள்.) முன்னாலேதக்கனானவன் செய்யப்பட்ட குற்றங்களை பரமசிவன் மனதிலேயறிந்து அந்தக்ஷணமேதக்கனையழித்தார் அப்பரமசிவனாலளிக்கப்பட்ட பராக்கிரமமுடைய வீரவன்னியன் நீபிழைக்கும்படியாக என்னைத்தூதாக உன்னிடத்திலே அனுப்பநான் வந்து உனக்குசொன்ன சொல்லெல்லாம் வீணாக்கிதூஷணித்து உன்னுடையபிள்ளைகளின் பராக்கிரமத்தைச் சொல்லுகிறாயே அந்தசொல்லை யகற்றிப்போடுவாய் வாதாவிராசனே யென்றார் நாரதர் எ-று. (சய)

என்னமொழி விள்ளினு முன்மனதில் கொள்ளாய்
மன்னவசுவானமதை வண்மைநதியாட்டி
சொன்னபணியாடைக டலங்கிடவளித்து
மன்னதுசுகங்கெடு மதின்குணம்விடாதே

(இ-ள்.) வாதாவிராசனேநான்எப்படிக்நொத்தபுத்திகள்சொன்னபோதிலும் உனனுடையபுத்தியில் குற்றமாகவேஇருக்குமேயல்லாமல் வாதாவிராசனே அஃதேனென்ருல் நாயைப்பிடித்து வந்து நல்லகங்காசலத்தில் முழுக்காட்டி ரத்திஞபரண வஸ்த்திரமுமளித்து அதைசுகத்திலிருக்கவைத்தால் அந்தநாயானது சுகம்பெருமல் அதன்குணத்தைக்காட்டும் அப்படிபோலாச்சுதுஉன்னுடையபுத்தியென்ருர் நாரதர் எ-று. (சக)

ஆயிரமுடுக்கண மமைந்தகிரணத்திற்
றாயமதியின்சுடர் துலங்குமிழிவான
பேயவுணர்மிக்கவ ரெனப்பரிதுரைத்த
வாயின்மண்ணளிப்பரவ மண்டிடுவையென்ருன்.

(இ-ள்.) ஆகாசத்திலே ஆயிரம்நட்சத்திர மிருந்தபோதிலும் பிரகாசிக்காது களங்கமில்லாதசந்திரன் ஒன்றிருந்தால்அதனுடையபிரகாசமெங்கும்விளங்கும் தாழ்வாகிய ராக்ஷதரை மகாபெருமையாக என்னிடத்தில்சொல்லப்பட்ட உன்னுடையவாயிலேமண்ணைபோடும்படியாக வந்திருக்கிருர்கள் அவர்களாலே அவஸ்தையேபெறக் கடவாயென்ருர் நாரதர் எ-று. (சஉ)

## வேறு.

இவ்வண்ணமுனியியம்ப வியக்கர்கோனிதையம்பொங்கி
பௌவமன்னுலகிலியாரும் பயமின்றியெனதுபக்க
மிவ்வுரைபகர்ந்ததுண்டோ யிவனுரைத்தனன்சிரத்தை
நவ்வியொன்றதனுற்சேர்க்க நாரியைவளைத்தான்மன்னே.

(இ-ள்.) இந்தப்படியாக நாரதமகாரிஷிசொன்னவுடனே ராக்ஷதராசாவாகிய வாதாவியின்மனதுபொங்கி கோபமாகி சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தார்யாவரும்பயமில்லாதவார்த்தையைத்தையிரியமாக என்சமுகத்தில்வந்திருந்து இப்பேர்ப்பட்ட சொல்லைச்சொன்னதுண்டோ இந்தநாரதன்எவ்விதமாகச் சொன்னன்பார்த்தீர்களா இவனுடையசிரசைநறுக்கிபரமசிவனுடையபாதத்திலே சேர்க்கிறேனென்று தன்கையிலிருக்கின்றவில்லைவளைத்தான் எ-று.

மாத்தியருரைப்பர்மன்ன மண்ணின்மேலிகழ்ச்சியாகும்
தூத்தனேரெதிரென்றெண்ணி துணிப்பவருலகிலுண்டோ

கூத்துவனாகவந்த கோனனும்வீரங்கொண்ட
சித்தியைச்சிதையாதுந்தன் சினமகற்றிடுவையென்றான்.

(இ-ள்.) அப்போதுமந்திரிமார்கள்சொல்வார்கள் ராசனே இந்தபூமிகளிலிருக்கப்பட்டபேர்நம்மைபிகழ்ச்சியாகப்பேசுவார்கள் நமக்குசமதையில்லாத நாரதனைஒருபொருட்டாகஎண்ணி தூதாக வந்தவர் சிரசைத்துணிப்பது எங்கேயாகிலுமுண்டோ நமக்குஎமனாகவந்திருக்கும் ராசாவானவீரவன்னியனைக் கொல்லும்படிசெய்கிறது பெருமையாகும் இந்தநாரதர்மேல் கோபிக்கிறதை நீக்குமென்றார்கள் மந்திரிகள் எ-று. (சச)

நாரியர்விருத்தர்சிலர் நற்சிறுபாலர்மன்னர்
வீரியவவையுமன்னர் விருத்தனேசிறுவனான
பூரியதூதரைத்த போதினைபொறுத்துநன்றாங்
காரியமியம்பவெங்குங் கதிப்புறுமவுணர்மன்னா.

(இ-ள்.) ஸ்திரீசாதிகள்கிழவர்ஒடுக்கமாகியபேர்நல்லசிறுபிள்ளைகள்ராசாக்கள் இவர்களைச்சபையிலேயாவரும்மனதிலேநினையாதஇந்தநாரதன் சிறுபிள்ளையாகிய வீரவன்னியனுடையஆண்மையினாலே பூரிப்படைந்து தூதுவந்துசொல்லுகிறகுற்றங்களைப்பொறுத்து நன்மையானகாரியஞ்சொல்லி அனுப்பினால்எங்கும்பெருமையடைவார்கள் ராசனேயென்றார்கள் மந்திரிகள் எ-று. (சரு)

அரன்மகன்விடுத்ததூத னவரிடத்தாண்மையென்னா
அரசனேயுந்தன்சூர மருமுனிக்களிப்பதீதாம்
வரமினிக்கொள்வையிந்த வன்னியன்றனைப்பிடித்து
சிறைச்செயிற்சிறுவர்க்காக செம்மனங்கோயிற்சார்வன்

(இ-ள்.) பரமசிவன்பாலனாகிய வீரவன்னியராஜன் வரவிட்ட தூதனாகிய நாரதனிடத்தில் உன்னுடையவீரத்தைக்காட்டினால் அதிலேபெருமைவராது குற்றந்தான்வரும் ஆனால்நாமினிமேல் வரப்பிரசாதங் கொள்ளும்படியாகிய சூக்ஷமம்ஒன்றுசொல்லுகிறேன் என்னவெனில் அந்தவீரவன்னியராசாக்களைப் பிடித்துவந்துநமது இடத்தில் சிறைவைத்திருந்தால் பிள்ளையைத்தேடிக்கொண்டுபரமசிவன்வருவான் என்றார் மந்திரிகள் எ-று. (சசு)

அழிவிலாமிசையளிப்ப யாவருமிகவிடாமல்
குழகணிகோயில்வாயிற் கொலுவிருமெனவிருத்தி
யழிவிலாபெருமையுன்னு மெங்களையகனேவாழு
முறையினியனுகிப்போர்செய்யுறுதியையுரைப்பாயென்றான்

(இ-ள்.) அழிவில்லாத ஆயுள் அளிக்கும்படி ஒருவரும்நம்மை ப்பகைசெய்யாமல் அந்தபரமசிவன் நம்முடையகோட்டைவாசலி லேகாவலாக இருக்கச்சொல்லிவைத்தால்அதனாலேஇகழ்ச்சியில்லை பெருமையுண்டாகும் எங்களுக்குநாயகனான வாதாவிராசனேஅச் சிறுபிள்ளைகளிருக்கும் விடுதிக்குப்போய் சண்டைசெய்து அவர்க ளைப்பிடித்துவருகிற தந்திரஞ்சொல்லிஅனுப்புமென்றார்மந்திரிமா ர்கள் எ-று. (சஎ)

அவுணர்கோன்புளகமன்னி வமைச்சரைத்தழுவிப்பற்றி
திவவொளிமணியும்பொன்னுந் திகட்டிடநல்கிமிக்க
வவையினிற்றந்திரங்க ளறைந்தனையுதியென்றே
தவமுனிவதனநோக்கி நாடியேசாற்றலுற்றார்.

(இ-ள்.) வாதாவிமனது சந்தோஷமாகி மந்திரியைக் கட்டிய ணைத்து போதுமானரத்தினாபரணமுதலானதுங் கொடுத்து சபை யில் இப்பேர்ப்பட்டதந்திரமான உறுதிபகர்ந்தாயேயென்று நார தமுனியைப்பார்த்து சொல்லுவான் வாதாவி எ-று (சஅ)

வானவர்முனிவர்சித்தர் மண்ணிளமான்பருத்த
தேனவிழ்பொழிலுஞ்செம்பொன் றிரளினைக்கவர்வதன்றி
யீனனுமொருவன்வாய்மைக் கிசைக்கிலனிதமில்லாத
மானிடனிம்பார்புக்கி மண்டமர்வளைத்துமென்றான்.

(இ-ள்.) முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணா யிரம்ரிஷிகளும் மானிடரானசீவன்களுக்கும் இம்சைசெய்கிறதேத விரஒருவருக்குமடங்கப்போகிறதில்லைஆகையினாலேஅந்தநரர்களை ச்சண்டைக்குவரச்சொல்லென்றான் வாதாவி எ-று. (சகூ)

கயிலைநாயகனைச்சுற்றி கடிந்துவானவரைமிக்க
வயிலணிகுளவன்மாய னனைவருமுளம்புழுங்க
தயிரியமிகுத்தவாளி தாக்கினிதரணிசேர்ப்ப
தியனெவிளம்பக்கேட்ட வெழின்முனிநகைத்துரைப்பான்.

(இ-ள்.) கயிலாசகிரியைச் சுற்றியிருக்கப்பட்ட தேவர்கள்பிர் ம்மாமகாவிஷ்ணு சுப்பிரமணியர் என்னுடையபாணத்தினாலேஎம தருமனுடையபட்டணஞ்சேர்க்கிறேன் அதுவேயெனக்குபெருமை யாகுமென்றுசொல்ல நாரதரப்போது நகைத்துச்சொல்லுகிறார்,

வேறு.

திக்கினைசெய முண்டதினிபுயம்
மிக்கவவுணரின் வேந்தவிடந்தனைக்

கக்கும்வாளி மிகுத்தகடவுள்கை
சிக்குவானெனுஞ் சிந்தையைநீக்குவை

(இ-ள்.) எட்டுதிக்குஞ்செயங்கொண்டவாதாவிரூமனேகேளா ய்விஷத்தையொத்த பரமசிவன்முதலாகியபெருமுன்கையில்ஆகப் படுவாரென்கிற நினைவையகற்றி போடுவாயென்றார் நாரதர் எ-று.

அளவிடின்முடி யாதவன்றன்புகழ்
அளவிடின்முடி யாதவன்மாலினால்
எளிமையாக வியம்பியவேந்தைசேய்
கிளையினோடி கிளைஞரைசேதிப்பார்.

(இ-ள்.) பரமசிவனுடையபெருமையை பிரமாவிஷ்ணுவினாலு ம்அளவிடமுடியாமல் போயிற்று நீஇலேசாகமனதில்எண்ணிசொ ல்லப்பட்ட சொல்லினால்முடியாதுபரமசிவனுடையபராக்கிரமமும் அவருடையசேனைசமுத்திரமானபூதப்படைகளுங்கூடிஉன்னுடைய கிளைஞரை அறுத்துப்போடுவாரென்றார் நாரதர் எ-று. (நு௨)

அடிக்கடிக்கக் கிளம்பியபந்தென
துடித்துரைக்குந் துரோகியுனக்கியா
ணிடித்திடித்து மியம்பினனன்மணி
முடிக்கிசெந்தீ முளைத்ததுமுண்டதே

(இ-ள்.) அடிக்கடிக்கப்பந்துபோலக்கிளம்பிசொல்லுந்துரோ கிஉனக்கு அநேகவிசைசொல்லியுங்கேளாமல்போனாய் முடிசூடுஞ் சிரசுக்கு அக்கினிமூண்டு இருக்கிறதென்றார் நாரதர் எ-று. (நு௩)

மாலியன்முன் வழுத்தமகோதரன்
பாலிலங்கவ பார்த்திபன்பட்டனன்
காலமுந்தொடு கின்றனகஞ்சமர்
தூலகற்புவ ழித்ததுவென்றனன்.

(இ-ள்.) இராவணன்பாட்டனை மாலியவான்சொல்லைக்கேட் காமல் மகோதரனுடைய புத்தியைகேட்டு ராவணன் மடிந்தான் அதனாலென்றால் சீதையம்மனைச் சிறையில்வைத்தபடியினாலே அவ ளுடைய கற்புநிலை கொன்றுபோட்டது எ-று. (நு௪)

தம்பியென்னும்விபீஷணன் சாற்றுரை
வம்பென்றெண்ணி மடித்திலன்மாயனே
நம்பினன்சிரஞ்சீவி பெற்றன்னகர்
செம்பொன்மாமுடி சூடிசெழித்தனன்

(இ-ள்.) விபீஷணசொல்லைத் தட்டிப்போட அவன்ராமசுவாமியால் சிரஞ்சீவிபெற்று ராச்சியபாரஞ்செய்தான் என்றார் நாரதர் எ-று. (ருரு)

பிரகலாதனன் பேணியமாயனை
இரணியனிழி வாகவிளம்பினன்
நரவரிப்பெய ராயவனுடியே
வரமழிந்து மடிந்தனன்மன்னனே.

(இ-ள்.) பிரகலாதனனைக் காப்பாற்றும்மகாவிஷ்ணுவை இரணியன் இகழ்ச்சிபேசினபடியினாலே மகாவிஷ்ணு நரசிங்கரூபங்கொண்டுவந்து இரணியனிடத்திலே போர்செய்து அவனைக்கொன்றுபோட்டார் எ-று. (ருசு)

உந்தன்மாதுல னுக்கிரவேலினாற்
சிந்தைநொந்து சித்தமுணர்ந்துமுன்
நிந்தையெண்ணியும் நேமியிருப்பதோ
விந்தவீர னடியைவிரும்புவை.

(இ-ள்.) வாதாவிசூரனே அவைகளையெல்லாம்நீயறியாதவனானும் உன்னுடையதாயுடனே கூடப்பிறந்த உன்மாமன் சூரபத்மன் அவனுக்குமிஞ்சினபேருண்டோ அப்பேர்ப்பட்டசூரபத்மன் சுப்பிரமணியருடைய வேலாயுதத்தினாலே அவனழிந்து மடிந்தபோது உன்னுடையமனதிலே அறிந்திருப்பாயல்லவா இப்போது வீணாக இப்பேர்ப்பட்ட சூரபராக்கிரமத்தை யெண்ணியிருக்கிறதினாலே உன்னுடையரத்தினபுரி நீடித்திருக்கப்போகிறதோ இந்தக்கெடுமதியைவிட்டுவிடு விநோதமாயிருக்கப்பட்ட வீரவன்னியர்களுடைய பாதாரத்தை வணங்குவையென்றார் நாரதர் எ-று. (ருஎ)

அண்டருக்கப யத்தமளித்தவ
னெண்டிசைக்கதி பதியெழிலுளன்
கண்டைமன்னுங் கழலினனத்தழல்
மண்டெழும்பும் தவமுமன்னினனதே.

(இ-ள்.) தேவாதிகளுக்குப் பயப்படாதேயென்று அபயாஸ்தம் பாலித்தவனாகும் இந்தவெட்டுத்திக்கும் ஆளப்பட்டராசன் அழகாகிய வீரகண்டாமணியிலங்கப்பட்ட பாதமுடையவன் நல்ல வேள்வியினுடைய அக்கினியில் அக்கினிக்குதிரையோடுதித்தவன் அக்கினிகுலம் ஆனவனென்றார் நாரதர் எ-று. (ருஅ)

தேவராயன் செழித்தநயனமன்
காவலுக்குடை யானுன்களேபரந்
தாவிவெட்டுஞ் சம்மட்டிபண்டாரமென்
பாவைபங்கன் பகர்ந்தபெயரினன்.

(இ-ள்.) தேவராயனென்றும்ராயரென்றும்செழிப்பானநயினரென்றும் பூமிகாக்குமுடையானென்றும் உன்னுடையஉடலைத்தாவிப்பிடித்து அடிக்கப்பட்ட சம்மட்டியென்றும் பண்டாரத்தாரென்றும் உமையவளை யிடப்பாகத்திலேவைத்த பரமசிவன் கொடுக்கப்பட்ட பேருடையவனும் அந்தவீரவன்னிய மகாராசனென்று சொன்னார் நாரதர் எ-று. (ருகூ)

கரிமுகன்குகன் காதலார்சீதரன்
மருகன்போதன் மைத்துனன்மகபதிக்
குரியதேவும் பருக்கனுகூலனும்
பரவுவாய்தாளிற் பலமுடைமன்னனே.

(இ-ள்.) விநாயகன் சுப்பிரமணியனுக்கும் ஆசையான சகோதரனானவன் மகாவிஷ்ணுவுக்கு மருமகனானவன் பிரமாவுக்குமைத்துனனானவன் தேவேந்திரனுக்கு உரிமையுள்ள மருமகனானவன் இன்னுமற்றுமுள்ள தேவாதிகளுக்கு எல்லாம் தேவனாயிருக்கிற வன்னியராயன் அனைவருக்கும் அனுகூலமாயிருப்பவன் அவனுடையபாதத்தில் நீபோய் வணங்குவாயென்றார் நாரதர் எ-று. ()

## நாரதர் வாதாவியினிடம்

# தூதுபோனச் சருக்கம்.

முற்றிற்று.

---

ஆக பாயிரம் உட்பட சருக்கம் கசு-இ

திருவிருத்தச் செய்யுள் கூ0எ.

கடவுள் துணை.

## பதிமூன்காவது.

# வீரவன்னியன் துர்க்கையுடன்

## கடல்தாண்டுசருக்கம்.

எழுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஆளிவா கினிபொன் னடித்தனை யிறைஞ்சி யறைகுவ னரசம் புயத்தின், ருளிநாயகியே தயித்தினகரஞ் சார்த்திடுஞ் சூட்சிவிள் ளென்னத், தூளிவாய்பேய்கள் சூழ்ந்திடவமர்செய் சுடரயிற்கரத் திருவுன்றன், தாளிறைற் கரியவேலையை நீந்தற்றகாதெனச் சாற்றி னள்கௌரி.

(இ-ள்.) சிங்கவாகனமேறப்பட்ட துர்க்காபரமேஸ்வரியின் பொற்பாதத்தில் வீரவன்னியன்பணிந்து சொல்லுகிறுன் தாமரை மலரையொத்த பாதத்தையுடையதாயே ராக்ஷதாளிருக்கப் பட்ட ரத்தினபுரிக்குச் சமுத்திரங்கடந்து போகத்தக்கதந்திரங்கள் சொல்லவேணுமென்ன தூளிவாய் பேய்பிசாசு பூதம்சூழ சண்டைசெய்யப்பட்டவேல கையிற்றுங்கியிழுக்கப்பட்ட வீரனே இந்தகருங் கடலைத்தாண்டிப்போகவும் நீந்திப்போகவுங்கூடாது என்சொல்லைக்கேளென்று சொல்லுவாள் துர்க்கை எ-று. (க)

## வேறு.

கொண்டலினியாமென்னுங் குலாவியேமுரசதிர்ப்ப
மண்டியபடைக்குழாங்க ளுடனெனன்பால்வருவீரென்ன
முண்டியவலகைசூழ முதல்வருமேனையோருந்
தண்டணிகால்களாப்பச் சாம்பவியேகலுற்ருள்.

(இ-ள்.) மேகங்கற்சிப்பதுபோலமேளவாத்தியமுழங்கும்படி உன்சேனையுடனே பின்னேவாவென்று பூதப்படைகள்சூழ முதல்வர்களும் ஏனையோரும் காலின்கணுள்ள தண்டைகள்சப்திக்கதுர்க்காபரமேஸ்வரியுடன் நடந்தார்கள் எ-று. (உ)

அம்பிகைமுன்ருற்செல்ல வரசரும்பின்ருற்செல்ல
வெம்பியசேனைமாவு மிகுத்திடுமிரதந்துன்ன

கம்பிதவலைகள்வீசுங் கடலுமுன்சுவரபின்னால்
வெம்பிதநீர்சுரக்க வேகினர்தளங்கண்மாதோ.

(இ-ள்.) துர்க்காபரமேஸ்வரி முன்னேநடக்க வீரவன்னியராசன் பின்னால்நடந்துபோக ரதகஜதுரகபதாதிகளுஞ் சூழ்ந்துநடக்க அலைஅடிக்கப்பட்ட தெற்குசமுத்திரம் முன்னேவற்றவும் பின்னாற்சுரந்துபோகவும் நடந்துபோனார்கள் எ-று. (௩)

காளையாம்வீரன்பாலர் களின்சுவானத்திலொன்று
நீளிருளுவரியேக நின்றிடத்தானையெல்லாம்
யாளிநாயகிபின்செல்ல வலகையின்பின்படைகளார்ப்பக்
கூளிபேயினங்களாடக் குணதென்கேற்கடல்பாற்சென்றாள்.

(இ-ள்.) வீரவன்னியன்பிள்ளைகள் நால்வரும்வளர்த்த நாய்களில்ஒருநாய் கடலிறங்குமுன் சமுத்திரஞ்சுரந்துபோகக் கரையில் நின்றது சேனைகளெல்லாம் அம்மன்பின்னாகப்போகவும் பூதப்படைகூத்தாடி நடிக்கவும் தென்மேற்குநோக்கி நடந்தார்கள் எ-று.

கடற்சலம்சுவறும்போது கடலுளமீனினங்கள்
துடிதுடித்திடவேகண்டு துர்க்கையின்பேயினங்கள்
அடவிடனருந்திவீர னளித்திடுமமுதமென்று
திடிமுடனாடிப்பாடி தீரமாயேகிற்றம்மா.

(இ-ள்.) கடல்வற்றினபோது அதில்வாழும்மீனினங்களெல்லாம் உடல்துடித்துகிடப்பதை பூதப்படைகளெடுத்து சாப்பிட்டு வீரவன்னியனளிக்கப்பட்ட அமுதென்றும்கூத்தாடிநடந்தது பூதப்படைகள் எ-று. (௫)

அண்டர்கள்முனிவர்சித்த ரயனரியனைவோர்கூடி
திண்டிறல்வீரன்சூரன் றெளிந்திடக்காண்போமென்று
கொண்டலூர்தியன்விமானங் கோதிலாதிருந்துவானில்
அண்டொணுசிந்துநாடி யகமகிழ்ந்துரைக்கலுற்றார்.

(இ-ள்.) தேவர்களும்ரிஷிகளும் பிரமாவிஷ்ணுவுங்கூடி வீரவன்னியன் புசபலபராக்கிரமத்தை பார்ப்போமென்று ஆகாசமார்க்கத்தில்நின்று சொல்லுகிறார்கள் எ-று. (௬)

அந்தரத்தமரரெல்லா மம்பிகையருளாலாழி
முந்தியேசுவறப்பின்னால் மூர்க்கமாச்சுரப்பக்கண்டோம்
சுந்தரமலர்கடூற்றி சூரியனடியைப்போற்றி
மந்திரவீரவாளால் மடிகுவரவுணரென்றார்.

(இ-ள்.) தேவர்களெல்லாரும் துர்க்கையருளினாலே கடல்மு ன்வற்றிநடக்கவும் பின்னால்சுறக்கவும் கண்டோமென்று புஷ்பமா ரிபொழிந்து துர்க்காபரமேஸ்வரியைத் தொழுதுவாளாயுதத்தினா லே ராக்ஷதர்கள் மடிந்துபோவார்கள் என்றார்தேவர்கள் எ-று. ()

இலங்கையிலவுணர்மாள விராமனுங்கிரிகளாலே
துலங்கியீவினையுண்டாக்கி துட்டரைக்கடிந்தான்வீரி
நலங்கொளுங்கருணையாலிந் நறகடற்வறச்செய்த
பெலங்களையுரைக்கலாமோ பெருமைவிண்ணவருமென்றான்.

(இ-ள்.) இலங்கைராக்ஷதாள் மடியும்படி இராமசாமிசமுத்தி ரமீதணையைக்கட்டி அதன்பேரில்நடந்து ராக்ஷதரைசம்மாரஞ்செ ய்தார் இப்போதுநீர் சமுத்திரம்வற்றும்படிச்செய்து அதன்மேல் நடந்த உன்பெருமையைநாங்கள் சொல்லிமுடியுமோ வென்றார் எ-று. (அ)

அனைத்தையும்படைத்துக்காத்து மமரினாலொடுக்குநீலி
கனத்தைநாம்கழறலாமோ கதித்தவத்திரியேமுன்னோர்
நினைத்திடும்வரங்களீயு நிமலியேபிரமமல்லா
லினிபிரமங்களுண்டோ வியம்பிடமுடியாதென்றார்.

(இ-ள்.) சர்வசீவாத்துமாவையும்முண்டுபண்ணி முடிவிலழிக் கப்பட்டவளுடைய பெருமையைச்சொல்லிமுடியுமோ அத்திரிம காரிஷியே பெரியவர்கள் நினைத்தவரத்தை அளிக்கும் ஈஸ்வரியே பிரமமல்லால் வேறுபிரமமுமுண்டோ அதைச்சொல்லி முடியா தென்றார் சனகரிஷி எ-று. (கூ)

ஆதியிலாணும்பெண்ணு மலியெனுமரன்மால்தேவர்
தீதிலாதனத்துமீண்டுங் தேவியாமவரவர்க்கே
நீதியாநிறைந்திருந்து நெடுமகவாகிப்பின்னுஞ்
சோதியாயெங்குமின்ற சூழ்ச்சியையறிவதுண்டோ

(இ-ள்.) ஆதியில் ஆணும்பெண்ணும் மலியுமாகியும் பிரமாவி ஷ்ணுருத்திரனையீன்றும் இன்னமனேக சராசரங்களையீன்றும்மும் மூர்த்திகளுக்குத் தகுந்தபெண்ணாகியும் பிள்ளைகளாகியு மிருந்த சூக்ஷமகாரணத்தை அறிபவர்களுமுண்டோ எ-று. (ய)

முதலினுள்மூன்றுவான் முட்டையைப்பகர்ந்தளிக்க
வதிலுமையறியும்வேதன் மலர்மகளாகவாணி
யிதமுடனுதிர்த்தாரீச னிறையுமந்திருமாலும்
விதிமறைமாதுவிந்த விதமணம்புரிந்தவாறே.

(இ-ள்.) அத்திரிமகாரிஷியேகேளும்பரமேஸ்வரியானவளண்டபிண்டசராசரங்களை யுண்டுபண்ணவேணுமென்று மூன்றுவிதமுட்டைஉண்டுபண்ணி அதில்ஒருபச்சைமுட்டையில் உமையவளும் மகாவிஷ்ணுவும் ஒருமஞ்சள்முட்டையில் பிரமாவும் இலக்ஷிமியும் மற்றொருவெள்ளைமுட்டையில்பரமசிவனும்சரஸ்வதியுமாக இப்படி உதித்தார்கள் பரமசிவன்உமையவளை மணர்ந்தார் மகாவிஷ்ணு இலக்ஷிமியைப்புணர்ந்தார் பிரமதேவன் சரஸ்வதியைச்சேர்ந்தார் இப்படிமூவர்களால் அண்டபிண்ட சராசரங்களை உண்டுபண்ணி வைத்தார்கள் எ-று. (கக)

சத்தியேபிரமமாகு மதிற்பரமசிவமடங்கும்
முத்தியின்னெறியளிக்கு மொழிந்திடின்முதல்வரானோர்
நித்தமுமவளைப்பூசை நிறைவுடனளிப்பதல்லால்
சத்தியிலதிகமுண்டோ தரணியிலெனவேசாற்றும்

(இ-ள்.) சத்தியேபிரமமாகும் அதில்பரமசிவனடங்கும்முத்தியளிப்பதுமதுவே முதல்வரானபேர்கள் தினம்பூசைசெய்ய அந்த பூசைக்குபலனளிக்க அந்தபலனுக்கீடுஒருவருஞ்சொல்லக்கூடாது எ-று. (கஉ)

மரியாருந்துர்க்கைசூழ்ச்சி வானவர்மனத்திலுன்னி
பேரிகைமுரசொலிப்பப் பித்தரைருளினாலே
வீரியகுழாங்கள்சூழ வீரவன்னியன்பாற்சென்று
போரினைக்காண்போமென்று புளகமொத்திருந்தார்மாதோ

(இ-ள்.) துர்க்காபரமேஸ்வரியினுடைய சூட்சியைமனதுட்கொண்டு சந்தோஷத்துடன் பேரிகைமுழங்கபரமேஸ்வரனுடைய வருளினாலே வீரவன்னியன்செய்யப்பட்ட சண்டையைப் பார்ப்போமென்று ஆகாசத்தில் தேவர்கள்வந்தார்கள் எ-று. (கங)

அந்தரியருளினாலே யலைகடல்வீரர்
துந்துமியொலிப்பவாங்கோர் சுனைவளர்பொழிலைக்கண்டு
மந்திரவரத்தினாலோர் மண்டபமமைத்துவானி
லிந்திரனெனவிருந்தா ரிரத்தினபுரத்திலம்மா.

(இ-ள்.) துர்க்காபகவதியருளினாலே சமுத்திரங்கடந்து வீரவன்னியன் போகிறபோது வாத்திய முழங்கும்படியாக சுனைகளோடுகூடிய ஒருதோப்பினைக்கண்டு மந்திரத்தினால் மண்டபஞ்செய்து ரத்தினபுரியிலே வீரவன்னியமகாராசனுஞ் சேனைகளும்இரங்கியிருக்கும்போது எ-று. (கஎ)

## வீரவன்னியன் துர்க்கையுடன்

### கடல்தாண்டுசருக்கம

முற்றிற்று.

---

ஆகபாயிரம் உட்பட சருக்கம்-கரு-இ

திருவிருத்தச் செய்யுள் சுஉக.

உ

கடவுள் துணை.

# பதினைந்தாவது.

## விநாயகர் காவற்சருக்கம்.

வெஞ்சமனிவனுமென்னு மிகுத்தவாதாவிநாட்டில்
செஞ்சுடர்முடிபுனைந்த சிலையவனிருப்பவிப்பால்
குஞ்சரமுகத்தோனை கோவில்வீற்றிருப்பக்கண்டே
அஞ்செழுத்துச்சரிக்கு மரசனும்பணிந்துரைப்பான்.

(இ-ள்.) வெவ்வியகோபமனதுடைய எமனுக்கு எமனாகுமிவனென்றுசொல்லத்தகுந்த வாதாவியினுடைய ரத்தினபுரத்திற்குகிரீடமணிந்து கையில்விற்பிடித்த வீரவன்னியமகாராசன் போகும்போது அவ்விடத்திலே விநாயகக்கடவுள் திருக்கோயில்கொண்டெழுந்திராநின்ற ஆலயத்தைக் கண்ணுற்கண்டு பஞ்சாக்கரத்தை யுச்சரிக்கும் மேன்மைவாய்ந்த வீரவன்னியன் அக்கடவுளை வணங்கிச் சொல்லுகிறான் எ-று. (க)

மூடிகமேலுகந்த முக்கண்ணுமூர்க்கர்பூமி
நாடினசூழ்ச்சியென்பா னவின்றிடும்நாதியென்ன
நீடியவைங்கரன்பின் னிகழ்த்திவாதாவியூடே
நாடியேசார்பாயிந்த நகரினைக்காத்தேனென்றார்.

(இ-ள்.) பெருச்சாளிவாகன மேறப்பட்ட முக்கண்தாங்கிய விநாயகமூர்த்தியே இந்தராக்ஷதனுடைய நாட்டிலிருக்கிற சூக்ஷமங்களை எனக்குத்தெரியச் சொல்லவேணும் விநாயகரேஎன்றுபிரார்த்திக்க விநாயகர்சொல்லுகிறார் வாராய் வீரவன்னியராஜனே வெற்றிமாலைசூடிய துஷ்டனான வாதாவியினுடைய பட்டணமாகிய இரத்தினபுரியை காவல் வைத்துக்கொண்டு இருக்கிறேனென்றார் விநாயகர் எ-று. (உ)

நகரினைக்காப்பேனென்ற நாதனேவாரோருக்கும்
பகையெனுஞ்சூரன்மாய்கைப் பகருவாயென்னத்தேறி
நகையினாற்புரமெரித்த நாயகனளித்தவீரன்
முகமதைப்பரிந்துபார்த்தே மோதகன்மொழியலுற்றான்.

(இ-ள்.) இந்தவிரத்தினபுரியை காவல்காத்துக் கொண்டிருக்கிறேனென்ற விநாயகமூர்த்தியே தேவாதிகளுக்கு சத்துருவான

வாதாவிராக்கதனுடைய மாய்கைகளையெனக்குத் தெரியச்சொல்ல வேணுமெனமனந்தேறி சிரித்துமுப்புரத்தையெரித்த பரமசிவனளித்தவீரவன்னியமகாராசாவின் முகத்தைப்பார்த்து மிகுந்தஅன்போடும் விநயகர்சொல்லத் தொடங்கினர் எ-று. (ரு)

கெசமுகனவுண்ணன்றன்னைக் கெலித்தவனெனவுணர்ந்தே
அசைவிலாவரத்தாலென்னை யருமையாயழைத்திருத்தி
உசிதமாம்பூசைநல்கி யுலகினைக்காருமென்றே
இசைந்துமேநெடுநாளாக விப்புவியிருந்தேனென்றான்.

(இ-ள்.) முன்னாளிலே கெசமுகாசூரனுடைய ஆண்மையையடக்கினவனென்று கேள்விப்பட்டென்னை மதித்துமனதிலாலோசித்துத்தெளிந்து மிகவும்பயபத்தியாய் அன்புடனழைத்துவந்தென்னையிவ்விடமமர்ந்திருக்கும்படி உசிதமானபூசையியற்றி யிவ்விரத்தினபுரியை யாவராலுமழிக்கப்படாமல் காத்தருளவேண்டுமென்றிருந்தான் அப்படியேநானும்இசைந்து காவல்காத்துக் கொண்டு நெடுநாளாக விருக்கிறேனென்றார் விநயகர் எ-று. (சா)

கன்னியோர்பாகந்துன்னுங் கடவுளின்வரத்தினாலே
மன்னன்வாதாவியிந்த மண்ணினில்வலிமையானான்
அன்னவனிடத்தில்யானு மக்கினிகாளியாரும்
முன்னியேகாக்கவானோர் யாவருமடைந்ததென்றார்.

(இ-ள்.) உமையவளையொருபாகத்தில் வைத்திருக்கும்பரமசிவன் அளித்தவரத்தினாலே வாதாவிஇராக்ஷசராசன் இந்தரத்தினபுரியையாளும் வலிமையுள்ளவனாகினான் அவனுக்குஅக்கினியும்காளியென்னப்பட்டவளும்யானும்காவலாயிருக்கின்றபடியினாலேதேவர்கள்மிகவுந் துயரடைந்திருக்கின்றார்கள் என்றார்விநயகர்எ-று.

மன்னனுமவுணன்மூன்றில் மாணிக்கத்தாலேமேய்ந்த
சொன்னத்தாற்றூண்களுட்டி சோர்விலாமாளையாலே
பின்னியபொதிகைசேர்த்து விண்ணவர்பதியுநாண
வன்னமும்பொன்னினாலே வழகுறவெங்கும்வைத்தார்.

(இ-ள்.) இராசாவான வாதாவிராக்கத னிருக்கும்வாசலில்மாணிக்கத்தாலிழைத்த சொர்ணத்தூணுட்டி பிரகாசமான தங்கத்தினாலே பொதிகைசேர்த்து தேவலோகமும் வெட்கமடையும் படியாக அன்னப்பக்ஷியும் பொன்னாற்செய்து எங்கும்பரப்பி அழகு பெறச்செய்தார்கள் எ-று. (சா)

எங்கும்பொன்மதிகளாற் சூழும்ரததிணுபுரத்தினுள்ளே
வங்கொருதாழ்வுமில்லா வாதாவிவாழ்வைக்கேளீர்
பொங்குமேற்கடலில்வீடு பொற்கிரியெனச்சூழ
மெங்குமேவில்லையென்றே யிலங்கிடவிருப்பதானன்.

(இ-ள்.)எங்கேபார்த்தாலும் பொன்னாலமைந்தமல்கதிளும்இரத்திணுபுரியிலொரு தாழ்வில்லாமலிருந்துவாழ்கின்றவாதாவியின்வாழ்வைச்சொல்லுகிறேன்கேளும் நான்குதிக்கினுஞ்சமுத்திரத்தினுற்சூழப்பட்டு அதன்நடுவே பட்டண மிருக்கிறபடியினலே தனக்கு வீடுபொன்மலைபோ லிருக்கிறதென்றும் இதுகாறும்தன்னை யெதிர்த்துவரும் சத்திராதிகளில்லாமையால் தனக்கொருவரும்நிகரில்லை என்றும் இறுமாப்புடன் பிரகாசித்துக் கொண்டிருப்ப தாயினன் எ-று. (எ)

வேறு.

எண்ணிலொண்ணு வெழிலானவீதியும்
விண்ணுலாவிய வுப்பரிமேடையும்
பண்ணுலாமொழியார்கள் பந்தாடவும்
அண்ணலார்தன் பதியினையொக்குமே.

(இ-ள்.) கணக்கிடமுடியாத அழகானவீதியும்ஆகாசமளாவிய உப்பரிகையும் மாடமாளிகைகளும் இராகமமைந்தமொழியுடைய தேவதாஸ்திரீகளைப்போல் இராக்கதஸ்திரீகள் பந்தாடுகின்ற மேடைகளும் சீர்தூக்கிப்பார்க்கின் நித்தியசூரிகளாற் சூழ்ந்தபரமபதத்திற்கொப்பாகச் சொல்லலாம் எ-று. (அ)

ஒக்கநல்லவாதாவி யுடம்புடன்
மிக்குமாயிரகாத மிகுந்தவ
னைக்குமாந்தருவாவும் பொற்கொடி
யொக்குமாதரதியென வொக்குமே.

(இ-ள்.) புகழ்ச்சியையுடைய வாதாவியின்தேகமானதுகணக்கிடும்போது மிகுதியானஆயிரங்காதமுள்ள மார்பகலமுடையவன் அவனுக்கிணையானபிள்ளைகளும்அப்பிள்ளைகள்பெண்சாதிகள்விளையாட உப்பரிகைமேடைகளும் பொற்கொடியாகியவிரதிதேவிக்குச் சமதையாகுவர்கள் எ-று. (கூ)

மங்கைமார்கள் மருவுநூறுயிரம்
துங்கவேபரி தேர்கரிசேனைகள்

புங்கவண்படை போலவிலங்கிய
சிங்கவாகனத்தே யிருந்தானரோ.

(இ-ள்.) நூராயிரஸ்திரீகள் வாதாவியினிடத்திலே கலவிசெய்துக்கொண்டிருப்பார்கள் அதுவல்லாமல் மேன்மையுடைய சுவேதவாம்பரிகளும் தேர்களும் யானைகளும் இராக்கதசேனைகளும் சூழபிரகாசிக்கும் பொன்மயமான சிம்மாசனத்தில் தேவேந்திரனைப்போல போகங்களை யனுபவித்துக்கொண் டிருப்பான்வாதாவி. ()

அங்கணன்வங்கணன் றிருச்சாகரன்
செங்கணச்சங்கொலிச் சிறப்பின்றென
சிங்கமானசிவந்தகண் பார்வைய
ரெங்குஞ்சேனைய ராகவிருந்தனர்.

(இ-ள்.) அங்கணனென்றும் வங்கணனென்றும் திருச்சாகரனென்றும் செங்கண்ணனென்றுஞ் சங்குபோலசத்திக்கும்ராக்ஷதரும் சிங்கம்போல சிவந்திருக்கின்ற பார்வையை உடையபேர்கள் அந்தப்பட்டணத்திலே எங்கும் நிறைந்திருப்பார்கள் எ-று. (கக)

வீரசூரர்கள் வீர்கடல்போல
மாரமந்திரிமார்பணிந் தேற்றியே
தூரவோலக்கஞ்சொல்ல வொண்ணாதுகாண்
சேரவிட்டுதிசையு மிருப்பரால்.

(இ-ள்.) வீரம்பொருந்தியராக்ஷதர்கள் சமுத்திரம்போல பரவியிருப்பார்கள் பெரியதேகமுடையமந்திரிகள்வாதாவியைப்பணிந்து தோத்திரஞ்செய்துக் கொண்டிருக்கிறதைச் சொல்லமுடியாது எட்டுதிக்கும்சுற்றி கொண்டிருப்பதுபோல அந்தபட்டணத்திலிருப்பார்கள் என்றார்வினயகர் எ-று. (கஉ)

காணவெட்டுத்திசைக் கணிசைகளே
பூணுமத்தளஞ் சல்லரிபூரியும்
வேணுபார்வையோராடலும் மேன்மையாம்
வாணனாகியவாதாவி வாழ்குவன்.

(இ-ள்.) பார்க்கவேணுமென்றால் எட்டுத்திக்கிலும் ராகம்பாடிக்கொண்டு மத்தளதாளம் சல்லரிமுதலாகிய வாத்தியமுழங்க ஸ்திரீசாதிகள் நடனஞ்செய்யப்பட்ட மேன்மையையுடைய வாணசூரனைப்போல வாதாவிராக்ஷதசூரன் இருந்துவாழ்வான் எ-று.()

வாழ்வுதான்சொலவா னவர்மேவல
ரீழங்கொல்லமி லங்கையுங்கோசலை

யாழமானகடலுள வனியின்
மூழ்கிகித்தலுமுதிதவ மென்பவே.

(இ-ள்.) அந்தவாதாவிசூரராக்ஷதனுடையவாழ்வைச்சொல்ல மேலாகிய தேவாதிகளாலேயுமில்லை ஈழதேசங்கொல்லம் இலங்கை அயோத்தியாபுரிமுதலான அனேகபட்டணங்களிருந்துமிந்த ஆழமுள்ள சமுத்திரத்தினடுவிலேயிருக்கப்பட்ட இரத்தினபுரியிலேமுழுகியெழுந்திருந்தாலும் இதற்குமுதல் அமையாது எ-று. (௧௪)

முத்துநவரத்தினமு முன்குவியல்செய்ய
கொத்துடையநற்பவளம் கொண்டுபணியாக
மற்றொருவருமிநிக ரில்லாதவவுணதி
யித்தகமையோடவ னிலங்கிடவிருந்தான்.

(இ-ள்.) முத்துமுதலான நவரத்தினங்களு முன்னாலேகுவித்திருக்கவும் கொத்துகொத்தா யிருக்கப்பட்ட நல்லபவழங்களை கொண்டுவந்து ஆபரணஞ்செய்து அணியயனைவருந்தனக்குநிகரில்லாத ராக்ஷதருக்கு ராசாவாகிய வாதாவிசூரன் இந்தசெல்வங்களையுடையவனாய் வீற்றிருக்கிறான் எ-று. (௧௫)

கூற்றனிவனாமெனவே கொள்ளைகொளுஞ்சூரன்
ஏற்றினுரையீசனு மியம்பியவரத்தா
னாற்றிசைநடுங்கபல நலங்களைக்கவர்ந்தே
பாற்றிபனெனவிருந்த பான்மையிதுவென்றான்.

(இ-ள்.) எமனானவனிவனேயென்று சொல்லும்படி யாகவும் உலகங்களை கொள்ளையடிக்கப்பட ராக்ஷதர்கள் ரிஷபவாகனமேறிய பரமசிவனளித்த வரப்பிரசாதத்தினாலே நாலுதிசையிலுள்ள பேர்களையும் நடுங்கும்படியாக கொள்ளையடித்து திரவியங்களைவாரிக்கொண்டுவந்து ராஜாவாகவிருக்கிறான் அவனுடைய பாங்கிதுவாகுமென்று விநயகர்சொன்னார் எ-று. (௧௬)

அண்டரனளித்தவயதான தழல்காளி
கொண்டசினத்தோடுகொதித் தெழுவளுன்றன்
மண்டுசிலையான்மடிவள் மைந்தவிதுதிண்ணம்
பண்டமுதெனக்களியு மென்றுரைபகர்ந்தான்.

(இ-ள்.) அந்நாளிலே பரமசிவன் கொடுத்தவயது நெருங்கிப் போயிற்று அக்னிக்காளிஎன்னப்பட்டவள் துஷ்டனாகியவாதாவி

சூரன் சொன்னபிரகாரமே உக்கிரமானகோபத்துடனே உன்பே ரில்வந்தெதிர்ப்பாள் அவளும்உன்னுடைய பாணத்தினலேமடிந்து போவாள்வீரவன்னியராசனே யெனக்குஉன்னுடைய அமுதுகொடுமென்று சொன்னார்விநயகர் எ-று. (கள)

அந்தமுளவென்பசி யகற்றவறிவில்லா
னுந்திகமலத்தினிலெழும் பசியுன்னலே
சிந்தைமகிழாகச் சிதைத்திடுதியானல்
பந்ததுணையாகிப்பரிந் தருள்வனென்ருர்.

(இ-ள்.) அந்தவாதாவிசூர ராக்ஷதனென்னுடைய பசியறிந்து படைக்கும்படியான அறிவில்லாதவனை மூடபுத்தியினுடைய வீணனபடியினலே இப்போதுஎன்னுடைய உந்திக் கமலத்திலே எரியப்பட்டபசியை யுன்னலேயடங்கும்படி செய்தையேயானல் யின்றைக்கேயுன்னிடத்தில் நெருங்கியதுணையாகயிருந்து வுனக்கு வேண்டியநல்ல வனுக்கிரகத்தைச் செய்கிறேனென்ருர் விநயகர் எ-று. (கஅ)

அக்கணமதிரசமு மோதகமோடப்பஞ்
சர்க்கரைவெள்ளுண்டையுஞ் சமைத்துடனளிக்க
முக்கணனுமுண்டு பசியோட்டிமுனிவில்லா
மிக்கமகிழ்கூர்ந்துவரம் வீரனுக்குரைப்பான்.

(இ-ள்.) வீரவன்னியராசன் அந்தக்ஷணத்தில் அதிரசம்மோதகம் அப்பளம்சர்க்கரை யெள்ளுருண்டை முதலாகியனவும் தேவாதிகள் வரப்பிரசாதத்தினலே கும்பல்கும்பலாயிருக்கக்கண்டு முக்கண்ணனகிய விநயகமூர்த்தி உண்டுதன்னுடைய பசியைத்தணித்துகோபமிலாது மிகுதியான சுந்தோஷத்துடனே வீரவன்னிய உடையானுக்குச் சிலது சொல்லுவார் எ-று. (கசு)

மங்கையுமைபாகன் மகவானவென்சகாயா
கங்குலேகடிந்த கதிரெணவவுணராதி
யங்கமுனதற்சிலேயி னம்புவதைசெய்யும்
பங்கமிலேயுன்றனது படைதழையுமென்ருர்.

(இ-ள்.) பெண்ணுகியஉமையவளே யிடப்பாகம்வைத்தபரமசிவனளித்தபிள்ளேயான யெனக்குச்சகோதரனை வீரவன்னியனே

யிருட்டுக்கூட்டங்களைக் கோபித்துவோட்டப்பட்ட சூரியகிரணங் களைப்போல வாதாவிசூரராக்ஷதரை உன்னுடையகைப் பாணத்தி னாலே யாதொருபழுதுமில்லாமல் நீயும்உன்னுடைய சேனுசமுத் திரமுந் தழைத்திருக்குமென்றார் விநாயகர் எ-று. (உ௰)

கரிமுகனியம்பவுங் கருத்தின்மகிழ்கூர்ந்தே
யிருகரங்குவித்து பணிந்திதேத்தியெழுவீரன்
முரசதிருமுன்றலிற் புகுந்தமையின்முன்னர்
யரிமருன்சொன்னதோ ரடைவிகளுரைத்தான்.

(இ-ள்.) ஆனைமுகமுடைய விநாயகமூர்த்தியருளிய வரங்களி னாலே மனமகிழ்ந்து இரண்டுகையும் குவித்து பாதத்தில் பணிந்து தோத்திரஞ்செய்த அழகுமிகுந்த வீரவன்னியராசன் முரசுபேரி கைமுழங்க தானிருக்கும் மண்டபம்போய்ப்புகுந்து துர்க்காபர மேஸ்வரியின் பாதத்தில்வணங்கி மகாவிஷ்ணுவினுடையமருமகனா கிய விநாயகமூர்த்திசொன்ன அடைவுகளைச் சொன்னான் வீரவன் னிய மகாராஜன் எ-று. (உக)

## விநாயகர்காவற் சருக்கம்.

முற்றிற்று.

---

ஆக பாயிரம் உட்பட சருக்கம் கரு-இ

திருவிருத்தச். செய்யுள் கூ௪உ.

உ

கடவுள் துணை.

பதினாறுவது.

# துர்க்கை சோதனைச் சருக்கம்.

மாசிலாவீசனார்தன் மாவருள்படைத்தவீரன்
தேசுலாப்படைகளோடு சென்றவனுரைப்பக்கேட்டு
பேசிலாயிரங்கவேண்டா மிப்பொழுதசுரன்பாற்போய்
நாசமாமாறுசொல்லி நானிவண்வருவேனென்றாள்.

(இ-ள்.) களங்கமில்லாத பரமேஸ்வரனுடையவரம்பெற்றவீர வன்னியன் சேனைகளுடன்போய் சொன்னதைக்கேட்டு துர்க்கையானவள் சொல்லுவாள் எங்கும்பழிப்புக்கிட மில்லாதவனே நீமனதில் துயரப்படவேண்டாம் இந்தக்ஷணமே வாதாவியிடம்போய் அவன்நாசமாகும்படியான வரங்கொடுத்து இங்குவருகிறேனென்றாள் துர்க்கை ஏ-று. (க)

ஆச்சியருருவமன்னியருஞ் சிரமீதின்மோர்சால்
காச்சியபசும்பொன்மோரை கரந்தனிற்றுலங்கவேகி
பேச்சியாந்துர்க்கையாரும் பிறங்கவாதாவினாட்டில்
கூச்சமில்லாமல்மோரு கொள்ளுவீரெனவுரைத்தாள்.

(இ-ள்.) இடைச்சிபோலரூபமெடுத்து அரிதான தலையில்மோர்ப்பானை உண்டுபண்ணி வைத்துக்கொண்டு பேச்சியாகிய துர்க்கை மகாபலம்பொருந்திய வாதாவியினுடைய பட்டணம்போய்மனதிலேகூச்சமில்லாமல் மோரோ மோர்வாங்குவீர்களென்றுபெருங்குரலாய்க் கூவிச்சொன்னாள் ஏ-று. (உ)

வேறு.

பால்கொள்ளுமோர்கொளுங்கள் பாவையரேயெனக்கூற
ஓலமதிலவுணராதி நங்கையர்களோடிவந்தே
வேல்பொருதும்விழிமானாய் விலைசொல்வீர்பாலெனவே
மாலினையாளுரைப்பாள் மாணிக்கமொருமோகை

(இ-ள்.) பாற்கொள்ளுங்கள் மோர்கொள்ளுங்கள்பெண்களே யென்று உறக்ககூவுகிறபோது பட்டணத்திலிருக்கும்ராக்ஷதபெண்டுகளோடிவந்து வேற்போலொத்த விழியையுடைய மோர்க்காரி

பால்வில்லையென்ன மோர்வில்லையென்ன சொல்லுமென்றுகேட்க மகாவிஷ்ணுவுக்கு இளையவளாகிய துர்க்கைசொல்லுவாள்மாணிக்கமொன்றுகொடுத்தாலிந்த மோகையினாலே ஒன்று போடுகிறேனென்றாள் துர்க்கை எ-று. (ந)

மாணிக்கநெய்தயிர்பால் மற்றவுமோவென்றுரைக்க
வாணிப்பொன்னஞ்சுவில்ல யாகாதோவெனக்கேட்ப
பூணும்பூணுதிகளும் பூவையரேயாகாதென்
ஞளிச்சென்றேயொரு நல்வீதியினிற்கூவுவளே.

(இ-ள்.) பால்மாத்திரம் ஒருமாணிக்கமல்ல நெய்தயிர் பால் மோர்முதலானதும் ஒருமோகை ஒருமாணிக்கமென்று சொல்லக் கேட்டு ராக்ஷதஸ்திரீகள் ஆணிப்பொன்னஞ்சு தருகிறோம் ஒருமோகைக்கு விலைவாங்கென்று கேட்க பெண்டுகளே அதுவில்லைபோதாதென்று மனதுநாணும்படியாக மற்றொருதெருவில்போய்விலைகூவுவாள் எ-று. (ச)

நன்னுதலால்விலைகூற நானிலங்களதிர்ந்திடவே
மன்னவனும்வாதாவி மாசெவியில்தாக்கிடவும்
யென்னவொலியென்றிடவு மிலகுமமைச்சருக்குரைப்பான்
அன்னவரில்வாய்மையறிந் துரைப்பேனெவாங்குற்றான்

(இ-ள்.) நல்லநேர்த்தியாளான துர்க்காபரமேஸ்வரி கூவியசத்தமானது பூமிகளெல்லாமதிர்ந்து நடுங்கும்போது வாதாவியினுடைய விரண்டுசெவியிலும் கேட்கும்போது இதுவென்ன சத்தமென்று தன்னிடத்திலிருக்கும் மந்திரியைக்கேட்க அங்குள்ளஒருமந்திரி நான்போய் அறிந்துவருகிறேனென்று போனான் எ-று. (ரு)

கூவியசொன்மூவுலகும் கொண்டலிடிபோலார்ப்ப
நாரியிவளாரெனவே நாயகன்பாற்கொண்டேக
சீரிலவுணதிபனுஞ் செப்புவானீயாருன்
பேரெவையூரேதுவெனவே பிசகாமற்பேசென்றார்.

(இ-ள்.) துர்க்கையானவள் மோர்விலைகூறினகுரலானது கைலாசம் வைகுந்தஞ் சத்தியலோகமுதல்மேகத்திடிபோலமுழங்கும்போது இந்தப்பெண்ணாரோவென்று வாதாவியினிடத்திலழைத்துப்போய்விட்டார்கள் சீருடையவாதாவி யிந்தயிடைப் பெண்ணைப் பார்த்துகேட்கிறான் நீயார் உன்பேரென்ன எந்தவூர் பிசகாமல் சொல்லென்றுகேட்டான் வாதாவி எ-று. (சா)

வாதாவிமன்னவனே வடகயிலையீசருட
ஞதாந்தபசுமேய்க்கும் நல்லிடைச்சியாமெனவே

சூதானவார்த்தையது சொற்றனேயேமாதரசே
காதாரச்சொல்லுமென காத்திரமாய்க்கூறுவளே

(இ-ள்.) வாதாவிமகாராசனே! என்னுடைய வரலாற்றைச் சொல்லுகிறேன்கேளும் வடக்கேயிருக்கும் கயிலாசத்தில் பரமசிவனுடைய நாதாந்த பசுமேய்க்கப்பட்ட விடைச்சியாகுமென்று சொல்ல சூதாகபேசின துர்க்கையைப்பார்த்து வாதாவிசொல்லுகிறான் நீசூதாகச்சொல்லுகிறதைவிட்டு நீவந்தவிபரத்தை யென்காதுகுளிரச்சொல்லுமென்றுகேட்க மகாஉக்கிரமாகச் சொல்லுகிறாள் எ-று. (எ)

வந்தவகைகேளுமினி வன்னியாளென்றுசில
ரிந்தநகரழிந்திடவே வந்தாரவர்பின்னே
யந்தமுளபெருஞ்சேனைக் கார்துணையாய்வந்துற்றேன்
மந்தமதியாலுரைக்கு மாதிவளைவதையென்றான்

(இ-ள்.) வாதாவிராக்ஷதராஜனேநான்வந்தவிபரங்களைக்கேள் சொல்லுகிறேன் வன்னியர்களானராசாக்கள் சிலபேர்கள் உன்னுடையபட்டணத்திற்கு வருகிறேனென்றுவந்தார்கள் அவர்களுக்கு நான் அழகாகபெரிய சேனைசமுத்திரத்துக்குத் துணையாகவந்தவளென்றுசொல்ல வாதாவிகேட்டு இவள்மந்தப்புத்தியினாலேசொல்லுகிறாளிவளைப்பிடித்துக் கொல்லுமென்றான் வாதாவி எ-று. (அ)

வதைசெய்யுமென்றுரைத்த வாதாவிமன்னவனே
யிதுவுனக்குநன்றாமோ யென்பெயருந்துர்க்கையென்பாள்
மதியணியுஞ்சடையண்ணல் மகவானவன்னியர்கோன்
உதையினாலுனதுசிர முருண்டழியுந்தவறாதே.

(இ-ள்.) என்னைக்கொன்றுபோடும்படி உத்திரவுகொடுத்தவாதாவியே உனக்கு தருமமாயிருக்கிறதோ என்பேர்துர்க்கை யென்பார்கள் சந்திரனைச்சடையிலணியும் பரமசிவனளித்த பிள்ளைவீரவன்னியதேவன் காலுதையாலேஉன்னுடையசிரசு உருண்டுஅழிந்துவிடும் இதுதப்பாதென்றாள் துர்க்காபரமேஸ்வரி எ-று. (கூ)

சொன்னவாய்தனையறுப்பேன் தொன்னகரைத்தீயினால்
துன்னியழிந்திடச்செய்வன் சுற்றமொடுநின்சுகமும்
மன்னவனானமடியும்போ தெனதுமொழி
யின்னலெனும்நன்மையெனு மிரண்டுமேயறிவையென்றாள்

(இ-ள்.) சொல்லுகிறநாக்கையறுப்பேன் உன்னுடைய பட்டணத்தையக்கினிமூட்டி நாளையத்தினமெரித்துபோடுவேன் நீயென்னை யின்னாள்இனியாளென்று மனதிலேயெண்ணாமலும் என்னையும்

பாராமல்வதை செய்யென்று சொன்னாயல்லவா உன்னுடையபுத்தியில் மதிக்காதவனே நீமடிகிறபோது வுனக்கென்னுடைய சொல்லேகுற்றமென்றும் நன்மையென்று இரண்டுங்காண்பாய் வாதாவிராசனேஎன்றாள் துர்க்காபரமேஸ்வரி எ-று. (க0)

நாக்கைதனையறுத்து நடுவறவேயுனைவெட்டி
காக்கைக்கழுபேயருந்தக் கதித்தவிருந்தளிப்பேனென
மூர்க்கனவன்வாதாவி முன்கோபமாயெழுந்தே
பூக்கமழுங்குழல்பிடித்தான் பொக்கெனவேமறைந்தனளே

(இ-ள்.) நாக்கையறுத்துத் துண்டமாக உன்னைவெட்டிக்காக்கைகழுகு பேய்பருந்து உண்ணும்படியாகநல்லவிருந்தளிக்கிறேன் பாரென்றுசொன்னவுடனே மூடனானவாதாவிமகாகோபமாகவெழுந்திருந்து மலர்வாசனையுடைய துர்க்கையின்கூந்தலைப்பிடித்திழுத்தான் உடனேகண்ணிலேகாணாமல் மாய்கையாகப்போனாள் துர்க்காபரமேஸ்வரி எ-று. (கக)

பொய்யாளர்போலேகி புழுதிதனைமேற்பூசி
மையாரும்விழிமடவாள் வன்னியர்கோன்முன்புற்றே
கையாரவெனையடித்தான் கண்டீர்காண்மைந்தர்களே
அய்யகோவென்செய்வே னுருடனானரற்றுவனே.

(இ-ள்.) துர்க்கைபோய்வரும்போது பூமியில்விழுந்துபுரண்டு புழுதிபடவெழுந்திருந்துவந்து வீரவன்னியன்முன்னின்று வாதாவியடித்தான் கண்டீர்களோமைந்தர்களே யென்னசெய்வே னுருடன் சொல்லுவேனென்றாள் எ-று. (கஉ)

மோர்சாடிதானுடைத்து மோதியென்னையடிக்கலுற்றான்
மார்க்கமில்லாச்செயுமென்ற வாதாவியின்றலையை
தீர்க்கமுறுச்சிலையாலே சேதிப்பீரென்றுரைக்க
போர்க்கழகுசெயுமன்னப் பொங்கியெழுந்திருந்தனனே.

(இ-ள்.) இன்னமுங்கேளுங்கள் மோர்பானையையு முடைத்து என்னையுமடித்து மார்க்கமில்லாமற்செய்த வாதாவியின்சிரசையறுக்கவேண்டுமென்ன வீரவன்னியராஜன் மகாகோபத்துடன் போர்செய்ய எழுந்திருந்தான் எ-று. (கங)

## துர்க்கைசோதனைச் சருக்கம்.

முற்றிற்று.

---

ஆக பாயிரம் உட்பட சருக்கம் கஎ-இ
திருவிருத்தச் செய்யுள் ௬௬௫.

கடவுள் துணை.

# பதினேழாவது.

# மந்திராலோசனைச் சருக்கம்.

இவ்வண்ணந்துர்க்கைசொல்ல விறையவன்கோபமாகி
பவ்வஞ்சூழுலகிற்சூறை பற்றியவவுணர்மண்ணை
கவ்விடச்சிலையான்மாட்டி காலன்கையளிப்பேன்தாயே
எவ்வுரைமணத்தோரென்றே யிருப்பவாதாவிசொல்வான்.

(இ-ள்.) இப்படியாகதுர்க்கையானவள் சொல்லக்கேட்ட வீறைவனாகிய வீரவன்னியமகாராஜன் மகாகோபமாகிசமுத்திரஞ்சூழும் உலகமுழுதும்கொள்ளையடித்துவரப்பட்டவாதாவிராக்ஷதனை மண்ணைக்கவ்வும்படியாக என்பாணத்தினாலேமடித்து எமன்கையில் அந்தசீவனையெல்லாங் கொடுக்கிறேன்தாயே இப்போதென் சொல்லைமனதிலே தெளிந்திருமென்றுசொல்லி தெளிவாக இருந்தார்கள் துர்க்கைநீங்கியபின் ஏக்கமுற்றுத் தெளிந்த வாதாவியின் வருமாறுசொல்லுகிறான் எ-று (க)

மண்டியேகடல்கடந்தே வந்திடும்வன்னியன்தன்
அண்டையிற்செல்லுந்துர்க்கை யறைந்திடுஞ்சூக்ஷியெல்லாம்
முண்டியசினத்தினாலே மொழிகுவன்வமைசசன்றாது
பண்டுநன்முனியுரைத்த பலனும்வந்தொத்ததென்றான்.

(இ-ள்.) கடலானசமுத்திரத்தைத் தாண்டிவந்த வீரவன்னியனிடத்திற்போய்ச்சொல்லுந் துர்க்கைவார்த்தையைவாதாவிராக்ஷதன்கேட்டு கோபங்கொண்டு மந்திரிமாருடனே சொல்வான் நாரதர்தூதாகவந்து சொன்னசொல்பலித்தது என்றான்வாதாவிஎ-று.

இடைச்சிபோலுருவமன்னி யியம்பியதுர்க்கைபான்மை
படப்பொறியரவந்தாங்கும் பாரினிற்கண்டதில்லை
திடத்துடன்வந்தவீரன் றிறமையானறியவேண்டுங்
கடத்தினன்மதுவையுண்டு கடுஞ்சமர்க்கேகுவேனே.

(இ-ள்.) துர்க்கையானவள் இடைச்சிபோலரூப மாறிவந்து சொல்லியபான்மையை படம்பொருந்திய ஆதிசேஷனால் சுமக்கப்பட்டவிந்தபூமியிலொருவரையுங்கண்டதில்லைதைரியமுடைய வீரவ

ன்னியர்கள்வந்திருக்கிற வலிமையைநானறியவேணும் சாடியிலிருக்கும்கள்ளை யெடுத்துவாருங்கள் சாப்பிட்டுசண்டைக்குப் போகிறேனென்றான்வாதாவி எ-று. (ரு)

ஏகுவனென்றவார்த்தை யிசைந்தமந்திரியுமாங்கு
பாகுசேர்மொழியின்மின்னாள் பருமுலையணையுமன்னா
தோகையாமனலின்காளி துணைநமக்கிருக்கவுன்றன்
வாகுதோள்வலியுறாது வருந்தலையொழியுமென்றான்.

(இ-ள்.) வாதாவிராக்ஷதசூரன் சொன்னதைக் கேட்டிசைந்த மந்திரியானவன்சொல்லுகிறான் பாகுபோல இனிப்பான மொழி பொருந்திய மின்னலைப்போலும் இடையையும்பருத்த ஸ்தன்னியத்தையுமுடைய மாதர்களையணையும்ராசனே அக்கினிகாளியாகப் பட்டவள்நமக்கிருக்கிறபோது உம்முடையவெற்றியுற்றதோளிற்கு வலியொன்றும்அடையாது வருத்தத்தையொழித்துவிடுங்களென்றான் எ-று. (சு)

சூழ்ச்சியையிசைப்பக்கேட்டு சொல்லுவானவுணர்கோனும்
மாட்சியாயுரைத்தாயென்றே மமைச்சனேநமதுபக்கல்
காக்ஷிதந்திடவேகாளிக் கருளுவோம்வருவீரென்ன
தாக்ஷியில்லாதமுன்றிற் சமரியைவணங்கலுற்றான்.

(இ-ள்.) மந்திரிசொன்னதை வாதாவிகேட்டு நல்லதருணம் பார்த்துசொன்னாயென்று மந்திரியைப்பார்த்து ஆனால்நமக்குக்காக்ஷிகொடுக்கப்பட்ட அக்கினிமாகாளியினிடத்துக்குப்போய் நடந்தகாரியத்தைச்சொல்லுவோம் வாருமென்று மந்திரியும் வாதாவியுங் காளியின்கோவிலுக்குப்போய் மூன்றுகாலமும் பூசைகொள்ளும் அக்கினிகாளியை பணிந்தான்வாதாவி எ-று. (எ)

மந்திரிகௌரிமுக்கண் மயேஸ்வரிமதங்கிவீரி
சுந்தரியரியிலேறுந் தோகைமாமயிலேயிந்நாள்
எந்தனைக்காக்குந்தாயே யிப்பதிக்கிடறுயீசன்
மைந்தர்கள்வந்தாருந்தன் மனப்படிமாளச்செய்வாய்.

(இ-ள்.) அக்கினிக்காளியை வாதாவிபணிந்து மந்திரிகௌரி முக்கண்ணி மயேஸ்பரி மதங்கிவீரி சுந்தரியாளி வாகினியென்னைக் காக்கவேணுந்தாயே அந்தஇரத்தினபுரியையும் அழித்துப்போடும்படியாகப் பரமசிவனுடையபிள்ளைகள் வீரவன்னியர் வந்திருக்கிறார்கள் உன்னுடையமனதின்படிக்குக் கொல்லவேணுந்தாயேஎன்றான்வாதாவி எ-று. (அ)

கருணைவைத்தென்னையாளுங் காரணிகமலிநீலி
யருமையாயெனக்குகந்த வன்னையேயவனிதன்னை
ஒருகணையதனால்வீழ்த்தி யுவரிமேற்போடுவேனென்
றரன்மகன்கொதித்துவந்தா னடியனைக்காருமென்றான்.

(இ-ள்.) உன்னுடையகடாக்ஷத்தை பூரணமாகவைத்து என்னைக்காப்பாற்றவேணும் காரணிகமலிநீலி என்னைக்காப்பாற்றுவாய்தாயே என்னையும் என்பட்டணமாகிய இரத்தினபுரியையும் அவனுடையபாணம் ஒன்றினாலேஅறுத்துசமுத்திரத்திலேபோடுகிறேனென்று வீரவன்னியன்வந்திருக்கிறான்என்னைகாப்பாற்றி யவனைக் கொன்றுவிடுவாய்தாயே என்றான் எ-று. (எ)

என்றுரைமனத்திலோர்ந்தே யியம்புவளமலிமன்னா
குன்றுபோல்புயமுந்துன்ன கோதிலாதுன்னைக்காப்பேன்
மன்றலையணிவனுந்தன் மனத்துயரகற்றுமென்று
வென்றிவேல்விமலிசொல்ல வேந்தனும்பணிந்துரைப்பான்.

(இ-ள்.) இப்படிச்சொன்னவுடனே அக்கினிகாளி யானவள் மலையையொத்த தோளுடையராஜனே பயப்படாதேயென்று வேலாயுதமுடைய காளியானவள்சொல்ல வாதாவிபணிந்து சொல்லுவான் எ-று. (அ)

வீரனுக்குகந்ததுர்க்கை மேவினளவன்பின்னாக
தீரனுமெனதுபக்கல் தேவிநீவருவாயென்று
கூறியமாற்றமெல்லாங் கொற்றியுமறிந்துமன்னா
போரினிலுனதுபக்கம் புகழ்ந்துயான்வருவேனென்றாள.

(இ-ள்.) வீரவன்னியன்பிறகேதுர்க்கைபடைத்துணையாகவந்திருக்கிறாளல்லவா நீயும்யென்பின்னாலே படைத்துணையாக வருகவேணுமென்றான் காளியானவள் வாதாவிராசனே நீசண்டைசெய்து வெற்றியடைய நான்பக்கத்துணையாயிருப்பேன் என்றாள் அக்கினிகாளியானவள் எ-று. (கூ)

அம்மையாருரைத்தவாய்மை யவுணர்கோனுளம்பூரிக்க
சம்மதியாகிக்கோயில் சார்ந்தனளரனாரீன்ற
வெம்மையாம்வீரன்றானு மிகுத்திடவிண்ணோர்சூழ
செம்மலியரனைநோக்கி செபித்திருந்தானப்போதில்.

(இ-ள்.)இப்படியாகக்காளிசொல்லவாதாவிசந்தோஷப்பட்டு வந்து சேர்ந்தபிறகு வீரவன்னியன் பரமசிவனைநினைந்து பஞ்சாட்சரத்தை தியானித்திருந்தான் அந்தவேளையில் எ-று. (ய)

அக்கரையேகும்வீர ரார்ப்பரித்தொலிக்கும்பேரி
மிக்கவேயதிரலானும் மிகுந்தபேய்க்குரலின்சத்தம்
திக்கெலாஞ்சூறைகொண்டு செயன்பெறுமவுணன்காதில்
தக்கவேமனந்துடித்து தாட்டியாயுரைக்கலுற்றான்.

(இ-ள்.) கடல்தாண்டிவந்த வீரவன்னியருடைய சேனையின்சத்தமும் மேளவாத்தியஒலியும் பூதப்படைகளிரைச்சலும் அஷ்டதிக்குங்கொள்ளைகொண்ட வாதாவிராக்ஷதன்காதில் கேட்டமாத்திரத்தில்மனங்கொதித்து வெகுதாஷ்டியாகச்சொல்லுகிறான் எ-று.

மதியுளவமைச்சேவென்ன மாய்கையாம்பதியில்வேறா
றெதிரிலாவரசுமன்னு மெதிரிலாவீரன்பேரி
யதிரநற்காதிற்றைத்த தறிந்துரைசெப்புமென்ன
மதியிலாவவுணனுக்கே மந்திரியுரைக்கலுற்றான்.

(இ-ள்.) அறிவுடையமந்திரிமார்களே இதுவென்னமாயமாயிருக்கின்றது நம்முடையபட்டணத்திலே யாதொருசத்துருக்களும் வந்துஅடிவைக்காமற்படிக்குநாம்செங்கோல்செலுத்திவந்தோமே இன்றையதினத்தில் வீரவன்னியனுடைய பேரிகையடிக்கப் பட்டசத்தம் நம்முடையகாதிலேகேட்டது அதையறிந்து சொல்லுமென்று மந்திரிக்குச்சொல்ல மந்திரிசொல்வான் எ-று. (கஉ)

மடங்கலேறணையாவொன்றுவழுத்துவன்தவத்தோன்சொன்ன
திடங்களைப்பழுதாமென்று சினத்ததுநமதுமெய்யா
படர்ந்ததுபரமன்சேயின் படைகளிப்பதியைநாடி
யடர்ந்தனவொற்றராலே யறிவதுதிண்ணந்தானே.

(இ-ள்.) சிங்கமுகசிம்மாசனத்திருக்கும் வாதாவிராஜனேஒருகாரியஞ்சொல்லுகிறேன் முன்னுகநாரதரிஷிவந்து சொன்னதைபழுதென்றுகோபித்தீரே அதுமெய்யாகவிருக்கிறது பரமசிவன்பாலனுடைய சேனைசமுத்திரங்க ளிந்தப்பட்டணம்வந்து நிறைந்தார்கள் நம்முடையதூதனலே அறிந்துவருகிறதே நன்மையென்றான் மந்திரி எ-று. (கங)

அப்பொழுதவுணர்கோனு மனல்விழிபொரிபறக்க
செப்புவனமதுசேனை திறமதுதெளிந்திடாமல்
மைப்படிகண்டதொண்டன் மைந்தனன்மறதிவிண்டே
வைப்பனேயவதிகாலம் மயேசனுங்கடந்ததென்றான்.

(இ-ள்.)அப்போதுவாதாவிராக்ஷதனுடையவிரண்டுகண்ணும் நெருப்புபறக்கும்படியாய் சொல்லுகிறான் நம்முடையசேனைசமுத்

திரங்களின் பலாபலங்கள்தெரியாமல் பரமசிவனுடையபிள்ளைகள் நம்முடைய பட்டணத்தில் வந்திருக்கிறவர்களை யுத்தகளத்திற்கு போகும்படியாய் வைக்கப்போகிறேனே கெடுதிகாலம் அந்தபரமசிவனுக்குங் கூடவந்து சேர்ந்ததென்றான் வாதாவி எ-று. (கச)

நாரதனுரைத்தபோது நாரிறற்சேர்த்திடாமல்
சோரவேயிருந்தநம்மால் துகழுவந்துதித்ததந்தோ
பாரினைச்சூறைகொண்ட பலமிருந்தென்னபெற்றோம்
பேருளவரசரில்லா புவியெனபேசலொக்கும்.

(இ-ள்.) நாரதரிஷிவந்து தூதுசொன்ன காலத்தில் உடனே போயிந்தமனிதனான வீரவன்னியர்களுடைய சேனையையும் அவனையுமடித்திடாமல் அலக்ஷியாயிருந்தபடியினாலே நமக்குத்தானே குற்றம்வந்துநேர்ந்தது இந்தபூமியெங்கும் கொள்ளைகொண்ட பராக்கிரமம் இருந்தும் என்னபிரயோசனமாயிற்று ராஜனாயிருந்தும் பேர்விளங்கும்படி யான்பேரெடுக்காமல்போனேன் உலகம்பழிக்குமென்றான் வாதாவி எ-று. (கரு)

மானிடராண்டுநூறு வலுத்ததேகங்களெல்லாம்
வானுறையாழிபுக்கு மந்திரிமுதலோர்பண்டு
கானகக்குரங்கால்மாய்க்க கடலிணையணையாய்க்கட்டி
சானகிச்சிறையைமீட்ட சரிதைநூனுணர்ந்தேனம்மா.

(இ-ள்.) மானிடருக்குவயதுநூறும் வலிமையான தேகமுமாயிராது அப்படியிருக்க ஆகாசமட்டும் வளர்ந்திருக்கும் சமுத்திரங்கடந்து வருகிறதற்கு இராமசாமி மந்திரிமுதலானவர்களும்காட்டில் வாழப்பட்ட குரங்குகூட்டங்களும் அணைக்கட்டி அதன்மேல் நடந்துபோயிலங்கையை யழித்து சீதாதேவியை மீட்டுவந்தசரித்திரம் புராணங்களில் அறிந்திருப்பேனென்றான் வாதாவி எ-று. ()

நரனெனநவிற்றலாகா நாரிபாகனுமளித்த
வரமிகுத்தவரைதேவ மக்களாவஞ்சவானோர்
ரரசனுமகளையீந்த தாகையாலமரர்க்கெல்லாம்
சூரனுமிவனுமெங்குந் துதிவிளங்கிடுவதென்றான்.

(இ-ள்.) நரமனிதனென்று சொல்லலாகாது ஏனென்றால்பரமசிவனுடைய பாலனானவீரவன்னியர்கள்மிகுத்ததேவாமிசைபெற்றபடியினாலே தேவாதிகளுக்கெல்லாம் ராஜாவாகிய தேவேந்திரன் தன்பெண்ணைக் கலியாணம்பண்ணிக்கொடுத்தான் ஆகையினாலே வீரவன்னியனை தேவாதிகளுக்குமேலாகிய தேவேந்திர னென்று

சொல்ல சந்தேகமில்லை யிந்தப்படியாக வெங்குமிந்தச்சொல்விளங்கியிருக்கிறதென்றான் வாதாவி எ-று. (கஎ)

அலைகடலணையுமின்றி யாண்மையாற்பரவைதாண்டும்
வல்வினைகாண்போமென்று வானிடியென்னக்கூவி
நலமுளவேந்தனாலே நரர்புகழறிவமென்றே
பலமறியொருத்தருக்கு பண்மையாயுரைக்கலுற்றான்.

(இ-ள்.) அலைபொருந்திய சமுத்திரத்தைஅணைகட்டாமல்தங்களுடைய பராக்கிரமத்தினாலே சமுத்திரங்கடந்துவந்த வலிமையுடையபேர்களைக்கண்டு வரவேணுமென்று ஆகாசத்திடிபோல கூக்குரலிட்டுக்கூவி ஒருதூதனை அழைத்து வீரவன்னியர்களிடத்தில் போய் அவர்களுடைய பெருமையையறிந்துவாருமென்றுசொல்லி அனுப்பினான்வாதாவி எ-று. (கஅ)

திணிபுயமிகுத்தவொற்றா சிவனளிசேயின்பக்கல்
கணிதமாம்படையின்றீரங் கண்டிங்கண்ணுரையாயென்ன
விணையிலாவவுணன்பாத மிறைஞ்சியேவிடைகொண்டேகி
தணியிலாவன்னியபூபன் சாரலிற்சார்ந்தான்மாதோ

(இ-ள்.) பலம்பொருந்தியதூதனொருவன் பரமசிவனளித்தனுப்பியபிள்ளை வீரவன்னியராஜனிடம்போய் கணக்கடங்காத சேனைசமுத்திரத்தின் பராக்கிரமத்தைக்கண்டு இவ்விடத்தில்வந்துசொல்வேனென்று வாதாவிபாதத்தில்பணிந்து அதிவிரைவிற்போய்தாழ்வில்லாத வீரவன்னியராஜனிருக்குந் தோப்பில்வந்து சேர்ந்தான் தூதன் எ-று. (கசு)

கதிப்புறுமிலக்கம்வீரர் கடுமையும்பேயினங்கள்
உதித்திடும்விழியிற்றீயு முப்பரினுனக்களிப்பும்
மதித்திடாமுடிபுனைந்த வன்னியபூபன்வெற்புங்
கொதித்தசெஞ்சரமும்கண்டு குற்றம்வந்தொத்ததென்றான்.

(இ-ள்.) பெருமையையுடைய விலக்ஷம்வீரர்களுடையகடுமையும் பூதப்படைகளுடைய கோபங்களையும் கண்ணில்அக்கினிபொரிபறக்கிறதும் தேவர்களின் மனக்களிப்பையும் மதிக்கப்படாத கிரீடமணிந்த வீரவன்னியர் வெகுகோபமுடையவனாய் கையில்விற்பிடித்ததையுங்கண்டு குற்றம்வந்துநேர்ந்ததென்றான் தூதன்எ-று.

தூதனையரசன்கண்டு துரிதமாயழைத்துநீயார்
தீதுசெயவுணவந்த சேதியேதுரைசெய்யென்ன

பாதமும்பணிந்துமன்ன பலத்தவாதாவிசூரன்
தூதனென்பெயருமுண்டன் தூயனேயெனவுரைத்தான்.

(இ-ள்.) தூதாகவந்த ராக்ஷதனை வீரவன்னியராஜன்கண்டுசீக்கிரமாக அருகேயழைத்து நீயார்தீங்குசெய்யும்ராக்ஷதன் இவ்விடம்வந்தசேதியென்ன சொல்லென்ன தூதனாகியமுண்டன் வீரவன்னியராசனைப்பணிந்து பாதத்தில்போற்றி ராஜனேபலம்பொருந்திய வாதாவிசூரன் அனுப்பியதூதன் என்பேர்முண்டன் களங்கமில்லாதராஜனே யென்றுசொன்னான் தூதன் எ-று. (உக)

விந்தையாந்தூதன்சொன்ன விதமெனுமவுணர்கோனுஞ்
சிந்தையிற்றுயரமாகித் தேவர்கள்முரசொலிப்ப
நிந்தையையறிவதென்றே நிருபனுமளிக்கபின்னும்
உந்தனற்பாதங்கண்டே னும்பர்களரசேயென்றான்.

(இ-ள்.) விகாதமாகவென்னிடத்தில் தூதாகவந்தவிதஞ் சொல்லடாவென்றுவீரவன்னியராசன்கேட்கத்தூதன்சொல்வான்மகாராசனே ராக்ஷதருக்கெல்லாம்ராசாவாகியவாதாவி யும்முடையபேரிகைசத்தங் காதில்கேட்டவுடனே மனதிலேவெகுதுயரமடைந்து என்னையழைத்து உம்முடையசேதியை யறிந்துவரும்படி உத்திரவு கொடுத்தனுப்பினான் நானும்இவ்விடத்திலேவந்து உம்முடையபாதத்தைக்கண்டேன் தேவாதிகளுக்கெல்லாந் தேவனாயிருக்கும்ராசனேயென்றான் தூதனாகியமுண்டன் எ-று. (உஉ)

ஒற்றனுமுரைப்பவீர னுரைப்பன்வாதாவிசூரன்
கற்றைவார்சடையோனான கண்ணுதலெந்தன்தாதை
புத்தியால்புகழநீந்தி பூதலமனைத்துஞ்சூறை
பெற்றனனவனைமாய்க்கப்பெருமையாயுற்றேமென்றான்

(இ-ள்.) தூதனானமுண்டன் சொல்லக்கேட்ட வீரவன்னியராஜன்சொல்லுவார் பரமசிவன்எனதுடையதகப்பன்அவராலேவரம்பெற்று வாதாவிராக்ஷதசூரன் பெருமையடைந்து இந்தபூமியிலெங்கும்போய் கொள்ளையிட்டு தேவர்களுக்கிடுக்கண்பண்ணுகிற வாதாவிராக்ஷதனை கொல்லும்படியாய் பெருமையாகஇவ்விடத்துக்கு வந்தோமென்றார் வீரவன்னியன் எ-று. (உங)

வானவர்க்கிடரளித்தான் வளமெலாஞ்சூறைகொண்டான்.
தேனெனுமரம்பைமாதைச் சேடியரெனமடித்தான்
தானவர்புகழுமாலை தனபதிபணிசெல்யென்று
னீனனுமவன்றனாண்மை யிதயத்திலிருத்தினேனால்.

(இ-ள்.) தேவாதிகளுக்கு துன்பமாக விடுக்கண்செய்து வைபோகங்களையெல்லாம் கொள்ளைகொண்டான்தேன்போன்றஅரம்பாஸ்திரீகள்முதலாகிய தேவஸ்திரீகளை தனக்கு ஊழியக்காரிகளென்றுவைத்தான் தானவரானதேவர்கள்தொழப்பட்டமகாவிஷ்ணுவைத்தன்னுடைய பட்டணத்தில் பணிவிடைவேலைசெய்யென்றான் ஈனனாகியவாதாவிராக்ஷதன்செய்யப்பட்ட ஆண்மைகளையெல்லாம் பொறுத்தேன் என்மனதிலென்றான் வீரவன்னியன் எ-று. (உச)

நாரதமுனியால்தூது நவின்றவனவிலனுப்ப
பாரினிற்சூறைசெய்ய பசிவலவரசர்நீதி
தீரமாயுனதுபாரை புரப்பதுசெங்கோல்வானோர்
பேரினிற்பகைசெய்யாமல் பெருமையாயிருப்பவென்றே.

(இ-ள்.) நாரதரிஷியை தூதுவிட்டு அவனிடத்தில் சொல்லும்படியாகச்சொன்னது பூமிகளில்கொள்ளையிடாமலுன்னுடையபட்டணத்தில்தானேயிருந்து செங்கோல்செலுத்தியிருந்தால் ராஜநீதிக்குக்குறைவுவராது பழயபடிதேவர்களுக்குபகைசெய்யும்படியிருந்தால் ராசநீதிக்கு முறையல்லவென்று பெருமையுடனேஇருப்பாயென்று சொல்ல எ-று. (உரு)

உரைத்தனன்தூதாகேளா யுறம்பெறுசமர்செய்யென்ற
வரத்திறமறியவேண்டி வந்தனன்மாயன்காணு
கருநிறக்கண்டத்தண்ணல் கழலிணை பரவிவாளி
திருத்தமாயளிக்கப்பெற்ற சிலைமன்னன்யானேயென்றான்.

(இ-ள்.) நாரதரிடத்திலிவ்விதஞ்சொல்லியனுப்பினவார்த்தையைக்கேளாமல் பராக்கிரமத்துடன் சண்டைசெய்யச்சொல்லியனுப்பினான் சும்மாயிருப்பது நலமல்லவென்று மகாவிஷ்ணுவினாலுமறியப்படாத பரமசிவனளித்த பாணங்களைப்பெற்ற சூரதீரனானவீரவன்னியன் எ-று. (உசு)

அந்தரிவிமலியெங்க டன்னையீன்றாளைச்சூழ
சிந்துவுஞ்சுவரச்செய்து செயமுரசறைந்துவந்தே
கந்தனின்முன்னோன்சூக்ஷி கருத்தினிலுணர்ந்துதேவி
வந்தவன்பாலுரைத்த வகைமனத்துணரிலானே.

(இ-ள்.) அந்தரியாகிய துர்க்காபரமேஸ்வரியினுடைய சேனைபூதப்படைகள்சூழும்படியாக சமுத்திரம்வற்றிப்போகும்படி மந்திரஞ்செய்து செயபேரிகையடித்துக்கொண்டு இவ்விடம்வந்திருந்து சுப்பிரமணியருக்குமூத்தவரான விநாயகரிடத்தில் வரங்களு

பெற்று என்தாயான துர்க்காபரமேஸ்வரி இடைச்சிபோல வந்து என்னுடையபெருமையைச் சொல்லியும் மனதிலேதெளியாமலிருக்கிறனென்றார் வீரவன்னியன் எ-று. (உஎ)

இரத்தினகரம்புரக்கு மிறையவுணதிபக்கல்
திறமுறையுரைப்பவானிற் செழுத்திடும்புதுமையான
தருவினையளித்துபாதந் தனைத்தொழுதிகிலவிண்டா
லாரமுளசரத்தினலே வுனைத்தொடேனென்றுன்வீரன்

(இ-ள்.) இரத்தினபுரியையாளப்பட்ட வாதாவியிடத்தில்போய்சொல் அதென்னவென்றால் தேவேந்திரலோகத்திலிருக்கும் பஞ்சதருவையுந் தேவேந்திரராஜனிடத்திற்கொடுத்துபணிந்தால்பகை செய்யாமல் விட்டுவிடுகிறேன் அல்லதுதைரியமுள்ள பாணத்தினலேஉன்னை கொல்லுகிறதில்லையென்று சொல்லென்றான் வீரவன்னியன் எ-று. (உஅ)

சாற்றியவுரையுணர்ந்தே சம்மதியானகில்
சீற்றியாவருகசெய்யுந் தீமையையடைந்தாலாக்கை
கூற்றுவனுலகிலேகக் கொடுப்படைக்குழாந்துதிப்ப
பாற்றிவனன்பானுற்றாற் பலனளித்திடுவனென்றான்.

(இ-ள்.) நீசொன்னவுடன்மனஞ்சலியாமல் சம்மதியானல்சிறப்புடன் நம்மிடமழைத்துவா இல்லாமல்குற்றமேசினைந்தால் அவனுடைய தேகத்தைவெட்டியுஞ் சேனையுமடித்து எமலோகஞ்சேரும்படி செய்வோமென்றுசொல்லு அதுகேழ்க்காமல் சண்டைக்கு வந்தால் யவனுக்குபலன் கொடுக்கிறேனென்றார் வீரவன்னியன் ()

மேவலரடக்கும்செய்ய வேந்தனுமுரைப்பக்கேட்டு
மேவலன்வேகமாக வியக்கர்கோன்சமுகம்நாடி
காவலர்கைலைதாளி களித்தநற்புதல்வர்வாய்மை
யாவலாற்கேளுமென்றே யறைந்தவுணதியந்த

(இ-ள்.) சத்துருவை செயங்கொள்ளும் வீரவன்னியராசன் சொன்னகதைகேட்டு தூதனுமுண்டன் வாதாவியின்சமுகத்தில் வாயுவேகமாய்போய் ராசாதிராசனே கயிலாசகிரியில்வாழும்பரமசிவனுடையபிள்ளை வீரவன்னியன் வாசகத்தைகேளுமென்றான்தூதமுண்டன் எ-று. (௩௰)

கேட்டனணவுணனுள்ளங் கெடுமதிகோபமாகித்
தாட்டியாயுரைபணித்தான் தனையனுஞ்சிவன்றன்பாலன்

வாட்டவேவந்தானந்த மானிடன்முடியைக்கொய்து
தாட்டியாய்வருவேனின்று தளம்வரச்செய்வாயென்றான்.

(இ-ள்.) தூதுபோய்வந்தமுண்டன்சொல்லைக்கேட்டவாதாவி மனதுகொதித்து மகாகோபங்கொண்டுசொல்லுவான் பரமசிவன் பிள்ளை என்னுடையதேகத்தைவாட்டவோ யிவ்விடம்வந்தான் அவன்தலையை வெட்டிக்கொண்டுவருவேன் நம்முடையசேனையையுத் தத்துக்கு இன்றேவரச்செய்யென்றான் வாதாவி எ-று. (௩௧)

தம்பிவாரதனேமகோனென தழைத்தருண்டவனேயுள்ளம்
நம்பியமகோதராயென் நற்றவமகனேகெம்பா
சம்புமாலிகனேகும்பா தழைகஜமுகனேயுங்கள்
கம்பிதத்தானேதுன்ன கணத்தினில்வருகவென்றான்.

(இ-ள்.) தம்பிவாரதனே மகோனே மகோதரனே குண்டலனே நாலுதம்பிமாருந் தன்பிள்ளைகளாகிய கம்பாசூரா·சம்புமாலி கும்பனே கசமுகாஇவர்களுங்கூடவருகச்செய்யென்றான்வாதாவி.

அமைச்சர்காணமதுதானை யடங்கலுமமரின்கோலம்
அமைத்தெனும்படுவைபேரி யதிர்ந்திடவென்றுரைப்ப
விமைப்பொழிதினித்தளங்க ளெங்கிலும்பரவக்கண்டு
தமக்கெதிரில்லாசூரன் தைரியமுரைக்கலுற்றான்.

(இ-ள்.) மந்திரிமார்களே சேனசமுத்திரமொன்றுதப்பாமல் அனுப்பிவைத்து ரணபேரிகை யடிக்கச்சொல்லி யிருக்கும்போது தளங்கள்வந்துநிறைந்ததை வாதாவிகண்டு மகாதைரியமாய்சொல்லுகிறான் எ-று. (௩௩)

தேசிகன்சுங்கன்தந்த திரள்படைகுழாங்கள்தீரம்
யீசனன்மிகவுங்காணு தியம்பினனவனேசேத்து
நேசமிக்குரைவீரென்றே நிருபமுமளிக்கத்தம்பி
பாசவாரதனுங்கண்டு பரிந்துரைபகரலுற்றான்.

(இ-ள்.) குருவாகிய சுக்கிராச்சாரியாரளித்துக்கொடுத்த ராக்ஷதக்கூட்டங்களுடைய பராக்கிரமத்தை பரமசிவன்பிள்ளைகாணுமல் சொல்லியனுப்பினான் அவனைகொல்லும்படியான ஆளையிவ்விடத்தில் சொல்லுவீரென்றுகேட்டான் தம்பிகளில்வாரதன்கேட்டு சொல்லுகிறான் எ-று. (௩௪)

வரமிகுமன்னவென்று வழுத்துவன்மகிழ்ந்துகேளும்
நரறின்மேற்படையெடுப்ப நானிலத்தோர்நகைப்பார்

உரமிகுமெனதுவாளி யொன்றினல்வெல்வன்சேனை
திரள்வரவேண்டாமன்று தீயனுக்குரைப்பதானன்.

(இ-ள்.) வரமிகுதியாகப்பெற்ற ராசாவாகிய அண்ணவேஒரு காரியஞ்சொல்லுகிறேன் மகிழ்ந்துகேட்பாய் அந்தநரன்எவ்வளவு அவனைபெரிதாயெண்ணி படைகூட்டுகிறதுஅழகல்ல உலகத்தார் கேட்டால் நகைப்பார்கள் என்னுடையபாணம் ஒன்றினலே அவனைச்செயித்துவருகிறேனென்று தீயனகியவாதாவிக்குசொன்னன் வாரதன் எ-று. (ருகு)

வரையினில்குலவுமீசன் மக்களோலக்கம்வீரர்
திரமதாய்செயிப்போமென்ன சிந்தையிற்றெளிந்துரைத்தான்
ஒருகணையதனல்வெல்வன் யுதவியோர்வெள்ளம்வீரர்
தருவையென்றுரைத்தசித்தி தம்பியாலிசைப்பன்மாதோ.

(இ-ள்.) கயிலாசத்தில்வாழும் பரமசிவன்பிள்ளை இலக்ஷம்வீரர்பராக்கிரமாய் அழைத்துவந்து நம்மைசெயிக்கலாமென்று மனந்தெளிந்திவ்விடம்வந்தான் அவனைஒருபாணத்தால் வென்றுவருகிறேன் ஒருவெள்ளம்ராக்ஷதர் வேண்டுமென்றுசொல்ல தம்பியைப் பார்த்து வாதாவிசொல்லுகிறான் எ-று. (ருசு)

மசகமேபடையெடுத்தால் மனுநெறியியற்கையல்ல
நிசமுளமொழியுரைத்த நிமையினிலேகுமென்று
உசிதமாபணிகணல்கி யொருவெள்ளம்படையுந்தேரும்
பிசகிடாதளிக்கபெற்றான் பேய்மதியவுணனன்றே.

(இ-ள்.) கொசுகின்மேற் படையெடுப்பது ராசநீதிக்குமுறையல்ல மெய்யாகியவார்த்தைசொன்னய்தம்பி ஒருநிமைப்பொழுதில்போய் வெற்றிபெற்று வருவாயென்று உசிதமானஆபரணதியுங்கொடுத்து வெள்ளம்வீரருந் தேருந்தப்பாமல் கொடுக்கப்பெற்று சண்டைக்குவந்தான் பேய்பூதத்தினுடையராக்ஷதவாரதன் எ-று.

பொருந்துமல்லருக்கேற்ற பூமியெக்காளந்துன்ன
விரிந்ததேர்கொடிகளால வட்டமும்விண்ணிலார்ப்ப
வெரிந்தசெவ்விழியி யக்கரொப்புறமார்ப்பரிக்க
திரந்தரும்பூதம்பூண்ட தேரின்மேலேறிச்சென்றான்

(இ-ள்.) சண்டைக்கேற்றதான பேரிகைபூரிகை எக்காளமுதலான வாத்தியமுழங்க விரிவாகதேரில்கட்டிய கொடிகளும் ஆலவட்டங்களும் ஆகாயத்தில்பறக்க அக்கினிப்பொரியுங்கண்ணுடையராக்ஷதர்கள் எங்கும்பரவிவர தைரியமுள்ள பூதங்களைக்கட்டிய தேரின்மேலேறிக்கொண்டு வாரதனுகிய ராக்ஷதனனவன் யுத்தம் செய்யவருகிறான் எ-று. (௬அ)

## மந்திராலோசனைச் சருக்கம்.

முற்றிற்று.

---

ஆகபாயிரம்உட்பட சருக்கம்-௧அ-இ

திருவிருத்தச்செய்யுள் ௬௬௬.

உ

கடவுள் துணை.

## பதினெட்டாவது.

# வாரதன் யுத்தம்.

ஆதியாயறம்வளர்த்த வம்பிகைள்தாளேத்தி
சோதிமாமுடிபுனைந்த சுகவீரவன்னியன்றன்
கோதிலாசரங்களேவி கொடும்பகையவுணருள்ளந்
தீதுசெய்யரசருக்கு செப்புவன்சனகன்மாதோ.

(இ-ள்.) முப்பத்திரண்டுதருமமும் வளர்க்கப்பட்ட பரமேஸ்வரியின்பாதத்தில் வீரவன்னியன்தொழுதுபிரகாசமானகிரீடமணிந்துஅக்கினியாஸ்திரத்தால் ராக்ஷதரைச்சம்மாரஞ்செய்யராக்ஷதர் துடித்துமடிந்த யுத்தத்தின்கதையைசனகரிஷிசொல்லுகிறார்எ-று.

நாரதனவுணன்வார நலத்தினைமனத்திலோர்ந்து
வீரவன்னியன்பாலேகி வேந்தனேயவுணன்றம்பி
மாருதன்மரின்கோல மண்டியிங்குரைப்பனுற்றான்
தீரனேயுனதுகோலஞ் செய்யெனவுரைத்தானன்றே.

(இ-ள்.) வாரதனென்னும் ராக்ஷதன் யுத்தத்திற்குவருவதைக் கண்டு வீரவன்னியனிடத்துக்கு நாரதரிஷியானவர்வந்து வாதாவி ராக்ஷதன் தம்பிவாரதன் யுத்தகோலங்கொண்டு வருகிறான் மகா தைரியமுடையவன் வீரனேஉமது சேனையையுத்தகோலஞ் செய்ய ச்சொல்லுமென்று சொன்னார் எ-று. (உ

பஞ்சவன்னியரியக்கன் படையுடன்வருகைக்கண்டே
செஞ்சடாடவியையேத்தி சிவதிருநீருசாத்தி
நஞ்சணிமிடற்றோன்றனை நாவினாற்பரவியேற்றி
வெஞ்சயர்கொலங்கொண்டா னிலக்கவீரருமந்நாளில்

(இ-ள்.) அஞ்சுபேர்வீரவன்னியர்களும் வாரதன்யுத்தத்துக்கு வரக்கண்டு சிவந்தசடையுடைய பரமசிவத்தைத் தியானித்து அழகியவிபூதியணிந்து போர்க்கோலங்கொண்டார்கள் இலக்ஷம்வீரர்களுடனே அந்தவேளையில் எ-று. (ந)

கருடயூகமேமுன்னிற் கடலெனமுரசொலிப்ப
விருதுபம்பைகளுமார்ப்ப விண்ணவர்செயங்கள்கூற

தருமதேவதைகள்வாழ்த்த தயங்கிடாபடைகெர்ச்சிக்க
பெரியதோறிரதமேறி மேருவிற்கரம்பிடித்தான்

(இ-ள்.) கெருடயூகம்போல வீரவன்னியராசன்நிற்கவாத்திய ங்கடல்போல்முழங்க தேவர்கள்செயங்கூற தருமதேவதை வாழ்த் தபயமில்லாமல் சேனைசமுத்ல்ரங்கெர்ச்சிக்க பெருமையானரதமே றிமகமேருக்குச்சமானமானவில்லுங்கையிலெடுத்துக்கொண்டான் வன்னியன் எ-று. (ச)

அப்பொழுதவுணர்சேனை யதிர்ச்சியாலரன்செய்வீரர்
கப்பியவொலியாற்சத்தங் கடலுளநீர்கள்வற்ற
செப்பிடவிண்ணுமண்ணுஞ் சிறந்தநாற்றிசைநடுங்க
மைப்பிடிகிரியாமென்றே வாரதன்வந்தானன்றே.

(இ-ள்.) அப்போது வாரதராக்ஷனுடையசேனையின் அதிர்ச் சியினாலே பரமசிவன்பிள்ளை வீரவன்னியன்சேனையும் ஆர்ப்பரித்த சத்தத்தில் சமுத்திரசலம்வற்றிப்போகவும் எட்டுதிக்குகளும்நடுங் கின கரியனிறமுடைய வாரதன் மலைபோலவந்து நின்றான் எ-று.

உருத்திரவன்னியன்கண்டே யுற்றநாரதனைநோக்கி
கருக்கரியென்னவந்த வயவனாரென்றுகேட்க
திருத்தமாமரசேசூரன் றிணிபுயச்சோதர்நான்கில்
ஒருத்தன்வாரதன்பேருள்ளோ னுக்கிரமுரைக்கலாகா.

(இ-ள்.) வீரவன்னியமகாராசன்கண்டு நாரதமகா ரிஷியைப் பார்த்து கரியமலைபோலவந்த ராக்ஷதனிவன் யாரென்றுகேட்க தி ருத்தமாகிய மார்பையுடைய வீரவன்னியராசனே வாதாவியினு டைய தம்பிகளால்வரில்ஒருவனிவன் வாரதனென்று பேருடைய வன் இவனுடையபராக்கிரமத்தை சொல்லமுடியாதென்றார் நார தர் எ-று. (எ)

விண்ணொருகரத்தால்சாய்ப்பான் மேருவைபந்தாமென்ன
மண்ணினிற்கலமாலெற்றி வருணனைப்பிடித்துருக்கி
உண்ணுவன்மீனினத்தை யுலகினைச்சூறைகொள்வன்
அண்ணலின்மகவேயுந்த னருங்கணை துணிக்குமென்றே

(இ-ள்.) ஆகாயத்தைஒருகையினால் பிடித்துச்சாய்ப்பான் ம காமேருவை சிறுகல்லுபோல காலாலேயெற்றிபோடுவான்வருண னைப்பிடித்து உண்டுபோடுவான் சமுத்திரத்தின்மீன்களைத் தின்று விடுவான் சொர்க்கமத்திய பாதாளமிந்த மூன்றுலோகத்தையுங் கொள்ளையிடுவான்பரமசிவன்மகனே உன்னுடையகைப்பாணத்தி னாலே மடிவானென்றார் நாரதர் எ-று. (எ

நன்றெனசிரசமைத்து நாரியைவளைக்குமோசை
நின்றிடுநிருதர்கேட்டு நேமியமெய்நடுங்க
குன்றினைப்பிடுங்கிவீரன் குழாங்களைச்சாடயூகங்
கண்டியேயுடையவந்த கயவன்மேற்கடிந்தான்வீரன்

(இ-ள்.) நல்லதென்று தலையையசைத்து தன்கைவில்லைவளைத்து நாணியேற்றியசத்தம் ராக்ஷதனாகியவாரதன் கேட்டுமெய்நடுக்கத்தோடு மலைகளைப்பிடுங்கிவீரனுடையசேனைகளை யடிக்கும்போது கருடயூகமுடைந்து ராக்ஷதன்வாரதன்பேரில் சண்டைசெய்தான் வீரவன்னியன் எ-று. (அ)

## வேறு.

பற்கணங்கடித் துள்ளம்பதறிட
கொக்கரித்துக் குதித்துத்தண்டாயுதம்
தக்கசூலந் தனுசக்கிராயுதம்
மிக்கவெய்தனர் விண்ணவர்வீரரே.

(இ-ள்.) தங்களுடையபல்லை நெறநெறெனக்கடித்து மனம்பதைத்திடக்கொக்கரித்து ஆகாசபரியந்தம் யெழும்பிக்குதித்துகையிலிருக்குந் தண்டாயுதஞ் சூலாயுதம் வில் அம்பு சக்கிராயுதம் இவைகளெடுத்து மிகுதியாகஎறிந்தார்கள் தேவப்படையான வீரவன்னியர்கள் எ-று. (கூ)

அரியுடன்கரியாக் கிரமங்கொண்டதென்
னிருதரானவர் நெருங்கியமர்செய
விரியுமண்டர் விலங்கினர்விண்ணின்மேல்
குருதியோடி குணதிசையொத்ததே.

(இ-ள்.) சிம்மத்தின்பேரில் யானைஎதிர்த்ததுபோல ராக்ஷதர்கள் நெருங்கிச் சண்டைசெய்யும்போது விரிவாகிய ஆகாயத்தில் தேவர்கள்வேடிக்கைப் பார்த்திருக்கின்றார்கள் இரத்தமானதுவெள்ளம்போலோடி கிழக்குசமுத்திரம் போய்ச்சேர்ந்தது எ-று. (ய)

வீரவீரரு மேவலன்
சாரிசாரியாற் றுக்கினரத்திரம்
நீறுநீறென நேமிபடிந்திட
மேருவாக விளங்கியிருந்ததே.

(இ-ள்.) வீரவன்னியனுடையசேனையும் வாரதராக்ஷதனுடையசேனையும் எய்யப்பட்டபாணங்கள் பொடியாகி பூமியில்படிந்து மகமேருபோலக் கும்பலாகக் குவிந்தது எ-று. (கக)

தோர்வையின்றி துகள்செய்யுஞ்சூரரின்
றிரங்கண்டு சினத்துடன்கைச்சிலை
நாறியேற்றி நலத்தகணையினல்
வீரன்பாலரே வலர்மேலெய்தார்.

(இ-ள்.) தோர்வையில்லாமல் ராக்ஷதசேனைகள்நிற்கின்ற தைரியத்தைக்கண்டு கோபமாகியவில்லைவளைத்து நாணேற்றி நல்லகூர்மையுடையபாணத்தை வீரவன்னியன்பிள்ளைகள் நால்வரும் பகையாளிகளின்மேல் பிரயோகஞ்செய்தார்கள் எ-று. (கஉ)

அக்கினிக்கணை யாலவுணன்படை
நெக்குவிட்டு நிலத்திற்படியவும்
கொக்குவின்றிரளைச் சாடும்ராசாளிபோல்
தக்கவன்னியர் தாட்டியாய்ச்சாடினர்.

(இ-ள்.) அக்கினியாஸ்திரத்தால் ராக்ஷதர்மடிய நிலைதளர்ந்து பூமியிற்படிந்தது எப்படியிருந்ததென்றல் கொக்குகூட்டத்தில்ராசாளிவிழுந்தால் எப்படியோ அவ்விதமாக வீரவன்னியன் பிள்ளைகள் நால்வருஞ்சண்டைசெய்தார்கள் எ-று. (கங)

தொட்டிடுங்கணை யுள்ளந்தொலைக்கவும்
பட்டமாமரம் மென்னப்படிந்தனர்
திட்டவாகுதி சேருங்குருதிகண்
டிட்டவாரத னுள்ளந்துடித்தனன்.

(இ-ள்.) விட்டகணைகள் வாரதன்பேரில்பட்டு உருகிப்பட்டுபோகப்பட்ட மாமரம்போலகீழேவிழுந்தான் இரத்தஞ் சமுத்திரஞ்சேரத் துஷ்டனைவாரதன்கண்டு மனந்துடித்தான் எ-று. (கச)

சூதனைத்தேர் துரிதாய்நடத்தென
கோதரக்கன் கொதித்திடுவாளியை
நாதவீரன் மகவின்மேனட்டிட
தாதவிழ்மல ரெண்ணத்தணிந்ததே.

(இ-ள்.) சாரதியையெச்சரித்து தேரைநடத்தச்சொல்லிகுற்றமுள்ளராக்ஷதன் வில்லைவளைத்து கொடுமையானபாணங்களை வீரவன்னியன்பேரில்விட தாமரைமலர்போலப் பூமியிற்படிந்தது உக்கிரந்தணிந்தது எ-று.

கிருட்டிணன்சிலை கொர்ச்சித்தவுணனை
யரிட்டஞ்செய்ய வனற்பொரிமண்டிட

சிருட்டியாற்கங்க னீந்ததோர்செஞ்சரம்
அரிட்டஞ்செய்யா தவனிபடிந்ததே

(இ-ள்.) கிருட்டிணவன்னியன் அக்கினியாஸ்திரம் பிரயோகஞ் செய்யவந்த அக்கினியாஸ்திரம் பொரிகளைக்கக்கிக்கொண்டுபோய் வாரதனைவளைத்துகொள்ள சுக்கிராசாரியார்கொடுத்தபாணங்களை விட்டாலுங் கொல்லாமல்பூமியில்படிந்தது எ-று. (கசு)

மாயனைக விளங்குவன்வாளியால்
பேயன்வாரதன் தேரும்பிளந்திட
வாயிரம்ரத மேறுமவுணனை
காயுநாகக் கணையாற்கடிந்தனன்.

(இ-ள்.) மகாவிஷ்ணுவைப் போலவிளங்கும் கிருஷ்ணவன்னியன் தன்னுடையபாணத்தினாலே பேயையொத்த வாரதன்தேரழிந்துபோக மறுபடியும் ஆயிரந்தேரேறிவர அவைகளையும் பொடிப் பொடியாகும்படிக் குரூரமான பாணங்களாலழித்தார் எ-று. ()

தேருமின்றி சிலைகணையின்றியே
வீரவாளொன்று வீசியெறிந்தனன்
தீரவாளை சிதைத்தொருசெஞ்சரம்
பாரடர்ந்து பகைத்திடவேகினன்.

(இ-ள்.) தேரழிந்தும் வில்லழிந்தும்போனவுடனே கூர்மை பொருந்திய வாளாயுதமொன்று வீசிஎறிந்தான் அதுகண்டுகிருட்டிணவன்னியன் அக்கினியாஸ்திரமெடுத்துமந்திரஉபதேசஞ்செய்து பூமி ஆகாயமட்டும் அக்கினி படரும்படியாகவும் விட்டான் கிருட்டிணவன்னியன் எ-று. (கஅ)

பாரும்விண்ணும் படிந்தழல்மண்டிட
வாரதன்சிர மண்ணிலுருண்டிட
கூரழற்கணை கொற்றவபாலினிற்
சீருடன்செயங் கொண்டுசெருந்ததே.

(இ-ள்.) பூமிஆகாயமட்டும் ஒரேநிரந்தரமாக அக்கினிபடர்ந்துவந்து வாரதன்தலையை யறுத்துத்தள்ள அந்தத்தலைகீழே விழுந்துருள அக்கினியாஸ்திரம் பழையபடி கிருட்டிணவன்னியனிடத்தில் செயத்துடன் போயிருந்தது. (கக)

கூற்றனஞ்சக் கொடுமைசெய்வாரதன்
றாற்றன்சேனை யுயிரினைத்தூதர்கள்

சீற்றிகொன்றனர் தேவர்மகிழ்ந்தனர்
ஏற்றுவாகன னின்பம்பொழிந்தனன்.

(இ-ள்.) எமதருமராஜனையும் நடுங்கச்செய்யும் வாரதராக்ஷத னும் அவன்சேனைமடியமடிய அந்தஉயிர்கள் எமதூதர்கள்பிடித்து வந்து கீர்த்திபெற்றார்கள்தேவர்கள்மகிழ்ச்சியடைந்தார்கள் ரிஷப வாகனமுடைய பரமசிவனார் இதையம் மகிழ்ச்சியடைந்தன எ-று.

உதவியானவோர் வெள்ளந்தானையும்
பதிதனாகிய வாரதன்பட்டபின்
அதியன்வீரனின் ஃறானையுமார்ப்பரித்
திகையந்தேறி யிருந்தனராமரோ.

(இ-ள்.) ஒத்தாசையாகவந்த ஒருவெள்ளஞ்சேனையும் வாரத னுமடிந்தவுடன் வீரவன்னியனுடைய சேனைகளார்ப்பரித்துமனஞ் சந்தோஷமா யிருந்தார்கள் எ-று. (உக)

நாயும்பேயும் நரிகளுங்காகமுந்
தீயராக்கதர் தசைகளைத்தின்றிட
நாயகன்புடை யாடினனாரணி
தூயபூதப் படைகள்சுகித்ததே.

(இ-ள்.) நாய்நரிகழுகு பருந்துகாகம் இவைகள்ராக்ஷதருடை யமாமிசத்தைத்தின்றுகூத்தாடி வீரவன்னியனுக்குத்துணையாகவந் ததும்பிமுகனுடைய பூதமுந்தின்று சுகமடைந்தது எ-று. (உஉ)

## வேறு.

ஓரிநாய்குரலொலிப்ப வுவகைபேயினங்களாட
வாரதனுடலைக்கவ்வி மங்கனக்கொடிகளாட
வீரவன்னியநமக்கே விருந்தளித்தனனிவன்போல்
தீரனுமுண்டோவென்று செயந்துதித்திருந்ததன்றே.

(இ-ள்.) நாயும்நரியுஞ்சத்திக்கவும் பேய்களாடவும் வாரதரா க்ஷதனுடலைக்கவ்வி யிழுத்துத்தின்று காகம்மான் சந்தோஷப்பட வும் வீரவன்னியராசன் நமக்கின்றைக்கு விருந்தளித்தான் இந்தபு ண்ணியனைப்போல ஒருஅரசன் உண்டோவென்று செயங்கூறிற்று எ-று. (உங)

குருதிவெள்ளங்களோடிக் குணதிசைக்கடலிற்சேர
விருதொடுமுரசினங்கள் மிதந்திடவவுணரோடம்
பெருமையாந்தெப்பமென்னப் பிதற்றிடவாய்மையேற்ற
கருவிழியதனாற்கண்டே சுயவனுக்குரைத்தானன்றே.

(இ-ள்.) இரத்தவெள்ளம்பெருகிக் கிழக்குசமுத்திரத்தில்வீழ ராக்ஷதர்களுடைய விருதுகள்கொடிகள் முரசுகள்மிதந்துஓட ராக்ஷதமுண்டமானது தெப்பல்போல்மிதந்துபோகிறதென்று யாவருஞ்சொல்லுவதை தூதர்கள்கண்ணுரக்கண்டு வாதாவிராக்ஷதனிடத்திற்போய் உடனேசொன்னார்கள் எ-று.

ஏவலருரைக்கக்கேட்ட வியக்கர்கோனிதயம்பொங்கி
தீவினைச்சூறைமண்டி செயம்பெருந்தம்பிமாய்ந்தும்
காவலரிருப்பதுண்டோ கனத்தகுண்டலன்மகோனே
பாவமின்மகோதராருன் படையெடுத்தேகுமென்றான்.

(இ-ள்.) தூதன்சொல்லைக்கேட்ட வாதாவிசூரனான ராக்ஷதன் மனதுகொதித்து கோபங்கொண்டு எட்டுத்திக்குங் கொள்ளையடித்துவரப்பட்ட வெற்றியான தம்பியையிழந்து நான் ராசரீகஞ்செய்து என்னநலமாகுமோ குண்டலனேமகோனேமகோதரனே நீங்கள்மூவருமுங்கள் சேனைசமுத்திரங்களுடனே யுத்தகோலங் கொண்டு போர்க்களம்போய் சண்டை செய்யுங்களென்றான் வாதாவி எ-று. (உ௫)

## வாரதன் முதலாவது யுத்தம்.

முற்றிற்று.

---

ஆகபாயிரம்உட்படச் சருக்கம்-கக-ம்

திருவிருத்தச் செய்யுள் எக௮.

உ

கடவுள் துணை.

பத்தொன்பதாவது.

# இரண்டாவது குண்டலன்சண்டை.

கேட்டினரவுணர்மூவர் கேசரத்துரகஞ்சூழ
மேட்டியாயிரதமேறி விருதுபம்பைகளார்ப்ப
தாட்டிவாரதனைக்கொன்ற தயிரியனெவனோவவனை
வாட்டுவனெனவுரைத்து வளைந்தமர்மண்டலுற்றான்

(இ-ள்.) வாதாவிசூரராக்ஷதன் சொல்லக்கேட்ட மூன்றுரா க்ஷதர்கள் தங்கள்தங்கள் ரதகஜதுரகபதாதிகளும் சூழமேட்டியா யிருக்கப்பட்ட ரதத்திலேறிக்கொண்டு விருதுகளும் பம்பைமுத லாகிய வாத்தியங்கள்முழங்கபோர்க்களம் வந்துபார்த்து பலம் பொருந்திய வாரதனைக்கொன்ற பராக்கிரமமுடையவன்எவனடா அவனைக்கொல்லுகிறேன் பாரடாவென்று சொல்லவளைந்து யுத்த ஞ்செய்ய எதிர்த்தார்கள் எ-று. (க)

அவுணன்சேனைகுழாங்க ளைம்பதுநூறுவெள்ளம்
கவியவேமரங்கள்தன்னைக் கரத்தினாற்பிடுங்கிச்சாட
தவமுளபிரமவன்னியன் தளமரத்துடன்கவிந்து
சிவன்கணையதனால்தட்டி தீயரைக்கொல்லலுற்றான்.

(இ-ள்.) ராக்ஷதக்கூட்டம் ஐயாயிரவெள்ளங்கள் கும்பலாகக் கூடிவளைந்து மலையுமரங்களையுங் கையினாலேபிடுங்கி எறிகிறபோ து தவத்தினாலேவந்த பிரமவன்னியன்கண்டு கோபத்துடனேதன் னுடையரதத்தைமாத்திரம் ஒண்டியாகநடத்திக்கொண்டு ராக்ஷத சேனைக்கடலில்கவிந்து பரமசிவன்கணை பாசுபதாஸ்திரத்திற்குமந் திரஉபதேசஞ்செபித்து வில்லைபிரயோகம்பண்ணியேவ ராக்ஷதர் கள்விட்டுஎறியப்பட்ட கல்லுமலைமுதலாகியதும் மேல்விழும்படிச் செய்யாமல் அப்பாலேவிழும்படிச்செய்து ராக்ஷதாளை மடியும்படி ச்செய்தான் எ-று. (உ)

கானவர்வலைபோல்சுற்றி கலந்திடுமவுணரெய்யு
மீனமான்தண்டுசூல மெறியம்புசக்கரங்கள்
வானின்மேற்றாளதாகி மண்ணினிற்படியத்தாக்கி
இராக்கதரொருத்தர்க் கிருசரம்பெய்யலுற்றார்.

(இ-ள்.) வேடர்கள்கட்டப்பட்ட வலைபோலவன்னியப்படைகளைச்சுற்றி வளைத்துக்கொண்டு ராக்ஷதர்ஏவப்பட்ட தண்டாயுதஞ்சூலாயுதம் எரியம்பு சக்கரம் வளைதடிமுதலாகியவைகள் ஆகாசத்தில் பறக்கும்படியாகத் தூளாக்கியும் பூமியில்படியும் படியாகவும் தன்னுடையபாணத்தினாலேதுரத்தி ஈனனாகியராக்ஷதனொருத்தனுக்கு இருபாணம்விழுக்காடுவிடுத்து சரவேகத்துடனே ஏவலுற்றான் வீரவன்னியன் எ-று. (௩)

பருமமாமரமசைக்க பலபலவெனவிழும்போல்
விரிமெனுமவுணராக்கை மேதினிப்படியவேகி
வெரித்தழும்பகல்நிறப்ப விமையவர்முரசதிர்ப்ப
பிறமனோர்மறலியென்ன பெருத்தவீரங்கள்பூண்டான்.

(இ-ள்.) பருத்திருக்கப்பட்ட மரங்களிலேறி அசைக்கிறபோது அந்தமரத்திலிருக்கப்பட்ட பழங்கள்பலபலவென உதிரும்படியாய் பிரமவன்னியனேவினபாணம் ராக்ஷதர்பேரில் தெரித்துவிழ அதையுதறிநிற்கப்பட்ட ராக்ஷதருடையதேகம் வருத்தமடைந்து மண்ணில்விழுந்துமடிந்தார்கள் மூவருடையதேரும் ஓடாமல்நிற்கக்கண்டு தேவமுரசதிர்க்க பிரமவன்னியனே எமனாகநிற்கிறான் பாருமென்று யாவர்களும்புகழப் பராக்கிரமம்பூண்டான் பிரமவன்னியன் எ-று. (௪)

குண்டலனவுணன்கோபங் கொண்டொருதனுவளைத்தே
மண்டியவாய்வாளி வருஷிக்கப்பிரமன்கண்டோன்
தண்டினாலதைதடுத்துத் தயித்தியன்சிரசின்மோத
துண்டமாய்ப்புவியில்வீழத் துகள்மகோன்வந்தெதிர்த்தான்.

(இ-ள்.) குண்டலராக்ஷதனானவன் உக்கிரமாகிய கோபங்கொண்டு ஒப்பற்றதநுவைவளைத்து ஒருவாய்வாஸ்திரத்தைப் பிரயோகம்பண்ணினான் அந்தவாய்வாஸ்திரம் வருவதைக்கண்டு பிரமவன்னியன் ஒருதண்டாயுதத்தினாலே குண்டலராக்ஷதன் சிரசைதுணிக்கும்படிஅனுப்பினான் அந்ததெண்டாயுதமானது உக்கிரமாகப் போய்க்குண்டலனுடைய சிரசிலேமோதி துண்டமாகச்செய்து அந்ததெண்டாயுதமானது பிரமவன்னியனிடம்வர குண்டலன்சிரமிழந்து பூமியிலேவிழுந்தான் அதைக்கண்டு மகோனென்னப்பட்டராக்ஷதன்கண்டு தன்னுடையரதத்தை முடுக்கிக்கொண்டுவந்தெதிர்த்தான் எ-று. (௫)

குண்டலன்சண்டை முற்றிற்று.

ஆகபாயிரம் உட்பட சருக்கம் ௨௦-ற்கு
திருவிருத்தச் செய்யுள் ௭௨௩.

கடவுள் துணை.

# இருபதாவது.

# மூன்றுநாள் மகோன்யுத்தம்.

நகைமகோனெனுமவுணனுக வாளியைசிலையிலேற்றி
பகையெனும்பிரமன்மீதில் பதித்திடத்தெறியவாளி
புகையுடனலம்பொங்கி பூத்தெனக்கவியவீரன்
வகையறக்கிருஷ்ணன்போல வன்னியன்வந்தான்மாதோ.

(இ-ள்.) மகோனென்னப்பட்ட ராக்ஷதனுனவன் தன்னுடையகையிலிருக்கும்வில்லிலவளைத்துநாகாஸ்திரம்எடுத்துமந்திரமுபதேசித்து சத்துருவாகவந்த பிரமவன்னியன்பேரில் பதியத்தொடுத்தான் விடுத்தநாகாஸ்திரமானது ஆலகாலம்போ லிரைச்சலிட்டுவந்து பிரமவன்னியன்பேரில் கவியும்போது மூர்ச்சையடைந்தான் அப்போதருகிலிருந்த கிருஷ்ணவன்னியன் கண்டுவந்தான் எ-று.

துணைவனைக்கோபஞ்செய்த துஷ்டனைவளைந்துவேதக்
கணையினையுச்சரித்து கடுமையாயிறைப்பவாளி
யிணையின்மகோனுளத்தை யீர்ந்துவான்கங்கையாடி
மணிமுடிவன்னியன்பால் வந்தமர்ந்திருந்ததன்றே.

(இ-ள்.) தனக்குத்தம்பியான பிரமவன்னியன்மூர்ச்சையடைந்ததைக்கண்டு துஷ்டனுகியமகோன் ராக்ஷதனைவளைத்து பிரம்மாஸ்திரமெடுத்து மந்திரஞ்செபித்து மகாஉக்கிரமாகத்தொடுத்தான் பிரம்மாஸ்திரம் தனக்குபிணை ஒருவருமில்லையென்று இருக்கப்பட்டமகோன் ராக்ஷதனுடையதேகத்தைப் பிளந்துசிரசறுத்து கீழேவீழ்த்திகங்கையில் ஸ்நானம்செய்து நவரத்தினமிழைத்த கிரீடமணிந்த கிருஷ்ணவன்னிய னிடத்துக்குவந்து அம்பறுத்தூணியிலே அடங்கியிருந்தது எ-று.

## மகோன் யுத்தம்.

முற்றிற்று.

ஆகபாயிரம்உட்படச் சருக்கம்-உக-று

திருவிருத்தச் செய்யுள் எ௨ரு.

உ

கடவுள் துணை.

## இருபத்தொன்றாவது.

# நாலாநாள் மகோதரன் யுத்தம்.

மகோதரனென்னுஞ்சூரன் வளைந்துவெஞ்சிலைவளைத்தே
நிகரிலாமாயன்பாணம் நிருபன்மேற்றெளிப்பவாளி
தகதகவென்றுமார்பிற் றாக்கிடக்கிருட்டினன்றன்
அகமெலிவடைந்துமூர்ச்சை யாகியேரதத்திற்சாய்ந்தான்

(இ-ள்.) மகோதரனென்னப்பட்ட சூரனானவன்மகோனாகிய துணைவன்மடிந்தானென்று தன்னுடைய ரதத்தை முடுக்கிக்கொண்டு கிருஷ்ணவன்னியனைவளைத்து தன்னுடையகைவில்லினால் நாணியைப்பூட்டி நிகரில்லாத நரசிங்காஸ்திரத்துக்கு உபதேசம் செய்துவிடுக்க அந்தபாணம் தகதகவென்று அக்கினிகக்கிக்கொண்டு உடலிலேமார்பிலேதைத்து முதுகிலுருகும்போது கிருஷ்ணவன்னியன் மூர்ச்சையாய் ரதத்தில்சாய்ந்தான் எ-று. (க)

கண்டனன்சம்புவன்னியன் காதலன்துணைவன்மூர்ச்சை
கொண்டனனென்வேசீறக் கொப்பெனவிரதமேறி
கண்டித்துவவுணன்மெய்யி லக்கடுஞ்சரந்தொடுப்ப
மண்டமோர்சூலந்தொட்டான் வன்னியன்மூர்ச்சையுற்றான்.

(இ-ள்.) கிருஷ்ணவன்னியன் மூர்ச்சையானதை சம்புவன்னியன் தன்னுடையதமையன் மூர்ச்சையானானென்றுசீறிமகாக்கோபங்கொண்டு தன்னுடையதேரேறி மகோதரன்சரீரத்தில் அக்கினியாஸ்திரந்தொடுத்து வருஷிக்கிறபோது மகோதரனானவன் சூலாயுதம்விட்டெறிந்தான் மகாஉக்கிரத்துடன்வந்து வன்னியன் மார்பில்தைக்கவே மூர்ச்சையானான் எ-று. (உ)

வீரராமிலக்கம்சேனை வீரவன்னியன்பாலேகித்
தீரனேமதலைமூவர் திணியமெய்மூர்ச்சையுற்றார்
சூரருங்கொடியபாணந் தொடுத்தவனவனைவெல்லும்
வீரர்களுளரோவெள்ளம் மெய்மறந்துரைத்தாரன்றே.

(இ-ள்.) வீரவன்னியன் படைத்துணையான லெக்ஷம்வீரரும் வீரவன்னிய ராசனிடத்தில்போய் மகாகிருபையுடையவனே தங்கள்பிள்ளைகள் மூன்றுபேரும் மூர்ச்சையானார்கள் மகோதரனை

ன்னப்பட்ட ராக்ஷதன் கொடியபாணந்தொடுக்கிறான் அவனைசெயிக்கப்பட்ட பராக்கிரமமுடைய பேருண்டோயில்லையென்று உடல்மறந்துசொல்லலுற்றார்கள் எ-று. (ங)

தானைகளுரைப்பவீரன் றுருலகைசெற்றும்வீரன்
தேனெனுமலர்த்தாளேற்றி சிவனிடத்தாடுமம்மை
ஞானநாயகியேபாலர் நலிவடைந்தவரியக்கன்
வானுலகடையச்சூட்சி வழுத்தெனவுரைத்தான்மாதோ.

(இ-ள்.) சேனைகள்சொல்லக்கேட்ட வீரவன்னியன்மயிடனைச்சங்கரித்ததுர்க்கையம்மனுடைய தேன்சொரியும்மலர்ப்பாதத்தில் வணங்கி பரமசிவனுடன் வர்தாடியதாயே ஞானநாயகி பாலர்கள் மூன்றுபேரும் மூர்ச்சையாகவேண்டிய காரணமென்ன ராக்ஷதனவன் ஆகாசத்திலடையும்படியான காரியஞ்சொல்லுமென்றுகேட்டான் வீரவன்னியன் எ-று. (ச)

எனக்குரியமகனேவந்த வியக்கனக்கினிசரத்தான்
மனத்துயரடைவனுந்தன் மதலையக்கினியையேவ
சினத்தினாற்செயங்கொள்வானென் செப்புவக்கினியமன்னன்
கனத்தகோபங்களுன்னி கயவனோடெதிர்த்தானம்மா

(இ-ள்.) உனக்கு உரிமையானமகனே யுத்தஞ்செய்யவந்த ராக்ஷதன் அக்கினிபாணங்களினாலே துன்பமடைந்துபோவான்உன் பிள்ளையாகிய அக்கினிவன்னியனை அனுப்புவாயாகில் அவனுடையகோபத்தினாலே செயங்கொண்டு வருவானென்றுசொல்லக்கேட்டு அக்கினிவன்னியனையழைத்து யுத்தத்துக்குப்போய்வருவாயென அப்போதே அக்கினிவன்னியன் மிகுந்தகோபமடைந்துவந்து ராக்ஷதன் மகோதரனுடனே எதிர்த்தான் எ-று. (ரு)

அண்டமுங்கிடுகிடென்ன வவுணரினுளந்துடிப்ப
வெண்டிசைகளுநடுங்க மெடுத்தொருசூலமேவ
மண்டியவெண்மையாக மகோதரன்மார்பிற்றைக்க
வண்டரினுலகையுற்ற வாக்கையுமுருண்டிற்றம்மா.

(இ-ள்.) அண்டங்களெங்குங்கிடுகிடென்று நடுங்க ராக்ஷதர்களுடைய மனது துடிக்கும்படியாகவும் எட்டுத்திக்குநடுங்க வில்லைவளைத்து நாணியேற்றி சூலாயுதத்தைமந்திரித்து தொடுத்துவிட்டான் சூலாயுதம் மகாஅக்கினிச்சுவாலையெழும்பிக்கொண்டு போய் மகோதரன் மார்பிலேதைக்க உடனேதேவலோகம்போனான் அவனுடையதேகம் மண்ணில்விழுந்து புரண்டது எ-று. (சா)

அவுணருக்கதிகசூர னருந்துணைநால்வர்மண்மேல்
கவின்களாற்சேனைமண்டி கடுஞ்சமரளிக்கமன்னன்
குவிவளைவாயுவானி குன்றுபோற்றெறிப்பசேனை
புவியின்மேற்படிந்தார்விண்ணோர் பூமழைபொழிந்தாரன்றே

(இ-ள்.) ராக்ஷதருக்கெல்லாம்ராசாவாகியவாதாவிசூரனுடையதம்பி நான்குபேருமடிந்தார்கள் அப்போதவ்விடத்தில் சிலதளங்கள் அக்கினிவன்னியனைவளைந்து சண்டைசெய்ய; அப்போதருவிந்திருக்கின்ற வாயுவாஸ்திரமெடுத்துமலைபோல்சொரியும்போது சேனைகளெல்லாம் மடிந்தார்கள் தேவர்கண்டு பூமாரிபொழிந்தார்கள் எ-று. (எ)

திண்பிபுயவீரர்மூவர் மூர்ச்சையினின்றுதேறி
மணிமுடிபுனைந்துமன்னன் மனத்தினில்மகிழ்ச்சிகூர்ந்தே
யிணையிலாதுர்க்கைபாத மிறைஞ்சினர்கதிரோன்மேற்பால்
அணைந்தனன்செக்கர்வான மந்தரத்தெழுந்ததம் மா

(இ-ள்.) பலம்பொருந்திய புயமுடைய வீரர்கள் மூன்றுபேர்களும் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து இரத்தினகிரீடத்தை நன்றாய்ப்புனைந்து மனதுமகிழ்ச்சியாக துணையாகிய துர்க்காபரமேஸ்வரிபாதத்தைத்தொழுது நின்றார்கள் சூரியனும்மேல்சமுத்திரத்திலேபோய் அஸ்தமானன்செவ்வானம் ஆகாயத்திலெழுந்ததுஎ-று.

உழுந்திடுஞ்செக்கர்வான மியக்கரின்குருதிபென்ன
வெழுந்துவான்றோய்ந்ததென்னவிமையவருரைத்தார்விண்ணில்
செழும்பரிவீரர்சேனைத் திரளெலாஞ்செயங்களுன்னி
யெழுந்தனர்சாலைநாடி யிருந்தனரன்றுளன்றே.

(இ-ள்.) ஆகாயத்திலெழும்பிய செக்கர்வானமது எப்படியிருந்ததென்றால் ராக்ஷதர்களுடைய இரத்தவெள்ளமானது ஆகாயத்தில்தோய்ந்ததுபோலிருக்கிறதென்றுதேவாதிகள்சொல்லியிருக்க இப்பால்சிவந்த அக்கினிக்குதிரையேறிய வீரவன்னியனுடையசேனைகள் வெற்றிபெற்றோமென்று தாங்களிருக்குஞ் சோலைக்குவந்தார்கள் அன்றைக்கு எ-று. (அ)

அந்தியத்தடையவீர ரருணதிதீர்த்தமாடி
சந்தியின்முறைசெலுத்தி சம்பிரமாவமுதருந்தி
இந்திரனெனவிருப்ப வியம்பிடாபடையனைத்தும்
விந்தையாம்பாதுகாத்து வீற்றிருந்தனர்கள்மாதோ.

(இ-ள்.) மாலைப்பொழுதானஉடனே வீரவன்னியர்கள் நதியிலேஸ்தானமாடி சந்தியானுஷ்டான முடித்துக்கொண்டு நல்லவமு

துண்டு தேவேந்திரனைப்போலிருந்தார்கள் சேனைகளெல்லாம்இராத்திரிமுப்பதுநாழிகையும்பாதுகாத்துக்கொண்டிருந்தார்கள்எ-று

ஆரணிவீரிமாரி அகோரிகங்கணகபாலி
நாரணிவடுகிசூலி நடனசாமளிவராகி
காரணிசமையமென்ன காலபூதங்களென்ன
தாரணிமுழுதுமோடி தழைந்ததுகங்குலம்மா

(இ-ள்.) ஆரணிவீரமாரி அகோரி கங்கணகபாலி நாரணிவடுகிசூலி நடனசாமளி வராகி காரணியாகிய துர்க்காபரமேஸ்வரி சமையம்விளங்கியிருக்கப்பட்டவளே அக்காலத்திலே பூதப்படைகள்சூழ்ந்திருக்க பூமிகளெல்லாம்பரவி தழைத்துயிருட்டைப்போல்தெரிந்ததம்மா. எ-று. (கக)

கரியுருவவுணரைக் கடிந்தநீனிறம்
விரிகதிர்மறைத்தமர் விளைத்ததென்னவே
பெரும்புவியனைத்திரு ளடையபேயனு
மெரிவிசிவவுணர்கோ னிதையம்வாடினன்.

(இ-ள்.) கறுப்புநிறமுடைய ராக்ஷதரைக்கொல்லும்போது அவர்களுடைய நிறமெல்லா மொன்றாய்க்கூடி கிரணமுடைய சூரியப்பிரகாசத்தை மறைத்ததுபோல் பேயனுனராக்ஷதருக் கெல்லாம் ராசாவான வாதாவிராக்ஷதசூரன் தன்னுடையதம்பிக ளெல்வரும் பட்டுப்போனசேதி தூதர்கள் சொல்லக்கேட்டு மனதுவாடினுன் எ-று. (கஉ)

எனக்குறூஉந்துணை வர்காளெனைத்தனிக்கவிட்
டனப்பரிவீரரா லாவிநீக்கிட
சினத்துயரடைந்த னன்சகவசிகஞ்செய்
இனிபெலமாரெனக் கின்றியென்றனன்.

(இ-ள்.) எனக்குஇனிமையான தம்பிமாரே என்னைத்தனியே விட்டு வீரவன்னியராலே மடிந்தீர்களே என்மனது துயரமடைந்திருக்கின்றேன் செகமுழுதுங் கைவசஞ்செய்யப்பட்ட அடாதம்பிமார்களே இனியெனக்குபலனுக ஆரிருக்கிறுர்களென்றுன் வாதாவி எ-று. (கங)

கோவெனவசற்றுவன் கொதித்தெழும்புவன்
ஆவலாந்துணைவருக் குவகையாயெனை
பாவையராற்றவும் பசும்பொன்மாமுடி
காவலன்றுயரமுங் கழறலாகுமோ.

(இ-ள்.) கோவென்று வாய்திறந்தழுவான் ஆகாசத்திலெழும்புவான் தம்பிபெண்சாதிகளுல்வரழுகிறசத்தமும்வாதாவியழுகிறசத்தமும் சொல்லிமுடியாது எ-று. (௧௪)

இரத்தினகரமுளவியக்கர்மாதர்தம்
ரத்தினமணிவர்கோ னடரந்தசேனையை
பெருத்திடும்வீரர்கை யொப்பிபெய்தனன்
திருக்கலமழிந்தன மென்றுசெப்பினர்.

(இ-ள்.) இரத்தினபுரியிலிருக்கும் ராக்ஷதப்பெண்களெல்லாரும் வாய்விட்டழுதுசொல்வார்கள் ரத்தினகிரீடமணிந்த வாதாவிராக்ஷதசூரன் தன்னைநெருங்கியிருக்குஞ் சேனைகளை வீரவன்னியர்கள்கையில் ஒப்பித்தபடியினாலே அவர்கள்கொன்றுபோட்டார்கள் ஆகையால்நாமெல்லாரும் மங்கிலியமிழந்தோமென்றார்கள் எ-று.

கணவனைக்கடிதுளங் கடிந்தவீரரை
பிணமெனக்குவித்து பேருலகினண்ணுவம்
இணையிலாவரக்கியரினங்களேயினி
குணமுடன்வருகுவீ ரென்னக்கூறினர்.

(இ-ள்.) நம்முடையபுருஷரைக்கொன்று மனதுசந்தோஷமாயிருக்கின்ற வீரர்களிடத்தில் நாம்எல்லோரும்போய் அவனையடித்து பிணக்காடாய்குவியச் செய்துப்போட்டு நம்முடையவிடுதிக்குவருகுவோம் வாருமிணையல்லாதராக்ஷதிகளே சும்மாயிராதீர்கள் வாங்களென்ன சிலபெண்கள் சொன்னார்கள் எ-று. (௧௫)

அந்நகர்க்கஞ்சிடா வவுணராவியை
ரிந்தைசெய்தழுத்தன னிமலன்சேயரை
யிந்திருளகனுமுன் னேமிமற்பொரு
மிந்திரப்பதவி யீந்திடுவமென்றனர்.

(இ-ள்.) எமனுக்கஞ்சாத ராக்ஷதருடையசீவனெல்லாம்மடியச்செய்துப்போட்ட பரமசிவனுடையபிள்ளைகளை நிலவிருட்டு நீங்குவதுமுன்பு நாமெல்லோருங்கூடிப்போய் சண்டைசெய்து தேவபதவிகொடுப்போம் வாருங்கள் எ-று. (௧௭)

பலபலவிதமொழி பகர்ந்தபாவையின்
ஒலியெனுமுரகர்கோ னுளமுவாடினன்
தலைவலியெழும்பின தங்கள்வொண்ணிடர்
வலியவுணதியர் மடிவதின்றியே

(இ-ள்.) ராக்ஷதிகள் வாயிலேவந்தபடி பலவிதமாகச்சொல்லி யதை ஆதிசேஷனும் சொல்லிபொறுக்கக்கூடாமல் தலைவலியப் போல்துள்ளின இப்பேர்ப்பட்ட ராக்ஷதர்வலிமையுடையபேர்கள் மடிவது எப்படி எ-று. (கஅ)

இச்சுமைபகலு நாளென்றுகாண்கிலன்
பிச்சையேற்றுண்ட வன்பெருவரக்கரை
பிச்சையென்றளித்தனன் யெனக்குசீருற
வச்சுதாமுடிசுமை யகற்றுமென்றனன்.

(இ-ள்.) இந்தராக்ஷதர்களுடைய சுமைபாரந்தாங்களென்னாலே முடியாது இந்தராக்ஷதாள் என்றைக்குமடிவது எனது தலைச்சுமை என்றுநீங்குவது அதைநான்காண்கிலேன்பிச்சையெடுத்துண்டபர மசிவனிந்த பெருமையானராக்ஷதரை தனக்குஆசையுடனேயுண்டு பண்ணினதென்ன எனக்குத்தீம்புசெய்தார் மகாவிஷ்ணுவே என் னுடைய தலைச்சுமையை யகற்றுமையாவென்றான் ஆதிசேஷன் எ-று. (கசு)

ஈதுரையுரகர்கோ லிசைத்திருப்பவன்
தீதவுணதிபன் சிந்தைதேறிலர்
வாதனையுயர்த் தவனகமோடுமேகமமயிம்
மேதினியிருப்பதெவ் விதமென்றுசாவினன்.

(இ-ள்.) இந்தப்படி பாம்புகளெல்லாவற்றிற்கும் ராசாவான ஆதிசேஷன் சொல்லியிருக்கும்போது வாதாவியினுடைய மனது தேறாமல்துக்கத்துடனே சொல்லுகிறா னிந்தரத்னபுரியில் என்னு டைய தேகமிருக்கின்றது எவ்விதமென்றான் வாதாவி எ-று.(உய)

இடியெனவரற்றிய வியக்கர்மூர்ச்சையாய்
படிமிசைவீழ்ந்தனன் பாரமேருவின்
னடிமுடிசாய்ந்ததென் றவுணன்றேவியக்
கொடுமைகளேற்றனை கொற்றவென்றனள்.

(இ-ள்.) இடியைப்போல வாய்விட்டழுகின்ற வாதாவி மூர்ச் சையாகி பூமியில்வீழ்ந்தான் அதெப்படியிருக்கிறதென்னில் மகா மேரு அடிமுடிசாய்ந்து விழுந்தாலெப்படியோ அப்படிபோல வி ழுந்துகிடக்கின்ற ராக்ஷதனுடையதேவி சொக்ககன்னியென்பவள் சொல்லுவாள் இப்பேர்ப்பட்ட காரியங்களை தேடிக்கொண்டாயே ராசவேயென்றாள் சொக்ககன்னி எ-று. (உக)

முடிவிலாபுகழணி முத்தனல்கிய
படிமிசைபுரந்துமிப் பலனடைந்திதன்
கொடியபாதகமிதுக் குலவுத்தோளிஞய்
மடிவனுன்னுடனென மனதுசேர்ந்தனள்.

(இ-ள்.) அளவிலாதபுகழ்படைத்திருந்தபரமசிவன்கொடுத்த ரத்திஞபுரியை யாண்டுக்கொண்டிருக்கின்றபலன் இப்படிக்குவந்த தோ என்னகொடியபாவமிதுவாகும் திரக்ஷியான தோளையுடைய வனே யடியாளும்உன்னுடனே கூடமடிந்துபோவேனென்று மன துசோர்ந்தாள் எ-று. (உஉ)

துடியிடைசொக்க கன்னியின்மனத்துய
ரடைவதையகற்றியே யமைச்சர்மன்னனை
துடிமலரணைவணை துய்யசாமரை
கடுமையாயிரட்டவுங் கனன்றெழும்பினன்.

(இ-ள்.) உடுக்கையிடைபோன்ற சொக்ககன்னியின்மனது ம காதுயரத்துடன் துன்பப்பட்டுஅழுகிறதை மந்திரிகள்மாற்றி வா தாவிசூரனை மலரணையில்வைத்து இருபுறமும் வெண்சாமரையிஞ லேவீசி உபசாரஞ்செய்கிறபோது மகாகோபாக்கினியுடனே யெ ழுந்திருந்தான் வாதாவி எ-று. (உங)

அப்பொழுதமைச்சர்க ளங்கைகூப்பியே
செப்புவாரரசர்க டரஞ்சோர்வுரு
ரிப்படிசோபமுற் றிடவியற்கையோ
மற்பொருதினிபுய வவுணர்மன்னனே.

(இ-ள்.) அந்தவேளையில் மந்திரிமார்களிரண்டுகையுங் கூப்பி வணங்கிசொல்வார்கள் ராசராசாக்கள் தைரியஞ்சோர விடமாட் டார்கள் இப்படிக்கிச்சோம்பிஞல் அரசர்க்கு இயற்கையாகுமோ யுத்தஞ்செய்யபட்ட புசபலபராக்கிரமமிகுந்த ராசாக்களுக்கெல் லாம் ராசனேயென்றார் மந்திரிகள் எ-று. (உச)

அபசுபமிரண்டையு மனுபவிப்பதே
தபநெறியாமென சாற்றுநூன்பொய்க்குமோ
யிபமுரிபோர்த்திய வீசன்செயல்வலி
வுபயமோவென் சிலையுருக்குமன்னனே.

(இ-ள்.) வாதாவிமகாராசனே யாவருக்கும் நல்வினை தீவினை யிரண்டுமுண்டு அதையனுபவிப்பதே தவமுறைமையென்றுசொல் லப்பட்ட நீதிசாஸ்திரங்கள்பொய்யாமோ ஆனையுரித்துபோர்த்தரு

ரிய பரமசிவனுடையபிள்ளைகளின் பராக்கிரமத்தை என்னுடைய பாணத்தினாலேஅவர்களுடலைஉருக்குகிறேனென்றான்மந்திரிஎ-று.

முடிவிலாசேனையை முனைந்தவீரரின்
படிமிசையினிற் படியசேர்த்தியே
முடியுனக்களிப்ப னென்மொழிதப்பாதெனக்
கடுமையாயமைச்சருங் கழறினாரரோ.

(இ-ள்.) அளவில்லாதராக்ஷதசேனையைமடித்த வீரவன்னியர்களுடைய சேனாசமுத்திரங்களை யிந்தபூமியில்படிந்துகிடக்கும்படியாககொன்றுபோட்டு இந்தபட்டணத்துக்குராசாவாகிய முடியுனக்குத்தருகிறோம் எங்களுடையவாக்கு தப்புகிறதில்லையிதைப்பாருமென்று கடுமையாகமந்திரிமார்கள் சொன்னார்கள் எ-று. (உசு)

தனையரீரிருவரின் றனுவுபொய்க்குமோ
கனபுவிசூறைசெய் கவர்ந்ததினிபுயம்
அனைவருஞ்செழித்திட வயர்வதென்னவுன்
மனமுறுதுயரமு மாற்றுமென்றனன்.

(இ-ள்.) உம்முடையபிள்ளைகளுல்வருடையவில்வல்லமைபொய்யாகுமோ கனத்திருக்கப்பட்ட பூமிகளிலேபோய்க் கொள்ளையடித்துக்கொண்டுவந்த பராக்கிரமமுடையவீரர்கள் உமக்கிருக்கிறபோது மனதுபேதிக்கலாமோ துயரத்தையகற்றுவாய் மகாராசனேயென்றார்கள் மந்திரிகள் எ-று. (உஎ)

இப்படிவமைச்சர்க ளியம்பக்கேட்டகோன்
செப்புனது சேனைக்குழாங்களை
தப்பிடாதழையென சாரணர்க்கோதிட
வப்பொழுதவுணர் சேனையடைந்ததே.

(இ-ள்.) இந்தப்படியாகமந்திரிகள் தைரியஞ்சொல்லக்கேட்ட வாதாவிசொல்லுகிறான் நம்முடையசேனைக் கூட்டங்கள் ஒன்றுவிடாமல் அழைப்பீர்களென்று தூதருக்குச்சொல்ல அப்போது அவுணர்சேனைகளெல்லாம் வந்துநிறைந்தார்கள் எ-று. (உஅ)

கரிமுகம்புலிமுகங் கழுதைநாய்முகம்
பரிமுகமெலிமுகம் பசாசுவின்முகம்
துரிமுகமாயிர மடைந்தராக்கத
ரிரத்தினபுரமதி லடைந்துசூழ்ந்தனர்.

(இ-ள்.) யானைமுகம்புலிமுகங்கழுதைமுகம்நாய்முகங்குதிரைமுகம்எலிமுகம் பசாசுமுகஞ்சிங்கமுகமாயிரமுகமு இரண்டாயிரங்

கைகளையுடைய ராக்ஷதர்கள் ரத்தினபுரியெங்கும் நெருங்கும்படியாகவந்துசூழ்ந்தார்கள் எ-று. (உசூ)

மூலபலமென்னவு மூளைத்திடுமியக்கர்
ஞாலமிசையெங்கணு நவின்றிடவொணுத
சூலமொடுபாரொடு சூரிதனுவுங்கண்டு
காலரிவரென்னவுங் கணத்தினில்நிறைந்தார்.

(இ-ள்.) மூலபலங்களென்று சொல்லும்படியாகராக்ஷதக்கூட்டங்களெல்லாம் வெள்ளமாகபூமியெங்கும் நிறைந்ததளத்தை யிவ்வளவென்று சொல்லிமுடியாத சூலம்மழுபிண்டி பாலஞ்சூரி தண்டாயுதம் இப்பேர்ப்பட்ட ஆயுதங்களுடையபேர்கள் எமனென்று சொல்லும்படியானபேர்கள் ஒருகணப்பொழுதிலே கூட்டங் கூட்டமாகவந்து நிறைந்தார்கள் எ-று. (ஙய)

சத்தசமுத்திரம் பொய்கிடசினப்ப
சுத்தரவநாயகன் சுடிகையும்நெளிப்ப
நற்றவட்ட நாகமுள்நடுங்கி
புற்றிலீசலெனப் புவிநிறைந்தாரரோ.

(இ-ள்.) சத்தசமுத்திரசலமும் வற்றிப்போகும்படியாய்ராக்ஷதர்கோபித்துவர அஷ்டனகத்துக்கெல்லாம் ராசாவானஆதிசேஷனுடையஆயிரம்பணமுடியும்நெளியும்படியாகத்திடுக்கிடபுற்றிலேயிருந்து யீசலெப்படிபுறப்படுமோ அப்படிபோல ரத்தினபுரியிலிருந்துவந்து நிறைந்தார்கள் எ-று. (ஙக)

வந்தவுணர்சேனையை வாதாவிகண்டுரைப்பா
னிந்தவுணருக்கிணை யியம்பிடவொணுதால்
சிந்தைகளிகூர்ந்துபல சிறுவர்முகநோக்கி
யந்திருளகன்றனர மர்ப்பொருதுமென்றான்.

(இ-ள்.) வரப்பட்டராக்ஷதசேனையை வாதாவிசூரன் இரண்டு கண்ணினுலுங்கண்டு சொல்லுகிறான்இப்பேர்ப்பட்டராக்ஷதசேனை நம்மிடத்திலிருக்க இவர்களுக்கிணை ஒன்றையுஞ்சொல்ல லாகாதென்று மனதுமகிழ்ச்சியாகத்தன் பிள்ளைகளுடையமுகத்தைப் பார்த்து இந்தஇருட்டுகாலம்நீங்கி விடியற்காலத்திலே சண்டைக்குப் போங்களென்று சொன்னுன் வாதாவி எ-று. (ஙஉ)

தாதைமுகநோக்கியரு தனையருமுரைப்பார்
போதுமதிசூடுபுனி தன்புதல்வரெங்கை

வாதையுருவர்ளியென மண்டவமர்செய்தே
மேதினியுறைவனிது மெய்யெனவுரைத்தான்.

(இ-ள்.) இப்படிச்சொன்ன தன்னுடையதகப்பனுகிய வாதாவிமுகத்தைப்பார்த்து பிள்ளைகள்நால்வருஞ்சொல்லுவார் இளஞ்சந்திரனைச் சடையிலேஅணிந்த பரமசிவனளிக்கப்பட்ட பிள்ளைகள் எங்கள்கையிலேவாதைப்படுத்தும்படியான அக்கினியாஸ்திரங்கள் மண்டும்படியாகச் சண்டைசெய்து இந்தப்பட்டணத்திற்கு வருகிறது மெய்யான இறுதியென்று சொன்னார்கள் எ-று. (௩௩)

விண்ணதிரமண்ணதிர மேதினிநிறைந்த
திண்யபுயமன்னரைச் சினத்துஜெயமுற்று
குண்ணெனவுதித்தசடக் கொடுமையவனென்றால்
மண்ணதிலிருந்தென்பயன் மடிந்திடுவமென்றார்.

(இ-ள்.) ஆகாயம்பூமியதிரப் பட்டணம்வந்து நிறைந்த திண்புய மன்னனுகிய வீரவன்னியாளைப்பகைத்து செயமடைந்து வருகிற என்னுடையசரீரம் மலைபோலமுளைத்து கொடுமையையுள்ளவனென்றும் மகாபொல்லாதவனென்றும்பேரெடுத்தவென்னுடைய பராக்கிரமமழிந்துபோனல்அதின்மேல் இந்தபூமியிலிருந்தென்ன பலன் மடிந்துபோகிறதே நலமென்றான் எ-று. (௩௪)

அந்தியுறுகாலமற மலர்மதிமுளைத்த
விந்தைமுடிவீரர்கள் விடுஞ்சிலையினுவி
னிந்தையவுணத்திபல னேமியிலகற்றும்
தந்திரமெனுமதி தழைத்ததுவிண்மீதில்.

(இ-ள்.) ராக்ஷதர்கள்இரவெல்லாம் தங்கள்யுத்தபராக்கிரமத்தைச் சொல்லிக்கொண்டிருக்கச்சே யிருள்கூட்டம் நீங்கிப்போய் அலர்ந்தசந்திரனுதயம்எப்படியென்னில் விநோதமானகிரீடமுடையவீரவன்னியர்கள்விடப்பட்ட பாணத்தினலே மகாகொடுமையையுடையராக்ஷதர் இந்தபூமியிலில்லாமல் நீக்கப்பட்டதந்திரம்போல இருட்டைநீக்கி சந்திரனனவன் ஆகாசத்தில்முளைத்துவிளங்கினன்

பிஞ்சினமதிச்சடை யணிந்தருளும்பெம்மான்
அஞ்செழுத்தோதி பணியடிவர்கள்தம்பால்
துஞ்சலணுகாதென துறந்தவருரைத்தார்
இஞ்சலெனவானினி விளங்கியதுவன்றே.

(இ-ள்.) இளம்பிறையைச் சடையிலணியப்பட்ட பரமசிவனுடைய பஞ்சாக்ஷரத்தைநினைத்துபணிகின்ற அடியவர்களிடத்திலே

சோர்வுகளனுகாதென்று பெரியவர்களுரைத்த வாக்கியஞ்சரியெனக்காட்ட ஆகாயத்திலிருக்குமிருட்டைநீக்கிச் சந்திரன்பிரகாசித்ததுபோலாம் எ-று. (௩௬)

கங்குலவுணக்குழாமமர்ந்த தெனமொய்ப்ப
திங்களுயர்வாளியாற் சிதைக்குமொளிவீரன்
வெங்கணையதாமென விளங்குவனகண்டே
கங்குலுமகன்றதென் கலைமதிமுளைப்ப.

(இ-ள்.) இருள்கூட்டங்களாகிய ராக்ஷதப்படைகள் நிறைந்திருக்க அதைசம்மாரஞ்செய்கிறேனென்று சந்திரனனவன் தன்னுடையகிரணமாகிய பாணத்தினலே மடித்ததுபோலவீரவன்னியனுடைய அக்கினிகணைபோல சந்திரன்பிரகாசிப்பதைக்கண்டு இருட்டெல்லா நீங்கிப்போய் பதினுறுகலைகளையுடைய சந்திரன் ஆகாசத்தில் தோன்றினன் எ-று. (௩௭)

பற்றியகுணதிசைப் பளிங்கனுமுளைப்ப
நற்றவம்புரியவுண னிலஞ்செழிப்ப
கத்தனருளாலவுணர் காசினிநிறைந்தே
சித்தமகிழ்வின்றினி தீதுகளடைந்ததே.

(இ-ள்.) சந்திரன்தோன்றினவுடனே கிழக்குத்திசையில்சுக்கிரன்முளைத்தது எப்படியென்னில் நல்லதவஞ்செய்யப்பட்ட வாதாவிசூரன் பூமியில்செழித்திருக்க பரமசிவனருளினலே ராக்ஷதர்கள் பூமியெங்கும் பரவியிருக்கும்படி சிருஷ்டிசெய்து மனதில்மகிழ்ச்சியாகவிருந்தோம் இப்போதுகுற்றம்வந்தடைந்ததேயென்று வருத்தப்படுகிறவன்போல சுக்கிரன்முளைத்தார் எ-று. (௩௮)

இத்தினமரக்கர்மடி வாரெனவிளங்க
யத்தனையழைப்பவ ரதிர்க்குரல்கள்போலவென்ன
தத்ததொருவாரணந் தாழ்த்துமனைதோறுங்
கத்துவொலிகேட்டிடக் கதிரவன்முளைத்தான்.

(இ-ள்.) இன்றையத்தினம்ராக்ஷதரெல்லாருமடிந்துபோகிறார்களென்று பிரகாசமானபரமசிவனை யழைக்கிறவர்கள்போலஅதிரப்பட்ட குரல்முழக்கியசத்தத்தில் கோழியானதுவீடுகள்தோறும் கூவிய வொலியைக்கேட்டு சூரியன்சீக்கிரத்திலே கிழக்குத்திசையில் தோன்றினன் எ-று. (௩௯)

படைத்திடவதைத்தவுணர் பாரினிலிராமற்
சதைத்தகிரணச்சிலைசமைந் தெனவிண்ணோர்

துதித்திடபசும்பரி சுமந்திடுரதத்தில்
யுதித்தவொருதுணதிசையி லோங்குபுகழ்வெய்யோன்.

(இ-ள்.) யாவரையு மனம்பதைக்கும்படியாகக் கொல்லப்பட்டராக்ஷதர்கள் பூண்டில்லாமல்சங்கரிக்க கிரணம்பொருந்தியபாணமானது வந்ததென்றுதேவாதிகள்தோத்திரஞ்செய்ய தேரிலேயுதித்தான் சூரியன் எ-று. (௪௰)

மதிகுளிர்பொருந்திட மரைமலர்கள்வாட
கதிர்சுடர்பொருந்திட ,களிர்குமுதஞ்சோர
நதியினின்முகடுகள் நளினமுமலர்ந்த
துதயவன்முளைப்ப மதியோரடிமறைந்தான்.

(இ-ள்.) சந்திரனுடையகுளிர்ச்சிபொறுக்காமல்தாமரைமலர்களெல்லாம் முகம்வாடிபோயிற்று சூரியனுடையகிரணங்கள்பொறுக்காமல் அல்லிப்பூசோர்ந்துவாடிப்போயிற்று தடாகத்திலிருக்கின்றதாமரை சூரியனைக்கண்டவுடனே பிரகாசிக்க சூரியனுதயங்கண்டு சந்திரன் நாமிவ்விடத்தி லிருக்கலாகாதென்று ஓடிமறைந்தான் எ-று. (௪௧)

## மகோதரன் யுத்தம்.

முற்றிற்று.

---

ஆகபாயிரம்உட்படச் சருக்கம்-௨௨-று

திருவிருத்தச் செய்யுள் ௭௯௯.

கடவுள் துணை.

## இருபத்திரண்டாவது.

# கெமலாசூரன் யுத்தம்.

## ஐந்தாநாள்.

பகலவன் றுலங்கிடப் பஞ்சவன்னியர்
அகமகிழ்வாகவர் நதியிலாடியே
முகவியாக்கடன்களை முடித்துவீரியின்
சுகமலர்க்கழலிணை தொழுதிட்டாரரோ.

(இ-ள்.) சூரியன்உதயமான உடனே வீரவன்னியர்களெவரும் மனமகிழ்ச்சியா யிருக்கின்ற தடாகத்தில்மூழ்கி சந்தியனுஷ்டான செபதபமுடித்து துர்க்காபரமேஸ்வரியினுடைய பாதத்தில்வணங்கினார்கள் எ-று. (க)

நற்றவபூதியை நங்கைநல்கினள்
தத்துவான்பரியினிற் றழைத்தவீரனே
புற்றினிலீசல்போல் பொங்கிராக்கத
ரித்தனை மகுடவ ரீர்ந்திடென்றனள்.

(இ-ள்.) நல்லதவமாகியவிபூதியை துர்க்காபரமேஸ்வரியளித்து நடக்கப்பட்ட அக்கினிக்குதிரைமேலேறிய வீரவன்னியனே இன்றைத்தினம் புற்றிலிருந்து யீசல்புறப்பட்டதுபோலமகாகோபமாக ராக்ஷதவெள்ளம் பரவிவருவார்கள் அவர்களையெல்லாஞ் சங்கரித்து வாருமென்றாள் துர்க்கை எ-று. (உ)

காரணிமலர்ப்பதங் கருத்திலெண்ணியே
வாரணிமூர்மக வான்மருகனுஞ்
சீரணிநற்புயச் சேனைசூழ்ந்திடக்
கூரமர்க்கோலமுங் கொண்டுநின்றனன்.

(இ-ள்.) துர்க்காபரமேஸ்வரியின் பாதத்தைமனதில்நினைந்து வெள்ளையானையேறியதேவேந்திரன்மருமகனானவீரவன்னியன் தன்னுடைய புசபலபராக்கிரமமான சேனாசமுத்திரஞ் சூழும்படியாக யுத்தகோலங்கொண்டு நின்றான் வீரவன்னியன் எ-று. (ங)

அளவிடாக்கருவியை யணிவகுத்துளங்
கனியுடனிருப்பவக் கயவரேறின

ரளங்கருவ்வரையென சமரைநாடியே
கிளம்பின்முகிலிடி கெர்ச்சித்தென்னவே.

(இ-ள்.) அளவில்லாதசேனையை யணிவகுத்து மனக்களிப்ப டைந்து வீரவன்னியர்நிற்கும்போது கருமலைபோல ராக்ஷதசூரர் கள் போர்க்களத்தைநாடி மேகத்தில்இடியிடித்துக்கெர்ச்சிக்கிறது போலப் புறப்பட்டார்கள் எ-று. (௪)

குணதிசைப்பரவைகள் கொதித்தெழும்பியே
தணிபுவியனைத்தையுஞ் சாடுவன்மானவே
றிணிபுயவவுணருஞ் சினநன்தெழும்பி
மணிமுடிவீரனை வளைந்துகொண்டனர்.

(இ-ள்.) கிழக்குசமுத்திரமானது கொதித்தெழும்பி பூமிகளி லேபரவி யாவையுமடித்துப் போடுகின்றதுபோல பராக்கிரமமு டைய தோளுடைய ராக்ஷதசேனைகள் மகாகோபத்துடனேயெழு ம்பிவந்து நவமணிகிரீடமுடைய வீரவன்னியன் அவனுடைய சே னைகளைச் சுற்றிவளைத்துக் கொண்டார்கள் எ-று. (௫)

வந்திடுங்கயவரை மன்னன்சேனைகள்
பந்திகள்திரட்சியாய்ப் பலரைவாளியால்
சிந்தினரவுணரு சீறித்தண்டினல்
அந்தரமழையென வமர்செய்தானரோ.

(இ-ள்.) வந்தராக்ஷதசேனைகளை வீரவன்னியராசனுடையசே னைகள் மகாகோபத்துடனே கெர்ச்சித்து பராக்கிரமமாகபாணத் தைப் பிரயோகஞ்செய்தார்கள் ராக்ஷதருமகாகோபமாகித்தங்கள் தெண்டாயுதத்தினலே ஆகாசத்திலிருந்து மழைசொரிவதுபோல பாணங்களைச்சொரிந்து சண்டைசெய்தார்கள் எ-று. (௬)

ஒருவருக்கொருவர் பின்னேடிடாமவர்
பொருதுவரொருகணப் பொழுதின்முன்னமே
கருமுகிலவுணரைக் காற்றிற்பூளையென்
றுருகிடவெய்தன ருக்கிரவீரனே.

(இ-ள்.) ஒருவர்க்கொருவர் தோர்வையாகி பின்னிட்டோடா மல்படிக்குச் சண்டைசெய்து கணப்பொழுதின் முன்னேதானே கரியமலையாகிய ராக்ஷதசேனைகளைக்காற்றிலே பூளைப்பூப்பறந்தோ டுகிறதுபோல அவாள்சரீரம் முறுகும்படியாகப் பாணந்தொடுத் தார்கள் உக்கிரமாகிய வீரனுடைய வெள்ளங்கள் எ-று. (௭)

மதியணிசடையரன் வரத்திற்றோன்றிய
கதிசிலைவீரரின் கனத்தவாளியாற்
பதியவுணப்படைப் பாரில்வீழ்ந்திட
வதிபகட்டொலியென வவுணரோடினூர்.

(இ-ள்.) சந்திரனையணியப்பட்ட பரமசிவனுடையவரத்தினூலே தோன்றப்பட்ட சூரியப்பிரகாசமான பாணங்களையுடையவீரவன்னியனுடையசேனைகள் பாணங்களினூலே ரத்தினபுரியிலிருக்கப்பட்டராக்ஷதவெள்ளம் பூமியில்மடிந்துவிழுவதைக்கண்டுசந்திக்கப்பட்ட சமுத்திரமுழக்கம்போல ராக்ஷதர்களோடினூர்கள் எ-று.

கண்டனன்கெம்பனும் கண்சிவந்திட
சண்டனுமென்னவே தனுவளைத்தவான்
அண்டருநடுங்கிட வழலினன்றிரள்
கொண்டலின்மழையென கொதிப்பவெய்தனன்

(இ-ள்.) ராக்ஷதசேனைகள் ஓடுகிறதைக்கண்டு கெம்பாசூரனூனவன் கண்செவேலென்றுசிவந்து எமனைப்போல ஆக்கிரமித்து தன்கையிலிருக்கின்ற வில்லைவளைத்துதேவாதிகள்கலங்கும்படியாக அக்கினியாஸ்திரங்களை மேகம்பொழிவதுபோல அக்கினிச்சுவாலை மூடும்படியாகத் தொடுத்தான் எ-று. (௬)

கூற்றுவனவுணரின் கொடியவெஞ்சரஞ்
சிற்றியவிழியினூற் கண்டுநீறெழ
நாற்றிசையதிர வான்றேர்நடத்தியே
பாற்றியவீரனப் பதிதன்முன்சென்றான்.

(இ-ள்.) எமனூகியராக்ஷதன் கொடுமையான அக்கினியாஸ்திரத்தைக் கண்ணூலேகண்டு தீயெழும்பும்படியாக நாலுதிசைகளும் அதிரும்படி ஆகாசமுலாவிய தேரைநடத்தி ராசாவாகிய வீரவன்னியன் கெம்பாசூரன்முன்னே போனூன் எ-று. (ய)

கடுஞ்சிலைவளைத் தழற்கணைதொடுத்துவிண்
ணடுங்கிடவக்கினிச் சரமொன்றெய்தனன்
கொடுந்தொழிலவுணனுங் கொதித்திடுங்கணைப்
படிந்திடச்செய்தொரு வாளியெய்தனன்.

(இ-ள்.) உக்கிரமாகிய வில்லைவளைத்து நாணிபூட்டி அக்கினியாஸ்திரந்தொடுத்து ஆகாசம்பூமி நடுங்கும்படியாக மந்திரஉபதேசத்துடனே பிரயோகஞ்செய்தான் கொடுமையாகியபாவத்தொழி

னுடையராக்ஷதனும் யக்கினிக்கணைகளைபடியச்செய்து மறுபடியும் ஒருபாணமேவினான் எ-று. (கக)

வந்தவெஞ்சரந்தனை மன்னர்வீரனுஞ்
சிந்திடவருண வாளியைதெரித்தனன்
அந்திருளாகினு மதித்தியாகிய
மந்தரமொன்றினை மன்னன்மேலெய்தான்.

(இ-ள்.) ராக்ஷதன்விடுகின்ற அக்கினியாஸ்திரங்களை வீரவன்னியன்கண்டு எங்குஞ்சிதறிப்போகும்படியாகத் தன்னுடையகையிலிருக்கின்ற வருணாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகஞ் செய்கிறபோது கருமலையாகிராக்ஷதன்யதிரும்படியாய் மகாமேருபோன்ற பருவதத்தைப்பிடுங்கி ராஜன்பேரிலே யெறிந்தான் எ-று. (கஉ)

வரையெனவொலிபட வீரன்வாடிட
கருவிதண்டாயுதங் கணத்திலேவினன்
விரிவுளசக்கரம் வீசதண்டினை
யொருதிகெம்பீரனைப் பிளந்தெறிந்ததே.

(இ-ள்.) ராக்ஷதன்பிடுங்கியெறிந்த மலையைப்பொடிபொடியாய் வீரவன்னியன்பாணத்தினாலே வாட்டும்போது ராக்ஷதன் ஒருதண்டாயுதத்தைக் கணப்போதிலெடுத்தெறிந்தான் விரிவாகிய சக்கரத்தை எடுத்துளறிந்தான் வீரவன்னியன்விடுத்த தெண்டாயுதத்தைக் கீழேவிழத்தள்ளி கெம்பாசூரனைப்பிளந்து சிரசுகீழேவிழும்படியாகச்செய்தான் எ-று. (கங)

கெம்பவுணன்சிரங் கெர்ச்சித்தேவிழி
வம்புசெயவுணரை வாளியொன்றினல்
கும்பலாக்குவித்துக் கெம்பனின்
தம்பியாங்கெசமுகன் சமருக்கேகினன்.

(இ-ள்.) கெம்பாசூரன்தலை கொக்கரித்துக்கீழேவிழுகிறபோது வம்புசெய்யப்பட்ட ராக்ஷதசேனையெல்லாவற்றையும்ஒருபாணத்தினாலேமடித்தபோது ராக்ஷதபிணம் கும்பல்கும்பலாய்க் குவித்துவீரனவன் மகாகோபத்துடனே நிற்கிறபோதுகெம்பாசூரன் தம்பியாகிய கெஜமுகாசூரன் சண்டைசெய்யும்படியாக போர்க்களம்வந்தான் எ-று.

கெம்பாசூரன் யுத்தம் முற்றிற்று.

ஆகபாயிரம் உட்பட சருக்கம் உகு-இ

திருவிருத்தச் செய்யுள் எ அ0.

உ

கடவுள் துணை.

# இருபத்து மூன்றாவது.

# கெஜமுகாசூரன் யுத்தம்.

## ஆறு நாள்

மானிடனொருவனல் மடிந்தராக்கத
சேனையிற்கரந்திடுந் தீயர்சூழ்ந்திட
வானுலகதிர்ந்திட வளைத்துவெஞ்சிலை
வேனைவின்வாளியை வடுத்திட்டானரோ.

(இ-ள்.) மனிதனொருவனாலே யிறந்துபோன ராக்ஷதசேனையிலேசிலர் ஓடிப்போயிருந்த ராக்ஷதர்சிலர்மறுபடியும்வந்துசூழ்ந்திட ஆகாசமதிரும்படியாகவந்து சுற்றிவளைத்துக்கொண்டுவெண்மையாகியபாணங்களும் அக்கினியாஸ்திரங்களும் எடுத்துஏவினார்கள்.

வீரன்மேல்விடுஞ்சரம் வெம்மையாகவிப்
பாரெலாமெரிந்திடும் பாண்மைகண்டுளஞ்
சீறியோர்சூலமுந் தெறிப்பசாடியே
தேரினையுடைத்திடத் தீரன்கண்டனன்.

(இ-ள்.) வீரவன்னியன்மேல் விடப்பட்டபாணங்களானது அக்கினிச்சுவாலையைக் கக்கிக்கொண்டிருந்த பூமியெல்லாவற்றையும் எரித்துக்கொண்டுவருகிற பராக்கிரமங்களைக்கண்டு மனங்கொதித்து ஒருசூலாயுதமெடுத்தெறிந்தான் வருகின்றபாணங்களை அறுத்துகெஜமுகாசூரனுடைய தேரையுமுடைத்துப் போட்டதைக்கண்டான் கெஜமுகாசூரன் எ-று. (உ)

மற்றொருதேரினி லவுணனண்ணவும்
அற்றையுமுடைத்தன னழகன்சீறியே
குற்றமாங்கெஜமுகன் கொம்பில்வானரம்
பற்றிப்பாய்ந்ததுவென ரதத்திற்பாய்ந்தனன்.

(இ-ள்.) மறுபடியும் ஒருரதத்தின்மேலேறினான் அதையும் பொடியாக்கினான் அதைக்கண்டு கெசமுகாசூரனனவன் மகாகோபமாய் மரத்தின்கிளையிலே குரங்கானது எப்படிப்பாயுமோ அதுபோல் தேர்பொடியாகிறபோதுபாய்ந்தான் எ-று. (௩)

ஆயிரமிரதமே லவுணனேறவுங்
காயும்வெஞ்சிலையினாற் கடிந்தவீரன்மேற்

பேய்முகம்பிணுகமாம் பகழிதூற்றிட
நேயமாம்பிண்டி பாலத்திற்றடுக்கினுன்.

(இ-ள்.) ஆயிரம்தேரிலேயும் கெஜமுகாசூரன் தாண்டித்தாண்டியேறும்படியாக ஒருபாணத்தினுலே கொடுமைசெய்யப்பட்ட வீரவன்னியன்பேரிலே பேயாகியமுகமுடைய ராக்ஷதன்பிணுகத்தை யெடுத்தெய்தான்வீரனுனவன் பிண்டிபாலம்விட்டுராக்ஷதனுடைய பிணுகபாணத்தை விலக்கினுன் எ-று. (௪)

அங்குசாயுதந்தனை யெடுத்துவீரன்மேல்
சங்கரன்கணையினுற் றடுத்துதன்சரந்
துக்கவானுலகிற் றுள்ளிவீழ்ந்திட
கங்குலாங்கெஜமுகன் கணத்தின்மாய்ந்தனன்.

(இ-ள்.) அங்குசாயுதமெடுத்து வீரவன்னியன்பேரில் ராக்ஷதன்எறிந்தான் அதைப்பரமசிவனுடைய பாசுபதாஸ்திரத்தினுலே தடுத்து அவனுடையபராக்கிரமமான தலையையறுத்து ஆகாசத்தில்முட்டி கீழேவிழுந்திடும் படியாகச்செய்து இருட்டுபோலிருக்கும் கெஜமுகாசூரன் கணப்பொழுதில் மடிந்தான் எ-று. (ரு)

அந்தோவெனச் சூரரழுதிடவும்
குந்தாயுதங்கோடி தெரித்திடவுஞ்
சிந்தாகுலமாகிய தீயரினம்
பந்தாகவந்திருந்து மடிந்ததுவே.

(இ-ள்.) அய்யய்யோவென்று ராக்ஷதசேனைகளெல்லாம் அழுதுமுறையிடக் குந்தாயுதங்களையெடுத்து வீரவன்னியனுடைய சேனைகளெல்லாம்பந்தடித்து அதிர்ந்துகீழேவீழ விழுகின்றபாணம்போல மண்மேலேமடிந்து போனுர்கள் எ-று. (சு)

முண்டங்களுருண்டிட முத்தன்மகன்
கொண்டானெரு கோளரியார்த்ததெனக்
கண்டோரிவனெரு காலவயிரவனு
மண்டாதவன் சினமாகினனே.

(இ-ள்.) ராக்ஷதனுடைய முண்டங்கள்பூமியிலேகடகடவென்று உருளும்படியாகபரமசிவன் பாலனுகிய வீரவன்னியன் சிங்கம்போலரூபங்கொண்டு கெர்ச்சித்துவருகிறதைக் கண்டபேர்களெல்லாம் இவன்காலவயிரவரென்று யாவருமஞ்சிடக் கோபாக்கினியானுன் எ-று. (எ)

கெஜமுகாசூரன் யுத்தம் முற்றிற்று.

ஆகப்பாயிரம்உட்படச்சருக்கம் உ௪-க்கு

திருவிருத்தச்செய்யுள் எ அஎ.

கடவுள் துணை.

# இருபத்துநான்காவது.

# கும்பாசூரன் யுத்தம்.

## ஏழாநாள்.

கும்பாசூர னென்னுங்கொடுமதி
யிம்போருக வென்றொருயஸ்திரமுஞ்
சம்பேசன்றனையன் மேலெயகிடவுஞ்
செம்பாரெனுந் தேவர்திகைத்தனரே.

(இ-ள்.) கும்பாசூரன் என்னப்பட்டவன்கொடுமையாகியபிர்மாஸ்திரமெடுத்துபரமசிவன்பாலன்பேரிலெய்கிறபோதுபொன்னுட்டில்வாழுந் தேவர்கள்மனதுதிகைத்து துயரப்பட்டார்கள்எ-று.

சஞ்சீவியெனுங் கணைசாற்றிடவும்
பஞ்சாகிப்பரந்திப் புவிபடிய
நஞ்சாமெனநாகக் கணைதொடவும்
செஞ்சாயகலுழுனற் சேதித்தனனே.

(இ-ள்.) சஞ்சீவியென்னப்பட்ட பாணமெடுத்து பிர்மாஸ்திரத்தின்பேரில்விட்டான் அந்தபிர்மாஸ்திரம்பொடியாகப்பறந்ததைக்கண்டு ஆலகாலவிஷமுடைய நாகாஸ்திரமெடுத்து பிரயோகஞ்செய்தான் அதைவீரவன்னியன் சிகப்புநிறமுடைய கருடாஸ்திரமெடுத்து நாகாஸ்திரத்தின்பேரில் விட்டான் அந்தநாகாஸ்திரம்மடிந்தது எ-று. (௨)

பாந்திடக்கணையா லரவம்பரவக்
காந்திககலுழன் கணையால்மடிய
வேந்தன்பிரமாஸ் திரம்வீசிடவே
பேர்ந்தானுயிர் பில்லியனெனவவுணன்.

(இ-ள்.) நாகாஸ்திரத்தை வீரன்பேரிலேயெய்ய அதிலிருந்து நாகங்களனேகம் பரவிவந்ததைக்கண்டு கருடாஸ்திரத்திலிருந்து அனேகங்கருடன்பிறந்துநாகங்களைவிழுங்கிப் போட்டவுடனேவீரவன்னியன் பிரமாஸ்திர மந்திரோபதேசஞ்செய்துபலன்கட்டிகும்பாசூரன்பேரில்விட அதுராக்ஷதன் சிரசைத்துண்டிக்க நீச்சனுகியசூரன் எ-று. (௩)

அத்தன்றருமஸ்திரம் வீரமதால்
சுத்தும்படை தூளதுசெய்திடவே
சித்தங்கொடு சம்புவிமாலியெனுங்
குத்தங்களிதாமென குன்றினனே.

(இ-ள்.) பரமசிவனளித்த பாணத்தினாலே சுத்தியிருக்கும் ராக்ஷதாளொழும்பிசிற்க மனங்கெட்டுப்போன சம்புமாலி யென்னப் பட்டவனுங்கண்டு இதுநமக்கு பொல்லாதகாலமென்று மனது குன்றினான் எ-று. (ச)

## கும்பாசூரன் யுத்தம்.

முற்றிற்று.

---

ஆகபாயிரம்உட்படச் சருக்கம்-உரு-இ

திருவிருத்தச் செய்யுள் எகூக.

கடவுள் துணை.

## இருபத்தைந்தாவது.

# சம்புமாலியுத்தம்.

## எட்டாநாள்

தாதைத்தவமண்டிய தாஷ்டியினாற்
றீதுற்றனமென்று சினத்திடவிப்
போதிற்படை போக்கினன்போதனெழு
தீதுற்றனவோனுஞ் சிந்தையினன்.

(இ-ள்.) தன்னுடையதகப்பன் வாதார்விசூரன் செய்ததவபல த்தினாலே ஒருகுற்றங்களுமில்லாமல் செல்வத்தை யடைந்திருந்தா ன்இப்போதுதேவாதிகளுக்கு இடுக்கண்செய்தபடியினாலேசேனாச முத்திரமுழுமையுமடியச்செய்தான்எதனாலென்றால்பிர்மாவினுடை யஎழுத்தினாலே யென்று சிந்தையுடையவனானன் சம்புமாலிஎ-று.

சதியானவமைச்ச ருரைத்தவிர
மதிகேடனன்வானவர் பாலிடர்செய்
ததினாற்கண்டிட தாண்மையெனு
சதமல்லவெனாவுரை சாற்றினனே.

(இ-ள்.) சதியேகுடியாயிருக்கப்பட்ட மனதுடையமந்திரிமா ர்கள்சொல்லைத்தவறாத புத்திகெட்டவாதாவியானவன் தேவாதிக ளுக்கு விடார்வினைத்தபடியினாலே யிந்தபகைவந்து நேர்ந்தது யாவ ருக்கும் ஆணவமாகாதென்றான் சம்புமாலி எ-று. (உ)

சிறுதந்தையர் நால்வரைசாடினபின்
பெருகுந்தளமொன்று பிழைத்திலரென்
றுரியத்துணைமூவர் மடிந்தனன்யான்
ஒருவன்றனித்தென்ன வுயிர்பிழையோம்.

(இ-ள்.) சிறியதந்தையிர் நாலுபேர்களுமடிந்தபின்னால் வந்த சேனையுமடிந்து உரிமையானசகோதராள்மூன்றுபேர்மடிந்துபோ னார்கள் நானொருவனுந் தனித்திருந்தாலென்னபலன் நாமுமந்தப் படியே நம்முடையசீவனும் பிழைக்காதென்றான் சம்புமாலிஎ-று.

வீரன்றிணிதானுவர் சேர்ந்திலீரவுண
பாரிற்களிகூர்ந்தனர் பட்டவுணர்

சோரிக்கடலோடி சுற்றக்கடலில்
நீரிற்கலத்த நிண்ணயமே.

(இ-ள்.) வீரவன்னியனுடைய சேனைசமுத்திரத்திலொன்றுவது மாளவில்லை ஆகாசத்திலதேவர்கள் களிப்பாகவிருக்கின்றார்கள்செத்துப்போனராக்ஷதருடைய இரத்தமானது கடலிலோடிக்கலந்து நிறைந்தது எ-று. (௫)

ஆதாளியெனு மவுணதிபரை
தாதைச்சதிசெய்து தழைத்தனனல்
போதார்மதிசூடும் புனிதன்றரு
நாதன்வலியே நலமாமென்னே.

(இ-ள்.) பேய்முகமுடையராக்ஷதரைநம்முடையதகப்பன்சதிசெய்து மடித்துப்போட்டு சந்தோஷமாகவிருக்கிறான்கொன்றைப்பூமாலையும்இளஞ்சந்திரனையுஞ்சடையிலணிந்தபரமசிவனளித்தவீரவன்னியர்கள்பராக்கிரமமே நலமாயிருக்கிறதென்றான் சம்புமாலி.

## வேறு.

எண்ணிலாவவுணரிறந்தனர் துணையெழிலினையகன்று விண்போந்தார், கண்ணினிற்கண்டு கடிந்திடாதிருப்ப காசினியோரிகழிசைப்பார் அண்ணல்வாதாவி சூரனோடுரைப்ப வகங்கொதித்தாக்கினையளிப்பன் திண்ணமாமலர் செய்திவன்கரத்தாலென் சிவனையிழப்பதே செயமாம்-

(இ-ள்.) எண்ணிமுடியாதராக்ஷதர்மடிந்தார்கள் சகோதரர்கள் பராக்கிரமமகன்று தெய்வலோகம்போனார்கள் இதுகளைக் கண்டு அவாளிடத்திலே நாம்சண்டைசெய்யாமலிருந்தால் பூலோகத்தார் இகழ்ச்சியாகப்பேசுவார்கள் வாதாவிசூரனிடத்தில் சத்துருவின் வலிமையைச்சொன்னால் கோபத்துடனேசம்மாரஞ்செய்யச்சொல்லுவான் இவைகளினாலேகாரியமில்லை நம்முடைய பராக்கிரமத்தினாற்சண்டைசெய்து வீரவன்னியன்பாணத்தினாலே சிவனைவிடுகிறதுசெயமாகியதுபோ லிருக்கிறதென்றான் சம்புமாலி எ-று. (௬)

என்றுளத்துணர்ந்தோ ரிரதமேலேறி யிணையிலாச்சிலைதனைவளைத்து, குன்றினையுருக்குங்கொடியவேனாட்டி கோதிலானுருவினைச்செபித்து, வென்றிசேர்வீரனுரமதினாட்ட வீரனவ்வேலினைத் தடுத்து நன்றுறுசூல மெடுத்துவிட்டெறிந்த னடுங்கினனற்றிசை மாதோ.

(இ-ள்.) இப்படிக்குத் தன்னுடையமனதில் சம்புமாலிகினைத் துரைநாகேரேறிக்கொண் டிணையில்லாதவில்வளைத்துமலையைபுருக்கி வாட்டுகின்ற வேலாயுதத்தைப்பூட்டி நாணேற்றிமந்திரத்தை ஏற்றி வீரவன்னியனுடைய மார்புக்குச்சரியாக இலக்குபார்த்தே விஞன் வேலாயுதம்வருகிறதைக்கண்டு வீரவன்னியன் ஒருபாணத் தால்தடுத்து ஒருசூலாயுதம்விட்டெறிந்தான் அந்தசூலாயுதம் வருகிறவேகத்தினுலே நாலுதிக்கும்நடுங்கிற்று எ-று. (எ)

விடுத்தசூலமுமாவனல் கொதித்தெழுந்துமேவல் சம்புமாலியனை
நடுக்கியேசென்னி துடித்திடவாட்டி நன்றிடாத்தீயரைநறுக்கி
வடுப்படவீரர் வலக்கரத்துறைய வானவர்பூமலர்பொழிய [ப்பாம
விடுக்கமற்றிருந்தா னிவர்களிங்கிருப்பவியக்கர்கோனியலினயிசை

(இ-ள்.) வீரவன்னியன்விட்டசூலாயுதமானது அக்கினிகொதித்துஎழும்பி சத்துருவானசம்புமாலியின் தேகத்தில்தைத்துதலை துடித்திடவெட்டிகீழேபோட்டு இன்னமிருக்கின்ற ராக்ஷதரையும் நறுக்கிவடுப்படாத வீரவன்னியன் வலதுகையில் வந்திருந்தது அதைக்கண்டுதேவர்கள் பூமாரிபொழிந்து தங்களுக்குஒரு இடுக்கணில்லாமல் சுகமாகஇருந்தார்கள் அப்படியிருக்க இனிவாதாவிராக்ஷதசூரனுடைய வரலாறுசொல்லுவோம் எ-று. (அ)

பேசிடாமூலபலமெனும் படையும்பிள்ளையு மடிந்தனரன்றே
நேசமாமொற்ற ருரைத்திடக்கேட்டு நீணிறமலையெனும்வாதாவி
பாசமுமற்றுப் பலமெலாமொடுங்கிப் பதித்திடுமணிமுடிதெரிப்ப
வாசமாம்புதல்வ ரெறிலினைநினைந்தே வரற்றுவன் மந்திரநடுங்க

(இ-ள்.) சொல்லிமுடியாதமூலபலமும் பிள்ளைகளும்மடிந்தார்களென்று நேசமானவர்கள் சொல்லக்கேட்ட கருமலைபோலிருக்கப்பட்ட வாதாவிசூரராக்ஷதன் தன்னுடையஆசைகளைநீக்கி பராக்கிரமும் ஒடுங்கிபோகத் தன்சிரசிலணிந்த கிரீடமுந்தெரித்துப்போக ஆசையுடையபிள்ளைகளழகும் பராக்கிரமங்களையும்நினைந்துஆகாசமுநடுங்கும்படியாய் அழத்தொடங்கினன் வாதாவி எ-று. (கூ)

என்னுயிர் துணைவ ரிறந்தனரெனவே யெழிலகற்றிதயமுஞ் சோரு
முன்னமேவலிமைமிகுந்திடவுரைத்து முடிபுனைந்திரதமேற்கொண்
தன்னிணையில்லா ரதகஜதுரக தளத்துடனேகிய களிப்பா [டு
லின்னினையகற்றி யெண்ணினகோடி யெரிகணைமூட்டிநீரென்றான்.

(இ-ள்.) எனக்குஉயிர்க்குபிராய் இருக்கின்றதம்பிமார்கள் இறந்துபோனார்களென்று தூதர்சொல்லக்கேட்ட வாதாவிதன்னு

டைய மனதுசோர்ந்து அடாதம்பிமார்களே உங்களுடைய பராக்கிரமங்களை என்னிடத்தில்சொல்லி கிரீடமணிந்துதேரேறிஒருவருநிகரில்லாதவராய் யுத்தத்திற்குப்போகின்ற உக்கிரத்தைக் கண்டு மனதிலேகோடிஆசையை எண்ணியிருந்தஎன்வயிற்றிலே தணலைமூட்டிவிட்டீர்களே யென்செய்வேன் தம்பிமார்களேயென்றுன்வாதாவி எ-று. (ம)

துண்டெனுந்தோளுங் கோரமாமுகமுங் குனிசிலைகரமதினெழிலும்
வென்றிசேர்மலரும் வீரமுமவனி மிகுத்திடுஞ்சூறையும்விடுத்து
இன்றமர்புரிந்தே யிணையிலாநரனலிடருறவாகுமோமகனே [தான்
என்றுரையினிமேல்வென்றிடாவொருவர் நானிலதிலையெனவுரைத்

(இ-ள்.) மலைக்குச்சமதையாகிய தோளும் அகோரமானமுகமும்வளைவான வில்பிடித்தகையும் வெற்றிபெறப்பட்ட வீரமும் பூலோகங்களிற்போய் சகலவளங்களையும்கொள்ளையடிக்கின்றபராக்கிரமங்களும்விட்டு சண்டைசெய்யநமக்கு யிணையில்லாதநரமனுஷனுடைய பாணத்தினாலே உயிரிழக்கலாமோ மக்களேயினிமேலெனக்கு நல்விசேஷங்கள்சொல்ல இந்தபட்டணத்தில் ஒருவராகிலும் எனக்கில்லையேயென்று அழுதான்வாதாவி எ-று. (கக)

பண்டுவில்வலனை பரமுனிமுடிக்க பசுபதிமலரடிபணிந்தே
பண்டொணுதரணி யருந்தவம்புரிந்து மதிலுற்றவலிமையாள்பெற்
றன்றுளநகர மயனளித்தபின்னற் றவசச்சுங்களுனும்மைப் [றேன்
பொன்றொடிமனைவியளித்திடவவனுமுழகினில்நிரம்பிடமிகுத்தேன்

(இ-ள்.) முன்னாலே யென்னண்ணனாகிய வில்வலனை அகஸ்தியமகாரிஷியானவர் சீரணிக்கச்செய்தாரென்று மனதிலேவியசனமாகிபரமசிவனுடைய மலர்ப்பாதத்தைநினைந்து ஆகாசமுலாவிய கம்பம்நாட்டி ஊசிநிறுத்தி அதின்முனையிலேதலையையூன்றிக் காலைத்தூக்கி அரிதாகியதவஞ்செய்து பரமசிவனைக்கண்டு அதிகவரங்களைபெற்று நன்மையாகியபட்டணத்தை அசுராமயனாகிய பரமசிவன்சிருஷ்டித்துக்கொடுக்க சுக்கிராச்சாரியார் அனேகராக்ஷதவெள்ளங்களையுந்தம்பிகளையும் அளிக்கவும் உங்கள்நாலுபேரையும் என்மனைவிவயிற்றிலே நாலுபிள்ளைகள்பிறந்தும் இன்னமுமனேகம்ராக்ஷதவெள்ளங்களையும் பூமியிலேநிரம்பியிருக்கப்பெற்றேன் எ-று. ()

அட்டபாலகரு மமரருமரியு மயனுடனுலகினி லடக்கி
மட்டிலாதேவர் தொழில்புரிந்தேற்ற மணிமுடிபுனைந்தரசுற்றே[ன்
இட்டபாக்கியமுங்குறைவிலாதளித்தவென்னுடசெல்வமேயினியெ
கொட்டமுமடங்கிகுன்றினேனந்தோகோதிலாசிறுவரேயென்றுன்

(இ-ள்.) அஷ்டதிக்குப்பாலகரையுந் தேவர்களையும் விஷ்ணு பிரமாஇவர்களைச் சிறைச்சாலையிலேயடைத்து அளவில்லாத ஊழி யஞ்செய்யச்சொல்லி நவமணிக்கிரீடம் அணிந்து செங்கோல்செலு த்தி இஷ்டபாக்கியங்களுடனே குறைவில்லாத வைபோகங்களும் நீங்கள்கொடுத்ததினாலே வெகுமகிழ்ச்சியடைந்திருந்தேன் என்னு டையசெல்வமாகிய மக்களேயினியென் கொட்டமானது துஷ்டந டத்தையைவிட்டுவிட்டு தேகங்குறைந்தேன் ஐயோகுற்றமில்லாத பிள்ளைகளே யென்றான்வாதாவி எ-று. (கங)

நகரிருந்தென்ன நவமணியமைச்சர் நங்கையரரசுகளென்ன
பகைவரைக்கடிந்தேன்பலமிருத்தென்னபரிசையுன்பாலர்களில்லா
வகமிருந்தென்னவவமெனவுரைப்பாரறிவுளவாகமநெறிபோ [ுன்
ருகமைமெய்யாகத்தெளிந்தனனென்றேயொளிவுளதனையரேயென்

(இ-ள்.) இரத்தினபுரியும் ரத்தினமணியணிந்தஸ்திரீகள்ராசர் களுமிருந்ததினா லென்னபலனுண்டாகுஞ்சத்துருக்களைவெற்றிபெ ற்றும்என்னபலன் பிரகாசமானபிள்ளைகளில்லாதவீடிருந்தாலென் னமுன்னாலெனக்கு பெரியோர்கள்சொல்லிய புத்திகளெல்லாம்மெ ய்யாக இன்றைக்குமனதுதெளிந்தேன் பிள்ளைகளேயென்றான் வா தாவி எ-று. (கச)

கரிபரியிரதங்கணக்கிலாதளமுங் கணத்தினிற்கயிலையோனளித்த
பெருமைசேர்பாலராருமையைத் தள்ளிபேருலகதனிலினிருந்தே
னிருசிறகில்லாபறவைபோலானே னெனக்கொருதுணைகளுமில்லா
வரசிருந்தென்னவடுக்குமோமகனேயானிதோவருகின்றேனென்றா

(இ-ள்.) யானைகுதிரை தேர்முதலாகியகூட்டங் கணக்கில் இவ் வளவென்று சொல்லலாகாதசேனையை ஒருக்ஷணத்திலேகயிலையில் விளங்கப்பட்ட பரமசிவனளித்தபெருமைபொருந்திய பிள்ளைகள் உங்களையுமடித்துப்போட்டார்களே இந்தரத்தினபுரியில் நானிரு ந்து ஆளுகிறதெப்படியென்றால் இரண்டுசிறகுமில்லாதபறவைபோ லாகினேன் எனக்கொருதுணையுமில்லையே ராச்சியபாரஞ்செலுத்த ப்பட்ட செங்கோலிருந்தென்ன இனிமேலெனக்கடுக்காதுநானும் உங்கள்பின்னாலே யிதோவருகிறேன் என்றான்வாதாவி எ-று. ()

மன்னன்வாதாவிமனத்துயரடைய மந்திரிமார்களுந்தேற்றி
நன்னெறியுரைப்பாய்நாதனேயென்ன நடத்தைசெய்திருந்ததுமா
சின்னவானரும்நரர்களுநகைப்பர் திணிபுயமகன்றிடலாமோ [னால்
பன்னகாபரணன்பாலரைக்கொன்று பரிவுளமகிழ்ச்சிசேரென்றான்

(இ-ள்.) இராசாவான வாதாவிசூரராக்ஷதன் மனதிலே மகா துயரமடைந்திருக்க அதிலிருக்கும்மந்திரிகள் மனந்தேறும்படியா கநல்ல நீதிகளைச்சொல்லுவார்கள் ராசனேயென்னகாரியஞ் செய் தீர் உம்முடையமனது யிப்படிக்குநலிவடைந்தால் சிறுமைபான தேவாதிகளும் நரர்களும்நகைப்பார்கள் உம்முடைய மனவலிமை விடாமல்இருக்கவேணும் அரவாபரணனாகிய பரமசிவனுடையபிள் ளைகளைமடித்து மனதுமகிழ்ச்சியடைகிற காரியங்களைப்பாருமென் றார் மந்திரிகள் எ-று. (கசு)

வீரமுகமன்றவேந்தரைக்காணே மேதினிபுரந்தனரனேகர்
தீரமுமிகுத்தசீர்த்தியையுணர்ந்து சிந்தனையடைவதோயின்றென்
சூரமுமறிந்துகழியுலேயுந்தன் றுயரமுமகற்றுவீரிந்த
தாரணிமுழுதுமுன்கரத்திடுவேன் றனுவின்வலிமையாலென்றான்.

(இ-ள்.) பராக்கிரமங்களைப்பற்றிய ராசாக்களைக்கண்டதில்லை யேயிந்தபூமியிலே அனேகம்ராசாக்கள் ராச்சியபாரஞ்செய்து மா ண்டார்கள் உம்முடையதைரியமும் பெருமையுங்கீர்த்தியும் அறி ந்தராசனெ துன்பமானதுயரத்தை யடையலாமோ யின்றைக்கெ ன்னுடைய பராக்கிரமத்தை யறியப்போகிறீர் உம்முடையதுயரத் நீக்கிப்போடுவீர் இந்தபூமியையெல்லாம் ஆளும்படியாய் உமக்கே முடிசூட்டிவைக்கிறேன் என்னுடையகைவில்லின் வலிமையினாலெ ன்றான் மந்திரி எ-று. (கஎ)

உந்தனுமாமன்சூரபத்மன் றன்னுடலிழந்திடமனவுரஞ்செய்
தந்தவேவிரகமஞ்ஞையாக்கந் தன்றயங்கவேசித்திபெற்றதுகண்
டிந்தநாளிதையமழுங்குவ துளதோவின்பமுந்துன்பமுடிரண்டும்
வந்ததையனுபவிப்பதுசெங்கோன்மனுநெறியியற்கையாமென்றான்

(இ-ள்.) உம்முடையமாமனாகிய சூரபதுமன் தன்தேகமழிகிற வரைக்குந் தைரியம்விடாமல்சண்டைசெயதுசுப்பிரமணியர்வேலா யுதத்தினாலே இரண்டுபிளவாகப்பிளந்து ஒருபிளவுமயிலாகவும்மற் றொருபிளவு கோழியாகவுமாகிஅந்தமயிலேவாகனமாகியுங்கோழி கொடியாகவும் சுப்பிரமண்ணியருக்கு புகழ்ச்சியாயிருப்பதுங் கே ட்டிருப்பீர்களே அப்படியிருக்கவிந்தநாளிலே உம்முடையமனது மாழ்கிப்போகலாமோ இன்பதுன்பமிரண்டும்வந்ததையனுபவிக்க வேணும் இராசாக்களுக்கு நீதியாகுமென்றான்மந்திரி எ-று. (கஅ)

அண்டரின்பகைவரவுணரையடக்க வரனளித்தனுப்பினாருனது
மண்டலத்தணுகிமரபமர்பொருதி மாலையையணிந்தவரிருப்ப

வண்டொணுதுயரமடைந்தனையின்றே யவரிடமேகிமற்பொருதி[ர்
தண்டினையளித்துதரனியைப்புரந்தாற்றனையருமின்பழும்பெறுவா

(இ-ள்.) தேவாதிகளுக்கு சத்துருவானராக்ஷகர்செய்யப்பட்டதுடுக்கை யடக்கிப்போட்டுவரும்படி பரமசிவன்தனது பிள்ளையொத்த வீரவன்னியமகாராசாவை யனுப்பியிருக்கிறர் அவர்களுன்னுடைய பட்டணத்திலேவந்து மிருந்தசண்டைசெய்து வெற்றிமாலைபணிந்திருக்க ஒருவருமடையாத மனத்துயரம் அடையலாமோ யின்றையத்தினம் தளமெடுத்துப்போய் போர்க்களத்திலே சண்டைசெய்து அந்தவீரவன்னியர்களை மடித்துப்போட்டு அதற்குமேலிந்தபட்டணத்தை யாண்டிருக்கும்போது பிள்ளைகளையும் புகழ்ச்சியாயும் பெறலாமென்றான் மந்திரி எ-று. (௧௬)

அமைச்சர்களுரைக்கவவுணர்கோனிதயமனல்மொழுகாமெனவுருகி
தமக்கதிவீரர்விழியினருளாதோ தயாபரன்மகவினைச்சதித்தே
நிமைபினிற்கோபிலணுகுவனிருகர் நேமியிலிறந்தனறல்லாற் [ன்
சமர்செயுமூலபலந்தனையழைத்தே தளமெடுத்தேகெனவிசைந்தா

(இ-ள்) இப்படியாகமந்திரிமார்கள் தைரியஞ்சொல்லக்கேட்டுவாதாவிக்குமனதானது அக்கினியிலேகாய்ச்சிய மொழுகுபோலுருகிநமக்கு அதிகமானபராக்கிரமமுடையபேரிந்த பூலோகத்திலுண்டோ தயாளுவாகியபரமசிவனுடைய மக்களையிந்தக்ஷணத்திலே மடித்து ஒருநிமைப்போதிலே நம்முடையமாளிகைக்கு வந்துசேருகிறேன் ராக்ஷதசேனைகள் மடிந்ததுபோகஇன்னமிருக்கப்பட்ட சேனையான மூலபலங்களை வரவழைத்துக்கொண்டு உங்கள்தளங்களுடனே போர்க்களத்துக்குப்போய் சண்டைசெய்யுங்க ளென்று சொன்னான் வாதாவி எ-று.

## சம்புமாலிசூரன் யுத்தம்.

முற்றிற்று.

---

## ஆகபாயிரம்உட்படச் சருக்கம்-உ௬-இ

## திருவிருத்தச் செய்யுள் அ௧௧.

உ

கடவுள் துணை.

# இருபத்தாறுவது.

# மூலபலச் சண்டை.

## ஒன்பதாநாள்.

தாதாவின்சிரத்தையேந்துந் தாணுவினருளினாலே
வேதாவியங்கிவீரன் விடுஞ்சிலைமாரிக்கஞ்சி
வாதாவிகிளைகளெல்லா மடிந்ததோர்வாறுகேட்டு
தீதானமூலமொன்றுஞ் சேனைகள்செனித்ததன்றே

(இ-ள்.) பிரமதேவனுடைய சிரசைகையிலேந்துகின்ற அழிவி லாமலையொத்த பரமசிவனருளினாலேவேதம்விளங்க அக்கினியில் பிறந்த வீரவன்னியராஜன் விடப்பட்டபாண சரத்துக்கஞ்சிவாதா விசூரனுடைய உறவின்முறையாராகிய சேனைகள்முதலாகிய ராக்ஷ தர்களெல்லாம் மடிந்துபோன வசனத்தைக்கேட்டு மூலபலமாகச் சேனைகளடங்கலு மெங்கேபார்த்தாலும் ராக்ஷதராகவேசெனித்து நின்றார்கள் எ-று. (க)

மூலபலந்தனக்கதிபன் முகவீரசிங்கனென்பான்
காலவிடம்போலெழுந்து கண்சிவந்துநிலநோக்கி
சோலமுடனார்ப்பரித்துக் குஞ்சிரிப்புகொண்டுமிக
நீலநெருப்பாமெனவே நிற்பனமேற்களித்துநின்றான்.

(இ-ள்.) மூலபலங்களுக்கெல்லாம் அதிபதியானவீரசிங்கனெ ன்னும்ராக்ஷதன் ஆலகாலவிஷம்போலெழுந்து நெருப்புப்பொரிப றக்க நிலத்தைப்பார்த்து சேனைகள்மடிந்துகிடக்கிற அலங்கோலத் தைக்கண்டு ஆர்ப்பரித்துக் குஞ்சிரிப்புடனேசேனாசமுத்திரங்களை க்கண்டு சந்தோஷமாகநின்றான் வீரசிங்கன் எ-று. (உ)

பாரமருஞ்சூரர்களும் பரிகரித்தேர்வெள்ளமுட
னோரணியாஞ்சூழ்ந்துகொண்டே ளொருவர்களுந்திகையாமல்
சேரவெங்கும்வளைந்துகொண்டு சிலமன்னர்திடுக்கிடவே
வீரசிங்கன்றானைகளை மிகுத்தவாதாவிகண்டான்.

(இ-ள்.) பூமியிலமர்செய்யப்பட்ட ராக்ஷதனானவன்சேனைகள் யானைகுதிரை தேர்வெள்ளமொரு அணியாகச்சூழ்ந்துவரச்சேஒரு வரும் ஓடிப்போகாமல் எங்குஞ்சுற்றிவளைத்து மன்னர்கள்திடுக்கி

டும்படியாகச் சண்டைசெய்யுங்களென்றுசொல்லிக்கொண்டேவீர வன்னியன்சேனைகளை பெருமையான வாதாவிகண்டான் எ-று. ()

வேலையெனுந்தீவுகளில் மிகுமூலபலங்களையும்
காலனிவனுமெனவே களித்தசிங்கன்றனைநோக்கி
சூலமழுவாளினாற் றாளாக்கிவன்னியரை
ஞாலமதில்வாருமென்றே நவின்றிட்டேயேகலுற்றான்.

(இ-ள்.) சத்தசமுத்திரத்தின் தீவுகளிலுமிகுதியா யடைந்திருந்தமூலபலசேனைகள் எமனுக்குச்சமதையாமென்றுமனதுசந்தோஷமாக வீரசிங்கன்முகத்தைப்பார்த்து இந்தப்படைகளுடையகையிலிருக்கின்ற சூலாயுதம்மழுவாயுதம்வாளாயுதம்தண்டாயுதம்வேலாயுதம் இவைகளினாலேபொடியாக்கி வீரவன்னியருடையபடைகளைமடித்துப்போட்டு அதற்குமேலிரத்தினபுரிக்கு வாருங்களென்றான்வாதாவி அவன்சொல்லைக்கேட்டு வருகலுற்றார்கள் எ-று. (ச)

கொக்கரிகள்கொட்டிவண் கோவென்றதிர்த்துவரு
மிக்கவடவாக்கினியின் விழிபொறிகள்சிந்திவரும்
மைக்கடலில்நீர்கொதிக் மனத்தீய்களெழுப்புவரும்
திக்குகளைக்கையேந்தித் தீண்டிடுவமென்பாரும்.

(இ-ள்.)மூலபலங்களுடையபராக்கிரமமெப்படியென்றால்கொக்கரிகள்கொட்டி இவ்விடங்கோவென்றசத்தத்துடனே மிகுதியான வடவாக்கினியைப்போல் கண்ணில்பொரிபறக்கக் சமுத்திரசலங்கொதிக்கும்படியானமனத் தீயையெழுப்புவாரும் அஷ்டதிக்கையுங்கையிலேந்தித் தின்றுபோடுவோமென்பாரும் இப்பேர்ப்பட்டபேர்கள் எ-று. (ரு)

எத்தியெத்தியெறியுமென்ப ரீசன்மகனனவனைக்
குத்திகுத்தியாவிதனைக் கூற்றுவன்பாலனுப்புமென்று
சுத்திசுத்திசேனையெல்லாந் தூள்தூளாக்கிடவாரீர்
கைத்தலத்தின்படையேவிக் களிப்புரிவீரென்பாரும்.

(இ-ள்.) காலாலெற்றுங்களென்று சொல்லப்பட்டவர்களும் பரமசிவனுடையபிள்ளைகளாகிய வீரவன்னியர்களைச் சூலாயுதத்தினாலே குத்தியவர்களுயிரைஎமதருமராஜனிடத்துக்கு அனுப்புவோமென்று சுற்றிவளைத்துக்கொன்று தூளாகச்செய்ய தங்கள்கையிலிருக்கும் பாணத்தையேவிக் களிப்பாகவிருந்தார்கள் எ-று. (சு)

இடியிடியுமவனையென வெல்லாருமேகியே
பிடிபிடியுமென்று பிதற்றியேயலைவாரும்

குடிகுடியும்வந்துதிரங் கொடுந்தாகந்தீருமென்று
அடியடியுமென்பாரு மளவிலாமூலபலம்.

(இ-ள்) வீரவன்னியர்களைப்பிடித்து உங்கள்கையி லிருக்கும் ஆயுதச்சிறைலே பிடிபுங்கள் நாமனேவருமேபோப் வாயிலேவைங்கபடி பேசிக்கொண்டு அவர்களுடைய இரத்தங்குடித்துத்தாகந்தீருவோமென்றும் அடியுங்களென்றுஞ் சொல்லிக்கொண்டு அளவில்லாத மூலபலங்கள்வந்தன எ-று. (எ)

சிங்கமுகம்புலிமுகமும் செந்நாயுமதகரியும்
தங்கடாங்களினத்துடனே சத்தசமுத்திரமென்ன
பொங்கியெழுந்திடவமரர் புத்தியெலாஞ்சோர்ந்திடவே
யங்கையால்மலையனைத்து மடியோடேபிடுங்கிவரும்

(இ-ள்.) சிங்கமுகம்புலிமுகம் செந்நாயமுகம் யானைமுகம்இப் பேர்ப்பட்ட ராக்ஷதர்கள் தங்களினத்காருடனே சமுத்திரம்பொங்கிவருகிறதுபோல எங்கும்பரவிவருகிற சேனைகளை தேவாதிகள் கண்டு தேகஞ்சோரும்படியாயிருக்க அப்போதுமலையும்மரங்களையும்வேரோடே பிடுங்கிவருவார்கள் ராக்ஷதர்கள் எ-று. (அ)

ஆவென்றுவாய்திறந்து வாகாரமில்லையென்று
கோவென்றுதாள்திறந்து கொண்டலினைப்பிழிவாரும்
சீவன்துடிக்குதென்று சிவன்படையைத்தின்கவென்றும்
போவென்றும்வாவென்றும் பூதலந்தூளாக்குவாரும்.

(இ-ள்.) இராக்ஷதன் வாதாவியினுடையசேனைகள்ஆவென்று வாயைத்திறந்து வயிற்றுக்குஆகாரமில்லையென்று கோகோவென்றழுது மேகங்களைப்பிடித்துப்பிசைந்துபிழிந்து குடிக்கிறவர்களும் தங்களுயிர்போகிறதென்று பரமசிவன்பிள்ளைகளைத் தின்றுபோடுங்கள் நீவாநீபோவென்று சொல்லிக்கூவி பூமியைத்தூளாகச் செய்வாரும் எ-று. (கூ)

ஆரடாவென்பாரு மரன்சேயேவாருமென்றும்
பாரடாவென்வலிமைப் பஞ்சுபோல்நசுக்குமென்றும்
போரடாசெய்யவந்தாய்ப் பொன்னுலகிலுயிர்போக்கித்
தாரடானணிவமென்றுஞ் சாற்றியேநெருங்கினரே.

(இ-ள்.) ஆரடா அடா வீரவன்னியனேயென்று அதட்டுகிறவரும் பரமசிவனுடையபிள்ளைகளே வாருங்களென்பவரும் எங்களுடையவலிமையைக் கண்ணாலேபாரடா உங்களுடையவலிமையையும் எங்களுடையவலிமையால் பஞ்சுபோல நசுக்குவோமென்பாரும்ராக்ஷதர்கள்பேரில் சண்டைசெய்யவந்தீர்கள் உங்களைத் தேவ

லோகம்போயிருக்கும்படிசெய்து வெற்றிமாலையணிகிறோமென்று சொல்லிக் கிட்டகிட்ட நெருங்கிவந்தார்கள் எ-று. (ய)

மன்னர்கள்திடுக்கிடவே வாரியெனவளைந்துகொண்டு
வுன்னியுயர்வீரசிங்க னுக்கிரமாய்க்கணைதெரிப்ப
மன்னவரும்வாவெருமா விராமனவன்கணைதெரிப்ப
வன்னரக்கர்சேனையெல்லா மறிந்துபொடியாக்கியதே.

(இ-ள்.) இராஜாக்கள்திடுக்கிடும்படியாக ராக்ஷதசேனைசமுத்திரம்போல வளைந்திருக்கிறபோது அதிபதியான வீரசிங்கன்உக்கிரமான பாணங்களையெடுத்தேவுகிறபோது ராசாவானவீரவன்னியனொரு ராமபாணமேவியபோது அந்தராமபாணம் அந்தராக்ஷதசேனைகளையெல்லா மறிந்துபொடியாக்கிப் போட்டது. (கக)

அத்திரமுஞ்சிலைவரையு மாக்கிரமுலக்கைகளும்
பத்தியுடனவுணுதி படையேவபார்த்திபனும்
சுத்திவருங்கணைநெறிய தொடுத்தசிலையவரவரைக்
குத்திகுத்தியெறிந்திடவுங் கோடையிடிபோல்வீழ்ந்தான்.

(இ-ள்.) சிலராக்ஷதர்கள் பாணப்பிரயோகஞ்செய்ததுமல்லாமல் கற்களுமலைகளும் பராக்கிரமாகிய உலக்கைகளும் பந்திபந்தியாகநின்று வீரன்பேரிலே யெறிகிறபோதுவீரவன்னியராசன்தன்னைச்சுற்றியபாணங்களை அப்பாலேபோகும்படியாக ஒருபாணத்தைவிட அதுபோய்வீரசிங்கன் விட்டபாணத்தைவிலக்கும்போது அவரவர்கையாயுதமே அவரவர்களைக்குத்தி கீழேயெறிய கோடகாலத்திடிபோல மடிந்தார்கள் எ-று. (கஉ)

## வேறு.

தாவியகணைகளொன்றால் தானைகள்சோரிதேங்க
தீவினிலடைந்தசேனை சென்னிகள்முண்டே
ஆவியஞ்சேர்த்துமாய வவுணருங்கணைகளேவு
பாவினம்புகழும்வீர பகழியாற்பட்டதன்றே.

(இ-ள்.) வீரவன்னியன் விடப்பட்டகணை ஒன்றினாலேஅஷ்டதீவினுமிருந்து வாதாவிராக்ஷதனுக்குச் சகாயமாய்வந்த பேர்களைமடிக்கஅவாளுடலிலேபுறப்பட்ட விரத்தவெள்ளமானதுஆறுபோலோட உயிர்சோர்ந்துமடிய பின்னுமிருக்கின்ற ராக்ஷதர்கள்தங்களாயுதங்களையேவினார்கள் தமிழினாலே புகழ்ச்சிபெறப்பட்ட வீரவன்னியனுடைய பாணத்தினால் மடிந்தார்கள் எ-று. (கங)

அடர்ந்ததோர்சேனையெல்லா மரைக்கணந்தனில்மடிக்கத்
திடஞ்சொலும்வீரசிங்கன் சிலைதனைவளைத்துவாளி
படிந்திடவீரன்மீதிற் பாணங்கள்சொரியக்கண்டே
நடந்திவனெதிரோவென்றே நயனனுமெதிர்ப்பதானன்

(இ-ள்.) போர்க்களத்தில் நெறுக்கமாயடர்ந்து வந்தசேனைக ளெல்லாவற்றையும் வீரவன்னியன்மடியச்செய்ய அதிபதியானவீர சிங்கன்பார்த்து வில்லைவளைத்து எங்கும்படரும்படியாய் அக்கினி யாஸ்திரங்களை வீரன்பேரில்சொரியக்கண்ட வீரன்சொல்லுகிறான் அவனிடத்திலேபோய் சண்டைசெய்தால்நமக்கு அவன்யெதிரியா வானோவென்றுகூறியபின் ஓர்வாறுதெளிந்துவீரவன்னியநயினாரெ ன்பவன் எதித்து சண்டைசெய்வானான் எ-று. (கச)

கரியுடனரியெதிர்த்த கதையெனப்படையினாலே
யிருவரும்பொருதவீர னிவன்மகாதீரனென்ன
பரியதிலேறும்வீரன் பாலனிவனுமென்றே
யிருநிலவிசும்புதன்னி லியம்பியேயிருந்தாரம்மா.

(இ-ள்.) யானையுடனே நரிஎதிர்த்த கதையைப்போல வீரசிங் கனும் வீரவன்னியனுமெதிர்த்து சண்டைசெய்கிறபோது தேவா திகள்கண்டு வீரசிங்கன்தைரியமுடையவனாகவேண்டும் அக்கினிக் குதிரையேறப்பட்ட வீரவன்னியன் ராமசாமிக்கிணை சொல்லலா மென்று ஆகாசத்திலிருந்து தேவர்கள் சொல்லுவார்கள் எ-று. ()

இருவரும்பகழியேவ வியக்கனும்வீரசிங்கன்
பரிவுடலழுந்தச்சீறி பார்த்திபன்மீதெதிர்ப்ப
குருதியும்பெருகியோடக் கொண்டனன்வரையதென்ன
பொருதியேயமர்புரிந்து பொங்கியேகோபமானார்.

(இ-ள்.) இரண்டுபேரும் கடுமையாகியபாணமெய்ய ராக்ஷத னனவீரசிங்கன் உடலிலேதைத்திடும்போது மகாகோபத்துடனே வீரவன்னியநயினார்பேரிலெதிர்த்து இரத்தம்பெருகியோடக் கணை தொடுத்துக் கரியமலைபோலெதிர்த்து சண்டைசெய்து கொதிக்கி ன்ற அக்கினிபோலக் கோபமானார்கள் எ-று. (கசு)

ஆகாயந்தனில்மறைந்தே வரசுடனார்ப்பரித்து
போகாதேவன்னியனே பொருதவாவென்றுசொல்லி
யேகோபித்தசுரருட னேவுகின்றபகழிதனை
ஒகாரந்தன்னுடனே யுருத்திரனுந்துணிந்துவிட்டான்

(இ-ள்.) ஆகாயத்தில்மறைந்த வீரசிங்கராசனுடனே ஆர்ப்பரித்துப்போகாதேயடா வீரவன்னியனே என்னுடன்சண்டை செய்யவாவென்று சொல்லியழைக்கும்போது வீரவன்னியன் பார்த்து நல்லதடா அடா வீரசிங்கனேயென்று யிருவருமெதிர்த்துநிற்க ஆகாயத்திலிருந்து வரப்பட்டபாணம் மழைகளை ஒங்காரசத்தமெழும்பும்படியாகத் தன்னுடையபாணத்தையேவி துண்டமாகச்செய்துவிட்டான் வீரவன்னியன் எ-று. (கஎ)

வந்துவந்துவளைந்துகொண்டு வரியசண்டைவிளைத்திடவே
யந்தரத்தேருடையதொரு வக்கினியில்வரும்வீரன்
சந்திரனையணிந்தசிவன் றந்தகொடுங்கணைதெரித்தே
மந்திரத்தையுன்னிவிட மாரியெனச்சொரிந்ததுவே.

(இ-ள்.) வீரசிங்கன் ஆகாயத்தில்உலாவிநிற்கிறபோது சிலராக்ஷதர்கள்ஒடிவந்து வீரவன்னியனைசுற்றிவளைத்துமகத்தாகியசண்டைசெய்யும்போது ஆகாயத்தில்உலாவுகின்றவீரசிங்கனை அக்கினியில்வந்தவீரவன்னியன் சந்திரனையணிந்தபரமசிவன்கொடுத்தகொடுமையான பாணமெடுத்து மந்திரவுபதேசஞ்செய்து ஆகாயத்தில் விட்டுவிட்டான் அந்தபாணம் ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரம் லட்சம் கோடியாகக்செனித்து அக்கினிகக்கிக்கொண்டுமாரி போலச்சொரிந்தது எ-று. (கஅ)

சொரிந்ததுவேகணைமாரி துஞ்சினரேசூரரெல்லாம்
அரிந்தனவேவீரசிங்க னடல்பொருதவயிறழிந்து
சரிந்ததுவேகுடற்நசுங்கித் தரணிதனிலபயமென
வரிந்திடவேசிரமுருள மகிழ்ந்தனரேவானவரும்

(இ-ள்.) வீரவன்னியன்விட்டபாணமானது மழைபோலபொழிகிறபோது கீழேசுற்றிவளைத்துக்கொண்டு பாணந்தொட்டராக்ஷதர்பேரில்பட்டு மடிந்துபோனார்கள் ஆகாசமுலாவின வீரசிங்கன் சண்டையைமறந்து வயிறுகிழிந்துகுடல்சரிய பூமியிலபயமென்று கீழேவிழ சிரசையந்த பாணமரிந்துவிட பூமியிலுருண்டு விந்தவீரவன்னியனுடைய கைவிசித்திரமும் பாணம்விட்ட தந்திரங்களையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தார்கள் தேவர்கள் எ-று. (கசு)

அரிந்தமுடியுருண்டிடவே வசுரனுடனேசிவந்த
சிரங்களுடன்களிறுபரி தேர்முறிந்துகலகலென

வுரங்கிழிந்துகுடற்சரிய வோங்கியவாள்பிடித்திருந்த
கரங்கடுணித்திட்டவுணர் கால்மாடாய்வீழ்ந்தனரே.

(இ-ள்.) வீரசிங்கன்தலையையறுத்துக் கீழேபோட்டவுடனே அந்தமுடியானது போர்க்களமெல்லாமுருண்டு வருகிறபோதுவீர சிங்கனுடைய சேனையையும் யானைகுதிரை காலால்களையுங் கலகல வென்று அச்சுவேறு ஆணிவெறுகச்செய்து மார்புகிழிந்து குடற்ச ரிந்து ஓங்கியவாளைப்பிடித்திருந்த கைகளைத்துணித்துஇப்படியாய் அதம்பண்ணுகிறபோது ராக்ஷதரெல்லாம் கால்மாடுதலைமாடாக விழுந்தார்கள் எ-று. (உய)

ஊரவுணருலகிருப்ப வுகாந்திரமாய்வந்தபடை
தூரிவருமதவானை சுந்தரத்தேர்களுமே
வீரிட்டுபடுகளத்தில் மிகமுறிந்துதானேடைக்
கூறியவர்விருதூத கொக்கரிக்குஞ்சிலபூதம்

(இ-ள்.) இரத்தினபுரியிலிருந்த ராக்ஷதப்படையில் சிலபேர்ம டிந்துபோக வின்னமிருக்கப்பட்டராக்ஷதப்படையில் சிலபேர்ரா க்ஷதர்கள் தீவுதீவாந்திரத்திலிருந்து உகாந்தகாலம்போல வரப்ப ட்ட மூலபலங்களையெல்லா மடித்துவரப்பட்டமதயானையைப்போ லொத்த அழகானதேர்நடத்துகின்ற வீரவன்னியமகாராஜன் நிற் கச்சேபடுகளம்பார்ப்போமென்று துர்க்காபரமேஸ்வரிதன்னுடை யபூதப்படைகளெல்லாம் வீரவன்னியனுடைய விருதுகளிதுவாகு மென்று கொக்கரித்துநின்றது பூதங்கள் எ-று. (உக)

கொட்டிசிலபேயாடக் குருதிபுனல்பேயிருக்க
கெட்டியிந்தப்புண்களென்று கெலிப்பாருஞ்சிலபூதம்
கட்டியங்கள்தான்கூறி களிப்புடனேநின்றாடி
திட்டமுடன்கைகொட்டி சிரித்துநிற்குஞ்சிலபூதம்.

(இ-ள்.) சிலசிலபேய் கையைக்கொட்டி சிலபேய் கூத்தாடும் இந்தபிணங்கெட்டியாக யிருக்கிறதென்றுகெலிப்புடனேயிருக்குஞ் சிலபூதம்கட்டியங்கள்கூறுஞ் சிலபூதம்களிப்புடனேநின்றாடுஞ் சில பூதம் பாட்டுகள்பாடுஞ் சிலபூதம்சலமென்று இரத்தத்தைத் தாக மாகக் குடிக்கும் எ-று. (உஉ)

துத்தியென்றேநமக்கென்று சொல்லியதுசிலபூதம்
மெத்தவுமேசோறுகறி வெகுசமையலாச்சுதென்று
சித்திரமாயார்ப்பரித்து சீரிமுகம்வெவ்வேறாய்
பத்திரமாயசுரர்மிக பாசமுடன்சமைத்தனரே

(இ-ள்.) இராக்ஷதருடலைத் துத்திபாகவாயில் வைத்தூதுஞ்சிலபூதம் விருந்தாகக்கறிபதார்த்தஞ் சோறுசமையல்செய்து படைப்பதுபோலப்படைத்தான் வாதாவியென்றுசொல்லியதுசிலபூதம்

சோறுகறியெனவுரைத்துச் சுறுக்கெனவேபந்திவைத்து
வீறுபெறும்பூதம்பால் விருந்திடுமாஞ்சிலபூதம்
பார்கழுகுபறந்தாடப் பரிதிதனைமறைத்தேகி
நாறுமலரணிவீரன் வாழியெனநவின்றிடுமே.

(இ-ள்.) சோறுகறியாகியிருக்கிறதென்று பந்திவைக்குஞ்சில பூதம் பேய்கள் கழுகு பறந்து சூரியனைமறைத்துப்போட்டு வாசமலரைச்சூடிய வீரவன்னியமகாராஜன் வாழ்கவென்றுசொல்லுஞ் சிலபூதம் எ-று. (உச)

வன்னியர்கணமக்கின்று வயிறுறவிருந்தளித்தா
ரென்னுஞ்சிலபூதமா மேவலர்கள்கரஞ்சலிக்க
மன்னவுணனுயிர்தனையே வளர்பாசத்தாலணைந்து
சொன்னசமன்றெல்லுலகிற் சோர்வின்றிசேர்த்தனரே.

(இ-ள்.) வீரவன்னியமகாராஜன் நமக்கின்றைக்கு வயிறுநிறப்பிபசியாறவிருந்தளித்தனனென்று சிலபூதம்சொல்லஎமதூதர்கள் கைசலிக்கும்படியாக உயிரைப்பிடித்து பாசக்கயிற்றாற்கட்டிஎமபட்டணங் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள் எ-று. (உரு)

அம்பலவர்கூத்தெனவே யதிபூதந்தானுட
வம்புகூகைபாடிடவே வலிமையுளநரியினங்கள்
சம்புமகந்தனிலுதித்த தந்திரனைசெயங்கூறி
இன்பமுறகைத்தாள மிசைந்துபுகழ்ந்ததுவே.

(இ-ள்.) பரமசிவனடனம்போல பூதமாடவும்கோட்டான்பாடநரிகள்பாடிடவும் சம்புமகாரிஷியாகத்திலுதித்தவீரவன்னியரின் செயங்களைக்கூறி கையால்தாளமுழக்கி புகழ்ந்துகொண்டிருந்தன

பூதமதுபரிசுதல பொருதுமிகசூரரிட
மோதையெங்குஞ்சிவந்ததென வுதிரவெள்ளந்தனைப்பற்று
நாதனருள்வன்னியரா னலங்கலைந்தோமெனமொழிந்து
காதகன்வாதாவியிரு கழலடியிற்பரவிநின்றே.

(இ-ள்.) சிலபூதம்ராக்ஷதர்மாமிசத்தைச்சிலபூதத்துக்குங்கொடுக்கும் சூரருடைய விரத்தவெள்ளம் பரவினதைக்கண்டு வீரவன்

னியரால் நம்முடைய நலங்கலைந்துபோமேமென்று வாதாவியின் பாதத்தை வணங்கினின்றூர்கள் தூதர்கள் எ-று. (உ௭)

வேலையெனவெழுந்துவந்த வீரசிங்கன்றன்னுடனே
மூலபலசேனையெல்லா முடிந்தனவன்னியராலே
காலநமக்கிலையெனவே கழறுகின்றவாய்மையெல்லாம்
நீலவிழிபொறிபறக்க நிருதர்கோனியம்புவனே.

(இ-ள்.) சமுத்திரம்போலெழுந்துவந்த வீரசிங்கனுடைய மூல பலசேனைகளெல்லாம் மடிந்துபோயிற்று வீரவன்னியனுடையபா ணத்தாலினிநமக்கு நல்லகாலமில்லை சொல்லப்பட்டசொல் காதி லேகேட்ட வாதாவிசூரராக்ஷதன் நீலநிறமுடைய விழியில்நெருப் புப்பொறிபறக்கச் சொல்லுவான் வாதாவி எ-று. (உ௮)

துணைவர்களுங்காதலருஞ் சுற்றமுடனிறந்துவிழ
பணைபுயத்தோனுன்காண பரமனிடபாலர்களு
கணையேவினூரினிமேற் காளிதனையழையுமென
வினையிலாத்தூதர்சொல்ல வேகினுள்மாகாளி

(இ-ள்.) நம்முடையதம்பிமாரும் பிள்ளைகளும் சுற்றத்தாரும் இறக்கும்படிசெய்தார்கள் இப்போதுநானுங்காணும்படியாகப்பர மசிவன்பாலனுன வீரவன்னியர்கள்உக்கிரமானபாணமேவினூர்கள் இனிநமக்கென்னபலனிருக்கிறதுஆனபடியினாலேஅக்கினிகாளியை யழையுங்களெனத் தூதர்சென்று அழைக்ககாளி வருகனுற்றூள்.

கண்டடியில்விழுந்தவுணன் கழறுவானென்றூயே
அண்டரெனநமைக்காதே யாரமுதமளித்தாயே
யிண்டுசிறுபாலரினாலியக்கர் மடிந்தனரினிமேல்
மண்டமரில்யானேக வரந்தருகவெனப்பணிந்தான்.

(இ-ள்.) காளிவரவாதாவிகண்டு அவள்பாதத்தில்விழுந்து அ ழுதுசொல்லுவான் இதுவரையிலென்னைக்காத்தா யிப்போது சிறு பிள்ளைகள் இவ்விடம்வந்துராக்ஷதரைமடித்துப் போட்டார்கள் இ னிசும்மாயிருக்கலாகாது நான்போய்ச்சண்டைசெய்ய வரந்தரவே ண்டுமென்று வணங்கினுன்வாதாவி எ-று. (௩௰)

என்னசொன்னுள்மாகாளி யெதிரானபடைதோற்கும்
சொன்னவிதிமுக்கணனார் தோகையெனுமீன்மடவாள்
தன்னுடையகிருபையினாற் றூரணியிற்சார்ந்துவந்த
வன்னியர்மேற்படையேவி மண்டமர்செய்திடுவவென்றூள்.

(இ-ள்.) அக்கினிமாகாளிசொல்வாள்ராசனேஎனக்கெதிராக வந்தவர் தோற்றுப்போவார்கள் அதேதன்தோற்கவில்லை யென்றால் முக்கண்ணனுடைய பரமசிவன்தேவியாளான இளம்பெண்ணாகிய துர்க்காபரமேஸ்வரியினுடையகிருபை இந்தப்பட்டணத்திலேதள மெடுத்துவந்த வீரவன்னியர்கள்பேரில் என்னாயுதத்தினாலே சண் டைசெய்து வருவேனென்றாள் அக்கினிமாகாளி எ-று. (௯௧)

## மூலபலச்சண்டை.

முற்றிற்று.

---

ஆகபாயிரம்உட்படச் சீருக்கம்-உ௭-க்கு

திருவிருத்தச் செய்யுள் அ௫உ

கடவுள் துணை.

## இருபத்தேழாவது.

# காளிக்குந் துர்க்கைக்கும் யுத்தம்.

## பத்தாநாள்.

மன்னவனுமகிழ்ந்திருப்ப மாகாளியோடிவந்து
பன்னரவஞ்சூடியருட் பாலகரின்சேனையெல்லாம்
சின்னமறவேயமரற் சேர்த்துவிடுவேனெனவே
வன்னியருங்கண்டிதென மாய்கையெனமனத்தோர்ந்தான்.

(இ-ள்.) வாதாவிமகிழும்படியாய் அக்கினிமாகாளி போர்க்களத்திலோடிவந்து பரமசிவனுடையபிள்ளையையும் சேனைகளையும் சின்னபின்னமாகக் கொல்லுகிறேனென்றுவருவதை வீரவன்னிய மகாராஜன்கண்டு இதுஎன்னமாயமோ வென்றுமனதில்நினைந்தார்

துர்க்கையிடம்போதிருச் சூழ்ச்சியென்சொல்தாயணைய
மைக்கடற்போலெழுந்தவுணன் மாய்கையிதோவெனக்கூற
நக்கனருள்பாலகனே நாரியெனுமாகாளி
மிக்கவமர்செய்திடவே வெகுண்டுற்றாளிக்கணமே.

(இ-ள்.) வீரவன்னியன் துர்க்காபரமேஸ்வரியினிடம் வந்துபணிந்து என்னுடையதாயே கடல்போலவருவது ராக்ஷதருடைய மாய்கையோஎன்னமோ எனக்குஒன்றுந் தோன்றவில்லையே யென்றுசொல்ல பரமசிவனுடையபாலகனே அக்கினிமாகாளியானவளுன்னிடத்தில் சண்டைக்குவருகிறாள் எ-று. (உ)

பாலகனேபடையெடுப்பே பரிந்திருப்பாயிவ்வாறே
காலனெனவெழுந்திருந்து கடியதுர்க்கைகோபமுடன்
ஞாலமெங்கும்படர்ந்ததென நல்கினிகாளியின்மேற்
சூலமதையேவிவிட துலங்குகடல்சுவரியதே.

(இ-ள்.) இனிநான்சும்மாயிருக்கலாகாது சண்டைக்குப்போகிறேன் இவ்விடத்தில்தானேயிருவென்றுசொல்லி யெமனைப்போலெழுந்திருந்து கோபங்கொண்டு மாகாளியின்பேரில் சூலத்தையேவினாள் அந்தசூலத்தின் அக்கினியினால்சமுத்திரம் வற்றிப்போயிற்று எ-று. (ங)

துர்க்கையுடனேகாளி தொடர்ந்துயுத்தஞ்செய்திடவே
பக்கமெல்லாம்பலகோடி பரந்தந்தவல்லகைவர

அக்கணமேதான்பார்த்தே யடைந்ததூர்க்கையுரம்நாடி-
சக்கரத்தைவிட்டேவ சரிந்தலகைமுறிந்ததுவே.

(இ-ள்.) தூர்க்கையின்பேரில் சண்டைசெய்யும்படியாகிய அக்கினிமாகாளியினுடையபக்கத்தில் அனேககோடிப் பூதப்படைகள் ஆகாயத்திலிருந்துவர அதைப்பார்த்துகாளி தூர்க்கையினுடைய மார்புக்குச்சரியாக வொருசக்கரத்தையெடுத் தேவினாள் அதற்கஞ்சிபூதங்கள் முறிந்தோடிப்போயின எ-று. (௪)

முறிந்தலகைதானோட முடிகிவந்தமாகாளி
எறிந்ததிகிரியுமார்ப்ப விடிகளெனப்புவிநடுங்க
செறிந்ததொருதிகிரிதனைச் செஞ்சரத்தால்விலக்கிவிட
எறிந்ததுபோல்மாகாளி யேகியேகடலொளித்தாள்.

(இ-ள்.) பூதப்படைகள்முறிந்து ஓடும்படியாகவிட்டசக்ரமானது ஆக்கிரமித்து இடிமுழக்கம்போல பூமிநடுங்கச்செய்து வருவதைக்கண்டு ஒருபாணத்தினாலே விலக்கிவிட்டு மாகாளிதான் மடிந்துபோனதுபோல கடலில்போய் ஒளித்திருந்தாள் எ-று. (௫)

கடலினிற்கரந்தகாளி கலக்கமுற்றெழுந்திருந்தே
அடலினிற்பொருதிவெல்ல லாமென்றேவறிந்துகொண்டே
தடமுலையோடிடைத் தனல்விழியாகள்சீக்க
கொடியவாலம்போற்கூடி சொக்கரித்தார்ப்பரித்தாள்.

(இ-ள்.) கடலிலேஒளித்த அக்கினிமாகாளிமனது மயக்கத்துடனேயெழுந்திருந்து உபாயத்தினால்சண்டைசெய்து வெற்றிபெறுவோமென்று மனந்தெளிந்து ஸ்தன்னியமும் இடையுந்தள்ளாடிவளைந்தாடிவர தன்னுடையநெற்றியில் வெயர்வைஆலகாலம்போலச்சிந்த சீறிக்கொண்டார்ப்பரித்தா ளப்போது எ-று. (௬)

நெடும்படைக்கரத்திலேந்தி நெருப்பெனவிழிவிழித்தே
யிடிகள்போலொலிப்பவேவ வெத்திசையுள்ளோரேங்க
கடியவானவருமுள்ளங் கலங்கிடத்தூர்க்கைகண்டே
நொடியினிற்படையைநீக்கி நொறுங்கிடத்திகிரிவிட்டாள்.

(இ-ள்.) நீண்ட ஆயுதங்களைக் கையில்வாங்கிநெருப்புப்பொறி பறக்கக் கண்களைவிழித் திடியிடிப்பதுபோல முழக்கிக்கொண்டேவினாள் ஏவின ஆயுதமுழக்கத்தினாலே எத்திசையிலிருக்கின்ற பேர்களெல்லாம் ஏக்கமெடுத்துவருவதை தூர்க்காபரமேஸ்வரி கண்டு ஒருநொடிப்பொழுதில் ஆயுதபலன்களைநீக்கி தன்னுடையசக்கிராயுதத்தை யேவினாள் எ-று. (௭)

திகிரிமாகாளிதன்னைத் திகைத்திடக்கொய்யும்போது
வகையிலாவுடலுஞ்சோர மாழ்கியேயெழுந்தகாளி
பகையவுணதிதன்னைப் பரிவுடனெழுப்பவேண்டி
நகையுடன்சங்குநீற்றை நானிலந்தாவிநின்றாள்.

(இ-ள்.) சக்கிராயுதமானது காளியைத் திகைத்துப்போகும்படி சின்னப்படுத்துகிறபோது வகையில்லாமல் உடலுஞ் சோர்ந்துமாகாளியென்பவள் பகையாகிய ராக்ஷதரை யெழுப்பிவிடுவோமென்று மனதிலெண்ணிநகைத்து திருநீற்றையெடுத்துமந்திரித்து பூமியில்தூற்றிநின்றாள் எ-று. (அ)

நீற்றினுனிருதர்சேனை நேமியிற்படிந்ததெல்லாம்
காத்திரமாயெழுந்தே காவலன்மீதெரிப்ப
பாத்திபனவர்கள்தம்மைப் பருங்கணையதனாற்கொய்து
சீற்றமாங்காளிமீதிற் சிலையெனவளைக்கலுற்றான்.

(இ-ள்.) விபூதியைமந்திரித்து பூமியில்போட்டவுடனே யிறந்துபோன ராக்ஷதரெல்லாம்எழுந்து வீரவன்னியன்பேரி லெதிர்க்க வீரவன்னியராஜன் அவர்களையெல்லாம் மடித்துப்போட்டு அக்கினிகாளியின்பேரில் வில்லைவளைக்கலுற்றான் எ-று. (கூ)

சிலைதனைவளைத்துவாளி தெரித்திடசினத்தகாளி
நலமுளகரத்தைச்சாட நடுங்கிவிண்ணொளிப்பக்கண்டே
அலைகடலொலிபோல்பேரி யறைந்திடவவுணர்கோமுன்
நலமுளவொற்றர்சொல்ல நடுங்கியேமண்மேற்சோர்ந்தான்.

(இ-ள்.) வில்லில் அக்கினியாஸ்திரம்பூட்டி மந்திரித்துவிவிட அதுகாளிகையை அறுத்துப்போட அதைக்கண்டுமனம்நடுங்கி ஆகாசம்போயொளித்துக்கொண்டாள் வீரவன்னியராசன் செயபேரிமுழக்கியதைத் தூதர்கள்கண்டுபோய் வாதாவிக்குச்சொல்ல வாதாவிகேட்டு பூமியில்மூர்ச்சித்து விழுந்தான் எ-று. (யீ)

## பத்தாநாள் சண்டை.

முற்றிற்று.

---

ஆகபாயிரம் உட்பட சருக்கம் உஅ-இ
திருவிருத்தச் செய்யுள் அரு௨.

உ

கடவுள் துணை,

# இருபத்தெட்டாவது.

# வாதாவியுத்தம்.

## பதினோராநாள்

சேர்ந்தபின்னமைச்சரெல்லாஞ் சூழ்ந்தவுணதிதம்மை
பாந்தமாயுபசரித்தே பருஞ்சோபமதனைத்தேற்றி
வேந்தனேயிதுநன்றாமோ மேவலர்நகைத்திடாரோ
சாந்தணிபுயத்தாயென்று சாற்றிடவவுணன்சொல்வான்

(இ-ள்.) வாதாவிசூரன் சோர்ந்துகிடக்கிறதைமந்திரிமார்கள் தூக்கியெடுத்துஉபசரித்து சோபம்நீக்கிச்சொல்லுவார்கள் இராசனே இதுநல்லதல்ல சத்திராதிகள்கேட்டால் நகைப்பார்கள் வாசனையணியப்பட்ட புயத்தையுடையவனே சோபமாகாதென்று மந்திரிகள்சொல்ல வாதாவிசொல்லுவான் எ-று. (க)

மிக்கமாகாளியம்மை விண்ணினிலடைந்தாளென்றே
தக்கசேனைகளுமின்றி தாஷ்டீகவமர்தான்செய்ய
ஒக்குமோவமைச்சேயென்ன வுத்தமவரசேயென்று
மைக்கடல்போன்றசேனை வரவழைத்திடுவேமென்றார்

(இ-ள்.) மிகுந்தவரமளிக்கப்பட்ட அக்கினிமாகாளியானவள் ஆகாயம்போய்விட்டாளே யினித்தகுந்தசேனைகளுமில்லை பராக்கிரமமான சண்டைசெய்ய நம்மாலாகுமோ மந்திரிகளேயென்ன உத்தமமானராஜனே யின்றைக்குகருங்கடல்போலிருக்கிறநம்முடையசேனைகளை வரவழைக்கிறோமென்றார் மந்திரிகள் எ-று. (உ)

### வேறு.

மதியிலாவமைச்சரைம்பதின்மருமிருபால் வணங்கியேரணமுரசதிர்ப்ப,கதியிலாவியக்கர்தளத்தினைச்சேர்க்கக ணக்கொருவெள்ளமேயன்றி, பதியினிற்பாவையிருப்பதிண்புயத்தோர் பதியெடுத்தேகெனவுரைத்தே, யதிக்வாதாவிசூரனுக்கானரதத்தினையெழிலுடனமைத்தார்.

(இ-ள்.) புத்தியில்லாதமந்திரிகள் ஐம்பதுபேரும் இருபக்கத்திலும்நின்றுவணங்கி ரணபேரிகையடிக்கச்சொல்லுகிறபோது பே

ரிகைசத்தங்கேட்டுபாவமேசெய்கின்றராக்ஷதசேனைகளைச்சேர்க்கு
ம்போது ஒருவெள்ளஞ்சேனையல்லாமல் வேறில்லைபெண்டுகள்தவி
ரமற்றபேரனைவரும் வரும்படிச்செய்து வாதாவிசூரராக்ஷதனுக்கு
த்தகுந்தரதம் சோடித்தார்கள் எ-று. (௩)

ஆயிரமலகைப்பூட்டியரதத்தி லாளியின்துவசமுமமைத்து,தூ
யபால்விருதுசுருட்டியுங்கவிகைத் துலங்கிடவவுணர்கோன்களிப்ப
பேயராமமைச்சருரைத்திடத்தேறிபெருமுடிசிரத்தினில்மின்னவே
யணிதோளிற்புயங்களும்பணியும் மிகுத்திடப்பூண்டனன்மாதோ.

(இ-ள்.) ஆயிரம்பேயைக்கட்டிய ரதத்தில்சிங்கக்கொடிநிறுத்
தி ஆலவட்டம்வெண்சாமரம்சுருட்டிக்குடைமுதலாகிய விருதுகள்
சூழ்ந்துவர ராக்ஷதசேனை மகிழ்ச்சியாகிப்பேயராகிய மந்திரிகள்
சொல்ல மனந்தேறி பெருத்தகிரீடமணிந்து புயகீர்த்தியுஞ் சரப்ப
ளியுமளவில்லாம லணிந்தான் வாதாவி எ-று. (௪)

பெருத்திடுநுதலிற்சிரந்துரந்தீட்டிபெரியபீதாம்பரம்போர்த்
தும், கரத்தினிற்றனுவுங்கணைவுறைக்கூடுங் கனத்திடைவணிந்திரு
குழையிற். றரித்திடுமகரகுண்டலமிலங்கத் தரணியிற்கருவரைமீதி
லுரைத்தெழுகதிரோனெனரதமேற வுத்தமிமயன்மகளுரைப்பாள்

(இ-ள்.) நெற்றியிற் சிந்தூரப்பொட்டுமிட்டு பொற்பீதாம்பர
மணிந்துகையில்விற்பிடித்து முதுகில்அம்பறாத்தூணிகட்டியிரண்டு
காதிலும் மகரகுண்டலம்பிரகாசிக்கப்பூமியில்நீலமலைமத்தியில்சூரி
யன் முளைத்தெழுந்தாலெப்படியோ அப்படிபோல பிரகாசமாகிய
கிரீடத்துடன் தேரிலேறும்போது உத்தமியாகிய மயன்மகளான
சொக்ககன்னிசொல்வாள் எ-று. (௫)

எனதுநாயகனேயியக்கரின்றேவே யிறைபவன்மலரடிபுரிந்தே
கனமுரைத்தவனேகண்டனன்கனவு கடுஞ்சமரளித்திடலாகா
திணிதமதில்லிலிருந்துவானவரி னிடுக்கணுமகற்றுவதியற்கை
எனவுரைமொழிந்தே னேந்திழையாளே யிகழ்ச்சியென்றெண்ணி
[டாதென்றான்.

(இ-ள்.) என்னுடையபிராணநாயகனே ராக்ஷதருக்கெல்லாம்
ராசனே பரமசிவனைநோக்கி தவம்புரிந்தவனேஇராத்திரிநித்திரை
யில் ஒருகனவுகண்டேன் தேவரீர்கடுங்கோபமுடன் சண்டைசெய்
துவரப்போகலாகாது நம்முடைய அரமனையிலிருக்கும் தேவர்களி
டுக்கத்தை நீக்கியிருந்தால்நன்மையாயிருக்கிறது பெண்ணென்றும்

என்னுடையவார்த்தையை யிகழ்ச்சியென்று மனதிலெண்ணாமல் இருமென்றாள் சொக்ககன்னி எ-று. (௬)

குறைத்தலைகவந்தங்கூத்துகளாடக் குளிர்ந்தபூதங்களும்பாட
பரித்திடுமோரிநாயினம்பந்து பதியினிநிறைத்திடமாதர்
விரித்திடுந்தலையோடோலமிட்டலரவெஞ்சமன்றாதருமாடத்[தாள்
திருத்தமாங்கல்யமுமிழந்திடக்கண்டேன்றீதுவந்தடையுமேவென்

(இ-ள்.) பேய்களாடபூதம்பாட நரிநாய்கழுகு பருந்துகள்நம்முடையபட்டணத்தில் நிறைந்துசூழ மாதர்களெல்லாரும்ஒப்பாரி சொல்லியழவும் எமதூதர்கள்வந்து யெங்குநிறையவும் மங்கிலியமுமிழந்திடக்கண்டேன் குற்றமடைகுவாய் போகாதேயும்இருமென்றாள் சொக்ககன்னி எ-று. (எ)

சுற்றமுந்துணையுஞ்சுதரிளமரிற் றுணித்திடக்கருத்தினிலுன்னி, மத்தகமருப்புவாரணமுறும் மகபதிக்கிடரினையளித்தே,பத்தனன்மகவாலருமுடியிழக்கவமைச்சரின்போதனையுணர்ந்த, கத்தனேயினியான்காண்பதுமுளதோகருணைவைத்திருப்பதேகடனும்.

(இ-ள்.) உன்னுடையசுற்றத்தாரனைவருந்தம்பிமார்களும்பிள்ளைகளும் போர்க்களத்திலேபோய்சண்டைசெய்துமடியும்படியாக மனதில்நினைந்து மத்தகம்பொருந்திய நான்குகொம்புடைய வெள்ளையானையைபெறப்பட்ட தேவேந்திரனுக்கு துன்பமளித்தா யதனாலேநான்காண்பதில்லை யினிமெத்ததயவுவைத்து இவ்விடத்திற்றானேயிருப்பது கடனாகுமென்றாள் சொக்ககன்னி எ-று. (அ)

மனைவிசொல்லிகழாமெனமனத்துணரா மண்ணினிலிருப்பதேயழகாம், பனகபூஷணஞ்செய்படையெடுத்திடவும் பகையிலாதூதினையனுப்ப, கனவிலதுரைத்தக்கருத்தினையரிய கடல்கண்டேகியின்குரைத்த, புனிதன்மேலதிர்க்கப்பூமிமேற்சிரமும்புரண்டிடும்பூபதியென்றாள்.

(இ-ள்.) பெண்சாதிசொல்லைக்கேட்டால் பெருமைவாராதுசிறுமையாகுமென்று மனதிலெண்ணியிகழாமல்உம்முடையபதியிலிருப்பது மகிழ்ச்சியாயிருக்கின்றது அரவாபரணனளித் தனுப்பிய பிள்ளைகள் தளமெடுத்துவந்து உன்பேரில்பகையில்லாமலிருக்கும் படியாய்த் தூதனுப்பினார்கள் அதைமனதில்கனமில்லாமல் பொல்லாதகாரியமாகச் சண்டைசெய்யச்சொல்லி அனுப்பினீர் அந்தப் படிசண்டைக்குப்போனால் மண்ணின்மேல் தலையறுந்துருளும் இராசனேயென்றாள் சொக்ககன்னி எ-று. (௯)

துணைவரையிழந்து சுதனையுமனுப்பத் துணித்தனனரன்மகனே, விணையிலாதுனையு மாற்றுவரெனவே யெண்ணினவெண்ணமுமறுத்து, மணமலரணையுமாதரினரசே மாற்றலருடனெதிர்க்காமல், தணிவுடனிருந்தாலிகழ்ச்சியாமெனவே தனித்ததேரில் வந்துமேசார்ந்தான்.

(இ-ள்.) தம்பிமாரையுமிழந்து பிள்ளைகளையனுப்ப அவர்களையுமடித்தார் பரமசிவன்பிள்ளைகள் தேவாதிகள்முதலானபேருக்கும் ஒப்பில்லாத உன்னைக்கொன்றுபோடுவார்கள் என்றுஎன்மனதிலேயெண்ணுகிறேன் என்சொல்லைத்தட்டிசத்துருக்கள்பேரில்சண்டைசெயயாமலிருப்பாய் என்றுசொக்ககன்னிசொல்ல வாதாவி சொல்வான் அடிபெண்ணே உன்வார்த்தையைக்கேட்டா லிகழ்ச்சியர்குமென்று சொல்லிப்போட்டு ஆகாசமளாவிய தேரிலேரிநடத்தியுத்தகளத்தை யடைந்தான் வாதாவி எ-று. (ய)

துந்துபிபேரிகாளமுமதிர தூளிகளெழும்பிடலதிர்ப்ப
மந்திரித்தலைவரிரதமேற்கொண்டு மதிலுகண்டேகினன்விண்ணோ
சிந்தையுநடுங்கச்செய்யநாரதனுந் திணிபுயவீரவன்னியன்பால்
வந்துரைசெய்வன்மகிபன்வாதாவி வந்தனன்மடித்திடுமென்றான்.

(இ-ள்.) துந்துபிபேரிகை காகளமதிர வெடிமுழங்குகிறசத்தத்தினாலே ஆகாசபரியந்தந்தூளெழும்பும்படியாக மந்திரித்தலைவர்களும்தேரேறிகோட்டைதாண்டிவரதேவர்கள்மனநடுக்கங்கொண்டார் நாரதரிஷியானவர் வீரவன்னியனிடம்வந்து ராசன்வாதாவியதோவருகிறான் விடாமற்கொன்றுபோடுமென்றார் நாரதர்எ-று.

ஆயிரஞ்சிரமுமீராயிரங்கரமுமாகக் காத்திரமலைனுக்கும்
பேயெனுமுகமும்பெருமலைமூக்குங் கருவிழிபொறியனல்பெருக
வாயுமாவென்னவானகமுட்ட வளர்சிகைகாடெனமன்ன
தீயவஸ்திரங்களங்குசந்திரட்டி சிலபடையுலக்கையோடுற்றார்.

(இ-ள்.) வாதாவிபின்பின்னால் வரப்பட்டராக்ஷதருக்கு ஆயிரஞ்சிரசு யிரண்டாயிரங்கையு மலைபோலநாக்கும் பேய்முகமும்காத்திரமானமூக்கும் கண்ணில்நெருப்புமெழும்பவாயை ஆவென்றுதிறந்து ஆகாயமட்டும் உலாவியகையும் வளரப்பட்டதலைமயிர் காடுபோலவும் இப்படிப்பட்ட பொல்லாதசேனைகளுஞ்சூழ்ந்துவரஅவர்கள்பிடித்திருக்கின்ற ஆயுதங்கள்அங்குசம் வேல் உலக்கை யிப்படிப்பட்ட ஆயுதங்களுடனேவந்துசேர்ந்தார்கள் எ-று. (கஉ)

## வேறு.

பொங்கரவணிந்தபுனிதன்புதல்வனுள்ளமகிழ்பொங்கியிருசெங்கைகுவி, கங்கணகபாலிதிரிசூலிசமர்வீரி யெதிர்தாருகனை வென்றவமலி, பங்கயபதம்பரவியெங்களிடர்தீர வருபந்துமுலைமங்கையெழிலி, சங்கரனிடத்தில்வளரம்பிகைவாதாவியுயிர் சண்டனுலகாளவருவாய்.

(இ-ள்.) அரவாபரணமுடைய பரமசிவன்புதல்வனானவீரவன்னியராசன் மனமகிழ்ச்சியாகிய விரண்டுகையுங்கூப்பி வணங்கிச்சொல்லுகிறான் கையில்கங்கணமும் திரிசூலமுமுடையவீரியே மயிடாசூரனைவென்று வெற்றிபெற்ற அமலியாகியதாயே எங்களுடையயிடரைத்தீர்க்கவேணும் பந்துபோலஸ்தனபாரமுடைய எழிலியே பரமசிவனிடப்பாகம்பெற்ற உமையவளே வாதாவியினுயிர் எமலோகத்தில்சேரும்படியா யனுக்கிரகம்பண்ணுவாய் தாயேயென்றான் வீரவன்னியராசன் எ-று. (கங)

என்றமகனைக்கரமெடுத்துமையியம் புவளியக்கரைவந்தத்தலரிதோ, குன்றெனவருங்கயவ னின்றநிலையாமெனகுரிக்கவுமொணுதுநயினு, வென்றிபெருமுன்கர மிகுத்தவடிவேல்விடு மிருகூமவன்ஞ்சவிடுவை, யுன்றனுடனின்றவுமையின்செயமிருப்ப விடரேதுனக்குவஞ்சேர்.

(இ-ள்.) இப்படியாகச்சொன்னமகனாகிய வீரவன்னியனைகையினால்வாரியெடுத்து மடிமேல்வைத்துக்கொண்டுசொல்லுவாள் அப்பாவிந்தராக்ஷதருடைய மூலபலசேனையெல்லாம் சங்காரஞ்செய்ததுபெரிதல்லஇப்போதுவந்திருக்கிற மலையானவாதாவிசூரன்எளிதானவனல்ல பகைவரைவெற்றிபெறுகின்ற உன்னுடைகைவேலாயுதத்தை வாதாவியின்பேரில்விடுவாய்மகனே உன்னிடத்தில்துணையாகநான்யிருக்கிறேன் இருக்கும்போது செயம்பெறுவாயேயல்லதுன்பம் வரமாட்டாது பிள்ளையேபயப்படாதேயென்றாள் துர்க்காதேவி எ-று. (கச)

இந்தமொழியந்தரியியம்பவுடல்விம்மி மகிழ்வெய்தியெழின்மைந்தருடனே, பந்திருளொளுங்கயவர் புந்தியிடைசூழரசனன்றியமர்செய்யுமுனமே, சிந்தைதளர்வின்றிநமன்சேனையணிசெய்துவலிதேரிலுறைவீரொன்னுமுரையை, விந்தையெனவென்றிதனை வீறிடதளங்களொலிவின் முரசிலங்கதிறைவார்.

(இ-ள்.) இப்படியாகதுர்க்காபரமேஸ்வரிசொன்னவுடனேவீரவன்னியராசன் புளகாங்கிதங்கொண்டு தன்னுடையபிள்ளைகள் கிருஷ்ணவன்னியன் பிரமவன்னியன் சம்புவன்னியன் அக்கினிவ்

ன்னியன் இவர்களையழைத்துச் சொல்வான் இருள்கூட்டம்போல வெழும்பிவருகின்ற சேனைகளுடையனவாதாவிராக்ஷதன் நம்மிடத்தில்வந்து சண்டைசெய்யுமுன்னமே நம்முடையசேனைகளை யணிவகுத்து வலிவாகியதேரிலேறுங்க ளென்றுசொல்லி யிவர்கள்நாலுவன்னியர்களும் விநோதமாயிருக்கிறதென்று மனதிலெண்ணி பாணங்களுடனே துந்துபிவாத்தியமுழக்கத்துடனேவந்துநிறைந்தார்கள்

வரையெனமடிந்தவுணர் குருதிகடல்பொங்கிமுடிவம்பனிருகண்சொரியவே, யெரியலெழும்பியனயினையினர்நற்கனையிலியக்கரையுருக்கிவலிமை, தரையினிலிறந்தளவு மரனருள்புரிந்த சிறுதனையனிவனேமிகுத்த, வுரமுடையரரகுவர்தன்மகுடசிரமசைத்ததேசெலுவனதிவீரசூரனவனே தரசனுக்குரைசெய்வான்.

(இ-ள்.) வீரவன்னியன்சேனைகள் போர்க்களம்வந்து நிற்கிறதைவாதாவிகண்டு தன்னுடையசேனை சூழும்படிவந்து போர்க்களத்தை சுற்றிப்பார்த்து ராக்ஷதர்கள்மலைபோல மடிந்துகிடக்கின்றதையும் கடல்பொங்கியிருப்பதையும் இரண்டுகண்ணுக்லயும்பார்த்து ஊழிகாலத்தீயைப்போல் கண்ணிலக்கினியெழும்பி எனக்குச்சரியான தாஷ்டீகமில்லாத நரமனுஷனுடையபாணம்ராக்ஷதரைக்கொன்று அல்லவா இப்படிப்பட்டபேர்க்ள்யாருமில்லை இன்றையவரைக்கும் பரமசிவன்வரம்பெற்ற சிறுபிள்ளைகள் இவரேயல்லாமல்அதற்குச்சந்தேகமுமில்லை பலமுடையவீரர்கள்இவர்களென்று வேறில்லை தலையையசைத்துச் சொல்லுவான்வாதாவி எ-று. (கசு)

## வேறு.

அச்சமதகற்றி யாண்மைமிகுத்த
பச்சையெனும் புதல்வர்பசர்தற்கே
அச்சுதனுக்கிணை யாமெனவுள்ளம்
மெச்சினனுன்பெயர் வீரனேயென்றான்.

(இ-ள்.) அச்சமில்லாமல் ஆதிகஆண்மைமிகுத்தசிறுபிள்ளைகளானவீரர்களே சொல்லுகிறேன்கேளும் மகாவிஷ்ணுவுக்குச சமதையாகுமென்று யென்மனதில் மெச்சிக்கொண்டே உன்னுடையபெயர்வீரனென்று சொல்லத்தகுமென்றான் வாதாவி எ-று. (கஎ)

கரைமிடற்றண்ணல் கருத்துகளித்தே
அறையவரிப்புவி யன்றிவலித்தே
நிறையவுணர்படை நேமிகள்சூழ
விறையெனமன்னி யிருந்தனனென்றே.

(இ-ள்.) நீலகண்டமுடைய பரமசிவன்மனது சந்தோஷமாக வெனக்குக்கொடுத்தவரப்பிரசாதத்தினுலே இரத்தினபுரிபட்டணத்தில் நிறைந்திருந்த ராக்ஷதப்படைகளிந்தப் பூமியில்சூழ்ந்திருக்க நானும் ராஜனென்றுபேர் மிகுத்திருந்தேனென்ருன் இந்நாள்வரைக்கும் எ-று. (க௮)

திக்கினிலேகி செயம்பெறுஞ்சூறை
மிக்கவரந்து விண்ணவர்பணிசெய்
தக்கவாதாவி யெனப்பெயர்மன்ன
துக்கமில்லாமற் சுகந்தமணைந்தே.

(இ-ள்.) அஷ்டதிக்கிலும்போய் செயத்துடன்கொள்ளையடித்துக்கொண்டு தேவாதிகள்முதலானபேரும் என்னிடத்தில் வந்தேவல்செய்யும்படிவைத்து ராக்ஷதவாதாவிசூரனென்று பேர்விளங்கும்படியாக எள்ளளவும்மனதில் பயமில்லாமல் சுகமடைந்திருந்தேனென்ருன் வாதாவி எ-று. (கக)

அட்டதிசைக்கதி பாலர்களுள்ளம்
கொட்டமடக்கி குளிர்ச்சியணைந்தேன்
சிட்டரிறைஞ்சிய தேவர்களின்றென்
விட்டவிரல்வீரனே மேவலரானீர்.

(இ-ள்.) எட்டுத்திக்கும் ராசாவான திக்குபாலகருடையமனதில் மிகுந்திருக்கின்ற மகிழ்ச்சியையடக்கி என்மனதுகுளிர்ந்திருந்தேன் தேவாதிகள்யோசித்து பரமசிவனை துதிசெய்யபரம்சிவனுல் என்னிடத்தில்வந்த பராக்கிரமமுடைய வீரவன்னியர்களே யிப்போது எனக்குச் சத்துருவானீர்கள் எ-று. (உ0)

தனயர்செய்குற்றந் தாதைபொறுப்ப
ரெனவுணப்படை யெங்குமடித்தீர்
புனிதனற்சிறு பிள்ளைகளென்றே
மனதிலிதங்க மகிழ்ச்சியுரைத்தேன்.

(இ-ள்.) பிள்ளைசெய்யுங்குற்றங்கள் பிதாபொறுப்ப தென்று சொல்வதுபோலராக்ஷதப்படைகளை ரணக்களத்தில்மடித்துப்போட்டீர்கள் ஆனுல்பரமசிவனளித்த சிறியபாலகனென்றுநீசெய்தகுற்றங்களெல்லாம் பொறுத்தேன் உனக்குசந்தோஷமாக எ-று. ()

வானவரைச்சிறை வைத்துனைவிண்ணோர்
கோனெனமாமுடி கோதிலளிப்பன்
ருனையுடன் வருவீரெனச்சாற்று
மீவுனவுணர்க்கெழில் வீரனுரைப்பான்.

(இ-ள்.) தேவாதிகளைப்பிடித்து சிறையிலடைத்துஅவர்களுக் கெல்லாம் ராசாவாகும்படி உனக்குமணிமுடிகொடுக்கிறேன் உன் சேனையுடனே என்பின்னுல்வாருமென்றுஈனமான்வார்த்தையைச் சொன்ன வாதாவிசூரனைப்பார்த்து வீரவன்னியன் சொல்லுகிறுன்

புத்தியில்லாம லுரைத்திடும்புல்லன்
அத்தனலர்ப்பதம் மன்றியவானேர்
சித்தமுரைப்படி செஞ்சிலையாலுன்
நத்தவமெய்யை நடுக்கிடவுற்றேன்.

(இ-ள்.) புத்தியில்லாமற் சொல்லுகின்றபுலையனே பரமசிவன் மலர்ப்பாதத்தை மனதிலடைத்திருக்கப்பட்ட தேவேந்திரராஜன் மனதின்படிக்கு அக்கினிக்கணையினுலே தவஞ்செய்யப்பட்ட உன் னுடலை நடுங்கும்படி செய்யவந்தேன் எ-று. (உ௩)

கசவவுணரதியை கனலினுருக்கி
வசமுறவாட்டுஞ்சம் மட்டியென்பேர்
நிசமெனநீள்கட னேமியின்மிக்கோர்
உசிதமெனப் புகழ்ந்திடும்வீரன்.

(இ-ள்.) ராக்ஷதரைநெருப்பிலுருக்கி வாட்டப்பட்டசம்மட்டி யென்பேர் இதுநிசமாகும் நீண்டகடல்சூழ்ந்திருக்கின்ற பூமியில் வெற்றிபெற்றராசாக்களும் பெரியோர்களும் புகழ்ந்திருக்கப் பட் ட வீரவன்னியனுன் எ-று. (உச)

தானவர்வாதை தவிர்த்திடவென்றே
ஞானதயாபர னலதுளமோர்ந்து
மோனமுருங்கோ மான்முனிவேள்வி
யானதிலெம்மை யளித்தனனென்றுன்.

(இ-ள்.) தேவாதிகளுடையஇடுக்கத்தைதீர்க்கவேணுமென்று வேதத்துக்குடைய பரமசிவன்மனதிலேநினைந்து சம்புமாரிஷியின் வேள்வியில் ஞானமார்க்கமாக வென்னையழைத்தார் பரமசிவன்.

அக்கினிமாவு மருஞ்சிலைவாளும்
மிக்களித்திரள் மேன்மையளித்தே
மைக்கடுகண்டன் வழுத்தினருன்னை
யிக்கணமீர்ந்து வெழுந்தருளென்றுன்.

(இ-ள்.) அக்கினிக்குதிரையும் வாளும்வில்லும்மிருந்தபாணங் களும் விடத்தையுண்டபரமசிவனுன என்தகப்பன் சகலமுங்கொ டுத்துன்னை மடித்துப்போட்டு வருவீர்களென்று சொன்னர் எ-று

வீரரிலக்கம் விளங்கிடவிண்ணோர்
சீரரிமன்னர் செழித்தனனால்வர்
ஆரணிகாளி யருந்துணைகொண்டே
நாரதர்தூதனை நண்ணமிசைத்தேன்.

(இ-ள்.) எனக்குப்படைத்துணை லக்ஷம்வீரரும் என்தீரவீரர்கள் நாலுபேர்களும் துர்க்காபரமேஸ்வரி படைத்துணையாகவரும்படிச்செய்துநாரதரைத்தூதாகஉன்னிடத்தில்அநுப்பினேனென-று

மாமுனியுள்ள மறுத்துரைகூறி
பூமலிநீழல் புரந்தரர்வாதை
நேமிவிடோமெனு நின்னுரையாலுன்
பூமியில்வந்தமர் புக்கினெனென்றான்.

(இ-ள்.) நாரதர்சொன்னபுத்தியைத்தடுத்துசண்டை செய்யும்படியான வலிமையைச்சொல்லியுங் கற்பகத்தருவின் நிழலிலிருக்குந்தேவாதிகளுக்குச் செய்கிறதுன்பத்தை விடமாட்டேனென்று சொல்லியனுப்பிய உன்சொல்லினாலே இந்தபூமியில்வந்து சண்டை செய்யலானேன் வீரன் எ-று. (உஅ)

## வேறு.

வரையெனத்திரண்டதோளு வானுலாக்கரமும்வில்லும்
பருமணிமகுடஞ்சென்னி பாரினிலுருளக்காலந்
திரமிவையதனாலண்டர் கோவெனவீய்வேனென்ன
யுரைசெயுமுனுத்தாவுன்னை யொருகணைமாய்க்குமென்றான்.

(இ-ள்.) மலையையொத்ததோளும்ஆகாசமுலாவியகையும்வில்லும் பெரியநவரத்தின மணிபதித்திருக்கின்றகிரீடமணிந்ததலையும் இந்தபூமியில் மடிந்துபோகிறகாலம் குறுகினதினாலே தேவேந்திரன்முடியை யெனக்குக்கொடுக்கிறேனென்று சொன்னையடா ராக்ஷதவாதாவிசூரனே உன்னை ஒருபாணத்தினாலேகொன்றுபோடுகிறேனென்றான் வீரவன்னியன் எ-று. (உகூ)

அளித்தவென்றாதையிந்த வருளெனக்கிருப்பவுள்ளங்
களித்தனனனேககாலங் காசினியரசனாகி
வளைத்தினையணவனீபோய் வான்முடியளிப்பைஞானி
மளித்திடுமரசுவாழ்வு மரிதெனக்கொக்காதென்றான்.

(இ-ள்.) பிறப்பித்தவென்னுடையதகப்பன்பரமசிவன்அருள்தரப்பட்டவர் எனக்கிருக்கிறபடியினாலே என்மனதுசந்தோஷமாகி அனேககாலம் இந்தபூமியிலே இராசாவாகவாண்டு தேவவளங்

கள்முதலாகிய புகழ்ச்சியையணேகுவேன் அப்படியிருக்கத் தேவே ந்திரனுடையமுடியை நீயாயெனக்களிக்கப் பட்டவன் நாயானது கொடுக்கப்பட்ட செங்கோலும்வாழ்வும் சிங்கத்துக்கு ஏற்குமோ யேற்காதுபோ வாதாவிசூரராகூதனே யென்ருன் வீரவன்னியன்.

மாதுலன்மகவானீன்ற மகடனைமருகனென்றே
சீதனமாகவென்னை செழிப்புறவளிப்பனீயோ
சோதிமாமுடியளிப்ப துஷ்டனுன்ருவைவாளால்
கோவதுனென்றுவுள்ளங் கொதித்துரைகூறலுற்ருன்.

(இ-ள்.) எனக்குமாமனாகிய தேவேந்திரன் மனதுவைத்து தன்னுடைய மகளையணையப்பட்டமருமகனுக்குச்சீதனமாகக்கொ டுக்கவேணுமென்று தேவலோகத்தையளித்தாலும் அளிப்பார் அ ப்படியிருக்க பிரகாசமானதேவமுடியை நீயாரடாவெனக்கு அளி க்கப்பட்டவன் அடா துஷ்டா ஆபேயா உன்னுடையநாக்கை யறு த்துப்போடுகிறேனென்று சொன்ஞன்வீரவன்னியன் எ-று. (௩௧)

பாரியமுடியைசேதித்துப் பதியினைத்தூளதாக்கி
பேருளவரைக்குமியார்க்கும் பெருந்தணலளித்தேயுந்தன்
சீரெலாஞ்சூறைசெய்து செகமெங்குந்துதிக்கவென்றே
வீரனுனுன்பாலுற்றேன் விருதுகள்யொளிப்பமாதோ.

(இ-ள்.)அடாவாதாவிசூரனேயுன்னுடையபெரியதலையையறு த்து உன்பட்டணத்தையுமிடித்து தூளாக்கிபேர்மிகுத் திருக்கப்ப ட்டராகூதருக்கும் உனக்கும் அக்கினியையளித்து உன்னுடைய வளங்களையும் கொள்ளையடிக்கும்படியாக நான்வந்தேன் வாதாவி யேயென்ருன் வீரவன்னியன் எ-று. (௩௨)

பேயெனும்வதனமீசை பெருத்திடுங்கோரையென்ன
வாயினிலீர்மண்வெட்டி வானிடியொளியாம்வார்த்தை
காயமுவரையதொக்குங் கண்டவருளம்பதைக்கும்
தீயெனவுனதுதிரஞ்செலுத்தியின் றமர்செய்யென்ருன்.

(இ-ள்.) அடாவாதாவி உன்தேகம்மலையைப்போலவும் முகம் பேய்போலவும் மீசையானது பெரியகோரைப்போலவும் வாயின் பல் மண்வெட்டிப்போலவும் ஆகாயத்திடிபோலவார்த்தையும்இரு க்கிறது இவைகளையெல்லாம் பார்த்தவர்கள்மனம் பதைக்கும்படி யான் தேகமெடுத்த வாதாவிராகூதனே உன்னுடையபராக்கிரமத் தை என்னிடத்திற்காண்பித்து சண்டைசெய்யவாவென்ருன் வீர வன்னியன் எ-று. (௩௩)

பகட்டினன்மிரட்டலாமெனப் பசைபுரைபகர்ந்தாய்தீரம்
மிகுத்தவனனலென்றே வெஞ்சமர்விளைப்பவந்தேன்
யகத்தையுமடக்கவென்றே யரனளித்தனுப்பவந்தேன்
நிகர்செய்வலியில்லாக்காலெனைத் தொழுதிடுவையென்றான்

(இ-ள்.) உன்னுடையதேகம் இப்படியிருக்கிற பகட்டினலே என்னைமிரட்டி ஓட்டலாமென்கிற டம்பவார்த்தைச்சொன்னயல்ல வாநீயு மகாதைரியமுடையவனுக விருந்தால்சண்டைசெய்யடா உன்னுண்மையை யடக்குகிறேன் அடக்கும்படி பரமசிவனளித்துவந்தேன் சண்டைசெய்ய வலிமையில்லாவிட்டால் என்னை வணங்கிகொள்ளடாவென்றான் வீரவன்னியன் எ-று. (ந௪)

ஆதியிற்படையெடுத்து வருந்துணைவனும்பட்டானென்
றோதினரொத்தவாய்மை யுளத்தினிலுறுத்தாதென்ன
தீதுகளளித்தையுந்தன் சிறுவரைமதிக்கக்கண்டு
கோதுகளளிக்கவந்த குலவனுமோமாவென்றான்.

(இ-ள்.) முன்னேபடையெடுத்துவந்த உன்தம்பிமாரை என்பிள்ளைகள்கையினல் பட்டானென்றுதூதர்சொல்ல மனதில்படாமலிருந்தென்ன இன்னமும்குற்றஞ்செய்யலாமென்று அனேகவல்லமைபேசியிருந்த உன்பிள்ளையையும் நான்மடித்துப்போட்டேன் அதையறிந்தும் என்னிடத்தில்தானே குற்றமானவார்த்தைசொல்லவந்தாய் அநுலோமனென்னும் ராக்ஷதனேயென்றான் வீரவன்னியன் எ-று. (ந௫)

இன்னமுங்கேளும்கைம்பெண் ணீன்றகோளகனேயாகும்
துன்னிவேற்றோர்க்குப்பெற்ற சுதனுங்குண்டகனேவாகும்
கன்னிகைமணஞ்செய்யாமல் களவினிலீன்றோன்கானீனன்
என்னமுன்னோருரைத்தவெழின்மறையியம்புதென்றான்.

(இ-ள்.) இன்னமுஞ்சொல்லுகிறேன் கைம்பெண்பெற்ற பிள்ளைக்குப்பேர்போளகனென்றும் தன்புருஷனில்லாமல் வேறுபுருஷனை மருவிப்பெற்றபிள்ளைக்குப்பேர் குண்டகனென்றும் கலியாணஞ்செய்யாத கன்னிகையானவள் களவில்சேர்ந்து பெற்றபிள்ளைக்குப்பேர் கானீனனென்றும் வேதத்தில்சொல்லியதென்று பெரியோர்கள் சொன்னர்கள் எ-று. (ந௬)

தாதையரின்றொன்றே தன்னுளத்துணரான்செங்கோல்
ஆதியாய்செலுத்திவந்த வவுணரின்மரபுமல்லாய்
மாதரசோமுகியுந்தூரு வாசனைமருவியீன்ற
பாதிகாளையினிலிந்த பவிஷடைந்தனைநீயென்றான்.

(இ-ள்.) உன்னுடையதகப்பன் இன்னானினியானென்று மன திலேயறியாதவன் வழிவழியாகச் செங்கோல்செலுத்தி வருகின்ற ராக்ஷதருடையகுலமுமல்ல உன்தாயானஅசோமுகியை ஒருவருங் கலியாணஞ்செய்யாமல் விபசாரியாகபலபேரையுஇச்சித்துத்திரிகி றதாளையில் தூருவாசரிஷி புத்திசபலமாகி அணைந்ததினாலேஅவளி டத்தில் கர்ப்பவுற்பத்தியாகும்போது பரமசிவனை தியானித்தாள் அந்தபரமசிவன் கிருபையினாலேபிறந்த உனக்கு இந்தவைபோக ங்களெல்லாம் அனுபவித்தாய் வாதாவியேயென்றான் வீரவன்னி யன் எ-று. (௩௭)

விமலெனுமெனதுதாதை வீரவன்னியனாமென்பேர்
சமலியென்துணையாஞ்சம்பு தனைழத்தநற்குலமாமன்னே
உமையவளாகுமும்ப ருற்றசம்பந்தமான
குமரனற்றுணைவரென்றே குவலயங்கூறுமென்றான்.

(இ-ள்.) என்னுடையபூர்வோத்திரஞ் சொல்லுகிறேன்பரமசி வன் எனக்குத்தகப்பன் வீரவன்னியமகாராசனென்று எனக்குப் பேர் துர்க்காபரமேஸ்வரியானவள் துணைவந்தனள் சம்புமகாரிஷி கோத்திரம் தாயாரீஸ்வரியாகும் தேவர்களுக்கரசனான தேவேந்தி ரன்மாமனாரகும் சுப்பிரமணியர்தமையனுஞ்சகலனுமாகும் இவை களைநானேசொல்லவில்லை யிந்தபூலோகத்தார்கள் சொல்வார்கள்.

செகமதில்தேவராயன் செழித்தரசுடையானென்றும்
நகையின்முப்புரமெரித்தோன் நயனத்தால்நயினாரென்ப
தகமையாமவுணனக்கை யுருக்கியசம்மட்டியென்றும்
பகவன்பேயாண்டிபாலன் பண்டாரத்தாருமானேன்.

(இ-ள்.) இன்னஞ்சொல்லுகிறேன்கேளும் பூமிக்குத்தேவன் தேவாதிகளுக்குராயன் செங்கோலுக்குடையானென்றும் திரிபுர தகனநயனபார்வையால்வந்தால் நயினாரென்றும்ராக்ஷதரையடிக்கு பட்டசம்மட்டியென்றும் பண்டாரத்தானென்றும் சொல்லுகிறது ஏனென்றால் பரமசிவனுடையபிள்ளையானபடியினாலே வீரவன்னிய மகாராசாவென்று எனக்கு எல்லாப்பேருந்தகும் எ-று. (௩௬)

இவ்வுரைவீரன்கூற வியக்கர்கோனிதயம்பொங்கி
பவ்வஞ்சூழுலகோரேங்கப் படுஞ்சிலைவளைத்துநாணி
கவ்விடத்தணைந்துநாகக் கணையினுக்குருசெபித்து
திவ்வியவீரன்சென்னி செற்றிடத்தெரித்தான்மாதோ.

(இ-ள்.) இப்படியாகவீரவன்னியன்சொல்ல வாதாவியின்மன தில்கொபங்கொண்டு பூலோகத்தார் நடுங்கும்படியாக வில்லைவளை

த்து நாணியேறிட்டு நாகாஸ்திரம்தொடுத்து அபிமந்திரித்து வீரவன்னியனுடைய சிரசைகொய்யும்படிவிட்டான் வாதாவிசூரராக்ஷதன் எ-று. (சய)

அரவாத்திரத்தினுண்மையரன்மகன்வீரன்கண்டு
கருடாத்திரங்களீயக் கண்டமாயரவஞ்சோர
நரனெனும்வீரனாராயணன்கணைதெரிப்பச்சூரன்
உரமதிலுருகச்சோப முற்றனனிரதமீதே.

(இ-ள்.) நாகாஸ்திரம்வருவதை வீரவன்னியராசன்கண்டு கருடாஸ்திரந்தொடுத்துவிட அதுநாகாஸ்திரத்தைத்துண்டிக்க சோர்ந்துகீழேவீழ்ந்தது அந்தநாராயணாஸ்திரத்தை மறுபடியும்விட அதுபோய் வாதாவியின்மார்பில்பட்டு முதுகிலுருகிப்போனது தேரின்பேரில் மூர்ச்சையாகிவிழுந்தான் வாதாவி எ-று. (சக)

கண்டனரமைச்சருள்ளங் கனவெழக்கண்சிவக்க
முண்டியேசிலைவளைத்தே மோகனாஸ்திரந்தெரிப்ப
மூண்டியவீரனென்ன முளைத்தனரனேகர்கவ்வ
மண்டியவமைச்சர்சென்னி மண்ணினிலுருண்டதம்மா.

(இ-ள்.) வாதாவிமூர்ச்சித்து தேரில்சாய்ந்ததை மந்திரிமார்கள்கண்டு கண்ணில்நெருப்பெழக்கோபித்து வில்லைவளைத்துபாணத்தைதொடுக்க அப்போதுவீரவன்னியன்தன்னுடையவீரசூரபராக்கிரமத்தை மந்திரிமார்களுக்குத் தனித்தனியாய்காண்பித்துமோகனாஸ்திரமேவி அவர்களுடைய தலையுருளும்படியாகச் செய்தான் வீரவன்னியன் எ-று. (சஉ)

வாயினிற்குருதிசோர மண்ணையுங்கவ்வவீரன்
பேயனென்றுரைத்தநாவும் பெருகியவலைபோல்நீண்ட
நாயினநிணமருந்த நரியினமூளையுண்ண
பேயினந்தலையைத்தின்றே பெறுவதேசெபித்ததன்றே.

(இ-ள்.) மந்திரிமார்வாயிலிரத்தவெள்ளமோட மண்ணைக்கவ்விக்கொண்டு வீரவன்னியன்பேயனென்று சொன்னநாக்குச் சமுத்திரஅலைபோலநீளவும் நாயும்நரியும் பேயுங்கூடி ராக்ஷதரைப்பிடுங்கித்தின்ன செயமடைந்தது எ-று. (சங)

வேயெனுந்தோளிபங்கன் மிகவருட்சுங்கன்தந்த
தீயவுணதிசேனை திரளொருமுகமாமன்றி
யாயுதவகையாஞ்சூலங் கதையுடன்பிண்டிபாலம்
ஒய்விலாத்திகிரிதண்ட மோங்கியேயெறித்தான்மாதோ.

(இ-ள்.) பரமசிவன் வரப்பிரசாதத்தினாலேயுஞ் சுக்கிரபகவானாலே அளிக்கப்பட்ட ராக்ஷதசேனாசமுத்திரமெல்லாம்ஒரேகும்பலாகக்கூடி தங்களிடத்திருக்கின்ற சூலங் கதை பிண்டிபாலம் அலகு சக்கரம் தண்டாயுதம்இவைகளையெடுத்து வீரவன்னியன்பேரில் எறிந்தார்கள் எ-று. (௪௪)

வந்தவாயுதக்குழாங்கள மன்னிடவாயுவாளி
சிந்திடவாடித்திங்க ளிலையெனசிதறியோட
விந்தையாங்குண்டனேகம் வீறிடவிண்ணினுவி
சுந்தரவீரன்சேனை துடித்திடவந்ததன்றே.

(இ-ள்.) ராக்ஷதர்கள்எறிந்த ஆயுதம்வருவதை யறிந்து வாயுவாஸ்திரமேவ அதுகிளம்பி ஆடிமாதத்துகாற்றுபோல்வர அதனால்பாணங்களெல்லாம் ஒடுங்கிப்போயினதைக்கண்டு குன்றுகளைப்பிடுங்கியெறிய அதுகிளம்பி வீரவன்னியன்சேனைகள் துடிக்கும்படி வந்தது எ-று. (௪௫)

வரையினம்பொடிகளாக வச்சிராயுதந்தெரிப்ப
நிரைநிரையெனநெருங்கி நீளிருவிதம்பிற்றாற்ற
பரவிலாநிறைந்தியக்கர் பரவியவிருளாமென்ன
கருவியமாய்கைசெய்ய கதிர்முடிவீரன்கண்டான்.

(இ-ள்.) வருகிறமலைகளை வீரவன்னியன்கண்டு வச்சிராயுதம் விடுத்து அவைகளைத்தூளாக்கிவிட்டான் அதைராக்ஷதர்கண்டு சரமாரியாய் மாய்கையினாலே யிருள்கூட்டமானது ரணக்களந்தெரியாமலிருக்கும்படிசெய்ய அதைசூரியப்பிரகாசம்போல ஒளிபொருந்திய மகுடமுடியுடைய வீரவன்னியன்கண்டான் எ-று (௪௬)

கதிரெனுங்கணையினாலே கங்குலைக்கடிந்தகற்றி
சதிசெயமவுணராக்கை தரணியினுருளவாழி
யதிரவேதெரிப்பவிண்ணி லடைந்தவுணதிசென்னி
பதியினிற்பனங்காயென்ன பலபலென்றுதிர்ந்ததன்றே.

(இ-ள்.) சூரியகணையைப்பிரயோகஞ்செய்யஅந்தபாணத்திலிருந்து அனேகஞ்சூரியர்பிறந்து இருளையகற்றிவிட்டு ஆகாயத்திலிருந்தராக்ஷதாளுடைய தலையையும் அறுக்கும்போது அந்தத்தலைபனங்காய்விழுவதுபோல பலபலவென்று பூமியில்விழுந்தனஎ-று.

குருதியின்கடலின்மூழ்கிக் குதித்திடுமீனினங்கள்
இருவிசும்பதனிற்றாவி யிணையில்லாநீந்திற்றென்ன

பெருமையாமவுணராக்கைப் பருவரைமுடியைச்சாடி
பரவையிலளித்தவாயி பந்தனமானதன்றே.

(இ-ள்.) சமுத்திரத்தின் மீனங்கள் துள்ளி விளையாடுவதைப் போல ராக்ஷதர்கள் இரத்தக்கடலில்விழுந்தது எப்படியிருந்ததெ ன்றால் முன்னாளிலே ஆதிசேஷனும்வாயுராசனும் தர்க்கஞ்செய்ய ஆதிசேஷன் மகாமேருவில் படர்ந்திருக்கும்போது வாயுபகவான் கூடியசாமர்த்தியஞ்செய்ய முடியாமலிருக்கத் தேவர்கள்வந்துஆதி சேஷனுக்கும்சொல்ல ஆயிரம்பணாமுடியில் ஒருமுடியைக் கிளப்ப அதுவழியாய் வாயுசெல்ல ஆயிரத்தெட்டுகோடிமுடியுள்ளமகாமே ருவில் மூன்றுசிகரம்அற்று தென்சமுத்திரத்தில் விழுந்ததுபோல ராக்ஷதர்கள்தலைவிழுந்தன எ-று. மூன்றுமுடியில்ஒருமுடியிலங்கை ஒருமுடிமயேந்திராபுரி ஒருமுடிரத்தினபுரியிப்படியாகமூன்றுமுடி யும் மூன்று திட்டென்றறியவும்.

இறந்தவரெல்லாமண்ணி லிடுமியவரக்கர்மெய்யி
னுரந்தனற்கரத்தைநீட்டி யுருத்திரநயனன்சேனை
யுரத்தலேவடிப்பனென் றுறுத்துமேகவியமன்னன்
உரத்தனம்வலிவின்றன்ன லுருகினனுருகாநின்றார்.

(இ-ள்.) ஆகாயத்திலிறந்துபோனவ ரல்லாமல் இந்தபூமியிலி ருந்தபேராருமில்லை ராக்ஷதர்கள் சரீரவலிமையினாலும் தைரியத்தி னாலும் தங்களுடையகையைநீட்டி வீரவன்னியன்சேனைகள்அழுது முறையிடும்படி அடிக்கிறோமென்று வளைந்துகொண்டதைவீரவன் னியன்கண்டு தன்பராக்கிரமமுடைய பாணத்தினாலேஅவாளைஉரு க்கிப்போடும்படிச் செய்தான் அதைச்சட்டைபண்ணாமல் நின்றார் களென்றவாறு. (சகூ)

அகத்தினிற்செந்நீர்பொங்கி யவுணரின்பூண்டில்லாமல்
தகித்திடத்தணலின்வாளி தனுவினிற்பூத்ததாகப்
புகைந்தெழுமூழியங்கி யாமெனவெழும்பிப்பொங்கி
முகூர்த்தமொன்றினிலியக்கர் முடிந்தனர்மண்மேற்றானே

(இ-ள்.) வீரவன்னியன்தன்மனதில் கோபாக்கினிபொங்கவும் ராக்ஷதனுடைய பூண்டுகளில்லாமல் வேரறுத்துப்போடுகிறேனெ ன்று தன்னுடையவில்லிலே அக்கினியாஸ்திரந்தொடுத்து பிரயோ கஞ்செய்ய அதுபுகையுடனெழுந்து ஊழிகாலத்து வடவாக்கினி போலக்கிளம்பி கொளுத்துகிறபோது மூன்றேமுக்கால் நாழிகை

க்குள்ளாக ராக்ஷதசேனை ஒன்ருவது பூமியிலில்லாமல் மடித்துப் போட்டானென்றவாறு. (ருய)

ஆவெனவாய்திறப்பா ரருந்தநீர்தாருமென்பார்
கூவென்றுகுரலொலிப்பார் குருதியைக்கொப்பளிப்பார்
பாவியால்மடிந்தோமென்பார் பருங்கரங்கடித்தேவீழ்வார்
தீவினிலவுணரினறிச் சிதறினேமெனவேமாய்வார்.

(இ-ள்.) மடிந்தசேனைகளில்சிலர் ஆவென்றுவாயைத்திறப்பார்கள் சிலபேர்தாகத்துக்குத் தண்ணீரென்பார்கள் சிலர்கூக்குரலிடுவார்கள் சிலர் ரெத்தங்கள் குடிப்பார்கள் சிலர்வாதாவியால் மடிந்தோமென்பார் சிலர்கையைக்கடித்துக்கொண்டு கீழேவீழ்வார் சிலரிந்ததீவில் ராக்ஷதர்இல்லையென்பார் சிலபேர்கள் எ-று. (ருக)

நகைக்கெனக்கடிப்பாரிந்த நரன்கணைவலியதென்பார்
வகையில்வாதாவியெம்மை மடித்தனனந்தோவென்றே
யுகமுடிவானகால மொத்ததோயிவனலென்பார்
சகமெலாம்படைத்தவேணி சடையனேயருள்தாவென்பார்.

(இ-ள்.) பல்லைக்கடித்து மாய்வார் சிலர் இவனுடையபாணம் மகாவலிமையென்பார்சிலர்வாதாவிராக்ஷதன்கொல்லுகிறனம்மையென்பார் சிலர்யுகமுடிவானகாலம்வந்துசம்பவித்ததுவோ வென்பார் கங்கையைச்சடையில்தரித்த பரமசிவனைத்தொழுது துதித்து உம்முடையபாதாரவிந்தந் தாருமென்றுசொல்வார்சிலபேர் எ-று.

அழிவுளமெய்யிற்றைத்த வம்பினையகற்றிமாய்வார்
விழிபிதுங்கிடவேவீத்வர் வீரரின்தளத்தைச்சாடி
பழியறுவானேவாதான் பருமுடியுருளச்செற்று
செழுந்தருமலரின்மாலை யணிவனேசிவன்சேயென்றார்.

(இ-ள்.) தேகத்தில்தைத்த அம்புகளைப்பிடுங்கி மாய்வார்சிலர் வீரவன்னியன்சேனையை வாதாவிமடித்து பழிவாங்காமற்போவானேவென்பார்பலர் வாதாவியின்கிரீடமுடியை அறுத்துத்தள்ளின வீரவன்னியன் வெற்றிமாலைச் சூடுவானென்பார்சிலபேர் எ-று.

## வேறு.

வானவர்க்கிடர்செயும் வாத்தாவிமூர்ச்சைதேர்ந்
தானையுமமைச்சருந் தரணிமாய்ந்தபின்
வேனலாம்விழியென வெகுண்டுவீரனை
வானுலகேத்த வில்வளைப்பதாகினன்.

(இ-ள்.) இப்படியாகராக்ஷதசேனைகள் அவளவாள்மனம்போனபடிச்சொல்லிக்கொண்டு மாய்ந்தபிறகுத்தேவர்களுக்குத் துன்பஞ்செய்யப்பட்ட வாதாவிமூர்ச்சைதெளிந்து தன்னுடைய நால்வகைசேனையுமடிந்து கிடப்பதைக்கண்டு அக்கினிபோலக் கண்சிவந்துகோபாக்கினியுடனே வீரவன்னியனைத் தேவலோகம் அனுப்புகிறேனென்று வில்லைவளைத்தான் எ-று. (ருச)

பெருவீர்விரையெனும் பிள்ளையாமென்
மருமனமிரங்கினன் வலுத்தசேனையை
குருதியின்கடலெழ கொன்றவுன்சிரம்
இருவிசும்பேறிட வீழ்த்துவேனென்றான்.

(இ-ள்.) உன்னைச்சிறுபிள்ளையென்று மனதிலெண்ணி யிதக்கமாயிருந்த வென்னுடையதாஷ்டீகத்தையறியாதநீசேனைகளையெல்லாமிரத்தவெள்ளம்ஓடும்படியாய்க்கொன்றுபோட்ட உன்னுடைய சிரசை ஆகாசத்திற்போகும்படியாய்க் கொல்லுவேனென்றான்வாதாவி எ-று. (ருரு)

குலிசபாணி யனுகூலமாகவே
நலமுளரத்தின புரியைநாடினன்
வலிவிலாப்பாலரென் மனத்திலோர்ந்திட
மெலியவன்மேற்கணை வீசுகின்றனை.

(இ-ள்.) வச்சிராயுதமுடைய தேவேந்திரராசனுக்கு அனுகூலமாக இரத்தினபுரிபட்டணத்திற்கு வந்தவுங்களை பிள்ளைகளென்று நான் எண்ணியிருந்தேன் என்சரீரமெலியும்படியாக பாணப்பிரயோகஞ் செய்கின்றாய் நீ எ-று. (ருசா)

உன்றிணிபுயமென் றுளத்தினேர்ந்தன
னின்றுனதாவியை யீர்ந்துவீரரை
குன்றுருவேலினாற்கொலை செய்யாவிடின்
வென்றிவாதாவியா னல்லவென்றனன்.

(இ-ள்.) அடாவீரவன்னியனேஉன்னுயிரையும்உன்சேனாசமுத்திரத்தின் உயிரையும்என்கைவேலினால்கொல்லாவிட்டாலென்னுடையபேர் வாதாவிராக்ஷதசூரன் அல்லவென்றான் வாதாவிஎ-று.

கோரமாயுரைத்திடுங் கொடியசூரனை
வீரனுங்கண்டுரை வெகுண்டுவிள்ளுவன்
தாரணியவுணருந் தம்பிமக்களுந்
தீரமுவாட்டினதிணிபுயங் கண்டிலாய்

(இ-ள்.) கோபமானவார்த்தைபேசிய வாதாவிசூரனைவீரவன்னியன்பார்த்துசொல்லுவான் உன்சேனைகளுந்தம்பிமாரும்பிள்ளைகளும் என்கையால்மாண்டுபோன என்தைரியத்தைக் காணமாட்டாயோவென்றான் வீரவன்னியன் எ-று. (ருஅ)

ஒண்டியாயிரத மீரைந்துநின்றனை
அண்டையிற்றுணையிலா தவலமாகினை
பண்டரனளித்திடும் வரமுங்குன்றினை
சண்டனுமுன்னுயிர் தழைத்துநின்றனன்.

(இ-ள்.) அடாவாதாவியே நீஒருத்தனுமாக தனித்திருக்கின்றாயே சகாயமாகஒருவருமில்லையேமுன்னாலேபரமசிவன்கொடுத்த வயதும்வரமும் குறுகிப்போயிற்று எமன்உன்னுடைய உயிரைப் பிடிக்க மகிழ்ச்சியடைந்திருக்கின்றனன் எ-று. (ருசூ)

முத்தணிந்திடுமிசை முடிவதாகின
வித்தையையுணர்ந்திலா வீரங்கூறினாய்
சுற்றமுந்தானையுஞ் சூழ்மக்களும்
மற்றுமுன்னாண்மைக ளடக்கமின்றியே.

(இ-ள்.) பரமசிவன்கொடுத்தவரங்கள் முடிவாகிப்போயிற்று அதையறியாமலின்னமும் உன்னுடையஆண்மையைப் பேசுகிறாய் உன்னுடைய சுற்றத்தாரனைவரும் மடிந்ததுகண்டும் உன்னுடைய ஆண்மையையடக்கினதில்லையே யென்றான் வீரவன்னியன் எ-று.

தவவலிமிகுந்தவர் தாஷ்டிகூறிலார்
பவகுலமானதாற் பலிதங்கூறினை
நவமெனும்வாயலில் நாடியற்றிட
வவமெனடிகுவைய வுணனேயென்றான்

(இ-ள்.) தவமிகுந்திருக்கின்றபெரியோர்களும் வீரங்கூறமாட்டார்கள் பாவஞ்செய்யப்பட்ட ராக்ஷதகுலமானபடியினாலே சபதங்கூறினாய் உன்னுடைய நவத்துவாரமற்று மடிந்திடுவாய் வாதாவியே யென்றான் வீரவன்னியன் எ-று. (சுக)

அளவிலாத்தானையை யனுப்பவந்துபோர்க்
களமதில்மடிந்தனை கண்ணிற்கண்டனை
நலமுறுமென்படை நலிவுமுற்றதோ
களங்கமுன்கதிர் கண்படகூறினும்.

(இ-ள்.) அளவிடப்படாதமூலபலசேனையை யனுப்பப்போர்க்களத்தில்வந்து மடிந்துபோனதை உன்கண்ணினாலே கண்டாயே

என்னுடையசேனைகள் மடிந்தார்களோ திருட்டுத்தனமுள்ள வா தாவிராசனே உன்னுடையவார்த்தையெல்லாஞ் சூரியனைக்கண்ட பனிபோலாகுமென்றான் வீரவன்னியன் எ-று (௬௨)

அல்லலையகற்றிடுமான தனுண்மையாற்
செல்வமும்பெருகுவர் சேரியாதினோர்
வல்லமையானலம் வருகுமோபரன்
நல்வரத்தாலுனை நலிசெய்வேனென்றனன்.

(இ-ள்.) மனதைத்திடஞ்செய்து தவமுயற்சியினாலே பரமசிவனிடத்தில் செல்வமுதலாகிய வரத்தைப்பெறுவார்கள் அப்படியிருக்க ஆண்மையினாலேசெல்வம்வருமோ பரமசிவத்தினது வரம்பெற்றநல்பலத்தினாலே உன்னைக்கொன்று போடுவேனென்றான் வீரவன்னியன் எ-று. (௬௩)

கங்குலென்றுரைத்திடுங் கதித்தவாக்கையை
வெங்கணையீய்ந்திட வினைசெயாவிடிற்
றிங்களையணியரன்சேய னல்லனியரன்
அங்கயற்கண்ணியா னறியவென்றனன்.

(இ-ள்.) இருளையொத்த உன்னுடையபராக்ரமமாகிய தேகத்தை அக்கினிபொருந்திய பாணத்தினாலே மடியும்படிசண்டைசெய்யாவிட்டால் பரமசிவனுடையபிள்ளைநானல்லகெண்டையைப்போல்விழியையுடைய துர்க்காபரமேஸ்வரியறியச் சொன்னேன் வீரவன்னியன் எ-று. (௬௪)

என்றுரைபகர்ந்தனை யின்றிவீரன்மேற்
குன்றெனுமவுணனுங் கொதித்தெழும்பியே
வென்றியாயிரங்கணை விடுப்பதேரினை
யொன்றுதலின்றியே யுடைத்தெறிந்ததோ.

(இ-ள்.) இப்படியாகச்சொன்ன வீரவன்னியன்மேலே வாதாவிகொதித்து வில்லைவளைத்து ஆயிரபாணமேவிட அதுபோய் அச்சுவேறு ஆணிவேறாக வுடைத்தது எ-று. (௬௫)

மற்றொருதேரின்மேல் மன்னனேறுமுன்
பற்றியாயிரமாயிரபாண மேவினன்
சுற்றியசூரருஞ்சுதரும் மூர்ச்சையாய்
பற்றியபுவியினிற் படுப்பதாகினன்.

(இ-ள்.) மறுதேரின்மேல் வீரவன்னியன்ஏறுகிறதற்குமுன்னமேமறுபடியும் ஓராயிரபாணங்களை வாதாவியெடுத்துப் பிரயோக

ஞ்செய்தான் அந்தபாணஉக்கிரத்திஞலே வீரவன்னியனைச்சூழ்ந்தி ருந்தசேனைகளையும் பிள்ளைகளையும் மூர்ச்சையாகப்பூமியில் படுத் திருப்பவர்போலாகச் செய்தான் வாதாவி எ-று. (சுசு)

துண்டவாதாவிபின் றுடுக்கைக்கண்ணிஞற்
கண்டொருதண்டினைக் கரத்திலேந்தியே
முண்டியேதெரித்திட மூர்க்கன்சென்னியின்
மண்டியேமணிமுடி மண்ணில்வீழ்ந்ததே.

(இ-ள்.) துஷ்டஞகியவாதாவிசூரனுடைய கொட்டத்தைவீர வன்னியன்கண்ணுல்கண்டு ஒருதண்டாயுதத்தை யெடுத்தெறிந்தா ன் அந்ததண்டாயுதமானதுவாதாவியினுடைய தலையிலிருக்கின்ற மணிகளாலிழைத்தகிரீடத்தைமண்ணில் விழும்படிசாடிற்று எ-று.

முடிதெரித்திட வவுணதிமூண்டெழு
வடவையனலென்றென் மனத்தில்வெம்பியே
யிடியிடித்ததுவென விமையோரஞ்சிட
கடுஞ்சிலைகுணத்தொனி கணத்திற்செய்தனன்.

(இ-ள்.) நவரத்தினமுடியானது கீழேவிழுந்தவுடனேவாதாவி க்குக்கோபமானது உகாந்தகாலவடவாமுகாக்கினியைப்போல்மூ ண்டெழும்பி ஆகாயத்திலிடியிடித்தாலெப்படியோ அப்படிபோல தேவர்கள் அஞ்சும்படியாகக் கடுமையாகியவில்லை குணத்தொனி செய்து ஒருகணப்பொழுதில் எ-று. (சுஅ)

## வேறு.

விந்தைகிரியெனவந்தவவுணரின் வில்லின்வலிவினைமன்னனுஞ்
சிந்தைதனியிலுணர்ந்தந்தமாகிய சிலைகரத்தினிலம்பினை
முந்தியாயிரமேவுமூர்க்கனு மூண்டுகணைவதிலேவனும்
மந்தியகலெனவொழிவிலாமலே யமர்புரிந்திடலாகிஞர்.

(இ-ள்.) விந்தகிரிபோல்வந்துநின்ற வாதாவிசூரன்வில்லைவளை த்து குணத்தொனிசெய்தவலிமையை வீரவன்னியன்மனதி லுணர் ந்து அழகானதன்கைவில்லைவளைத்து ஆயிரம்பாணம்ஏவிஞன் வா தாவியானவன்கண்டு ஆயிரம்பாணத்தையேவிஞன் இப்படிஇராப் பகல் ஓயாமல்சண்டை செய்தார்கள் எ-று. (சுசு)

வடவையழலெனவிருவர்விழியினில் மளருமழலினைவடவைகண்
டடலினலிவுறவுவரிசுவறிடவுரகர் சுடிகையின்மணிதெரித்
திடிகளொலியெனவதிரகுணத்தொனி யிரதகொடிமுரசதிரவுங்
கொடியனுடலனலுருவமர்செய் குறையவிலமர்பொருதினரோ.

(இ-ள்.) இரண்டுபேருஞ்சமதையாகச் சண்டைசெய்வதில்ஊழிகாலத்து வடவாமுகாக்கினிபோல இரண்டுபேர்விழிகளில்வளரப்பட்ட அக்னியைக்கண்டுநலியவுஞ் சமுத்திரம்வற்றிப் போகவும் அஷ்டமாஞகங்கள் தலையிலிருக்குமிரத்தினமணி தெரித்துப்போகவுயிரைப்போலவிரண்டுபேருடையவில்லின்குணத்தொனிசத்தமும் தேரில்கட்டியகொடியின்சத்தமும் இப்படிகொடியவஞனவாதாவியின்தேகத்தில் அக்கினிஉருகும்படியா யிருவருந்தோர்வையில்லாமலிரண்டுபேருஞ் சண்டைசெய்தார்கள் எ-று. (எW)

குசன்சுழல்வவதிகிரியெனவலமிடசா கொண்டெனரிரதமேற்
கசடவுணனுமிணையில்சிவமகனுங் கடியசரமழைபொழியவும்
தசைவிலுதிர்மெழநகிகளெனவொழுதரணியுற்றதயிரியம்விடாகுர்
விசையரகுபதியுடனே தசமுகனெதிர்த்ததெென விளம்பவமர்செய்த
[னரரோ.

(இ-ள்.) குசவனனவன்சுழற்றப்பட்ட சக்கரம்போலிருவருடையரதமும் இடசாரிவலசாரியாக் ரதத்தின்பேரிலேயிருந்துஇருவரும்பாணசரங்களை மழைபோல்பொழிகிறபோது ஒருவர்பாணங்கள் ஒருவர்மேற்பட்டு உதிரமானதுபூமியிலோட தைரியம்விடாமல் இராமசாமியும் ராவணனும்சண்டைசெய்ததுபோலஆகுமென்று சொல்லும்படி சண்டைசெய்தார்கள் எ-று. (எக)

வாயுவருணனுமதியினுலகினின் மன்னிபகழிசொரிந்தனர்
காயுகதிருலகடையவாவணி கலங்கவலிமைகழறுவார்
பாயதெனவிரிபுவியிலதர பவனிபுரிந்தனன்மிசைரெருபதுநா
ளோய்விலுணர்விலாதுயிலுமின்றியே ஊக்கமோடமர்செய்தனர்.

(இ-ள்.) வாயுமண்டலம் வருணமண்டலஞ் சந்திரமண்டலமட்டும்போய் பாணசரம்பொழிந்தார்கள் மறுபடியும்சூரியமண்டலம் போய் பூமிகலங்கும்படிதங்களுடையபராக்கிரமங்களை பேசுவார்கள்பவனியாகச்சுழல்வார்கள்இந்தப்படியாகப்பத்துநாளிராப்பகல் ஓயாமல்ஊணுறக்கமில்லாமல் தைரியமோடுசண்டைசெய்தார்கள்

அலகையிரதமுமகவவிரதமு மாண்மையொன்றெனவமரரும்
இலகியுரைசெய்வழலிலுதிப்பவ னிணையில்திகிரியையேவவும்
அலகைசிரமதையறியவிரதமு மவனியினிலடியெனவிடி
புலவுமிகுவுடலவுணனுளமழல் பொலியபுவியினின்நின்றனர்.

(இ-ள்.) பூதங்கட்டியரதமும் குதிரைகட்டியரதமும்இரண்டுந் தோர்வையில்லாமல் வெகுபராக்கிரமத்திலே ஒன்றுயிருக்கிறதெ

ன்றுதேவர்கள்பிரகாசமாக சொல்லிக்கொள்ள அக்கினியிலுதித்த வீரவன்னியராசன் இணையில்லாதசக்கரமெடுத்து உபதேசித்தேவி யபோதுசக்கரமானதுவாதாவியின்தேரிற்கட்டிய பூதத்தின்சிரசை யறுத்துப்போடதேர்உடனே பூமியில்படீரெனவிழுந்தபோது வா தாவிமனதில் அக்கினியெழும்ப பூமியின்மேல்நின்றான் எ-று. (எங)

இரதமின்றியவுணன்வெகுகணை யெய்திமனமதுநையவும்
புரமுமெரிசெயும்புனிதன்மகலமா பொருதியமழுதிர்கணைதொட
வரையினிருசிரகறிவதெனபடை வலியவுரகருமறிகுவர்
பெரியகுரலொலிரதிரவவனியில் புரண்டுருண்டுதிரிந்தனன்.

(இ-ள்.) பூமியில்பாதசாரியாய்நின்ற வாதாவிசூரன்மகாகோ பமாகி அளவிடப்படாதபாணமெடுத்து நொந்துபோய் நின்றான் திரிபுராந்தகனாகிய பரமசிவனுடையபுத்திரனான வீரவன்னியன் தன்னுடைய உயர்ந்தவேலாயுதத்தைப் பிரயோகஞ்செய்ய அந்த வேலானதுஆக்கிரமித்து மலையின்சிரசையறுப்பதுபோல இரண்டு கையைவாதாவியின் மறுத்துத்தள்ளினவுடனேபெரியகுரலோசை யுடன் பூமியில்புரண்டு உருண்டுதிரிந்தான் எ-று. (எச)

வீரர்படையையறுத்துவெஞ்சினம் விட்டுதன்னுயிர்விண்ணிணிற்
சேரலதுதுணிவாகுமென்று செழித்தபுவியுமோரம்மியுஞ்
சூரனொருகுழவியுமெனபுரண்டு துஷ்டனுடலுயிர்விட்டிடக்
கூரயிற்கணையேவவங்கி கொதிப்பசென்னியைக்கொய்ததே.

(இ-ள்.) வீரனுடையபடைகளையெல்லாம் அறுத்துதம்முடை யகோபங்களைத்தணித்து சீவன்ஆகாயமடைகிறது மிக்கபராக்கிர மம்ஆகுமென்று பூமிஒருஅம்மியுந் தானொருகுழவியுமாகவுருண்டு கொண்டிருக்கிற துஷ்டனுயிரைமாயும்படி மறுபடியும் வேலாயுத த்தைப் பிரயோகஞ்செய்ய அந்தவில்லிலிருந்து விடுபட்டுநெருப்பு ப்பொறியைக் கக்கிக்கொண்டுவந்து வாதாவியின்சிரசை யறுத்து ப்போட்டது எ-று. (எரு)

வேறு.

முடியகற்றிட முண்டந்துடித்திடக்
கொடியவெஞ்சினக் கூற்றுவன்தூதருங்
கடுமையாகிய கயவரினுவியை
துடியதாகத் துரத்திப்பிடித்தனர்.

(இ-ள்.) சிரசறுந்துகீழேவிழுந்து முண்டந்துடிக்க உக்கிரமா கிய கோபங்கொண்ட எமதூதாள்ராக்ஷதருடைய உயிர்களையெல் லாம் ஓடிஓடிப் பதைபதைக்கப் பிடித்தார்கள் எ-று. (எசு)

வண்டராக்கதன் மண்ணின் மடிந்திட
வண்டர்கண்டு வகமுமகிழ்ந்துபூ
மண்டமர்க்கள மண்ணிடத்தூற்றியே
விண்டலம்விண்டு வீரனையேவினர்.

(இ-ள்.) பொல்லாதவனான வாதாவிமடிந்துகிடப்பதை தேவர்கள் கண்டுமனமகிழ்ந்து கற்பகப்பூமாரிபொழிந்து வாழ்த்திதேவ விமானத்துடன் வீரவன்னியனிடஞ் சேர்ந்தார்கள் எ-று. (எஎ)

சூரனுயிர் சோர்வுறுவீரரும்
வீரன்மக்களு மீறியெழுந்தனர்
மாரியென்னும் வராகிமலரடி
சீருடன்றுதி செய்துசெழித்தனன்.

(இ-ள்.) வாதாவிராக்ஷதன்பாணத்தினாலே மூர்ச்சையாகிக்கிடந்த சேனைசமுத்திரங்களும் வீரவன்னியன்பிள்ளைகள்நாலுபேரும் மூர்ச்சைதெளிந்து தைரியத்துடன் எழுந்திருந்து துர்க்காபரமேஸ்வரியைத் துதிசெய்து செழிப்புடனே இருந்தார்கள் எ-று. ()

கொற்றிபூதங் குளிர்மனமுன்னியே
செற்றவரக்கர் செழுந்தசைதின்றிட
வெற்றிமங்கள வீரனையேத்தியே
நித்தமாடியும் நேமியிருந்ததே.

(இ-ள்.) துர்க்கையினுடைய பூதப்படைகளெல்லாம்குளிர்ந்தமனதாய் ராக்ஷதருடைய மாமிசத்தைத்தின்றுவெற்றிபெறப்பட்ட வீரவன்னியனுடைய பாதத்தைவணங்கி நிருத்தமாடி பூமியிலிருந்ததுகள் எ-று. (எகூ)

கவந்தமாடக் கழுக்களுங்காகமுஞ்
சிவந்தசோரிக் கடற்றீர்த்தமாடியே
தவநிணங்களைத் தசையைப்பரிவுண
வவுணவாதாவி யாவியிழந்தனன்.

(இ-ள்.) குறைத்தலைமுண்டங்களாடக் கழுகுகாகமு மிரத்தக் கடலில்தீர்த்தமாடி ரணக்களத்தில்கிடக்கிற ராக்ஷதப் பிணங்களுடைய மாமிசங்களைத் தின்னும்படியாகவிருந்திட்டு ராக்ஷதனாகிய வாதாவிசூர னிறந்துபோனான் எ-று. (அ0)

ஓரிபாடவுமுற்ற பேயாடவும்
சூரமுண்டந் துடிக்கிடவானவர்

பேரினின்ற பித்தன்செய்வாளியால்
சோரியின்கடற் சூழ்ந்ததுவென்றனர்.

(இ-ள்.) நரிக்கூட்டங்கள்பாடிடவும் பேயினங்களாடவும் ராக்ஷதமுண்டமானது துடித்துகிடக்கிறதை தேவர்கள்கண்டு சொல்லுகிறார்கள் பரமசிவனுடையபிள்ளையின் பாணத்தினாலே இப்பேர்ப்பட்ட விரத்தக்கடல் சூழ்ந்ததென்றார்கள் எ-று. (அக)

லவணமென்னு மாழ்கடனடுவினில்
அவுணராக்கையுறைத்த செந்நீரெலாம்
பவமிலாதவிளங்கதிர் பான்மைபோல்
துவைந்துசிவைந்து தோன்றினதென்றனர்.

(இ-ள்.) உப்புக்கடலின் நீர்நடுவிலே ராக்ஷதாளுடைய ரத்தமெல்லாம் பரவியிருக்கபாவமில்லாதஇளஞ்சூரியனைப்போலத்தோய்ந்து சமுத்திரத்திலே தோன்றின எ-று. (அஉ)

விழிக்கயலினமாக விளங்கவும்
கழலடிக்கணைக்கால் வரால்மீனென
வழிவெனும்பிண மன்னதிவெண்ணுரை
குழிக்கவிகையிலரெனக் கூறினர்.

(இ-ள்.) ராக்ஷதர்களுடையகண்ணானது சேல்கெண்டைபோலவும் பாதமானது ஆமையைப்போலவும் கணைக்காலானது வரால்மீனைப்போலவும் அழிந்துக்கிடக்கின்றபிணமானது இரத்தக்கடலுக்கு வெள்ளைநுரைபோலவுங் குழிவாகியகண்கள் ஓடத்தைப்போலவும் இருக்கிறதென்று சொன்னார்கள் எ-று. (அங)

பருந்துவசமும் பாயமரமானசெஞ்
சரமுடன்சிலைதாஷ்டிகம் போலவெண்
தருசரீரமும் பங்கயதென்றளி
வுருவமானவுவரிடைப் பாரென்றார்.

(இ-ள்.) பருத்திருக்கின்ற விருதுகள் ஓடத்தில்கட்டியபாய்மரம்போலவும் சிவப்பாகியஅம்புகளும்வில்லும் பெருத்தபுல்லுகள்போலவும்ராக்ஷதருயிரானது தாமரையிலைபோலவும் யிப்படிக்கொத்தஉருவங்களான ரத்தசமுத்திரத்தைப் பாருமென்றார்கள் எ-று.

இரதமானதிலங்கிய மேருவாம்
பரவுசோரிடப் பரிதித்திசையினில்

கரவிலாமற் கவிழ்ந்தெழுந்தோடின
குருதியின்கடற் கோலமீதென்றனர்.

(இ-ள்.) தேர்களானதுபிரகாசமாகிய மலைபோலவும் எங்கும் பரவியிருக்கின்ற ரத்தங்கள்சூரியனுதயமாகிறபோதுகிழக்குதிசையைக்கண்டு நிற்காமல் களித்தெழுந்துஓடுகின்றரத்தக்கடலினுடைய கோலமிதுவென்ருர் எ-று. (அரு)

விண்ணவருயிர் மீறிவிளங்கின
றண்ணல்வீர னவுணரைசேற்றியே
நண்ணுகோயினி ஞடினன்ருனேயுப்
திண்ணமாகச் செகமுற்றிருந்தனர்.

(இ-ள்.) தேவாதிகள்படுகளத்தினுடையவண்மையையும் இரத்தசமுத்திரத்தையுங்கண்டு புகழ்ந்து தங்களுயிர்மீறி வாழ்ந்தார்கள் அண்ணலாகிய இராசாவான வீரவன்னியமகாராசாவானவன் ராக்ஷதாளைச் சம்மாரஞ்செய்து தாங்களிருக்கப்பட்ட விடுதிக்குப் போயிருக்கிருர்கள் பராக்கிரமமான சேனசமுத்திரங்களுஞ் செயங்கொண்டிருக்கிருர்கள் எ-று. (அசு)

செம்மல்வீரன் செயஞ்செயமென்னவே
மும்முரசிரன் குழாங்கண்முழக்கிட
வம்மையாகிய வந்தரியாருடல்
விம்மிடத்தொழுதேத்தி விளங்கினர்.

(இ-ள்.) இராஜாவான வீரவன்னியராஜன் செயமாகினேன் ஜெயமாகினேனென்று முரசுவாத்தியமுழங்கிட் தூர்க்காபரமேஸ்வரியினுடல் புளகாங்கிதமாகி அனேவரும்விம்மிதங்கொண்டு தொழுதிருந்தார்கள் எ-று. (அஎ)

## வே று.

ஈங்கிவரிருப்பமாய்ந்த வியக்கர்கோன்றேவிபக்கம்
பாங்குளவொற்றர்கூற பருஞ்சமர்க்களத்தைநாடி
ஓங்கியவரையாமென்னு முடலினேவிழியாற்கண்டு
தாங்கிடாத்துயரமுற்று தயங்கியேயறையலுற்ருர்.

(இ-ள்.) இப்படியாக வீரவன்னியதேவன் முதலாகியபேரும் இருக்கிறபோது இறந்துபோன ராக்ஷதனுகியவாதாவி பெண்சாதி சொக்ககன்னியிடத்தில் பாங்குள்ள தூதர்சொல்லக்கேட்டு பெருத்தயோர்க்களத்தில் ஓடிவந்துமலைபோல விழுந்துகிடக்கின்ற உட

லைக்கண்ணினாலேகண்டு மனதிலே தாங்காத்துயரமாகித் தேம்பிய சோகனுற்றாள் சொக்ககன்னி எ-று. (அஎ)

எனதுநாயகனேயுந்தனெழிலையும் புயமுங்கண்டேன்
மனதிலுவகையுற்று மருவினசுகமகிழ்ந்தேன்
புனிதனுமரன்சேய்வேலாற் புவியினிலாவிபோந்து
தனயர்பாற்சார்ந்திருந்த சுதிபறிகிலேனேயென்றாள்.

(இ-ள்.) எனக்குநாயகனான புருடனே யுன்னழகும்பராக்கிரமமான புயத்தையுங்கண்டு என்மனதில்வெகு ஆசையாகிநீரும் நானும்கூடிசுகமாகவிருந்ததெல்லாம் புனிதனாகியபரமசிவன் பாலர் வீரவன்னியன்கைவேலினாலே இந்தபூமியிலேஉன்னுடைய உயிரை போக்கிக்கொண்டுபிள்ளைகளிறந்துபோனவழியேபோனீரிப்படிக் குச்சதிசெய்துநான் அறிகிலேனேயென்றாள் சொக்ககன்னி எ-று

எண்டிசைவென்றேகீர்த்தி யியங்கியவுனதுபக்கஞ்
சண்டனுந்தூதர்மன்னத் தரணியேவலையிசைப்ப
வண்டருமஞ்சவந்த வரிவையாய்ப்பாணியீய்ந்த
மண்டலம்பிறந்ததெங்கே மறந்துயிரிழந்தாயென்றாள்.

(இ-ள்.) எட்டுத்திசையும்வென்றுகீர்த்திபெற்றிருக்கின்றஉன் பக்கத்திலேஎமனும் அவனுடையதூதரும்வந்து உம்முடையவேவற்பணிசெய்திருக்கவும் தேவாதிகளும் தேவஸ்திரீகளும் ஊழியஞ்செய்யும்படியாக நீரிந்தப்பூமியை யாண்டதெல்லாம்மறந்து மடிந்தாயேயென்றாள் சொக்ககன்னி எ-று. (கூ0)

மயனெனுமெனதுதாதை மாதவமிசைத்தளித்து
புயவலிசூரன்கையை பொருத்தவேயளிப்பவுள்ளம்
அயர்விலாதிருந்தவென்னையந் தரமாவிடுத்தே
செயமுறுமறலிபக்கஞ் செழித்திருந்தையோதென்றாள்.

(இ-ள்.) மயனாகியஎன்தகப்பன்தவஞ்செய்துஎன்னைப்பெற்று வளர்த்துபுசபலபராக்கிரமமுடைய உன்னுடையகையைப் பிடிக்க கலியாணம்செய்துக் கொடுக்கப் பயமில்லாமலிருந்த என்னை நீரிப்போது அந்தரமாகவிட்டு எமனுடையதூதரால் எமனுடையபட்டணத்தில் செழிப்பாகவிருக்கின்றாயென்றாள் சொக்ககன்னிஎ-று.

மக்களைப்பிடித்தவீரன் மாதுலனுலகிற்சார்ந்தே
மக்கமாய்ப்பொருதிநீபோய்த் தனையரையெழுப்பவென்றே
மைக்கண்டமுடையன்றாளில் மாதவம்புரிகின்றாயோ
துக்கசாகரத்தழுந்துந் தோகையானறியேனென்றாள்.

(இ-ள்.) நம்முடையபிள்ளைகளைமடித்த வீரவன்னியனுடைய மாமனுரான தேவேந்திரனுடையபட்டணம்போய்தகுந்தசண்டை செய்து பிள்ளையை யெழுப்பிவருவோமென்று விடமுண்டகண்டனை பரமசிவன்பாதத்தை நினைந்துதவஞ்செய்தீரோ பெண்ணை நான் துக்கசாகரத்திலழுந்தியிருக்கின்றேன் என்றாள்சொக்ககன்னி

சேடியராற்றமாது சிந்தையிற்றுயரமுன்னி
வாடியேமண்மேற்சோர்ந்து மார்பினிலறைந்தறைந்தே
யோடுவரவுணர்சோரி யுடலினிற்றோயவாயால்
பாடுவள்வாய்திறந்தே படிவரைபகரலுற்றாள்.

(இ-ள்.) தாதிகளும்புலம்பச் சொக்ககன்னியுமனதிலேமகாத்துயரத்தையடைந்து உடல்வாடிபூமியில் சோபமுற்று மார்பிலடித்துக்கொண்டு கோவென்றுமுறையமிட்டு ஓடுவாள்கீழே விழுவாள் ராக்ஷதாளிரத்தைத் தன்னுடையதேகத்திலேதோயும்படிவாயிலே வருகின்றபடி மனதில்வந்தபடி குற்றமாகியசொல்லுகளைச் சொல்லிஅழலுற்றாள் எ-று. (௬௩)

நரரினைவதைத்திடாம னலிவடைமன்னுபண்டு
வரங்கொடும்பலனேவுந்தன் மகத்தினலடைந்ததீதோ
வரஞ்செயுமமருக்கேக வொண்ணதென்றவெஞ்சொற்
றுரைத்திங்கணுறைந்தேயுள்ளந் துடித்துயிரிழந்தாயென்றாள்

(இ-ள்.) நானகியவீரவன்னியனைக்கொல்லாமல்நீரேநலிவடைந்துமடிந்தாய் முன்னலேபரமசிவனிடத்தில் வரம்பெற்ற பலனிதுவோ அல்லதுசெறுக்கினலேவந்ததீதோ சண்டைக்குப்போக வேண்டாமென்றுசொன்னவென்னுடையசொல்லைத்தடுத்திங்கேவந்து மனந்துடித்து உயிரிழந்துபோனயென்றாள் சொக்ககன்னி எ-று.

ஆழியோன்கணைதிருத்த வனங்கனுமெழலளிக்க
வாழிவானவர்களேத்த வாக்கினன்மறைவழுத்த
காமுறைமுனிகலங்கக் களித்திடுமுனைவதைக்க
வூழிகாலங்களென்ன வுருத்திரனுதித்தானன்றே.

(இ-ள்.) சக்கிராயுதங்கையிலேந்திய மகாவிஷ்ணு உன்னுடையபாணந்திருத்தியிருக்க மன்மதன்உனக்கு அழகுதிருத்தியிருக்க தேவர்களெல்லாருஞ் செயஞ்சொல்லியிருக்க பிரமன்சாஸ்திரவேதங்கள் சொல்லியிருக்க முனீஸ்வரர்கள் மனங்கலக்கமாயிருக்க நீ களிப்பாயிருக்க உகாந்தகாலம்போலவந்தான் வீரவன்னியனென்றாள் சொக்ககன்னி எ-று. (௬௫)

தவஞ்செயும்வலிமைக்காகத் தற்பரன்வரங்களீந்த[த்தாயிந்த
தவமெவன்போயிற்றையாதக்கதோ மொழிவாயின்றுயொழி
புவிபினிலிகழ்ச்சிதுன்ன புகன்றிடுமுண்டுவீரம்
அவலமானதுவுமென்ன வறிகிலேனரசேயென்றாள்.

(இ-ள்.) முன்னாலேதவஞ்செய்த பெருமையைப்பார்த்துபரம சிவன்வரமளித்ததனாலே அந்தவரமும்எங்கேஒழிந்துபோயிற்றோ இந்தபூமியில் இகழ்ச்சியில்லாமலிருந்தஉன்னுடையவீரமானபராக் கிரமமெல்லாம் அவலமாய்ப்போனதென்னமோ நான்அறிந்தேனி ல்லையே யென்னுடையபிராணநாயகனே யென்றாள்சொக்ககன்னி.

அமரருக்கிடரளிக்கா தவனியைப்புரப்பையென்றே
விமலன்சேயுரைத்தோர்தூது விடுத்தனனதைவெகுண்டே
சமர்செயவிசையாதாவி தரணியிற்சார்ந்தேபொல்லா
வரமளித்துனைவதைத்தே மலரணிந்திருந்தாரென்றாள்.

(இ-ள்.) தேவாதிகளுக் கிடறுகளாகிய துன்பஞ்செய்யாமல் பூமியையாண்டிருவென்றுபரமசிவன்பிள்ளைசொல்லியனுப்பினதை தடுத்துக்கோபத்துடனே சண்டைசெய்யும்படியாய்ச் சம்மதித்த படியினாலே யிந்தபட்டணம்வந்திருந்து சண்டைசெய்து உம்மைக் கொன்று வெற்றிமாலையணிந்தார்களென்றாள் சொக்ககன்னிஎ-று.

எண்ணினேனனேககால மிருந்திடவெனதுவாயில்
மண்ணினையளிக்கவீன்ற மகனுடனீயுமாண்டே
விண்ணுலகடைந்தாயுந்தன் வீரமுமவலமாக
பண்ணினோர்பரமன்பாலர் பார்த்திபவரசேயென்றாள்.

(இ-ள்.) நானெண்ணினேன்அநேககாலத்துக்கிருந்துவாழலா மென்றிருந்தவென்னுடையவாயில் மண்ணைப்போட்டு பெற்றபிள் ளைகளையுமடியசசெய்து நீயுமிறந்துதேவலோகம் போயிருக்கிறாய் உன்னுடையபராக்கிரமமெல்லாம் பரமசிவன்பிள்ளைகள்வீரவன்னி யர்கள் அவலமாகச்செய்தார்கள் என்றாள்சொக்ககன்னி எ-று. ()

உரிமையாயிருந்ததெல்லா மொளித்தனையுனதுவீரம்
பருமமாமுடலுஞ்சென்னி பாரினிற்புழுதிமண்டிச்
சிறுமையாலிருந்ததெல்லாஞ் செம்மலரணையிற்றுஞ்சும்
பரிவினையகன்றேயிந்தப் படுகளஞ்சேர்ந்தாயென்றாள்.

(இ-ள்.) நீரும் நானுமாக ஏகமனதுடனே இருந்ததெல்லாம் ஒழித்து பராக்கிரமமாகிய பலத்தையும் உடலுஞ்சிரசும்பூமியிலே கிடந்து புரண்டு புழுதியடைந்து சிறுமையடையலாமோ மலரணை

யில் நித்திரைசெய்கிறதைநீக்கி போர்க்களத்தில்வந்துசேர்ந்தாயே யென்றாள் சொக்ககன்னி எ-று. (௬௯)

கலந்தணைந்திருப்போமமனமறன கருததனாலுமை யதலலாம்
நலிவுறச்செய்தாயிந்த நானிலந்தனிலிருந்தே
குலவுவதுளதோவிந்தக் குவலயம்புரப்பவேறோர்
பலமுளப்பாலருண்டோ பாவையென்செய்வதென்றாள்.

(இ-ள்.) நெடுநாளைக்குக் கலந்தணைந்திருப்போமென்றுஎன் மனதில் நினைந்ததெல்லாம் நலிவுசெய்தாயே நானினியிந்தப் பூமியிலிருந்து வாழ்வதுண்டோ நல்லதுஇந்தபூமியை ஆள்வதற்குவேறு பிள்ளைகளுண்டோ பெண்ணாகியநானிருந்தென்ன செய்யப்போகிறேனென்றாள் சொக்ககன்னி எ-று. (௭)

தருமமாய்ப்புவிபுரக்கத் தன்மனத்துணராமன்ன
கரமுடன்சிரமுமற்றுக் களேபரங்குருதிசோர
மருமலரணையகற்றி மானிலம்படுத்தவுந்தன்
அரிவையானரற்றலாமோ யரசனேயந்தோவென்றாள்.

(இ-ள்.) நீதியாகப்பூமியாளும்படி மனதிலேநினைக்காத ராசனே உன்கையும்சிரசும் அறுபட்டுத் தேகத்திலிரத்தம் பெருகவும் ஆச்சுதே வாசனையாகிய மலரணைநீங்கி பூமியில்படுத்திருக்கிறா யுன்னுடைய பத்தினியாகிய நான்இவ்விடத்தில் வந்துஅழலாமோராசனே அய்யோவென்றாள்சொக்ககன்னி எ-று. (௭௧)

தானவர்மலர்கடூற்ற தையலர்கவரிவீச
பானெனுமாதரியாழ பக்கமாயிருந்துமீட்ட
கோனெனவிருந்தமன்ன கோதுளவமர்க்களத்தில்
யானரற்றிடவைத்தாயுன் னரசெலாஞ்சபலமென்றாள்.

(இ-ள்.) தேவர்கள்பூமாரிபெய்யதேவஸ்திரீகள் சாமரைபோடபான்மொழிமாதர்கள் யாழ்வீணைவாசிக்க இப்படியாகவிருக்கப் பட்டமகாராசனே குற்றமானபோர்க்களத்தில் நீயிறந்து கிடக்க நானிவ்விடத்தில்வந்து அழும்படியாகவைத்தது உன்னுடைய செங்கோல்பலமில்லாமல் போச்சுதென்றாள் சொக்ககன்னி எ-று. ()

சொக்ககன்னியிவ்வாறு துக்கசாகரத்திலாழ்ந்தி
பக்கம்வாழ்பாங்கியர்க்கே பகருவாளனல்வளர்த்தே
துக்கமருந்துமென்ன சுடரினைவளர்ப்பக்கண்டே
யக்கணம்வலம்புரிந்தே யருந்தணல்புகுந்துமாய்ந்தாள்.

(இ-ள்.) சொக்ககன்னியானவளிப்படியாகத்துக்கப்பட்டுபுலம்பிதன்னருகிலிருந்த தாதியைப்பார்த்து சொல்லுவாள் நானிருக்கலாகாது அக்கினிப்பிரவேசமாகவேணும் அக்கினிவளருங்களென்றுசொல்ல அப்படியேதாதியர் அக்கினிவளர்க்கும்போது அதைக்கண்டு வலமாகவந்துவிழுந்து மாய்ந்தாள் சொக்ககன்னி எ-று.

அப்பொழுதவுணமாத ரரிவையர்வீட்டிலேகி
எப்படிபிழைக்குமாறென் றிருந்தனர்தனியேயன்று
ஒப்புளவீரமன்றனு மொளிமலர்ப்பதமிறைஞ்சி
செப்புவனவுணவாதை தீர்ந்ததோவெனவுரைத்தான்.

(இ-ள்.) அந்தவேளையில் ராக்ஷதஸ்திரீகள் தாங்கள்தாங்கள் இருக்கப்பட்ட வீடுகளில்போயிருந்து இனியெப்படி, பிழைக்கப்போகிறோமென்றிருந்தார்கள் இப்பால்பரமசிவன் பிள்ளையானவீரவன்னியமகாராசன் தேவர்களைவணங்கி சொல்லுவார் உங்களுக்கெல்லாம்இராக்ஷததுன்பங்கள்தீர்ந்துபோயிற்றோவென்றான்எ-று

களங்கமும்விண்டோமன்ன கயவர்கள்சூறைகொண்ட
வளங்களையெமக்களித்தாய் மனதிலோர்சூழ்ச்சியுண்டு
களங்கமில்லாமற்கேளுங் கடவுளர்கோனேயென்ன
வுளக்கரைந்துவகையானவு கரியிலழுந்திச்சொல்வார்.

(இ-ள்.) வீரவன்னியமகாராசனே எங்கள் துன்பமும் நீங்கினோம் ராக்ஷதர்கொள்ளைகொண்ட எங்களுடையவளங்களும்பெற்றோம் எங்களுடையமனதில் ஒருசூழ்ச்சியுண்டு அதை களங்கமில்லாமல்கேளுமென்று சந்தோஷமாகச் சொல்வார்தேவர்கள்எ-று.

அவுணராலடைந்ததீதை யகற்றினையரசேயெங்கள் [ல்
புவியெலாஞ்செழிப்பவென்றுபுகழ்ச்சியையடைந்தோமிப்பா
அவனியறியச்சூர னஸ்தியையிரதமாக்கி
பவவிநாசங்கள்செய்யும் பரமன்பாலேகுமென்றார்.

(இ-ள்.) ராக்ஷதருடைய இம்சைநீக்கிய வீரவன்னியமகாராசனே உன்னாலேஎல்லாவளங்களையும்பெற்றோம்இந்தபூமியிலிருக்கப்பட்ட சகலமானபேர்களும் அறியும்படியாக வாதாவிசூரராக்ஷதனுடையவெலும்பை ஒருரதமாகச்செய்து பாவம்நீக்கப்பட்ட கயிலாசகிரிக்குப் போமென்றார்கள் தேவர்கள் எ-று. (௱௬)

வீரனுமயனைக்கூவி விளம்புவனவுணராக்கை
பாரமாம்பழுவெலும்பும் பருங்கழற்கரமெலும்பும்

கூருளியதனல்வாட்டி கொடுங்கையோடிரதமொன்று
திரமாயளிப்பையென்னத் தேரினையமைக்கலுற்றான்.

(இ-ள்.) வீரவன்னியமகாராஜன் அப்போது மயனை யழைப்பித்துவாராய்மயனே வாதாவியினுடைய சரீரத்திலிருக்கின்ற பழுவெலும்பு காலெலும்புகையெலும்பு இவைகளையெடுத்துச்சீவிஇரதம் அமையென்றுசொல்ல மனந்தேறிரதம்செய்தான்மயன் எ-று.

கரவெலும்பச்சதென்ன கதிக்கநாற்சதுரமாக்கி
பருமனாற்கால்நிறுத்தி பருவளைமேலமைத்து
திரமுறும்நடுக்கானன்கில் சிகைகொடுங்கையும்வரிந்தே
இருபுறவெலும்பினாலே யிழைத்தனனிரதமவுணன்.

(இ-ள்.) கையெலும்புஅச்சாகவும் சதுரமாக நாலுகால்நிறுத்தி மேல்வளைபோட்டு கால்நான்கிலும் கொடுங்கையுமமைத்துமுப்பத்திரண்டு பழுவெலும்புகளையும் நாலுபுறமும் நாலுபங்காக இரதத்தை யமைத்தான் மயன் எ-று. (௱அ)

அசுரனோதுணைவன்சென்னி யைந்தையுங்கலசமென்ன
யுசிதமாயளிக்கக்கண்டு வும்பருமுவகையுன்னி
பசியபொற்கழலோனை பார்த்திபன்மரபினோர்க்கே
விசிதமாய்வகுத்தீரென்ன விளம்பினரமரர்மாதோ.

(இ-ள்.) வாதாவியினுடையசிரசும் அவன்தம்பியினுடையசிரசும் ஆகஐந்துசிரசும் ஐந்துகலசமாகவும் உசிதமாகவைத்திருக்கிறதைக்கண்டு தேவர்கள்சந்தோஷமாகி பசும்பொன்னிறமுடைய வீரவன்னியராசன் குலத்தாரனைவருக்கும்இதுவிருதாகுமென்றுசொன்னார் தேவர்கள் எ-று. (௱கூ)

புலாலவுணர்கள்மாள போரளித்திட்டவீரன்
அலகைநாயகியையேற்றி யந்தரியருளாலிந்த
வலியுளனவி வதைத்தனமெனவழுத்தி
நலமுறுவாக்கமண்டபத்தி லிருந்துரைநவிலலுற்றான்.

(இ-ள்.) புலால்நாற்றம்வீசும் ராக்ஷதரைக்கொன்ற வீரவன்னியமகாராசன் பூதப்படைசூழ்ந்திருக்குந் துர்க்காபரமேஸ்வரியை வணங்கித்தாயே உன்னுடையகிருபையினாலே வலிமையுள்ளவாதாவிசூரனை மடித்துப்போட்டேனென்றுசொல்லிநலமாகியதூண்இருக்குமண்டபம்போயிருந்து சொல்லுகிறான் வீரவன்னியன் எ-று.

இகல்செயுமவுணர்சென்னி யீந்தனமியக்கர்வாழ்வும்
நகரினைத்தூளதாக்கி நங்கையின்கருவறிந்தே

துகையிலாமணியும்பொன்னுஞ் சூறைகொண்டரன்பால்செ
புகழுறுமெனவுரைத்தே புளகமொத்திருந்தாரன்றே. [ல்க

(இ-ள்.) பகைசெய்யப்பட்டராக்ஷதனாகியவாதாவியையும் அவன்சேனாசமுத்திரத்தையுங் கொன்றுபோட்டோம் இரத்தினபுரிபட்டணத்தையும்பிடித்துத்தூளாக்கி ராக்ஷதருடைய பெண்டுகளையும் அவர்களுடையகருவையுமழித்து அளவில்லாதநவரத்தினங்களையும் கொள்ளையடித்துக்கொண்டுபோனாலெப்போதும் நமக்குபெருமையாகுமென்று வீரவன்னியன்சொல்லஅதையனைவருங்கேட்டு அன்றையத்தினமிருந்தார்கள் எ-று. (கககச)

தத்துவப்பொருளுணர்ந்தே தற்பரனடியைப்போற்றும்
அத்திரிமுனியேயின்ன மளவிலாவீரன்செய்த
சத்தியமாய்ச்சொல்வேன் கேளுமென்றுநற்சனகன்கூறி
ரத்தினபதியழிக்கும் நடத்தையைநவிலலுற்றார்.

(இ-ள்.) தத்துவத்தினுடைய பொருளையாராய்ந்து தெளிந்து பரமசிவத்தை வணங்கப்பட்ட அத்திரிமகாரிஷியேயின்னம் வீரவன்னியமகாராசன் நடத்தப்பட்டகாரியஞ்சொல்லுவேன் கேளுமென்று சனகர்சொல்ல அத்திரிமகாரிஷிபணிந்துகேட்க சனகமகாரிஷிசொல்லலானார் எ-று. (கககஉ)

## வாதாவிராட்சதன் சண்டை.

முற்றிற்று.

---

ஆகபாயிரம் உட்பட சருக்கம் உகூ-றி

திருவிருத்தச் செய்யுள் கூளுச.

உ

கடவுள் துணை.

இருபத்தொன்பதாவது.

# நகராழித்தச்சருக்கம்.

ஆனந்தநடராசனருளானவெழில்வீரனதிவீரர் புடைசூழவே,
தேனுந்திமலர்மன்னுதிரிசூலி கொலுவிற்செழித்தேயிறைஞ்சிமொ
ழிவன், ஆனந்தகௌமாரிகிருபாகரிப்பார்வை யாகின்றவமலியவு
ணர்கூனுந்துமுரசுன்னு மதிலானநகரைக் கொடுத்தாளெனச் செ
யென்றான்.

(இ-ள்.) ஆனந்ததாண்டவஞ் செய்தருளும் பரமசிவன்பிள்ளை யெனும் வீரவன்னியன்தன் சேனைகள்புடைசூழ்ந்துவந்து துர்க்கா பரமேஸ்வரியிருக்குங் கொலுமுகத்திற்போய்பாதம்வணங்கிச்சொல்லுவான் மதிலுமாடமாளிகையுஞ்சூழ்ந்த இரத்தினபுரி பட்டணத்தைபிடித்து வரும்படிக்கருள் புரியவேணுந்தாயேயென்றான் வீரவன்னியராசன் எ-று. (க)

அதிவீரர்துதிசெய்யுமரசேயுனக்கன் பளித்தேனென்னளியுடனே
சுதனால்வரதிருணுவுடனேகிபதிதா ளெழும்பத்துணித்திடுமெனச்
சதியானவவுணதிபசிமாசுமன்னத் தளத்தோடுநகரினனுகி
மதிபானுவலமன்னுமதில்சூழிறும்பதியில்மாசூறைகொள்ளலுற்றா

(இ-ள்.) வீரர்கள்துதிசெய்யப்பட்ட வீரவன்னியனேஉனக்கு என்னருளளித்தேன் பூதப்படையையும் லக்ஷம்வீரரையும் சேனையும்அனுப்பி யிரத்தினபுரிபட்டணத்தில் உன்னுடையபிள்ளை நால்வருமபோய் இரத்தினபுரிபட்டணத்தைத்தூளெழும்பும்படியாகச் செய்துபோடுமென்று சொல்லக்கேட்டு வீரவன்னியர்நாலுபேரும் தங்கள்சேனையுமாகச் சூரியன்சந்திரன் எட்டிப்பார்க்கப்படாத இரத்தினபுரியின் மாடமாளிகைகூடகோபுரங் கோட்டை கொத்தளங்கள் முதலாகியவற்றைக் கொள்ளையடிக்கப் போனார்கள்எ-று.

வேறு.

திக்கினிலேகி செயம்பெறுவானோர்
தாக்கமகற்றி சூள்களணிந்தே
மிக்கதிதிப்பணி வெண்டரளங்க
ளூக்கிரவீரர் கவர்ந்திடலுற்றார்

(இ-ள்.) எட்டுதிக்கினிலும் போய்செயமாக இருக்குந்தேவர்கள் துக்கங்களைநீக்கி ராக்ஷதருடையநீதியாகிய சகலசாஸ்திரங்களையும் நிதிக்குப்பல்களையும் முத்துக்களையும் கொள்ளையடிக்கும்படியாய் வீரர்கள்உக்கிரமாய் அபகரிக்கப்போனார்கள் எ-று (ங)

சுரங்கமிடுக்குள் தோறும்வளைந்தே
நெருங்கியகுப்பை நிதிக்குளனைத்தும்
அருஞ்சிலைவீர ரடைந்துகவர்ந்தே
பரிகரிமீதினில் பரும்பொதியிட்டார்.

(இ-ள்.) சுரங்களிலும் இடுக்குகளிலும்இருக்கப்பட்ட திரவியத்தை ஆனைமேலும்குதிரைமேலும் அருமையாகியவில்லைத்தாங்கிய வீரர்கொள்ளையடித்துப் பொதிப்போட்டார்கள் எ-று. (ச)

அளந்திடுநீளமைஞ் ஞாறெனுங்காதம்
திடம்பெருமாளிகை சென்றிடுவ்வீரர்
அடங்கலுணர்ந்த விராக்கதமாதர்
படர்ந்துநெருங்கி பராக்கிரமுற்றார்.

(இ-ள்.) அளவிடப்பட்டநீளமான ரத்தினபுரிபட்டணம் ஐந்நூறுகாதஅகலமும் நீளமுமான நகரத்திலிருக்கும்மாளிகை வீடுகளில்போய்வீரவன்னியர்கள்புகுந்தபோது அவ்விடம் வந்திருக்கும் ராக்ஷதப்பெண்டுகளனைவருங் கூட்டமாகக்கூடி வெகுபராக்கிரமங்களைச்செய்தார்கள் எ-று. (ரு)

பேய்முகமாதர் பெரும்படைமொய்த்து
சாய்கதிரென்னக் கன்னல்பெருத்த
வாயினிற்கொள்ள வளைந்திடவீரர்
ஆயுதமேவதிர்ந் திலரென்றே.

(இ-ள்.) பேய்முகமுடைய ராக்ஷதஸ்திரீகள் வெள்ளம்போலவந்து வீரவன்னியரைவளைத்துக்கொண்டு சூரியனைப்போலகோபமாகவாயில்முழுங்கிவிடுவோமென்று வளைக்கவீரர்கள்பாணங்களையேவச் சட்டைபண்ணாமல் இருந்தார்கள் எ-று. (சா)

## வேறு.

பருத்திடுமெய்யிற் பதிந்தசரங்களை
கரத்திற்பிடுங்கிக் ககனமெறிந்தே
உரத்தொனிகாட்டி யுகாந்தனல்வீசி
செருத்ததென்னத் தேய்த்தொழித்தாரே.

(இ-ள்.) ராக்ஷதஸ்திரீகள் பேரில்பட்டபாணங்களைகையால பிடுங்கி ஆகாசத்திலேயெறிந்துநிற்கையில் மறுபடியும்வீரர்கள் அக்கினியாஸ்திரத்தையேவ அதையுஞ்சட்டைபண்ணுமல் காலினல் தேய்த்துப்போட்டார்கள் எ-று. (எ)

சண்டமாருத மென்னவிடுஞ்சர
மண்டிடாமலர்க் கையாற்றடுத்திட
தண்டுசூல மயிலுடன்சக்கரம்
மொண்டுயெய்ய முனிந்துதடுத்தனர்.

(இ-ள்.) சண்டமாருதம்போல்வரப்பட்ட பாணங்களைவிலக்கியதைக்கண்டு தண்டாயுதஞ்சூலாயுதம் சக்கிராயுதம் வேலாயுதப் இவைகளைப்பிரயோகஞ்செய்ய அவைகளையுந்தடுத்து விட்டார்கள் ஸ்திரீகள் எ-று. (அ)

தீரமானசிலையின் மிகுத்திடும்
வீரன்சேனை விடுஞ்சரமண்டிட
கோரஞ்செய்து கொதித்திடுமாதரை
வீரன்பாலர் விழியினற்கண்டனர்.

(இ-ள்.) வீரவன்னியர்கள் அதிகபலம்பொருந்தி பாணங்கள் தொடுக்க கோரரூபமுடைய ராக்ஷதஸ்திரீகள்மேல்தைக்காமல்தடுப்பதை வீரவன்னியன்பிள்ளைகள் கண்ணினற்கண்டார்கள் எ-று.

கொதித்திடுஞ்சினக் கூற்றுவனுமென
வதித்தெழுந்த வவுணரின்னுண்மையை
சிதைத்துசெஞ்சரத் தீயைத்தெரிவைமார்
மதித்திடாதென்ன மாயமென்றெண்ணினர்.

(இ-ள்.) எமனைப்போல கோபத்துடனெழுந்துராக்ஷதஸ்திரீகளையழிக்கப் பயமில்லாமலிருக்கிறதை கண்டித்துமாயமென்றுயோசித்தார்கள் எ-று. (ய)

கங்குலென்னக் கடிந்திடுமெய்யினர்
தங்கிடுமயிற்றண் டகமாம்விழி
பொங்கிநின்றுவழற் பொறிமண்டிட
கொங்கைநீளமுங் கூறவொண்ணுதென்றார்.

(இ-ள்.) இருட்டுக்குச்சரியான தேகத்தையுடையராக்ஷதஸ்திரீகள்கோபத்துடன்பகைத்து அதில்முளைத்துஇருக்குமயிர்கள் காடுபோலவும் நேத்திரமானது கொதிக்குமக்கினியைப் போலவும்

ஸ்திரீகளின் அளகபாரமும்ஸ்தன்னியமும் ஆபிரமுழநீளமுள்ள அவைகளை யளவிடக்கூடாதென்றூர்கள் எ-று. (கக)

அவுணராண்மைக் கதிகமெனுமிவள்
அவணருக்குளடங்கி யிருப்பளோ
புவனமீன்ற புனிதனிம்மாதரை
அவனிமீதி லளித்திடலாகுமோ.

(இ-ள்.) ராக்ஷதாளுடைய பராக்கிரமத்துக்கு மேலாகியபராக்கிரமமிகுத்தராக்ஷஸ்திரீகள் புருஷனுக்குள்ளாகளப்படியடங்கியிருப்பார்களே அண்டபிண்ட சராசரங்களையும் அளிக்கப்பட்டபரமசிவன் இந்தராக்ஷதிகளை உண்டாக்கக்கிருபை செய்யலாகாது.

## வேறு.

தாண்டியேயகங்கர்ச்சிப்பாரதக் கினைகரத்தாற்சுற்றி
மூண்டெழுவீரர்மீதில் மோதுவாள்மார்க்கமில்லா
வேண்டியகபடவார்த்தை விளம்புவாள்விண்ணோர்தம்மை
மாண்டிடவடிப்போமென்று மாதரின்றுணிவைக்கண்டான்.

(இ-ள்.) ஆகாசத்தில்தாண்டிகர்ச்சித்து தங்கள்முலைகளைக்கையில்கயிருக சுற்றிக்கொண்டு கோபாக்கினியுடைய வீரவன்னியரையும் அடக்கமில்லாமல் குற்றமாகியவசனங்களைப்பேசி தேவர்களுடையசீவன்களையும்மாண்டுபோகச்செய்கிறேனென்கிற வார்த்தையைக்கண்டார்கள் எ-று. (கங)

கொங்கைமேற்றுயிலுடுத்தார் கூறவுமடக்கமில்லார்
சங்கரன்பாலனென்றே தன்னுளத்துணராப்பேயர்
எங்கிலுந்திரிவரின்பம் வியம்பினுலிடரிதண்டே
பொங்குவரவுணர்மாகர் புதுமையைப்புகலலாமோ.

(இ-ள்.) ஸ்தனபாரத்தை மூடமாட்டார்கள்பேச்சுகளடங்கிப்பேசமாட்டார்கள் பரமசிவன்பிள்ளை யிவர்களென்றும் சற்றுகிலுமனதில்நினையார்கள் பேயகளைப்போல வெங்கும்திரிவார்கள் நன்மைசொன்னுல் அதைக்குற்றமா யெண்ணிபிருப்பார்கள் இந்தராக்ஷதிகளுடைய நடக்கை சொல்லலாகாது எ-று. (கச)

ஆணின்மேலமரளிப்ப தரிவையர்க்கழகிதென்று
நாணமெள்ளளவுமின்றி நவின்றிடுமொழியைக்கண்டே
பாணியிலுறைந்தவாளி பலத்தினலடங்காரென்றே
வேணியன்றனைநினைந்தே வீரருமயக்கமுற்றூர்.

(இ-ள்.) புருஷாளின்பேரில்ஸ்திரீசாதிகளெதிர்ப்பதுண்டோ அதுவழகல்லவே அச்சமில்லாமல் துன்மார்க்கமாகப்பேசுவதைவீ வன்னியன்பிள்ளைகள்கண்டு நம்முடையகையிலிருக்கும் பாணத்தினால் இவ்வளடங்கமாட்டார்களென்று பலவாறுயோசனை செய்து பரமசிவனைநினைந்து மயங்கினார்கள் எ-று. (கரு)

மாருதமென்னவாளி வருஷிக்கமனஞ்சேராமற்
பாரியகடத்தையுண்ணும் பாவையராவிநீங்க
வீரரையகலுமென்றே வினைவழலெங்குமூட்டி
பாரும்விண்ணிறையச்செய்த பரிவினாலுளமுஞ்சோர்ந்தார்.

(இ-ள்.) மாருதமென்னப்பட்ட அஸ்திரமேவிஸ்திரீகளின்சேவனைவிலக்கத்தன்சேனைகளை நிறுத்திப்போட்டுராக்ஷதியின்வீடுகளில் அக்கினியால்கொளுத்தும்போது பூமியிலிருந்து ஆகாசமளாவியெரிகிறபடியினாலே ராக்ஷதஸ்திரீகள் மனதுசோர்ந்திருந்தார்கள். ()

சுத்தியபுகையினாலுஞ் சுடரெறிவண்மையாலும்
குத்திரவவுணமாதர் குன்றியோவென்றுவாழ்த்தி
யித்தினமடிந்தோமென்பா ரிவன்கணைவலிதாமென்பார்
ரத்தினகரத்தின்வண்மை நலிவடைந்திடுமதென்பார்.

(இ-ள்.) பட்டணமெங்கும் அக்கினிசுற்றியெறியப்பட்ட தீயிலகப்பட்டு மனதுஒடுங்கி ஓகோவென்றுஅழுது 'யின்றைக்குமடிகிறோமென்பாரும் இவனுடையஅக்கினியாஸ்திரம் சுருக்கென்பாரும் இரத்தினபுரிபட்டணம் தீயடைந்துபோம் எ-று. (கஎ)

வெஞ்சமனிவனாமென்பர் மெய்யெலாம்புழுங்கிமாய்வார்
பஞ்சினிற்பொறியாமென்ன பருஞ்சிகைபொசுங்குநாற்ற
மிஞ்சிடவவுணமாதர் வெம்படைமனைத்துமுள்ளஞ்
சஞ்சலமுன்னிமாயத் தந்திரமளித்துமர்ந்தார்.

(இ-ள்.) இவன்எமனென்பாரும் தேகம்புழுங்குதே அய்யோவென்பாரும் பஞ்சில் அக்கினிபட்டதுபோல மயிருபொசுங்கிநாற்றமிகுதியாகநாறவும் ராக்ஷதிகள் துன்பமடைந்துமாண்டுபோகும்படியாக தந்திரஞ்செய்து நின்றான் எ-று. (கஅ)

## வேறு.

வடவைக்கழலென்ன வணைந்தவனற்
றுடியுற்றிடு தோகையராவிகள்மண்
பொடியுற்றிட பொங்கினபூபதிசெய்
கொடுமைக்கணையின் றுனைக்கூறுவதே.

(இ-ள்.) ஊழிகாலத்தீயைப்போல சுற்றிவளைந்துக்கொண்டு பெருத்ததேகமுடைய ராக்ஷதசிவன்களை மண்ணில்மடியும்படிகொளுத்திப்போட்ட வீரவன்னியன் பிள்ளைகளுடைய பாணங்களின் பெருமையைச்சொல்ல அரிதே எ-று. (ககூ)

வருமவுணதிபர் மாதரினங்
கருவுண்டுகொலோ மொழிகணையா
யுரமுற்றிடுநாணி வொலித்திடவெஞ்
சுரமுற்றனர் தாரணியெங்கணுமே.

(இ-ள்.) அவ்விடத்திலின்னம் ராக்ஷதிகளுண்டோ வென்று சேனைகளுடன்போய்வளைந்து அக்கினியாஸ்திரமெடுத்து மந்திரித்துப் பட்டணத்திலிருக்கின்ற ராக்ஷதருடையகருவையறுக்கும்படி விட்டான் எ-று. (உ0)

அவுணதிகருக் களரிந்தனமின்
னவமாமணிசேர் கரஞ்சிதற
கவவீரெனவீரர் களிப்புறவே
குவவுத்திரடோள் வலிகூறினரே.

(இ-ள்.) ராக்ஷதாளுடைய கருவையுமறுத்துப் போட்டோம் நவமணிசேர்ந்த பட்டணத்தையுஞ் சின்னபின்னமாக விடித்துப் போடுவோமென்று தன்சேனைகளுடனேபோய் தங்களுடையவலிமையைச் சொன்னார்கள் எ-று. (உக)

வானோர்தருவும் பணியும்வனமும்
மானுவளகா பதியந்தமுடன்
கூனுமுரசுக் குழுவின்களொடுந்
தானோரிடந்தந் தனருணுவரே.

(இ-ள்.) தெய்வலோகத்தினிட கற்பகத்தருவும் பணியும்படியானவனமும் குபேரனுடைய அழகான அளகாபுரியின்திரவியமெடுத்து அவாளவாளிடத்திற் கொடுத்தார்கள் எ-று. (உஉ)

## வேறு

இருப்புலக்கையையெடுத் திடித்திடுமென்பாரெந்தன்
கரத்தினுலசைப்போமென்பார் கழலினலெற்றுமென்பார்
பருத்திடுகரர்க்குமீதிற் பரித்திடும்விருதினங்கள்
நெரித்தனனதைக்கவர்ந்தே நிருபனுக்களிப்பதென்றே.

(இ-ள்.) வீரவன்னியர்களுடைய சேனுசமுத்திரத்தின் கையி லிருக்கும் இருப்புலக்கையால் மதில்முதலாகியவிடுதிகளை யிடித்து ப்போடுமென்பார்கள் கையினுலசையு மென்பார்கள் காலினுலே யெற்றிப்போடுமென்பார்கள் பெரியமதில்மேலேகட்டியிருக்கின்ற விருதுகளைப்பிடுங்கி வன்னியராசனிடத்தில் கொடுப்போமென்று சொல்லுவார்கள் எ-று. (உரு)

வானுயர்மதில்மீதேறி மண்டினர்பஞ்சவர்னந்
தானரம்முடனேயாளி தணிவிலாச்சிங்கமானை
நானிலவிடபமன்ன நரிமயில்கலுழன்சேவல்
தானனுமனுசெங்காவித் தழைத்தவான்புவியும்பூதம்.

(இ-ள்.) ஆகாசமளாவிய மதின்மேல்கட்டிய கொடிகளைஉயர வேறிக்கொண்டு பஞ்சவர்னக்கொடி அரவக்கொடி ஆளிக்கொடி சிங்கக்கொடி ஆனைக்கொடி ரிஷபக்கொடி அன்னக்கொடி நரிக் கொடி மயிற்கொடி கருடக்கொடி கோழிக்கொடி அனுமக்கொடி காவிக்கொடி பூதக்கொடி எ-று. (உச)

முரசுசெங்கவிகையான சுருட்டியுமொய்ப்பக்கண்டே
பருமையையடைவோமென்ன பகைவர்களகமகிழ்ந்தே
விரிமதில்கண்டவீரன் விரற்சிறுபாலன்முன்பு
கரமதிலளிக்கக்கண்டு களித்தனர்துவசந்துன்ன

(இ-ள்.) முரசக்கொடிசெங்காவிக்கொடி சுருட்டிஇந்தகொடி களெல்லாஞ்சூழ்ந்துவர புகழ்ச்சியடைவோமென்று சேனை மதில் புரம் விட்டுப்போய்வீரவன்னியமகாராசன் சமுகத்தில்இந்தவிருது களையெல்லாம் கொடுக்கக்கண்டு மகிழ்ந்தான்வீரவன்னியன்எ-று.

பதினெட்டுவிருதுஞ்சூழ பதிதனையிடித்துவந்தான்
சதிர்கொலுக்கூடஞ்சாலை தைத்தியர்விடுதியேகி
நிதியினைக்கவர்ந்துகாண்போ நீணிறக்கடலிற்றள்ளி
பதிபதிவீரன்றானு மகங்களிகூர்ந்திருந்தார்.

(இ-ள்.) பதினெட்டுவிருதுகளுஞ்சூழஇரத்தினபுரிபட்டணத் தையிடித்துத்தூளாக்கி வாதாவிசூரன்செங்கோல் செலுத்தப்பட் ட சிங்காரமண்டபமுமிடித்து வீட்டிலிருந்த ஆடையாபரண முத லானதையும் வாறிக்கொண்டு மண்புழுதியையெல்லாங் கடலிற்றா ற்றிவிட்டு வீரவன்னியனுடைய சேனுசமுத்திரங்கள்மனதுசந்தோ ஷமாக விருந்தார்கள் எ-று. (உகூ)

வானுயர்மதிலின்கோட்டை வாயல்வான்பரிகடுன்னுங்
கோனுறைநகரஞ்சாடி கொடுத்திடுவீரன்முன்பு
வீனமுற்றியக்கர்மாத ரினங்களினல்வர்மண்மேல்
மானிடவுருவமன்னி மாட்சியுற்றிருக்கலுற்ருர்.

(இ-ள்.) ஆகாசமளவுமுட்டிய மதில்கோட்டையைகுதிரைகள் சூழும்படியான வாதாவியின் இரத்திணபுரிபட்டணத்தை யிடித்துப்போட்டு கோபித்திருக்கின்ற பிள்ளைகள்நால்வர்முன்பாக ராக்ஷதிகள் நாலுபேர்களும் பூமியில் மானிடஸ்திரீகள்போல வடிவெடுத்திருந்தார்கள் எ-று. (உஎ)

கலனிறைமடந்தையொன்று கார்குழள்மாதரொன்று
பலமுளமாதரோடு பனத்தநன்முலையாளொன்று
நலமுளமாதநால்வர் நாடிடமாய்கைகாணு்
தலைவனும்வீரன்பாலர் சார்ந்துமேசிறிதுசொல்வார்.

(இ-ள்.) மங்கிலியநிறைந்த பெண்ணொருத்தி மேகம்போன்ற கூந்தலையுடைய பெண்ணொருத்தி பலம்நிறைந்த பெண்ணொருத்தி பருத்தஅழகான முலையையுடையபெண்ணொருத்தி யிந்தநாலுபெண்ணும் ராக்ஷதரூபத்தைமறைத்து நன்மையாகிய மானிடரூபமெடுத்துநிற்கையில் மாய்கையையறியாமல் வீரவன்னியராசன்பிள்ளைகள்நாலுபேரு மிந்தபெண்களைக்கண்டு சொல்வார்கள் எ-று. ()

மானிடமகளீரான வனிதையரவுணன்மண்ணிற்
தேனுறசெழிப்பதுண்டோ தியரின்மாய்கையாமோ
தானவர்மாதுமன்றி தயித்தியர்மகளீரின்று
வீனமாமணியிலங்கு மேந்திழையெவரோவென்ருர்.

(இ-ள்.) மானிடப்பெண்களாக ராக்ஷதருடையபட்டணத்தில் இருப்பதுண்டோ ராக்ஷதமாய்கையோ தேவஸ்திரீகளுமல்லராக்ஷதஸ்திரீகளுமல்ல குற்றமில்லாத ஆபரணமுடையபெண்கள் இவர்களாரோவென்ருர்கள் எ-று. (உகூ)

வதுவையோடுற்ருள்மேனி மானிறமார்க்கநல்லாள்
முதுகுழல்சுருண்டதாகு மொழியிலக்ஷணமேயுற்ருள்
அதிர்நடைவிழிவிரட்ட வந்தமுஞ்செறியக்கண்டு
இதுகளென்சதியோவேத னிப்படியிழைத்தானன்றே.

(இ-ள்.) கழுத்தில் மாங்கல்யமுடையவளாகத்தேகமானிறமானவள் நல்லமார்க்கமுடையவள் சுருண்டகூந்தலும்பேச்சுகளிலக்ஷ

ணமும் அதிர்ந்தநடையும் நேத்திரப்பகட்டுமுடையவள் அழகுடையவளாகும் இவையென்னசதியோ ? பிரமதேவனிப்படி பிறப்பித்துவிட்டமையாதுக்கருதி என்றார்கள்நால்வரும் எ-று. (௬௰)

கார்குழல்மேனியன் தான் கரமலர்பார்க்கக்கண்கள்
சேரவேபெற்றிலேன்யான் செய்திறமென்னவென்றே
யீரமாம்வார்த்தைகாட்டி யிருந்திடக்கண்டமற்றோர்
தீரனேவேந்தன்செய்கை தேர்ந்திலாய்கொல்லோவென்றார்.

(இ-ள்.) மேகம்போன்ற கரியகூந்தலையுடையபெண்ணின்கையாகிய தாமரையைப்பார்ப்பதற்கு இவ்விருகண்ணும்ஒருகண்ணாக பெறவில்லையே இனியான்செய்யும்காரியமென்னவிருக்கின்றதென்றுநினைத்து அன்பானவார்த்தைகளைக்காட்டி வசனித்துக்கொண்டிருப்பதைக்கண்ட மற்றவர்கள் ஏ தைரியம்பொருந்தியவனேபிரமனது செய்கையைத்தேர்ந்தறியவில்லை போலும் என்றனர்

பலமுளமாதின்பார்வை பசியநீலோற்பலந்தான்
சலமிலாள்போலத்தோன்றி நின்றனள்சரியாயிங்கு
குலமணியெவளோதேறேம் கொடுமையோவினையின்கூற்றோ
அலர்மணியிடையாள்சீரை யரற்றவும்போமோவென்றார்.

(இ-ள்.) பலத்தையுடைய பெண்ணின்பார்வையைச்சொல்லுமிடத்துப்பசியதன்மைவாய்ந்த நீலோற்பலமலருக் கொப்பாகிக்கோபமற்றவளாய்த்தோன்றி சரியாகஇங்குநிற்கின்றாள் இவள்நல்லகுலமணியோ எவளோ நோக்குமிடத்து இதெல்லாம்என்னகொடுமையோ வினையின்கூற்றோ அறிந்திலேம் ஆயினும்சப்திக்கின்றமேகலையார்ந்த இடையையுடையவளாகிய இவளதுசீரை சொல்லுந்தரமன்றார்கள் எ-று. (௬௨)

இடுதொழிலியற்றவந்த வேந்திழையெழிலிருந்தும்
தொடுபுலால்நாற்றமோடுஞ் சொற்றிடலவுணரென்னப்
படுமிவர்மண்ணின்மீது பயின்றவரலவோவின்று
நாடினதென்னோவிங்கு நவின்றனர்நான்குவீரர்.

(இ-ள்.) இடுகின்றஏவல்தொழில் செய்வதற்குவந்தவிப்பெண்ணழகு அதிகமிருந்தும் தொடர்ந்திருக்கும் புலால்நாற்றமும்ராக்ஷதருடைய பேச்சென்றுஞ்சொல்லப்படும் இந்நாலுபெண்களும் இவ்விராக்ஷத பூமியிற்பழகினவரல்லவா இன்றுநாடிவந்தமையாதோவென்றுசொன்னார்கள் நால்வரும் எ-று. (௬௩)

வண்ணமாந்தேவிமாதர் வழுத்துவேலைகட்செய்ய
தன்னகத்தினிற்கொண்டேகத் தகுமெனகிருட்ணனுந்தான்
நன்னயக்கலனூர்பெண்ணும் நறுங்குழற்கன்னியோடு
மன்னியபலத்தோன்சம்பு வளர்முலையழலோன்கொண்டான்

(இ-ள்.) நம்முடையதேவிமார்களுக்கு வேலைகள் செய்யும்படி யாக சம்புதேசத்துக்குக் கொண்டுபோவோமென்று ஆலோசித்து கிருட்ணவன்னியன் மாங்கலியப்பெண்ணும் பிரமவன்னியன் மேகம்போன்ற கரியகூந்தலையுடைய பெண்ணையும் சம்புவன்னியன் பலம்நிறைந்து அழகுற்றபெண்ணும் அக்கினிவன்னியன்ஏவற்றொழில்செய்யும் பருத்தவளர்ச்சியுற்ற வழகியதனத்தையுற்ற பெண்ணும் இப்படியாகநால்வரும் நாலுபெண்களைக் கொண்டார்கள்.()

கூற்றுவனைப்பார்மன்னுங் கோயிலுங்கோதைமாரும்
நாற்றிசையறியத்தீயை மூட்டிநற்பகலன்களெல்லாம்
ஏற்றியசூறையாடி யிரத்தினபுரியைக்காற்றில்
தூற்றிடவேலைதன்னிற் றூயபொன்படிந்ததன்றே.

(இ-ள்.) எமனுக்குச்சதையாகிய ராக்ஷதருடைய விடுதிகளையும்ஸ்திரீகளையும் நாலுதிக்கும்பறக்கும்படி அக்கினிமூட்டிக் கொளுத்தி ஆபரணமுதலாகியதுங் கொள்ளையடித்து இரத்தினபுரிபட்டணத்தைத்தூளாக்கி காற்றில்தூற்ற சமுத்திரத்திற்போய்ப் பொன்னிறமாகப் படிந்தது எ-று. (நடு)

பொங்கியவனலான்வெந்த புவிப்புழுதியும்பொற்றூளும்
கங்கிருட்கடலிற்றூவ கதித்தலைகொழியலாகி
எங்கணுங்கருமண்ணுட விலங்குபொற்றாசுமன்றி
யங்கண்மானிலங்கள்சூழ மருந்தியடைந்ததம்மா.

(இ-ள்.) அக்கினிப்பட்டுவெந்தபூமியும்கறுப்புப்புழுதியுங்கறுப்புநிறமுடைய சமுத்திரத்திற்போய்ப்படிய அந்தத்தூள்களை அலைகள்ஒதுக்கிக்கடற்கரையிற்கொண்டுவந்துசேர்க்க அதுகறுப்புமண்ணும் பொற்காசுகளும்கலந்துபிரகாசித்துபூமியிலிருக்கப்பட்டநதிகளிலும் கலந்துதோற்றிக் கரையோரமாக அடைந்தது எ-று.

அரக்கரின்மதிலடைந்தே யார்ப்பரித்துவசமான
பருத்தபன்னெட்டுஞ்சூழ பராக்கிரமானவிரர்
உரத்துடனுருத்திரன்பா லுவகையாயேகக்கண்டேன்
விரித்தசெஞ்சடையான்பக்கல் விளம்பினன்வீரன்வேந்தன்

(இ-ள்.) வாதாவியினுடைய விரத்தினுபுரிபட்டண முழுதும் இடித்துத்தூளாக்கிக் கொள்ளையிட்டுபதினெட்டுவிருதுகளுஞ்சூழ வீரவன்னியருடைய சேனைகளனைத்தும்வர வீரவன்னியன் துர்க்காபரமேஸ்வரியினிடம்போய் துதிக்கின்முன் எ-று. (௩எ)

அந்தரியாலகாலி யம்மணியமலிநீலி
கந்தரிகமலிவேதக் காரணிகதித்தெழுந்த
மந்தரிவராகிவீரி வடுகிமாதங்கிமாரி
எந்தரிமயிடற்காய்ந்த வெழிலியென்றியம்பலுற்றுன்.

(இ-ள்.) அந்தரியாலகாலியம்மணி அமலிகந்தரி கமலிவேதநாயகி மந்தரிவராகி மயிடசங்காரியென்று தோத்திரஞ்செய்து சொல்லுவான் வீரவன்னியன் எ-று. (௩அ)

நிருதரின்கருவறிந்தே நேமியினிடுக்கண்தீர்த்தேன்
விருதொடுவெற்றியுன்னுல் விரும்பினன்விமலன்வாழும்
வரையினிசார்தல்வேண்டும் வரமளியெனமகிழ்ந்தே
தரணியையசைத்துக்காத்த சாம்பவியிசைந்துரைப்பாள்.

(இ-ள்.) இராக்ஷதருடையகருவறுத்து பூமியின்துன்பத்தைத் தீர்த்துநீக்கி வெற்றியும்விருதும் உன்கிருபையினுற் பெற்றேன்கயிலாசகிரிக்குப் போகும்படி வரமருளுந்தாயேயென்ன பூமியைக்காக்கின்ற துர்க்காபரமேஸ்வரி சொல்லுகிருள் எ-று. (௩கூ)

மடங்கலேறனையவானோர் மதமடக்கியவாதாவி
யடங்கலுமழித்தேனுந்த னத்திரஞ்சிலையும்வாழ்க
தடமெனுந்தானைசூழ தானவர்முரசொலிக்க
தடங்கடல்கடப்போமென்றே சாற்றினளமலியன்னுள்.

(இ-ள்.) தேவர்களுக்குத் துன்பம்பண்ணிய வாதாவியுமவன் சேனுசமுத்திரமுமழித்த உன்வில்லும் அம்பும்வாழ்கஉன்னுடைய சேனுசமுத்திரத்துடன் செயபேரிமுழக்கமாக சமுத்திரங் கடப்போம் என்றுபரிசுத்தமான துர்க்கைசொல்லினுள் எ-று. (சo)

உம்பருமேதுரைப்பாரு ருத்திரவன்னியோனும்
அம்பரந்தன்னில்மன்னு மசுரரையழித்தவாய்மை
நம்பவுமாட்டார்காணும் நாங்களேசொல்வோமென்று
செம்பொன்னூர்கயிலைநோக்கித் தேவருமேகலுற்றார்.

(இ-ள்.) தேவர்களென்ன சொல்லுகிருர்களென்றல் வீரவன்னியமகாராசன் ராக்ஷதருடையகருவறுத்தசேதி பரமசிவனுக்குத்

தூதர்கள்சொன்னால் நம்பமாட்டார ஆகையினால்கைலாசகிரிக்கு நாமேபோய்வணங்கிச் சொல்லவேண்டுமென்று தேவர்கள் போக லானார்கள் எ-று. (சக)

தேவருமேகியாங்கே சிவகயிலாயம்புக்கி
மூவருமாகிநின்ற முதல்வனாரடியையேற்றி
யாவருமெட்டொணும விருந்தவாதாவிதன்னைத்
தீவரமாயழித்தே செயம்பெற்றார்வீரரென்றார்.

(இ-ள்.) தேவர்கள் கயிலாசத்தில்போய் பரமசிவனைக்கண்டு வணங்கியாவருக்கும் அடங்காதவாதாவிசூரனைவீரவன்னியராசன் அழித்து செயம்பெற்றான் என்றார்கள் எ-று. (சஉ)

அண்டர்கள்வண்மைகூற வலகையும்படையுந்துன்ன
சண்டனையுதைத்தோன்பாலர் சாம்பவியுடனேசென்று
தெண்டிரைகடந்தாரப்பாற் சிறுவர்கள்வாழ்க்கைக்குற்ற
ஒண்டொடிமாதர்க்குற்ற வூழ்வினையுரைக்கலுற்றேன்.

(இ-ள்.) தேவர்களிப்படியாக செயஞ்சொல்லியிருக்க பரமசி வனுடையபிள்ளை வீரவன்னியன் பூதப்படைகளுடனே துர்க்காப ரமேஸ்வரியுஞ் சமுத்திரமுங்கடந்தார்கள் என்றுசொல்லி தேவர்க ளிருக்க வீரவன்னியன்பாலர்கள் நால்வருடைய மாதர்களுக்குவந் தவூழ்வினையை அத்திரிமகாரிஷிக்குச் சொல்லுகிறார் சனகமகா ரிஷி எ-று. (சங)

## நகரழித்தசருக்கம்.

முற்றிற்று.

---

ஆகபாயிரம்உட்படச் சருக்கம்-கo-இ

திருவிருத்தச் செய்யுள் கooஎ.

௨

கடவுள் துணை.

## முப்பதாவது.

# மீட்சிச்சருக்கம்.

முக்கண்ணியருளால்வேலை முன்வற்றபின்சுரக்க
தக்கவாதாவிசூழுந் தரணியிற்செல்லுங்காலை
மக்களின்சுவானமொன்று வாரிதியேகநிற்ப
நக்கனார்பதியிலேக நாயகியார்கணல்வர்.

(இ-ள்.) துர்க்காபரமேஸ்வரியின் அருளினாலே சமுத்திரம்முன்வற்றி பின்சுரக்கும்படியாக வாதாவிசூரராக்ஷதனுடைய இரத்தினபுரிக்குபோகும்போதுபிள்ளைகள்நால்வர்கள்வளர்த்தநாய்அவர்களுடன்சென்று பின்னர்கடலைக்கடந்து உடன்போகாதுஇக்கரையிலேநின்றுதிரும்பி நாயகிமாரிருந்த விடத்திற்கேமீண்டுபோனது

கண்டனருளங்கலங்கி காவலர்மடிந்தாரென்று
வண்டணிகுழலாளான மாதர்களெரியில்வீழ
தண்டமிழ்வாணிமைந்தன் தந்திநாரதர்மும்ரதனாற்
அண்டர்கோனளித்தமாதி னரும்பதியேகிச்சொல்வான்

(இ-ள்.) நாய்வந்ததைக்கண்ட நாலுதேவிமாருந் தங்கள் புருஷர்களிறந்துபோனார்களென்று மனங்கலங்கி நெருப்பில்விழுந்திறந்தார்கள் அதுகண்டுநாரதர் தேவேந்திரனுடைய பெண்ணனமந்திரமாலையினிடத்திற்போய் சொல்லுவார் எ-று. (௨)

மணங்கமழ்குழாலுந்தன் மகவினரிறந்தாரென்றே
இணங்கியமாதர்கூடி யெரியினில்விழுந்தாரின்று
நிணங்கமழிவக்கரத்த நிருபதிவீரன்றன்னை
பிணங்கிவாதாவிகொன்றான் பிழையிலையெனவுரைத்தான்.

(இ-ள்.) வாசனைவீசுங்கூந்தலுடையவளேஉன்னுடையபிள்ளைகள் நாலுவீருமடிந்துபோனார்களென்று உன்மருமக்கள்மார்நால்வரும் அக்கினியில்வீழ்ந்திறந்துபோனார்கள் அதுவுமல்லாமல் வேலாயுதமுடைய வீரவன்னியமகாராசனையும் வாதாவிராக்ஷதசூரன் கொன்றுபோட்டான் பொய்யல்ல நிசமென்றார் நாரதரிஷி (௩)

அடங்கலுமடிந்தாரென்ன வமரர்கோன்மகளீர்தானும்
விடந்தனையுண்டோனீன்ற வேதனுமீந்தமாலை

யடங்களும்வாடவில்லை யச்சங்குமுழக்கமில்லை
மடங்காசனத்தின்மன்னன் மடிந்திலனெனவுரைத்தாள்.

(இ-ள்.) போயிருந்தசேனசமுத்திரங்களெல்லாம்மடிந்துபோனார்களென்றுசொன்னார் நாரதர்உடனே மந்திரமாலைசொல்லுவாள் என்னுடையபுருஷன் வீரவன்னியமகாராசன்எனக்குஅடையாளமாகக்கொடுத்தமாலை வாடவில்லைவலம்புரிச்சங்குசத்திக்கவில்லை தூண்டாவிளக்குநிற்கவில்லை ஆகையினாலேஎன்புருஷன்மடிந்திடாரென்றுசொன்னாள் மந்திரமாலை எ-று. (௪)

சாந்தமார்முனிவரீன்ற தக்கபெண்ணான்குபேரும்
ஆய்ந்துணராமற்றானே வக்கினிவீழ்ந்திறந்தார்
வேந்தனும்வீரன்றானும் மிகுத்திடுங்குழாங்கள்சூழ
வாய்ந்தவாதாவியாண்ட மாநகரழித்துமீண்டார்.

(இ-ள்.) சாந்தத்தன்மையுற்ற ஒப்பற்றசுசீலமுனிபுங்கவர்பெற்றபெண்கள்நால்வரும் ஆய்ந்தோய்ந்துபாராமல் அக்கினியில்வீழ்ந்திறந்தார்கள் வீரவன்னியமகாராசன் தன்சேனசமுத்திரங்களுடனேவாதாவியையுமவனுடையஇரத்தினபுரியையுமழித்துப்போட்டுதிரும்பிவருகிறவளவில் எ-று. (௫)

சுந்தரிதுர்க்கையம்மன் றோனறல்முன்சென்றுவேலை
பந்தமாமுன்னேவந்த பார்த்திமரெனநடப்ப
பிந்தியேகடல்சுரப்ப பெருமையாய்க்கரையிற்சேர்ந்து
யந்தரிமாய்கையெல்லா மகத்தினிலுணர்ந்துரைப்பான்.

(இ-ள்.) துர்க்காபரமேஸ்வரி முன்னேநடக்க அதன்பின்னாக வீரவன்னியன்சேனைகளும்பின்னால்வரக் கடல்முன்னேவற்றவும் பின்னால்சுரக்கவும் இக்கரையில்வந்துசேர்ந்து யுமையவளுடையமாய்கையை மனதிலுணர்ந்து சொல்லுவார்கள் எ-று. (௬)

வெஞ்சுரம்வீற்றிருந்த விமலியெந்தனையுமின்றே
வஞ்சனையவுணன்கையால் மடிந்திடாமற்காக்கின்ற
அஞ்செழுத்தமலியாளி யதிவெழுந்தன்புகூறுஞ்
செஞ்சுடர்த்தாயேயென்று சிலைகரன்செப்புகின்றான்.

(இ-ள்.) வெண்மையாகியபாலைநிலத்தில் வீற்றிருந்த துர்க்காபரமேஸ்வரியே வஞ்சகமுள்ள அவுணனான வாதாவியின் கையில் மடியாமல்காத்த அஞ்செழுத்துடைய அமலியே ஆளிவாகனமேறப்பட்டதாயே யென்றுசொல்லுவான் எ-று. (௭)

அக்கரையேறியா யரிவைபோலுருவமன்னிற்
றக்கவாதாவிமுன்னிற் றயிறெனச்சாற்றியுள்ளந்
திக்கெனவமரைமூட்டி மடிந்திடச்செய்துவைத்த
மக்களின்மீதிறங்கி வரந்தந்துகாப்பீரென்றான்.

(இ-ள்.) வாதாவியின்சமுகத்தில் இடைச்சிபோல ரூபங்கொண்டு தயிரென்றுசொல்லி மனந்திடுக்கிடும்படிபோர்மூட்டி எங்கள்பக்கஞ்செயம்பொருந்தும்படியாய்க் காத்துரக்ஷித்ததாயே எங்களுக்குவரமருள்செய்து காப்பாயென்றான் வீரவன்னியன் எ-று. ()

அரவணிபரமன்தந்த வரசனேயுனதுதேவி
மருமலர்க்குழலாளான மந்திரமாலையின்பப்
பெருமையாயணைந்தேயின்பம் பேருலகிலெந்நாளும்
அரசனாய்வாழுமென்றே யந்தரிவாழ்த்துகின்றாள்.

(இ-ள்.) அரவாபரணன் புத்திரனாகியராசனே உன்னுடையதேவி மந்திரமாலையுடன்சேர்ந்து இன்பத்துடனிந்த உலகத்தில்பொருந்திவாழ்வையென்று வாழ்த்தி வரமளித்தாளந்தரி எ-று.()

துர்க்கைதான்வாழ்த்தியேகி தொல்பதியிருப்பவீரன்
மிக்கதோர்சேனையெல்லாம் வேலையின்கரையகன்றே
மக்களுமவுணமாதும் வந்திடவிருதுசின்னம்
ஒக்கவேதுவசஞ்சூழ வுருத்திரன்பதிநடந்தான்.

(இ-ள்.) துர்க்காபரமேஸ்வரிவாழ்த்திதன்னுடையகோவிலிற்போய்ச்சேர்ந்தஉடனே வீரவன்னியன்சமுத்திரங்கடந்து தன்பிள்ளைகள் ராக்ஷதஸ்திரீகளுடனே சகலவாத்தியமுமுழங்க விருதுகளுடனே சம்புநகரம்நோக்கி நடந்தான் எ-று. (ய)

அவுணரின்காலன்வந்தா னரனுமைமைந்தன்வந்தான்
துவவுதோள்புயத்திற்றுன்னுங் குமுதந்ததானன்வந்தான்
சபையுளோரிறைஞ்சும்பொன்னின்றாளினன்மதியன்வந்தான்
கவிகைசாமரையிரட்டக் கருணைசேர்வீரன்வந்தான்.

(இ-ள்.) இராக்ஷதருக்குஎமனானவன்வந்தான் சுவாமிக்கும்அம்மனுக்கும்பாலனானவன்வந்தான் திரண்டதோளில்வெற்றிமாலையுடைய வீரன்வந்தான் அனைவரும்பணியும்படியான பொற்பாதமுடையவன்வந்தான் சந்திரவட்டக்குடைநிழற்றிய வீரவன்னியமகாராஜன்வந்தான் எ-று. (கக)

வாகச்செங்கழுநீர்மாலை வாடாதமார்பன்வந்தான்
நேசச்செஞ்சிகையும்பூணல் நூலுமேயுடையோன்வந்தான்

பூசச்சந்தனத்தோன்வந்தான் புவிதனக்கிறைவன்வந்தான்
தேசுளமுடியோனுன சிலைமன்னனன்வந்தான்வந்தான்.

(இ-ள்.) செங்கழுநீர்மாலையைமார்பில்தரித்தவன்வந்தான் தலைச்சிகையும் பூணநூலுமுடையவன்வந்தான் சந்தனம்பூசப்பட்டவன்வந்தான் பூலோகராசன்வந்தான் கையில்வில்லம்புடையவீரவன்னியமகாராசன்வந்தான் எ-று. (கஉ)

முரசொலித்துவசம்நீட்டி முப்பதோடாறுந்துன்ன
பரிதிபோற்பகற்றீவட்டி பருந்தூபக்காலுமென்ன
வரமிகுமவுணர்தேரும் வானவர்முரசும்பெற்ற
அரசனும்வந்தானென்றே வனேகசங்கினங்களார்ப்ப

(இ-ள்.) முரசும்பேரிகைவாத்தியமும் பதினெட்டுக்கொடியும் சட்டியும் முப்பத்தாறுவிருதுகளும் சூரியன்போல் பகல்தீவட்டியும் சாம்பிராணிக்கலசமும் எழும்பியதேவதுந்துமி முதலாகவிப் பேர்ப்பட்ட விருதுகளுடனே அனேகசனங்களாரவாரத்துடனே வீரவன்னியமகாராசன் வந்தான் எ-று. (கங)

பன்னகர்வேந்தன்வந்தான் பணிந்தவரிடுக்கண்டீர்த்துக்
கண்ணுறுமவனுமென்னக் கடவுளரிறைஞ்சிநிற்ப
விண்ணகரிராசனீன்ற மெல்லியன்மகிழ்நன்வந்தான்
எண்ணறவென்றும்பேரி யிசைபூரியார்த்ததன்றே.

(இ-ள்.) பன்னாட்டுராசன்வந்தான் சரணமடைந்தவரைக்காக்காநின்ற மகாவிஷ்ணுவைப்போலுந் தேவேந்திரனுடைய பெண் மந்திரமாலைபுருஷன் வந்தானென்றும் அளவிடப்படாத பேரிகை வாத்தியங்களும் பூரியுமார்ப்பரித்து தேவதுந்துமிமுழங்கியது. ()

நடந்தவன்வரவுநோக்கி நானிலத்தரசுமன்னும்
கடுங்கதிர்குலத்தோன்கங்கை கண்டசோழனுக்குரைப்ப
வடந்திகழ்முலையாளான மாதொடுந்தானைசூழ
தடந்திகழ்புயமும்விம்ம தானெதிர்வந்துகண்டான்.

(இ-ள்.) வருகிற வீரவன்னியமகாராசன் வருகிறதைக்கண்டு வேவுகாரர் கங்கையைக்கண்ட சோழமகாராஜாவி னிடஞ்சொல்ல அதைக்கேட்டு தன்பத்தினியுடனும் சேனைகளுடனும் சூழவெதிர் கொண்டுபோய் வீரவன்னியராசனைக் கண்டான் சோழராசன்.

எதிர்வந்தசோழன்றன்னை யிறுகவேயணைத்துவீரன்
அதிசயம்புகழ்ச்சிபேசி யரசனுநகரஞ்சார்கா

ஷிதமுளசேனை துன்ன, விருந்தினையளிக்கவேண்டும்
புதுமையாம்பணிகணல்க புளகமுற்றிருந்தான்வீரன்.

(இ-ள்.) எதிர்கொண்டுவந்த சோழமகாராசனை வீரவன்னிய
ன்கட்டியணைத்து யோகக்ஷேமம்பேசி பட்டணம்போய்ச் சேர்ந்து
நால்வகைச்சேனைகளு மகிழ்ச்சியாயிருந்துவிருந்துண்ணநவரத்தின
மணியளிக்க மகிழ்ச்சியுடனிருந்தான் வீரவன்னியன் எ-று. (௧௬)

வீரனுஞ்சோழன்றன்னை விருப்பமாயழைத்தேயுந்தன்
ஆருயிர்பாலரோடே னவனியில்வருவீரென்ன
கூறியேயழைத்துசேனைக் குழாங்களுங்கொடியுமார்ப்ப
நீறணிகடவுளானநிருதன்வாழ் பதியிற்சேர்ந்தான்.

(இ-ள்.) வீரவன்னியராஜன் சோழமகாராசாவையழைத்து உ
ன்பிள்ளைகளுடனே என்பின்னால் வரவேண்டுமென்ன சம்மதித்து
நால்வகைச்சேனையும் விருதுகளுடன்புறப்பட்டு பரமசிவன்வாழப்
பட்ட கயிலாசகிரிபோய்ச் சேர்ந்தார்கள் எ-று. (௧௭)

அங்கவன்வரவுகண்டே யரனுமையயனுமாலும்
இங்கிதக்கடவுளாறும் யிதையமுமகிழ்ந்திருப்ப
செங்கரஞ்சிலையுவீரன் சிவன்றனைவிழியாற்கண்டே
சங்கராபோற்றியென்றே தாளிணைப்பணிந்துரைப்பான்.

(இ-ள்)வீரவன்னியமகாராஜன்வருவதைக்கண்டுபரமசிவனும்
வுமையவளும் பிரமதேவனும் மகாவிஷ்ணுவும்தேவர்கள்முதலான
பேர்களும்கொலுவாக இருக்கும்போதுகையில்வில்பிடித்தவீரவன்
னியன் பரமசிவன்பாதத்தில்போற்றிசெய்து சொல்லுவான் எ-று.

சம்புவின்மகத்திலெம்மையுதயவுடனளித்தாய்போற்றி
உம்பர்கோன்மகனைத்தந்த வுரகவாபரணாபோற்றி
செம்பொனம்பலத்துளாடுந் திருநடராஜாபோற்றி
நம்பினோர்க்கருள்சுரக்கும் நாதனேபோற்றிபோற்றி

(இ-ள்.) சம்புமகாரிஷியின்யாகத்தில் பிறப்பித்து தேவேந்தி
ரன்மகளை எனக்கு அளித்து சிதம்பரத்தில்நடனஞ்செய்த நடேசா
நம்பினவர்களைக் காக்கின்ற நாதனேபோற்றிபோற்றி எ-று.

ஆதியுமந்தமாகி யளவிலாலண்டமாகி
சோதியிற்சோதியாகிச் சொன்மனக்கெட்டாய்போற்றி
வேதன்மாலயனுங்காணா வித்தகாபோற்றியென்றும்
நீதியாயுருவமன்னும் நிருத்தனேபோற்றியென்றான்.

(இ-ள்.) ஆதியுஅந்தமுமாய் அண்டபிண்டசராசரமுமாய்சூரி
யனுக்குள் அந்தாக்கதசிவசூரியனும் சொல்லுகின்ற வேதங்கட்

கெட்டாப்பொருளாயும் பிரமன்விஷ்ணுமுதலியோர்களால் உணர்தற்கொண்ணுவித்தகனுகியும் நீதியோடுநடனஞ்செய்யப்பட்டசுவாமியேபாதமபோற்றிபோற்றி எ-று. (உ௰)

அப்பொழுதரனுரைப்பா னரசனுஞ்சுதனும்வாழ்க
மைப்படிகுழலாடன்னே மணம்புரிந்தவனேவாழ்க
ஒப்பிலாவினதுசுற்ற முலகினிற்றழைத்துவாழ்க
விப்புவிக்கதிபனுக வேந்தனேவாழ்கவாழ்க.

(இ-ள்.) பணியப்பட்ட வீரவன்னியனையும் பிள்ளையையும்பார்த்து பரமசிவன்சொல்லுவார் நீயும்உன்பிள்ளைகளும் மந்திரமாலையுஞ்சுற்றத்தாரனைவரும் பூமிக்கதிபதியான வீரவன்னியனேவாழ்க வாழ்கவென்ருன் எ-று. (உக)

என்றனியம்பினீற்றை யீந்திடப்பணிந்துவீரன்
தென்றிலைசைக்கடலைத்தாண்டி தியன்வாதாவியாக்கை
வென்றவாறனைத்துமோத விமலனுமனமகிழ்ந்தே
பொன்றெடிமாதைக்காணப் போமெனச்சார்ந்தானன்றே.

(இ-ள்.) பரமசிவன்திருநீறுகொடுத்துவாழ்த்தவீரவன்னியன் வாங்கிபணிந்து வாதாவியின் பட்டணம்போய் அவனைச்செயித்து பட்டணத்தையும்பிடித்து கொள்ளையிட்டுவந்ததுமுதல்யாவையுஞ் சொல்ல பரமசிவன்கேட்டு மனமகிழ்ந்து உன்னுடையதேவி மந்திரமாலையிடம்போவாயென்ன அப்படியேபோனுன் உருத்திரவன்னியன் எ-று. (உஉ)

வந்திடும்வீரவேந்தை மந்திரமாலைகண்டே
சுந்தரமலர்க்கைகூப்பி தோன்றவின்றுள்பணிந்தே
என்தனையணைந்தமன்னு வினிதுயிரளித்தாயன்றே
யுந்தகற்பாதம்போற்றி யுவகையுமடைந்தேனென்றுள்

(இ-ள்.) வீரவன்னியன்வருவதைமந்திரமாலைகண்டு கையிரண்டையுங் கூப்பிக்கொண்டு பணிந்து என்னை ஆலிங்கனஞ் செய்யப்பட்டமன்னவனுன ராஜனே என்னுயிரை யின்றைக்குத் தந்தாய் அதனுலே நான்பிழைத்தேனென்றுள் எ-று. (உ௩)

தோகையைவாழ்த்திபூமன் றென்னகரிருப்பச்சோழன்
பாகமீதிருப்பவீன்ற பாலருங்களித்திருப்ப
வாகைசூடியவாறேரு மாபடைக்குழாமுஞ்சூழ
வேகனையகனைப்போல விருந்தனனெழிலாள்வீரன்.

(இ-ள்.) பெண்சாதியைவாழ்த்தி வீரவன்னியனிருக்கும்போது சோழமகாராசனும் அவனுடையபிள்ளையுந் தேவர்களுஞ்சூழும்படியாகவிருந்தான் பரமசிவனைப்போல வீரவன்னியன் எ-று.

இருந்திடரவரவர்க்கு வினிதுளவமுதளித்து
பொருந்தியேயிருப்பச்சோழன் பூபதிசிலநாட்சென்றே
திருத்தவென்னகரிற்சேர சிந்தைவைத்தனுப்புமென்ன
புரிந்தருளீயத்துவேண்டும் புகழ்ச்சியையளித்தான்வீரன்

(இ-ள்.) இருந்தவர்களுக்கெல்லாம் விருந்தளித் திருக்கையில் சோழமகாராசன் சிலநாளிருந்து தன்பட்டணம்போகும்படிகேழ்க்க தயவுவைத்துவேண்டிய ஆடையாபரணமுதலானதும் பெருமையாயளித்தான் வீரவன்னியன் எ-று. (உ௫)

ஆடையுமாடைக்காசு மரசனுக்கியப்பெற்று
நீடியவிரதமேறி நிருமதிமிகவுஞ்சூழ
நாடினன்கங்கைவேந்தன் நவமணிக்குப்பைமன்னும்
மேடியாங்காஞ்சியீசன் மலரடிமேவினுல்

(இ-ள்.) சகலமான ஆபரணமுதலானவைகளும் வாங்கிக்கொண்டு ரதத்தின்மேலேறி சகலசேனையுந் தன்னைச்சூழ்ந்துவரகங்கையைக்கண்ட சோழமகாராஜன் நவரத்தினங்கள் பொருந்தப்பெற்ற காஞ்சீபுரம்வந்து ஏகாம்பரநாதரைப் பணிந்திருந்தான் எ-று.

மணமுடனிருந்துமாங்கே வண்மையேகாம்பரற்கு
குணமுளசெம்பொன்றன்னுற் கோபுரமதிலமைத்தே
யணையும்வாவிகளுந்தேரு மரன்விழாநடத்தியிப்பால்
யிணையிலாத்தில்லைக்கேகியிழைவிழாநடத்துகின்முன்.

(இ-ள்.) காஞ்சிநகரத்துக்குவந்து ஏகாம்பரீசுரரைத் தெரிசித்து பொன்செலவிட்டு கோபுரமதிலுஞ்செய்துவைத்து தேர்திருவிழாநடத்திக்காட்டி அதுநீங்கி சிதம்பரதலம்வந்து நடேசரைத் தரிசித்து திருவிழாநடத்தினன் சோழராஜன் எ-று. (உஎ)

நடத்தியகாலைதன்னி னுனிலவேந்தன்பாலர்
தடத்தினில்மடியக்கண்டு தணிந்திடாத்துயரத்தோடே
படப்பொறிநாகஞ்சூழும் பரமன்றன்பாலன்பக்கம்
திடத்துடனேகிப்போற்றிச் சிறுவனையெழுப்புமென்றுன்

(இ-ள்.) தேர்திருவிழா நடத்துகிறகாலத்தில் சிதம்பரதலத்தில் தன்பிள்ளையிறந்துபோனதுகண்டு மகாதுயரத்தோடு பரமசிவ

ன்பிள்ளை வீரவன்னியனிடத்திற் சொல்லிப்பணிந்தென்னுடையபிள்ளையை எழுப்பித்தரவேணுமென்று சொன்னான் சோழராஜன்.

எழுப்புவீரென்றபோதிலே மன்பால்முடங்கல்விட்டு
பொழிலமர்சோழன்பாலர் பொருந்திடவெழுப்பாயாகில்
அழிப்பனுமெமபுரத்தை யறிந்துகொள்ளெனவேயாரும்
பழிக்கிடமாகாமுன்னம் பகர்ந்தனம்செய்வாயின்றே.

(இ-ள்.) சோழராசன்பிள்ளையை யெழுப்பித்தாருமென்று சொன்னபோது வீரவன்னியனானவன் எமதருமராசனுக்கு ஓலையெழுதியனுப்பினான் என்னவென்றால் சோழராசனுடையபிள்ளைகளிறந்துபோனவர்களை உயிர்பொருந்தும்படிஇன்றே யெழுப்பினாலாச்சுது இல்லாவிட்டால்உன்னுடைய பட்டணத்தையிப்போதேயழித்துப்போடுவேன் இதையறிந்து நாளைஒருவரும்பழித்துநகைக்காமல்முன்னமேதானே சொல்லியனுப்பினேமென்றுஎழுதி தூதர்கையில் ஓலையைக்கொடுத்து அனுப்பினான் வீரவன்னியன் எ-று.

என்றவர்வார்த்தைகேட்டே யியமனுமெழுந்திருந்து
நன்றுநன்றெனவேசீறி நற்சிலைவீரன்றன்னை
யின்றெனதுலகிற்சேர்ப்ப தியல்பெனபாசமேந்தி
குன்றெனுங்கடாவிலேறி கொப்பெனப்புறப்பட்டானே

(இ-ள்.) வீரவன்னியன்ஓலையைத்தூதன்கொடுக்க எமதருமன் வாங்கிப்பார்த்து மகாகோபத்துடனேவெழுந்திருந்து நல்லதென்றுகையில் வில்பிடித்தவீரவன்னியனை இன்றைக்குஎன்னுடையஎமபுரிக்குக்கொண்டுவந்துசேர்ப்பதேநிச்சயமென்று கையில்பாசக்கயிறெடுத்து மலைபோலொத்த கடாமீதிலேறி சடுதியில்புறப்பட்டுநடந்தான் எ-று. (௩௰)

புறப்படும்போதிலீசன் பெருநமன்றனையழைத்தே
யிறப்பதுநிசமேகண்டா யெழில்வீரன்சொல்லினாலே
யிறப்பதுவேண்டாம்வேந்த னிளவலினுயிரையின்றே
சிறப்புடன்விடுவிடென்றே திருவுளம்பாலித்தாரே.

(இ-ள்.) எமதருமராஜன் வார்த்தையைக்கேட்டு பரமசிவன் அடாஎமதருமனே நீவீரவன்னியரிடம்போனால் இறந்துபோவாய் ஆகையினாலே சோழராஜன்பிள்ளையைக் கொண்டுவந்துவிடென்று திருவுளம்பற்றினார் சுவாமி எ-று. (௩௧)

திருவுளமொழியைக்கேட்டுச் சிறுவரின்சீவன்றன்னை
விரைவுடன்கொடுபோய்விட்டான் வீரனும்வனங்கட்ந்து

தருவெனுங்கங்கைக்கண்ட சோழனுர்தனையனுப்பி
மருவளர்கயிலையீசன் மலரடிதொழுதிருந்தான்.

(இ-ள்.) இப்படிசுவாமிசொன்னவுடனே உயிர்களைஎமதருமராஜன்கொண்டுவந்துவிட பிள்ளைகளும்பிழைத் தெழுந்திருக்கக்கண்ட வீரவன்னியராசன்மனமகிழ்ந்து சோழராசனையனுப்பிவிட்டு கைலாசகிரியில் பரமசிவனைத்தொழுதிருந்தான் வீரவன்னியன். ()

மலரடிவணங்கிநின்ற வன்னியன்வதனநோக்கி
யிலகியவரமுங்கோடி யியல்புடனளித்துச்சூரன்
தலைவளரிரதந்துன்மை தனக்கல்லாலுங்கணல்மைக்
கிலையெனவுரைத்துவாழ்த்தி யேகெனச்சொற்ருனீசன்

(இ-ள்.) பாதத்தில்பணிந்த வீரவன்னியனைப்பார்த்து அநேகமாகியவரங்கொடுத்து வாதாவியினுடைய தலையுடனிருக்கப்பட்டரதம்உங்களுடைய வமிசத்தார்களுக்கு துன்மையானகாப்பங்களுக்குஆகும் நன்மையானகாரியங்களுக்கு ஆகாதென்றுசொல்லிவாழ்த்தி அனுப்பிவிட்டிருந்தார் பரமசிவன் எ-று. (ரு௩)

என்றவரனுப்பவந்த வெழின்முடிவீரன்கோயில்
துன்றியேயிருப்பநான்கு சுதன்றனை மாதர்பக்கல்
வென்றியாயேகும்போது எருப்பமாய்மணம்புணர்ந்து
ஒண்டொடிமாரைக்காணு ருளத்தினிற்றுயரமுற்ருர்.

(இ-ள்.) பரமசிவன் அனுப்ப வீட்டில்வந்திருந்து பிள்ளைகள் நால்வரையும் எங்களுடைய விடத்துக்கனுப்ப அவர்களுல்வருமனையில்வந்திருக்கத் தாங்கள்கலியாணம் செய்துவைத்துப்போன மாதராகிய பெண்சாதிகளைக்காணுமல் மனங்கலக்கமாகத் தானேயிருந்தார்கள் நால்வரும் எ-று. (ரு௪)

இந்திரனீன்றமாது வெழிலடியிறைஞ்சியுந்தன்
மைந்தர்களணைந்தமாது மண்டபத்தில்லையேது
விந்தையைமனத்திலோர்ந்து விமலன்றன்பேரனுரே
யந்தமாஞ்சுவானமொன்றே அவரிடம்வந்தகாலை.

(இ-ள்.) தேவேந்திரன்மகளாகிய மந்திரமாலையினுடையபாதத்தில்நமஸ்காரஞ்செய்து உன்னுடையமருமக்கள்மாரை வீட்டில் காணேம் எங்கேயென்றுகேழ்க்க பரமசிவனுக்குப் பேரப்பிள்ளை போன்றவர்களே நீங்கள்வாயிலொன்றும் பொய்யில்லாமல் வாதாவியின்பட்டணம்போனவுடனே நீங்கள்குறிப்பிட்டுப்போனபடிஉம்முடன் வந்தநாயானதுமீள இவ்விடத்தில்வந்த வேளையில் எ-று.

மன்னவர்மடிந்தாரென்று வளரெரிவீழ்ந்தேமாய்ந்தார்
ரென்னநாரதனெனக்கே வியம்பினன்பாலனுரே
யன்னவர்வரலாறீதை யறிவித்தேனுமக்கீதென்று
மின்னுமந்திரமாலைக்கு விநயமாய்ச்சொல்லலுற்றுர்.

(இ-ள்.) தன்னுடையபுருஷர்கள் மடிந்தார்களென்று அக்கி யினில்வீழ்ந்திறந்துபோனார்கள்யென்றுநாரதமகாரிஷியென்னிடத் திற்சொல்லக் கேள்விப்பட்டேன் பிள்ளைகளேயென்ன பிள்ளைகள் மந்திரமாலையைப்பார்த்து அதிகமரியாதையோடு சொல்வார்கள்.

தீயனவாதாவியாக்கைச் சேதிக்கவிஜயஞ்செய்து
பாயிரத்துடன்பயின்ற பாங்கினைமனத்தினோர்ந்து
பேயனாந்தீதடைந்தார் பெருகியஞானியொன்று
மாயிருஞாலந்தன்னில் வந்திடும்வந்தகாலை.

(இ-ள்.) தாயேவாதாவிசூரனைசம்மாரஞ்செய்யப்போகும்வே ளையில் எங்கள்பெண்சாதி நால்வரும்வந்து உங்களுக்கொருதுன்ப ம்வந்ததானல் அதுவெங்களுக்குத்தெரியவேண்டுமே அதுஎப்படி யென்றுசொல்ல நாங்கள்சொன்னது பேயனாகிய வாதாவியினாலே துயரம்நேரிடுங்காலத்தில் நாங்கள்வளர்க்கின்ற நாயிலொன்று வந் துவிடும் நாய்வந்தவேளையில் எ-று. (௩௭)

அக்கினிபுகுவீரென்றே யரிவையர்க்குரைத்திட்டேக
மிக்கசொல்லுறுதியென்றே விரும்பியேமாதர்பக்கல்
ஒக்கவேயழைத்துப்போன நாயினிலொன்றுவேலை
புக்கிடவருகக்கண்டே பூவையரிறப்பதானார்.

(இ-ள்.) அப்படியேநாய்வந்தகாலத்தில் தாங்களேஅக்கினியி யில் வீழ்ந்துமடிந்திறந்துபோங்களென்று நாங்கள்சொல்லிப்போ னேம் அப்படியேநாங்கள் கூடவழைத்துப்போனநாயில் ஒருநாய் சமுத்திரம்தாண்டாமலிங்கேவந்துவிட்டது ஆனதால் அந்தசொற் படியே யிறந்துபோனார்கள் சரிதானென்றார்கள் நால்வர் எ-று.()

இனிமனமிடிந்தாலந்த வேந்திழைவருவதுண்டோ
புனிதமாக்கொணர்ந்தமாதைப் புணருவோமென்னத்தேறி
பனிமலர்ச்சடையான்பாலா பகர்ந்திடவவனிசைப்ப
ஸ்ரீனிசிலைகரத்தோரந்த கோதையையணையலுற்றார்.

(இ-ள்.) இனிமேல்நாம்மனதைத்துன்பப்படுத்துவதில்என்ன பலன் அந்தபெண்கள் வரப்போகிறார்களோ ராக்ஷதருடையஸ்திரீ

களை யழைத்துக்கொண்டுவந்தோம் அவர்களையேகூடியனுபவித்திருக்கிறதே கடனென்று நாலுபேர்களுமனதுதேறி குளிர்ச்சியான மலரணியப்பட்டசடையையுடைய பரமசிவனிடத்தில்எங்களுடையதேவியர்களிறந்தார்களென்று சொல்லி நாங்கள்கொண்டு வந்த பெண்களிடத்தில்கூடிக் கலவிசெய்கிறோமென்று சொன்னதுகேட்டு பரமசிவன் சம்மதியாயிருக்கவளவாகிய வில்பிடித்தபிள்ளைகணுல்வரும் அவாளவாள் அழைத்துவந்திருந்த பெண்களைசரசஞ்செய்பலுற்றார்கள் எ-று. (௩௯)

பிரமநற்கலனுட்சேர்ந்தான் பெருகியகிருஷ்ணன்றானும்
பெருமுலைமாதைச்சேர்ந்தான் பெட்மர்சம்புவீரன்
மருவியபலமார்நல்லாள் மகிழ்ந்தனனழலாமன்னன்
செருமையாமேடியின்பஞ் சேர்ந்தனர்நான்குவீரர்.

(இ-ள்.) பிரமவன்னியன் மங்கிலியமணியப்பட்ட பெண்ணைச்சேர்ந்தான்கிருஷ்ணவன்னியன் கனத்தமுலையுடைய மாதைச்சேர்தான்சம்புவன்னியன் பணிவிடைச்செய்யும்பெண்ணைச்சேர்ந்தான் அக்கினிவன்னியன் மேகம்போன்றகூந்தலும் பலத்தையுமுடைய பெண்ணைச்சேர்ந்தான் அந்தப்படியாக நாலுபேரும்நாலுபெண்களைக் காந்தர்வவிவாகமாக சேர்ந்திருந்தார்கள் எ-று.

பரமுனியுரைப்பக்கேட்ட முனிவனும்பகரவீசன்
செருவர்களவுணரின்பம் சேர்ந்தடர்சிந்தைவைத்த
துரையெனமுன்னோர்சாபம் முள்ளதையுரைப்பேன்வேத
விரிவுளசுசீலன்சேயை வெள்ளியும்விரும்பிவந்தான்.

(இ-ள்.) பரமசிவனிடத்தில் பஞ்சாக்ஷரத்தை யுபதேசம்பெற்றசனகமகாரிஷி சொல்லக்கேட்ட அத்திரிமகாரிஷி சொல்லுகிறார் பரமசிவன்பிள்ளைகளாகியநான்குவீரரும்ராக்ஷதப்பெண்களுடைய இன்பங்களைச்சேரும்படியாக மனதுவைத்ததென்ன அதுஅழகல்லவே சொல்லுமென்றுகேட்க சனகமகாரிஷி சொல்லுகிறதாவது கேளும்அத்திரிமகாரிஷியே முன்னாலே ஒருசாபமுண்டு அதைச் சொல்லுகிறேன் நான்குவேதத்திலும்விரிவாக இருக்கின்றமனதுடையசுசீலமுனி யளித்தபெண்கள் நாலுபெயருடைய அழகைப் பார்த்து சுக்கிராச்சாரியார் அந்தப்பெண்கள்பேரில் மோகமாகி சுசீலமுனிவரிடம் வந்தார் எ-று. (௪௧)

வந்தவன்மடந்தையாரை வதுவைசெய்தீவையென்ன
தந்திரமுனிவனுருந்தடுக்க நின்மகவைச்சேர்ந்தார்
சுந்தரமுடனேகண்டு சுடரெரிவீழ்ந்தேமாய்வார்
சிந்தைவைத்தவரியக்கர் தெரிவையைச்சேர்வரென்றான்

(இ-ள்.) சுசீலமுனிவரிடத்திலே சுக்கிராசாரியர்வந்து உம்முடையமக்கள்நால்வரையும் எனக்குவிவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமென்றுகேழ்க்க சுசீலமுனியானவர் தடுத்துஒன்றுஞ்சொல்லாமலிருந்தார் சுக்கிராச்சாரியார்மனதிலேகோபமாகி இந்தப்பெண்களை யெனக்குகொடாதபடியினாலே இந்தபெண்களைக்கலியாணஞ்செய்தபுருஷர்கள் சுகங்கண்டும்பின்னர்நீங்கி அக்கினியில்விழுந்து இறந்துபோகவுங் கலியாணஞ்செய்தபுருஷர் ராக்ஷதப்பெண்களையணைவார்களென்றுஞ் சாபந்தந்தான் எ-று. (சஉ)

பளிங்கவனுரைத்தசாபம் பாரமாயிற்றேனென்று
உளந்தனித்தோர்வாய்மை யுரைத்திடாதிருப்பச்சூரன்
வளங்களைக்கவரும்வீரர் வம்பவுணர்கள்மாதை
களங்கமில்மனத்தைநாடி களிப்புறவிரும்பினின்றார்.

(இ-ள்.) சுக்கிராசாரியார்சொன்ன சாபமானதைவிலக்கக்கூடாபாரமாயிற்றே மனதிலேநினைந்துபதில்சொல்லாமல் நின்றுபின்னர் அவரவர்கள்மனதின்படியேவிட்டிருக்க வாதாவியின்பட்டணத்தையுமிடித்து கொள்ளையிட்டு அவனையும்சம்மாரஞ்செய்த இவ்வன்னியர்கள் அந்தராக்ஷதப்பெண்களை மனதில்களங்க மில்லாமல் காந்தருவவிவாகஞ்செய்ய மகிழ்ச்சியாக விரும்பியிருந்தார்கள் அத்திரிமகாரிஷியேயென்று பின்னையுஞ்சொல்லுகிறார் சனகரிஷி.

இப்படியிருக்குங்காலை யிந்திரனவர்பாற்செல்கால்
கைப்பிடிசிலையோர்வாளி களிப்புடனிருக்கக்கண்டே
செப்புவேன்பள்ளியாரே சிவனுமேயளித்தசேயே
யிப்படியாயினீரோவென் றியம்பிடவேசொல்வார்.

(இ-ள்.) நாலுவன்னியர்களும்இப்படியிருக்கிறநாளிலேஒருநாள் பள்ளியறையில்படுத்துக்கொண்டிருக்கிறபேர்களைபிடித்து தேவேந்திரன் அவர்களிடத்தில்வந்துசந்தோஷமாகஇருக்கிறதைக்கண்டு சொல்லுகிறான்தேவேந்திரன்ஓபள்ளியாரேபரமசிவன்அளித்தபிள்ளைகளே உங்களுக்கிப்படிக்கு அல்லல்வந்ததென்னகாரணமென்று சொல்லக்கேட்டிருந்த நான்குவீரர்களும் சொல்லுகிறார்கள் எ-று.

பள்ளியென்றுரைத்திட்டெம்மை பழித்திடலாமோகாக்கை
துள்ளவேயுனையும்வெட்டித் தூதர்கையளிப்பேனென்ன
கொள்ளிபோலனலெழுப்பி கோபித்தமன்னர்தம்மை
கள்ளுணுந் தருவினீழற் காவலனுரைக்கலுற்றான்.

(இ-ள்.) பள்ளியென்றுசொல்லி எங்களைப் பழிக்கலாகுமோ உன்னுடையதேகத்தைத்துண்டித்துவிழும்படியாகவெட்டி எமதூதர்கையிலேகொடுக்கிறோம் பாருமென்றுகண்ணில்நெருப்புப்பறக்கிறாப்போலேகோபித்து மீசைபடபடவென்றுதுடிக்கையிலே வாளாயுதமெடுத்தநாலுவன்னியரையும்பார்த்துதேன்றுளிக்கப்பட்ட

கற்பகத்தருனிழலிலிருந்து செங்கோல்செலுத்துகின்ற தேவேந்திரராஜன்கண்டு சொல்லுகிறான் எ-று. (சரு)

## வேறு.

எந்தன்சேயி னெழிலுளபாலரே
யுந்தன்வெம்மை யகற்றுமுரையதான்
விந்தையாம்பள்ளி யென்றுரைமேன்மையாம்
சிந்தைவைத்தினி செப்பிடக்கேளென்றான்.

(இ-ள்) என்னுடையபெண்மந்திரமாலையினுடையபிள்ளைகளே உங்களுடையகோபத்தைநீக்கிப்போடுங்கள்சொல்லுகிறேன்விநோதமாகியபேருடையபள்ளியென்றுசொல்லியது மகாமேன்மையதாகும் அதைஉங்களுக்குச் சொல்லுகிறேனென்றார் தேவேந்திரன்.

பள்ளியானவன் மாயனயன்பரன்
கள்ளுசூழ்மலர்த் தாரணிமன்னவர்
தெள்ளுசெந்தமிழ் வீரன்சிறுவரே
பள்ளியாவர்க்கும் பாத்திரமாமென்றான்.

(இ-ள்.) என்னுடையபேரனானவன்னியர்களேபள்ளியென்னபட்டதுயாதென்றுகேழ்ப்பீர்களாயின்சொல்லுகிறேன்காவிஷ்ணுவுக்கும்பிரமதேவனுக்கும்பரமசிவனுக்கும் மலர்மாலைபணியப்பட்டராசாவுக்கும் பள்ளியென்றுபேராகுந் தெளிந்தசெந்தமிழுடைய வீரவன்னியன்பிள்ளைகளே பள்ளியனைவருக்கும் பொதுவாகியதுபடுக்கைக்கும் பாத்திரமாயிருக்கப்பட்டதென்றார் தேவேந்திரன்.

அரவினிற்பள்ளி மாயனயன்மலர்
பெருமையாம்பள்ளி பிஞ்சகனிம்மலை
புரியும்பள்ளி புரவலனாகுமென்
எரியெனும்பூசுரப் பள்ளியெனச்சொன்னான்.

(இ-ள்.) கேளுங்கள் ஆதிசேஷன்பேரில் மகாவிஷ்ணுபள்ளியானார் பிரமதேவன்தாமரைமலரில் பள்ளியானான் பரமசிவன்கைலாசகிரியில் பள்ளிகொண்டார் தேவேந்திரனான என்மார்பிலணியப்பட்ட சரப்பளிக்கும் பள்ளியானதென்றார் எ-று.

கள்ளலம்பிய கன்றுகளித்தன
பிள்ளைதுஞ்சு மலர்புவிபேணிய
பள்ளியாலுடை தோருடைபாலித்தே
வள்ளலீசன் மலரடிமன்னினான்.

(இ-ள்.) தேனிருக்கிறதென்றுபுஷ்பங்களைகண்டு களிப்பாகவும்அன்னத்தின்குஞ்சுகள் தாமரைமலரில்நித்திரைசெய்யுந்தடாகஞ்சூழப்பட்டபூலோகத்திலிருக்கும்பள்ளியென்பது பள்ளிகூடத்தை

பள்ளியென்றும் அந்தியகாலத்தில் வள்ளலாகிய பரமசிவனுடைய மலர்ப்பாதத்தை சேருகிறதுபள்ளி எ-று (சசு)

மூன்றெழுத்துள பள்ளியென்றேமொழி
தோன்றுகின்றன தொல்புவியாவையு
மீன்றிடுஞ்சிவன் றன்னிணையாகிய
தான்றவர்க்குத் தழைத்திடும்பள்ளியே

(இ-ள்.) மூன்றெழுத்தாகியது பள்ளியென்றுசொல்லப்பட்டது பரமசிவனுக்குமூன்றெழுத்து பிரமதேவனுக்கு மூன்றெழுத்து உங்களுக்கும் மூன்றெழுத்தானபடியினாலே பள்ளியென்று சொல்லும்படியானீர்கள் எ-று. (ருய)

அனைவருந்துயில் பள்ளியறையதாம்
கனமுடனப்போ கழறினங்கவ்வவீரர்
சினமிகுத்திடுந் தீதையகற்றுவீர்
புனிதமேவிய பொன்னுலகேகினன்.

(இ-ள்.) சகலமானபேரும் நித்திரைசெய்கிறவிடத்துக்கு பள்ளியறையென்றும் பள்ளிபடுத்தால் பிள்ளையுண்டாகுமென்கிற வசனத்தைப்போல உங்களுக்குகனமாகியபேரைச்சொன்னேனேயல்லாமல்வேறில்லை உங்களுடைய கோபத்தைநீக்கிப் போடுங்களென்றுசொல்லிவிட்டு தெய்வலோகம்போனான் தேவேந்திரன் எ-று.

நச்சரவணை நாரணன்போலவே
யச்சமின்றி யவுணமடந்தைக
ளிச்சையின்ப மணந்தவெழிலுள
கச்சைவீரர் களிப்பாயிருந்தனர்.

(இ-ள்.) நஞ்சிருக்கப்பட்ட ஆதிசேஷன்பேரில் பள்ளிகொள்ளும்மகாவிஷ்ணுபோலதங்களுடைய மனதிஷ்டபடியாகராக்ஷதிகளுடனேசரசஞ்செய்து கொண்டிருந்தார்கள் வன்னியர்நால்வரும்.

பொன்னிறங்கொன்றை யுற்றபுனற்சடை
முன்னதன்னருட் பெற்றமுனிவனே
இன்னங்களிப்ப விவையினிலேகியே
மன்னராகிய வார்த்தையைக்கூறுவார்.

(இ-ள்.) பொன்னிறமாகிய கொன்றைமாலையையும் கங்கையையும்அணிந்த பரமசிவன்கடாக்ஷம்பெற்ற அத்திரிமகாரிஷியே வன்னியர்களுடையகதையை யின்னங்கொஞ்சஞ் சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகிறான் எ-று. (ருஉ)

மீட்சிச்சருககம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உட்படச்சருக்கம் ௩க-க்கு-க0சு0.

உ

கடவுள் துணை.

முப்பத்தொன்றாவது.

# அரசியற்சருக்கம்.

வெள்ளிமால்வரைப்பாலவீர்வீற்றிருந்திடுமந்நாளில்
கல்லுலாமலர்சூழ்வீரன் கயிலைநாயகனைப்போற்றி
பள்ளமாமுவரிசூழ்ந்த பாரெலாமரனேகாக்கும்
வள்ளலன்றரசுநல்க வரமளியெனவுரைத்தான்.

(இ-ள்.) வெள்ளியங்கிரியான கயிலாசமலைக்கு அடுத்தசம்பு தேசத்திலே ஐந்துவன்னியர்களும் வீற்றிருக்கின்றநாளில்ஒருநாள் தேனுலாவிய செங்கழுநீர்மாலையணியப்பட்ட வீரவன்னியதேவன் பரமசிவனைப்பணிந்துஆழமானசமுத்திரஞ்சூழும் பூலோகமெல்லாம்நானேயாளும்படியான ராசனென்று செங்கோல்செலுத்தும்படியான வரந்தரவேண்டுமென்றான் வீரவன்னியன் எ-று. (க)

அயனரியண்டர்போற்ற வரனிருந்துரைப்பார்மாலே
புயமிகுவீரன்சொன்ன புதுமைகேள்சொல்வோமென்ன
நயனபார்வைகளாயந்த நானிலந்தனிற்பகிர்ந்தே
வியன்மணிமுடிகள்சூட்டி மேதினிபுரக்கச்செய்வீர்

(இ-ள்.) பிரமதேவன்மகாவிஷ்ணு தேவர்கள்முதலான பேரும்வணங்கும்படியாகப் பரமசிவன்சொல்லுகிறார் கேளும்மகாவிஷ்ணுவே புசபலபராக்கிரமமுடைய வீரவன்னியன்சொல்லப் பட்ட வார்த்தைக்குப்பதில் என்னசொல்லவிருக்கிறது நயனபாஷைகளினாலே யிருவரும்பேசி யிந்தபூமிகளை ஐந்துபங்காக்கி பிரகாசமாகியமணிமுடிதரித்து பூமியைக்காக்கும்படிச் செய்வீர் எ-று. (உ)

என்றரியுரைப்பவீச னிதைத்திலுவகையுன்னி
நன்றெனமயனைக்கூவி யழைத்துநானிலங்கடன்னை
வென்றிவேல்வீரர்மேவி விண்ணவர்போலிருப்ப
மன்றல்சேர்புவியையைந்தாய் வகுத்திடுமெனவுரைத்தான்.

(இ-ள்.) இப்படியாக்குமென்று மகாவிஷ்ணு சொல்லக்கேட்டபரமசிவன் மனதில் சந்தோஷமாகி நல்லதென்று விசயபிரமானுவர் மயனையழைப்பித்து இந்தபூமியை வெற்றிபெறப்பட்ட வேலா

பூதமணிந்த வீரவன்னியர்கள்தேவாதிகளைப்போல விருக்கும்படி யாயிந்தபூமியையைந்துபங்காக வகுத்துக்கொடுமென்று சொன்னார் மகாவிஷ்ணு எ-று. (௩)

வேறு.

ஆலமுண்டவனனுப்ப வந்தமயன்மனத்தோர்ந்து
பாலநதிவடதிசையிற் பரமனுத்தாரரூபன்
மால்பெண்ணைநதிமட்டும் வளர்கிருஷ்ணனிருப்பச்
சீலமுறும்பொன்னிவரை செழிபிரமன்வீற்றிடுவான்

(இ-ள்.) ஆலகாலவிஷத்தையுண்ட பரமசிவன்சொல்லக் கேட்டமயனானவன் தன்னுடையபூகோளசாஸ்திரப்படிக்கு மனதிலறிந்துபாலாற்றுவடதிசைப்பரியந்தம்ருத்திரவன்னியனுவீரவன்னியனுக்கும்பெண்ணையாற்றுவரைக்கும் கிருஷ்ணவன்னியனுக்கும்காவேரியாற்றுக்குவடக்குபிரமவன்னியனுக்கும் வீற்றிருக்கப்பகிர்ந்தார்

சேதுபதியந்தமுதற் செழுஞ்சம்புவன்னியனும்
மோதையுங்குளக்கடலி னேங்குபுருயக்கினிக்காம்
நாதனேமயனுரைப்ப நக்கனுடல்மாலயனும்
தீதிலாவகத்துணர்ந்தே செப்புமுரைநன்மையென்றார்.

(இ-ள்.) சேதுவுக்குவடக்கு சம்புவன்னியனுக்கு கீழ்சமுத்திரக்கரைக்குமேற்கு அக்கினிவன்னியனுக்குமாகப் பரமசிவன்மகாவிஷ்ணு பிரமதேவன் அவர்கள்மனதிலேதெளிந்துமயன்சொன்னதுநன்மையாமென்றார்கள் மூவரும் எ-று. (௫)

வீரவன்னியனுக்கே விளம்புவரானவந்த
பாரியுட்டிங்கிருந்தே பதியையாண்டிருங்களென்ன
கூரயில்வேல்பாலர்களைக் குறித்தபுவிதனிலேகி
சூரரெனவாழ்த்திடுவீ ரென்றுரைப்பத்திருத்திருந்தான்.

(இ-ள்.) வீரவன்னியதேவனைப்பார்த்து பரமசிவன்சொல்லுகிறார்உன்னுடையதேவியாகியமந்திரமாலையுடன் நீயுஞ்சம்புதேசத்திலேதானேயிருந்து பாலாற்றுக்குடையபக்கத்துக்கெல்லாம் ராசாவாகராச்சியபாரமாண்டுக்கொண்டிருமென்று கூர்மையானவேலாயுதமுடைய பிள்ளைகளையழைத்து உங்களுக்குவகுத்துக் கொடுத்தபூமியில்போய் சூரத்துவமாகவாழ்ந்திருங்களென்றுசொன்னார்

மயன்வகுத்தபூமிதனில் மக்களுமேமனமகிழ
புயவலிவாயிருமெனவே புகல்புனிதனடியேத்தி

இயலுமுளனுதனே வின்னுளிலடியேற்கு
செயமானவிருதுகளைச் செப்பென்முர்சிறுவருமே

(இ-ள்.) மயன்பங்குபிரித்துக்கொடுத்த பூமியில்போய்மனமகிழ்ந்து நீங்கள்வாழ்வீர்களென்று சொன்ன பரமசிவன்பாதத்தை வணங்கிச்சொல்லுகிறார்கள் எங்களுக்குசெயம் பெரும்படியான விருதுகளின்னதென்று சொல்லும்படிகேட்டார்கள் எ-று. (எ)

வாதவுணனத்திமன்னுஞ் சிரமாயவிரதமுமே
தீதடையும்போதாகும் சிவிகையுடன்கவிகைகளும்
கோதுசெயுமவுணரை கோயில்வளர்துவசமுடன்
சீதமுளசெங்கழுநீர் தார்புனைந்தேசெழித்திடுவீர்

(இ-ள்.) வாதாவியினுடைய எலும்பும்சிரசுமாய் விளங்கப்பட்டதேர் உங்கள்துன்மைகாரியத்துக்குஆகும்குற்றஞ்செய்யப்பட்ட வாதாவியினுடைய மதிலில்கட்டியிருந்தபதினெட்டுக்கொடியும்வாதாவியின்கோயிலி லிருக்கப்பட்டபல்லக்கும் செங்கழுநீர்மாலைபூண்டு செழிப்பாகவிருப்பீர்களென்முர் பரமசிவன் எ-று. (அ)

நானணிநல்விருதுமக்கே நானிலத்தேதழைத்திருப்ப
வானவர்கோன்மும்முரசும் மகுடகவசமுந்துன்ன
தேனுகையுமலர்த்தாராய் தேவகுலமானவர்காள்
யீனமிலாதிப்புவியி லெந்நாளும்வாழ்ந்திடுவீர்.

(இ-ள்.) நானணியப்பட்ட விருதுகளெல்லாம் உங்களுக்கிந்த பூமியிலே தழைத்திருக்கும் தேவேந்திரனுடைய மும்முரசுவாத்தியங்களும்கிரீடமும் கவசமுந்துலங்கும்படியாகத் தேன்துளிக்கப்பட்டமலர்மாலைகளுடனே யீனமில்லாமல் இந்தபூமியி லெந்நாளும் வாழ்வீர்கள் எ-று. (௯)

புடவியெனுமாடைதனை பொருதுபுவிதனிலேகி
யடைவுடனேயாவருக்கு மருஞ்சமருக்குறுமையென
நடம்புரியுமந்திரியும் நற்பாதம்போற்றிசெயும்
படைகள்தனைக்காட்சியாய் பாரினில்வாழ்த்திடுமென்முர்.

(இ-ள்.) சமுத்திரத்தை ஆடையாயுடுத்தப்பட்ட பூலோகத்தில்நன்மையாக அனைவருக்குமுரித்தாகிய யுத்தத்திற்குரிமையாயிருக்கின்ற நடனஞ்செய்யுந்துர்க்காபரமேஸ்வரியினுடைய பாதத்தை வணங்கியிருக்கும் சேனைகளுக்கெல்லாம் முதன்மையாக நீங்கள் புகழ்சசியாயிருப்பீரென்முர் பரமசிவன் எ-று. (ய)

கிருஷ்ணனும்பிரமனுங் கிளர்சம்புவன்னியும்
உருத்திரனோடுபணிந்தோங்கு புகழ்வீரனையுந்
திருத்தமுடனேபணிந்து தெய்வானைக்கிளையவனை
யிருத்திபதம்பணிந்திடவுமவள் மகிழ்ந்துவியம்புவளே.

(இ-ள்.) கிருஷ்ணவன்னியன் பிரமவன்னியன்சம்புவன்னியன் அக்கினிவன்னியன் இவர்கள்நால்வரும் பரமசிவன்பாதத்தில்வணங்கிமிருதியாய்ப் புகழ்படைத்தவீரவன்னியனையும் வணங்கி தெய்வானைக்கு சகோதரியான மந்திரமாலையை சுற்றிவந்துபணியச் சந்தோஷமாகச் சொல்லுவார்கள் எ-று. (கக)

## வேறு.

என்றுமுகங்கள் குலந்தழைத்தோங்கவும்
மன்றல்சூடி மகிழ்ச்சியணையவும்
குண்டுபோற்புவி நல்வலிகொள்ளவும்
வென்றுவீரரிம் மேதினிவாழ்கவே

(இ-ள்.) என்றைக்கும் நீடூழிகாலமட்டும் உங்கள்குலத்தோர்களெல்லாந் தழைத்தோங்கவும் வெற்றிமாலைசூடி மகிழ்ச்சியாய் மலைபோல உங்கள்புசபலபராக்கிரமம் இருக்கவும்வெற்றியாக விந்த பூமியில்வாழ்க எ-று. (கஉ)

மக்களேயென வாழ்த்திடமக்களும்
தக்கசூரரின் றையலர்சூழ்ந்திட
நக்கனுற்றநன் ஞட்டினில்சென்றுமே
புக்கிவாழ்ந்து புவியிலிருந்தனர்.

(இ-ள்.) வீரவன்னியனும்மந்திரமாலையும் வாழ்த்திவிடைகொடுக்க அப்போது நாலுவீரர்களும் அவரவர்மனைவிமார்கள் சூழ்ந்துவரும்படியாக பரமசிவனளித்த பூமியில்நால்வர்களும்தங்கள் இருப்பிடத்தே வாழ்ந்திருந்தார்கள் எ-று. (கங)

## வேறு.

கொன்றைசூடியனளித்த குமாரனுஞ்சம்புவூரில்
மன்றலர்க்குழலாளான மந்திரமாலை துன்ன
வென்றமதன்ரதியெனவிண் விண்ணவர்கோனுயிலங்கிடவும்
துன்றியநல்லரிமேடைதுரந்தரசுவீற்றிருந்தான்.

(இ-ள்.) கொன்றைமாலைச்சூடியபரமசிவனளித்தவீரவன்னியனுஞ்சம்புதேசத்தில்மந்திரமாலையுடனேவெற்றியாகியமன்மதனும்

திரேவியும்போல அழகுடனே தேவர்களுக்கு ராசனென்று சிம்மாசனத்திலிருந்து செங்கோல்செலுத்தியிருந்தான் வீரவன்னியன் எ-று. (௧௪)

அங்கியின்மரபதான வரசனுமவனிமுற்றும்
செங்கைகோல்வழுவிடாமல் செயமுடனிருக்குங்காலை
மங்கையுங்கருவையுற்று மதிபலசெல்லப்பின்னா
திங்களுநிகர்த்தசேயைத் தினகரனெனவேயீன்றாள்.

(இ-ள்.) அக்கினிவம்சத்துக்கு ராசனாகிய வீரவன்னியராசன் தனக்குப் பரமசிவனளித்த சம்புதேசமுழுமையுஞ் செங்கோல்செலுத்தியிருக்குநாளிலே மந்திரமாலையினுடைய வயிற்றிலே கெர்ப்பமடைந்து பத்துமாதஞ்சென்று ஒருபிள்ளையைச் சூரியப்பிரகாசம்போலப் பெற்றாள் எ-று. (௧௫)

மகவினையரசன்கண்டு மாநிலத்தருமநல்கி
பகவன்றன்விழவளித்துப் பாலனைவளர்க்குநாளில்
செகதலத்தரசர்போற்ற சிறந்துளசேகரப்பேர்
நகையினற்புரமெரித்தார் நாமமேநவிலலுற்றான்.

(இ-ள்.) பிள்ளைபிறந்தவுடனே வீரவன்னியராசன் கண்டுமகிழ்ச்சியாகத் தன்தேசத்தில் முப்பத்திரண்டு தருமமுஞ்செய்து சிவாலயம் விஷ்ணுவாலயமெல்லாம் திருவிழாநடத்தி நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்க்குநாளில் தேசதேசத்து அரசர்கள் வந்துவணங்க பிள்ளைக்கு சந்திரசேகரமகாராசாவென்று பரமசிவனுடைய பெயரையளித்தான் எ-று. (௧௬)

இந்துசேகரனைந்தாண்டு வேகவுங்கலைகளோதி
தந்திமாவேதஞ்சாபந் தழற்கணைதெளிவதாகி
மைந்தனுக்கானமங்கை மன்னன்சோழமேமீய்ச்
சிந்தையினுவகைகூர்ந்தே திருமணஞ்செய்யலுற்றான்.

(இ-ள்.) சந்திரசேகரனென்றபிள்ளைக்குஐந்துவயதானவுடன் சகலகலைக்கியானமுமோதி ஆனையேற்றங் குதிரையேற்றம் வில்வித்தை பயிர்ச்சியாகக் கற்றுணர்ந்து பிறகுதிருமணஞ் செய்யக்கருதி சோழராசன்பெண்ணை சந்திரசேகரராசனுக்கு கலியாணஞ்செய்து வைத்தார்கள் எ-று. (௧௭)

தேவர்கள்ஜெயஜெயென்ன செகதலத்தரசர்மன்ன
பாவையரினங்களாடப் பருமுனிவோர்கள்பாட
கோவெனும்வீரனுள்ளங் குளிர்ந்திடமகனைவாழ்த்தி
பாவலர்யரசுநல்க பருமுடியணிந்தான்மாதோ.

(இ-ள்.) தேவர்கள் செயஞ்சொல்லிவாழ்த்தவுந் தேசத்தரசர்களும் வந்துவணங்கிநிற்கவு மாதர்கள் நடனஞ்செய்யவும் நாரதரிஷிமுதலாகியவர்களுஞ் சங்கீதங்கள்பாடவும் ராசனாகிய வீரவன்னியராசன் சந்தோஷமாக மகனைவாழ்த்தித்தானிருக்குஞ் சிம்மாசனத்தில் அமர்த்திதன்னுடையசெங்கோலாகிய அரசாக்ஷியுங் கொடுத்து முடியாகியகிரீடமும்தரிக்க சந்திரசேகரனும் முடிதரித்து சிங்காசனத்திலிருந்தான். (கஅ)

தந்திரமாகமன்ன தரணியைப்புரக்குங்காலை
யிந்திரன்முதலோர்வீர னிணையடியேற்றிவானில்
வந்திடுமென்னும்வண்ணம் மயேசன்றன்னுரைப்படிக்கே
யிந்திரலோகம்புக்கி யிருந்தனனுவகையாகி.

(இ-ள்.) சந்திரசேகரமகாராசன் அரசாக்ஷிசெலுத்தி வருங்காலத்தில் தேவேந்திரன்முதல் தேவர்கள் வீரவன்னியராசனிடம் வந்து தேவலோகத்திலே வந்திருமென்றுசொல்ல அந்தவசனத்தைப் பரமசிவனிடத்தில்சொல்ல பரமசிவன் சம்மதியின்பேரில் இந்திரலோகம்போய்ச் சந்தோஷமாயிருந்தான் வீரவன்னியன்

திங்கண்மும்மாரிபெய்ய தேசங்கள்செழித்துவோங்க
சங்கரன்கோயிற்பூசை தவறிடாதரணிவாழ்க
இங்கிதமறையோர்நீதி யென்றுமேவாழ்தலோடு
துங்கமாம்பயிரினங்க டொன்னகர்செழிக்கச்செய்தான்.

(இ-ள்.) மாதமும்மாரி மழைபெய்து தேசங்கள்செழிக்கவும் சிவபூசைதவறாமல் பூமியில்நிலைபெறவாழ்கவும் பிராமணாள் வேதபாராயணம்ஓதவும் பயிர்கள்வாடாமல் தழைத்து பூமியிற்செழிக்கும்படியாகவுஞ் செய்தான் எ-று. (உ௰)

அம்புவிபுரந்துநிற்குமரியர புத்திரன்போல்
செம்பதியெனுமாவெள்ளி செழித்திடுமலைக்கடுத்த
சம்புவின்னகரந்தன்னிற் றழலினிலுதித்தவீரன்
இன்பமாயளித்தசேயு மிந்திரனெனவிருந்தான்.

(இ-ள்.) பூமியைக்கார்க்கப்பட்ட அய்யனார்போல வெள்ளிமலைக்கடுத்த சம்புதேசத்தில் வீரவன்னியன்பிள்ளையான சந்திரசேகரராஜன் யாசையுடன் பூமியையாண்டுகொண்டுதேவேந்திரன் போலிருந்தான் எ-று (உக)

அத்திரிமுனியேயன்று வழலினிலுதித்தவீரன்
புத்திரனுலகமெல்லாம் புரந்திடுங்காதையெல்லாம்

உத்தமபுராணமாக வோதினேனுவகையாலே
சித்தமேமகிழ்ந்தென்னாளுஞ் சிவன்பதஞ்சேர்ந்திருப்பீர்

(இ-ள்.) அத்திரிமகாரிஷியே சம்புமகாரிஷி யாகத்திலுதித்த ரவன்னியன்பிள்ளை சந்திரசேகரராசன் பூமியை யாண்டிருந் தையைநான் ஆசையுடன்புராணமாகச் சொன்னேன் நீமனமகி ச்சியாய் கேட்டபடியால் எந்நாளும்பரமசிவன் பதஞ்சேர்ந்திரு பீர் எ-று. (௨

அம்புலிச்சடையில்வைத்தா னருளினாற்பிறந்தமன்னன்
சம்புமாமுனிவன்வேள்விச் சந்ததிசரிதைதன்னை
யின்பமாய்படிப்போர்கேட்போரெழுதுமேவாரிதனையீய்வே
அம்புவிபுரந்துவாழ்ந்தே யரன்பதமடைவர்தாமே.

(இ-ள்.) சந்திரனைத்தரித்த பரமசிவன் அருளினாலே சம்பும ரிஷியாகத்தில்வந்த வீரவன்னியனுடைய கதையைப்படிப்போர் கட்போரெழுதுவோ ரிதைக்கொடுப்போர்கள் இந்தபூமியி லிம் சயில்லாமல் வாழ்ந்துமறுமையில் பரமசிவன்பத மடைவார்கள்

வன்னியபுராணம்வியாசன் வழுததிடச்சனகன்றேரி
துன்னுமந்திரிக்குரைத்ததுண்மையையுணர்ந்தோர்மிகவோர்
உன்னியவடநூலாலே யுரைத்தனரதனையாய்ந்த
மன்னன்மீனவனுங்கேட்க வழுத்தினனுலகின்மாதோ.

(இ-ள்.) வீரவன்னியராசனுடைய கதையைவேதவியாச மகா னிவர் வடமொழியாகிய கிரந்தத்தில்சொல்லியதைசனகரிஷியா ணர்ந்து அத்திரிமகாரிஷிக்கு அனுக்கிரகிக்கஅதைத்தமிழில்சுந் பாண்டியராசன் ரேட்கச்சொன்னது எ-று. (உச)

சம்புவின்மகத்துதித்த தாட்டிகவனனியரன்று
அம்புவிதன்னிநிறைந்தே யரசுசெய்வலிமைகண்டே
கம்பனுஞ்சுருக்கமாகக் கவியுரைதன்னிற்காதை
யின்பமாய்நவின்ற கீர்த்தியாவரேயுணரகிற்பார்

(இ-ள்.) சம்புமகாரிஷியாகத்திலுதித்த வீரவன்னியர்கள் பூ லோகத்தில்நிறைந்து ராச்சியபாரஞ்செய்த பெருமையைக்கண்டு ம்பனனவன் சுருக்கமாகப்பாடினான் பாடிய அதன்பெருமையா ர்தான் அறியவல்லவர் எ-று. (உரு)

வையகம்புகழும்வீரன் வன்னியபுராணஞ்செய்யுள்
ஐயமிலாயிரத்தி லெழுபத்துமூன்றதாக
மெய்யெனும்வேதந்தன்னில் விளங்கியகதையிலாய்ந்தே
துய்யசெந்தமிழோர்காண துங்கமாயுரைக்கலுற்றான்.

(இ-ள்.) பூமியில்எல்லாரும் புகழும்படியான வீரவன்னியனு
டைய புராணத்தில் விருத்தம் ஆயிரத்தெழுபத்துமூன்று மெய்ய
பிருக்கப்பட்ட கிரந்தவாக்கியத்தில் சொல்லியபடிநானும் ஆரா
த்து செந்தமிழோர்காணும்படியாகச் சொல்லியருளினேன் எ-று

கங்கையின்மரபிற்றனிக் காசினிற்பயிரைச்செய்யுந்
தங்கவேளாளன்மேழிற் றுவசமும்பெற்றதீரன்
இங்கிதகிருஷ்ணன்ருனு மீன்றருள்வீரனுனேன்
பங்கயமுகமலர்ந்தே பரிவுளபுராணஞ்செய்தான்.

(இ-ள்.) கங்கைகுலத்தில்பிறந்து பூமியில்பயிர்த்தொழில் செ
ய்ம்வேளாளனும் மேழிக்கொடிபெற்றவனும் கிருஷ்ணப்பிள்
குமாரனுமாகிய வீரப்பிள்ளையென்பவன் சுந்தரபாண்டியராச
சமுகத்தில் புலவனனபடியினாலே முகமலர்ந்து பூரணமாகப் பா
வைத்தேன் ஏ-று. (உ

செந்தமிழ்க்கவிஞர்வாழ்க செய்யவேல்வேந்தர்வாழ்க
வந்தரிமகவுங்கூட வரனருள்மிகுத்தேவாழ்க
மந்திரமுனிவர்வாழ்க வையகத்துறைவோர்வாழ்க
சுந்தரபாண்டியன்றன் சுற்றமுந்தழைத்துவாழ்க

(இ-ள்.) பூமியின்கண்கவிவல்லவர்கள்வாழ்கஇராசராசாக்க
வாழ்க இந்தமதுரைமாநகரம்வாழ்க முப்பத்துமுக்கோடி தே
போல்பூமியில் இருக்கின்றநான்கு வருணத்தாரும்வாழ்க சுந்
பாண்டியராசனு மவன்சுற்றத்தாரும் வாழ்க எ-று. (உ

வானவர்சகாயனை வன்னியதிலகன்வாழ்க
தானவருயிரைமாய்த்த தரணிமன்னவனும்வாழ்க
ஊனமில்முன்னூன்மார்ப னுயர்சிகையுடையோன்வாழ்க
மேன்மைபண்ணுடன்வாழ்க வீராதிவீரன்வாழ்க

(இ-ள்) தேவர்களுக் கனுகூலமாயிருக்கப்பட்ட வீரவன்னி
மகாராச திலகன்வாழ்க ராக்ஷதனுயிரைமடித்த பூமிமன்னன்
ழ்க ஊனமில்லாத முப்புரிநூலை மார்பிலணிந்தஉயர்ந்தவன்வா
பண்ணுடன்வாழ்க வீரவன்னியர்குலந் தழைத்துவாழ்க எ- று.

## அரசியற்சருக்கம்.

முற்றிற்று.

---

ஆகப்பாயிரம் உட்படச் சருக்கம் ௧௨-க்கு

திருவிருத்தச்செய்யுள்-௧௦அ௬௬.